# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA’S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பன்னிரண்டு

## (VOLUME TWELVE)

**1953 - 1954**

# <u>இறைவனின் அன்பளிப்பு</u>

இடம், காலம், பொருள் இவற்றை, இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, **ஜனவரி, 2023**
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/20.04.2025

# கல்கி அவதாரம்

(முன்னுரை: லாறன்ஸ் ரைட்டர் - இரண்டாம் இறுதி பாகம்)

மெஹர் பாபா, ‘கல்கி’ அல்லது ‘கல்கி அவதாரம்’ என்று அறியப்படுகிறார். சமஸ்கிருத மொழியில், கல்கி என்ற பெயருக்கு ‘பாவங்களை அழிப்பவர்’ என்று பொருள் - அதாவது, அறியாமையால் விளையும் செயற்பலனை நிர்மூலமாக்குவது. அவதார புருஷர், தமது கையிலேந்தும் உறை வாள், அவரை உலகின் மீட்பாளராகவும், அதே சமயம் துன்மார்க்கத்தை அழிப்பவராகவும் அடையாளப்படுத்துகிறது. இந்தக் கருப்பொருளை அடையாளச் சின்னமாகக் கருத்தில் கொண்டு, மெஹர் பாபாவின் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வேளையில், அவரது இக்கால வருகையின் அர்த்தத்தைக் கண்டறியலாம். ஏன் இப்படி ஒரு பயங்கரமான காலகட்டம்? கடவுள் ஏன் மனித உருவில் இம்மண்ணில் வர வேண்டும்? ஏனெனில், உலகில் மாயையின் ஆதிக்கம் அபரிமிதமாகி, உண்மைப்பொருளின் மீதான நாட்டம் மிகக் குறைந்து காணப்படுகிறது. மனித அனுபவத்திற்கு அப்பாற்பட்ட அனைத்து அறிவும், அவதார புருஷர் வெளிப்படுத்துவதைப் பொறுத்தது. காலத்தால் இழக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அறிவை, மனிதகுலத்திற்கு மீண்டும் வெளிப்படுத்தும் அதிகாரம் அவதார புருஷருக்கு மட்டுமே உண்டு. கடவுளிடமிருந்து நேரடியாக அடையப்பெறும் அறிவு, இடைப்பட்ட நபர் ஒருவரால் தவறாகச் சித்தரிக்கப்படாமல் அல்லது சிதைக்கப்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே ரகசியமாக ஒருபோதும் இருக்காது. மாயாவிற்கு சக்தி என்று ஒன்றிருந்தால், அது உண்மைப்பொருளின் விளைவாக அடையப்பெறுவது. மாயையின் இந்த சக்திதான், பொய்யும் போலியுமான மாயத்தன்மைக்கு ஊட்டமளித்து, உண்மைப்பொருளுக்கு முற்றிலும் மதிப்பற்ற நிலையை உருவாக்குவது. இந்த யுகத்தில் ஏறத்தாழ ஒவ்வோர் ஆணும், பெண்ணும் மாயையின் வஞ்சகத்திற்கு பலியாகியுள்ளனர். ஒருவர், தான் ஏமாற்றப்பட்டதை ஏற்றுக்கொள்ளும் வரை, அவரது அடிமைத்தனத்தை அடையாளம் காண முடியாது. இது அவரது சுய-ஏமாற்றத்தை அங்கீகரிப்பது மட்டுமின்றி உள்ளுணர்வை விடுவித்து, உண்மைப்பொருளின் யதார்த்தத்தை உணரத் தொடங்கி, கடவுளை நேருக்கு நேர் சந்திக்க முயற்சிக்கிறது.

உண்மைப்பொருள் (TRUTH) என்றால் என்ன? கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லாத நிலை. கடவுளைத் தவிர இதர அனைத்தும், ‘ஒன்றுமில்லை’ என்ற நிலையில் ஒன்றுமில்லாததில் முடிவடைகிறது. பாவ் கல்சூரி (BHAU KALCHURI), மெஹர் பாபாவின் அரவணைப்பில் வருவது வரை, மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை வரலாற்றாசிரியர் சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM), “நீங்கள் ‘ஒன்றுமில்லா நிலையில்’ அவரை சந்திக்கும் வரை, ஒருவர் மெஹர் பாபாவை யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது” என்று கூறினார். ஒருவருடைய சுய வினைப்பதிவங்களாலான மனம், வீண் அறிவுத்திறன்

ஆகியவற்றின் ஒன்றுமில்லாத தன்மை, ‘இறை வாழ்வு’ என்பதன் கருத்தின் மேற்பரப்பை நச்சரித்துக் கொண்டிருக்கும். இருப்பினும், ‘அனைத்திலும்’ நீங்கள் அவரை சந்திக்கும் வரை, ஒருவருக்கு மெஹர் பாபாவைத் தெரியாது என்று சொல்ல முடியவில்லையா? இந்த விரிவான வரலாற்றுத் தொகுப்பை எழுதும் பணியின் நோக்கம் அதுவல்லவா? இந்த அளப்பரியதான வாழ்க்கை வரலாறு, இக்கால வருகையின் போது, ஏக இறைவன் வெளிப்படுத்திய அனைத்தையும், ‘இரகசிய புத்தகத்தின்’ நுணுக்கங்களையும் கண்டறிய உதவியாக இருக்கும். பரிபூரண உணர்வு நிலையில் இருந்ததால், மெஹர் பாபா செய்த ஒவ்வொன்றிற்கும் அதிக முக்கியத்துவம் இருந்தது; அவர் செய்த அனைத்திற்கும் அர்த்தம் இருந்தது. மெஹர் பாபா கூறிய, செய்த ஒவ்வொன்றின் உள்ளார்ந்த அர்த்தத்தை நாம் ஒவ்வொருவரும் கண்டறிய வேண்டியது இன்றியமையாதது. அவர் ஒருவர் மட்டுமே உண்மைப்பொருளை உலகிற்குக் கொண்டு வருவதால், அவருடைய வாழ்வின் மிகப் பெரிய மகத்துவத்தைப் பற்றி சிந்தித்து பாருங்கள்.

மனிதனின் எழுதுவது, படிப்பது போன்ற பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது, இந்த வகை இலக்கியம் எதைக் குறிக்கிறது? பாவ் கல்சூரியைப் போலவே, மெஹர் பாபாவின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களில் ஃபிரான்சிஸ் பிரபாஸோன் (FRANCIS BRABAZON) என்பவரும் ஒருவர். இரண்டு எழுத்தாளர்களின் படைப்புகளும் எதிர்வரும் பல நூற்றாண்டுகளுக்கு, பலரின் கரங்களில் தவழும். 1958 பிப்ரவரி மாதம், ஃபிரான்சிஸ், மெஹர் பாபாவிற்கு எழுதிய கடிதத்தில், ‘இறைவனுடன் இணைந்திருங்கள்’ (STAY WITH GOD) என்ற தனது புத்தகத்தை எழுதுவதற்கு முன்னர், அவர் பல்வேறு புராண வேத நூல்களைப் படித்து வந்ததாகத் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த மெஹர் பாபா, அவருக்கு, வேதம் மற்றும் மனித சிந்தனை பற்றிய அவரது கண்ணோட்டத்தை வெளிப்படுத்தி, பின்வரும் அறிவுரையை வழங்கினார்:

**“வேத நூல்கள், அழுகிய எலும்புகள் போன்றவை, மேலும் அவை புழுக்களுக்கு உணவாகும். இறையியல் மற்றும் தத்துவம் நல்ல எலும்புகளை ஒத்தவை, கழுகுகளுக்கு உணவாகும். எழுச்சி பெற்ற கவிஞர்களின் எழுத்துக்கள் புத்தம் புது எலும்புகள் போல, நாய்களுக்கு உணவாக இருக்கின்றன. ஆன்மீகத்தில் மேல்நிலையை அடைந்த துறவிகளின் எழுத்துக்கள் சதை போல, புலிகளுக்கு உணவாக இருக்கிறது. இன்று வாழும் பரிபூரண குருநாதர்கள் மற்றும் சத்குருக்களின் எழுத்துக்கள் மூளை போல் இருந்து மானிடனுக்கு உணவாகிறது! அவை அழுகினாலும் எலும்பின் சாயலைக் கொண்டிருக்கும், ஆனால் அழுகும் வேளையில், அழுகிய எலும்புகள் அருவருப்பான அழுக்கு போன்றது, எனவே நீங்கள் வேத நூல்களை மேலோட்டமாகப் படிக்கலாம் - அவை தேவைப்படும்போது, குரைக்கும் நாய்களை விரட்ட உதவியாக இருக்கும்; எடுத்துக்காட்டாக,**

**கேள்விகளுக்கு பதிலளிக்க நீங்கள் அழைக்கப்பட்டால், ஆச்சாரமான பாதிரியார்கள் மற்றும் மரபுவழி வந்த பண்டிதர்களைப் போல செயல்பட அது கைகொடுக்கும்.”**

# நிகழ்வுகளின் காலவரிசை

**1953**
- ஏப்ரல் 10 - ஜூன் 1, டெஹ்ரா டூன் - முஸோரி பயணம் - டெஹ்ரா டூன் வருகை.
- ஜூன் 6 - 10, உத்தரப் பிரதேசம், பஞ்ஜாப் வழியாக மஸ்த் பயணம்.

**1953**
- ஜூன் 12 - ஜூலை 14, டெஹ்ரா டூன் - புனிதர்களுடன் சந்திப்பு, உபவாசம், ரூர்க்கி மஸ்த் பயணம், ஆன்மீக சொற்பொழிவுகள்.

**1953**
- ஜூலை 15 - 18, டெஹ்ரா டூன், மூன்று சிறப்பு வெகுஜன கூட்டங்கள்.
- செப்டம்பர் 11 - 15, பஞ்ஜாப், இந்திய வடக்குப் பகுதிகளில் மஸ்த் பயணம்.

,

**1953**
- நவம்பர் 29 - டிசம்பர் 6, டெஹ்ரா டூனிலிருந்து மும்பை வந்தடைந்து தீவிர மஸ்த் தொடர்புகள் - மஹாபலேஷ்வர் வருகை.

**1954**
- பிப்ரவரி 1 - 12, ஹமிர்பூர் - 'அவதார புருஷர்' பிரகடனம், வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் - மஹாபலேஷ்வர் வருகை.

**1954**
- பிப்ரவரி 20 - மார்ச் 4, ஆந்திர பிரதேஷ், 'தெய்வீகப் பணி' பிரகடனம், வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் - மீண்டும் மஹாபலேஷ்வர் வருகை.

**1954**
- மார்ச் 20 - 22, ஸாக்கோரி விஜயம், மஹாபலேஷ்வர் வருகை.
- ஏப்ரல் 29 - மே 1, தார்வார் மஸ்த் பயணம் (11 மஸ்துகளுடன் தொடர்பு)

**1954**
- மே 25, மஹாபலேஷ்வர் வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள்
- ஜூன் 2, சத்தாரா (கிரா:ப்டன் பங்களா) வருகை

**1954**
- ஜூன் 26 - 29, மஸ்த் பயணம் - இஸ்லாம்பூர், கோலாப்பூர், ஹூப்ளி - மெஹராபாத் வருகை

**1954**
- ஜூன் 29 - ஜூலை 2, மும்பை மஸ்த் பயணம் - சத்தாரா வருகை
- ஜூலை 10, மெஹர் பாபாவின் மௌன தினம்

**1954**
- செப்டம்பர் 12, மெஹர் பாபா மண்டலியுடன் மெஹராஸாத் வருகை
- செப்டம்பர் 12, வாடியா பார்க் தரிசனம்

**1954**
- செப்டம்பர் 14 - 24, மெஹராபாத் மேல்மலையில் மேற்கத்திய அன்பர்களுடன் சந்திப்பு, கலந்துரையாடல்

**1954**
- செப்டம்பர் 20, மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்களுடன் ஸாக்கோரி பயணம்

**1954**
- தொடரும்...

# பொருளடக்கம்

முஸோரி & உத்தர பிரதேசம் ..................................................... 3
டெஹ்ரா டூன் 1953........................................................................ 28
உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்...............................110
மஹாபலேஷ்வர் வருகை ...........................................................150
ஹமிர்பூர் - 'அவதார புருஷர்' பிரகடனம்...........................164
ஆந்திர பிரதேஷ், 'தெய்வீகப் பணி' பிரகடனம் ..................196
மூன்று வியத்தகு வாரங்கள் – ஸாக்கோரி, 'வாடியா பார்க்' தரிசனம், மெஹராபாத்.................................................298



மெஹர் பாபாவுடன் நௌரோஜி தாதாசாஞ்சி & ஆதி சீனியர்
(MEHER BABA WITH NAOROJI DADACHANJI & ADI SENIOR)

# முஸோரி & உத்தர பிரதேசம்

**(Mussoorie & Uttar Pradesh)**

1953 ஏப்ரல் 10ஆம் நாள், மெஹர் பாபா, ஆண், பெண் மண்டலியுடன், டெஹ்ரா டூனிலிருந்து முஸோரி (MUSSOORIE) மலைப்பகுதிக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு அவர்கள் ஏழு வாரங்கள் இந்தியாவின் கோடைகாலத்தின் வெப்பமான மாதங்களில் தங்க வேண்டியிருந்தது. 'ஹேப்பி வேலி'யில் (HAPPY VALLEY) அமைந்த தெஹ்ரி மஹாராஜாவின் (TEHRI MAHARAJ) இல்லமான 'ஹெர்னே ஹில்' பங்களா (HERNE HILL BANGALOW) வாடகைக்கு எடுக்கப்பட்டது; அதை சுத்தம் செய்ய அலோபா, குமார் இருவரும் முன்கூட்டியே அனுப்பப்பட்டனர். பாபாவும் பெண்மணிகளும் பிரதான வீட்டை ஆக்கிரமிக்க, ஆண்கள் பணியாட்களின் குடியிருப்பில் தங்கினர்.

முஸோரியில் தங்கியிருந்த காலத்தில், உலகம் முழுவதிலும் வாழும் தனது அன்பர்களை, பாபா அற்புதமான முறையில் நினைவுகூர்ந்தார். பாபாவின் அனைத்து ஆண், பெண் மண்டலி, மற்றும் அன்பர்களின் பட்டியல் வரையப்பட்டது; மேலும், எரச் அவர்களின் பெயர்களை தினமும் பாபாவின் முன்னிலையில் வாசிப்பதை வழக்கமாகக் கொண்டார். இந்தப் பாராயணம் மணிக்கணக்கில் தொடர்ந்தது. சில நேரங்களில் பாபா, எரச்சிடம் இடையே நிறுத்துமாறு சைகையால் தெரிவித்து, சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்த அவ்வேளையில், விரல்கள் வேகமாக அதிர - கண்ணுக்குப் புலப்படாத வகையில் பணிபுரிந்து வந்தார். எரச் பெயர்களை மெதுவாக, நிதானமாக வாசித்தார். ஒவ்வொரு பெயரையும் உச்சரிக்கும் போதும், பாபா அவரது காலை லேசாகத் தட்டினார். மேலும், பாபாவிற்கு சேவை செய்து, மறைந்தவர்களின் பட்டியலும் புதுப்பிக்கப்பட்டு, அந்தப் பெயர்களும் அவருக்கு முன்னால் தினமும் வாசிக்கப்பட்டன. உலகம் கடவுளை நினைவில் கொள்கிறது, ஆனால் கடவுள் மனித உருவில் உலகில் வரும்போது, அவர் தனது அன்பர்களையும், பக்தர்களையும் நினைவு கூருகிறார் என்பது உலகிற்குத் தெரியாது. உண்மையில், அவர் ஒவ்வொரு கணமும் அனைவரையும் நினைவில் கொள்கிறார், மேலும் ஒவ்வொருவருக்காகவும் அவரது உள் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

பாபா, கைக்கோபாத்திடம் பிரார்த்தனைகளையும், அலோபாவிடம் நமாஸ் செய்யவும் கேட்டுக்கொள்வது வழக்கம். இதர ஆண் மண்டலியைப் போலவே பாபா, தினமும் இரண்டிலும் பங்கெடுத்தார்.

முஸோரியில் பாபாவின் அன்றாட வழக்கத்தின் மற்றுமொரு செயல்பாடு விஷ்ணுவைப் பற்றியது. 1920 ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து, விஷ்ணு பஜாருக்குச் சென்று, பொருட்களை வாங்கி வந்த வேளையில், ஒவ்வொரு நயா பைசா மற்றும் ரூபாய்க்கான வரவு செலவு கணக்கையும், ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்ததோடு, ஒவ்வொரு பரிவர்த்தனையின்

பதிவையும் துல்லியமாக வைத்திருந்தார். முஸோரியில், பாபா ஒவ்வொரு நாளும் கணக்குகளை ஆராயத் தொடங்கி, விஷ்ணு வாங்கிய ஒவ்வொரு பொருளின் விலையையும் அவரிடம் வாசிக்கக் கூறினார். சில சமயங்களில், பாபா அவரிடம் ஒரே பொருட்களைத் திரும்பத் திரும்ப படிக்கக் கூறி 'காய்கறிகள் ஐந்து ரூபாய்... காய்கறிகள் ஐந்து ரூபாய்...' என்று எதை எதையோ மறுபடியும் சொல்லிக்கொண்டிருக்க, விஷ்ணு, அடக்கமுடியாமல் வாய்விட்டுச் சிரித்தார். பாபா அவரிடம், "**இதில் என்ன வேடிக்கை உள்ளது?**" என வினவினார்.

"இது மிகவும் சலிப்பாக உள்ளது பாபா," விஷ்ணு கடுகடுப்புடன் கூறினார் "நேரத்தைக் கடத்த என்ன ஒரு வழி!"

"**என்ன?**" பாபா வியப்புடன் கேட்டார் "**இது வெறும் பொழுது போக்கு என்று நினைக்கிறீர்களா? உங்களை மீண்டும் மீண்டும் அதையே திரும்பத் திரும்பச் சொல்ல வைத்து, நான் செய்யும் பணியைக் குறித்து உங்களுக்கு என்ன தெரியும்? இதன் மூலம் நான் முழு உலகையும் கணக்கிடுகிறேன். நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்வது வெறும் குறியீடாகக் கருதப்படுகிறதே தவிர, நான் அதை பொழுதுபோக்காகச் செய்வதில்லை; எனது நேரம் முழுவதும் பணியில்தான் கழிகிறது; எனது பணியில் நான் ஈடுபடாமல் ஒரு நொடி நேரம் கூட கடந்து செல்லாது; இரவும் பகலும் எனது பணி தொடரும், ஒரு கண இடைவெளி இருந்தால் கூட, உலகம் மறைந்துவிடும்!**"

பாபா டெஹ்ரா டூனுக்குச் செல்வதற்கு முன்பு, கிஷன் ஸிங் மற்றும் அன்பர்களிடம் 'சிறந்த' சிறுவனைத் தேடுமாறு அறிவுறுத்தினார், ஏனெனில் அவர் சிறுவனின் கால்களைக் கழுவி, இரண்டு வாரங்களுக்கு, தினமும் ஏழு ரூபாய் பிரசாதமாக வழங்க விரும்பினார். பொருத்தமான சிறுவன் கிடைக்கவில்லை, ஆனால் மார்ச் 23 அன்று தரிசனத்தின் போது, தேவ் தத் ஷர்மா (DEV DUTT SHARMA), தனது மகன் ஷஷியுடன் (SHASHI) வந்தார். பாபா அந்த சிறுவனை விரும்பி, கிஷன் ஸிங் மூலமாக, மே 2 அன்று முஸோரிக்கு அழைத்து வரச் செய்தார். பாபா அவனை இரண்டு வாரங்கள் தன்னுடன் இருக்கச் செய்து பின்பு வீட்டிற்கு அனுப்பினார்.

ஷஷி ஷர்மா இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

"பாபாவை முதன்முதலில் பார்த்தபோது, அவரது தெய்வீக ஒளி என்னை அவருடைய பாதங்களைத் தொடத் தூண்டியது, ஆனால் அவர் அதை அனுமதிக்கவில்லை. அவரது முஸோரி ஆசிரமத்தில் தங்குமாறு என்னை அழைத்தார். தினமும் காலை வேளையில் அவர் எனது கால்களில் தலைவணங்கி, சிறிது பணமும் வழங்கினார். அவரது தலை எனது கால்களைத் தொடும் அந்த கணத்தில், எனக்கு மின்சார அதிர்ச்சி போன்ற உணர்ச்சி ஏற்பட்டது."

கிருஷ்ணா நாயர் தினமும் இரவு 9:00 மணி முதல் நள்ளிரவு 1:00 மணி வரை பாபாவின் அருகில் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் பாபா அவரிடம், "**இரவில் என் அருகில் இருக்கப் பொருத்தமான ஒரு**

**சிறுவனை எனக்காகக் கண்டுகொள்வீர்களானால், உங்களுக்கு ஒரு மாதம் விடுமுறை வழங்குகிறேன்**" என்று அறிவுறுத்தினார்.

எனவே, கிருஷ்ணா சிறுவனைத் தேடத் தொடங்கினார்; ஒரு செல்வந்தர் குடும்பத்திலிருந்து நல்ல சிறுவன் ஒருவனைக் கண்டுபிடித்து, அவனிடம், "ஒரு மாதத்திற்கு, சிறப்பான வேலை ஒன்றைச் செய்ய விரும்புகிறீர்களா?" என வினவினார்.

"உங்களை என் வீட்டில் பணியாளாக அமர்த்த முடியும்!" என்று சீற்றத்துடன் பதிலளித்தான் சிறுவன்.

"இந்த வேலை வேறு" என்று கிருஷ்ணா விளக்க முயன்றார். "இங்கே, நாம் அனைத்தையும் நம் குருநாதருக்கு அர்ப்பணித்து, அவரிடமிருந்து எதையும் அடையும் ஆசைகளைக் கைவிட வேண்டும். இந்த குருநாதர் அதிர்ஷ்டத்தை அளிப்பவர், அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே அவருக்கு சேவை செய்ய முடியும்."

சிறுவன், கிருஷ்ணாவை, தனது தந்தைக்கு அறிமுகப்படுத்தினான். 'சிறுவன் தனது குருநாதருக்கு ஒரு மாதம் சேவை செய்ய முடியுமா?' என்று கிருஷ்ணா கேட்டபோது, அந்த மனிதரும் சீற்றமடைந்து, "உன்னையும் உன் குருநாதரையும் நான் பணிக்கு அமர்த்த முடியும்! என்னிடம் இப்படிப் பேச வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார்.

திரும்பி வந்த கிருஷ்ணா, நடந்ததை பாபாவிடம் தெரிவித்தபோது, மறுநாள் பாபா சிறுவனைப் பார்க்க அவருடன் சென்றார். பாபா அவரை ஐந்து நிமிடம் சற்று தூரத்திலிருந்து பார்த்துவிட்டு, "**எனது நோக்கம் நிறைவேறிவிட்டது. இப்போது அவரிடம் திரும்பிச் செல்ல வேண்டாம்**" என்று கூறினார்.

அவ்வப்போது கிஷன் ஸிங், குமார், எல்சா மிஸ்திரி, கேக்கி நலவாலா, ஹெலன் ஆகியோரை பாபா முஸோரிக்கு அழைத்தார், மேலும் டெல்லியிலிருந்து வாஸ் தேவ் கெயின், ஹர்ஜீவன் லால், கேக்கி தேசாய், தர், கஞ்சூ ஆகியோரையும் அழைப்பதுண்டு.

மெஹர்ஜி கர்காரியா ஏப்ரல் இறுதியில் முஸோரிக்குத் திரும்பி வந்தார். மற்றுமொரு பார்வையாளர் நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த அமெரிக்கப் பெண்மணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்த 'ஆட்ரி கார்கிரி' (AUDREY KARGERE), 1952இல் அமெரிக்காவில் பாபாவை சந்தித்த பின்னர், அவரை மீண்டும் பார்க்கவில்லை, ஆனால் நியூயார்க் நகரில் பலருக்கு பாபாவைப் பற்றி தெரிவித்தார்.

குமார் பல நாட்கள் மண்டலியுடன் தங்க அனுமதிக்கப்பட்டார். ஒருமுறை அவர் 'மிஸ்டர் கடவுளால்' ('MR. GOD') அற்புதமாகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கதையை பாபாவிடம் விவரித்தார்.

"சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டால், நான் அவரைப் பின்பற்றுவேன் என 'மிஸ்டர் கடவுளுக்கு' வாக்குறுதி அளித்தேன்," என்று அவர் கூறினார்.

பாபா, குமாரின் கைகளைக் குலுக்க அவரது கையை நீட்டி சைகையால் தெரிவித்தார்: "**நானே 'மிஸ்டர் கடவுள்'; உங்கள் வாக்குறுதியை ஒருபோதும் மீறாதீர்கள்!**"

பாவ் கல்சூரி (BHAU KALCHURI) தனது முதுகலை பட்டத்திற்கான தேர்வில் தேர்ச்சி பெற்று, பாபாவின் உத்தரவிற்கிணங்க நாக்பூரிலிருந்து முஸோரிக்கு, டாக்டர் தேஷ்முக்குடன் வந்தார். பாபா, "**என்னுடன் இருப்பதில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?**" என்று பாவிடம் (BHAU) கேட்டார்.

"நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன், அதனால்தான் வந்தேன்" என்றார் பாவ்.

"**நான் உங்களை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தரிசன நிகழ்ச்சிகளில் எண்ணற்ற மீன்கள் இருந்தன, ஆனால் ஒன்று மட்டுமே பிடிபட்டது!**" என்று மண்டலியிடம் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த நாள், பாபா, பாவ் கல்சூரியை அழைத்து, "**உங்கள் சொந்த பொறுப்பில், நான் உங்களுக்குக் கட்டளையிடும் அனைத்தையும் செய்யத் தயாரா?**" என்று கேட்டார்.

பாவ் 'ஆம்' என்று கூறியபோது, பாபா தொடர்ந்தார், "**நான் உங்களை இங்கேயே இருக்க அல்லது இடம் விட்டு இடம் நகரச் சொல்லலாம், அல்லது சில வேலைகள், சில செயல்களில் ஈடுபடச் சொல்லலாம். நீங்கள் அதை விருப்பத்துடன் செய்வீர்களா?**"

"ஆம்," பாவ் பதிலளித்தார்.

"**மும்பை அல்லது வேறு சில இடங்களுக்குச் சென்று, தொழுநோயாளிகளுடன் எனது சார்பாகப் பணிபுரியுமாறும், அல்லது ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவுகளை வழங்கவும், அல்லது** (இமயமலையில்) **பத்ரிநாத்திற்குச் சென்று, அங்கே அமர்ந்து யாசிக்கவும், அல்லது டோங்காவாலாவாக பணிபுரிந்து, பணம் சம்பாதித்து என்னிடம் கொண்டு வருமாறும் நான் கூறலாம்.**

"**சுருக்கமாக, நான் என்ன சொன்னாலும் செய்வீர்களா? சில மாதங்களுக்குப் பின்னர், உங்கள் குடும்பத்துடன் சிறிது காலம் இருக்கச் சொல்லலாம்; நான் உங்களை ஏதேனும் வியாபாரத்தில் அல்லது உலக விவகாரங்களில் ஈடுபடக் கூறலாம். இதன் பொருள் என்னவெனில், நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிடிலும் நான் கட்டளையிடும் அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டும், ஆனால் நான் அதைச் செய்யும்படி கேட்டுக்கொள்வதால், நீங்கள் அதைச் செய்கிறீர்கள். நீங்கள் விரும்பி எதைச் செய்தாலும், நல்லது, தீயது எதுவானாலும், அதை எனக்காகச் செய்வீர்கள்.**"

பாபாவின் கட்டளைப்படி பாவ் எது செய்தாலும், அந்தச் செயலுக்கான பொறுப்பு பாபாவையே சாரும் என்று அவர் விளக்கினார்: "**எனது கட்டளைகள் அனைத்தையும் 100 சதவிகிதம் அன்புடன் கடைப்பிடித்தால், நீங்கள் சுதந்திரமாக இருப்பீர்கள். ஆனால் உங்கள் மனதை இந்த விஷயத்திற்குள்**

**நுழைய அனுமதித்தால், அது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும். மனம் நம்பமுடியாத அளவுக்கு மிகுந்த கேடு விளைவிப்பதால், கீழ்ப்படிவது என்பது இயலாத காரியம். கீழ்ப்படிதல் 100 சதவீதமாக இருக்க வேண்டும்.**"

பாபா பின்னர் உபாஸனி மஹாராஜ் பற்றிய கதைகளை பாவ் கல்சூரிக்குக் கூறினார். ஸாக்கோரியில் நடந்த ஒரு சம்பவம்: **அங்கு மஹாராஜுடன் வாழ்ந்து, ஆசிரம காரியங்களை கவனித்து வந்த தாரமேக்** (TARAMEK) **என்ற மனிதரைப் பற்றியது. மஹாராஜின் ஆன்மீகத் தாயார் துர்காபாய் கர்மார்கரும்** (DURGABAI KARMARKAR) **அங்கு இருந்தார், ஆனால் அவர் அபூர்வமாக ஏதேனும் வேலை செய்வதை வழக்கமாகக் கொண்டார். ஒரு நாள் துர்காபாய், தாரமேக் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இருவருக்கும் பண ஆசை இருந்ததால், மஹாராஜ் அவர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தினார். மஹாதேவ்** (MAHADEV) **என்று அழைக்கப்பட்ட இன்னொருவரும் அங்கு இருந்தார். மஹாராஜை மிகவும் நேசித்த கிராமத்து விவசாயியான அவர், நாள் முழுவதும் மஹாராஜை நினைவுகூருவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. ஒரு நாள் ஆசிரமத்தில் கேள்வி எழுந்தது, தாரமேக் நாள் முழுவதும் வேலை செய்யும் வேளையில், மஹாதேவ் எந்த வேலையும் செய்யவில்லை. மஹாராஜ் கூறினார், "பல வருடங்களாக ஒன்றுமே செய்யாதவர்கள் மிகவும் கடினமான வேலையைச் செய்கிறார்கள். வருடக்கணக்கில் எதுவும் செய்யாமல் இருப்பது என்பது மாபெரும் தவம்.**"

பாபா மேலும் கூறினார், "**ஜவஹர்லால் நேருவும், சர்ச்சிலும் தத்தமது தேசங்களின் திறவுகோலை வைத்திருக்கும் மாபெரும் பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் எதுவும் செய்யாமல், நாள் முழுவதும் கட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் மஸ்த் நீலகந்த்வாலா, நேருவை விட எல்லையில்லா மாபெரும் பணியைச் செய்கிறார்!**

"**ஒன்றும் செய்யாமல் இருப்பது என்றால் என்ன? உண்ணுவதும் வேலை, உபவாசம் இருப்பதும் வேலை, தூங்குவதும், விழித்திருப்பதும் வேலையே. இதற்குப் பரிகாரம்தான் என்ன? எந்த வேலையையும், நம்மை நம்பி அந்தப் பொறுப்பைத் தந்த நபரின் விருப்பப்படி செய்தால், நாம் எதுவும் செய்யவில்லை என்று அர்த்தம்.**"

மனதில் ஆசைகள் சேமிக்கப்படும் விதம், மேலும் பொதுவாக மனம் எவ்வாறு கிளர்ச்சியடைகிறது என்பதைப் பற்றி பாபா விரிவாக விளக்கினார். இறுதியில், அவர் பாவிடம், "**இப்போது நீங்கள் எனக்காக வாழ்வீர்கள்**" என்று குறிப்பிட்டார்.

பாவ் கல்சூரி பதினைந்து நாட்களுக்காக அழைக்கப்பட்டிருந்தாலும், பாபா மூன்று நாட்களுக்குப் பின்னர், அவரது இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு கூறி இவ்வாறு அறிவுறுத்தினார், "**நாக்பூருக்குத் திரும்பிச் சென்று ஒரு மாதம் முழு ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். அதற்குப் பிறகு, டெஹ்ரா டூனுக்கு**

**வாருங்கள்; அங்கு நான் உங்கள் உடலில் உள்ள ஒவ்வோர் எலும்பையும் உடைப்பேன்!**

**“நான் உங்களைத் திரும்ப அனுப்புகிறேன் என்று நினைக்காதீர்கள். உங்களை என்னுடன் வைத்துக் கொள்வது உறுதி.”** பாபா, பாவ் கல்சூரிக்கு சில அறிவுரைகளை வழங்கிய பின்னர், அவரும் தேஷ்முக்கும் நாக்பூருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

1953 மே மாத தொடக்கத்தில், எல்சா மிஸ்திரி, கிஷன் ஸிங், குமார், ஹெலன் ஆகியோரை ஒரு சிறப்புக் கூட்டத்திற்காக பாபா அழைத்தார். சந்திப்பின் போது, ஜூன் 5 முதல் இரண்டு வாரங்களுக்கு ‘ஸ்டேஷன் வேகன்’ (STATION WAGON) ஒன்றை வாடகைக்கு எடுக்கும் பொறுப்பு எல்சாவிற்கு வழங்கப்பட்டது. பாபா இவர்களிடம், **“எனது பணியில் குறிப்பிடத்தக்க முடிவுகளைக் கொண்டுவரும் நோக்கத்திற்காக, நான் இரவும் பகலும் பயணம் செய்து மஸ்துகளைத் தொடர்புகொள்ளத் திட்டமிட்டுள்ளேன். பதினைந்து நாட்களுக்கு உங்களுக்கு ஓய்வும், தூக்கமும் இருக்காது”** என்று கூறினார்.

1953 மே 2 காலை 8:45 மணிக்கு, பாபா குஜராத்தியில் மனமிரங்கி மொழியும் பிரார்த்தனைக்கான (REPENTANCE PRAYER) ‘முதல் வரி’யை எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்:

**நிலையாக அருளும் பரமாத்மாவே!** (குஜராத்தி மொழியில்)
**இரக்கமுள்ள அல்லாவே!** (அரபிக்)
**கருணைமிக்க கடவுளே!** (ஆங்கிலம்)
**நீங்கள் முற்றிலும் சுதந்திரமானவர் என்பதை அறிந்து,**
**உங்கள் சுதந்திரத்தை நான் உறுதியாகப் பற்றிப் பிடித்து,**
**மேலும் நான் உங்களை நெருங்குகிறேன்.**
**நான், பாபா, முழுமையான பணிவுடன் அவர் சார்பாகவும்,**
**மேலும் அவரை நேசிக்கும் அனைவரின் சார்பாகவும்,**
**மற்றும் எல்லா தகுதியுடன் தவம் புரிபவர்கள் சார்பாகவும்,**
**நான் மனந்திருந்தி வருந்தி மொழிய விரும்புகிறேன்.**

**அனைவரின் சார்பாகவும் நான் இப்போது கூறுவதை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்...**

முஸோரியில் தங்கியிருந்த போது, பாபா ஒருமுறை அறிவித்தார்: **“கடவுளை நாம் அவருடைய எல்லையற்ற சுயத்திலும், நம்மைத் தவிர இதர எல்லா உயிர்களிலும் நேசிக்கும்போது, இறுதியில் நாம் எப்பொழுதும் நம் சுயத்தையே நேசித்து வருகிறோம் என்பதைக் கண்டுகொள்வோம்.”**

மேற்கூறிய இந்த முன்னுரை வாக்கியங்களுடன், 1953 மே 10 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்ட ஒரு சுற்றறிக்கையில், மே 15 முதல் செப்டம்பர் இறுதி வரை, **“எக்காரணத்தைக் கொண்டும் எவரும் மெஹர்**

**பாபாவுடன் தொடர்பு கொள்ளக்கூடாது**" என்று அவரது அன்பர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், பாபா, எரச்சிடம் '**சுவாமி பிரேமானந்தா ஒரு மாதத்திற்கு பதிலாக, இரண்டு மாதங்களுக்குப் பிறகு, பாபாவை சந்திக்க வரவேண்டும்**' என்று தெரிவிக்குமாறு கூறினார். (அவர் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சுவாமி ஆவார், அவருக்கு பாபா மூன்று 'எளிமையான' கட்டளைகளை வழங்கியிருந்தார்.) எரச், டெஹ்ரா டூனுக்குச் சென்றபோது, பிரேமானந்தா டெல்லிக்குச் சென்றிருப்பதை அறிந்தார். தொலைபேசியில் அவரைத் தொடர்புகொண்ட வேளையில், அவர் சமீபத்தில் கடுமையான மாரடைப்பால் பாதிக்கப்பட்டு, வாரக்கணக்கில் படுத்த படுக்கையாக இருப்பதாக பிரேமானந்தா அவருக்குத் தெரிவித்தார். பாபாவுடனான நேர்காணலின் நேரம் நெருங்கி வருவதால், அதை எப்படிச் செய்வது என்று அவர் கவலைப்படத் தொடங்கினார். இந்தச் செய்தியைக் கேட்ட அவர் எரச்சிடம், "பாபா உண்மையிலேயே கருணை உள்ளவர், எல்லாம் அறிந்தவர்" என்றார்.

மே மாத தொடக்கத்தில், பிரேமானந்தா முஸோரிக்கு வந்தபோது, அவருடன் ஓர் இளம் பெண்ணையும் அழைத்து வந்தார். அவரிடம் பாபாவின் முதல் கேள்வி: **"நீங்கள் தனியாக வந்தீர்களா?"**

தான் நோய்வாய்ப்பட்டிருந்த போது, இந்த இளம் பெண் தன்னை நன்றாகப் பேணி பாதுகாத்து வந்ததால், பாபாவின் தரிசனத்திற்காக அவரையும் அழைத்து வர நினைத்ததாக பிரேமானந்தா விளக்கினார். பாபா உடனே, "**நான் உங்களைத் தனியாக வரச் சொன்னேன்; இந்த சிறு கட்டளையைக் கூட உங்களால் பின்பற்ற முடியவில்லையா?**" என்று கடுமையாக வினவினார். இருப்பினும், பாபா, அந்தப் பெண்ணை உள்ளே அழைத்து, சுவாமிக்கு சேவை செய்வதில் அவர் எடுத்த முயற்சிகளைப் பாராட்டினார். அவருக்கு ஒரு ரோஜா இதழை பிரசாதமாக வழங்கி, வெளியே காத்திருக்குமாறு கூறினார்.

பிரேமானந்தாவுடன் உரையாடலைத் தொடர்ந்த அவர், "**நீங்கள் எனது புத்தகங்களைப் படித்தீர்களா?**" அதற்கு பதிலளித்த பிரேமானந்தா, தான் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்ததால், அவரால் எதையும் படிக்க முடியவில்லை என்று கூறினார்.

**"எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது என்ற உத்தரவு என்னவாயிற்று?"** பாபாவின் அடுத்த கேள்வி. நோயால் அவதிப்படும் போது அந்தப் பெண் அவரைத் தொட்டாக வேண்டிய நிர்பந்தத்தில், இந்த உத்தரவும் கடைப்பிடிக்க முடியாமலாயிற்று என்று பிரேமானந்தா கூறினார்.

மூன்று விரல்களைக் காட்டி ஒன்றன் பின் ஒன்றாக மடித்தபடி, பாபா சுருக்கமாக எடுத்துரைத்தார், "**நீங்கள் தனியாக வரவில்லை; நான் படிக்கக் கூறிய புத்தகங்களை நீங்கள் படிக்கவில்லை; ஒரு பெண்ணைத் தொடாமல் இரண்டு மாதங்கள் கூட உங்களால் இருக்க முடியவில்லை. அதனால்தான் நான், எனது அறிவுரைகளை நிறைவேற்றுவதை விட, இமயமலையின் பனி**

**படர்ந்த சிகரத்தில் நிர்வாணமாக அமர்ந்திருப்பது எளிது என்று ஆரம்பத்திலேயே சொன்னேன்.**

**“எனினும், எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய தவறியதற்காக நான் உங்களை மன்னிக்கிறேன். நடந்ததை மறந்துவிடுங்கள்; நான் உங்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்குகிறேன். இந்த முறை, எந்த சிறப்புப் புத்தகங்களைப் படிக்க வேண்டிய தேவையும் இல்லை; எந்தப் பெண்ணையும் தொடுவதில் எவ்விதமான தடையும் இல்லை. ஒன்றை மட்டும் செய்யுங்கள்: ஜூலை 9 அன்று வந்து என்னைப் பார்க்கவும், ஆனால் தனியாக வாருங்கள்.**” பிரேமானந்தா சம்மதம் தெரிவித்து, புறப்பட்டுச் சென்றார்.

சுவாமி பிரேமானந்தா குறிப்பிட்ட நாளில் திரும்பி வந்தார், ஆனால் இந்த முறையும் அவர் தனியாக வரவில்லை. அவருடன் அதே பெண்மணி மற்றும் பலர் இருந்தனர்; அவர் இப்போது தனது ‘ஆன்மீக சகோதரி’ என்றும் இதர இளம் பெண்கள் அந்த சகோதரியின் குடும்ப உறுப்பினர்கள் என்றும் பிரேமானந்தா விளக்கினார்.

“அவர்கள் அனைவரும் உங்கள் மீது மிகவும் ஆர்வமாக உள்ளனர், பாபா” என்றும் அவர் கூறினார்.

“**அதில் எனக்கு எந்தக் கவலையும் இல்லை**,” என்று பாபா அவரைக் கடிந்துகொண்டார். “**எனது ஒரே கவலை நான் வழங்கிய கட்டளை ஒன்றில்தான்**.” பிரேமானந்தா பாபாவிடம் அவரும் அந்தப் பெண்ணும் இணைந்து, வாழ்க்கையை அர்ப்பணித்து அவருடைய சகவாசத்தில் வாழ முடியுமா என்று கேட்டார்.

ஆனால் பாபா பதிலளித்தார், “**என்னுடன் ஒருவருக்கு மட்டுமே இடம் உள்ளது. நீங்கள் திரும்பிச் சென்று உங்கள் விருப்பப்படி வாழ்வது நல்லது. நான் விரும்பாவிட்டால் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது சாத்தியமில்லை என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.**” இது சுவாமி பிரேமானந்தாவின் மெஹர் பாபாவுடனான தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

1953 ஜூன் 1ஆம் நாள், பாபா முஸோரியை விட்டு வெளியேறி ஆண், பெண் மண்டலியுடன் டெஹ்ரா டூன் திரும்பி வந்தார். இந்த முறை பாபாவும் பெண்மணிகளும் 105-ஏ, ராஜ்பூர் சாலையில் (105-A, RAJPUR ROAD), வாடகைக்கு எடுக்கப்பட்ட பங்களாவை ஆக்கிரமித்த அதே வேளையில், ஆண்கள் 107-ஏ (107-A) பங்களாவில் தொடர்ந்து வசித்து வந்தனர் (கிஷன் ஸிங் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று, ஜூலை 20 அன்று அந்த பங்களாவைக் காலி செய்ய வேண்டியிருந்ததால், அதன் பின்னர் ஆண் மண்டலி 101 ராஜ்பூர் சாலையில் அமைந்த கிஷன் ஸிங்கின் புதிய இல்லத்திற்குக் குடிபெயர்ந்தனர்).

பாபா முதன்முதலில் டெஹ்ரா டூனுக்கு வந்ததிலிருந்து, கிஷன் ஸிங்கின் தனிப்பட்ட வாழ்க்கை விவகாரங்கள் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வந்தன. கிஷன் தனது மனைவியை இழந்து வாழ்ந்து வந்தார்; மேலும், அவரது

வீட்டின் ஒரு பகுதியில் தங்கியிருந்த டெல்லியைச் சேர்ந்த பிரகாஷ்வதி ஷர்மா (PRAKASHWATI SHARMA) என்ற திருமணமான பெண்ணுடன் தொடர்பில் இருந்தார்.

பிரகாஷ்வதி தனது கணவருடன் இருப்பதை பாபா விரும்பினாலும், அவர் டெஹ்ரா டூனில் இருக்க விரும்பினார். ஜூன் 2 அன்று பிரகாஷ்வதி, கிஷன் இருவரையும் பாபா சந்தித்து, “**எல்லோரும் எனக்குப் பிரியமானவர்கள், ஏனெனில் நானே எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன், என்னைத் தவிர வேறொன்றுமில்லை. நான் எவரையும் வெறுக்கவும் முடியாது, நான் எவரையும் பிரிக்கவும் முடியாது. எனவே நீங்கள் இருவரும் ஒன்றாக இருக்க விரும்பினால், அப்படியே ஆகட்டும்**!” என்றார்.

இதற்கிடையில், பாபா, திருமண வயதில் பெண் குழந்தைகளுடன், ஆனால் வரதட்சணை வழங்க முடியாமல் வாழும் விதவை பெண்மணிகளைக் கண்டுபிடிக்குமாறு குமாருக்கு அறிவுறுத்தினார். குமார் அத்தகைய சூழ்நிலையில் வாழும் மூன்று பெண்மணிகளைக் கண்டுபிடித்து 3ஆம் தேதி பாபாவிடம் அழைத்து வந்தார். அவர்களை, தலை தாழ்த்தி வணங்கிய பிறகு, பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய தையல் இயந்திரத்தை வழங்கினார். அவர் இந்தப் பணியைத் தொடங்கும் போதே ஒரு மனக்குழப்பமான சம்பவம் நிகழ்ந்தது; திரு. ஸேகலின் (SEHGAL) மனைவி, மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில், எதிர்பாராத விதமாக வருகை தந்து நிகழ்ச்சிகளில் குறுக்கிட்டார். அன்றைய தினம் பாபா, வாழ்வில் மிகவும் கடுமையான வீழ்ச்சியை சந்தித்த 24 நபர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் பிரசாதமாக ரூ. 300 வழங்கினார். அத்தகைய நபர்களுக்கு உதவுவதன் மூலம், இதேபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் வாழும் அனைவருக்கும் உதவுவதாக பாபா கூறினார்.

ஜூன் 6 சனிக்கிழமை காலை 6:35 மணிக்கு, எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி, குமார், எல்சா, ஹெலன், டாக்டர் தேஷ்முக் ஆகியோருடன் பாபா, உத்தர பிரதேசம் மற்றும் பஞ்ஜாப் வழியாக ஒரு மஸ்த் பயணத்தை மேற்கொண்டார். மண்டலி, ‘கோடாக்’ (KODAK) 16 மிமீ திரைப்பட காணொளி கேமரா ஒன்றையும் உடன் எடுத்துச் சென்றனர். இரண்டு தனித்தனி வாகனங்களில், ஒன்றை எல்சா ஓட்டிச் செல்ல, கிஷன் ஸிங்கின் காரை, ஹெலன் ஓட்டிச் சென்றார். முதலில் பாபா இரண்டு வார பயணத்தைத் திட்டமிட்டிருந்தார், ஆனால் எல்சா, கிஷன் ஸிங் இருவரும் பாபா விரும்பிய ஸ்டேஷன் வேகனை ஏற்பாடு செய்யத் தவறியதால், அவர் பயண நாட்களைக் குறைக்க வேண்டியதாயிற்று. பாபா இதைக் குறித்து மிகவும் அதிருப்தி அடைந்தார், ஏனெனில், ‘**ஒரே வாகனத்தில் முழுக் குழுவுடன் ஒன்றாகப் பயணிப்பதன் மூலம் அவர் செய்ய நினைத்த முக்கியமான பணிக்கு இது ஒரு பின்னடைவு**’ என்று கூறினார்.

அவர்கள் புறப்படும் வேளையில், பாபா அனைவரிடமும் கூறினார்: “**இப்போது நாம் இரவும் பகலும் தூங்காமல், கண்விழித்து பயணம் செய்ய வேண்டும்; வெப்பம், காற்று, புழுதி, புயல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல்**

**ஆர்வத்துடன் பணிபுரிய வேண்டும். பதினைந்து நாட்களுக்கு, தூக்கமின்றி, ஒன்றாக சுற்றி அலைந்து மேற்கொள்ளும், சில உள் பணிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த நீண்ட பயணம், இப்போது சாத்தியம் இல்லை, எனவே இது ஒரு சாதாரண மஸ்த் பயணமாக இருக்கும்.**

**"நேற்றிரவு நான் தூங்கவில்லை, மிகுந்த மனச்சோர்வுடன் இருந்தேன். கடவுளே அதை விரும்பிச் செய்தார். இது 'ஸ்டேஷன் வேகன்' வாகனம் ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட பின்னடைவால் அல்ல. கடவுள் எனது கண்களில் மண்ணைத் தூவி விட்டார், ஏனெனில் கடவுளுக்குத் தெரியும், 1953இல் எனது பணியில் நான் 100 சதவீதம் உறுதியாக இருந்தேன்; அதைச் செய்வதில் நான் முழு முனைப்புடன் இருந்தேன்; கடவுளும் அதை விரும்பினார், மேலும் 1953 திட்டத்திற்கான எங்கள் அடிப்படை செயலும் அத்துடன் சென்றது."**

ஒரு கட்டத்தில் அவர் விளக்கினார், **"1953ஆம் ஆண்டிற்கான எனது முழுத் திட்டமும் நிலைகுலைந்து போனதால், முற்றிலுமாக மாற்றப்பட வேண்டும்."**

அவர்கள் பயணத்தைத் தொடங்கினர், ரிஷிகேஷில் அமைந்த 'பஜன்' ஆசிரமத்தில் (BHAJAN ASHRAM) வாழ்ந்த நீல்கந்த்வாலா (NILKANTHWALA) என்ற மஸ்துடன் பாபாவின் முதல் தொடர்பு தொடங்கியது; அவருடன் கடந்த மார்ச் மாதத்தில் பாபா பணிபுரிந்தார். நீல்கந்த்வாலா ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட உயர் திறன் படைத்த மஸ்த் என்பதை பாபா மீண்டும் வலியுறுத்தினார்; இந்தத் தொடர்பில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நீல்கந்த்வாலா மஸ்த் மீது பாபாவிற்கு ஒரு தனிப் பிரியம், இந்தப் பயணம் முடிவதற்குள் (ஜூன் 10 அன்று) அவருடன் பாபா மீண்டும் பணிபுரிந்தார்.

ரூர்க்கி (ROORKEE) நகருக்குச் சென்ற பாபா, கல்யார் ஷெரீ:ஃபில் அமைந்த முஸ்லீம் குதுப் ஸபீரின் (MUSLIM KUTUB SABIR AY KALYAR SHARIFF) தர்காவிற்கு விஜயம் செய்து, அவரது சமாதியை வணங்கினார். ஸபீரின் சமாதி ரூர்க்கி நகரில் மிகவும் பிரபலமானது.

ரூர்க்கியிலிருந்து ஏறக்குறைய பத்து மைல் தொலைவில் முஸ:ஃபர்நகர் (MUZAFFARNAGAR) செல்லும் வழியில், பாபா, முற்றிலும் நிர்வாணமாக இருந்த ஒரு மஸ்தைக் காண நேர்ந்தது. முதலில் பாபா, பைதூலை அந்த மஸ்திடம் அனுப்பி, அவரை சாலையோர மரத்தின் கீழ் அமர வைத்து, பின்னர் அவருடன் பாபா தனிமையில் பணிபுரிந்தார்; அவர் தனது தலையை மஸ்தின் கால்களில் வைத்து வணங்கியதோடு, பாபாவின் தொடர்பு முடிவடைந்தது. தொடர்ந்து பாபா அவருக்கு மரியாதை செலுத்துமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். இந்த மஸ்தை இதற்கு முன்பு பாபா தொடர்பு கொண்டதில்லை, பின்னர் அவர் டெஹ்ரா டூனுக்கு அழைத்து வரப்பட்டார், அங்கு பாபா அவருடன் பல வாரங்கள் பணிபுரிந்தார்.

அன்று மதியம் அவர்கள் பிஜ்னோர் (BIJNOR) நகரை நோக்கிச் சென்றனர். பாலைவனத்தின் குறுக்கே மரப் பலகைகள் வைக்கப்பட்டு, கார்கள் செல்லும் அளவுக்கு செப்பனிடப்படாத சாலை உருவாக்கப்பட்டிருந்தது. பாபா பயணம் செய்த கார் சக்கரங்கள், பலகைகளிலிருந்து நழுவி, மணலில் புதைந்தது. அதை வெளியே எடுக்க, ஹெலன் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், ஆனால் சக்கரங்கள் மேலும் வேகமாகச் சுழன்றதில், கார் ஆழமாக மூழ்கியது. அதற்குள் பொழுது மதியமாக சூரியன் சுட்டெரித்தது; சூடான காற்று வீசியது. ஒவ்வொருவரும் காரை வெளியே தள்ளவோ அல்லது பளுதூக்கி (JACK) மூலம் தூக்கவோ கை கொடுத்தும், அவர்களால் அதை ஒரு அங்குலம் கூட முன்னோக்கி நகர்த்த முடியவில்லை. ஒரு மணி நேரம் வியர்வை சிந்தி, கடுமையாக உழைத்தும், அனைத்து முயற்சிகளும் தோல்வியை சந்திக்க, இது முற்றிலும் நம்பிக்கையற்றதாகத் தோன்றியது. குடிநீரும் இல்லாத நிலையில் உதவிக்காக ஒருவரும் இல்லை, எல்லா திசைகளிலும் மணலைத் தவிர வேறு எதுவும் தென்படவில்லை. இறுதியாக, பிஜ்னோருக்குக் கால்நடையாகப் பயணித்த ஒரு குழு கை கொடுத்து உதவியது; காரின் சக்கரங்கள் பலகைகளின் மீது மீண்டும் மீட்கப்பட்டன. அவர்கள் பாலைவனத்தைத் தாண்டிச் செல்வதற்கு முன்பு, மணலில் புதைந்த காரை வெளியே எடுக்க உதவிய நபர்களின் குழுவிற்கு தலா ஒரு ரூபாய் வழங்கப்பட்டது.

பாபாவும் அன்பர்களும் கங்கை நதியின் அருகே வந்தபோது, அதன் நிழலோடிய கரையில் சிறிது நேரம் ஓய்வெடுத்து மகிழ்ந்தனர். நதி மிகவும் குளிர்ச்சியாக இருந்தது, அனைவரும் ஓய்வெடுக்க விரும்பினர், ஆனால் பாபா, பிஜ்னோர் பயணத்தை ரத்து செய்து, முஸஃபர்நகருக்குத் திரும்ப முடிவு செய்தார். அவர்கள் கங்கை நதியைக் கடக்காமல் (கார்களைப் படகுகளில் கொண்டுசெல்ல வேண்டியிருக்கும்), பாலைவனத்தின் வழியாக திரும்பிச் சென்றனர். அதிர்ஷ்டவசமாக இந்த முறை எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழவில்லை; அன்று மாலையில் முஸஃபர்நகர் வந்து சேர்ந்ததும், பாபா, பயணத்தைத் தொடர விரும்பினார். மேலும் பதினான்கு மைல்கள் ஓட்டிச் சென்று, அன்று இரவு 8:30 மணிக்கு 'சர்த்தாவல்' (CHARTHAWAL) குறு நகரை வந்தடைந்தனர். சாலையின் ஒரு பகுதி சில ஆழமான பள்ளங்களால் நிறைந்திருந்தது. மேலும் கீழுமாக தூக்கி எறியப்பட்ட சவாரி மிகவும் கடினமாக இருந்தது.

சர்தாவலில், பாபா, அபயா தேவ் (ABHAYA DEV) என்ற புகழ்பெற்ற துறவியுடன் பணிபுரிந்து வணங்கினார். உள்ளூர் வாசிகளுக்கு பாபாவைத் தெரியாத போதிலும், அவர் அந்த இரவை அங்குக் கழிக்குமாறு கேட்டுக் கொண்டனர். பயணத்தின் போது, பாபாவின் அடையாளம் மக்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக, பாபாவைப் பற்றி எவரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம் என்று மண்டலிக்கு உத்தரவிடப்பட்டது. பாபா ஒரு சாதாரண ஆன்மீக யாத்ரீகராக, தனது பெயரையும், அடையாளத்தையும் மறைத்து, பயணம் செய்து, மஸ்துகளையும், துறவிகளையும் தொடர்பு கொள்ளும் பணியைத் தொடர்ந்தார்.

பாபாவும் மண்டலியும் அந்த இரவை அங்கு கழிக்க வேண்டும் அல்லது அவர்கள் புறப்படுவதற்கு முன்பு சிறிதளவு சிற்றுண்டி உண்ண வேண்டும் என்று சர்தாவல் மக்கள் விரும்பியபோது, பாபா அதற்கு இணங்காமல், நேரத்தையும் வீணாக்காமல் அனைவரும் முஸஃபர்நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அன்று இரவு முஸஃபர்நகரில், பாபா, அல்லாடியா (ALLADIA) என்று அழைக்கப்பட்ட மஸ்தானியைத் தொடர்பு கொண்டார். அனைத்து விதமான குப்பைகளும் நிறைந்த ஒரு சிறிய பாழடைந்த குடிலே அவர் இருப்பிடம். உள்ளே ஒருவருக்குக் கூட இடமில்லாததால், பைதூலின் வேண்டுகோளுக்கு இணங்க, மஸ்தானி மெழுகுவர்த்தியை ஏந்திய வண்ணம் வெளியே வந்தார். மிகவும் அசுத்தமான உடையை அணிந்திருந்தாலும், அவர் ஓர் உயர்ந்த வகையைச் சார்ந்த மஸ்தானி என்று பாபா கூறினார். பாபா, மஸ்தானியின் கால்களில் தலைவணங்கி பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். பாபாவைப் பார்த்த மஸ்தானி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். "நீடூழி வாழ்க; கடவுளின் ஆசீர்வாதத்தை நான் வேண்டுகிறேன்," என்று உருது மொழியில் பேசினார்.

இரவு பத்து மணிக்கு அரசு பங்களாவிற்குத் திரும்பி வந்து, ஓய்வெடுத்து, அதிகாலை 5:00 மணிக்கு ஸஹாரன்பூருக்குச் சென்றனர். அங்கு பாபா, 1953 ஜூன் 7 ஞாயிற்றுக்கிழமை அன்று, குர்ஆன் படித்துக் கொண்டிருந்த, வெள்ளைத் தாடியுடன் கூடிய, கலூ மியா (KALU MIA) என்று அழைக்கப்பட்ட ஒரு ஸலிக் யாத்ரீகரை தொடர்பு கொண்டு, மீண்டும் அவரது கால்களில் தலைவணங்கினார். தொடர்புக்குப் பிறகு, கலூ மியாவின் இயல்பு ஒரு குழந்தையைப் போன்றது என்று பாபா குறிப்பிட்டார்.

குருக்ஷேத்திரா (KURUKSHETRA) நகரைச் சென்றடைந்த பாபா, கதா பாபா (KATHA BABA) என்று அழைக்கப்பட்ட ஒரு துறவியை சந்தித்தார். (குஜராத் மாநிலம்) கத்தியவாரிலிருந்து (KATHIAWAR) குடிபெயர்ந்த கதா பாபா, உள்ளூர் மக்களால் வணங்கப்பட்டார். அதன் பின்னர் அவர்கள் அன்று இரவு ஏழு மணிக்கு அம்பாலா வந்தடைந்து, அரசு பங்களா ஒன்றில் தங்கினர்.

மறுநாள் அதிகாலை, ஐந்து மணிக்கு, கன்னா (KHANNA) நகரை நோக்கிப் பயணம் மீண்டும் தொடங்கியது. இந்த பயணங்களின் ஒரே நோக்கம், பாபாவின் ஆன்மீகப் பணியுடன் தொடர்புடையது; அவர், பெரும்பாலும் ஓய்வைப் பொறுத்தவரை சிறிதும் அக்கறை இல்லாமல் பயணம் மேற்கொண்டார். அன்று காலை, கன்னாவில் ஸோமேஷ்வர் ஆனந்தா (SOMESHWAR ANANDA) என்ற ஜெயின் துறவியை சந்தித்து, அதைத் தொடர்ந்து, இறை போதையில், முற்றிலும் நிர்வாணமாக, கவர்ச்சிகரமான, பளபளக்கும் கண்களுடன், அழகான முகத்தோற்றத்துடன் காணப்பட்ட பாம்பி (BAMPI) என்ற சிறுவனைத் தொடர்புகொள்ள நேர்ந்தது. பாபா, பாம்பியின் கால்களில் தலைவணங்கிய போது, சிறுவன், 'ஸாக்கி (SAKI, இறை போதையின் மதுபானத்தை வழங்குபவர்)!' என்று உரத்த குரலில் கதறி, பின்னர் ஒரு வயல்வெளியை நோக்கி ஓடினான். அந்த

இளம் மஸ்த் அவரை அடையாளம் கண்டுகொண்டதால், பாபா அவனைப் பின்தொடராமல், உடனடியாக வெளியேறினார்.

ஒரு ஜெயின் கோவிலுக்குள் நுழைந்த பாபா, காவி நிற அங்கியும், வாயில் ஒரு வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த ஒரு மஸ்த்-துறவியை சந்தித்து, அவருடைய கால்களில் தலைவணங்கச் சென்றபோது, அந்த மனிதர், “இந்த அளவிலான சக்தியை நான் அடையப் பெற்றதும் இல்லை, அதைத் தாங்கும் சக்தியும் எனக்கில்லை!” அதாவது, ‘அத்தகைய கௌரவம் எனக்கு ஏற்புடையதல்ல!’ என்று கூறி பின்வாங்கினார். இருப்பினும், பாபா அவரது பாதங்களைத் தொடும் வகையில் பைதூல் அவரை இணங்கச் செய்து வெற்றி கண்டார்; பாபாவும் அவரது பணியை நிறைவு செய்ய முடிந்தது.

குப் (KUP அல்லது கூப் - KOOP) கிராமத்தின் அருகில் காரில் செல்லும்போது, பாபா, தோத்தாபுரி (TOTAPURI) என்ற மேல்நிலையை அடைந்த, முக்கியமான மஜ்ஜூப் வகையைச் சார்ந்த மஸ்தைத் தொடர்பு கொள்ள நேர்ந்தது; இதற்கு முன்னதாக, பாபா அவரை இரண்டு முறை சந்தித்தார். தோத்தாபுரிக்கு சுமார் 90 வயது, ஒரு மஜ்ஜூப் போன்ற மஸ்த், அவர் தனது தெய்வீக நிலையில் முழுமையாக உள்வாங்கப்பட்டு, பௌதீக உணர்வின்றி இருந்தார்; நிர்வாணமாக, எப்பொழுதும் அழுக்கும், அசுத்தமும் நிறைந்த இடத்தில் அமர்ந்திருப்பது வழக்கம், மேலும், எந்தக் காலநிலையாலும் பாதிக்கப்படாமல் இருந்ததால், தனக்கென ஒரு தங்குமிடத்தை அனுமதிக்கவில்லை. உண்ணவும், அருந்தவும் கவலையே படாத இந்த மகத்தான மஸ்தை, மிகக் கடுமையான வானிலையும் தொந்தரவு செய்வதில்லை. சாலையோரத்தில், ஒரு குறிப்பிட்ட மரத்தின் கீழ், மஸ்த் பெரும்பாலும் அமர்ந்திருந்த வேளையில், அவருடைய சௌகரியத்தைக் கருத்தில் கொண்டு, அவருக்கு எவரேனும் மெத்தை, தலையணை போன்றவற்றை வழங்க முயன்றால், அவர் அதை வீசி எறிவது வழக்கம். பின்னர் அவருடன் மேற்கொண்ட தொடர்புகளின் போது, அவர் கிராமத்தை விட்டு வெளியேறி, ஒதுக்குப்புறமான இடத்தில் இருப்பதைக் காண முடிந்தது. கிராமத்தில் அவருக்கு வீடு, உறவினர்கள் இருந்தும், அவர் மீண்டும் அங்குச் சென்றதில்லை. அவரது சகோதரரும் இதர பக்தர்களும் அவருடன் திறந்த வெளியில் நேரத்தைக் கழித்ததோடு, அவரை கவனித்துக் கொள்ள உண்மையாக முயன்றனர். ஆனால், ஏற்கனவே குறிப்பிட்டபடி, தோத்தாபுரிக்கு எந்தவிதமான சொகுசு வாழ்விலும் நாட்டமில்லை, அதனால் அவர் ஒரு கம்பளத்தின் மீது கூட அமர்வதில்லை. வறண்ட, வெறுமையான நிலத்தில் அமர்ந்து, இறை அன்பின் அனுபவத்தில் முழுமையாக மூழ்கியிருந்தார்.

இதற்கு முந்தைய தொடர்புகளில், தோத்தாபுரி மஸ்தை, பாபா ஜலாலி (நெருப்பு - சினமூட்டும்) நிலையில் கண்டார்; தோத்தாபுரி எவரையும், பாபாவைக் கூட, அவரது கால்களைத் தொட அனுமதித்ததில்லை. இந்த ஆண்டில், தோத்தாபுரி கணிசமான சாந்த நிலையை அடைந்ததைக் காண முடிந்தது; மேலும் இந்தத் தொடர்பின் போது, மண்டலியை எந்த இடையூறும் இல்லாமல்

தரிசனம் செய்ய அனுமதித்தார். பாபா அவரைப் பலமுறை வணங்கி, தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஒவ்வொரு முறையும் பாபா அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கிய போது, பாபாவின் உண்மை நிலையை அங்கீகரித்து, மஸ்த் உரத்த குரலில் 'கடவுள் இங்கே இருக்கிறார்.. கடவுள் இங்கே இருக்கிறார்...' என்று கூறினார்.

பாபா, மஸ்தைத் தொடர்பு கொள்ளும் வேளையில், தோத்தாபுரியின் பக்தர்களில் ஒருவருடன் டாக்டர் தேஷ்முக் பேசிக் கொண்டிருந்தார். அவர்களின் குழுவைப் பற்றி கேட்கப்பட்டபோது, டாக்டர் தேஷ்முக், கவனக்குறைவாக, மெஹர் பாபாவின் மகிமையைப் புகழ்ந்து ஏதோ கூறினார். ஆரம்பத் தொடர்பு நிறைவடைந்ததும், தேஷ்முக் செய்ததைக் குறித்து பாபா வருத்தமடைந்து, அவரைக் கடுமையாகக் கண்டித்தார்: "**பயணம் தொடங்குவதற்கு முன்னர், உங்களில் எவரும் என்னைப் பற்றி எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று நான் எச்சரித்தேன். நான் ஒரு சாதாரண மனிதனாக, மேன்மைமிகு மஹான்களின் பாதங்களில் தலைவணங்குவதற்காக, இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன். ஒருவன் முற்றிலும் சாம்பலாகி, தாழ்வு மனப்பான்மையுடன் அத்தகைய மஸ்துகளை அணுக வேண்டும். நீங்கள் எனது பணியைப் பாழாக்கிவிடுகிறீர்கள். பிறரிடம் என்னைப் புகழ்ந்து பேசுவதால், நீங்கள் எனக்கு உதவியாக இருக்காமல், என்னை சாகடிக்கிறீர்கள்! இந்த வேலையை எவருக்கும் தெரியாமல் இரகசியமாகச் செய்ய விரும்புகிறேன். நீங்கள் தூசைப் போல் ஆகாத வரை, எனது பணியில் உங்களால் உதவ முடியாது. நான் உங்களுக்குச் சொல்வதை, கடவுளின் நிமித்தம், கவனமாகக் கேட்டு அதன்படி செயல்படுங்கள்.**"

மீண்டும் தோத்தாபுரி மஸ்தை அணுகி, பாபா, பலமுறை அவர் கால்களில் தலைவணங்கினார். பாபாவும் மண்டலியும் அவர் முன்னிலையில் நீண்ட நேரம் இருந்தனர்.

இதைத் தொடர்ந்து பாபா, லூதியானாவிற்குப் (LUDHIANA) புறப்பட்டுச் சென்று, அங்கு அவர் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தொடர்பு கொண்ட ஒரு மரியாதைக்குரிய இந்து துறவியான தண்டி சுவாமியை (DANDI SWAMI) சந்திக்க அன்று மதியம் வந்தார். தண்டி சுவாமிக்கு 108 வயது என்று கூறப்பட்டது. அவர் ஓர் அழகான தோட்டத்தின் மத்தியில், பக்தர் ஒருவரின் பங்களாவில் கண்டுகொள்ளப்பட்டார். வயதான இந்தத் துறவி கீதையில் சொற்பொழிவுகள் வழங்கினார்; ஒருவரையும் அவரது பாதங்களைத் தொட அனுமதிக்காததால், பாபா அவரை தூரத்திலிருந்து வணங்கினார்.

லூதியானா நகரில் அமைந்த அரசு பங்களாவில் இரவைக் கழித்து, 1953 ஜூன் 9 அதிகாலையில் 6:30 மணிக்கு, அவர்கள் ஃபில்லோர் (PHILLAUR) கிராமத்தைச் சென்றடைந்தனர். பாபா ஒரு நிர்வாண மஸ்தானியைத் தொடர்பு கொள்ள விரும்பினார், ஆனால் பாபாவைப் பார்த்ததும், மஸ்தானி

தூங்குவதுபோல பாசாங்கு செய்து, ஒரு போர்வையால் தன்னை மூடிக்கொண்டார்.

பைதூலுடன் இதர அன்பர்கள் மஸ்தானியை 'மா, மா' என்று பலமுறை மெதுவாக அழைத்தாலும் அவர் பதிலளிக்கவில்லை. மஸ்தானியைத் தொந்தரவு செய்ய பாபா விரும்பாமல், திரும்பி வரும் வேளையில் தொடர்பு கொள்வதாக முடிவு செய்து, பின்னர் அவர் ஒரு குறிப்பிட்ட மஸ்தை சந்திக்க மாவ் (MAU) என்றழைக்கப்பட்ட கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

வழியில், அவர்கள் ஒரு சேறு நிறைந்த வயற்காடு வழியாகச் சென்றபோது, பாபா, பயணம் செய்த கார் தண்ணீர் நிறைந்த பள்ளத்தில் சிக்கி, சில உள்ளூர் கிராமவாசிகளின் உதவியுடன் வெளியே எடுக்கப்பட்டது. அவர்கள் காலை 8:00 மணியளவில் மாவ் கிராமத்திற்கு அருகே வந்தபோது, அங்கு பாபா, சாலையோரம், தூசியில் ஒரு மஸ்த் நிர்வாணமாகக் கிடப்பதைக் கண்டார். அவர் ஒரு முஸ்லீம், மக்களால் 'நங்கா மஸ்த்' என்று அழைக்கப்பட்டார். அவரது நிர்வாண உடல் முற்றிலும் தூசியால் மூடப்பட்டிருந்தது; எல்லா சூழ்நிலையிலும், அவர் தனது பௌதீக உடலையும், உலகையும் பற்றி அறியாமல் இருந்தார். இந்தத் தொடர்பின் போது, பாபா, மஸ்தின் காலடியில் தலைவணங்கி, அவருக்கு ஏதேனும் வேண்டுமா என்று கேட்டதற்கு, மஸ்த் இவ்வாறு பதிலளித்தார், “பாபு என்ற எனது நாய்க்கு, நெய் (வெண்ணெய்) தடவிய ரொட்டியைக் (சப்பாத்தி) கொடுங்கள்; மேலும் வேறு எந்த மனிதருக்கும் இதையே உணவாக வழங்குங்கள்.”

பயணத்தின் போது டாக்டர் தேஷ்முக் தனது கோடாக் திரைப்படக் கேமராவில் அவ்வப்போது சில காட்சிகளைப் படமாக்கினார். இந்த மஸ்தின் சில காட்சிகளைப் பதிவு செய்யும் போது, மஸ்த் அவரிடம், “அது என்ன?” என்று கேட்க, அது ஒரு திரைப்படக் கேமரா என்று பதிலளித்து, அவரைப் படம்பிடிப்பதாகக் கூறினார். இதைக் கேட்ட மஸ்த் எதுவும் பேசாமல் புன்னகைத்தார். பாபா அந்தத் தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மஸ்த் எப்போதேனும் ஒரு கிராமத்திலிருந்து வேறொரு கிராமத்திற்கு அலைந்து திரிந்தாலும், அவர் வெகுதூரம் செல்லாமல், பாபா அவரைத் தொடர்பு கொள்ளும் விதத்தில் கிராமத்தின் புறநகர் பகுதியில் தங்கினார்.

காலை 9:00 மணிக்கு, ஃபில்லோர் கிராமத்திற்குத் திரும்பி வந்த பாபா, தூங்குவது போல பாசாங்கு செய்த மஸ்தானியைத் தொடர்பு கொள்ள மீண்டும் சென்றார். உள்ளூர் மக்கள் அவருக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து மஸ்தானி மா (அம்மா) என்று அழைத்தனர். மிகவும் வயதான, உயரமான பெண்மணியாக இருந்த அவர், ஆன்மீக மேல்நிலையை அடைந்து, முற்றிலும் பௌதீக உணர்விழந்த நிலையில், பெரும்பாலும் நிர்வாணமாகக் காணப்பட்டார். இந்த முறை பாபா அவரை அணுகியபோது, மஸ்தானி நல்ல மனநிலையில், தனக்குள்ளே பாடிக்கொண்டே, ஓர் உணவகத்தின் வராண்டாவை துடைப்பத்தால் சுத்தம் செய்து கொண்டிருந்தார்: “அங்கே, இசை இசைக்கிறது! இசை ஒலிக்கிறது!” மஸ்தானியுடனான தொடர்பில் பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றினார்,

மேலும் டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்பு, பாபா அவரை மீண்டும் தொடர்பு கொண்டார்.

தொடர்ந்து காலை 9:20 மணிக்கு, பாபா, ஃபில்லோரிலிருந்து 'ஸிகோகா தாலா' (SIKHOKA TALA) என்ற தொலைதூர கிராமத்திற்குச் சென்று, பண்டித் முனிலால் (PANDIT MUNILAL) என்று அழைக்கப்பட்ட மஸ்தைத் தொடர்பு கொண்டார். மஸ்த் ஒரு வீட்டில் தன்னை பூட்டிக் கொண்டதால், அவரை இணங்க வைத்து, வெளியே அழைத்து வர, ஒரு பக்தரை உள்ளே அனுப்பி வைத்தனர்.

மிகுந்த வற்புறுத்தலுக்குப் பின்னர் அவர் வாசலில் தோன்றினார். டாக்டர் தேஷ்முக் அவரைக் காணொளி திரைபடம் எடுக்க முயற்சித்த போது, மஸ்த் திடீரென அதைக் கண்டு சீற்றமும், வருத்தமுமடைந்து, தேஷ்முக்கை நோக்கி விரைந்து - சிங்கம் போல் அவர் மீது பாய்வதற்குக் கைகளை நீட்டினார்! அஞ்சி நடுங்கிய தேஷ்முக் தன்னையும், தனது கேமராவையும் காப்பாற்றும் எண்ணத்தில் பாதுகாப்பான தூரம் ஓடினார். மஸ்த் அவரைப் பின்தொடரவில்லை.

பண்டித் முனிலால் அப்போது ஒரு மரத்தின் கீழ், குதிகாலில் அமர்ந்தார்; ஆனால் மஸ்தின் கால்களில் தலைவணங்கும் விருப்பத்தை பாபா தெரிவித்தபோது, மஸ்த் அவரது கால்களை வெளியே நீட்டத் தயங்கினார். மிகுந்த வற்புறுத்தலுக்குப் பின்னர் அவர் இறுதியாக இணங்கினார்; பாபா அவரது நெற்றியை மஸ்தின் கால்களில் வைத்து வணங்கிய வேளையில், மஸ்த் கூச்சலிட்டார்: "நான் எனது கால்களை உடைக்க வேண்டுமா?... நீங்கள் எனது கால்களை உடைத்துவிட்டீர்கள்!"

மஸ்த் அமர்ந்திருந்தபோது, தேஷ்முக் மீண்டும் அவரை, காணொளி படம்பிடிக்க முயன்றார்; இந்த முறை பண்டித் முனிலால் அவரை கவனிக்கவில்லை, தேஷ்முக் அப்போது சில காட்சிகளைப் படமாக்க முடிந்தது. பாபாவும் மண்டலியும் பல மணி நேரம் அங்கேயே இருக்க வேண்டும் என்று பண்டித் முனிலாலின் பக்தர்கள் விரும்பினாலும், அதே நாளில் இதர மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று பாபா உடனடியாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அடுத்ததாக 'பாரா ரூர்கா' (BARA RURKA) கிராமத்தைச் சென்றடைந்த போது மதியம் ஒரு மணி; அங்கு, 'பாபா சிந்தா பகத்' (BABA CHINTA BHAGAT) என்று அழைக்கப்படும் மேல்நிலை, மஜ்ஜூப் போன்ற மஸ்த், ஓர் அறையில் நிர்வாணமாகக் கிடந்ததைக் கண்டார், ஒரு பக்தர் அவரை கவனித்துக் கொண்டிருந்தார். மிகவும் வயதானவராக, அமைதியான தோற்றத்துடன், பெரும்பாலும் ஒரு குழந்தையைப் போலவே ஜமாலி (சாந்தம்) வகையைச் சார்ந்தவராக இருந்த அவர் எழுந்து நின்றபோது, உயரமாக இருந்த இந்த மஸ்த், சுவாரசியமாகவும் கவர்ச்சியாகவும் தென்பட்டார்.

மஸ்த் சிந்தா பகத்தின் பக்தர் ஒருவர் பாபாவிடம், இந்தப் பழைய மஸ்தைப் பற்றி கூறினார். அவருக்கு உடல் உணர்வு இல்லை, உணவு மற்றும் தண்ணீர் குறித்து அலட்சியமாக இருந்தார். மணிக்கணக்கில் மஸ்தின் பக்தர்கள்

அவரைச் சுற்றி அமர்ந்து, ஒரு குழந்தைக்கு, மழலைப் பாடல்கள் பாடி ஊட்டுவது போல் இவரையும் எதையேனும் உண்ணவும் அருந்தவும் தூண்டினர்: “உண்ணுவீர், உண்ணுவீர், இனிப்புகள் உண்ணுவீர்! அருந்துவீர், அருந்துவீர், பால் அருந்துவீர்!” என்ற பாடலைப் பாடியபோது, சிந்தா பகத், ஒரு குழந்தையைப் போல, சிறிது பாலையும், இனிப்பையும் உட்கொண்டார்.

முதன்முதலில் மஸ்த் அவரது அறையில் தரையில் கிடப்பதைக் கண்டபோது, அவரது கால்களை பாபா நீண்ட நேரம் அழுத்தி, முத்தமிட்டார்; பலமுறை தொட்டு, தலைவணங்கினார். பாபா இந்தத் தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைந்து, புறப்படுவதற்கு முன்பு மஸ்தைப் பலமுறை முத்தமிட்டார்.

டாக்டர் தேஷ்முக் காணொளி படம் எடுத்ததைப் பார்த்த, சிந்தா பகத் வெளியே சாலையில் வர மனமுவந்து ஒப்புக்கொண்டார், மேலும் பாபாவின் அருகில் நின்றபோது அவரது உயரமான உருவம் குறிப்பிடத்தக்க காட்சியாக இருந்தது.

பாபா, இதற்கு முன்னர் ஒருமுறை பணிபுரிந்த நூரியா அல்லது நெக்கிஷா பாபா (NURIYA OR NEKISHA BABA) என்று அழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்துடன் அவரது பணிக்காக ஸங்கத்பூரைச் (SANGATPUR) சென்றடைந்த போது, மதியம் மூன்று மணியாகிவிட்டது. பத்து வருடங்களுக்கு முன்பு, பாபா அவரைத் தொடர்பு கொள்ள முதன்முதலில் சென்ற வேளையில், மஸ்த் தனது அறைக்கு வெளியே, துனிக்கு அருகில் அமர்ந்து, தலையை ஒரு போர்வையால் மூடிக்கொண்டு, ஒரு புகைக்குழாயை உறிஞ்சிக் கொண்டிருந்தார். 25 வருடங்களாக அந்த நிலையிலேயே இருந்த அவர் தன்னிடம் வந்து போனவர் யார் என்று அறியாமலே இருந்தார். 1953ஆம் ஆண்டில், அவர் குறை உணர்வு நிலையில் ஓர் அறையில் தங்கியிருந்தார். முன்பு மண்ணால் செய்யப்பட்ட ஏழு பந்துகளை தன்னுடன் வைத்திருந்த அந்த மஸ்த், இப்போது அவரது அறைக்கு வெளியே ஏழு ஆழமற்ற குழிகள் தோண்டி வைத்திருந்தார். இடையிடையே தனது அறையை விட்டு வெளியே வந்து தன்னைப் பின்பற்றும் பக்தர்களுடன் உரையாடினார்.

பாபா அவரிடம் சென்றபோது, மஸ்த் தனது அறையின் கதவை உள்பக்கமாகத் தாழ்பாளிட்டு, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவரை தரிசனம் செய்ய சில முக்கிய நபர்கள் அங்கு கார்களில் வந்திருப்பதாக அவரது சீடர்கள் குரல் கொடுத்தபோது, அவரைப் பார்க்க மாலை வரை காத்திருக்க வேண்டும் என்று உள்ளிருந்து பதிலளித்தார். பைதூலும் பிற அன்பர்களும் அவரை தரிசனம் செய்வதைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை என்றும், ஒரே ஒரு நிமிடம் கதவைத் திறக்குமாறும் கெஞ்சினார்கள். இறுதியில் கதவைத் திறந்து வாசலில் நின்றபோது, பைதூல் ஒரு பக்கமாக ஒதுங்க, பாபா முன்னோக்கி நடந்து சென்று, மஸ்தின் கால்களில் தலைவணங்கினார். நூரியாவும் மிகவும் உயரமாகத் தோன்றினார்; இந்தத் தொடர்பில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். சாலையை சென்றடைய, ஏழு குழிகளில் ஒன்றைக் கடக்க வேண்டும் என்று மஸ்த்

பாபாவிடம் கூறியபோது, பாபாவும் அவ்வாறே செய்தார்; நூரியா மீண்டும் தனது அறைக்குள் சென்று கதவைத் தாழ்பாளிட்டார்.

மஸ்த் நூரியாவை பாபா அன்று இரண்டாவது முறையாக சந்திக்க விரும்புவதாகச் சுட்டிக்காட்டி, அவர்கள் சாலையோர மர நிழலில் சிறிது நேரம் காத்திருந்தனர். இது குறித்து அவரது பக்தர்கள் மஸ்திடம் தெரிவித்தபோது, நூரியா, பாபாவை மீண்டும் பார்க்க மறுத்து, “இப்போது செல்ல அனுமதி வழங்கியதால், அவர் செல்ல வேண்டும்! அவர் தற்போது இங்கிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்; அவர் செல்ல சுதந்திரமாக இருக்கிறார்” என்று கூறி மறுத்துவிட்டார்.

இந்த மஸ்துகள் அனைவரும் பாபாவின் பயணத்திற்கு முன்னரே பைதூலால் கண்டுபிடிக்கப்பட்டவர்கள். பாபா பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே, பைதூல் மஸ்துகளைக் கண்டுபிடித்து, அவருக்குத் தெரியப்படுத்துவது வழக்கம். இந்தப் பணியில் பைதூல், பாபாவுக்காக செய்த தனித்துவமான சேவையை, வேறு எவராலும் செய்திருக்க முடியாது. இரவும் பகலும் அவர் தொலைதூர பகுதிகளில் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு பயணம் செய்து, பல ஆண்டுகளாக அவர் அனுபவித்த துன்பங்களும், துயரங்களும் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.

நூற்றுக்கணக்கான மைல்கள் பயணப் பொருட்களோ, பெட்டி படுக்கைகளோ இல்லாமல், இரயில் நிலைய நடைமேடைகளில் கடினமான மர பெஞ்சுகளில் ஓய்வெடுப்பது வழக்கம். பைதூல் திடகாத்திரமான உடலமைப்பு உடையவராக இருந்தார், மேலும் கடுமையாக உழைத்து உடல்நிலையைப் பராமரிக்க பாபா அவருக்கு உதவினார். அதனால்தான் பாபா அவருக்கு மஸ்துகளின் சர்தார் (SARDAR, தலைவர்) என்ற பட்டத்தை வழங்கினார்.

மஸ்த் நூரியாவை சந்தித்த பின்னர் அனைவரும் ஃபக்வாரா (PHAGWARA) நகரில் வாழ்ந்த ஹெலனின் சகோதரரின் இல்லத்திற்குச் சென்று, சிற்றுண்டி உண்டனர். ஹெலனின் சகோதரர் ஒரு புகைப்படக் கலைஞராக இருந்தார், மேலும் அவர் பாபாவின் பல புகைப்படங்களை எடுத்தார். பின்னர் அனைவரும் அங்கிருந்து கபுர்தலாவிற்குப் (KAPURTHALA) புறப்பட்டுச் சென்றனர்.

கபுர்தலா செல்லும் வழியில், பாபாவின் காரைப் பின்தொடர்ந்த காரின் சக்கரம் பழுதானதால், அதை சரி செய்யும் அந்த வேளையில் பாபா ஹதியாபாத்திற்குப் (HADIABAD) பயணம் மேற்கொண்டார், அங்கு அவர் 100 வயதுக்கும் மேலான காலி பிரபாத் (KALI PRABHAT) என்ற மஸ்தைத் தொடர்பு கொண்டார்; இதற்கு முன்னரும் பாபா அவரை சந்தித்ததாகக் கூறப்படுகிறது. மஸ்த் காலி பிரபாத் அங்கிருந்த அனைவருக்கும் பாதாம் பருப்பை பிரசாதமாக வழங்கினார்.

அன்று இரவு ஆறு மணிக்கு கபுர்தலா வந்தடைந்து, ‘புடியா ஜட்ஜ்’ (BHUDIA JUDGE, வயதான நீதிபதி) என்று அழைக்கப்படும் மிகவும் வயதான மஸ்தானியை பாபா தொடர்பு கொண்டார். இறை போதையில் இருக்கும் ஆத்மாக்களின் வழிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக, அவர் சுத்தமான ஆடைகளை

அணிந்திருந்தார். அவர் வருவாய் அலுவலகம் மற்றும் நீதிமன்றம் அருகே வாழ்ந்து வந்தார். அவர், நீதிபதிகளை உள்ளளவில் முடிவுகளை எடுக்கத் தூண்டியதாகவும், நீதிபதிகள் அவரது கட்டளைகளின்படி செயல்பட்டனர் என்றும் மக்கள் நம்பியதன் காரணமாக அவருக்கு அந்தப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. மஸ்தானி, மெச்சத்தக்க விதத்தில் மனதைக் கவரும் தோற்றத்தை கொண்டிருந்தார்; மேலும், பிறர் மதிக்கத்தக்க வகையில் கௌரவமான ஆடைகளை அணிந்திருந்தார். பாபா, மஸ்தானியின் கால்களைத் தொட்டு, தலைவணங்கினார்.

அதன் பின்னர், ஒரு பஞ்ஜாபி உதவியாளருடன், பூதா ராணி (BOODHA RANI, பழைய ராணி) என்ற மற்றுமொரு மஸ்தானியைத் தேடி, பாபா மண்டலியுடன் புறப்பட்டார். உள்ளூரின் வீதிகள் மற்றும் வழித்தடங்களில் தேடி இறுதியில், அவர் ஒரு வயல்வெளியில் தன்னந்தனியாக அமர்ந்திருந்ததைக் கண்டனர். சாதாரண உடையில் இருந்த அவரை, பைதூல் நெருங்கியதும், அவர் ஒரு செங்கல்லை எடுத்து பைதூல் மீது வீசினார். அவர் எதையும் விரும்பவில்லை, ஆனால் அவருடைய ஆசீர்வாதத்திற்காக மட்டுமே வந்துள்ளார் என்று கூறியதும், மஸ்தானி அவரது கால்களை அழுத்தும்படி பைதூலிடம் கேட்டுக்கொண்டார், அதை அவர் பயபக்தியுடன் செய்தார். மஸ்தானி செங்கல்லால் தன்னையும் தாக்க முயன்றுவிடுவாரோ என்று பயந்து டாக்டர் தேஷ்முக் தூரத்தில் நின்றார். ஆனால் இப்போது பூதா ராணி முற்றிலும் அமைதியாக இருந்து, தேஷ்முக்கை அன்புடன் தன்னிடம் அழைத்தார். இதற்கிடையில், அவரிடம் அனுமதி கோரி, பாபா, மஸ்தானி அருகில் சென்று, பாதத்தைத் தொட்டு தலைவணங்கிய வேளையில் அவர் கதறினார்: "எனது காலில் விழாதீர்கள்! எனக்கு ஒரு ரொட்டி மட்டுமே வேண்டும்!" எனவே பாபா அங்கிருந்த ஒரு நபரிடம் ஒரு ரூபாய் கொடுத்த போது, அவர் மஸ்தானிக்கு ரொட்டி பரிமாறுவதாக உறுதியளித்தார். அருகிலிருந்த கிணற்றிலிருந்து பாபா அவருக்கு குளிர்ந்த நீரும் வழங்கினார்.

அன்றிரவு மற்றுமொரு சந்திப்பு, ராமேஷா (RAMESHAH) என்ற மஸ்துடன் நிகழ்ந்தது; அவர் ஒரு கோவிலுக்கு எதிரே உயரமாக அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் அற்புதமான தோற்றத்தில், சாதாரண மஸ்துகளுக்கு மாறான முறையில், சுத்தமான ஆடைகளை அணிந்திருந்தார். பாபா அவரது இருக்கைக்குச் சென்று அவரைத் தலைவணங்கினார்.

அதைத் தொடர்ந்து காஷிராம் பாபா (KASHIRAM BABA) என்று அழைக்கப்படும் மற்றுமொரு மஸ்தை பாபா, கண்டுபிடித்தார். அவரும் சுத்தமான ஆடை அணிந்த இளைஞராக இருந்தார்; மிகவும் அடக்கமானவர், அவரது எளிமை கண்களில் பிரகாசித்தது. பாபா, தனது தலையை காஷிராமின் கால்களில் வைத்து வணங்கியபோது, அவரும் பாபாவின் பாதங்களைத் தொட விரும்பினார். ஆனால் பாபா அனுமதிக்கவில்லை. பாபா அவரை அமருமாறு கூறியபோது, காஷிராம் பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தார். பாபா, அவரை

தரிசனம் செய்ய அனுமதிக்காததால், மஸ்த் அவருக்கு நமஸ்காரம் செய்தார். ஆனால் மஸ்த் ஏமாற்றமடைந்தது தெளிவாக வெளிப்பட்டது.

அப்போது மணி ஏழு ஆனது. "**இன்றிரவு நாம் டெஹ்ரா டூன் நகருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்**," என்று பாபா முடிவு செய்து, "**ஒருவரும் காரில் தூங்கக் கூடாது - அரைத்தூக்கமும் ஆகாது**" என்று அனைவருக்கும் நினைவூட்டினார்.

அன்று இரவு பத்து மணிக்கு, ஜலந்தர் வழியாக பக்வாராவிற்கு வந்து, அரை மணி நேரத்தில் ஹெலனின் சகோதரர் இல்லத்தில் இரவு உணவை உண்டு, பின்னர் உடனே ஃபில்லோருக்குப் புறப்பட்டனர். அங்கு பாபா மீண்டும் உள்ளூர் மக்களால் மதிக்கப்படும் மா (MA) என்ற மஸ்தானியுடன் பணிபுரிந்தார், அவருடன் பாபா ஏற்கனவே பணிபுரிந்திருந்தார். மா மஸ்தானி ஒரு மர மேடையில் கிட்டதட்ட நிர்வாணமாக அமர்ந்திருந்தார். பாபா அவரை அணுகி, ஒரு ரூபாய் நாணயத்தை அவருக்கு வழங்கி, கால்களில் தலைவணங்கினார். மஸ்தானி நாணயத்தை மேடையில் வைக்க, அதன் இடைவெளி வழியாக கீழே தரையில் விழுந்தபோது, பைதூலிடம் அதை எடுக்குமாறு கூறினார். பைதூல் அதை அவரிடம் திருப்பிக் கொடுக்க, மஸ்தானி சிறிது தண்ணீர் கொண்டு வருமாறு கேட்டு, அதைத் தண்ணீரிலிட்டு, பாபாவிடம் நாணயத்தை எடுத்துச் செல்லும்படிக் கூறினார். பாபா அந்த ரூபாய் நாணயத்தை திரும்ப எடுத்தது அவரை மிகவும் மகிழச் செய்தது.

மா மஸ்தானி மகிழ்ச்சியான, அன்பான மனநிலையில், அனைவருடனும் இணக்கமாக நடந்து கொண்டார். அவர் மேலும் குளிர்ந்த நீரைக் கேட்டபோது, அது பாபாவின் காரிலிருந்து கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அப்போது அவர் சிகரெட் வேண்டுமெனக் கேட்டார். ஹெலன் அவரிடம் இரண்டு பாக்கெட்டுகளைக் கொடுத்ததும், அதிலிருந்து தலா இரண்டு சிகரெட்டுகளை மண்டலியிடமும், இரண்டை பாபாவிடம் கொடுத்துவிட்டு, மீதமிருந்ததை சில மண்டலியின் பாக்கெட்டுகளில் வைத்தார். பாபாவுடனான நெருங்கிய தொடர்பைக் குறிக்கும் வகையில், மஸ்தானி தனது புடவையின் ஒரு பகுதியை பாபாவின் கஃப்னியுடன் முடிச்சிட்டுக் கட்டினார். பாபா அவருடைய பாதங்களில் பலமுறை தலைவணங்கினார்.

டாக்டர் தேஷ்முக் 'மா மஸ்தானி'யால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்:

இந்த மஸ்த் பெண்மணி மிக உயர்ந்த அந்தஸ்தில் இருந்தார். பாபாவின் தொடர்பு மூலம், ஏதோ பெரிய காரியம் நடப்பதாக நாங்கள் அனைவரும் உணர்ந்தோம். மிகவும் பருமனான பெண்மணி; அவருடைய குரல் மிகவும் சீரானது, மரியாதைக்குரியது. அவருடைய பார்வையும், அவர் பேசும் விதமும் என்னை வெகுவாகத் தாக்கியது - அவருடைய நடை, உடை, பாவனை, அவருடைய தோரணை, அவர் அமர்ந்த விதம். அவரது ஆளுமை அனைத்து விஷயங்களையும் தெளிவாக உணர்த்தியது. அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர், நரை முடி இல்லாவிடிலும் சில வழிகளில் ஹஸ்ரத் பாபாஜானுடன் ஒப்பிடத்தக்கவர் .

தங்கள் பயணத்தைத் தொடர்ந்து, அவர்கள் ஃபில்லோர் கிராமத்திலிருந்து புறப்பட்டு, ரிஷிகேஷை நோக்கி இரவு முழுவதும் காரில் பயணம் செய்தனர். எல்சாவின் கார் சக்கரம் வழியில் மறுபடியும் பழுதானது; அதைக் கும்மிருட்டில் மின் கைவிளக்கு ஒளியில் பழுதுபார்க்க வேண்டியதாயிற்று.

எல்சா மிஸ்திரி குளிர்ச்சியான மற்றும் விரைவான குறுக்குவழியைப் பரிந்துரைத்தார் - ஆனால் அந்த வழியில் பயணத்தின் முடிவில், அனைவரும் தலை முதல் கால் வரை தூசியால் மூடப்பட்டிருந்தனர்; மேலும் குஸ்தாஜி இனி ஒருபோதும் எல்சாவுடன் பயணிக்க மாட்டேன் என்று சபதம் செய்தார். பாபாவின் கட்டளைப்படி, ஆண்கள் எவரும் தூங்காமல், குட்டித்தூக்கம் கூட இல்லாமல் விழித்திருந்தனர். (பாபா, அனைவரும் விழித்திருக்க மாத்திரை ஒன்றை வழங்கியிருந்தார்.) முன்னதாகவே சென்ற பாபாவின் காரில் இருந்தவர்கள் ஏதோ தவறு நடந்திருப்பதை உணர்ந்து அவர்களைத் தேடி, திரும்பி வந்தனர்.

காரின் சக்கரத்தைப் பழுது பார்த்து, பின்னர் இரண்டு கார்களும் பயணத்தைத் தொடர்ந்தன. வழியில், ஹரித்வாரின் புறநகர் பகுதியான கன்கலில் (KANKHAL) காரை நிறுத்தி, செம்பு நிறத்தில், பளபளப்பான தோலுடன் ஒரு நிர்வாண மஸ்தை பாபா தொடர்பு கொள்ள நேர்ந்தது. அவர் காலம் முழுவதும் ஒரு தோட்டத்தில் வாழ்ந்து வந்தார். அவரது தரிசனத்திற்காக குழு ஒன்று வந்திருப்பதை அறிந்ததும், அவரே எழுந்து வந்து, குழுவை வரவேற்கச் சென்றார்; ஆனால் அனைவரிடமிருந்தும் அவர் சிறிது தூரத்தில் நின்றார். அப்போது பாபா அவரை அணுகி மஸ்தின் கால்களை தொட்டு வணங்கினார்.

ஒரு வாரத்திற்கு முன்னர் அவருக்கு ரூ 125 செலவில் செயற்கைப் பற்கள் பொருத்தப்பட்டதாகவும், அன்றிலிருந்து அவருக்கு நல்ல பசி எடுப்பதாகவும் மஸ்த் கூறினார். அவருடைய செயற்கைப் பற்களை பாபாவிடம் காட்ட, அவர் வாயைத் திறந்து சிரித்தார். பின்னர் அவர் ஒரு செதுக்கப்பட்ட எலும்பை ஆயுதமாக உருவாக்கி, ராட்சத விரதாசுரனை (VRATASURA) அழித்த ததிச்சி ரிஷிக்கு (DADHICHI RISHI) வழங்குவது பற்றி பேசினார்! தேஷ்முக் அந்தக் காட்சியை, காணொளி படமாக்கிக் கொண்டிருந்தார், இப்போது நல்ல மனநிலையில் இருந்த மஸ்த், முழுக் குழுவையும் தன்னுடன் திரைப்படப் பிடிப்பில் இணையுமாறு கேட்டுக் கொண்டார். பாபா மீண்டும் அவர் கால்களைத் தொட்டார்.

1953 ஜூன் 10ஆம் நாள் செவ்வாய்கிழமை காலை ரிஷிகேஷிற்கு வந்து, மஸ்த் பயணத்தை நிறைவு செய்ய, பாபாவும் மண்டலியும், மீண்டும் நீல்கந்த்வாலாவைத் தொடர்பு கொள்ளச் சென்றனர். இந்த நேரத்தில், பஜன் ஆசிரமத்தின் மேல் தளத்தில் நீலகந்த்வாலா தங்கியிருந்தார். ஒரு தட்டில் இனிப்புகளும், பழங்களும் வைத்து நீல்கந்த்வாலாவிற்கு வழங்கப்பட்டது, பாபா அவருக்கு மாலை அணிவித்தார். மாபெரும் மஸ்தின் பாதங்களைத் தொட்டு வணங்கி, பாபா மண்டலியை அழைத்து, மஸ்த் அமர்ந்திருந்த கட்டிலைத் தலையால் தொட்டு வணங்குமாறு கூறினார்.

இந்த நேரத்தில் நீல்கந்த்வாலா அமைதியாக இருந்து, அவரது கற்பலகையில் இவ்வாறு எழுதினார்: “கன்கல், ஹரித்வார், ரிஷிகேஷ் மற்றும் ராம்-ராம் (விடைபெறுகிறேன்)!”

நீல்கந்த்வாலாவின் கண்கள் முழு அமைதியால் நிறைந்தது போல் இருந்தது. இந்த நேரத்தில் நீல்கந்த்வாலாவிடம் பாபா, அவரை விரைவில் சந்திப்பதாகக் கூறினார்.

இதுவே பாபாவின் இந்தப் பயணத்தின் கடைசி தொடர்பு, அன்று பிற்பகல் நான்கு மணியளவில் அவர்கள் டெஹ்ரா டூனுக்குத் திரும்ப ஆயத்தமாயினர். ஐந்து நாட்களில் அவர்கள் 1,947 மைல்கள் கடந்து, பெரும்பாலும் 100°க்கும் மேலான கோடை வெப்பநிலையில் பயணம் செய்தனர். ஜூன் 10ஆம் நாள் மதியம் நான்கு மணிக்கு டெஹ்ரா டூனை வந்தடைந்த போது அனைவரும் களைத்துப் போயினர்.

மஸ்த் தொடர்புகளின் இந்தப் பயணம், அதீத சிரமங்கள் நிறைந்ததாக இருந்தது. ஹெலனும் எல்சாவும் தொடர்ந்து ஓய்வின்றி வாகனம் ஓட்டியதால் முற்றிலும் சோர்வடைந்து போயினர். இரண்டு கார்களும் பல சிரமங்களை சந்தித்ததோடு, சக்கரங்களை சரிசெய்து பொருத்துவது என்பது சொல்லொணா துன்பம் நிறைந்ததாக இருந்தது.

உடல் ரீதியாக அது பயங்கரமான அலுப்பைத் தந்தது. சில இடங்களில் அருந்துவதற்கு நீரும் இல்லை. வெப்பம் கடுமையாக இருந்ததோடு, பலத்த காற்று பல திசைகளிலும் தூசுகளை எழுப்பியது. சில நேரங்களில் ஓய்வெடுக்க இடம் இல்லாமல், திறந்த வெளியில் தூங்க வேண்டிய கட்டாயம். எல்லா சிரமங்களும் இடர்பாடுகளும் கசப்பாகவும் கடினமாகவும் இருந்தபோதிலும், மஸ்த் தொடர்புகளின் இனிமையான நினைவுகள், மகிழ்ச்சியாகவும் மனநிறைவு அளிப்பதாகவும் இருந்தன, ஏனெனில் பாபா, மஸ்துகள், மஸ்தானிகள் மற்றும் புனிதர்களுடனான தனது பணியில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

ஆயினும்கூட, எரச் ஒரு கட்டத்தில், பயணத்தைப் பற்றி எழுதியிருந்த குறிப்பில், பாபா தனது திட்டங்களில் ஏற்பட்ட பின்னடைவு குறித்து இன்னமும் வருத்தமாக இருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார்:

பயணம் முழுவதும், பாபா மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்பட்டார். இந்த ஐந்து நாட்களில் நடந்த மஸ்த் மற்றும் புனிதர்களின் தொடர்புகளில் அவர் மிகவும் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது.

ஆயினும்கூட, குறுகிய மற்றும் கடினமான மஸ்த் பயணத்திலிருந்து டெஹ்ரா டூனுக்குத் திரும்பிய பிறகு, பாபா தனது பெரும்பாலான அன்பர்கள் முன்னிலையில் இவ்வாறு குறிப்பிட்டார். “**இந்தப் பயணத்தில் மேற்கொண்ட பணியில், அவர் முழுத் திருப்தி அடைந்தாலும், இதுபோன்ற எத்தனைதான் மஸ்த் பயணங்கள் மேற்கொண்டு, எவ்வளவுதான் திருப்தி அடைந்தாலும், அனைவரும் ஒன்றாக சேர்ந்து பயணம் செய்வதற்கான பெரிய வாகனத்தை ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட ‘முக்கியமற்றதாகத் தோன்றும்’ பின்னடைவும், அதன் அனைத்து விவரங்களிலும் அவர் முன்கூட்டியே திட்டமிட்டு**

வடிவமைத்ததில் ஏற்பட்ட விளைவையும், எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாது... அவரது முக்கியமான பணியில் ஏற்பட்ட பின்னடைவுகள் மனக்கலக்கத்தை ஏற்படுத்தியது.

“மனித அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாத விஷயங்களைப் பற்றிய விளக்கங்கள் மூலம், வரையறுக்கப்பட்ட மனதைத் திருப்திப்படுத்துவது சாத்தியமல்ல... எனவே, பின்னடைவுகள், இடையூறுகள், மனக்கலக்கங்கள் குறித்து எவ்வளவுதான் விளக்க விரும்பினாலும், அவரது திட்டங்களிலும், பணிகளிலும் ஏற்படும் குழப்பங்கள், மேலும் இவை அனைத்திற்கும் பின்னால் உள்ள அர்த்தத்தை ஒருவர் ஒருபோதும் புரிந்து கொள்ள மாட்டார்” என்று பாபா கூறினார்.

“ஸொராஸ்டர், முஹமது, புத்தா ஆகியோரின் திட்டங்களை முறியடிப்பதற்கும், கடவுள் நிர்ணயித்த பணியில் அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதற்கும், இறுதியில் அவர்களுக்கு துரோகமும், தீங்கும் விளைவிக்கும் வகையில், தங்களைத் தயார்படுத்திக் கொண்டவர்களால் எதிர்க்கப்பட்டு, துன்புறுத்தப்படவில்லையா? இந்த அவதார புருஷர்களும் தீர்க்கதரிசிகளும் பொய்யானவர்களா? அவர்கள் உண்மைப்பொருளின் மொத்த உருவமாகவும், அனைத்தையும் அறிந்தவர்களாகவும், வல்லமை மிக்கவர்களாகவும் இருந்திருந்தால், ஏன் அவர்களால் எதிர்வரும் ஆபத்தை முன்னறிவித்து, சொல்லொணா துன்பங்கள், அவமானங்கள், ஏமாற்றங்கள் மற்றும் தங்கள் பணியில் ஏற்படும் பின்னடைவுகளைத் தவிர்க்க முடியவில்லை?

“மேலும், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில், அவரை ஈர்க்கும் அல்லது சோதனைக்குள்ளாக்கும் சம்பவங்கள் மற்றும் அவரது பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் எத்தகைய இடையூறுகளை சந்திக்கச் செய்து துன்புறுத்தப்பட்டார் என்பதைப் பற்றி ஒருவர் படிக்கிறார். இறுதியில் அவமானத்திற்குள்ளாகி, சிலுவையில் அறையப்படவில்லையா? முழு உலகிற்கும் இரட்சகர் என்று சொல்லிக் கொண்ட அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதா?

“இயேசு கிறிஸ்து, அனைத்தையும் அறிந்தவராக இருந்ததால், அவர் வெளிப்படையான சோகத்தை எளிதில் முன்னறிவித்திருக்கலாம் மற்றும் சோதனைகளின் மோசமான சூழ்நிலையைத் தவிர்த்திருக்கலாம்; அவர் சர்வ வல்லமையுள்ளவராக இருந்ததால், சிலுவையைச் சுமந்து, சாட்டையால் அடிக்கப்படுவதற்கு முன்னர், அவர் பேசாத வாய்மொழிகளின் சுவாசத்தால் உலகம் முழுவதையும் அழித்திருக்க முடியும். ஆனால், அதற்கு மாறாக, ஏறக்குறைய இறுதிக்கட்டத்தை நெருங்கும் போது, அவர் உச்சரித்த கடைசி வார்த்தைகள்: ‘கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டாய்?’ என்ற இந்த உண்மையை வரலாறு பதிவு செய்கிறது. இயேசு கிறிஸ்து - உலகைக் காக்க வந்தவர் - இப்படிக் கூறியது முற்றிலும் பொருத்தமற்றது. அப்படியென்றால்,

**அவரது முற்றிலும் உதவியற்ற, நம்பிக்கையற்ற தன்மைக்குக் காரணமாக இருந்தது என்ன?...**

**"கடந்த கால அவதார புருஷர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் வரலாற்றில் மிகத் தெளிவாகச் சித்தரிக்கப்பட்ட பின்னடைவுகள், இடையூறுகள் மற்றும் மனக்கசப்புகளை கிரகித்து, ஜீரணிக்கக் கூடிய அறிவுப்பூர்வமான மனம், பாபா கூற விரும்புவதை முக்கியமான ஒன்றாக ஏற்க வேண்டும் அல்லது மறுக்க வேண்டும்"** என்று பாபா கூறி முடித்தார்.



# டெஹ்ரா டூன் 1953

**(Dehra Dun 1953)**

1953 ஜூன் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை, டெஹ்ரா டூனில், மண்டலியுடன் நிகழ்ந்த உரையாடலினிடையே, பாபா, குமாரைக் குறித்து கூறினார்: **“நான் விரும்பினால், எனக்காக அவர் உயிரை விடவும் தயாராக இருப்பதாக சத்ருகன் கூறுகிறார்; நான் அவரை 100 சதவீதம் நம்புகிறேன். மேலும், அன்பை விவரிக்கும் விதத்தில் அவர் என்னை நேசிக்கவில்லை என்று கூறுகிறார். அதுவும் உண்மை. ‘அன்பு’ என்பது இறைவனின் அன்பளிப்பு.”**

பாபா மேலும் விளக்கினார்:

**ஒருவருடைய மனைவி, குழந்தைகள் அல்லது பெற்றோர் மீது காட்டும் அன்பு, அன்பல்ல. இது பந்தம், பற்று. அன்பு ஓர் அன்பளிப்பு, அது தெய்வீகமானது. ஒருவரிடம் அது இருக்கும்போது, அவர் அனைத்தையும் தியாகம் செய்கிறார். சுதந்திரத்தைத் தியாகம் செய்யும் போது, தியாகத்தையே தியாகம் செய்வதாக அர்த்தம்! ஆனால், எனது பார்வையில் அன்பை விட, கீழ்ப்படிதல் மேலானது. இருப்பினும், சுதந்திரத்தை மரபுரிமையாக ஏற்றுக்கொண்டதால், கீழ்ப்படிதல் என்பது அன்பை விட சாத்தியமற்றது. சுதந்திரம் நமது பிறப்புரிமை, ஏனெனில் முதலில் நாம் சுதந்திரமாக இருந்தோம். எனவே பிணைப்பு என்ற ஒன்று வரும் வேளையில், அது (சுதந்திரம்) நமக்கு மறுக்கப்படுகிறது.**

**இத்தகைய சூழ்நிலைகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய இலகுவான வழி ‘ஒரு பிணைப்பை’ நாடுவதாகும், இது பல பிணைப்புகளை இல்லாமலாக்குகிறது, ஆனால் அதுவும் கடினம். கீழ்ப்படியும் தன்மையுள்ள ஒருவர், தனது கழுத்தைத் தானே துண்டித்துக் கொண்டாலும், சுதந்திரம் என்ற எண்ணம் அவரது செயலில் உள்ளது. அவர் அந்த சிந்தனையால் தூண்டப்படுகிறார்.**

‘அன்பிற்குரியவருக்காக வாழ்க்கையைத் துறப்பது’ பற்றிய ஹ௸பீஸின் ஒரு வசனத்தை பாபா மீண்டும் விளக்கிக் கூறினார்:

**அப்படிக் கூறுவதன் மூலம், ஹ௸பீஸ் ஒருவரின் கழுத்தைத் துண்டிப்பது என்று குறிப்பிடுவது, உயிரையே விட்டுவிடுவது என்று அர்த்தமாகாது. 100 சதவீதம் சாத்தியமில்லாத ஒருவரின் ஆசைகளை விட்டுவிடுவதை அவர் குறிப்பிட்டார். அவ்வாறு, அதை விட்டுக் கொடுக்கிறவன் பிரியமான குருநாதருடன் ஒன்றிவிடுகிறான். ஹ௸பீஸின் மற்றுமோர் ஈரடிக்கவிதை இவ்வாறு கூறுகிறது:**

**நீங்கள் ஏன் இறைவனுடன் ஐக்கியம், அன்பு, ஆன்மீக**
**முன்னேற்றம் போன்றவற்றின் பின்னால் போகிறீர்கள்?**
**இவை அனைத்தையும் உங்கள் அன்பிற்குரியவரின்**

**விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள்!**

**அதில் நீங்கள் அனைத்தையும் காண்பீர்கள்!**

**பிரியமானவரின் விருப்பத்தை அடைய, வாதிட வேண்டாம். ஏன், எதற்காக, எதனால் என்ற கேள்விகளுக்கு இடமே இல்லை; ஏனெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்கள், குருநாதர் கூறுவதை தங்கள் ஆழ் இதயத்திலிருந்து ஏற்றுக்கொள்கிறார்கள். நீலுவிடம் 'நாளை உங்களை பாரசீக மன்னனாக்குவேன்' என்று சொன்னால் அந்த வார்த்தைகளில் சந்தேகம் வேண்டாம்; அதை ஏற்றுக்கொள்ளுங்கள். மறுநாள், 'நீலு, உங்களை ஆஃப்ரிக்காவில் ஒரு துப்புரவாளராக்குவேன்' என்று சொன்னால், அதையும் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள். மூன்றாம் நாள், 'நீலு, எல்லாவற்றையும் விட்டுட்டு, உணவுக்காக யாசிக்கச் செல்லுங்கள்' என்று நான் அவருக்குக் கட்டளையிடலாம். இதையும் முழு பக்தியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது நீலு, நீலகண்டனாக மாறுவார்!**

**'இந்த மூன்று சூழ்நிலைகளிலும் அவருடைய எதிர்வினை என்னவாக இருக்கும்'** என்று பாபா, நீலுவிடம் கேட்டதற்கு அவர், "நான் பெர்சியாவில் மன்னனாகவும், ஆஃப்ரிக்காவில் துப்புரவு தொழிலாளியாகவும் இருப்பதை ஏற்றுக்கொள்வேன், ஆனால் நான் உணவுக்காக யாசிப்பதை விரும்பவில்லை" என்றார்.

**"உங்களிடம் ஏதாவது பொறுப்புணர்வு மிஞ்சி உள்ளதா?"** பாபா அவரிடம் கேட்டு, **"அனைத்து பொறுப்பையும் முழுமையாகத் துறக்கவில்லை என்றால் அது அன்பு ஆகாது"** என்று வலியுறுத்திக் கூறினார்.

பாபா நீண்ட நேரம் தொடர்ந்து விளக்கமளித்தார்:

**கீழ்ப்படிதலைப் பொறுத்தவரை, அதை ஏற்றுக்கொள்வது பற்றிய ஒரே எண்ணம் மட்டுமே உள்ளது. 100 சதவீதம் கீழ்ப்படியத் தயாராக இருக்கும் ஒருவர், குருநாதரின் விருப்பத்தைத் தவிர, 24 மணி நேரமும் தனது சுயத்தையோ, உறவுகள் அல்லது வேறு எதையும் குறித்தோ நினைப்பதில்லை. குருநாதரின் உத்தரவு, அவரது நகர்வுகள், அவரது விருப்பம் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் ஒரு சாதாரண மனிதனைப் போல் இருக்காது. அத்தகைய வாழ்க்கையை வாழ்வது உண்மையில் நடைமுறைக்குரியது அல்ல, ஏனெனில் குருநாதருக்கு வெளிப்படுத்துவதற்கென 'விருப்பம்' என்று ஒன்று இல்லை. குருநாதரின் விருப்பம் இயல்பாக நிகழ்வது. இந்த 'விருப்பம்' முற்றிலும் வேறுபட்ட ஒன்று, இதை அரிதானவர்களில் அரிதான மிக சிலரே, 24 மணிநேரமும் நிறைவேற்ற முடியும். அத்தகைய வீரர் ஒருவருக்கு, குருநாதரின் வார்த்தைகள், அறிகுறிகள், நகர்வுகள் அனைத்தும் உண்மையில் குருநாதரின் விருப்பமாக இருக்கும். குருநாதர் அவருடன் உரையாடவில்லை என்றால், அதுவும் குருநாதரின் விருப்பமாக எடுத்துக்கொள்ளப்படும்.**

**குருநாதர், ஒருவரின் குரல்வளையைத் துண்டிக்கும்படி கட்டளையிட்டால், அரிதான ஒருவர் மட்டுமே, கேள்வி எதையும் எழுப்பாமல்,**

ஏன் என்று கூட யோசிக்காமல், அதைச் செய்வார். அத்தகைய அரிதான ஒருவர், அதுபோன்ற உத்தரவின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல், அதை குருநாதரின் விருப்பமாக மட்டுமே எடுத்துக்கொள்கிறார். பிற நபர்களும் அதற்கேற்ப செயல்படலாம், ஆனால் அவர்களின் இதயங்களில், குருநாதரின் உத்தரவு, தங்களுக்கு ஒரு சோதனை அல்லது அது அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக என்ற எண்ணம் இருக்கும். அத்தகைய சூழ்நிலையில், குருநாதரின் 'விருப்பம்' குறித்த கேள்விக்கு இடமில்லை.

ஆன்மீக வாழ்வில் மிகவும் மேல் நிலையை எட்டியவர்கள், எவரையும் ஒருபோதும் சோதிப்பதில்லை. சம்பந்தப்பட்ட நபர் அதைச் செய்வாரா இல்லையா என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே, பரிபூரண குருநாதர்களுக்கு 'விருப்பம்' என்பது இல்லை. அவரே (சத்குரு) எல்லோரிடமும் இருக்கும்போது, அவருடைய பணியே அவருடைய விருப்பம்! அதை மனதில் கொண்டிருப்பவர்களுக்கு, அவர்களின் ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும் குருநாதரின் விருப்பமாகும். ஆனால் அந்தத் தரத்திற்கு ஒருவர் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு சமர்ப்பணம் செய்வது சாத்தியமற்றது.

குருநாதரின் விருப்பத்திற்கு கீழ்ப்படிவது இயந்திரத்தனமாக இருக்கக்கூடாது, ஏனெனில், அப்போது அது சலிப்பானதாகவும், வறண்டதாகவும், ஆர்வமற்றதாகவும் இருக்கும். அது இயந்திரத்தனமாக இருக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, ஒரு நொடிப்பொழுது கூட, தன்னைப் பற்றிய சிறிதளவு சிந்தனையும் இருக்கக்கூடாது. இந்த நிலையை எப்படி அடைவது? அதாவது: அது இயந்திரத்தனமாக இருக்கக்கூடாது, இரண்டாவதாக, தன்னைப் பற்றிய எந்த சிந்தனையும் ஆகாது. இது கிட்டத்தட்ட சாத்தியமற்றது, எனவே சீடர் செய்ய வேண்டியது என்னவெனில், குருநாதரின் விருப்பமாக மாறுவதுதான் ஒரே வழி.

இயந்திரத்தனமாக செயல்படும் அம்சத்தைப் பற்றி மீண்டும் பாபா விளக்கினார்:

எப்பொழுதும் குருநாதரின் விருப்பத்தைக் கடைப்பிடிப்பதில் நீங்கள் விழிப்புடன் இருந்தால், சிறிதளவு சிந்தனையாலும் உணர்வு பாதிக்கப்படவில்லை என்றால், அது இயந்திரத்தனமாக இருக்காது. ஆனால் பரிபூரண குருநாதரின் அருள் இல்லாமல் இது சாத்தியமாகாது. குருநாதரின் மகிழ்ச்சி உங்கள் மகிழ்ச்சி என்பதை புரிந்துகொள்வது கூட சாத்தியமற்றது. ஆனால், பரிபூரண குருநாதரின் விருப்பமே உங்கள் மகிழ்ச்சி என்ற உறுதியான எண்ணத்தை நீங்கள் எப்பொழுதும் கொண்டிருந்தால், அது இயந்திரத்தனமானது ஆகாது.

பரிபூரண குருநாதரின் விருப்பம் என்னவாக இருக்கும்? அது அவருக்கு மட்டுமே தெரியும். ஒரு மனிதன் இறை உணர்வை அடையும் வேளையில் இன்பம், துன்பம் இரண்டுமே இருப்பதில்லை என்று

**கூறப்படுகிறது. அந்த நிலையில், ஒவ்வொருவரின் விருப்பமும் அவருடைய விருப்பமாக இருக்கும்.**

பாபா மேலும் தெளிவுபடுத்தி நிறைவு செய்தார்: **“அன்பு கடினமானது, ஆனால் கீழ்ப்படிதல் அதைவிட கடினமானது. ஆனாலும் எனது மண்டலி எனக்குக் கீழ்ப்படிய முழுவதுமாக முயற்சி செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் அவர்களின் இடத்தில் இருந்திருந்தால், என் இயல்பையும் சுபாவத்தையும் கருத்தில் கொண்டு, அவர்கள் செய்வது போல் ஐந்து நிமிடம் கூட என்னால், எனக்குக் கீழ்ப்படிய முடியுமா என்று தெரியவில்லை. நீங்கள் அனைவரும் என்ன நினைக்கிறீர்கள்?”**

எரச் கூறினார், “அப்படிப்பட்ட கீழ்ப்படிதலை உங்களால் அடைய முடிந்ததா இல்லையா என்பதை எந்த மண்டலியாலும் சொல்ல இயலாது.”

பாபா சிரித்துக்கொண்டே பேச்சின் தலைப்பை மாற்றினார்.

1953 ஜூன் 13 சனிக்கிழமை அன்று, திருமணமான ஒரு பெண்மணியுடன் தொடர்பு கொண்டிருந்த கிஷன் ஸிங்கைப் பார்த்து, பாபா எழுத்துப் பலகையில் துளசிதாஸின் இந்த வசனத்தை மேற்கோள் காட்டினார்:

**பிறருடைய செல்வத்தைக் கல்லாகவும், பிறர் ஒருவரின்**
**பெண்ணைத் தாயாகவும் கருதுங்கள்.**
**இதைக் கடைப்பிடித்து, கடவுளைக் கண்டுகொள்ளவில்லை**
**என்றால், துளசிதாஸின் நாவிற்கு எந்த மதிப்பும்**
**இல்லை என்று எடுத்துக்கொள்ளுங்கள்!**

கிஷன் உடனே “துளசிதாஸ் சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவருக்கும் மனைவி இருந்தார், மனைவியால் அவர் இறையுணர்வை அடைந்தார்” என்று கூறினார்.

பாபாவின் பதில் கடுமையாக இருந்தது: **“கடவுளை மகிழ்வுறச் செய்யலாம் என்ற உங்கள் போலித்தனத்தை விட்டுவிடுங்கள்! கடவுளை உணர்ந்து கொள்வதற்கும், கடவுளை மகிழ்வுறச் செய்வதற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது! அவரை சந்தித்து, அதிருப்தி அடையச் செய்வதை விட, அவரை சந்திக்காமல் இருப்பது நல்லது! இப்போது, இந்த ‘கோரக்’ வியாபாரத்தை நிறுத்துங்கள்** (அதாவது அர்த்தமற்ற, அபத்தமான உரையாடல்)!”

கவிஞர் ஜிகரின் ஈரடிக் கவிதை ஒன்றை மொழிபெயர்த்து, பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**நேசம் என்றால் நிர்மூலமாதல்.**
**வாழ்ந்து நேசிக்கலாம் என எதிர்பாராதீர்கள்.**
**ஆனால் இறக்கும் போது வாழுங்கள்,**
**உயிரைத் துறந்தும் வாழுங்கள்.**

அலோபா அப்போது, “உலகில் ஒரு விழிப்புணர்வை எப்போது எதிர்பார்க்கலாம்?” என வினவினார்.

“**அந்த விழிப்புணர்வு உறுதியானது**” என்று பாபா கூறினார். “**அது வர உள்ளது. வந்தாக வேண்டும்**.”

கிஷன் ஸிங் அவரது காரில், தானே காரை ஓட்டி, பாபாவை அழைத்துச் செல்ல வேண்டும் என மிகவும் ஆசைப்பட்டார். ஆனால் பாபா மஸ்த் பயணம் அல்லது சுற்றுலா செல்லும் போதெல்லாம், அவர் ஹெலன் அல்லது வேறு எவரையாவது ஓட்டுநராக அழைத்துச் செல்வது வழக்கம்; கிஷன் ஸிங்கை ஒருமுறை கூட ஓட்டுநராக அழைத்துச் சென்றதில்லை. கடைசியாக, பல வற்புறுத்தலுக்குப் பின்னர், ஒரு நாள் (அனைவரும் கொல்லப்படுவார்கள் என்று கேலி செய்து) பாபா, கிஷனுடன் காரில் சவாரி செய்ய ஒப்புக்கொண்டார். ஆனால் அதில் ஒரு சிக்கல் இருந்தது: கிஷன் கார் ஓட்டுவது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்பட்டதால், பாபா ஒரு நபரை காரின் அருகில் ஓடவும், அவசரகாலத்தில் தேவைப்பட்டால் காரை ஓட்டிச் செல்லத் தயாராக இருக்குமாறும் அறிவுறுத்தினார். அதனால், பாதசாரிகளும் பார்வையாளர்களும் ஆச்சரியப்படும் விதத்தில், கிஷன் தனது ஆசையை நிறைவேற்றினார். அவர் தனது காரில் பாபாவை ஒரு சிறிய சவாரிக்கு அழைத்துச் சென்றார், ஆனால் பாதையில் ஒருவர் அவர்களுடன் ஓடிக் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

1953 ஜூன் 15 திங்கட்கிழமை அன்று, பாபா எலுமிச்சை பழரசம் அருந்தி, ஒரு வாரம் உபவாசம் மேற்கொள்ள விரும்புவதாக அறிவித்தார். அவர் முதலில் தனது மருத்துவர்கள் டான், நீலு, கோஹெர் ஆகியோரிடம் ஆலோசனை செய்தபோது - இது அவரது உடல்நிலையை கடுமையாக பாதிக்காது என்று கூறினர், மேலும் அவர்கள், அவரது விருப்பத்தில் தலையிட மாட்டார்கள் என்று உறுதியளித்தனர்.

டெஹ்ரா டூனுக்கு அருகில் நான்கு முக்கிய புனிதர்கள் இருந்தனர்: ஆனந்தமாயி மா (ANANDAMAYI MA), ஸந்த் ஈஷ்வர் ஸிங் (SANT ISHWAR SINGH), ஸந்த் மங்கட் ராம் (SANT MANGAT RAM) மற்றும் மீரான் பாய் (MIRAN BHAI). இவர்களில் முதல் மூவரையும் தொடர்பு கொள்ள பாபா விரும்பினார். ஆனால் அவர் உபவாசம் கடைப்பிடித்ததால், மாற்று நபர்கள் மூலம் அவர்களைத் தொடர்பு கொள்ள முடிவு செய்தார். எல்சாவின் கால்களில் பாபா தலைவணங்க, எல்சா, ஆனந்தமாயி மாயின் பாதங்களைத் தொட்டு வணங்கி பாபாவின் அன்பையும் ஆசிகளையும் அவருக்குத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார்.

அதேபோல, பைதூலின் கால்களை இருமுறை தொட்டுத் தலைவணங்கி, ஈஷ்வர் ஸிங், மங்கட் ராம் ஆகியோரிடம் சென்று ஒவ்வொருவரையும் தலைவணங்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

அறிவுறுத்தியதற்கு இணங்க, எல்சா செய்த அவ்வேளையில், ஆனந்தமாயி மா, மெஹர் பாபாவை சந்திக்க விருப்பம் தெரிவித்தார். எல்சா, இந்தச் செய்தியை பாபாவிடம் தெரிவிக்க, அவர் கீழ்வரும் குறிப்பை ஆனந்தமாயிக்கு அனுப்பி வைத்தார்:

**மெஹர் பாபாவைப் பார்க்கும் உங்கள் விருப்பம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. நீங்கள் அவரைப் பார்க்க வேண்டிய தேவை இல்லை என்று அவர் கூறுகிறார். மக்கள் கூறுவது போல, பாபா உயர்ந்தவர்களில் உயர்ந்தவராக இருந்தால், அனைத்திலும், அனைவரிடத்திலும் இருக்கிறார் என்றால், எல்லாம் அறிந்த அவர், உங்களிடமும் இருக்கிறார். அப்படி இல்லாவிடிலும், அவரை சந்திப்பதில் எந்த பலனும் இருக்காது. பாபா, மஹான்கள், வாலிகள், மஸ்துகள், சாதுக்கள் மற்றும் ஏழைகளை சமமாக வணங்குகிறார், மேலும் அவர் தனது அன்பை உங்களுக்குத் தெரிவிக்கிறார். அன்புடன், அவர் உங்களுக்குத் தலைவணங்குகிறார்.**

பாபா மீண்டும் எல்சாவை வணங்கி, மாற்று நபராக ஆனந்தமாயி மாயிடம் திருப்பி அனுப்பி வைத்தார். பெண் துறவியை வணங்கிய பின்னர், எல்சா, பாபாவின் செய்தியை வழங்கினார். அதைக் கேட்ட ஆனந்தமாயி, "நமோ நாராயணா!" என்று திரும்பத் திரும்ப மொழிந்தார்.

இதர இரண்டு துறவிகளைப் பார்த்து வணங்கிவிட்டு, பைதூல் திரும்பி வந்ததும் பாபா அவரிடம், "**ஈஷ்வர் ஸிங் என்ன கூறினார்?**" என்று விசாரித்தார்.

"மெஹர் பாபா யார் என்று என்னிடம் கேட்டார்."

**"நீங்கள் என்ன பதிலளித்தீர்கள்?"**

"அவர் ஒரு பெரிய மஹான் என்று நான் சொன்னேன்."

இது பாபாவை வருந்தச் செய்தது, மேலும் அவர் நீண்ட நேரம் எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**நீங்கள் என்னை ஒரு துறவியாக எடுத்துக்கொள்கிறீர்களா? உங்கள் இதயம் இதைத்தான் கூறுகிறதா? பாபா ஒரு சாதாரண மனிதர் என்று நீங்கள் கூறியிருந்தால், நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன்! 30 வருட காலம் என்னுடன் பழகிய பின்னரும், நீங்கள் என்னை துறவி என்று அழைக்கிறீர்களா?**

**'மெஹர் பாபா யார் என்று உங்களுக்குத் தெரியாது, ஆனால் நீங்கள் அவரை உங்கள் குருநாதராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் அவரிடம் சொல்ல வேண்டும்' என உண்மையும் நேர்மையும் உங்களிடம் கோரிக்கை விடுத்தது. இந்தக் கேள்வியை டாக்டர் தேஷ்முக்கிடம் கேட்டிருந்தால், 'பாபா அவதார புருஷர்' என்று உடனடியாக பதிலளித்திருப்பார்! நீங்கள் அவ்வாறு அறிவித்திருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நான்தான் உங்கள் குருநாதர் என்று உங்களைப் பாதுகாக்கும் விதத்தில் கூறியிருக்கலாம்.**

**நான் ஒரு துறவி என்று அவரிடம் சொன்னதில் உங்களின் கருத்துதான் என்ன? நான் புனிதர் அல்ல! தற்பொழுது டெஹ்ரா டூன், ஹரித்வார், ரிஷிகேஷ் ஆகிய இடங்களில் ஏராளமான புனிதர்களும், இங்கு ராஜ்பூர் சாலையில்** (பாபாவின் இருப்பிடம்) **நான்கு புனிதர்கள் - ஆனந்தமாயி மா, மங்கட் ராம், ஈஷ்வர் ஸிங் மற்றும் மீரான் பாய் ஆகியோரும் உள்ளனர்.**

**நேற்றுதான் நான் மண்டலிக்குத் துறவிகளைக் குறித்து கபீரின் வார்த்தைகளில் விளக்கினேன்:**

**புனித யாத்திரையால் ஒருவருக்குக்**
**கிடைக்கும் நன்மை ஒன்றே ஒன்று.**
**ஒரு துறவியை தரிசனம் செய்வதால்**
**கிடைக்கும் பலன்கள் நான்கு.**
**ஆனால் ஒரு சத்குருவை சந்திப்பதால்**
**கிடைக்கும் பலன்கள் எண்ணற்றவை!**
**கபீர் இவ்வாறு அறிவித்துள்ளார். சிந்தனை செய்து பாருங்கள்!**

அதற்கு முந்தைய நாள், ஏழு நாட்கள் உபவாசம் மேற்கொள்ள நினைத்ததாகவும், ஆனால் தற்போது பெய்து வரும் மழையினால் அவரது திட்டங்கள் சீர்குலைத்து விட்டதாகவும் குறிப்பிட்டு, பாபா இவ்வாறு தெரிவித்தார், **"கடைசி நிமிடத்தில் எனது எல்லா பணிகளும் குழப்ப நிலையில் உள்ளன. டெஹ்ரா டூனில் என்னுடைய ஒவ்வொரு திட்டமும், நான் அதைத் தொடங்கும் நேரத்தில் நிலைகுலையச் செய்கிறது. நான் மஸ்த் பயணம் செல்லவிருந்தபோது சரியான வாகனம் கிடைக்காததால், எனது திட்டத்தை மாற்ற வேண்டியிருந்தது. நான் ஏழைகளின் கால்களைக் கழுவும் போது,** (அந்தப் பைத்தியக்கார) **திருமதி ஸேஹலின் குறிக்கீடு நிகழ்ந்தது."**

ஆனந்தமாயி மாயின் சில பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்கு வர விரும்புவதாக எல்சா கூறினார். பாபா அவரை எச்சரித்தார், **"எவரேனும் தரிசனத்திற்கு வந்தால், அது உங்களுக்கு நல்லதல்ல!"** மேலும், **"எனது பணி நிறைவுறும் தருவாயில், உலகம் முழுவதும் என்னை வணங்குவதை இறைவன் காண்பார்!"**

பாபா, கிஷன் ஸிங்கிடம், **"என்னைப் பற்றி உங்களிடம் எவரேனும் ஏதாவது கேட்டால் என்ன சொல்வீர்கள்?"** என்று கேட்டார்.

கிஷன் பதிலளித்தார், "பொதுவாக, உங்களைப் பற்றி பிறரிடம் பேச எனக்கு வாய்ப்பு கிடைக்கும் வேளையில், நான் உங்களை அவதார புருஷர் அல்லது ஆன்மீகத்தில் மேல்நிலையை அடைந்த நபர் என்று குறிப்பிடுகிறேன்..."

பாபா உடனே குறுக்கிட்டு, **"சொர்க்கத்தின் நிமித்தம், என்னை ஆன்மீகத்தில் மேல்நிலையை அடைந்தவர் என்று அழைக்காதீர்கள்! என்னை எப்படி 'அவதார புருஷர்' அதே நேரத்தில், 'ஆன்மீக ரீதியில் முன்னேறியவர்' என்றும் நீங்கள் கூறலாம்? நான் ஆன்மீக ரீதியில் பரிபூரணமானவன் அல்லது ஒரு சாதாரண மனிதன் என்று சொல்லுங்கள், ஏனெனில் நான் சாதாரணமாகவோ அல்லது பரிபூரணமாகவோ இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்."**

பாபா மீண்டும் கூறினார், **"தக்க நேரத்தில், கடவுள், உலகம் முழுவதையும் என்னை நோக்கி வரச் செய்வார்."**

பைதூல், “ஆனால் அந்த நேரம் எப்போது வரும்?” என வினவினார்.

“**கடவுளிடம் கேளுங்கள்**!” பாபா கேலி செய்தார்.

ஆனந்தமாயி மா, ஈஷ்வர் ஸிங், மங்கட் ராம் ஆகியோரிடம் திரும்பிச் சென்று, பாபா அவர்களை வணங்குவதாக மனதிற்குள் கற்பனை செய்து கொண்டு, எதுவும் பேசாமல் அவர்களைத் தலைவணங்கும்படி பைதூலுக்கு உத்தரவிட்டு, பின்பு, பாபா, பைதூலை மூன்று முறை தலைவணங்கினார்.

கைக்கோபாத்துடன் அவரது உபவாசத்தைக் குறித்து விவாதித்து, பாபா, தனது திட்டத்தில் நிலைகுலைவு ஏற்பட்டதைக் குறிப்பிடுகையில், இவ்வாறு தெரிவித்தார், “**அதன் வெற்றி உங்கள்** (கைக்கோபாத்) **கைகளில் உள்ளது. நாம் வெற்றிபெறும் வரை போராட வேண்டும், 50 சதவீதம் உங்கள் கைகளில்தான் உள்ளது**!”

ஜூன் 16ஆம் தேதி முதல், பாபா, அவரது உபவாசத்தைத் தொடங்கினார், அவர் விரும்பியபடி, மண்டலியும் அவருடன் 17ஆம் தேதி உபவாசம் கடைப்பிடித்து, தத்தமது மதங்களின்படி கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் ஒரு மணி நேரம் இரவு 11:30 மணி முதல் 12:30 வரை மொழிந்தனர்.

அன்றைய தினம் (ஜூன் 17) பாபாவுடன் நிகழ்ந்த உரையாடலின் போது, எரச், முந்தைய நாள், புனித ஆனந்தமாயி மாயின் இரண்டு பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்கு வந்திருந்ததாகத் தெரிவித்தார்.

“**அவர்களிடம் நீங்கள் என்ன கூறினீர்கள்**?” பாபா வினவினார்.

“இன்றைய நாட்களில் பாபா எவரையும் பார்ப்பதில்லை, ஆனால் அவர்கள் அவரை தூரத்திலிருந்து தரிசனம் செய்யலாம், மேலும், தற்பொழுது பாபா உபவாசம் மேற்கொள்கிறார்” என்று நான் அவர்களிடம் தெரிவித்தேன்.

அதற்கு பாபா, “**உபவாசம் கடைப்பிடிப்பது பெரிய விஷயமல்ல. இப்போது நீங்கள் என்னை நன்கு புரிந்து கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. என்னுடைய உபவாசம் எனது பணியுடன் தொடர்புடையது, சுய முக்கியத்துவத்தை அடையும் நோக்கத்தில் இல்லை. பலர் அனுதினமும் உபவாசம் இருக்கிறார்கள். உண்ணாவிரத போராட்டம் என்பது தினசரி செய்தித் தாள்களில் வரும் செய்தியாகும். எனவே, உண்ணாவிரதத்திற்கு என்ன முக்கியத்துவம் இருக்கிறது? இங்கே, நான் உபவாசம்** (உண்ணாவிரதம்) **இருப்பதைப் பற்றி கிஷன் ஸிங் பெரிய குரல் எழுப்புகிறார்**!”

சினம்கொண்ட பாபா, கிஷனை நோக்கி, “**பாபா, பிராயச்சித்தம் காரணமாக உபவாசம் மேற்கொள்கிறார் என்று மக்களிடம் சென்று கூறுங்கள்**!... **தனக்காகவும், தனது அன்பர்களுக்காகவும், எனது கருணைக்காகக் கண்ணீர் சிந்துபவர்களுக்காகவும், சுருக்கமாகச் சொன்னால், ஒட்டுமொத்த உலகிற்காகவும் என்று கூறுங்கள்**!”

எரச்சின் நண்பர் ஜால் கபாடியா (JAL KAPADIA), மெஹர் பாபாவைப் பார்க்க வந்தவர், சில தனிப்பட்ட விஷயங்களை விவாதித்த பின்பு, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்த விரும்பினார். “**எனக்கு ஆரத்தி, பஜனை, ஆராதனை**

என்று அலுத்துப் போய்விட்டது!" பாபா கூறினார். **"நான் மஸ்துகள், துறவிகள், வாலிகள் மற்றும் ஏழைகளுக்குத் தலைவணங்குவதில் மட்டுமே மகிழ்ச்சியடைகிறேன்; அதற்காகத்தான், நான் இந்தப் பௌதீக தளத்தில் இறங்கி வருகிறேன். தேவதைகள் என்னை வழிபடும் அதே வேளையில், நான் உலகை வணங்குகிறேன்!"**

1953 ஜூன் 18 வியாழன் அன்று மாலை 3:00 மணியளவில் எரச், பைதூல் ஆகியோருடன் ஸந்த் மங்கட் ராமின் ஆசிரமத்திற்குச் சென்ற பாபா, துறவியின் கால்களில் தலைவணங்கி உடனே வெளியேறினார். பாபா கூறினார், **"மங்கட் ராம், உண்மையாக இறைவனைத் தேடுபவர். அவர், உண்மையிலேயே ஒரு துறவி, முழு மனதுடன் இறைவனைத் தேடுகிறார். அவர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டாலும் தினமும் நான்கு அவுன்ஸ் உணவு மட்டுமே உண்கிறார்."** அங்கிருந்து வெளியே வந்ததும், பாபா, எரச்சை மீண்டும் துறவியிடம் அனுப்பி, மெஹர் பாபாவின் மாற்று நபராக அவரைத் தலைவணங்கும்படி அறிவுறுத்தினார். மங்கட் ராம், எரச்சிடம், "உலகம், கொடுமை மற்றும் அக்கிரமத்தால் நிறைந்துள்ளது, அதன் விளைவுகளிலிருந்து பாபா, மனிதகுலத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு பதிலளித்த பாபா, எரச்சிடம், **"இப்போது, புனிதர்களும் வெறுப்படைந்து விட்டார்கள்!"** என்றார்.

அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தபோது, '**அவதார புருஷர்**' என்று கூறிக்கொள்பவர்களைப் பற்றி ஒரு விவாதம் எழுந்தது. பாபா இந்தக் கருத்துக்களை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்: **"இன்று உலகில் பலர் தங்களை 'அவதாரம்' என்று அறிவித்துக் கொள்வது உண்மைதான். ஒவ்வொரு குருவை பின்பற்றுபவர்களும் பக்தர்களும் அவரை 'அவதாரம்' என்று அழைக்கிறார்கள். இந்த உயர்வான ஆன்மீக நிலையை எட்டியதாக, தமது கூற்றை முன்வைக்கும் 75 பேர் உலகில் உள்ளனர், ஆனால் அவர்களில் ஒருவர் மட்டுமே உண்மையானவர்! எஞ்சியவர்களில் பாதி பேர் சுய மாயையில் மூழ்கியுள்ள அதேவேளையில், மறு பாதி போலி பாசாங்கு செய்பவர்கள்."**

பாபா தொடர்ந்து கூறினார்: **"நான் உங்களிடம் கேட்கிறேன், இவர்கள் ஒவ்வொருவரும் அவதாரம் என்றால், மேலும், அவதாரம் ஒருபோதும் துன்பத்திற்கு ஆளாகாமல் இருந்தால், நீங்கள் துன்பப்படும் வேளையில் எப்படிப் பரிகாரத்தைத் தேடுகிறீர்கள்? இதெல்லாம் வேதாந்தத்தால் உருவாக்கப்பட்ட குழப்ப நிலை. ஒவ்வொருவரும் கடவுள் என்று அது கூறுகிறது. இது உண்மைதான், ஆனால், இறை உணர்வை அடைந்தவர்கள் மட்டுமே அதைப் பறைசாற்ற முடியும்.**

**"வேதாந்தத்தின் இந்தக் கூற்றின் வலிமையின் அடிப்படையில், 'நான் கடவுள்' என்று ஒருவர் கூறினால், இறைத்தன்மை ஒரு கணம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. இறை ஞானம் அவ்வாறு கூறுகிறது;**

**உபநிடதங்கள் அதைக் கூறுகின்றன; ஆனால் இந்தக் கோட்பாட்டின்படி நாம் செல்வதானால், கடவுள் மீது அன்பு எப்படி உருவாகும்? யாரை நேசிப்பது? இறை ஞானம் தானாக உதயமாகாது. எனவே, அவர்கள்** (போலி அவதாரங்கள்) **புத்தியால் வழிநடத்தப்படுகிறார்கள், அதன்படி செயல்படுகிறார்கள். இதனால், அவர்கள் உண்மையிலேயே ஏமாற்றப்படுகிறார்கள்."**

மஸ்துகளைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"ஒருவன் தெய்வீக மாயத்தோற்றத்தில் மயங்கி, போதையால் ஆட்கொள்ளப்பட்டால், பிற்காலத்தில் அவன் உண்மையானவனாகிறான். உலகில் இத்தகைய 'நிர்வாணர்கள்'** (முற்றும் துறந்தவர்கள்) **பலர் இருக்கிறார்கள்; கடவுள் கூட அவர்களுக்கு அஞ்சுகிறார்! அவர்கள் அவதார புருஷரைப் பற்றி கவலைப்படுவதுமில்லை, கண்டுகொள்வதுமில்லை. அவர்கள் சமாதி நிலையில்** (ஆனந்தத்தில்) **இரண்டறக் கலந்துள்ளனர்; அவர்களுக்கு உலகம் என்று ஒன்று இல்லை, மேலும் அவர்கள் உலகைப் பொறுத்தவரை இறந்தவர்களாக இருக்கிறார்கள்."**

**"சொல்லப்போனால், நாத்திகனும் வேதாந்தியும் ஒன்றுதான். வேதாந்தம் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான வதந்திகள், வம்புப் பேச்சுகள்** (அறிவுசார்ந்த மல்யுத்தங்கள்). **கடவுள் என்னைப் பேச வைத்து, அவருடைய இறைத்தன்மையை நிரூபிக்கும் போதுதான் மக்களுக்குத் தெரிய வரும்"** என்று அவர் குறிப்பிட்டார்.

தொண்டு பற்றி குறிப்பிட்ட பாபா, **"மிகப்பெரிய தர்மம், தொண்டு என்று அழைக்கப்படுகிறது, இது எந்த வகையான சாதாரண தொண்டும் அல்ல. உண்மையான தர்மம் என்பது இதயப்பூர்வமான சகிப்புத்தன்மை. பிறர்மீதான பரிவுணர்வு, அன்பிணக்கம், மன்னிக்கும் குணம் உண்மையான தர்மத்தில் அடங்கும். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை வழங்குவதும் தர்மமாகும். உண்மையில், பிறரின் நன்மைக்காக தன்னுடையதை விட்டுக்கொடுப்பது தொண்டு. அது மிகப் பெரிய விஷயம்"** என்று விளக்கினார்.

19ஆம் நாள் காலை 8:00 மணிக்கு பிரார்த்தனைகள் மொழியப்பட்டன... பாபா முதலில் குஸ்தாஜியைத் தலைவணங்கினார், அதைத்தொடர்ந்து கூப்பிய கரங்களுடன், அவர் எரச்சின் முன்னால், பயபக்தியுடன் அமைதியாக நின்று வணங்கினார்; அப்போது அவர், பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த இந்த வரிகளை வாசித்தார்: **"கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பரிபூரணமானவர்கள், குதுப்கள், மஜ்ஜூப்கள், மஸ்துகள், கடவுளின் அன்பர்கள், கடவுளைத் தேடி அலைபவர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்; அவர்களின் அன்பு மற்றும் நம்பிக்கைக்கு இணங்க, உடல் ரீதியாக என்னை விட்டுப் பிரிந்த எனது அன்பர்கள் மற்றும் பக்தர்களை இன்று நான் அன்புடன் நினைவுகூருகிறேன்..."**

மண்டலி நின்றுகொண்டிருக்க, பாபாவை நேசித்து, சேவை செய்து, உயிரைத் துறந்த அன்பர்களின் பெயர்களை எல்சா வாசித்தார். பாபா, பின்னர் அங்கிருந்த ஒவ்வொருவரின் கால்களிலும் தலைவணங்கினார்.

பாபா நண்பகலில் சில பிஸ்கட்களை உண்டு, தனது உபவாசத்தை நிறைவு செய்தார்.

கிஷன் ஸிங், பிரகாஷ்வதி இருவரும் ஒரே பங்களாவில் தங்கியிருந்தனர், சில சமயங்களில் பிரகாஷ்வதியை பாபா பார்ப்பதுண்டு. அந்த நாளின் பிற்பகுதியில், பாபா திடீரென கிஷன் ஸிங்கிடம் பிரகாஷ்வதியைப் பற்றிக் கேட்டார், அவர் ஆனந்தமாயி மா என்ற புனிதரிடம் சென்றதை அறிந்திருந்தார்.

**"பிரகாஷ்வதி பிற துறவிகளை தரிசிப்பது நல்லது. இப்போது நான் அவருக்குப் பொறுப்பல்ல!"** என்று வேண்டுமென்றே நிராகரிக்கும் தொனியில் குறிப்பிட்டார். "பிரகாஷ்வதி தனது வீட்டில் தனியாக இருப்பதாலும், அலுப்பாக உணர்வதாலும் நேரத்தைக் கடத்துவதற்காகவே அங்குச் சென்றார்" எனவும், "அவருடைய தாயாரும் ஆனந்தமாயி மாயுடன் இருக்கிறார்" என்று கிஷன் விளக்க முயன்றார்.

**"ஆனந்தமாயி மா ஒன்றைச் செய்யச் சொல்ல, அவர் அதைச் செய்யாவிடில், பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்வார்; அவர் அதைச் செய்தால், அவருடைய பொறுப்பிலிருந்து நான் விடுபடுவேன்."**

பாபா அப்பொழுது கிஷனை எச்சரித்தார், **"நீங்கள் என்னுடையவர், பிரகாஷ்வதி உங்களைப் பேரழிவிற்கு இழுத்துச் செல்வார் என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன்! ஆனந்தமாயி மா, ஈஷ்வர் ஸிங் இருவரும் ஆன்மீக மேல் தளத்தில் பயணிப்பவர்கள், ஆனால் நீங்கள் என்னை அனைவருக்கும் தலைவராக எடுத்துக் கொண்டால், பொறுப்புடன் செயல்பட்டு, ஒவ்வொரு வாசலுக்கும் செல்லாமல் இருக்க வேண்டும்** (அதாவது பிற குருக்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்க வேண்டும்.)"

பாபா தொடர்ந்து கூறினார், **"ஆனந்தமாயி மாயின் கைகளிலிருந்து பிரகாஷ்வதிக்கு நன்மை அல்லது அனுகூலமான எதுவும் நிகழ்ந்தால், அவரை ஜூலை வரை, இங்கு வாழும் இதர துறவிகளிடமும் அழைத்துச் செல்லுங்கள். ஜூலை மாத இறுதியில், நீங்கள் இருவரும், பாபா மட்டுமே உண்மையானவர் என்று உணர்ந்தால், எனக்கு அர்ப்பணிப்பதாக நீங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்."** (இதன் பொருள் என்னவெனில், ஏழைகளுடனான பாபாவின் பணிக்குத் தேவையான செலவில் சிறிதளவு பணம் வழங்க வேண்டும்.)

**"என்னை உங்கள் குருநாதராக ஏற்றுக்கொண்டால், நீங்கள் என்னை மட்டுமே திடமாகப் பற்றிக்கொள்ள வேண்டும். எனது தரப்பிலிருந்து, நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்ல முடியாத அளவுக்கு நிராதரவாகி விடுவதை**

**நான் பார்க்க வேண்டும்! அதன் பின்னர், எந்த மூன்றாம் சக்தியும் உங்களைக் குறுக்கிடவோ அல்லது உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ கூடாது.**

**“நான் எல்லாவற்றையும் 100 சதவிகிதம் தன்னிச்சையாக செய்கிறேன்; எனது பார்வையில், மகத்துவம் அதிலேதான் உள்ளது. உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் எப்பொழுதும் தன்னிச்சையாக செயல்படுகிறார்.**

**“பிரகாஷ்வதி குழப்பத்தில் மூழ்காமல் தெளிவாக இருக்கும் நேரத்தில், பாபா இல்லாமல் தன்னால் வாழ முடியாது என்று கூறுகிறார். அவருடைய ஆழ் இதயத்திலிருந்து இதைச் சொன்னால், அவர் ஆனந்தமாயி மாயிடம் செல்வதைக் குறித்து, கனவிலும் நினைக்க மாட்டார். இது மிகவும் நியாயமான, தர்க்கரீதியான அனுமானம். பிரகாஷ்வதி, என்னை 100 சதவிகிதம் நேசிப்பதாக இருந்தால், நான் அவரை முற்றிலும் புறக்கணிப்பதாக இருந்தாலும் கூட, அவர் இதயத்தில் வேறு எவருக்கும் இடமளிக்காமல் இருப்பதோடு, என்னை விட்டுப் பிரிந்து செல்லவும் மாட்டார்.”**

பாபாவின் கட்டளைப்படி, கிஷன் ஸிங், பிரகாஷ்வதியை வெவ்வேறு துறவிகளிடம், மேலும் ஆனந்தமாயி மாயிடம் அழைத்து சென்றார். பாபா, பிரகாஷ்வதிக்கு, பிற துறவிகளை சந்திக்கும் சுதந்திரம் வழங்கியதைத் தொடர்ந்து, அவரும் அவ்வாறே செய்தார். இதன் விளைவு, தீங்கு விளைவிப்பதாக இல்லை, ஆனால் அற்புதமாக இருந்தது, ஏனெனில் இறுதியில் அவர் எந்தத் துறவியின் தாக்கமும் இல்லாமல் இருந்தார். பிரகாஷ்வதி ஒவ்வொரு துறவியிடமும் சென்றபோது, அவர் ஒருவிதமான சஞ்சலத்தை உணர்ந்தார்; பாபா அவரை உள்ளளவில் ஈர்த்துக் கொண்டிருந்தார்.

இதன் விளைவாக, அவர் வேறு துறவியிடம் செல்வதையும் நிறுத்திவிட்டு, பால் கிஸன் பக்ஷி (BAL KISAN BAKHSHI) மற்றும் அவரது மனைவி மெஹர் காந்தா (MEHER KANTA) அவர்களின் இல்லத்தில் பாபாவைப் பற்றிய கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு வாரமும், பிரகாஷ்வதி அவர்களின் பங்களாவில் கீர்த்தனைகளை நிகழ்த்தும்போதும், இந்த இதயம் கவரும் வரிகள் எதிரொலிக்கும்: “சிவனின் பாலினத்தில் பிறந்தவர்! ஜெய் மெஹர் பாபா, ஜெய் மேர்வான்!”

கிஷனும் இந்தப் பாடலை மண்டலி குடியிருப்பில் உரத்த குரலில் பாடுவது வழக்கம், அதை, பாபாவும் கேட்பதுண்டு. இதனால், பிரகாஷ்வதியிடம் ஓர் அற்புதமான மாற்றம் ஏற்பட்டது, மேலும் கிஷன் ஸிங்கைத் தனது பாதங்களில் என்றென்றும் தலைவணங்கும் விதத்தில், பாபா, தனது தெய்வீக லீலையைப் புரிந்தார். அவரது புனித பாதங்கள் இறை போதையை வழங்கும் மதுபான சத்திரமாகத் திகழ்ந்து, அனைவரும் அடைக்கலமாகும் உறைவிடமாக மாறியது; மேலும் அவரிடம் வர விரும்பாதவர்கள் கூட அவரது எல்லையில்லா கருணையால் அங்கு ஈர்க்கப்பட்டனர்.

ஜூன் 19ஆம் நாள், மண்டலியுடன் நிகழ்ந்த உரையாடலில், பாபா பின்வருமாறு கூறினார்:

**ஒரு வாலியை அணுகுவதில் அனுகூலமும், சில வேளைகளில் பாதகமும் உள்ளது; ஆனால் என்னை அணுகுவதில் லாபம் அல்லது நஷ்டம் என்ற கேள்விக்கு இடமில்லை. இருந்தும், எனது விருப்பம் வெளிப்படும் போது, அனைத்தும் தானாகவே ஆசீர்வதிக்கப்படும். முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும், கடவுள் அதை 100 சதவீதம் செய்வார்.**

அலோபா "உங்கள் மௌனத்தை எப்போது கலைப்பீர்கள்?" என்று கேட்டார்.

பாபா புன்முறுவல் செய்துகொண்டே பதிலளித்தார்:

**1,200 ஆண்டுகளுக்குப் பிறகு! கடவுள் என்னைப் பேச வைக்கும்போது, நான் பேசுவேன்; அது நான் உச்சரிக்கும் 'இறை வார்த்தை'யாகவும், 'உண்மையான பேச்சாகவும்' இருக்கும்.**

**கிருஷ்ணரும், புத்தரும், கிறிஸ்துவும் ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டனர், நானும் எனது வார்த்தைகளைக் கூறிச் செல்வேன். ஆனால், நான் பேசும்போது கடவுள் என்னை இவற்றையெல்லாம் பேச வைக்க மாட்டார்!**

**இப்போது நான் சொல்வது அனைத்தும் ஏற்கனவே புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது, மேலும் கூறியதே மீண்டும் கூறப்படுகிறது. கடவுள் என்னைப் பேச வைக்கும் போதுதான், அவர் தனது இறைத்தன்மையை என் மூலம் வெளிப்படுத்தி நிரூபிப்பார். ஆனால் அது முற்றிலும் மாறுபட்ட விஷயம்.**

**காலச்சுழற்சியில் ஒரு முறை, கடவுள் இதைச் செய்கிறார். இது அவரது தற்போக்கு எண்ணத்தைப் பொறுத்தது. ஆனால் கடவுள் என்னை பேச வைக்கும் போது, நான் பேசுவது ஒரு சான்றாக இருக்கும். எனது பணி உலகளாவியது, ஒவ்வொரு துறவியும், வாலியும், அன்பரும் 100 சதவீதம் அதில் உதவுவார்கள் என்பது முற்றிலும் உண்மை. கடவுள் இதையெல்லாம் செய்வார், நான் அந்த நேரத்திற்காகக் காத்திருக்கிறேன், மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன். கடவுள் என்னைப் பேச வைப்பார் என்பது மட்டும் எனக்குத் தெரியும். நான் அந்த 'இறை வார்த்தை'யை உச்சரிக்கும்போது, கடவுள் உளதாயிருக்கிறார் என்பது நிரூபணமாகும்; அதற்கு மஸ்துகள், புனிதர்கள் மற்றும் வாலிகளின் உதவி இன்றியமையாதது. நான் அவர்களின் உதவியை நாடுகிறேன்.**

பெண்டு இடையே குறுக்கிட்டுக் கூறினார், "பாபா அந்த நேரத்தை அறிவார்; இருந்தும், அவர் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்."

**"ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்"** என்று பாபா பதிலளித்தார், **"அதுவே, கடவுள் எனது மௌனத்தைக் கைவிடச் செய்வார். அது, இப்போது நாம் பேசும் பேச்சாக இருக்காது. நான் வாயைத் திறந்தால் கடவுள்**

**இருக்கிறார் என்பது நிரூபணமாகும், அதற்காக, புனிதர்கள் மற்றும் மஸ்துகளிடமிருந்து வேண்டிய உதவி அனைத்தும் கிடைக்கும்.**

**“உங்களுக்கு இதை விளக்கி, புரியவைக்க, நான் பேசியாக வேண்டும். நான் கண்டிப்பாகப் பேசுவேன், நானாகவே வெளிப்படுவேன். அதற்குப் பின்னர் இறைத்தன்மை நிரூபணமாகும். இதை நான் இதுவரை வெளிப்படையாகச் சொன்னதுமில்லை, இவ்வளவு தெளிவாக விளக்கியதுமில்லை.”**

டெஹ்ரா டூன் வளாகத்தில் பல மா மரங்கள் இருந்தன. மரங்களிலிருந்து மாம்பழங்களை எவரும் பறிக்க வேண்டாம் என்றும், ஆனால் தானாகக் கீழே விழும் பழங்களை, விருப்பம் போல சேகரிக்கலாம் என்றும் பாபா அறிவுறுத்தியிருந்தார். ஆண் மண்டலியில் குஸ்தாஜி, பைதூல் இருவரும் கனிந்த பழங்களைக் கைப்பற்றுவதில் மிகவும் ஆர்வமாக இருந்தனர். அவர்கள் மாம்பழங்கள் கீழே விழும் வரை காத்திருந்து, விழுந்ததும் விரைந்து சென்று அவற்றை எடுத்து வந்தனர். பைதூல் தனது பங்கை விட அதிகமாக சேகரிப்பதைத் தடுப்பதற்காக, இருவருக்குமிடையே இருந்த போட்டியில், குஸ்தாஜி இரவின் பெரும்பகுதியை வெளியில் கழிக்கும் அளவுக்குப் போனது.

நாக்பூரிலிருந்து வந்த டாக்டர் தேஷ்முக், வீட்டில் ஓர் அறையில் தூங்கிக் கொண்டிருந்தார். காலநிலை மிகவும் வெப்பமாக இருந்ததால், தேஷ்முக் தனது படுக்கையை மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்று அங்கே தூங்கினார், திறந்த வெளியில் நட்சத்திரங்களின் கீழ், குளிர்ச்சியாக இருந்தது. ஒரு நாள் இரவு, திடீரென மழை பொழிந்தது. பாதுகாப்பற்ற நிலையில், தேஷ்முக் தனது படுக்கையை விரைவாகச் சுருட்டி, கீழே எடுத்துச் செல்வதற்கு பதிலாக, மொட்டை மாடியிலிருந்து கீழே வீசி எறிந்தார். அது குஸ்தாஜி அமர்ந்திருந்த இடத்திலிருந்து சில அங்குல தூரத்தில் ஆபத்தான விதத்தில் விழுந்தது. குஸ்தாஜியின் முழு கவனமும் கீழே விழும் மாம்பழங்களின் மீதே இருந்தது; அன்று இரவு பலத்த காற்று வீசியதால், மரங்களிலிருந்து அதிக அளவிலான மாம்பழங்கள் விழுந்தன. தேஷ்முக் தனது படுக்கையை கீழே வீசியபோது, குஸ்தாஜி காயப்படாமல் தப்பினார். குஸ்தாஜி அருகில் இவ்வளவு பெரிய பொருள் விழுந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மிகவும் மனக்கலக்கமடைந்த அவர், மறுநாள் காலை பாபாவிடம் முறையிட்டார். பைதூல், குஸ்தாஜி இருவரின் போட்டி நடவடிக்கைகள் பற்றி கேள்விப்பட்ட பாபா நன்றாக சிரித்தார். ஆனால் அன்றிலிருந்து இருவரையும் மாம்பழம் சாப்பிடக்கூடாது என்று தடைவிதித்தார்.

அதற்குப் பிறகு, பாபா, பிரகாஷ்வதியின் மகன் பூஷனை (BHUSHAN) அழைத்து, **“நான் சொன்னபடி செய்வீர்களா?”** என்று கேட்டார்.

பூஷன், “நிச்சயமாக” என்று பதிலளித்தார்.

**“மரங்களில் விளையும் அனைத்து மாம்பழங்களையும் பறித்து, அவை கனிந்த பின்னர், அவற்றை சந்தையில் விற்று விலையாக்குங்கள்; துல்லியமான கணக்கை வைத்திருங்கள், நான் சரிபார்க்கிறேன்.”**

எனவே, பூஷன் அனைத்து பழங்களையும் பறித்து, பழுப்பதற்காக மண்டலியின் வீட்டில் வைத்திருந்தார். மாம்பழங்களை எவரும் தொடக்கூடாது. பைதூல், குஸ்தாஜி இருவரிடமிருந்தும் அவற்றை உண்பதற்கான அனுமதி பறிக்கப்பட்டதால், இருவரும் தேஷ்முக்கின் மீது கோபத்தில் கொதித்தெழுந்தனர்; மேலும், அவர் வெளியேறும் வரை அவர்களது கோபத்தினால் சற்றும் நிம்மதி கிடைக்கவில்லை.

பூஷன் பஜாரில் பழங்களை விற்கத் தொடங்கிய போது, பாபா தினமும் அவருடைய கணக்கை சரிபார்த்தார். அவருக்கு இந்தப் பணியை வழங்குவதற்கு முன்பு, பாபா அவரிடம் **‘எப்பொழுதும் உண்மையைப் பேசவும், நேர்மையாகவும், எந்த ஓர் இகழ்ச்சிக்குரிய செயலையும் செய்யக்கூடாது’** என்று கட்டளையிட்டார். பூஷனின் கடமையுடன், பாபா அவருக்கு நேர்மையைக் கற்றுத் தந்து, அவருடைய சிறிய தவறிலும் கவனம் செலுத்தினார்.

இந்த நேரத்தில் இரண்டு புதிய செல்லப்பிராணிகள் வாங்கப்பட்டன. முஸோரியிலிருந்து, பெண்மணிகள், பீட்டர் என்ற கருப்பு ‘காக்கர் ஸ்பானியல்’ நாய்க்குட்டியைக் (PETER, BLACK COCKER SPANNIEL PUPPY) கொண்டு வந்தனர். 1953 ஜூன் 23 அன்று இரவு, குமார் ஆண் குதிரைக் குட்டி ஒன்றைக் கொண்டு வந்தார்; பாபா, மெஹராவிற்குக் கொடுத்த அந்தக் குதிரையை அவர், மிகுந்த பாசத்துடன் வளர்த்து வந்தார். அதற்கு ஷீபா (SHEBA) என்று பெயரிடப்பட்டது.

இந்தக் காலக்கட்டத்தில், பாபா, டெஹ்ரா டூனில், பதினாறு வயதான ஈஸா (ISA) என்ற, துப்புரவுத் தொழிலாளியின் மகனை தினமும் அழைப்பது வழக்கம். ஈஸாவின் தந்தையும் தாயும் ஆண், பெண் மண்டலியின் குடியிருப்பில் பணிபுரிந்து வந்தனர். கிஷன் ஸிங் அதிகாரியாக இருந்ததால், அவரது உத்தரவுப்படி பெற்றோர்கள் பணிபுரிந்தனர்; ஆனால் ஈஸாவிற்கு மரியாதை காட்டுவதில் கிஷன் கவனமாக இருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் ஈஸா, பாபாவை நேசித்ததோடு ஏதேனும் தவறு நிகழ்ந்தால் அவரிடம் புகார் கூறுவதுண்டு.

ஒரு நாள் ஈஸா சில மாம்பழங்களைப் பறிக்கச் சென்றார். பழத்தைக் கீழே விழச் செய்ய அவர் ‘ஜெய் மெஹர் பாபா!’ என மொழிந்து கல்லை எறிந்தார். மாம்பழம் கீழே விழாதபோது, கோபத்தில், “மெஹர் பாபா தொலைந்து போகட்டும்!” என்று சபித்தார்.

அவர் இதைச் செய்துகொண்டே இருந்ததைப் பார்த்த, அவருடைய நண்பர் ஒருவர், ஈஸா, பாபாவின் பெயரைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்று பாபாவிடம் தெரிவித்தார். அதற்கு பாபா, **“அவர் அவமதிப்பதில் என்ன தவறு? அவர் எனது பெயரை எடுத்துக்கொண்டு என்னை நினைவில் வைத்துக் கொள்ளவில்லையா?”** என வினவினார்.

ஒரு நாள் பாபா, ஈஸாவிடம் கேட்டார், "**நீங்கள் என்ன படிக்க விரும்புகிறீர்கள்?**"

"நான் பள்ளிக்கூடம் செல்ல விரும்பவில்லை," என்று அவர் பதிலளித்தார். "நான் வேலை செய்ய விரும்புகிறேன், ஆனால் எனக்கு ஓர் எளிதான வேலை வேண்டும் - நாற்காலியில் அமர்ந்து கொண்டு செய்யக்கூடிய வேலை - கடினமாக உழைக்க வேண்டியதில்லை."

கிஷன் ஸிங்கிடம் பாபா, அத்தகைய வேலை ஒன்றைக் கண்டுகொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஈஸாவிற்குப் படிப்பறிவு இல்லாததால், கிஷனுக்கு இந்த மாதிரி வேலையைத் தேடுவது கடினமாக இருந்தது. பாபா ஒவ்வொரு நாளும் அவரிடம் அதைப் பற்றி விசாரித்தார், மேலும் அவருடைய கட்டளையை நிறைவேற்றாததற்காக அவரைக் குறை கூறி வந்தார். எனவே, கிஷன் தனது செல்வாக்கு மிக்க நண்பர் ஒருவரைக் கலந்தாலோசித்து, அவருக்கு ஆதரவாக, ஈஸாவை அவரது அலுவலகத்தில் பணியமர்த்த உடனடியாக ஒப்புக்கொண்டார். ஈஸா அமர்ந்திருக்க அவரது அலுவலகத்திற்கு வெளியே ஒரு நாற்காலி போடப்பட்டது, மேலும், இதர அலுவலகங்களுக்கு, கோப்புகளை எடுத்துச் செல்வது அவரது கடமை.

கிஷன், ஈஸாவிடம் இதைத் தெரிவித்ததோடு, காலை 11:00 மணிக்கு உடனடியாக வேலையில் இணையுமாறு அறிவுறுத்தினார். ஆனால் அடுத்த நாள், ஈஸா அந்த அலுவலகத்திற்குச் செல்லவில்லை. தனக்கு எதுவும் தெரியாதது போல நடந்துகொண்ட பாபா, அன்று மாலையில் கிஷனிடம் ஈஸாவைப் பற்றிக் கேட்டார், அவர் ஈஸாவிற்கு எளிதான வேலை ஒன்றைக் கண்டுகொண்டதாக பெருமையுடன் கூறினார். பாபா, சிறுவனை வரவழைத்து, "**வேலை எப்படி இருக்கிறது?**" என்று கேட்டார். "நான் இன்னும் போகவில்லை பாபா!" ஈஸா தெரிவித்தார்.

"**ஏன் இல்லை?**"

"கிஷன் ஸிங் என்னை அதிகாரியிடம் அழைத்துச் சென்று முதலில் அறிமுகப்படுத்த வேண்டும். அவர் அதைச் செய்யவில்லை, அதனால் நான் செல்லவில்லை."

பாபா, கிஷன் பக்கம் திரும்பி, "**ஆமாம், அவர் சொல்வது உண்மைதான். ஏன் ஈஸாவை அழைத்துச் செல்லவில்லை? நாளை அழைத்துச் செல்லுங்கள்**" என்று கூறினார்.

அடுத்த நாள், கிஷன் ஸிங், தனது காரில் ஈஸாவை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார், அவர் வேறு அதிகாரி ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது, ஈஸா தைரியமாக தனது முதலாளியின் அறைக்குள் நுழைந்து, அவருக்கு முன்னால் இருந்த ஒரு சொகுசு நாற்காலியில் அமர்ந்தார். கிஷன் ஸிங் உள்ளே வந்ததும், "யார் அவர்?" என்று ஈஸாவைச் சுட்டிக் காட்டி கேட்டார்.

"நான் சொன்ன சிறுவன் அவன்தான்" என்று கிஷன் பதிலளித்தார்.

“இந்த ஒழுக்கம் அறியாத, விஷமக்கார சிறுவனை எனக்குப் பரிந்துரைக்கிறீர்களா? நீங்கள் என் நண்பன்; இல்லையேல், இந்த அயோக்கியனுக்கு நான் பாடம் புகட்டியிருப்பேன்!”

வெட்கமடைந்த கிஷன், சிறுவனுடன் பாபாவிடம் திரும்பிச் சென்றார். கிஷன் தன்னை அவமானப்படுத்தியதாக ஈஸா, பாபாவிடம் புகார் செய்தார். பாபா அவரைக் கண்டித்தபோது, கிஷன் வாதிட்டார், “அவன் மிகவும் தவறான நடத்தையுள்ள பையன், பாபா. நான் என்ன செய்ய முடியும்?”

**“அவர் தவறான நடத்தை உடையவர், ஆனால் நீங்களும் அவ்வாறு இல்லையா?”** பாபா கடிந்து கொண்டார். **“அவர் ஒரு துப்புரவு தொழிலாளி என்பதால், நீங்கள் அவரைத் தரக்குறைவாகப் பார்க்கிறீர்கள். கடவுளாகிய நான் அவரை எனது பக்கத்தில் அமர அனுமதிக்கிறேன், நீங்கள் அவரை இழிவாக நடத்துகிறீர்கள்! நீங்கள் அவரை உங்கள் மட்டத்தில் வைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை, ஆனால் அவரை வெறுக்காதீர்கள் - அவர் மீது அன்பு வேண்டும்.”**

பாபா டெஹ்ரா டூனில் தங்கியிருந்த போது, ஈஸாவைப் பற்றிய தனி நிகழ்வு கிட்டத்தட்ட தினமும் நடக்கும். பிடிவாதமான சிறுவன், கிஷன் ஸிங், கிருஷ்ணா நாயர், தொடர்ந்து பாவ் கல்சூரி ஆகியோரின் மனப்படிவங்களைத் துடைக்க, பாபாவின் கருவியாக இருந்தான். பாவ் கல்சூரி, டெஹ்ரா டூனுக்கு வந்தபோது, ஈஸாவை கவனித்து, அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளும்படி அவரிடம் கூறப்பட்டது - ஆனால் ஆண் மண்டலி கண்டுகொண்டது போல் ஈஸா எளிதில் திருப்தி அடையாத சிறுவனாக இருந்தான்.

ஒருமுறை, டாக்டர் டான், பாபாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஈஸாவும் அங்கு இருந்தான். உரையாடல் முடிந்ததும், ‘**டான் போகலாம்**’ என்று பாபா சைகையால் தெரிவிக்க, வெளியே சென்ற அவர் ஏதோ நினைவில், திரும்பி வந்தார். இதைப் பார்த்து ஈஸா சிரித்ததும், ‘**ஏன் சிரிக்கிறீர்கள்?**’ என்று பாபா அவனிடம் கேட்டதற்கு, “நீங்கள் அவரைப் போகச் சொன்னீர்கள், அவர் திரும்பி வந்துவிட்டார், அவருக்குக் கீழ்ப்படிதலின் அர்த்தம் தெரியாது!” என்றான்.

பாபா அந்த சிறுவனை மண்டலியின் முன்னால், **“பாருங்கள், ஈஸா எவ்வளவு புத்திசாலி. அவர் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்துகொள்கிறார்”** என்று பாராட்டினார்.

இன்னுமொரு முறை ஈஸாவின் தாயார் அழுது கொண்டே பாபாவிடம் வந்தார். பாபா காரணம் கேட்க, அவர், “நேற்று இரவு ஈஸா 100 ரூபாயை சூதாட்டத்தில் இழந்தான். தயவு செய்து இன்றிரவு அவனை வெற்றி பெறச் செய்யுங்கள்” என்றார். பாபா அவனுக்கு உதவி செய்வதாக உறுதியளித்து, தாயார் சென்ற பிறகு, மனம் விட்டு சிரித்தார். ஈஸாவை வரவழைத்து, வெளியே சென்று சூதாடுவதற்கு நேரம் கிடைக்காத வகையில் அவனது நடவடிக்கைகளை மாற்றியமைத்தார். திரைப்படங்களுக்குச் செல்வது, சீட்டாட்டம், பிற விளையாட்டுகள், ஜபம் செய்தல் மற்றும் நாளின் குறிப்பிட்ட நேரங்களில் பாபாவுடன் இருப்பது - இவை அனைத்தும் ஈஸாவின் நித்திய வேலையாக

இருந்தன. பாபா அவனை கிருஷ்ணாவுடன் திரையரங்கிற்கு அனுப்புவதும், சூதாட்டத்திற்கு செல்வதில் விருப்பம் காட்டக்கூடாது என்பதற்காக அவனை மீண்டும் அழைத்து வர, வேறு ஒருவரையும் அனுப்பி வைத்தார்.

ஈஸாவின் பெற்றோர் உரத்த குரலில் ஒருவருக்கொருவர் சண்டையிடும் வேளையில், பாபா இரு தரப்பிலிருந்தும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, பின்னர் அவர் நடுவராக, விஷயங்களை விளக்கி, அவர்களிடையே சமரசத்தைக் கொண்டுவருவது வழக்கம். தரிசனத்திற்காக ஏங்குபவர்களுக்கு ஒரு நிமிடம் கூட அனுமதி வழங்காமல், பாபா, ஈஸாவின் எளிய குடும்பத்திற்கு மணிக்கணக்கில் தனது சகவாசத்தை வழங்கியது ஆச்சரியமாக இருந்தது.

1953 ஜூன் 24 காலை 7:00 மணிக்கு, 45 மைல் தெற்கே அமைந்த ரூர்க்கி நகருக்கு பாபா, பெண்டு, எல்சா, கிஷன் ஸிங் ஆகியோரை, ஹெலன் காரில் அழைத்துச் சென்றார். ரூர்க்கியில், குதுப் ஸபீர் (QUTUB SABIR) தர்காவில் ஏழைகளுக்கான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய பைதூல் முன்கூட்டியே அனுப்பப்பட்டார். வழியில் மழை வேறு தூறிக் கொண்டிருந்தது, காரும் தொந்தரவு கொடுத்தது. பெட்ரோல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டு, எரிவாயு பெருமளவு வெளியேறியது. எல்சா, ஹெலனை வேகமாக ஓட்டுமாறு அறிவுறுத்தினார், ஆனால் மழை மற்றும் சாலை ஆபத்தான நிலையில் இருந்ததால், ஹெலனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. கார் திடீரென ஒரு தட்டையான சமவெளியில் நின்றது, ஹெலனுக்கு ஆச்சரியமாக இருந்தது, ஏனெனில், அவரைப் பொறுத்தவரை, அதில் எந்தத் தவறும் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. இதற்கிடையில், டெஹ்ரா டூனில் காரை ஏன் சரியாக சோதிக்கவில்லை என்று ஹெலனிடம் கேட்க, பாபா அடிக்கடி எல்சாவைத் தூண்டினார். இறுதியாக, ஹெலன் காரை சரிசெய்து, பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஸபீரின் தர்காவில், பாபா அமருவதற்காக வழங்கப்பட்ட அறையில், அவர் ஏழைகளின் கால்களைக் கழுவவும், வணங்கவும், அவர்கள் நிற்கவும் வசதியான ஒரு செங்கல் மேடையும் அமைக்கப்பட்டது. பாபா, தலையை ஒரு துண்டால் மூடி, இனிமையான மனநிலையில் காணப்பட்டார். காலை 9:00 மணிக்கு, தர்காவின் பராமரிப்பாளர், பாபாவின் நிபந்தனைகளுக்குத் தகுதிப்பாடுடைய 50 ஏழைகளின் பட்டியலை வரைந்து, அவர்களின் வரிசையை உருவாக்கினார். சம்பிரதாய முறைப்படி, பாபா தலைவணங்கிய பிறகு, பிரசாதமாக ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாய் வழங்கப்பட வேண்டும். பாபா அவர்களுக்குப் பிரசாதத்தை வழங்கியதும், ஒவ்வொருவரும் ‘அல்லா உங்களுக்கு உதவட்டும்! அல்லா உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கட்டும்! அல்லா உங்களை ஆசீர்வதிப்பாராக!’ என்று கூற வேண்டும். முதல் ஏழையின் கால்களை பாபா கழுவிய பின்பு, கிஷன் ஸிங் அவற்றைத் துடைத்ததும், சீற்றத்துடன் கிஷனை நோக்கி பாபா, மீண்டும் அந்த ஏழையின் பாதங்களைக் கழுவி, அவற்றைத் துடைத்து, தலைவணங்கினார். இதனால்

யாருடைய உதவியுமின்றி இந்தப் பணியை, தானே செய்ய விரும்புவதாக கிஷனுக்குப் புரியவைத்தார்.

இந்தத் திட்டம் குறிப்பாக 50 ஏழைகளுக்காக வரையப்பட்டது, ஆனால் பட்டியலில் மூன்று பேர் வராததால், அருகில் நின்றவர்களில் மூன்று நபர்களைத் தேர்ந்தெடுத்து, பாபா அவர்களின் கால்களைக் கழுவி, சுத்தம் செய்து, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் தனது அன்புப் பரிசாகப் பணத்தை வழங்கினார். மேலும், பண உதவியை எதிர்பார்த்து அங்கு வந்த பல ஏழைகளுக்கும் தலா நான்கு ரூபாய் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் வெற்றிக்கான ஆயத்தங்களில் பராமரிப்பாளர் பெரிதும் உதவியதால், பாபா, அவரது கால்களையும் கழுவி வணங்கி, பத்து ரூபாய் அன்பளிப்பாக வழங்கினார். அனைத்து வேலையிலும் உதவிய இன்னுமொரு முதியவருக்கும் பத்து ரூபாய் வழங்கப்பட்டது. இதற்கிடையில், அசல் பட்டியலில் விடுபட்ட மூன்று நபர்கள் திடீரென அங்குத் தோன்றவே, பாபா அவர்களின் கால்களையும் கழுவி, தலைவணங்கி அவர்களுக்கும் அன்புப் பிரசாதத்தை வழங்கினார். பாபாவின் பிரசாதத்தை அடையப் பெற்றவர்களில் பெண்கள், முதியோர், இளைஞர்கள், கண்பார்வையற்றவர்கள், ஊனமுற்றவர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிலரும் அடங்குவர். முஸ்லீம் பராமரிப்பாளர் அனைத்தையும் ஏற்பாடு செய்ததால், ஏழை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்த அனைவரும் முஸ்லீம்கள்.

ஏழைகளுடனான பணி நிறைவடைந்ததும், பாபா தர்காவிற்குள் சென்று, சமாதியின் கீழ், தரையில் பட்டு கம்பளம் ஒன்றைப் பரப்பியது, மறைந்த சத்குரு ஸபீருக்கு அவர் அளித்த மரியாதையை வெளிப்படுத்தியது. பாபா, தர்காவின் முன்னால் சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்கினார். பாதுகாவலர் பிரார்த்தனைகளை ஓதி முடித்தார்: “கடவுளே, ஏழைகளின் கால்களைக் கழுவியவரின் ஆன்மீகப் பணி அவரைத் திருப்தி அடையச் செய்யும் அளவில் அமையட்டும்.”

அதற்கு ஆண் மண்டலி அனைவரும் ‘ஆமென்’ என்று குரலெழுப்பினர். பாபா, பிரார்த்தனைகள் அனைத்தும் மொழிவதுவரை, தரையில் விழுந்து, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். தர்காவின் வராண்டாவிலும் அதே பிரார்த்தனை மொழியப்பட்டது, வெளியில் இருந்த கூட்டமும் ஒன்றிணைந்து, ‘ஆமென்!’ எனக் குரல்கொடுத்தது. அதற்குப் பிறகு முஸ்லீம் பராமரிப்பாளருக்குப் பிரசாதத்தை வழங்கி, வெளியில் ஒன்றுதிரண்ட ஒவ்வொருவருக்கும் நான்கு அணாக்களை வழங்கினார். டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் செல்லும் போது, ரூர்க்கியில் பணிபுரிந்ததில் பாபா பெருமகிழ்ச்சி அடைந்ததாகத் தெரிவித்தார்.

1925ஆம் ஆண்டு மௌனம் தொடங்கிய நாளிலிருந்து, பாபா, மஸ்துகள், மஹான்கள் மற்றும் ஏழைகளுக்கான நிகழ்ச்சிகளில் மட்டுமே பணத்தைக் கையாளுவதைத் தவிர, இதர சந்தர்ப்பங்களில் பணத்தைத் தொட்டதில்லை.

ரூர்க்கி சென்று திரும்பும் வேளையில், காரில், கிஷன் ஸிங்கின் குரல் வளத்தில் பாடலும், எல்சா மிஸ்திரியின் நகைச்சுவையான உரையாடலும் பாபாவை நல்ல மனநிலையில் இருக்கச் செய்தன. அவரது கதைகளுக்கு

மெருகூட்டும் நோக்கத்தில், எல்சா அவற்றை மிகைப்படுத்தி ‘காரசாரமாக’ மொழிந்தார். அவர்கள் டெஹ்ரா டூன் திரும்பி வந்த பின்னர், எல்சாவிற்குப் பொருத்தமான பி.டி.எல் (BUNDLE LICENTIATE, பண்டில் லைசன்ஸியேட்) அதாவது ‘ஒட்டுமொத்த கட்டுக்கதைகளின் பட்டதாரி’ என்ற பட்டத்தை பாபா வழங்கினார்.

1953 ஜூன் 25 வியாழன் அன்று, டெஹ்ரா டூனில், பாபா, குமாருக்கு நினைவூட்டினார், **“நான் உங்களுக்கு வழங்கிய வேலையைச் செய்ய மறந்துவிடாதீர்கள்.”** நாட்கள் செல்லச் செல்ல, பாபா அதையே திரும்பத் திரும்ப நினைவூட்டிய வேளையில், ஒருமுறை குமாரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பாபா குறிப்பிட்டார், **“அது ஒரு நல்ல பழக்கமாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும் சரி, நான் மீண்டும் மீண்டும் ஒன்றை நினைவூட்டுமாறு அறிவுறுத்தப் பட்டிருக்கிறேன். பாபாஜானை சந்தித்த பிறகு, நான் ஒன்றைத் திரும்பத் திரும்ப நினைவூட்டுவது, என்னில் பெரிய அளவில் அதிகரித்தது. நான் ஏன் அதைச் செய்கிறேன்?”**

“ஒருவருக்கு வழங்கப்படும் கடமையை நிறைவேற்ற அவரிடம் உறுதித்தன்மையை உருவாக்க முடியும்” என்று எரச் கருத்துத் தெரிவித்தார்.

பாபா பதிலளித்தார்:

**அது அப்படியல்ல. மெஹரா, குட்டிக் குதிரை ஷீபாவிற்குப் பால் ஊட்டவும், கோஹெர் மரங்களிலிருந்து மாம்பழங்கள் அனைத்தும் பறிக்கப்படுவதைக் கண்காணிக்கவும் நான் அடிக்கடி நினைவூட்டுகிறேன். அவர்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லை என்று நம்புவது கடினம், மேலும் அவர்கள் தத்தமது வேலையைச் செய்ய மீண்டும் மீண்டும் நினைவூட்டுவது அவசியமாகிறது.**

**காரணம், உள்மனதில் எனக்கு மிகுந்த அலுப்பு - வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சிறிய விஷயங்களை கவனிக்கும் பொறுப்பிலிருந்து நான் விடுபட விரும்புகிறேன். அதற்காக, நான் உள்மனதில் சிரமப்படுகிறேன், இந்த உள்ளளவிலான சிரமங்களின் சாயல் (ஆண், பெண்) மண்டலி மீதும் விழுந்தது.**

**கடவுள் மீதான எல்லா நேர்மையுடனும் உங்களுக்குச் சொல்கிறேன், நான் எல்லையில்லா அளவுக்கு சோர்வாக உள்ளேன்! எனது மௌனத்தைக் கலைக்க நான் காத்திருக்கிறேன்; நேரம் வரும்போது, இந்த உணர்வு மறைந்துவிடும். எனக்கு எந்தத் தொந்தரவும் ‘இல்லை’ என்றாலும், நான் மிகவும் வெறுப்பாக உணர்கிறேன்; எப்போது நான் இந்த மௌனத்திலிருந்து விடுபடுவேன், மேலும் உலகம் எப்போது சுதந்திரமாக இருக்கும் என்று என்னையே நான் கேட்கிறேன்.**

**குட்டிக் குதிரை எனக்கு எவ்வளவு தொந்தரவாக உள்ளது என்பதைக் குறித்து உங்களுக்கு ஏதாவது கருத்து உள்ளதா? எனக்கு எவ்வளவு எரிச்சலை இந்தக் குதிரை தந்துள்ளது என்பதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்.**

“இது முரண்பாடானது,” எரச் பேச்சினிடையே கூறினார், “மனித புத்திசாலித்தனம் உங்களை எப்படிப் புரிந்து கொள்ள முடியும் பாபா?”

**நான் குழப்பத்தில் இருக்கிறேன் மேலும் மண்டலியைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறேன். இரவும் பகலும் இந்தப் பொறுப்புகளிலிருந்து விடுபட நினைத்துக் கொண்டிருக்கிறேன்.**

**கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவார் என்பதை அறிந்திருந்தார். அவர் ஆனந்தத்தின் மொத்த உருவாகத் திகழ்ந்தார். அவரது துன்பம் உலகளாவியது, ஆனால் அவர் ஏழு ஆன்மீகத் தளங்களிலும் நிலைகொண்டிருந்தார்! இது பரிபூரண** (இறை உணர்வு) **நிலை. எனவே, இயேசு சிலுவையில் அறையப்படுவதை குறைவான உணர்வு நிலையில் உணர்ந்தார். எப்போதும், அவர் அதை அறிந்திருந்தார்; சொல்லப்போனால், அவர் அதற்காகக் காத்திருந்தார். இது குறித்து அவர் தனது சீடர்களை எச்சரிக்கவும் செய்தார். இறுதியாக, அவர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவரது சுயநினைவின் கீழ், அவர் குரல் கொடுத்தார்: “தந்தையே, நீங்கள் கூட என்னை கைவிட்டீர்கள்! ஏன் என்னை கைவிட்டீர்கள்?”**

**இருந்தும், ஒரு மஜ்ஜூபைப் பொறுத்தவரை அப்படி எதுவும் இல்லை. ஏனெனில், அவர் செய்ய வேண்டிய உலகளாவிய கடமை எதுவும் இல்லை. அவர் உயர் நிலை பேரின்பத்தை மட்டுமே அனுபவிக்கிறார்.**

டாக்டர் நீலு, “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் (FATHER, SON AND HOLY GHOST) அர்த்தம் என்ன?” என வினவ, பாபா விரிவாக விளக்கமளித்தார்:

**பிதா = பரமாத்மா = ஜனான்** (JANAN) **= அக்ஷர்** (AKSHAR) **= பேஹத் (**BEHUD**, அதி உச்ச, வரம்பற்ற நிலை**);

**குமாரன் = ஷிவாத்மா = ஷிவா** (SHIV) **= ஜானே ஜனான்** (JAANEY JANAN) **= உத்தம்** (UTTAM) **= அன்ஹத்** (ANHUD**, உச்ச, வரம்பற்ற நிலை**);

**பரிசுத்த ஆவி = ஜீவாத்மா = ஹத்** (HUD, **வரம்பிற்குட்பட்ட நிலை**).

**‘அதி உச்சமாக’ மாற, வரம்பற்ற நிலையை அனுபவிக்க வேண்டும்.**

**‘ஷிவாத்மா’வாக மாற, வரம்பற்ற நிலையை அனுபவிக்க வேண்டும்.**

**இதையெல்லாம் கடந்து, ‘உணர்வற்ற உணர்வு நிலை’ உள்ளது. ஆனால் உணர்வற்ற பேரின்பம், உச்ச வரம்பற்றதாக மாறுவதற்கு, முதலில் அடைய வேண்டிய நிலை வரம்புக்குட்பட்ட நிலை. அதன் பின்பு, வரம்பற்ற நிலையை அனுபவிக்க வேண்டும்; மேலும் ‘உலகளாவிய’ பணிக்கு, அது ‘அப்பாற்பட்ட’ நிலையில் இருக்க வேண்டும்.**

**மனிதன் = வரம்புக்குள்ளானவன்**

**கடவுள் = வரம்பற்றவர்**

**அவதார புருஷர் அல்லது சத்குரு = ‘உச்ச வரம்பற்ற நிலை’ (**UNLIMITED SUPREME**) = ‘அப்பாற்பட்ட நிலை’** (BEYOND)

**ஆன்மா, பரமாத்மாவுடன் ஒன்றிணையும்போது, அது, ‘அதி உச்ச வரம்பற்ற நிலை’யில் (பேஹத்) உள்ளது. மேலும் இறையுணர்வை அடைந்த ஆன்மா, உலகளாவிய பணிக்காக தனது ‘அதி உச்ச நிலை’யிலிருந்து**

**'இறங்கும்போது', அதாவது அவர் தனது இறையுணர்வுடன் பௌதீக உணர்வையும் அடையப்பெறும் போது, அவர் 'உச்ச வரம்பற்ற' (அன்ஹத்) நிலையில் இருக்கிறார். ஏனெனில், கடவுளாக இருப்பதால், அவர் இரு நிலைகளிலும் - 'வரம்பற்ற, அப்பாற்பட்ட' நிலை, மற்றும் வரம்புக்குள்ளான நிலை (ஹத்) - இவற்றிலிருந்து வரம்பிற்குட்பட்ட ஆன்மாக்களுக்காகப் பணிபுரிகிறார்.**

**எனவே, 'பிதா'வின் நிலையில், 'இறையுணர்வை அடைந்த ஆன்மா' உலகளாவிய பணியில் ஈடுபடுவதில்லை; ஆனால் 'குமாரனின்' நிலையில் உலகளாவிய கடமைகளில் ஈடுபடுவது இன்றியமையாதது.**

**'பிதா'வின் நிலை 'குமாரனின்' நிலையில் அடங்கியுள்ளது; மற்றும் உலகளாவிய பணியின் நிலைப்பாட்டிலிருந்து பார்த்தால், 'பிதா'வின் நிலையைவிட 'குமாரனின்' நிலை உயர்ந்தது. 'தெய்வீக உணர்வின்' பார்வையில், இரண்டு நிலைகளும் ஒன்றே ஒன்றுதான்; ஆனால், 'குமாரனின் நிலை'யில் உலகளாவிய பணியின் கடமையில் ஈடுபட வேண்டிய அதே வேளையில் 'பிதா' கடமை எதுவும் இல்லாமல் இருக்கிறார்.**

"இது முற்றிலும் புதிய வெளிப்பாடு," என்று டாக்டர் நீலு அறிவித்தார்.

எரச் கூறினார், "கிறிஸ்தவ உலகம் இதை அறிந்து, சரியாக புரிந்துகொள்ள வேண்டியது முக்கியம், ஏனெனில், பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையிலான இந்த வித்தியாசத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் குமாரன், பிதாவைக் காட்டிலும் கீழ்நிலையில் இருப்பதாக எடுத்துக்கொள்கிறார்கள், மேலும் நீங்கள் விளக்கியபடி, கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டது உண்மையல்ல."

பாபா பதிலளித்தார், "**எதுவாக இருந்தாலும், இப்போது நான், இவை அனைத்திலிருந்தும் விடுபட விரும்புகிறேன். இவை அனைத்தும் உலகுடன் தொடர்புடையது; ஆனால், இந்த விஷயம் ஒரு சாதாரண மனிதனை ஏமாற்றமடையச் செய்கிறது. ஒரு மந்திரவாதி தனது தந்திரங்களைச் செய்யும்போது, குழந்தைகள் அவற்றை உண்மையென நம்பிவிடுகிறார்கள்; ஆனால் பெரியவர்கள் அவ்வாறு ஏமாற மாட்டார்கள், ஏனெனில் இதுவெல்லாம் ஏமாற்று வித்தை என்று அவர்களுக்குத் தெரியும்.**"

பாபா மேலும் விளக்கினார்:

**ஏழாவது ஆன்மீகத் தளத்திலிருந்து - பிதாவின் நிலையிலிருந்து - இறங்கி வந்து, பௌதீக உலக உணர்வை அடையப்பெறுபவர், மந்திரவாதி போன்றவர். அவர் தனது தந்திரங்களைச் செய்யும்போது, முழு மனிதகுலமும் அவருடைய குழந்தைகளாக இருந்து, அவரது செயல்பாடுகளை 'உண்மையானதாக' கருதுகின்றது. ஆனால் ஏழாவது ஆன்மீகத் தளத்தின் மந்திரவாதிக்கும், பௌதீக தளத்தின் வித்தைக்காரனுக்கும் இடையே வானத்திற்கும் பூமிக்குமான வித்தியாசம் உள்ளது. தெய்வீக மந்திரவாதியின் கடமை, பிரபஞ்சத்தை நிலைநிறுத்துவதாகும். இதன் பொருள் என்னவெனில், தனது பணியைச் செய்யும் போது, அவர் தனது குழந்தைகளுக்கு, அவர்கள்**

பார்ப்பதும், கேட்பதும் உண்மையல்ல என்று எடுத்துரைக்க வேண்டும்; இதைச் செய்ய, அவர் குழந்தைகளின் புரிந்துகொள்ளும் சக்தியை அதிகரிக்க வேண்டும். ஆனால் உலகைப் புரிந்துகொள்வதற்கான இவை அனைத்தும், மேலும் ஏமாற்றமடையச் செய்கின்றன. இந்த விஷயத்தில் பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன; ஆனால் எல்லாமே கயிற்றின் சுருளைப் போலிருந்து பாம்பாகத் தோற்றமளிக்கிறது. அனைத்தும் கயிற்றின் சுருள் போன்றது - பொய்யும், போலியுமான ஒரு தோற்றம்!

சோர்வுற்று, சலிப்பாக உணர்வது கூட மாயை, மேலும் நான் எனது மௌனத்தைக் கலைக்க காத்திருக்கிறேன் என்று கூறுவதும் மாயையே! ஆனால் இந்த மாயை, பிறரை ஏமாற்றமடையச் செய்யாத அளவுக்கு உயர் தரத்தில் உள்ளது. தெய்வீக வித்தைக்காரர், குழந்தைகள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என்பதற்காக, உண்மைப்பொருளை நிலைநிறுத்தும் நோக்கத்தில், தனது தந்திர வித்தைகளைச் செய்கிறார். அவ்வாறு செய்யும் வேளையில், குழந்தைகள், எப்போது தன்னைப் புரிந்து, உண்மைப்பொருளை அறிந்து, உலகில் அனைத்தும் மாயை என்பதைத் தெரிந்து கொள்வார்கள் என்ற யோசனையில் அவர் சலிப்படைகிறார்.

உண்மையில் தெரிந்து கொள்வதற்கென ஒன்றுமில்லை. அனைத்தும் மறப்பதற்காகத்தான். புரிந்து கொள்ள முடிவது எல்லாமே மாயை. மிக உயர்ந்த மற்றும் குறைந்த புரிதல் இரண்டும் மாயைதான். எதைப் புரிந்து கொள்ள முடியாதோ அதுவே உண்மைப்பொருள் (ஏக இறைவன்). நாம் என்னவாக இருக்கிறோமோ அவ்வாறே இருக்கிறோம். நாம் என்னவாக இருந்தோம், இருக்கிறோம், இருப்போம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், அது ஒரு பெரிய விஷயமல்ல. புரிந்து கொள்ள வேண்டியது எல்லாம் 'மாயை', ஆனால் புரிந்து கொள்ள முடியாததை நீங்கள் புரிந்து கொண்டால், நாம் இருந்தோம், இருக்கிறோம், இருப்போம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த உணர்வை நீங்கள் அடைய வேண்டியதுதான் முக்கியம்.

சுருக்கமாகச் சொன்னால், நம்மில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை, ஏற்படவும் செய்யாது. ஒரே வேறுபாடு என்னவெனில், நாம் என்னவென்று, அதாவது 'எல்லையற்ற ஏக இறைவன் என்று நமக்குத் தெரியாது' என்பதை அறிந்து கொள்வதில்தான் உள்ளது. நம்மை நாம் வித்தியாசமாக, தனித்துவமான ஒன்றாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்தோம். இந்தத் தனித்துவ சிந்தனை மாயையேயன்றி வேறொன்றுமில்லை. ஆச்சரியமான விஷயம் என்னவெனில், நாம் எல்லையற்ற ஏக இறைவனாக இருந்தோம், இன்று நாம், நம்மை அவரிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாகக் கருதுகிறோம். நாம் தனித்துவத்தின் அடிப்படையில் சிந்திக்க ஆரம்பித்தோம் - நான் நோய்வாய்ப்பட்டிருக்கிறேன், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், இப்படி மற்றும் பல. அத்தகைய புரிதலைக் கைவிட வேண்டியது அவசியம்.

குமார் விவாதத்தில் தலையிடுவதைத் தடுக்க முடியாமல் கூறினார்: "பாபா, நீங்கள் விளக்கிய எதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, குறிப்பாக எனக்கு அதைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை."

பாபா பதிலளித்தார்:

**நீங்கள் கவலைப்பட்டாலும், இல்லையென்றாலும், உங்கள் குழந்தைகள், மனைவி மற்றும் உடல் கூட உங்களைப் பிணைக்கிறது. உண்மையாகச் சொல்லப்போனால், தொடர்ச்சியான ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை, ஆனால் இப்போது அதைப் பற்றி உங்களுக்குத் எதுவும் தெரியாது. நாம் அளவிறுதியற்ற சக்தி வாய்ந்தவர்கள். அந்த உணர்வை அடையப் பெற்றதும், நீங்கள் முழுப் பிரபஞ்சத்தையும் உருவாக்கலாம் அல்லது நிர்மூலமாக்கலாம்; அதை நீங்கள் விரும்பியபடி மகிழ்ச்சியாக அல்லது துன்பமாக இருக்கச் செய்யலாம். மானிடனின் மிக உயர்ந்த பேரின்பம் அந்த அசல், எல்லையில்லா இறை பேரின்பத்தின் 'ஏழாவது நிழல்' என்று ஸுஃபியிஸத்தில் கூறப்படுகிறது.**

**நீங்கள் கவலைப்பட்டாலும், இல்லையென்றாலும், இந்தப் புரிதல் படிப்படியாக வர வேண்டும். நமக்குத் தெரிந்ததெல்லாம் மாயை ஒன்றுதான். நாம் பேசுவதும் மாயைதான். உண்மையான புரிதல் வரும்போது, கண் இமைக்கும் நேரத்தில் வருகிறது, ஏனெனில் எல்லா துளிகளும் (ஆன்மாக்களும்) ஒன்றோடு ஒன்றாக இருக்கும் இறைப் பெருங்கடல் நாம். துளிகள் குமிழிகளாக தோன்றும்போது, அவை வேறுபட்ட நிலையை அனுபவிக்கின்றன. அலைகள் அவற்றை சிதறடிக்க முடியாது; ஆனால் அவை சிதறடிக்கப்பட்ட உடனேயே இறைப் பெருங்கடலாக மாறும்! இந்தக் 'குமிழிகளுக்கு' அவை குமிழிகள் அல்ல, பெருங்கடல் என்று எவ்வளவுதான் விளக்கினாலும், அவை வெடிக்கும் வரை அந்த உண்மையை கிரகிக்காது. குமிழிகளுக்கு எவ்வளவு அதிகமாக விளக்க முயற்சிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக, மாயையின் தாக்கம் அதிகரிக்கிறது. எனவே விளக்க வேண்டிய தேவைதான் என்ன? அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த குமிழிகள் சின்னாபின்னமாக வேண்டும்.**

**கடலில் பல்வேறு வகையான குமிழிகள் உள்ளன - சில சிறியவை, சில பெரியவை, சில கருப்பு, சில சிவப்பு, சில வெள்ளை, சில அழுக்கு - இப்படி, பல வகைகள்.**

குமாரைச் சுட்டிக்காட்டி பாபா கூறினார், "**அவர் கடலில் இருக்கிறார். அவருக்கு மனைவி, குழந்தைகள், உறவுகள் உள்ளனர். ஒவ்வொரு துளியும் வித்தியாசமானது, ஆனால் ஒவ்வொன்றும் ஒரு குமிழி.**"

கிஷன் ஸிங் வினவினார், "ஏன் இந்தக் குமிழிகளை உடைக்கக்கூடாது?"

பாபா வேடிக்கையாக, "**உங்களுடையது ஏற்கனவே உடைந்து விட்டது!**" என்றார்.

பின்னர், ஈரானின் ஸபீர் ஸாஹேப் (SABIR SAHEB) மற்றும் அவரது ஆன்மீக சாதனைகளைக் குறித்து பாபா கூறினார்:

ஸபீர் தனது தாய் மாமாவுடன் வாழ்ந்து வந்தார், பெரிய செல்வந்தர். ஒருமுறை அவரது தாயார், ஸபீரிடம் ஏராளமான உணவைத் தயார் செய்து, ஏழைகளுக்கு வழங்குமாறு கூறினார். பன்னிரண்டு ஆண்டுகளாக அவர் ஏழைகளுக்கு உணவளித்தார், ஆனால் இந்தக் காலம் முழுவதும், அவர் அத்திப்பழங்களை மட்டுமே உண்டு வந்ததால் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார்; ஒருமுறை அவரது தாயார், பிறருக்காகத் தயார் செய்த உணவை ஏன் அவர் உண்ணவில்லை என்று கேட்டதற்கு அவர், ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதாகவும், அதனால், அவர் என்ன தயார் செய்தாலும், தான் அதில் பங்கெடுக்கவில்லை என்றும் பதிலளித்தார்.

ஒருமுறை, ஸபீர் தெய்வீக ஒளியின் பிரகாசத்தைக் கண்டார், அதில் அவர் இரண்டறக் கலந்து, ஒன்றரை வருடங்கள் அந்த ஆனந்த நிலையிலேயே இருந்தார். அவருக்குத் தன்னுணர்வு வந்தபோது, மரத்தின் கீழ் அமர்ந்து அத்திப்பழம் உண்ணுவதைக் கண்டார். அத்தகைய மூன்று மற்றும் நான்காவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில், தெய்வீக வசீகரத்தில் சிக்கி இருக்கும் நிலை, 'முக்கம்-இ-ஹைரத்' (MUKAM-E-HAIRAT) என்று அழைக்கப்படுகிறது. அந்த ஆனந்த ஒளியில் மயங்கிய நிலையில் அவர் இருந்தார். அவருடைய நிலையை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? இது எல்லையற்ற பேரின்பம், தொடர்ச்சியான, நித்திய ஆனந்தம், ஆனால் சாதாரண மனித உணர்வில் அல்ல. அது எல்லையற்ற பேரின்பம், எல்லையற்ற ஞானம், எல்லையற்ற சக்தி, ஆனால் அவரால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை. ஸபீர் எதிர்கொண்ட அந்த அனுபவம் என்னவென்று அரிதான ஒருவருக்கு மட்டுமே தெரியும்.

"நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை," என்று பெண்டு கருத்துத் தெரிவித்தார்.

பாபா பதிலளித்தார், "இந்த நிலை ஒருவருக்கு உகந்ததல்ல என்று யார் கூறுகிறார்கள்? நீலுவும் தனக்கு இறையுணர்வு வேண்டாம் என்று கூறுகிறார். அவருக்கு வேண்டியது மருத்துவ பணி, நல்ல உணவு மற்றும் எனது சகவாசம்."

தொடர்ந்து பாபா கூறினார்:

மௌலானா ரூமி, அவரது காலத்தில் மிகச்சிறந்த ஞானி. நாவன்மை மிக்க அவருக்கு, நல்ல உரைகள் மற்றும் சொற்பொழிவுகளை வழங்க முடிந்தது. அவர் இடம் விட்டு இடம் பயணம் செய்தபோது, அவர் கற்றறிந்த நூல்கள் பொட்டலங்களாகக் கட்டப்பட்டு, ஒட்டகத்தின் மீது சுமந்து செல்லப்பட்டன. எங்கும் அவருக்கு மிகுந்த மரியாதை வழங்கப்பட்டது. மறுபுறம், ஷம்ஸ்-இ-தப்ரிஸ் (HAMS-E-TABRIZ) முற்றிலும் நிர்வாணமாக இருந்தார். ஒரு நாள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்த வேளையில், ஷம்ஸ், ரூமியின் அனைத்து புத்தகங்களையும் ஒரு கிணற்றில் எறிந்தார். ரூமி அவர் மீது சீற்றத்தை வெளிப்படுத்திய போது, 'குரான் உட்பட

**அவரது அனைத்து புத்தகங்களும் நாய்களுக்காக வைக்கப்பட்ட உலர்ந்த எலும்புகள் போல்' என்று ஷம்ஸ் விளக்கினார்! "இதுவரை, நீங்கள் எலும்புகளை மட்டுமே மென்று கொண்டிருந்தீர்கள்; மூளையை சுவைக்க வேண்டிய நேரம் இது!" என்று கூறினார்.**

**ரூமி இதைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்ததால், ஷம்ஸ் அனைத்து புத்தகங்களையும் கிணற்றிலிருந்து வெளியே எடுத்து வந்தபோது, அவை முற்றிலும் உலர்ந்திருந்தன! இது ரூமியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, மேலும் ஷம்ஸ், "ரூமி, ஷம்ஸின் அடிமையாக மாறாத வரை, அவர் எதையும் கற்றுக்கொள்ள மாட்டார்!" என்று குறிப்பிட்டார். இது முதற்கொண்டு, ரூமி தனது குருநாதரின் அடிமையாக மாறினார்; ஷம்ஸ் இறுதியில் அவருக்கு இறை உணர்வை வழங்கினார்.**

பாபா அப்போது, **"இறை அனுபவமிக்க வீரர்களாக மாறுங்கள், அதற்காக குருநாதரின் பாதத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் தூசியைப் போல் இருங்கள்"** என்று கூறி முடித்தார்.

இந்த நேரத்தில், பைதூல், பாபாவிடம் எதையோ கேட்க விரும்பினார், ஆனால் டாக்டர் நீலு, "கேள்விகளுக்கு முடிவே இல்லை" என்று கூறி அவரைத் தடுத்தார்.

இதைக் கேட்ட பாபா, **"ஆரம்பமே இல்லாத போது, முடிவு எப்படி இருக்கும்?"** என வினவினார்.

ஷீபா என்ற குட்டிக் குதிரையைக் குறிப்பிட்டு, பாபா, சோகக் குரல் எழுப்பினார், **"இந்தக் குதிரைக்குட்டி வந்தது - அதனால் முடிவுதான் என்ன? இதற்கு, படுக்கை தேவை, தீவனம் தேவை, மருந்து மற்றும் பல பொருட்கள் தேவை. எனவே, எங்கே சென்று முடியும்?"**

"இன்றைய விவாதம் நன்றாக இருந்தது" என்றார் டாக்டர் நீலு.

**"இது ஒரு விவாதம் அல்ல, வம்பளப்பு"** என்று பாபா பதிலளித்தார்.

"அப்படியானால், கீதை விவாதமா?" குமார் கேட்டார்.

**"இது கிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடல்"** என்று பாபா பதிலளித்தார்.

"அப்படிப்பட்ட உரையாடல் நல்லதல்லவா?" நீலு கேள்வி எழுப்பினார்.

**"அது எப்படி நல்லது அல்லாததாக இருக்க முடியும்,"** என்று பாபா கேட்டார், **"அதிலிருந்து நீங்கள் நல்லது தீயது பற்றி அறிந்து கொள்கிறீர்கள்? தீயது எதுவும் இல்லை என்பதை நீங்கள் அனுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டும்."**

பாபா தொடர்ந்து எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**நான் மிகவும் துன்புறுத்தப்படுகிறேன், இந்த சலிப்பு மற்றும் தொல்லையிலிருந்து என்னை விடுவிப்பதற்காக, எல்லையில்லா கருணைமிகு கடவுளிடம் பிரார்த்தனை செய்வதே ஒரே பரிகாரம்! கடவுள் முற்றிலும், எல்லையற்ற சுதந்திரமானவர். அவர் தனக்குள்ளேயே முழுமையான பரிபூரணமானவர். அவர், பரிபூரண சுதந்திரத்திற்கும்**

**அப்பாற்பட்டவர், ஏனெனில் நாம் அவரை சுதந்திரமானவர் என்று அழைக்கும்போது, எதையேனும் சார்ந்திருக்கும் நிலை பற்றிய எதிர்மறையான எண்ணமும் நமக்குள் இருக்கும். அவரது சுதந்திரம் கற்பனை செய்ய முடியாதது, அதற்கு மாறாக எதுவும் நடக்காது. அவர் இயற்பண்புகள் இல்லாதவர் என்று கூறும்போது, நமக்கு, பல்வேறு பண்புகளைப் பற்றிய எண்ணங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. அவர் 'ஒன்றானவர்' என்று சொல்லும்போது, நமக்கு இரட்டைத்தன்மையின் சிந்தனை வரும். எனவே, 'கடவுள் உளதாயிருக்கிறார்'** (GOD IS) **என்று சொல்வதே சிறந்தது.**

**அவரது சுதந்திரம் அளவற்றது, அதுபோலவே அனைத்தும் அளவிறுதியற்றது. அவர் எல்லையற்றவர் என்பதால், நாம் எங்கும் எல்லையற்ற தன்மையைக் காண்கிறோம். எனவே, எல்லையற்ற நிலையில், அவரது கருணையும் எல்லையற்ற சுதந்திரத்தில் எல்லையற்றது.**

**ஒருவன் தனது ஆழ் இதயத்திலிருந்து கடவுளின் கருணையை வரவழைக்க வேண்டும்.** 100 **வருடங்கள் மனம் தளராமல், மன்றாடி, பிரார்த்தனை செய்வதால் எந்த பலனும் கிடைப்பதில்லை. ஆனால் ஒரே கண நேர இதயப்பூர்வமான பிரார்த்தனைக்கு செவிசாய்க்கப்படுகிறது. எனவே, உள்ளார்ந்த பக்தியுடன், அவரை இரங்கி அழைக்கும் வேளையில் கருணையின் கதிர்களை அனுபவிப்பீர்கள்.**

**இப்போது செய்ய வேண்டியதெல்லாம், கைக்கோபாத் தனது ஆழ் இதயத்திலிருந்து எனக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.**

**பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, நான் எனக்காகவும், உங்களுக்காகவும், உலகத்திற்காகவும்** 100 **சதவீதம் முழு மனதுடன் பிரார்த்திக்கிறேன் என்பதை முழு உலகமும் உணரும் என்ற உண்மையை நான் உங்களுக்குச் சொல்கிறேன் - மேலும் எனது பிரார்த்தனையின் ஒவ்வொரு வாய்மொழியும் என்னையும், உங்களையும், உலகையும் ஒன்றாக இணைக்கும்!**

அதற்குப் பிறகு, பாபா, அவருக்காக கைக்கோபாத்திடம் பிரார்த்தனையை மொழியுமாறு வலியுறுத்தினார், "**நான் இப்போது கூறியதை மன்னிக்குமாறு கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள், நீங்கள் அனைவரும்** (மண்டலி) **பிரார்த்தனையில் கலந்து கொள்ளுங்கள்; எப்படியும், அதிர்ஷ்டம் இருந்தாலும் இல்லையென்றாலும், முழு மனதுடன் அதைச் செய்யுங்கள்!**"

மண்டலி அனைவரும் மிக சோர்வாக உணர்ந்து, அதை ஒரு குறையாக முறையிடாதபோதும், பாபா இந்த சொற்பொழிவை வழங்கினார். ஒருமுறை டெஹ்ரா டூனில் இறை ஒளியைக் காண நேர்ந்த கைக்கோபாத் மட்டும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அது நிகழ்ந்த அவ்வேளையில், கைக்கோபாத் மயங்கிய நிலையில் சுயநினைவை இழந்து கீழே வீழ்ந்தார்; உணர்வு திரும்பியபோது, அவரது கால் காயமடைந்திருந்ததைக் கண்டார். இந்த முதல் காட்சிக்குப் பின்னர், அவர் எப்போதேனும் மேலும் சில காட்சிகளைக் காண

நேர்ந்தபோது, மீண்டும் சுயநினைவை இழந்து கீழே வீழ்வது வழக்கமாக நடந்த ஒன்று.

வழக்கறிஞர் ஹரிசந்த் கோச்சார் (HARICHAND KOCHAR), ஜூன் 26 அன்று மெஹர் பாபாவை சந்திக்க வந்த வேளையில், பாபா அவரிடம், "**நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?**" என்று கேட்டார்.

"ஒவ்வொரு நாளும் மண்டலியுடன் சிறிது நேரம் செலவிட என்னை அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்" என்று அவர் கூறினார்.

**"நீங்கள் தற்பொழுது என் முன் அமர்ந்திருக்கிறீர்கள்; இதைவிட என்ன வேண்டும்? நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறீர்கள், வழக்குகளை வாதிடுகிறீர்கள், உங்கள் குழந்தைகளை பேணி பாதுகாக்கிறீர்கள் - அதில் என்ன தவறு?"**

பாபா வழங்கிய நீண்ட சொற்பொழிவில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆனால் நீங்கள் மிகப் பெரிய, பயங்கரமான, மனம், உடல் மற்றும் உலகம் எனும் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது உண்மைதான். இந்தச் சிறையிலிருந்து நீங்கள் விடுதலை அடைந்தால் மட்டுமே, என்றென்றும் பாதுகாப்பாக இருப்பீர்கள். இருப்பினும், இவை அனைத்தும் கற்பனையின் கட்டுக்கதைகள். எத்தனையோ பிறவிகளைக் கடந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எத்தனை குழந்தைகள் இருந்தனர் என்று கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் இன்று எங்கும் இல்லை.**

**உண்மையாகச் சொல்லப்போனால், எங்கும் எதுவும் இல்லை. இன்றைய வாழ்க்கை கூட ஒரு கனவுதான். இரவில் ஒரு கனவில், நீங்கள் உண்கிறீர்கள், அழுகிறீர்கள், மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். ஆனால் விழித்தெழுந்ததும், அது ஒரு கனவு என்று நீங்கள் அறிகிறீர்கள். அதுபோலவே வாழ்க்கையும் ஒரு கனவுதான். ஒருவர் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தால், அவர் கண்ட கனவை கனவாகவே கருதுகிறார். ஆனால் கனவு காணும் வேளையில், அந்த நபரிடம் கனவு என்பதை எடுத்துச் சொன்னாலும், அவர் அதை நம்ப மாட்டார். அந்த நேரத்தில், அவரது கனவு அவருக்கு நனவாகும். ஆனால் எழுந்ததும், அது ஒரு கனவு என்பதை அவர் தானாகவே உணர்கிறார்.**

**இன்று நான் உங்களுக்குக் கூறுகிறேன், நீங்கள் காண்பது, கேட்பது எல்லாமே கனவு. ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்ப மாட்டீர்கள், ஏனெனில் நீங்கள் அனுபவிக்கும் அனைத்தும் உண்மையானது என்று நினைக்கிறீர்கள். உங்கள் கண்கள் திறக்கப்பட்டால், நீங்கள் நிஜமாக எடுத்துக்கொண்டது உண்மையில் ஒரு கனவு என்பதைத் தானாகவே அறிந்து அனுபவிப்பீர்கள்.**

**கவலைப்படாதீர்கள்; இதெல்லாம் மாயை. நீங்கள் என்னை நேசிக்க வேண்டும், மேலும், நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். உங்கள் அன்பில் நீங்கள் மிகவும் நேர்மையாக இருப்பதானால், கடவுள் கூட**

உங்களை வணங்க வேண்டும். நேர்மையான அன்பிற்காக கடவுள் ஏங்குகிறார். பாசாங்குத்தனத்தின் சாயல் சிறிதும் இருக்கக்கூடாது. காலங்கள் மனதை மிகவும் களங்கப்படுத்திவிட்டன, அது தூய்மையாகவும் நேர்மையாகவும் இருப்பது மிகவும் கடினம். சந்தேகம் கொள்வது, வாதம் செய்வது, மகிழ்ச்சியாக இருப்பது, நோய்வாய்ப்படுவது, காயப்படுவது போன்றவை மனதின் இயல்பு. அது இயல்பின்றி இருந்திருந்தால், பிறவிக்குப் பின் பிறவிகள் தேவைப்பட்டிருக்காது. கற்பனை ஒன்றுதான் இவை அனைத்தையும் உருவாக்கியது, உலகம் அதில் அகப்பட்டுக்கொண்டு, சேற்றில் சிக்கியது போலத் தவிக்கிறது. மேலும் குழப்பமான மனநிலையில் இருந்து வெளிவருவது சாத்தியமற்றது ஆகிவிடுகிறது. கடவுள் மீதான நேர்மையான அன்பும், ஒரு குருநாதரின் உதவியும்தான் இதற்கான ஒரே தீர்வு.

துறவி ஸபீர் ஸாஹேபின் அன்பு மற்றும் நம்பிக்கை பற்றிய ஒரு கதையை பாபா எடுத்துரைத்தார்:

ஈரானில் ஸபீர் (SABIR) என்ற வாலி வாழ்ந்து வந்தார். கடவுள் மீதான அன்பிலும் நம்பிக்கையிலும் அவர் மிகவும் உறுதியாக இருந்தார், ‘அல்லா எது செய்தாலும் அது நன்மைக்கே’ என்று கூறிவந்தார். பெரும் செல்வந்தரான அவருக்கு ஏழு மகன்கள் இருந்தனர். அவர் ஒரு செழிப்பான வணிகத்தை நடத்தி வந்த வேளையில், பிறரின் பொறாமைக்கு ஆளானார். அவருக்கு அழகான மனைவி, ஏழு மகன்கள் மற்றும் செல்வங்கள் இருந்ததால், கடவுள் செய்தது அனைத்தும் அவருடைய நன்மைக்காகவே என்று சொல்லாமல் இருக்க எந்தக் காரணமும் இல்லை என்று இயற்கையாகவே மக்கள் கூறிவந்தனர். அப்போது அவருக்குத் திடீரென தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு, அனைத்தையும் இழந்த போதிலும், ‘கடவுள் எதைச் செய்தாலும் அது நன்மைக்கே’ என்று திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார். ஆயினும்கூட, குடும்பத்தை நடத்துவதற்கான வருமானத்தை ஈட்ட அவருக்கு ஏழு மகன்கள் இருந்த நிலையில், பாதகமான சூழ்நிலையிலும், அவர் ஏன் இதை மீண்டும் மீண்டும் மொழியக்கூடாது என்று மக்கள் அவரிடம் பொறாமையில் குறை கூறும் தொனியில் எடுத்துரைத்தனர்.

சிறிது காலத்திற்குப் பின்னர், அவரது மகன்கள் திடீரென உயிரைத் துறந்த போதிலும், அவர் கடவுள் மீதான தனது அன்பிலும் நம்பிக்கையிலும் உறுதியாக இருந்து, அதையே மொழிந்து வந்தார். அவரது செல்வம் மற்றும் சந்ததிகள் அனைத்தையும் இழந்து, அவர் தனது பொறுப்புகளிலிருந்து விடுபட்டதால், அவர் ஏன் அவ்வாறு சொல்லாமல் இருக்கக்கூடாது என்று மக்கள் மீண்டும் கூறத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து ஸபீர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, ஊரை விட்டு வெளியேறும் சூழ்நிலை உருவானது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஸபீர், ‘கடவுள் எதைச் செய்தாலும் அது நன்மைக்கே’ என்று கூறிக்கொண்டே இருந்தார். இதைப்

**பார்த்த நகரவாசிகளின் கண்கள் திறக்கப்பட்டன, எல்லா சூழ்நிலைகளிலும், அவர் தனது நம்பிக்கையில் பாறை போல் உறுதியாக இருந்ததைக் கண்டனர். பின்னர் அவர்கள் அவரை ஸபீர்** (பொறுமையின் சிகரம்) **என்று அழைத்து, மிகவும் நேசிக்கத் தொடங்கினர்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"எவர் ஒருவர் மீது கடவுள் அருளைப் பொழிகிறாரோ, அவர் சின்னாபின்னமாக்கப் படுகிறார்!"**

குமார் குட்டிக்குதிரை ஷீபாவை பாபாவிடம் கொண்டு வந்தார்; ஜூன் 27 அன்று, பாபா ஒரு மானைக் கொண்டுவருமாறு கூறினார். அந்த மானையும் சிறிது காலம் செல்லமாக வளர்த்து வந்தனர். ஒரு கட்டத்தில், பாபா, குமாருக்கு விளக்கினார்:

**சமீபத்தில் நான் மிகவும் வெறுப்பாக உணர்கிறேன் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அது அதிகரித்துக்கொண்டே போகும். நான் இதையெல்லாம் ஒரு நோக்கத்தைக் கருத்தில் கொண்டு செய்கிறேன். ஆனால் இதில் ஒரு விஷயம் இருக்கிறது: ஜூலை எனக்கு மிகவும் இன்றியமையாததாகவும், இடர்பாடுகள் நிறைந்ததாகவும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதர அனைத்தும் வேடிக்கை நாடகம். உங்கள் இடுப்பில் லங்கோட்டியை இறுக்கமாகக் கட்டிக்கொண்டு, ஜூலை 10ஆம் தேதிக்குள், முழுத் தயார் நிலையில் இருங்கள். ஷீபாவை வாங்கும் பணியை 100 சதவீதம் நிறைவேற்றி விட்டீர்கள். குதிரை இப்போது இருந்தாலும், இறந்தாலும் எனக்கு முக்கியமில்லை. நான் அறிவுறுத்தியபடி எனது விருப்பத்தை நிறைவேற்றியதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**ஆக்குவதும் அழிப்பதும் எனது முறை. நாளை உங்களிடம் குதிரையை விற்கச் சொன்னால், நீங்கள் அதை விருப்பத்துடன் செய்ய வேண்டும். அதை ஒருவருக்கு வழங்கச் சொன்னால், அதையும் நீங்கள் மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். அதை வாங்குவதற்கு நீங்கள் செலவு செய்த அனைத்து உழைப்பும் வீண் என்று நீங்கள் நினைக்கக்கூடாது. நீங்கள் வாங்காமல் இருந்திருந்தால், நான் எப்போதும் இதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்திருப்பேன்.**

**எனது வழிகளும் முறைகளும் தனித்துவமானது. ஒரு விஷயம் முடிந்துவிட்டால், அதன் பின்னர் என்ன நடந்தாலும் நான் கவலைப்படுவதில்லை. எனவே, நீங்கள் என்னை மகிழ்விக்க விரும்பினால், நான் சொல்வதைச் செய்யுங்கள். பாபா ஏன் இதைச் செய்கிறார், ஏன் இதை விரும்புகிறார் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. ஏன் என்ற எண்ணம் எப்போதேனும் உங்கள் மனதில் தோன்றினால், முழு விஷயமும் பாழாகிவிடும்!**

ஹமிர்பூரைச் சேர்ந்த ஸிங் (SINGH) என்ற இளைஞர் ஆந்திர தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொண்டார், ஆனால் அவரது பெற்றோர் பாபாவிற்கு எதிராக இருந்தனர். வீட்டை விட்டு வெளியேறி, 1953 ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை

டெஹ்ரா டூனில் இருந்த பாபாவிடம் அவர் வந்தார். அவர் வருவதற்கு முன்னர், அவரது தந்தையிடமிருந்து வந்த தொலைத்தந்தியில், ஸிங்கைத் திரும்ப அனுப்புமாறு பாபாவிடம் கேட்டுக் கொண்டார்.

**"ஏன் இங்கு வந்தீர்கள்?"** பாபா வினவினார்.

"நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்," இளைஞர் பதிலளித்தார்.

**"அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், இப்போது சொல்லுங்கள், நீங்கள் எனது விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா?"**

"நிச்சயமாக, எதுவாயினும்!" அவர் பதிலளித்தார்.

**"அப்படியானால், நான் உங்களை வீட்டிற்குத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன், ஒவ்வொரு நாளும் உங்கள் பெற்றோரின் கால்களில் தலைவணங்கி, அவர்கள் சோர்வடைந்து, உங்களிடம் 'போதும் நிறுத்து' என்று சொல்வதுவரைத் தொடருங்கள்"** என்றார்.

"ஆனால் அவர்கள் உங்களை அவதூறாகப் பேசுகிறார்கள், பாபா!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

**"அவர்கள் அவதூறாகப் பேசுவதன் மூலம், என்னை நினைவில் கொள்கிறார்கள், என் மீதான உங்கள் அன்பையும் சோதிக்கிறார்கள், நீங்கள் பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் அணுகுமுறையை சகித்துக்கொண்டு, மேலும் உங்கள் அன்பைக் காட்டுவதன் மூலம், நீங்கள் அவர்களை வெல்வீர்கள். நான் சொல்வதைச் செய்யுங்கள்; வீட்டிற்குச் சென்று உங்கள் பெற்றோருக்கு சேவை செய்யுங்கள்."**

"ஆனால் நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்," இளைஞர் மன்றாடினார்.

பாபாவின் பங்களாவிற்கு எதிரே இருந்த ஒரு மரத்தின் கீழ் தினமும் அமர்ந்திருந்த ஹரிசந்த் கோச்சாரை அழைத்து வருவதற்காக, பாபா அலோபாவை அனுப்பினார். அவ்வப்போது, பாபா அவரை அழைப்பதுண்டு, ஆனால் மீண்டும் மீண்டும் பாபாவை சந்தித்து, தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அவர் அறிவுறுத்தப்பட்டார். அவர் வருகையில், பாபா, கோச்சாரைப் பாராட்டி, **"ஹரிசந்த் கோச்சாரைப் பாருங்கள்! எவ்வளவு கீழ்ப்படியும் குணம் படைத்தவர்! நான் எதைச் செய்யச் சொன்னாலும், உடனே செய்கிறார்!"**

பாபா, கோச்சாரிடம் ஒரு பாடலைப் பாடக் கூறியதும், அவர் பாடினார். அதன் பொருள் பாபா என்பது மனம்; பாபா உடல்; மேலும் பாபாவைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவருடைய விருப்பம் எல்லாவற்றிலும் இருக்கிறது, அதை நிறைவேற்றுவதே வாழ்வின் ஒரே தர்மம்.

பாபா, ஸிங்கிடம் கேட்டார், **"அவர் பாடியதை நீங்கள் கேட்டீர்களா? அவர் பாடிய பாடலின்படி கோச்சார் நடந்துகொள்கிறார்; அதனால்தான் அவர் எனக்கு மிகவும் பிரியமானவர். நான் அவரை இங்கு வர வேண்டாம் என்று கேட்டுக் கொண்டால் அவர் வருவதில்லை, அவர் என் விருப்பப்படியே செயல்படுகிறார்."**

கோச்சாரை நோக்கிய பாபா, "**எனது வழக்கறிஞராக, ஸிங்கிற்கு சில அறிவுரைகளைக் கூறுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

எவருக்கும் அறிவுரை சொல்லும் நிலையில் நான் இல்லை என்று கோச்சார் கூறினார்.

"**சரி, அப்படியானால் நான் சொல்வதை ஸிங்கிடம் எடுத்துக் கூறுங்கள்**" என்று பாபா கட்டளையிட்டார்.

பாபா எழுத்துப்பலகையில் கூறியதை பின்னர் எரச், கோச்சாருக்கு எடுத்துரைக்க, அவர் ஸிங்கிடம் அவற்றைத் தெரிவித்தார். "**பாபாவின் நட்பு உங்களுக்கு ஒரு துன்புறுத்தலாக இருக்கும்**!" பாபா முதன் முதலாக எடுத்துரைத்தார்.

"ஒருபோதும் இல்லை!" இளைஞர் எதிர்ப்பு தெரிவித்தார்.

"**மெஹர் பாபாவை நேசிக்கும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்**!" இது பாபாவின் இரண்டாவது ஆணையாக இருந்தது.

"நான் எனது இறுதி மூச்சை விடும்போது மட்டுமே!" ஸிங் பதிலளித்தார்.

பாபா, கோச்சாரிடம் பின்வருவனவற்றைத் தெரிவிக்கும்படி கூறினார்: "**ஹரிசந்த் கோச்சார், பாபாவை நேசிக்கிறார். பாபா கூறுவதைப் பின்பற்றுகிறார். பாபா முஸோரியில் இருந்தபோது அவர் அங்குச் செல்ல தடை விதித்ததால், அவர் செல்லவில்லை. பாபா எங்கும் இருக்கிறார் என்பதால், அவருக்குத் தெரியும், தூரத்திலிருந்து கூட பாபாவை நேசிக்க முடியும். இன்று பாபா அவரிடம், அவர் இங்கு வரக்கூடாது என்று கூறுகிறார், எனவே, அவர் நிச்சயமாக வரமாட்டார்**!"

மண்டலி அவர்களின் சிரிப்பை அடக்கமுடியவில்லை, ஏனெனில் பாபாவை சந்திக்க, கோச்சார் உண்மையில் முஸோரிக்குச் சென்றிருந்தார். மேலும் பாபாவின் கட்டளைகளை மீறி, டெஹ்ரா டூனுக்கு வந்து பாபாவைத் தொந்தரவு செய்தார். ஆனால் கோச்சார், மறுத்து ஒரு வார்த்தை கூட பேசாமல் அமைதியாக இருந்தார்.

பாபா, இளைஞனுக்கு சில அறிவுரைகளை வழங்கி, அவரை ஹமிர்பூருக்குத் திருப்பி அனுப்பினார். அன்றைய தினம் பாபா, பக்தி மிக்க அவரது குடும்பத்தினரைப் பார்க்க, கோச்சாரின் இல்லத்திற்குச் சென்றார். அவரது மூத்த மகள் ராஜ், குறிப்பாக வெகுவான பக்தியுடன் காணப்பட்டார். குடும்பத்தினர் சில பாடல்களைப் பாடியது பாபாவை மகிழ்வித்தது. பாபா அவர்களின் அன்பில் பெரு மகிழ்ச்சியடைந்தார், மேலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மண்டலியின் இல்லத்திற்குச் செல்ல கோச்சார் அனுமதிக்கப்பட்டார்.

பாபா, அடுத்ததாக ஹெலனின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். ஹெலனின் குடும்பம் கடினமான காலகட்டங்களைக் கடந்து சென்றது, ஏனெனில் அவர்கள் பாகிஸ்தானில் அனைத்து சொத்துக்களையும் இழந்து, பிரிவினைக்குப் பின்னர், இந்தியாவிற்குத் தப்பி ஓடினர். (கோச்சாரும் பாகிஸ்தானிலிருந்து அகதியாக வந்தவர்.) முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலான

பிரிவினையானது, எல்லையின் இருபுறமும் வாழ்ந்த மக்களுக்கு மிகுந்த துன்பத்தை ஏற்படுத்தியது; மாபெரும் படுகொலையே நடந்தது, பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் வன்முறையில் கொல்லப்பட்டனர், பலர் வீடுகளை இழந்து அதீத துயரத்தில் தள்ளப்பட்டனர். மக்கள் மதத்தின் பெயரால் வெறியர்களாகி, மிக மோசமான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.

ஹெலனின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி, பாபா அங்கிருந்து புறப்பட்டு, கேக்கி நலவாலாவின் இல்லத்திற்குச் சென்று, குடும்பத்தாரை சந்தித்துவிட்டு திரும்பிச் சென்றார். காரில் செல்லும்போது, ஹெலனின் மகளும் கோச்சாரின் மகள் ராஜ் போலவே அவரை மிகவும் நேசிப்பதாக, பாபா கூறினார். பின்னர் அவர் கேலி செய்தார், "**நான் ஹரிசந்த் கோச்சாரின் தந்தையாக இருக்கலாம், மேலும் அவரது மகள் ராஜின் உண்மையான தந்தையாகவும் இருக்கலாம். எனக்கு எண்ணிலடங்கா பல குழந்தைகள் உள்ளனர்; ஆனால் அவர்களில் சிலர் விஷமக்கார குழந்தைகள், அதாவது எல்சா, கிஷன், ஹரிசந்த் போன்றவர்கள்!**"

1953 ஜூன் 30 அன்று டாக்டர் நீலு, பாபாவிடம் புகார் செய்தார், "டான் தனது வெளிநாட்டு மருத்துவ இதழுக்கான சந்தாவை நிறுத்த இருக்கிறார், இது எனக்குத் தேவை; சமீபகால மருத்துவ முன்னேற்றங்களை அறிந்துகொள்வது அவசியம் என நீங்கள் என்னிடம் கூறியுள்ளீர்கள். அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவரிடம் கூறுங்கள்."

பாபா பதிலளித்தார், "**நாம் ஹாஃபீஸின் ஆலோசனையைக் கேட்டு நீலுவின் விருப்பம் நிறைவேறுமா என்று பார்ப்போம்.**" அலோபாவிடம் பாபா, 'திவான்-இ-ஹாஃபீஸை' (DIVAN-E-HAFIZ) எடுத்து வரக் கூறி, எதேச்சையாக ஒரு பக்கத்தைத் திறக்கச் சொன்னார். அலோபா பாரசீக மொழியில் வாசித்ததை பாபா பின்வருமாறு மொழிபெயர்த்தார்:

**சொர்க்கத்தின் தோட்டத்திலிருந்து நான் பூக்களைப் பறிப்பேன்**
**மேலும் எனது அன்பிற்குரியவருடன் ஒன்றாவேன்!**

**நான் பல யுகங்கள் உனது அன்பனாக இருந்தேன்;**
**இப்போது ஒரு நம்பிக்கையின் செய்தியை**
**வழங்கும் நேரத்தைக் கண்டேன்!**

**நீங்கள் நம்பவில்லை என்றால், சீனாவின்**
**மாபெரும் ஞானியைக் கேட்கலாம்!**
**விசுவாசம் மற்றும் பக்தியுடன் இருப்பது**
**அனைவருக்கும் இல்லாமல் போகலாம்!**

"**நீலுவின் ஆசை நிறைவேறும் போலிருக்கிறது**" என்று பாபா குறிப்பிட்டார்.

ஆனால் டாக்டர் டான், “பாபா, மருத்துவத்தைப் பற்றியோ அல்லது ஒரு பத்திரிகையைக் குறித்தோ ஹஃபீஸ் எதுவும் கூறவில்லையே” என்ற கருத்தை எழுப்பினார்.

பாபா, **“எப்படியும், 1953 இறுதி வரை, பத்திரிகையை நிறுத்த வேண்டாம்”** என்று கூறினார்.

“தொடக்கத்தில் நீங்கள் (மருத்துவ வசதிகளை நிறுவுவது பற்றி) பிரமாண்டமான திட்டங்களை வகுத்தீர்கள்; ஆனால், அப்படி எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை” என்று டான் குறிப்பிட்டார்.

சிரித்துக்கொண்டே பாபா, அலோபாவிடம் சைகையால் தெரிவித்தார், **“இந்த இரண்டு டாக்டர்களும் எப்போது என்னைத் தனியாக விட்டுச் செல்வார்கள் என்று ஹஃபீஸிடம் மீண்டும் கேளுங்கள்!”**

அலோபா புத்தகத்தின் ஒரு பக்கத்தைத் திறந்து படித்தார்:

**“அது அவ்வாறு விதிக்கப்பட்டது, நிச்சயம் கடந்து செல்லும்.**
**இப்போது செய்யவில்லை என்றால், அது இல்லை ஒருபோதும்!”**

“ஆனால் மருத்துவம் அல்லது மருந்தகம் குறித்த எந்த குறிப்பும் இதில் இல்லையே, பாபா,” என்று டாக்டர் டான் சுட்டிக்காட்டினார்.

**“நேரம் விரைவில் வரும்”** என்று பாபா பதிலளித்தார்.

“ஆனால் அது உண்மையில் எப்போது வரும்?” டான் கேட்டார்.

அப்போது பாபாவே புத்தகத்தைத் திறந்து அலோபாவிடம் படிக்கக் கொடுத்தார்:

**“வெளிறிய முகம், தலை முதல் கால் வரை பல நோய்!**
**இது மருந்து தேவை என்பதற்கான எச்சரிக்கை!”**

டான் சிரித்தார்; பத்திரிகைக்கான அவரது சந்தா தொடர்ந்தது.

டாக்டர் டான் திறமையும், விடாமுயற்சியுமுள்ள மருத்துவராக இருந்தார், ஆனால் ‘புது வாழ்வு’க்குப் பிறகு, பாபா அவருக்கு எந்தக் குறிப்பிட்ட கடமையையும் வழங்காததால், நேரத்தைச் செலவிட கடினமாக இருந்தது. பாபாவின் உள்ளார்ந்த பணிகள் அவருக்குச் சிறந்தவையாக இருந்தாலும், வெளியளவில் டான் அமைதியின்றி காணப்பட்டார். எந்த ஒரு பணியிலும் ஈடுபடாமல் இருப்பது அவருக்குத் தண்டனையாகத் தோன்றியது.

பாபாவின் எழுத்துப்பலகையை வாசிப்பதும், ஆங்கிலத்தில் கடிதப் பரிமாற்றத்தை கவனிப்பதும் எரச்சின் கடமையாக இருந்தது; பெண்டு குடியிருப்பின் மேலாளராக இருந்தார்; விஷ்ணு பஜார் பணிகளைச் செய்து, வரவு செலவு கணக்குகளை கவனித்துக் கொண்டிருந்தார்; குஸ்தாஜிக்கு வேறு எந்தக் கடமையும் இல்லாமல் மௌனம் கடைப்பிடித்தார்; கைக்கோபாத் கடவுளின் பெயரை (தினமும் ஒரு லட்சம் முறை) திரும்பத் திரும்ப மொழிந்து பிரார்த்தனை செய்தார்; அலோபா மண்டலியின் உணவு தயாரிப்பதை மேற்பார்வையிட்டார்; பைதூல் பயணம் மேற்கொண்டு, மஸ்துகளைக் கண்டுபிடித்து கொண்டு வந்தார்; கிருஷ்ணா இரவு கண்காணிப்பாளராக பணிபுரிந்தார்; டாக்டர் நீலு மண்டலியின் மருத்துவர்; அதே வேளையில் டாக்டர்

டானுக்கு குறிப்பிட்ட கடமை எதுவும் இல்லை. இருப்பினும், இது மண்டலி செய்த வெவ்வேறு பணியைப் போதுமான அளவு விவரிக்கும் அளவுக்கு இல்லை. மேலும் அதிகமான பணிகள் தினசரி வந்த வண்ணம் இருந்தன, மண்டலி எதையும் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாட்கள் கழிந்தன. ஒவ்வொருவரும் இரவும் பகலும் வேறு வேறு வேலையில் மும்முரமாக இருந்தனர்; உடலளவில் ஈடுபடாதவர்களைத் தவிர இதர அனைவரையும் பாபா மனதளவில் ஆக்கிரமிக்கச் செய்தார்.

பெண்மணிகளில் மெஹரா, மெஹரு இருவரும் பாபாவின் தனிப்பட்ட பணிகளைச் செய்து வந்தனர், அவருடைய உடைகள், படுக்கைகளை சுத்தம் செய்வது போன்ற பல; மணி அயல்நாட்டுக் கடிதப் பரிமாற்றம் மற்றும் தட்டச்சு பணியில் ஈடுபட்டார்; கோஹெர், அவர்களின் மருத்துவராக இருந்ததைத் தவிர, வீட்டு விவகாரங்களை நிர்வகித்து வந்தார்; நாஜா சமையலறையை மேற்பார்வையிட்டார்; மற்றும் ரானோ ஒரு பல்துறை வித்தகராகப் பணிபுரிந்து வந்தார்.

1953 ஜூலை மாதத்தில் மெஹர் பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமெரிக்க காலாண்டு இதழின் முதல் இதழ் வெளியீட்டின் குறியீடாக அமைந்தது, 'தி அவேக்கனர்' (THE AWAKENER) என்ற பெயரில் அமைந்த இந்த இதழ், ஃபிலிஸ் ஃபிரடெரிக் (FILIS FREDERICK) என்பவரால் திருத்தம் செய்யப்பட்டு, வாரன் சி. ஹீலி (WARRAN C. HEALY) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. முதல் இதழின் தலையங்கத்தில், ஃபிலிஸ் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

ஆழ் இதயத்திலிருந்து, அதன் உள்ளுணர்வு மற்றும் அனுபவத்திலிருந்து பேசும்போது, மெஹர் பாபா நமது யுகத்தின் உண்மையான அவதார புருஷர் என்பது மட்டுமல்லாமல், எல்லா காலத்திலும் மிகவும் அசாதாரணமானவர், தனிச் சிறப்பு மிக்கவர் என்பதன் நிரூபணமாகத் திகழ்கிறார்; மனிதகுலம், அதன் முழு பரிணாம வளர்ச்சி மற்றும் மேல் நிலை ஆன்மீகத் தளங்களின் உட்சுழற்சியின் வரலாற்றில் மிக முக்கியமான கட்டத்தில் இருப்பதால், இறை அன்பு மற்றும் கருணையின் வெளிப்பாட்டை இதற்கு முன்னர் ஒருபோதும் கடவுள் அனுமதிக்கவில்லை.

நாம் நேசிக்க வேண்டும் அல்லது அழிய வேண்டும்... மேலும் இந்த இறைமனிதனின் மூலமாக கடவுள் நம் விருப்பத்தை நிறைவேற்ற உதவுகிறார். நாம் அவருடன், அவரை நேசித்து, விழிப்புணர்வை அடையலாம்!

1953 ஜூலை 5 அன்று, பாபா மண்டலியுடன் அமர்ந்திருந்த வேளையில், திடீரென பலத்த மழை பொழியத் தொடங்கியது. "**வீதியில் இருப்பவர்கள் நனைந்திருக்க வேண்டும்**" என்று பாபா குறிப்பிட்டார். வீதியில் எத்தனை பேர் உள்ளனர் என்று பார்த்து வர பாபா, அலோபாவிடம் கூறினார். வீதி காலியாக இருப்பதாக அலோபா அறிவித்தார்; ஆனால் உடல் முழுவதும் நனைந்த வண்ணம், இடுப்பில் லங்கோட்டியும், வேட்டியும் அணிந்த ஒரு நபர் வெளியே நிற்பதைக் கண்டார். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டதற்கு, அந்த நபர்

டெல்லியிலிருந்து மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்ததாக கூறினார். பாபாவின் அறிவுறுத்தலின்படி, பாபா தரிசனம் வழங்குவதை நிறுத்திவிட்டதால், அவர் திரும்பிச் செல்வது சிறந்தது என்று அலோபா அவரிடம் கூறினார். பங்களாவை விட்டு வெளியே சென்றவர், கண்கலங்கி சாலையோரம் நின்று கொண்டிருந்தார்.

அலோபா, பாபாவிடம் இதைத் தெரிவித்ததும், அந்த நபர் உள்ளே வரவழைக்கப்பட்டார். அவர் ஏறக்குறைய நீலுவின் அதே உடலளவில் இருந்ததால், பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், நீலு அவருக்குப் பொருத்தமான சில உலர்ந்த ஆடைகளைக் கொடுத்தார், அவர் குளியலறைக்குச் சென்று, ஆடைகளை மாற்றிவிட்டு வந்ததும் அவருக்கு சூடான தேநீர் மற்றும் ஒரு மாம்பழம் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

பாபா கேட்டார், **“உங்கள் பெயர் என்ன, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?”**

“என் பெயர் ஹக்குமத் ராய் கபில் (HAKUMAT RAI KAPIL), நான் புது டெல்லியில் எழுத்தராகப் பணிபுரிகிறேன்.”

**“உங்களுக்கு என்ன வேண்டும்?”**

“நான் கடந்த இரண்டு வருடங்களாக உங்கள் புத்தகங்களைப் படித்து வருகிறேன், உங்கள் முகவரியை அஹமதுநகரில் வாழும் திரு. ஆதி கே. ஈரானியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இங்கிருந்து முஸோரிக்குப் போகிறேன், பின்பு, ரிஷிகேஷ் மற்றும் ஹரித்வாருக்குச் செல்லவிருக்கிறேன். ஷிவா ஆசிரமத்தில் ஒரு வாரமும், காலி கம்லிவாலாவின் ஆசிரமத்தில் சில காலமும் செலவிட நினைத்துள்ளேன். ஆன்மீகப் பாதையில் பயணிக்கத் தேவையான பயிற்சிகளைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.”

**“உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா?”**

“ஆமாம் நான் திருமணமானவன்.”

**“நீங்கள் உங்கள் மனைவியை நேசிக்கிறீர்களா?”**

“நான் அவரை முன்பு நேசித்தேன், ஆனால் நான் ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்டதால் என் அன்பு குறைந்துவிட்டது. என் மனைவி என்னை மிகவும் நேசிக்கிறார்; ஆரம்பத்தில் எனது ஆன்மீக நாட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், இப்போது அவரே அதன் பக்கம் சாய்கிறார்.”

**“ரிஷிகேஷ், ஹரித்வார் போன்ற இடங்களில் பல ஆசிரமங்கள் உள்ளன, ஆனால் ராமகிருஷ்ணா ஆசிரமத்தில், பக்தி நடைமுறைகள் இதர இடங்களை விட சிறந்தவை. அங்கு நீங்கள் தியானம், யோகா போன்ற பலவற்றைப் பற்றி அறிந்து கொள்வீர்கள், ஆனால் ராமகிருஷ்ணா தனது வாழ்நாளில் இந்தப் பயிற்சிகளைச் செய்யவில்லை! இப்போது சொல்லுங்கள், நீங்கள் ஆன்மீகப் பயிற்சியை விரும்புகிறீர்கள். என்ன வகையான ஆன்மீகப் பயிற்சி? நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.”**

“நான் அவற்றைப் பற்றி புத்தகங்களில் படித்திருக்கிறேன், ஆனால் சுவாசத்தை உள்வாங்கி, வெளிவிடுவது போன்றவற்றை எப்படிச் செய்வது என்று தெரியவில்லை, மேலும் கடவுளின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும். நான் இவற்றைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.”

**“உங்கள் குறிக்கோள் என்ன?”** என்று பாபா கேட்டார்.

“கடவுளுடன் ஐக்கியமாக வேண்டும்!” ஹக்குமத் அழுத்தமாக பதிலளித்தார்.

**“கடவுளுடன் ஐக்கியமாவதற்கான உங்கள் முயற்சிகளில், யோகாவைப் புரிந்து கொள்வதன் மூலம், உங்கள் நோக்கத்தை நீங்கள் குறைத்துக் கொள்வீர்கள். சுவாசத்தை எப்படி உள்வாங்குவது, எப்படி தியானம் செய்வது, அமருவதற்காக எந்தவிதமான பாணியைக் கடைப்பிடிப்பது - இவை அனைத்தும் பயிற்சிகள். வீரர்கள் மட்டுமே கடவுளை உணர முடியும்; அவரைச் சென்றடையும் பாதை முற்றிலும் வித்தியாசமானது. அன்றாட வாழ்க்கையில் நாம் இயற்கையாகவே அவரை அடையப்பெற வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். அதற்கு தியானம் தேவையில்லை. உலகில் உள்ள எண்ணற்ற யோகிகளும் சுவாமிகளும் இதுகாறும் கடவுளை அறியவில்லை. அவர்கள் தியானம், யோகா போன்ற பாதையைப் பின்பற்றுகிறார்கள். பிராணாயம் மற்றும் பிற ஆன்மீகப் பயிற்சிகளை எப்படிச் செய்வது என்று பிறருக்கு வழிகாட்டுகிறார்கள். விமோசனத்திற்கு பதிலாக, இவை அனைத்தும் கடவுளைத் தேடுபவர்களை மேலும் பிணைக்கின்றன. உங்களுக்கு சுதந்திரம் வேண்டும், ஆனால் இவை அனைத்தும் அதிக அடிமைத்தனத்தை உருவாக்குகின்றன. நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் கடவுளை உணர விரும்பினால், அவருக்காக உங்கள் வாழ்க்கையை தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அவருக்காக நீங்கள் உயிரைத் துறக்கத் தயாரா?”** என பாபா வினவினார்.

“நான் தயாராக இருக்கிறேன், நீங்கள் எனக்கு அறிவுறுத்துவதை நான் நிறைவேற்றுவேன்.” ஹக்குமத் பதிலளித்தார்.

**“எனது உத்தரவுகளை 100 சதவீதம் நிறைவேற்ற நீங்கள் தயாராக இருந்தால், வேறு எதுவும் தேவையில்லை.”** ஸ்வாமி பிரேமானந்தாவின் உதாரணத்தை பாபா நினைவு கூர்ந்து, **‘அவர் எப்படித் தன்னிடம் வந்தார், மேலும், ‘தனியாக வர வேண்டும்’ என்ற ஓர் எளிய உத்தரவைக் கூட கடைப்பிடிக்கத் தவறினார்’** என்பதை விளக்கினார்.

இறுதியாக, ஹக்குமத் ராயிடம் பாபா வலியுறுத்திக் கூறினார், **“சுருக்கமாகச் சொன்னால், 100 சதவிகிதம் நேர்மை இன்றியமையாதது. சிறிதளவு பாசாங்குத்தனமும் ஆபத்தானது. நேர்மை என்பது, கடவுளின் எல்லையற்ற நிலையில் இருப்பதைப் போல, நாம் நேர்மையானவர்கள் என்று கடவுளும் உணரும் அளவுக்கு நேர்மையாக இருக்க வேண்டும். ஆன்மீகப் பாதையில், மிகக் குறைந்தபட்ச பாசாங்குத்தனமும்**

பயங்கரமானது, நீங்கள் யோகாவின் முறையான வாழ்க்கையை நடத்த விரும்பினால், ஏதேனும் ஆசிரமத்தில் பயிற்சிக்குச் செல்லுங்கள், துறவிகளிடம் சென்று அவர்களின் வழிகாட்டுதலை நாடுங்கள், ஆனால் நீங்கள் இறை உணர்வை அடைய விரும்பினால், அதற்காக உயிரைத் துறக்கத் தயாராக இருந்து, எனது கட்டளைகளை 100 சதவீதம் கடைப்பிடியுங்கள்."

ஹக்குமத் ராய், "என்னால் கடவுளை உணர முடியாவிட்டால், அந்த ஒழுக்கமான வாழ்க்கை முறை எனக்கு வேண்டாம். அவரை அடைவதே எனது ஒரே நோக்கம்" என்றார்.

பாபா கூறினார், "கடந்த கால சத்குருக்கள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் தியானத்தில் அமருமாறு ஆன்மீக ஆர்வலர்களுக்கு ஒருபோதும் அறிவுறுத்தவில்லை. அவர்கள் கடவுளை நேசிக்கவும், பரிபூரண குருநாதருக்குக் கீழ்ப்படியவும் கற்றுத் தந்தனர், ஆனால் இது மிகவும் கடினம். அதனுடன் ஒப்பிடும்போது, ஒருங்கிணைந்த யோக வாழ்க்கை எளிதானது. தியானம் நல்லது, அது மனதை அமைதிப்படுத்துகிறது. துறவிகள், பிறருக்கு வழிகாட்ட முயலும் மேல்நிலையை அடைந்த ஆன்மாக்கள். உண்மையான புனிதர்களின் வாழ்க்கை பிறருக்கானது, அவர்கள் பிறரை தூய்மையின் ஆதாரமான கடவுளை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள், ஆனால் கடவுளை அடைய, ஒருவர் உயிரைத் துறக்க வேண்டும். இப்போது இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்: ஒருங்கிணைந்த யோக வாழ்க்கை, அல்லது இறை-உணர்தல். இரண்டாவது கூறிய இறை உணர்வை அடைய நீங்கள் என்னை 100 சதவிகிதம் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்தால், நான் உங்களைத் தலைவணங்குவேன்!"

"நான் உங்கள் வழிமுறைகளைப் பின்பற்றுகிறேன்," என்று ஹக்குமத் பதிலளித்தார்.

"அப்படியானால் கேளுங்கள். முஸோரிக்குச் சென்று உங்கள் குடும்பத்துடன் இரண்டு நாட்கள் அங்கேயே இருங்கள். அங்கிருந்து மீண்டும் டெஹ்ரா டூனுக்கு வந்து ஸந்த் மங்கட் ராம் அல்லது ஸந்த் ஈஷ்வர் ஸிங்கை தரிசனம் செய்யுங்கள். அங்கே தங்கி இருக்க வேண்டாம்; தலைவணங்கியதும் உடனடியாகப் புறப்படுங்கள். அவர் உங்களை அமரச் சொன்னால் தரிசனத்திற்காக மட்டுமே வந்ததாகக் கூறுங்கள்.

"அதைத் தொடர்ந்து, சுவாமி சிவானந்தா, சுவாமி ராம் கிருஷ்ணா மற்றும் பிற மேல்நிலை துறவிகளைப் பார்க்க ரிஷிகேஷுக்குச் செல்லுங்கள். அவர்களையும் தலைவணங்குங்கள், ஆனால் அங்கேயும் தங்க வேண்டாம். மேலும் 'பஜன்' ஆசிரமத்தில் வாழும் நீல்கந்த்வாலா என்று அழைக்கப்படும் மஸ்தை சந்தித்து தலைவணங்குங்கள்; இவ்வாறு 101 சாதுக்களின் பாதங்களைத் தொட்டு வணங்குங்கள். .

"ரிஷிகேஷிலிருந்து ஹரித்வாருக்குச் சென்று, அங்கும் 101 சாதுக்களைத் தலைவணங்குங்கள். இதையெல்லாம் செய்யும் போது, எனது

**உத்தரவின்படிச் செய்வதாக எவரிடமும் சொல்ல வேண்டாம். நான் கூறியதற்கிணங்க அனைத்தையும் செய்து முடித்ததும், எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அதன் பின்னர், உங்கள் வேலையிலிருந்து விடுப்பை நிறைவு செய்து, டெல்லிக்கு திரும்பிச் சென்று, நான் உங்களை அழைக்கும்போது, அனைத்தையும் விட்டுவிட்டு, 100 சதவீதம் எனக்குக் கீழ்ப்படிவதற்குத் தயாராகுங்கள். கடைசியாக, நான் உங்களை அழைப்பதற்கு முன்னர் உங்கள் மனைவியை முடிந்தவரை நேசிக்க முயற்சி செய்யுங்கள்."**

நேர்காணலின் முடிவில், ஹக்குமத் ராயை, பாபா சைகையால் அருகில் அழைத்து, அவருக்கு சில திராட்சைகளை பிரசாதமாக வழங்கினார். ஹக்குமத் ராய், பாபாவின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அழைப்புக்காகக் காத்திருந்தார். காத்திருப்பது ஒன்றே மிகச் சிறந்த ஆன்மீகப் பயிற்சியாக இருந்தது, அது அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது! அவர் எப்போதேனும், ஏதாவது சிறப்பு நிகழ்ச்சிகளின் போது பாபாவிடம் வருவதை வழக்கமாகக் கொண்டாலும், 'அழைப்பு' என்பது தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது. ஒரு நாள், ஹக்குமத் ராயின் இதயம் இறைப்பெருங்கடலுக்காக மட்டுமே தாகத்தைக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில், அதற்கான தயார்நிலையை அடைந்து, அழைப்புக்கு செவி சாய்க்கும்.

அதே நாளில், 1953 ஜூலை 5 அன்று, நாக்பூரின் ராம்தாஸ் சௌராசியா (RAMDAS CHAURASIA) தனது மகன்கள் ஷங்கர்லால் (SHANKARLAL), கணேஷ்லால் (GANESHLAL) ஆகியோருடன் டெஹ்ரா டூனுக்கு வந்தபோது, அவர்களும் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். ஷங்கர்லாலின் திருமணம் குறித்து ராம்தாஸுக்கு பாபா அறிவுரைகளை வழங்கினார். உரையாடலின் போது, ராம்தாஸ், பாபாவிடம் ஜபம் செய்வதற்கான (கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது) சரியான வழி முறைகளைக் கேட்டார். அதற்கு பதிலளித்த பாபா கூறினார்:

**இரவும் பகலும் நீங்கள் சுவாசிக்கிறீர்கள், ஆனால், நீங்கள் அதை எப்போதாவது நினைத்துப் பார்ப்பதுண்டா? இரவில் நீங்கள் தூங்கும் போதும், அதை நினைத்துப் பார்க்காத போதும், உங்கள் சுவாசம் 24 மணி நேரமும், தொடர்ந்து இயற்கையாகவே நிகழ்கிறது. இதே முறையில் ஜபம் செய்யுங்கள்; உண்ணும் போதும், அருந்தும் போதும், அமர்ந்தும், நடந்தும், பேசும் போதும் - எல்லா நேரத்திலும் தன்னிச்சையாக நிகழும் வகையில் அதைச் செய்யுங்கள் - நாளடைவில் அது இயற்கையான பழக்கமாகிவிடும்.**

**இந்தப் பழக்கத்தை உருவாக்க, முதலில் நீங்கள் தினமும் அரை மணி நேரம் உங்களுக்கு மிகவும் பிரியமான கடவுளின் நாமத்தை, திரும்பத் திரும்ப மொழிய வேண்டும், மனரீதியாக மீண்டும் மீண்டும் செய்வது இயற்கையான ஒரு பழக்கமாக மாறும் வரை, நேரத்தைப் படிப்படியாக அதிகரித்து, 24 மணிநேரம் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். கடவுளுக்கு நூற்றுக்கணக்கான மற்றும் ஆயிரக்கணக்கான பெயர்கள் உள்ளன. எளிதான ஒன்றைத் தேர்ந்தெடுத்து,**

ஒவ்வொரு முறையும், மூச்சை உள்ளிழுக்கும் போதும், மீண்டும் மீண்டும் அதைச் செய்யவும். அதற்காக, எந்தக் குறிப்பிட்ட முறையிலும் அமர்ந்து செய்யவேண்டிய தேவையில்லை.

இந்தப் பழக்கம் உங்களை எப்பொழுதும் கடவுளின் நாமத்தை உச்சரிக்க வைக்கும் - உண்ணும் போது, பணிபுரியும் போது, சிறுநீர், மலம் கழிக்கும் போது இது போன்ற பல. நீங்கள் அவருடைய பெயரை உச்சரிக்க மறந்துவிட்டால், உங்கள் நினைவுக்கு வந்ததும் உடனடியாக அதைத் தொடருங்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட கடமை என்று நினைத்து இதைச் செய்யுங்கள். நீங்கள் எப்போதேனும் அவருடைய பெயரை உச்சரிக்க மறந்துவிட்டால் கவலைப்பட வேண்டாம். உங்கள் எண்ணங்கள் வேறு பாதையில் ஓடத் தொடங்கினாலும், அவற்றை நிறுத்திவிட்டு, அவருடைய நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழியுங்கள். இது, உங்களுடன் ஒரு நிலையான பழக்கமாக மாறும்போது, இதர சிந்தனைகள் வந்தாலும் கூட, நீங்கள் உங்கள் சுவாசத்தை அறியாமல் இருப்பது போல, மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்படும், மேலும் நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்பதை உணர மாட்டீர்கள்.

நீங்கள் சுவாசத்தை உள்வாங்கும்போதும், வெளிவிடும்போதும் பிராணாயாமத்தில் செய்வதைப் போல் ஒரே பெயரை உச்சரிக்க வேண்டாம். இயற்கையான முறையில் நான் விளக்கியபடி சுவாசத்தை உள்வாங்கும்போது மட்டும் இறை நாமத்தை மீண்டும் உச்சரிக்கவும், எந்தப் பெயரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் - என்னுடையது அல்லது வேறு எவருடையது - ஆனால் சுவாசத்துடன் அதற்கு எந்த தொடர்பும் இல்லை.

அப்படி இறை நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது உங்களுக்குப் பெரிதும் பயனளிக்கும், அதில் எந்தத் தீங்கும் இல்லை. நீங்கள் எனது பெயரை மீண்டும் மீண்டும் அன்புடன் உரைத்தால், நீங்கள் கடவுளாக மாறலாம். மறுபடியும் சொல்கிறேன், பிராணாயத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை; நான் உங்களுக்குக் காட்டிய முறையைப் பின்பற்றுங்கள். கடவுளின் பெயரை எப்படி உரைப்பது என்று நீங்களே முடிவு செய்திருந்தால் அது வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால் இப்போது நான் உங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதால், நீங்கள் அதன்படி செயல்பட வேண்டும்.

நீங்கள் என் பெயரை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. 'ராம்' நாமத்தை உச்சரித்தாலும் பரவாயில்லை, ராமர் யார் என்று தெரியுமா?

சௌராசியா பதிலளித்தார், "அவர் ஆதிகால புருஷர் என்பதும், யுகம் யுகமாக இப்பூவுலகில் பிறந்தவர் என்பதும் மட்டுமே எனக்குத் தெரியும்."

பாபா விளக்கினார்:

ராமருக்கு நான்கு நிலைகள் உள்ளன.

பராத்பர் பரபிரம்ம நிலை (THE STATE OF PARATPAR PARABRAHMA): அனைத்திற்கும் அப்பாற்பட்ட இந்நிலையில், கடவுள் (பரமாத்மா, PARAMATMA) முற்றிலும் சுதந்திரமாக இருக்கிறார். இந்த நிலையில் அவரை கடவுள் என்று கூட அழைக்க முடியாது. இதுவே ஆணிவேர், அடிப்படை, ஆதாரம், ஆனால் அது பயன்படுத்தப்படவில்லை. இது ஒரு முக்கியமான நிலை.

பரபிரம்ம நிலை (THE PARABRAHMA STATE): இது கடவுளின் இரண்டாவது முக்கியமான நிலை. இந்நிலையில், கடவுளின் அனைத்து பண்புகளும் உள்ளன. அது எல்லையற்ற பேரின்பம், எல்லையற்ற அழகு, எல்லையற்ற அன்பு நிறைந்தது; அது முழுமையான (தெய்வீக) உணர்வு நிலை. இது, முதல் நிலையை உள்ளடக்காதது - அதாவது கடவுளின் மயங்கிய நிலை. மேலும் இதை பரமாத்மா நிலை என்று சொல்வதும் சரியாக இருக்காது.

ஜீவாத்மா நிலை (JIVATMA STATE): இது கடவுளின் மூன்றாவது நிலை, நீங்கள் அனைவரும் இங்கே, இந்த நிலையில் இருக்கிறீர்கள் - அதே எல்லையற்ற இறைப்பெருங்கடலின் துளிகள்.

ஷிவாத்மா நிலை (SHIVATMA STATE): ஜீவாத்மா பரமாத்மாவில் இணையும்போது, அவன் ஷிவா ஆகிறான். நீங்கள் அனைவரும் துளிகள். பரமாத்மா என்பது பெருங்கடல். இந்த ஜீவாத்மாவாகிய குமிழி வெடித்து பெருங்கடலுடன் இணையும் போது, அது ஷிவாத்மாவாக மாறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது பரிபூரண குருநாதர் அல்லது மஜ்ஜூப் (MAJZOOB) நிலை. இந்த ஆன்மா தனது உயர்ந்த தெய்வீக நிலையிலிருந்து ஒருபோதும் வீழ முடியாது. இது ஏழாவது ஆன்மீகத் தளத்தின் நிலை (பிரம்ம புவன் - BRAHMA BHUWAN) மற்றும் ஷிவா நிலை (SHIVA STATE) என்று அழைக்கப்படுகிறது. ஆனால் ஷிவாத்மா உலகத்தைக் குறித்த முழுமையான உணர்வை மீண்டும் பெறும்போது, அவர் சத்குரு என்று அழைக்கப்படுகிறார்.

இந்த நான்காவது நிலையின் 'நித்திய-உணர்வுடன் கூடிய பரமாத்மா', மாயையின் ஆதிக்கம் உச்ச நிலையில் இருக்கும் வேளையில், யுகம் யுகமாக இப்பூவுலகில் (பௌதீக தளத்தில்) இறங்கி வருகிறார், அவரே 'அவதார புருஷர்' (AVATAR) என்று அழைக்கப்படுகிறார். ராம், கிருஷ்ணா அல்லது புத்தா - எந்த காலத்திலும், எந்தப் பெயரில் அவர் வந்தாலும், அவர் எப்பொழுதும் ஒரே ஏக இறைவனாக இருக்கிறார். சத்குருவிற்கும், அவதார புருஷர், ரஸூல் அல்லது நபிக்கும் இடையே வித்தியாசம் உள்ளது. ஒரு ஜீவாத்மா, ஷிவாத்மாவாக மாறி, அவருடைய தெய்வீக உணர்வுடன் பௌதீக உணர்வைத் திரும்ப அடையப் பெறும்போது, அவர் சத்குரு என்று அழைக்கப்படுகிறார் - அதாவது ஒரு மனிதன் கடவுளாக மாறுவது, அவரை 'மனித-கடவுள்' (MAN-GOD) என்று அழைக்கலாம்.

அவதார புருஷர், பரிணாம அல்லது மறுபிறவி செயல்முறைகளை கடந்து செல்ல வேண்டியதில்லை. அவர் சித்த புருஷர் (THE ANCIENT ONE, ஆதி புருஷர்). இருவருக்கும் ஒரே சக்தி உள்ளது, ஆனால் இந்தப் பௌதீக

**தளத்தில் மனித குலத்தை மீட்பதற்காக அவர்கள் புரியும் பணியின் கண்ணோட்டத்தில், ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது.**

**ராமர் யார்? நீங்கள் ராம் அல்லது கிருஷ்ணா என்று சொல்லும் போது, உங்கள் கருத்து என்ன?**

அதற்கு பதிலளித்த ராம்தாஸ் சௌராசியா, "சகல வல்லமை படைத்தவர். அவரால் செய்ய முடியாதது எதுவுமில்லை" என்றார்.

பாபா கூறினார், **"ராமரை உள்ளளவில் நோக்கி, மீண்டும் மீண்டும் உங்கள் ஆழ் இதயத்தில் அவர் யார் என்று கேட்டால், நிச்சயமாக பதில் கிடைக்கும். இப்போது நாக்பூருக்குத் திரும்பிச் சென்று உங்கள் ஜபத்தைத் தொடங்குங்கள்."**

இதற்குப் பிறகு, பாபா ஹரிசந்த் கோச்சாரிடம் ஒரு வழக்கறிஞராக இருப்பதைக் குறித்து கேட்டபோது, அவர் தனது நீதிமன்ற சிரமங்களைப் பற்றி பாபாவிடம் தெரிவித்தார். பாபா பொறுமையாக இருக்குமாறு அறிவுரை கூறினார்:

**முழு உலகமும் ஒரு கானல்நீர் போன்றது. நம்பிக்கை என்றும் அழிவதில்லை. கடவுள் எல்லா நம்பிக்கைக்கும் மேலானவர். கடவுளை அடைய ஒரே ஒரு வழி உள்ளது: நம்பிக்கை மறைந்தால், கடவுள் உணரப்படுகிறார்! வேறு வழியில்லை. பல வருடங்கள் தவம் செய்தாலும், விரதம் இருந்து, சமாதி நிலையில் அமர்ந்திருந்தாலும், ஆணிகள் மீது தூங்குவது போன்ற சுய துறவறத்தை கடைப்பிடிப்பதிலும் எந்த பலனும் இல்லை. நம்பிக்கையிலிருந்து விடுபட, நம்பிக்கையைக் கடந்து செல்லும் ஒரே ஒரு மார்க்கம்தான் உள்ளது, அதுவே 'அன்பு', 'நேசம்'. நேசிப்பதற்கு ஒரே வழி தன்னையே மறந்து, குருநாதரின் பாதங்களில் சரணடைவது. பக்தி யோகா, கர்ம யோகா, தியான யோகா ஆகியவை இந்த சுய மறதியைக் கொண்டு வருவதற்காகவே செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பயிற்சி செய்வதில் வெளியளவில் வெற்றி அடைந்தாலும், அதன் மூலமாக எவரும் தன்னை மறப்பதில்லை!**

**ஒரு நாள் உடலைக் கைவிட வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும், ஆனால் ஒவ்வொரு கணமும் அவர்கள் என்றென்றும் வாழப்போவதாக உணர்கிறார்கள்! ஒரு நாள் உடலைக் கைவிட்டாக வேண்டும், எடுத்துக்காட்டாக ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் என்று வைத்துக்கொண்டால், அது மனதிற்குத் தெரியும். ஆனால், அது என்றென்றும் வாழும் என்ற பொய்யான மாயையில்தான் மூழ்கி இருக்கும். ஏன் அப்படி? ஏனெனில் உண்மையில் நாம் அனைவரும் நித்தியமானவர்கள். நீங்கள் இப்போது இளமையாக இருக்கிறீர்கள், 60 ஆண்டுகளுக்குப் பின்னர் இறந்துவிடுவீர்கள் என்று வைத்துக்கொள்வோம், ஆனால் நீங்கள் தொடர்ந்து வாழ்வீர்கள் என்ற உணர்வில் இப்போது இருக்கிறீர்கள். இறக்கும் எண்ணம் உங்கள் மனதில் வரவே வராது. சில நேரங்களில், மனம் உங்களுக்கு**

**நினைவூட்டும் போது மட்டுமே நீங்கள் அதைப் பற்றி நினைக்கிறீர்கள். 24 மணி நேரமும் சாக வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டிருந்தால், அனைத்தையும் அடைய முடியும். 24 மணி நேரமும் இந்த மரணம் பற்றிய எண்ணம் மனதில் இருந்தால், உங்கள் பணி முடிந்து விட்டது என்று அர்த்தம்; அப்போது உங்கள் மனம் இறந்துவிடுகிறது.**

ஹரிசந்தை சுட்டிக்காட்டி, பாபா, சிலேடையாக எடுத்துரைத்தார்: "**மனம் அழியும் வேளையில், 'சந்தர்' (சந்திரன்) மறைந்து, 'ஹரி' (கடவுள்) வருகிறார்! இதன் அர்த்தம் என்னவெனில், நீங்கள் உங்கள் சுயம் அல்ல; 'நீங்கள்' போகும் போது** (மனம் அழிந்து) **கடவுள் வருகிறார்!**"

பாபாவின் கட்டளைப்படி, பாவ் கல்சூரி, 1953 ஜூலை 8 புதன்கிழமை அன்று அவருடன் நிரந்தரமாகத் தங்குவதற்காக டெஹ்ரா டூனுக்கு வந்தார். பாபா அவருக்கு விளக்கினார், "**நான் உங்களுக்கு வழங்கும் முதல் கட்டளை, ஒவ்வோர் இரவும் மண்டலியின் அறைகளுக்குச் சென்று, உரத்த குரலில் 'முட்டாள்களே! ஒன்பது மணிக்குப் பின்னர் அமைதியாக இருங்கள்!' என்று சொல்ல வேண்டும்.**"

பாபா மேலும் கூறினார், "**இது உங்களுக்கு ஆரம்பம் மட்டுமே.**"

பாவ் (கல்சூரி) புதிதாக வந்தவர், 27 வயதில் மண்டலியிடையே மிகவும் இளையவர், மேலும் சில பழைய உறுப்பினர்கள் 1920 ஆண்டுகளிலிருந்து பாபாவுடன் இருந்தனர். சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு, பாவ் மிகவும் பதட்டமடைந்தார் (இரண்டு முறை கழிப்பறைக்குச் செல்ல வேண்டியிருந்தது!). இறுதியில் இரவு 9.00 மணி. அவர் தனது 'சாதனா'வைத் தொடங்கினார். அவர் ஒவ்வோர் அறைக்கும் சென்று, தயக்கத்துடன், பாபா கட்டளையிட்டபடி செய்தார். அவர் திரும்பத் திரும்பக் கூறியும் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இது பாபாவின் கட்டளை என்று தெரியாவிட்டாலும், எல்லா மண்டலியும் அதை நகைச்சுவையாக நினைத்து மகிழ்ந்தனர். ஆனால் அவர் கைக்கோபாத்தின் அறைக்கு வந்தபோது, அவர் அமைதியாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதை பாவ் கண்டார். பாவ் கதவைத் திறந்து, 'முட்டாள்! ஒன்பது மணிக்குப் பின்னர் அமைதியாக இருக்கவும்!' என்றதும், கைக்கோபாத் ஆச்சரியமும் கோபமும் கலந்த பார்வையுடன், பாவ் பக்கம் திரும்பினார், ஆனால் அவரது கடமை முடிந்ததால், பாவ் அவசரத்தில் நழுவிச் சென்றார்.

மறுநாள் கைக்கோபாத் விஷ்ணுவிடம், "இந்த பாவ் முற்றிலும் முரட்டுத்தனமான முட்டாள். நேற்றிரவு நான் என் அறையில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, அவர் அமைதியாக எனது அறையின் கதவைத் திறந்து, உள்ளே நுழைந்து, 'முட்டாள்! ஒன்பது மணிக்குப் பின்னர் அமைதியாக இருக்கவும்!' என்று உரத்த குரலில் கத்தினார்; நிச்சயமாக, நான் ஏற்கனவே அமைதியாகத்தான் இருந்தேன்.

"என்னிடமும் அதைத்தான் சொன்னார்" என்றார் விஷ்ணு. "அவர் புதியவர், அதை நாம் மறந்துவிட வேண்டும்."

“அவர் முதுகலைப் பட்டம் பெற்றவர்,” கைக்கோபாத் தொடர்ந்தார், “ஆனால் இன்னும் ஒரு முட்டாள். மேலும் அவருக்கு நடந்து கொள்ளும் விதம் தெரியவில்லை!”

இரண்டாவது இரவும் பாபாவின் கட்டளையைக் கடைப்பிடித்து, மீண்டும் கைக்கோபாத்தின் பிரார்த்தனையில் இடையூறாக இருந்தார். பாவால் என்ன செய்ய முடியும்? இது அவரது ‘பிரார்த்தனை’, அவர் அதைச் செய்ய வேண்டியிருந்தது. கைக்கோபாத், பாபாவிடம் புகார் செய்தபோது, அவர் உத்தரவைத் திரும்பப் பெற்றார். இதற்கிடையில், பாவிற்கு இந்தி கடிதப் பரிமாற்றங்களைக் கையாளுதல், இரவுக் கண்காணிப்பு (சில நாட்களுக்கு), ஈஸாவை (தொந்தரவு செய்யும் துப்புரவுப் பணியாளரின் மகன்) கவனித்துக்கொள்வது மற்றும் மிக முக்கியமாக - நங்கா மஸ்தைப் பராமரிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டன.

பாவ், டெஹ்ரா டூனுக்கு வந்த நான்கு நாட்களுக்குப் பிறகு, நஜிபாபாத்தின் இந்த மஸ்த் (மார்ச் மாதத்தில் பாபா அவரைத் தொடர்பு கொண்டார்) டெஹ்ரா டூனுக்கு, ஏறக்குறைய 62 மைல்கள் நடந்து வந்தார். சாலையில் அவரைத் தற்செயலாகப் பார்த்த எல்சா, பாபாவிடம் தகவல் தெரிவித்ததும், ஒரு மைல் தொலைவில் இருந்த அவரை அழைத்து வர பாபா காரை அனுப்பினார். அழைத்து வந்ததும், பாபா, பாவ் கல்சூரிக்குக் கட்டளையிட்டார், “**இந்த மஸ்திற்கு சேவைபுரிந்து, அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்து, அவரை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்**.” பாவ் இதற்கு முன்னர் ஒரு மஸ்தைக் கூட பார்த்ததில்லை; பாபா அவரிடம் எதைக் கண்டார் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. பாவ், முற்றிலும் நிர்வாணமாக, அடர்த்தியான சடை முடியுடன், தலை முதல் கால் வரை பல ஆண்டுகளாக ஒருபோதும் சுத்தம் செய்யாத அழுக்குகளால் மூடப்பட்ட ஒரு மனிதனை மட்டுமே பார்க்க முடிந்தது. நங்கா மஸ்தை நீராட்டிய பிறகு, பாபா, மஸ்தைத் தங்க வைக்கும் அறையை பாவ் கல்சூரிக்குக் காட்டினார். மஸ்தை ஒரு படுக்கையில் படுக்க வைத்து அவரது கழிப்பறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் ஒரு மஜ்ஜூப் போல் இருந்தார், பெரும்பாலும் அவரது உடலைக் குறித்த சுயநினைவின்றி இருந்தாலும், அவர் அடிக்கடி ஆங்காங்கே அலைந்து திரிந்தார்.

பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்திய பிறகு, பாபா தமது பங்களாவிற்குத் திரும்பிச் சென்றதும், பாவ் தனது அறைக்குச் சென்று கடிதப் போக்குவரத்துப் பணியைத் தொடங்கினார். சிறிது நேரத்தில் பாபா திரும்பி வந்து, நேரடியாக மஸ்தின் அறைக்குச் சென்றார். பாவ் பின்தொடர்ந்து சென்றபோது, அங்கு நிகழ்ந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். மஸ்த் மலம் கழித்து, படுக்கை முழுவதையும் அசுத்தப்படுத்தி வைத்திருந்தார். பாபா, பாவை உற்று நோக்கினார், ஆனால் எதுவும் கூறவில்லை. அதற்கு பதிலாக, அவரே படுக்கையையும் மஸ்தையும் சுத்தம் செய்ததைப் பார்த்த பாவ், அதிக கவனம் செலுத்தாததற்காக வெட்கப்பட்டார்.

அன்று முதல், பாவ், மஸ்தின் பராமரிப்பில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார், ஆனால் தினமும் பாபா அவரிடம் ஏதேனும் குறைகளைக் கண்டுகொள்வது வழக்கம். மஸ்த் ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து முறை மலம் கழிப்பதும், ஒவ்வொரு முறையும் பாவ் அவரையும், அவரது துணி, போர்வைகளை சுத்தம் செய்வதும் அன்றாட நிகழ்வாக இருந்தது. பாபா எந்த நேரத்திலும் திடீரென மஸ்தின் அறைக்கு வரும் போதெல்லாம், சில சிறிய சிறிய தவறுகளுக்காக பாவை கண்டிப்பதும் தவறாமல் நிகழ்ந்தது.

பாவ், மஸ்துக்காக உணவைக் கொண்டு வரும்போது, மஸ்த் அவரிடம், "நீ சாப்பிடு, நீ சாப்பிடு!" என்று கூறி வந்தார்; மஸ்திற்கு உணவூட்ட நீண்ட நேரம் பிடித்தது; மிகுந்த சிரமத்துடன் அவருக்கு உணவளிக்க வேண்டி இருந்தது.

ஒரு நாள் மஸ்த் சுத்தமாக இருந்ததோடு, அறையிலிருந்த அனைத்தும் முற்றிலும் அப்பழுக்கற்றதாக இருந்தது. கடைசியில் பாபா மகிழ்ச்சியடைவார் என்று பாவ் நினைத்தார். ஆனால் பாபா வந்த அந்த நேரத்தில், மஸ்த் படுக்கையில் சிறுநீர் கழித்ததைக் கண்டு பாபா, பாவைக் கண்டித்தார்.

வழக்கமாக, மஸ்த் அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்தார், ஆனால் ஓர் இரவு அவர் பாவை சத்தமாக அறைந்தார். மஸ்த் உண்மையிலேயே மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் என்று பாவ் நம்பினார்.

அடுத்த நாள், பாபா, பாவிடம் கேட்டார், "**உண்மையைக் கூறுங்கள்; நங்கா பாபாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**"

பாவ் பதிலளித்தார், "எனக்கு மஸ்துகளைப் பற்றி எதுவும் தெரியாது, ஆனால் இவர் மனநோயால் பாதிக்கப்பட்டவர் போலத் தெரிகிறது."

"**நீங்கள் எம்.ஏ. பட்டப்படிப்பில் எப்படித் தேர்ச்சி பெற்றீர்கள்?**" என்று பாபா கேட்டார். "**நீங்கள் ஏதேனும் லஞ்சம் கொடுத்தீர்களா? உங்களுக்கு அறிவே இல்லை. அவர் ஒரு பைத்தியக்காரன் என்கிறீர்கள், ஆனால் அவர் ஒரு மஸ்த், மேல்நிலை ஆன்மா என்று நான் சொல்கிறேன். பைத்தியம் அவரல்ல; நீங்கள்தான்!**"

பாவ், மஸ்திடம் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார், ஆனால் அவர் அதிக கவனம் செலுத்தவே, பாபா அவரை மேலும் அதிகமாகக் கடிந்து கொண்டார்; பாவ் நினைத்துக்கூட பார்க்காத பல சிறிய சிறிய தவறுகளைச் சுட்டிக்காட்டினார். பாவ், இரவும் பகலும் நங்கா பாபாவை கவனித்து வந்தார். மஸ்த் சிறுநீர் கழிக்கும் வேளையில், பாவ் படுக்கையை சுத்தம் செய்து போர்வைகளை மாற்றி விடுவது வழக்கம். மஸ்த் படுக்கையை விட்டு வெளியேறி கழிப்பறையைப் பயன்படுத்தியதில்லை, மேலும் அவரது அறையிலிருந்த கழிவுக்கலனைப் பயன்படுத்த அவரைத் தூண்டுவதற்கு பாவ் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தாலும், அவர் தோல்வியையே சந்தித்தார்.

ஒரு நாள் நம்பமுடியாத சம்பவம் ஒன்று நடந்தது. மஸ்தின் காரணமாக பாபா, பாவைக் கடிந்து கொண்டதைத் தொடர்ந்து, ஒரு நாள் பாபாவை எப்படியேனும் திருப்தி படுத்தும் நோக்கத்தில், அதிகாலையில் அவர் மஸ்தின்

அறையை சுத்தம் செய்து, படுக்கையில் புதிய போர்வைகளைப் பரப்பி, ஒருவேளை, தேவைப்பட்டால் பயன்படுத்த மேலும் போர்வைகளைத் தயாராக வைத்திருந்தார். இறுதியாக அனைத்தும் தயாரான நிலையில், பாவ் அறையின் வெளியே பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தார்.

பாபா அங்கு வந்து, அறைக்குள் சென்றபோது, பாவும் பின்தொடர்ந்தார். மின்னல் தாக்கியது போல, பாவ் தனது கண்களை நம்பமுடியாமல் கண்ட காட்சியில் திகைத்துப் போனார்! மஸ்தின் கட்டில் இருந்த பக்கத்து சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக, அது விலகி வெளிப்புறமாக விழுந்தது. ஆச்சரியமான விஷயம் என்னவெனில், சுவர் நல்ல நிலையில் இருந்தது, பாவ் அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார், இருந்தும் எந்த சத்தமும் கேட்கவில்லை. மிகவும் அதிருப்தியடைந்த பாபா அவரிடம், **"நங்கா பாபாவிற்கு சேவைபுரியும் கடமையை நான் உங்களுக்கு வழங்கினேனா அல்லது அவர் உயிரைப் பறிக்கவா? சுவர் உள்நோக்கி விழுந்திருந்தால், அவர் நிச்சயமாக நசுக்கப்பட்டிருப்பார். உங்களுக்குக் கண்கள் இல்லையா?"** என்று கேட்டார். பதில் சொல்ல முடியாமல் தவித்தார் பாவ்.

**"ஏன் பதில் இல்லை?"** பாபா வினவினார், **"எனது மஸ்தைக் கொல்ல விரும்புகிறீர்களா? அதற்காகவா இங்கே வந்தீர்கள்?"**

பாவ் இறுதியாகத் தடுமாற்றமடைந்து, "இது எனது புரிதலுக்கு அப்பாற்பட்டது. இவ்வளவு வலுவான சுவர் எப்படி இடிந்து விழுந்தது? சில நிமிடங்களுக்கு முன்னர் அது சரியாகத்தான் இருந்தது" என்றார்.

**"உங்கள் புத்தி உங்களுக்கு உதவவில்லை என்றால், அதை ஏன் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்? நான், அவர் பைத்தியம் இல்லை என்று சொல்கிறேன், இருந்தும் ஏன் உங்கள் மூளையைப் பயன்படுத்தி அவர் பைத்தியம் என்று நினைக்கிறீர்கள்? இப்போது சொல்லுங்கள், சுவர் எப்படி இடிந்து விழுந்தது?"**

"எனக்குத் தெரியாது. இவ்வளவு உறுதியான சுவர் ஒருபோதும் தானாக விழுந்திருக்க முடியாது, நான் ஒரு சிறிய சத்தத்தையும் கேட்கவில்லை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

**"பகுத்தறிவை விட்டுவிட்டு நான் சொல்வதைச் செய்யுங்கள்"** என்று பாபா அறிவுறுத்தினார்.

இதர சம்பவங்கள், நங்கா மஸ்த் ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதை பாவிற்கு உறுதியாக உணர்த்தியது. உதாரணமாக, பாவ் தனது கல்லூரித் தேர்வுகளுக்குத் தோன்றிய நிலையில், தேர்வு முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஒரு நாள் இரவு, நங்கா மஸ்த் திடீரென அவரிடம், "நீங்கள் தேர்ச்சி பெறுவீர்கள்" என்று கூறியது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது, ஏனெனில் மஸ்த் மிக அரிதாகவே பேசினார்; எப்போதாவது பேசினால் - அதாவது அவர் முணுமுணுத்தாலும் அல்லது கிசுகிசுத்தாலும் முற்றிலும் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. மேலும், பாவ், கல்லூரி தேர்வு எழுதியதாக நங்கா

பாபாவிடம் கூறவே இல்லை. அடுத்த நாள், மஸ்தின் வார்த்தைகள் உண்மையாகி, பாவ் தனது தேர்வில் தேர்ச்சி பெற்றதாகத் தொலைத்தந்தி வந்தது.

மற்றுமோர் இரவு பாவ், மஸ்துடன் அமர்ந்திருந்த போது, "உனக்கு ஒரு மகன் பிறப்பான்" என்று கூறினார்.

பாவின் மனைவி ரமா, இப்பொழுது, நாக்பூரில் தங்களுடைய கைக்குழந்தையுடன் கர்ப்பவதியாக இருந்தார். நான்கு மாதங்களுக்குப் பிறகு, பாவிற்கு ஒரு மகன் பிறந்ததாக செய்தி வந்தது. பாவ், மஸ்தைப் பைத்தியம் என்று நினைத்தார், ஆனால் ஒரு நாள் மஸ்த், மெஹர் பாபாவின் மகத்துவத்தைப் பற்றி பேசியபோது, பாவின் கண்கள் திறந்தன. இந்த சம்பவங்களுக்குப் பிறகு, மஸ்த் ஒரு பைத்தியம் அல்ல என்பதை பாவ் உணர்ந்தார்.

நங்கா மஸ்த் கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் டெஹ்ரா டூனில் தங்கவைக்கப்பட்டார். பாபா அவருடன் அவ்வப்போது பணிபுரிவதுண்டு; அவருடைய பணி நிறைவடைந்ததும், பைதூல் அவரை மீண்டும் நஜிபாபாத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் தனது வழக்கமான இருக்கையை அமைத்து, இரவும் பகலும் ஒரு மரத்தின் கீழ் நிர்வாணமாகப் படுத்துக் கொள்வதும், அப்பகுதியில் சுற்றித் திரிவதும் வழக்கம்.

பைதூல் மஸ்துகளைத் தேடி, அழைத்து வர அனுப்பப்பட்டார்; புக்கார் ஒருமுறை அவருடன் சென்ற வேளையில், அவர்கள் கான்பூரில் வாழ்ந்த ஒரு மஸ்தை அணுகி, டெஹ்ரா டூனில் தங்கி இருக்கும் மெஹர் பாபாவை சந்திக்க அவரை அழைத்துச் செல்ல விரும்புவதாக விளக்கிய போது, “ஓ, மெஹர் பாபா அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்துவிட்டாரா?" என்று கேட்டு அவர்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினார். முதலில் மிகவும் இணக்கமான மனநிலையில் இருந்த மஸ்த், பிறகு பாபாவை கடுமையான மொழியில் சபிக்கத் தொடங்கி, அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டார். 25 ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்த ‘ஷென்ஷாஹி பாபா’ (SHENSHAHI BABA) என்ற மற்றுமொரு மஸ்தை, பைதூல் அழைத்து வர முடிந்தது. பாபா அவருடன் பணிபுரிந்து, பின்னர் அவரை அதே கிராமத்திற்குத் திருப்பி அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபாவின் மௌனத்தின் 28ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டிப்பதற்காக, 1953 ஜூலை 10 வெள்ளிக்கிழமை அன்று, அவரது அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு பின்வரும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது:

**அனைவரும் முழு மனதுடன் - தங்கள் ஆழ் இதயத்திலிருந்து - ஜூலை 10 அதிகாலை நான்கு மணி முதல் ஐந்து வரை, இடைவிடாமல் ஒரு மணி நேரம் கடவுளின் ஒரு பெயரை, வெளியே கேட்கும் அளவுக்கு மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.**

**இந்துக்கள் - பரபிரம்ம பரமாத்மா**
**முஸ்லீம்கள் - அல்லா ஹு அக்பர்**
**பார்சிகள் - அஹுரமஸ்தா**

**ஈரானியர்கள் - எஸ்தான்**

**கிறிஸ்தவர்கள் - எல்லாம் வல்ல கடவுள்**

**இது தவிர, அனைவரும் காலை 7:00 மணி முதல் இரவு 7:00 வரை, தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும்.**

டெஹ்ரா டூனில் உடனிருந்த ஆண்களும் பெண்மணிகளும் இதைச் செய்தனர். கிஷன் ஸிங் கடவுளின் பெயரை சத்தமாக உச்சரித்தது, டெஹ்ரா டூன் வாசிகள் அனைவரும் அதைக் கேட்க வேண்டும் என்பது போல் இருந்தது; 'பரபிரம்ம பரமாத்மா!' என்று அவர் உச்ச குரலில் கத்தியதைக் கேட்டு, மண்டலி நினைத்தனர், 'கடவுள் அவரது கூக்குரலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, விரைவில் அவருக்கு விடுதலை வழங்கினால், அவர் அதை நிறுத்திவிடுவார்! பாபாவிடம் அதைச் சொன்னபோது, அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

ஜூலை 12 ஞாயிற்றுக்கிழமை சொற்பொழிவு வழங்கிய பாபா, இறை உணர்வை அடைந்த 'ஜீவன்முக்தா'க்களைப் (JIVANMUKTAS) பற்றி விளக்கமளித்தார்:

**இறை உணர்வை அடைந்த ஆத்மாக்களின் நிலை அமைதியான, அரவமற்ற கடலைப் போன்றது. பெருங்கடல்களுக்குக் கரைகள் உண்டு, ஆனால் இந்த இறைப்பெருங்கடல் கரையில்லாதது. அது எல்லையற்றது, தொடக்கமும் முடிவும் இல்லாதது.**

**இறைப்பெருங்கடல் எல்லையற்றதும் அளவிட முடியாததுமாக இருப்பதால், அதில் வந்திணையும் அனைத்தையும் கடல் உள்வாங்கிக் கொள்கிறது. ஹரிசந்த் கடல் எனவும், நீலு குழியில் தேங்கிய நீராகவும், பெண்டு தொட்டியில் இருக்கும் நீர் என்றும் வைத்துக் கொள்வோம். மூன்றும் நீர்தான்; ஆனால், குழியில் தேங்கிய நீரை எவரேனும் கறைபடுத்தினால், அது அசுத்தமாகிவிடும், ஏனெனில் 'நீலு', ஆசைகள் எனும் மனப்படிவங்களால் மட்டுப்படுத்தப்படுகிறார். அதேபோல, தொட்டியில் குப்பைகளை வீசினால், அந்த நீரும், 'நீலு'வை போல, 'பெண்டு'வும் ஆசைகளாலான மனப்படிவங்களால் மட்டுப்படுத்தப்பட்டதால், அசுத்தமாகிவிடும். ஆனால் கடலின் நீரில் ஒருவர் எவ்வளவுதான் சிறுநீர் கழித்தாலும், அது ஒருபோதும் அசுத்தமாகாது, ஏனெனில் அது ஆசைகள் எனும் மனப்படிவங்களால் கட்டுப்படுத்தப்படவில்லை. 'ஹரிசந்த்' எல்லையற்றவர், அதனால் எல்லா வரம்புகளையும் தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறார். ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒருவர் கூட ஆசைகளிலிருந்து விடுபடவில்லை.**

**எனவே, ஆசைகள் நீடிக்கும் வரை, விடுதலை இல்லை. ஜீவன்முக்தா என்பவர் தன்னையும், கரையையும் உணர்ந்து கொண்ட இறைப்பெருங்கடல்; ஆனால், அந்தக் கரைக்காகச் செய்ய வேண்டிய கடமை எதுவும் அவருக்கு இல்லை.**

**மூன்று முக்கிய நிலைகள் உள்ளன:**

முதலாவது: இறை-உணர்வுக்குப் பின்னர் உடல் துறக்கப்படுகிறது அல்லது இறை-உணர்வுடன் உடல் தக்கவைக்கப்படுகிறது - இவர்கள் மஜ்ஜூப் என்று அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாவது: இறை-உணர்வுக்குப் பிறகு, சிலர் பௌதீக உணர்வை மீண்டும் அடையப் பெறுகிறார்கள், ஆனால் அவர்கள் உலகளாவிய கடமை எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள் - இவர்கள் ஜீவன்முக்தாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். (மறுபிறவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்).

மூன்றாவது: இறை-உணர்வுக்குப் பிறகு, சிலர் பௌதீக உணர்வை மீண்டும் அடையப் பெறுகிறார்கள், மேலும் அவர்கள் உலகளாவிய கடமையைச் செய்ய வேண்டும் - இவர்கள்தான் பரிபூரண குருநாதர்கள் (சத்குரு அல்லது குதுப்).

ஜீவாத்மா (படைப்பு குறித்த உணர்வு) மற்றும் ஷிவாத்மா (இறை-உணர்வு) நிலைகளுக்கு இடையே, பல நிலைகள் உள்ளன. ஆனால் இறுதி இலக்கு என்ன? இறைப்பெருங்கடலாக மாறுவது, அதாவது சிவனாக (கடவுளாக) மாறுவது! கடமையைச் செய்வதும் செய்யாததும் வேறு விஷயம்.

ஜீவன்முக்தா என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? இறை-உணர்வைத் தவிர, பௌதீக உணர்வையும் கொண்டிருப்பது மற்றும் அதே உடலில் முக்தி நிலையில் இருப்பது என்பது இதன் பொருள். மஜ்ஜூப்களுக்கு பௌதீக உணர்வு இல்லை. சத்குருக்களுக்கு இறை மற்றும் பௌதீக உணர்வு இரண்டும் உண்டு, மேலும், அவர்கள் செய்ய வேண்டிய கடமையும் உள்ளது.

உலகில், சிலர் அழுகிறார்கள், சிலர் சிரிக்கிறார்கள், சிலர் உண்கிறார்கள் இப்படிப் பல. இங்கே அமர்ந்து நாம் பேசுகிறோம், வெளியே என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால் வெளியில் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னாலும், அது சரியாக இருக்காது. உங்களுக்குத் தெரியாததால், உங்களுக்குத் தெரியாமல் எதுவுமே நடக்காது என்று எப்படிச் சொல்ல முடியும்? அதை அறிய, நீங்கள் வெளியே செல்ல வேண்டும், மேலும் நீங்கள் செல்லச் செல்ல, உங்கள் அனுபவம் மேலும் அதிகமாக இருக்கும்.

வெவ்வேறு பழக்கவழக்கங்கள், வெவ்வேறு மதங்கள், வெவ்வேறு வகையான மனிதர்கள், வெவ்வேறு அறிவுத்திறன்கள் மற்றும் மனநிலைகளைக் கொண்டவர்கள். சிலர் தங்கள் கைகளால் உண்கிறார்கள், சிலர் கத்திகள் மற்றும் முட்கரண்டிகளைப் பயன்படுத்துகிறார்கள். மனிதகுலத்தில் சீரான தன்மை இல்லை என்பதை இது காட்டுகிறது, மேலும் பௌதீக தளத்தில் வாழும் இதர உயிரினங்களுக்கும் இதே நிலைதான் உள்ளது. ஆன்மீகப் பாதையிலும் இதே போன்ற வேறுபாடுகள் உள்ளன. சிலர் ஆன்மீகப் பாதையில் முன்னேறுகிறார்கள், சிலர் யோகா பயிற்சிகளில் ஈடுபடுகிறார்கள், சிலர் தியானத்தின் வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறார்கள்; ஆனால் நோக்கம் ஒன்றே ஒன்று மட்டுமே: அதாவது, இறைப்பெருங்கடலாக மாறுவது! இறைப்பெருங்கடலாக மாறிய பிறகு,

**மேற்கூறிய மூன்று நிலைகள் மட்டுமே உள்ளன; சிலர் ஒரு நிலையில் இருக்கிறார்கள், சிலர் மற்றொரு நிலையில் இருக்கிறார்கள், பிறர் இன்னொரு நிலையில் இருக்கிறார்கள். ஆனால் மூன்று நிலைகளும் இறைப்பெருங்கடலைச் சார்ந்தவை.**

1953 ஜூலை 15-18 தேதிகளில் டெஹ்ரா டூனில் மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டத்திற்காக அழைக்கப்பட்டவர்கள்: ஆதி சீனியர், ஆதி ஜூனியர், கிருஷ்ணாஜி, நரிமன், மெஹர்ஜி, ஹமிர்பூரிலிருந்து கேஷவ் நிகம், புக்கார், தர் மற்றும் கயா பிரசாத் கரே, டெஹ்ரா டூன் அன்பர்கள் மற்றும் பாபா மண்டலி.

101 ராஜ்பூர் சாலையில் (101, RAJPUR ROAD) அமைந்த கிஷன் ஸிங்கின் பங்களாவில் அழைக்கப்பட்டவர்கள் தங்கியிருக்க, கூட்டங்கள் அங்கேயே நடைபெற்றன. ஜூலை 15, புதன் காலை 8:00 மணிக்கு பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கத் தொடங்கியதோடு கூட்டம் ஆரம்பமானது:

**இன்று, நான் சில தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களை அழைத்தேன். இது எனக்கு மிக முக்கியமான பணி, மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர் மட்டுமே இருந்தால், அது எனது பணிக்குப் போதுமானதாக இருக்கும். நான் ஏன் குறைந்த பட்சம் ஏழு நபர்களாவது வேண்டும் என்று கூறுகிறேன் என்றால், நான் சொல்வதும் தீர்மானிப்பதும் கடவுளின் முன்னால் 100 சதவீதம் நேர்மையாக இருக்க வேண்டும். உண்மையில் சொல்லப்போனால், நாம் அனைவரும் ஒன்றாக சந்திக்க வேண்டிய தேவை இல்லை. நான் விவாதித்து, தீர்மானிப்பது என்னைப் பற்றியது. குறைந்தபட்சம் ஏழு பேர் சாட்சிகளாக இருக்க வேண்டும், ஆனால் அதிகமானவர்கள் இருப்பதில் எந்தத் தீங்கும் இல்லை.**

**இன்று நான் எதைச் சொன்னாலும் அல்லது தீர்மானித்தாலும் அது மிக முக்கியமானது மற்றும் வெளியில் ஒலிபரப்பப்படக் கூடாது. இதர அனைவருக்கும் பின்பு தெரிவிக்கப்படும். இன்று காலை நான் நீராடிக் கொண்டிருந்தபோது, நான் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து, மதிப்பிட வேண்டும் என்று உணர்ந்தேன். நான் சிரித்துக்கொண்டும், மகிழ்ச்சியாகவும் இருப்பேன், ஆனால் நான் பேசுவது அனைத்தும், தீவிரத்தன்மையுடன் இருக்கும். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் இங்கு நடப்பதை வெளியே எவருக்கும் எடுத்துரைக்க வேண்டாம் என்று நான் விரும்புகிறேன். எல்சா மட்டும் அவ்வாறு ஒருபோதும் செய்ய மாட்டார். கடந்த கால அனுபவம் சொல்கிறது; எல்சாவிற்கு 'இல்லை' என்பது எனக்கு 'ஆம்'! ஆனால் இன்று அது உண்மையில் 'இல்லை' என்றால் 'இல்லை'. ஹரிசந்த் தனது மனைவி மற்றும் குழந்தைகளிடம் சொல்லக் கூடாது.**

**இப்போது, நான் முக்கிய விஷயங்களை விவாதித்து தீர்மானிப்பதற்கு முன்பு, முதலில் ஏற்பட்ட பின்னடைவுகளை ஆராய்வோம். நான் அவற்றை பின்னடைவுகள் என்று அழைத்தாலும், அது கடவுளால் நிர்ணயிக்கப்பட்டது,**

**ஏனெனில் நான் பாபாவாக இருந்தால், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் நான் அறிந்திருக்க வேண்டும். அதனால், என்னைப் பொறுத்தவரை, எந்தப் பின்னடைவும் இல்லை. மக்கள் என்னை சர்வஞானம் படைத்தவராக எடுத்துக் கொள்ளும்போது, எனக்கு எங்கே பின்னடைவு?**

**கைக்கோபாத் இப்போது பிரார்த்தனையை மொழியட்டும்: "கடவுளே, பாபா ஒவ்வொரு வார்த்தையையும் அவர் உணர்ந்ததன் அடிப்படையில் நேர்மையாகச் சொல்லச் செய்வீராக!"**

கைக்கோபாத் பிரார்த்தனையை மொழிந்த பின்பு, பாபா தொடர்ந்தார்:

**நான் ஒன்றைத் திட்டமிடுவதும், எதையாவது அறிவிப்பதும், பின்னடைவு ஏற்படுவதும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தோன்றினாலும், பின்னடைவுகளால் எனது திட்டங்கள் நிறைவேறாமல் போகின்றன என்று நான் கூறுகிறேன். பாபா, பாபாவாக இருந்தால், எந்த விதமான பின்னடைவுகளும் அவருடைய திட்டங்களை மாற்ற முடியாது, ஏனெனில் நான், சர்வஞானமும் உள்ளவனாக, அவற்றைப் பற்றி முன்பே அறிந்திருக்க வேண்டும். எனவே, இந்த முரண்பாட்டை ஒரே ஒரு வழியில் மட்டுமே விளக்க முடியும். நீலு இதைப்பற்றி யோசனை செய்யட்டும், அவர் நேற்று கூறியது போல, பிராமணர் என்பதால் அவருடைய புத்தி, கூர்மையாக இருக்கும்.**

**நான் இப்போது எதைச் சொன்னாலும், அது தீவிரத் தன்மையுடையதாக இருக்கும்; இலகுவாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நான் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை வகுத்து, இந்த வழியில் தீர்மானித்துள்ளேன் என்று அறிவிக்கிறேன், மேலும் முடிவுகள் இப்படி இப்படி இருக்கும், அப்போது பின்னடைவுகள் ஏற்படும், இது ஒரு சாக்குப்போக்கு அல்லது செயல் விளக்கம் அல்ல, ஆனால் இதுபோன்ற பின்னடைவுகளால் எனது திட்டங்கள் நிறைவேறாமல் போகின்றன என்று நான் கூறும்போது, அது எனக்காக அல்ல, சாதாரண மனிதர்களுக்காக. இப்போது நீலு விளக்கட்டும்.**

டாக்டர் நீலு குறுக்கிட்டு, "நீங்கள் ஒரு குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட நேரத்தில் ஒரு காரியத்தைச் செய்ய விரும்புகிறீர்கள்" என்றார்.

பாபா, எரச்சிடம் கேட்டபோது அவர் கூறினார், "எனக்கு இது பற்றி எதுவும் தெரியாது. சில சமயங்களில் பாபா அப்படிச் சொல்லும்போது, நான் குழப்பமடைகிறேன். நீங்கள் பின்னடைவுகளைப் பற்றி பேசும்போது, அதற்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பதை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்."

பாபா விளக்கினார்:

**இப்போது, உதாரணமாக, அன்றைய தினம், ஜூலை 21 அன்று, நான் இறுதியாக எல்சாவிடம், நாம் ஒரு வாரத்திற்கு வெளியே செல்வோம் என்று கூறினேன், மேலும், அதற்குத் தேவையான பெரிய வாகனம் கிடைக்கவில்லை என்றால், நாம் ரயிலில் செல்வோம் என்றும் அவருக்கு**

விருப்பம் தெரிவித்தேன். இன்று, எல்சா என்னிடம் 21ஆம் தேதி அன்று, ஒரு கூட்டத்தை மாவட்ட ஆட்சியாளர் நிர்ணயித்துள்ளார், அதில் அவர் பங்கெடுக்க வேண்டியது அவசியம் என்று கூறுகிறார். இன்று காலைதான் எனக்கு அது தெரிய வந்தது. நான் அவரை என்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினேன், விடுப்பு எடுக்க வேண்டும் அல்லது ஏதாவது செய்ய வேண்டும், ஆனால் என்னுடன் வாருங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவர் கூறியதைக் கேட்டதும் எனது திட்டத்திற்கு மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது.

நங்கா மஸ்த் பற்றி: எனது பணிக்காக, ஒரு மஸ்த் என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், இதற்காக, பைதூலை பிரத்யேகமாக அனுப்பி வைத்தேன், ஆனால் அவரால் ஒருவரைக் கொண்டு வர முடியவில்லை. ஜூலை 12 அன்று, பைதூல், எல்சா இருவரும் டெஹ்ரா டூனில் ஒரு மஸ்தைக் கண்டுபிடித்து, அவரை இங்கு அழைத்து வந்தனர், ஆனால், இப்போது எனக்கு நேரமில்லை. முதலில், அவர் சுதந்திரமாக இருந்தார்; இப்போது அவர் ஓர் அறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவருடன் பணியாற்றும் மனநிலையோ, நேரமோ எனக்கு இல்லை. பின்னடைவுகள் ஒன்றையொன்று இவ்வாறு பின்தொடர்கின்றன, ஆனால் இந்த நேரத்திலும் அவற்றை நாம் உண்மையில் பின்னடைவுகள் என்று அழைக்க முடியாது. இதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லி விளக்க விரும்புகிறேன்.

எனது முந்தைய திட்டத்தில் ஏற்பட்ட பின்னடைவு பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன். ஒரு நாள் முஸோரியில், எனது மனதில் இருந்த ஒரு திட்டத்தை நான் மண்டலிக்கு விளக்கினேன். இது, பதினைந்து நாட்கள் தூக்கமின்றி மேற்கொள்ளவேண்டிய ஒரு பயணம். திட்டத்தைச் செயல்படுத்தி, அதற்கு நடைமுறை வடிவம் கொடுக்க, ஹெலன், கிஷன் ஸிங், எல்சா, குமார் ஆகியோரை முஸோரிக்கு அழைத்தேன். நாங்கள் அனைவரும் ஒன்றாகப் பயணிக்கும் அளவில் ஒரு ஸ்டேஷன் வேகனை ஏற்பாடு செய்யச் சொன்னேன். ‘வெளியே செல்வதற்கான எனது திட்டம் சில திட்டவட்டமான பணிகள் சம்பந்தப்பட்டது’ என்பதை நான் அவர்களுக்கு விளக்கினேன், மேலும் சில இடங்களில் நாங்கள் மஸ்துகளையும் தொடர்புகொள்ள வேண்டும். அந்த நோக்கத்திற்காக, ஒரு நல்ல ஸ்டேஷன் வேகனை வாடகைக்கு எடுக்க அல்லது கடன் வாங்க முயற்சிக்கச் சொன்னேன். எல்சா, ஹெலன் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்; அதைக் குறித்து டெல்லிக்கு எழுதும்படியும் கிஷனைக் கேட்டிருந்தேன்.

கிஷன் எழுதவில்லை; ‘நன்னி துனியா’ நிறுவனத்தின் ஸ்டேஷன் வேகன் கிடைக்கலாம் என்று குமார், எல்சாவிடம் சொல்லவில்லை. எவ்வாறாயினும், ஸ்டேஷன் வேகனை எளிதாக அடைய முடியும் என்பதில் எல்சா முழு நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் ஒரு நாள் நான், நால்வரையும் முஸோரிக்கு வரவழைத்து, ஸ்டேஷன் வேகனின் இன்றியமையா தேவையை, பலமுறை எடுத்துரைத்து எச்சரித்தேன்.

ஏழைகளுடனான எனது பணி ஏற்கனவே பின்னடைவை சந்தித்திருந்தது, இந்த பதினைந்து நாட்களின் பயணத் திட்டம் நிறைவேறாவிடில், எனது முழுத் திட்டமும் பாழாகிவிடும்.

அவர்களுக்கு ஸ்டேஷன் வேகன் ஏற்பாடு செய்வது குறித்த ஆலோசனைகள் அனுப்பப்பட்டு, நடைமுறையில் ஒவ்வொரு நாளும் நினைவூட்டப்பட்டது. நாங்கள் ஒன்றாக ஒரே வாகனத்தில் பயணம் செய்யாவிடில், எனது பணி சீர்குலைந்துவிடும் என்று அவர்களிடம் சொல்லிக்கொண்டே இருந்தேன். தினசரி ரூ 40 வாடகை, எரிபொருள், மற்றும் பிற செலவுகளை ஈடுகட்ட ஒதுக்கப்பட்டது. ஹெலன், எல்சாவை நம்பியிருந்தார்; ஒரு நாள் எல்சா, டெஹ்ரா டூனிலிருந்து முஸோரிக்கு ஸ்டேஷன் வேகன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தொலைபேசியில் தெரிவித்தார். இந்த மகிழ்ச்சியான செய்தி கிடைத்ததும், நான் மண்டலிக்கு இனிப்புகளை வழங்கினேன்.

ஆனால், எனது திட்டம் ஸ்டேஷன் வேகனைப் பொறுத்தது அல்ல, மூன்று இதர விஷயங்களைப் பொறுத்தது: பதினைந்து நாட்கள் ஒன்றாக இடம் விட்டு இடம் சென்று, தூக்கமின்றி, சுற்றித் திரிவது, ஸ்டேஷன் வேகன் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். விரைவில், நான் முஸோரியிலிருந்து டெஹ்ரா டூன் திரும்பினேன், தினமும் அதைப் பற்றிய விவாதத்தை நிகழ்த்தி, குமாரையும் இது விஷயத்தில் கவனமாக இருக்கச் சொன்னேன்.

அது என்னவாக இருந்தாலும், நான் அதில் மிகவும் தீவிரமாக இருந்தேன்.

ஏன்? என்று இப்போது நான் உங்களுக்குச் சொல்கிறேன்:

எவரையும் குற்றம் சொல்ல வேண்டியதில்லை. அப்போதெல்லாம், எனது திட்டம் பதினைந்து நாட்களுக்கு என்று நான் வலியுறுத்தினேன். நாங்கள் அனைவரும் ஒன்றாக இருந்து, உண்டு, அருந்த வேண்டும், ஆனால் தூங்கக் கூடாது. பணியின் விளைவு காஷ்மீரில் வெளிப்பட்டிருக்க வேண்டும், மேலும் பல விஷயங்கள் நடந்திருக்க வேண்டும். ஆனாலும், அந்தத் திட்டம் நிறைவேறாது என்று நான் எல்லா நேரத்திலும் உணர்ந்தேன், அதனால்தான் எல்சாவை எச்சரித்தேன். இல்லையெனில், ஸ்டேஷன் வேகனைப் பெறுவது 100 சதவீதம் உறுதியாக இருந்ததால், நான் ஏன் அவரை மீண்டும் மீண்டும் எச்சரித்திருக்க வேண்டும்? அவர் அதை அடையத் தவறினால், அதன் விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் அவரை அவ்வப்போது மிரட்டினேன்!

எனவே இதன் மூலம் உங்களுக்கு ஒரு துப்பு புலப்பட்டிருக்கும்; உண்மையில், எவரும் தவறு செய்யவில்லை, ஆனால் பின்னடைவு ஏற்பட்டது. திட்டம் இருந்தது, அது பலனளிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், ஆனால் அதே நேரத்தில், அது நடக்காது என்றும் நான் உணர்ந்தேன், அதன் காரணமாக நான் விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினேன். கடைசி நாளில் (ஜூன் 4), எல்சா வாகனத்தை அடைய

முடியாமல் போனதை வெளிப்படுத்தினார். அவர் ஏற்பாடு செய்திருந்த வாகனம் பழுதானதே அதற்குக் காரணம். கடைசி முயற்சியாக, நாங்கள் ஒரு ஸ்டேஷன் வேகனை வாங்கும் அளவிற்குச் சென்றோம், அதற்கான தொகையையும் நான் அனுமதித்தேன்.

திட்டம் நிறைவேறுவதில் நான் எவ்வளவு தீவிரமாக இருந்தேன் என்பது கடவுளுக்குத் தெரியும்; அதே நேரத்தில் அது ஒருபோதும் நடக்காது என்றும் நான் உணர்ந்தேன். இதை உங்களால் புரிந்து கொள்ள முடியாது.

கிறிஸ்து சொன்னது போல: "தந்தையே, நீங்கள் கூட என்னைக் கைவிட்டீர்கள்!" இப்போது, தந்தையும், குமாரனும் அவரே. அவர் சிலுவையில் அறையப்படுவார் என்று அவருக்குத் தெரியும், இருந்தும் அவர், "தந்தையே, ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று முறையிட்டார். கிறிஸ்துவால் மட்டுமே இதைப் புரிந்துகொள்ள முடியும்.

நான் என்ன சொல்கிறேன் என்றால், நான் ஒரு விஷயத்தைத் திட்டமிட்டு, பின்னடைவுகள் ஏற்படும் போது, அவை பின்னடைவுகள் அல்ல - ஆனால் நான் அவற்றை பின்னடைவு என்று அழைக்கிறேன்.

கூர்ந்து கவனித்தால் பின்னடைவுகள் புலப்படும். இன்றிலிருந்து சிலவற்றை மட்டும் குறித்துள்ளேன். எல்சா, 21ஆம் தேதி என்னுடன் வர இருந்தார், ஆனால் இப்போது அவரால் முடியாது. கடந்த முறையும், ஜூன் 5ஆம் தேதி துவங்க இருந்த நிலையில், அவரது பணியில் அவர் மும்முரமாக இருந்ததால், 6ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இப்போது 21ஆம் தேதி என்று தீர்மானித்த எமது பயணமும் 22ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்பியது என்னவெனில், எனது பணியின் பலன் காஷ்மீரில் வெளிப்பட்டிருக்கும். அதைத்தான் நான் உணர்ந்தேன், 100 சதவீதம் உணர்ந்தேன். நான் கிருஷ்ணாஜியை காஷ்மீருக்கு அனுப்பி, அங்கே எனது அன்பின் செய்தியைப் பரப்பினேன்.

அவர் அனுப்பப்படாமல் இருந்திருந்தால் நான் சென்றிருப்பேன். அவமானம் மற்றும் வன்முறை தாக்குதல்கள் குறித்து சுற்றறிக்கை எண் 9 இல் (1953 மார்ச் 28அன்று வெளியிடப்பட்டது) இரண்டு விஷயங்கள் - அவை காஷ்மீரில் நடக்கும் என்று நான் உணர்ந்தேன். எனவே, காஷ்மீருக்குச் செல்ல அனுமதி பெறுவதற்கும், எனக்கும் மண்டலிக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யுமாறும் கெய்ன், தர் இருவரிடமும் கேட்டுக் கொண்டேன். நான் காஷ்மீருக்குச் செல்வதில் எந்த சந்தேகமும் இல்லை; ஆனால், வேண்டிய வாகனம் கிடைக்காததாலும், எனது முழுத் திட்டமும் தலைகீழாக மாறியதாலும், காஷ்மீர் பயணம் ரத்து செய்யப்பட்டது. கடவுளின் விருப்பம் என்ன, காஷ்மீரில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

கிருஷ்ணாஜி சொல்வதிலிருந்து, கடந்த மாதம் முதல், அரசியல் ரீதியாக அங்கு நிலவும் சூழல் முற்றிலும் மாறிவிட்டது. ஆன்மீக ரீதியில் பெரும் குழப்பம் நிகழ்கிறது. காஷ்மீரின் தற்போதைய நிலை இதுதான், நான்

உணர்ந்தது சரியென்றால், அது எனது திட்டத்தின் குழப்பத்துடன் தொடர்புடையது. நான் அதை எனது சுய வழியில் ஒரு பின்னடைவு என்று அழைக்கிறேன், ஆனால் உண்மையில் அது நடக்க வேண்டும். அதனால், காஷ்மீர் பயணத்தை ரத்து செய்தேன்.

பாபா தொடர்ந்து கூறினார்:

இப்போது நாம் முக்கிய விஷயத்திற்கு வருவோம். நீங்கள் அனைவரும் வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 9ஐ படித்திருப்பீர்கள். அது அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இன்றும் இருக்கிறது, இருக்கும். நான் உணர்வது சரியென்றால் எதையும் மாற்ற முடியாது. ஆனால் நான் உணர்வது சரியில்லை என்றால் கடவுள், எனக்கும் உங்களுக்கும் உதவட்டும். அப்போது, பாபா, பாபாவாக இல்லை என்று அர்த்தம். ஆனால், சில உணர்வுகளின் அடிப்படையில், நான் அவமானத்தையும், வன்முறை தாக்குதலையும், அதைத் தொடர்ந்து எனது வெளிப்பாட்டையும் சந்திக்க வேண்டியிருக்கும், அதாவது நான் எனது மௌனத்தைக் கலைத்து, பௌதீக உடலைத் துறந்துவிடுவேன் என்பதை நான் உறுதியாக அறிவேன்.

இன்று, டிசம்பர் முடிவதற்குள், என் உடம்பில் ஏதோ தீவிரமான ஒன்று நடக்கப் போவதாக நான் உணர்கிறேன், ஆனால் அமெரிக்காவில் நடந்தது போல் இருக்காது. இதை பிறர் எவரிடமும் சொல்லாதீர்கள்! கடவுள் அறிவார், எனக்குத் தெரியும், நான் முதலில் எனது பணியைப் பற்றியும், அதைத் தொடர்ந்து மண்டலி, என்னுடன் இருப்பவர்கள், என்னிடமிருந்து விலகி இருப்பவர்கள், பின்னர் என்னைச் சார்ந்தவர்களைப் பற்றிய சில திட்டங்களைக் குறித்து டிசம்பர் இறுதிக்குள் நிறைவு செய்ய நினைத்தேன்.

எனவே, கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்களின் முழுப் பட்டியலை உருவாக்கி, அதை மூன்று வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்குமாறு எரச்சிடம் கூறினேன்; அதாவது,

- சரி என்று குறிக்கப்பட்டது
- கேள்விக்குறியுடன் குறிக்கப்பட்டது, மற்றும்
- இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதார ரீதியாக என்னைச் சார்ந்து இருக்காதவர்கள் 3ஆவது பிரிவில் இருப்பவர்கள். கேள்வி குறியிடப்பட்டுள்ளவர்கள் குறித்து, நேற்று ஆதி (சீனியர்), மெஹர்ஜி, நரிமன் ஆகியோருடன் விவாதிக்கப்பட்டது. என்னைச் சார்ந்தவர்களின் கேள்விக்கு டிசம்பர் இறுதி வரை தீர்வு காணப்பட்டது, ஏனெனில் டிசம்பர் இறுதிக்குள் ஏதாவது தீவிரமான சம்பவம் நடக்கலாம் என நான் கருதுகிறேன். இப்போது, இது மீண்டும் ஒரு முரண்பாடான விஷயம், அதை நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. பொறுத்திருந்து பார்க்கவும்.

டிசம்பர் இறுதிக்குள் என் உடலில் ஏதோ தீவிரமான ஒன்று நடக்கும் என்று நான் ஆழமாக உணர்கிறேன். அவமானம், தோல்வி போன்ற தோற்றம் மற்றும் வெளிப்பாடு ஆகிய மூன்று விஷயங்கள் நடக்கும் என்பதை நான் 100

சதவீதம், மாறாக 200 சதவீதம் அறிவேன், உணர்கிறேன். இந்த மூன்று விஷயங்களும் 1953இல் நடக்காது என்றும் நான் உணர்கிறேன். இப்போது, பின்வரும் மூன்று உணர்வுகளை எவ்வாறு சமரசம் செய்வது?

அ) டிசம்பர் இறுதிக்குள் என் உடலில் ஒரு தீவிரமான விஷயம் நடக்கும்;

ஆ) வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 9இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று விஷயங்கள் 1953ஆம் வருடம் நடக்காது என்றும் நான் உணர்கிறேன்;

இ) ஆனால் அது நடக்க வேண்டும்!

நவம்பரிலிருந்து எனக்கும், என்னுடன் இருப்பவர்களுக்கும் அல்லது எனக்காக இருப்பவர்களுக்குமான விஷயங்கள் முற்றிலும் மாறிவிடும் என்ற மற்றுமோர் ஆழமான, நேர்மையான உணர்வு உள்ளது. இப்போது, இது நான்காவது உணர்வுக்கு சமம். நான் உங்களுக்குச் சொல்கிறேன், கடவுளுக்குத் தெரியும், நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் பொருள்பட கூறுகிறேன். ஆனால் அவற்றை எவ்வாறு சமரசம் செய்வது? என்னால் கூட புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த நான்கு உணர்வுகளையும் நான் அறிந்திருக்கிறேன், புரிந்துகொள்கிறேன்; ஆனால் சாதாரண அறிவுக்கு அவற்றை எவ்வாறு புரிந்துகொள்ள செய்வது? சில நேரங்களில் நீங்கள் புரிந்துகொள்ளும் விஷயங்களை, பிறருக்கு நீங்கள் விளக்க முடியாது. இந்த நான்கு உணர்வுகளையும் 100 சதவீதம் ஆழமாக நான் அறிவேன். அவை ஒன்றுக்கொன்று முரணானவை என்பதையும் நான் அறிவேன், அதை நான் புரிந்துகொள்கிறேன்; ஆனால் அதை எப்படி விளக்குவது? என்னால் அவற்றை விளக்க முடியாது! இந்த நான்கு உணர்வுகளின் அடிப்படையில், நான் சில விஷயங்களையும், வேறு சிலவற்றையும் தீர்மானித்துள்ளேன், அதை நான் விவாதித்து முடிவு செய்வேன்:

1. ஆகஸ்ட் 1 முதல் நவம்பர் இறுதி வரை, எனக்குத் 'தலைவலிகள்' இருக்கக்கூடாது. நான் ஒரு நல்ல கிரிக்கெட் போட்டியை ரசிப்பது போல் உணர விரும்புகிறேன். எனவே, ஆகஸ்ட் 1 முதல் நவம்பர் இறுதி வரை, எவரும் என்னிடம், 'பாபா, நான் இதைக் கேட்டேன், அதைக் கேட்டேன்' என்றோ, 'குறிப்பிட்ட நபர்கள் என்னைப் பார்க்க விரும்புகிறார்கள்', 'யாரோ ஒருவர் தனது பொருளாதாரக் கஷ்டங்களை எனது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறார்கள்' என்றோ சொல்லக் கூடாது, மேலும், இதுபோன்ற பல. நான் உங்களுக்குச் சொல்கிறேன், இது மிக முக்கியமானது. நான் எந்த வகையிலும் தொந்தரவு செய்யப்படுவதை விரும்பவில்லை.
2. ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை, என்னுடன் எந்தக் கடிதப் பரிமாற்றமும் இருக்கக்கூடாது. மரணம், நோய் போன்ற

தீவிரமானதாக ஏதேனும் இருந்தால், ஒரு தொலைத்தந்தி அனுப்ப வேண்டும்.

3. ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை, எவரும் என்னுடன் பண விஷயத்தைக் குறித்து பேசக்கூடாது. அதனால்தான் டிசம்பர் வரையிலான அனைத்து கணக்கு வழக்குகளையும் முறைப்படி சரி செய்துவிட்டேன்.
4. செப்டம்பர் இறுதி வரை டெஹ்ரா டூனில் தங்க விரும்புகிறேன்.

அக்டோபர் மற்றும் நவம்பர் பற்றி, நான் இதுகாறும் முடிவு செய்யவில்லை. டிசம்பரில் அனைத்தும் தானாகவே நிகழும். அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், டிசம்பரில் என் உடலுக்கு என்ன நடக்கும் என்று நான் எதிர்பார்க்கும் பார்வையின் அடிப்படையில், மூன்று அல்லது நான்கு இடங்களை மனதில் கொண்டுள்ளேன். மஹாபலேஷ்வர், டெஹ்ரா டூன், மைசூர் மற்றும் ஹைதராபாத். நான் அதை பற்றி யோசிப்பேன். அதனால்தான் விஷ்ணுவிடம் மஹாபலேஷ்வர் மற்றும் பஞ்ச்கணி குறித்து விசாரிக்கச் சொன்னேன். பல வீட்டு முகவர்களிடம் பங்களாக்கள் பற்றி விசாரித்ததாக அவர் கூறுகிறார். டிசம்பரில், நான் டெஹ்ரா டூனிலோ அல்லது எந்த ஒரு நிலையான இடத்திலோ இருக்கமாட்டேன், ஏனெனில் நான் இடம் விட்டு இடம் செல்வேன்.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இங்கு, தட்பவெப்பநிலை சிறப்பாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள், ஆனால் நான் சிந்திக்க வேண்டிய ஒரே விஷயம் இதுவல்ல. நவம்பரில், இரண்டு விஷயங்களைக் கருத்தில்கொண்டு (இடம் மாற்றம் மற்றும் அவரது உடலளவில் ஏதோ தீவிரமான நிகழ்வு), நான் உள்ளளவில் எப்படி உணர்கிறேன் என்பதைப் பொறுத்து, மாற்றத்தைப் பற்றி நான் சிந்தித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

ஆகஸ்ட் 1ஆம் தேதிக்கு முன்பு, சில பணிகளை முடிக்க வேண்டும். அதனால், ஜூலை 22 அன்று புறப்பட்டு, பணியை முடித்துவிட்டு 29ஆம் தேதி (ஜூலை) திரும்புவோம். நான் இப்போது எனது அசல் திட்டத்தை ஏழு நாட்களுக்குள் செயல்படுத்த விரும்புகிறேன். அதனால்தான் ஏழு சிறந்த மஸ்துகள், ஏழு சமாதிகள், ஏழு தர்காக்களுக்குச் சென்று ஏழு நாட்களில் பணியை முடித்துவிடுவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்னுடன் வருபவர்கள் கண் மூடித் தூங்க மாட்டார்கள். குஸ்தாஜி, எரச், பைதூல், பெண்டு, கிஷன் ஸிங், குமார், எல்சா, ஹெலன் ஆகியோர் என்னுடன் வருவார்கள். எல்சா என்னுடன் வரலாம் அப்படித்தானே? வந்தால் விழித்திருக்க வேண்டியதுதான்!

இத்துடன் கூட்டம் நிறைவடைந்தது. (குறிப்பிடப்பட்ட ஜூலை பயணம் பின்பு செப்டம்பர் வரை தள்ளிப்போடப்பட்டது.)

அடுத்த நாள் மாலை, 1953 ஜூலை 16 வியாழன் அன்று, அடுத்த கூட்டத்தின் தொடக்கத்தில், பாபா வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 9ஐ (LIFE CIRCULAR

NUMBER - 9) அவருக்கு மீண்டும் வாசிக்குமாறு அறிவுறுத்தினார். அப்போது அவர் இது குறித்து கருத்துத் தெரிவித்ததாவது:

**சாதாரண அர்த்தத்தில், தோல்வி என்பது அவமானம். ஆனால் உலகளாவிய அவமானம்** (சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி) **மற்றும் தோல்வி இரண்டும் வெவ்வேறு விஷயங்கள். அதற்குப் பிறகு தாக்குதல், ஆனால் அதில் நான் உயிர் துறக்க மாட்டேன்; என்றாலும், என் உடலைத் துறப்பதற்கு அதுவே முக்கிய காரணமாக இருக்கும்.**

**இது கடந்து செல்ல வேண்டுமானால், டிசம்பரில் என் உடலில் நிகழவிருக்கும் சம்பவம், நிச்சயிக்கப்பட்ட காரியங்கள் நிறைவேறும் முன்னர் எனது உயிரைத் துறக்கச் செய்யாது, சில மிகக் கடுமையான இடர்பாடுகள் வரவிருக்கின்றன. உத்தரவிட்டால், உங்கள் தலையையும் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் அனைவரும் அதைச் செய்வீர்கள். ஆனால் நேரம் வரும்போது, பல கூச்சல் குழப்பங்களும் ஏற்படும். வரலாறு அதுவாகவே திரும்ப வரும். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் மடிகின்றனர்; ஆனால் கால சூழ்நிலை கோரும் குறிப்பிட்ட நேரத்தில் இறப்பது கடினம்.**

**இப்போது, தற்போதைய உலக சூழ்நிலைகளைப் பார்த்தால், இதற்கு முன்னர் இப்படியொரு நிலை ஏற்பட்டதில்லை. இன்றைக்கு என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாத அளவுக்குச் சிக்கலாகிவிட்டது. உதாரணமாக:**

**கொரியா: சண்டை மற்றும் அமைதிக்கான முயற்சிகள் ஒரே நேரத்தில் நடந்து வருகின்றன. போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது, ஆனால் தென் கொரியா, 'இல்லை' என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இன்றைய செய்தித்தாள்கள், மிகக் கடுமையான சண்டை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றன.**

**ரஷ்யா: ஸ்டாலின் இப்போது இறந்துவிட்டார். பேரியா** (BERIA, சோவியத் உள்துறை அமைச்சர்) **வெளியேற்றப்பட்டுவிட்டார். க்ருக்லோவ்** (KRUGLOV) **இப்போது மந்திரிசபையில் இருக்கிறார், அதிகாரத்திற்கான அனைத்து குழப்பங்களும் அங்கே உள்ளன.**

**ஈரான்: மொஸாடெக்** (MOSSADEGH) **இப்போது எங்கும் இல்லாத நிலை. எல்லா பக்கங்களிலிருந்தும், அவர் வெளியேற்றப்படுகிறார். சட்டசபை அவருக்கு எதிராக உள்ளது.**

**எகிப்து: அங்கு இப்போது ஸூயஸ் கால்வாய் சண்டை** (THE SUEZ QUARREL) **நடந்துவருகிறது. பிரிட்டன், இஸ்மாயிலியாவை** (ISMAILIA) **ஆக்கிரமித்துள்ளது மற்றும் அதன் படைகள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன.**

**இந்தியா: இப்போது பாதி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.**

**உலகில் எங்குச் சென்றாலும், புதிதாக ஏதோ ஒன்றைக் கண்டுகொள்வீர்கள். அனைத்து அமைதிப் பேச்சுவார்த்தைகளும், அனைத்து குழப்பங்களும் நிகழ்கின்றன; இது அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டத்தின்படியே நிகழ்கின்றன. மாயையின் இந்த நிகழ்வுகள் கூட**

இருமைத்தன்மையின் விதியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இப்போது ஒரு விஷயம் நிறைவேற வேண்டும். ஒரு பெரிய பலூனைப் போல, நீங்கள் அதை தொடர்ந்து ஊதிப் பெருக்கினால், அது வெடிக்கும், அல்லது காற்றில் பறக்கும். நீங்கள் ஊதிக்கொண்டே இருக்கும் வரை, பலூனைக் கட்டி வைக்க வேண்டும் அல்லது வெடிக்க விட வேண்டும் என்ற நேரம் வரும். உலகிற்கு அந்த முக்கியமான நேரம் இப்போது வந்துவிட்டது. நான் உங்கள் அனைவருக்கும் இதையெல்லாம் சொல்கிறேன்.

இதுதான் உலகத்தைப் பற்றி நான் உண்மையில் உணர்கிறேன். இதற்கு முன்பு நாம் இத்தகைய காலங்களை சந்தித்ததில்லை. உலகில் மகிழ்ச்சியாக இருப்பவர்களைக் கண்டுகொள்வது மிகவும் கடினம். நான் கூட குழப்பமாக உணர்கிறேன்; என்ன செய்வது என்று தெரியவில்லை. எனது மௌனத்தைக் கலைத்து, பேசி, சுதந்திரமாக எப்படி இருப்பது என்பது எனக்கு ஒரு பெரிய தலைவலியாகவும், வெறுப்பாகவும் உள்ளது. பிற அனைவரும் அப்போது சுதந்திரமாக இருப்பார்கள். அந்தத் தருணத்திற்காக நீங்கள் காத்திருக்கிறீர்கள், ஆனால் நான் அதற்காக எல்லையற்ற பொறுமையுடன் இருக்கிறேன். நேரம் நெருங்கிவிட்டது, அது நிறைவேற வேண்டும்.

மெஹர்ஜியைச் சுட்டிக்காட்டி, பாபா அவரை எச்சரித்தார், "**உங்கள் உடல்நிலையில் கவனமாக இருங்கள். நீங்களே எனது கைகள், ஒருமுறை எனது கை நொறுங்கியது; அதனால், அது மீண்டும் நொறுங்கிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனது மக்கள்** (மண்டலி) **தளர்ந்து போனால், எனது கைகால்கள் உடல் அனைத்தும் நடுங்கிப்போகும்!**"

டாக்டர் நீலு விரைந்து இடையே குறுக்கிட்டு கூறினார், "அவர்கள் உங்கள் கைகால்கள் ஆனால் நான் மட்டுமே உங்கள் வயிறு!"

பாபா சிரித்துக்கொண்டே மீண்டும் தொடர்ந்தார்:

**பொறுமையாக இருங்கள். நீங்கள் உங்கள் உடலைக் கைவிட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள்! கனி, சாஞ்சி மற்றும் என்னுடைய சில அன்பர்கள் தங்கள் உடலைக் கைவிட்டுள்ளனர், எனவே அவர்களின் பட்டியலில் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் நீங்கள் உடலைக் கைவிட வேண்டும். நீங்கள் இப்போதே மறைந்துவிட்டீர்கள் என்று நினைத்து, கவலைப்படுவதை நிறுத்துங்கள்.**

**நீங்கள் எனக்காகப் பணிபுரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. அத்தகைய வாய்ப்புகள் எளிதில் வருவதில்லை. மக்கள் எப்பொழுதும் குழந்தைகளைப் பெருக்குவதில் ஈடுபட்டுள்ளனர்; எனக்கு சேவை செய்யும் வாய்ப்பு அரிதாகவே வழங்கப்படுகிறது. நீங்கள் என்னை அதிகமாகவும், உங்கள் உலக விவகாரங்களை குறைவாகவும் நினைத்தால், எனது பணி நன்றாக நடக்கும். நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் எனக்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். தக்க நேரம் வரும்போது, உங்களில் எவரும் தோல்வியடைய மாட்டீர்கள்.**

பாபா கேலி செய்தார், **“நீங்கள் அனைவரும் முரடர்கள்! குண்டர்கள் சாதாரணமாக பணம் திருடுகிறார்கள், வங்கிகளைக் கொள்ளையடிக்கிறார்கள்; நீங்களும் ஆன்மீகக் குண்டர்களாக இருந்து கடவுளைத் திருட வேண்டும்! துரோகிகள் தங்கள் நோக்கங்களை அடைய உயிரைப் பணயம் வைக்கவும் அஞ்ச மாட்டார்கள். நீங்களும் கூட, கடவுளை அடையும் உங்கள் முயற்சிகளில் வாழ்க்கையைக் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும்.”**

இத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

அன்று பிற்பகலில், பாபா மீண்டும் தனது பணியில் ஏற்படும் ‘பின்னடைவு’களைக் குறிப்பிட்டார்:

**இப்போது மேலும் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. எல்சா, பைதூல் இருவரும் அழைத்து வந்த மஸ்திற்கு உடல்நலம் சரியில்லை. 20ஆம் தேதி முதல் 21 வரை அவருடன் பணிபுரிய நினைத்தேன், ஆனால் பைதூல் அவருக்கு ஆறு தட்டு நிறைய பருப்பு, அதன் மேல் காரசாரமான மாமிசத்தையும் வழங்கினார். இது மஸ்தின் வயிற்றைப் பாதித்து, நான் செய்ய விரும்பிய பணிக்கு, பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அவர் ஒரு சிறந்த மஸ்த். இப்போது அவர் வயிற்றுப்போக்கால் உயிரைத் துறந்தால், அது எனது தலையிலும் பைதூலின் தலையிலும் பெரும் பாரமாக இருக்கும்!**

**அனைத்து பின்னடைவுகளுக்கும் எல்சா முக்கிய காரணம். ‘ஸ்டேஷன் வேகன்’ வாகனத்தைக் கொண்டு வராத மனிதர் அவர். அவரால்தான் சுற்றுப்பயணம் தள்ளிப்போனது. மேலும் அவர்தான் என்னிடம் மஸ்தைக் கொண்டு வந்தவர். ஜூலை 20ஆம் தேதிக்குள் மஸ்த் சரியாகிவிடுவதைப் பார்த்துக் கொள்ளுங்கள்; இல்லையெனில், அவருடனான எனது பணி முடிந்துவிடும். நீலுவின் அறிவுரைப்படி அவரது உணவு முறையை ஒழுங்குபடுத்த வேண்டும்.**

பாபா அப்போது கிருஷ்ணாஜியிடம் அவரது நிலைமையைப் பற்றி விவாதித்தார்: **“கடந்த ஆண்டுகளில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்களோ, அதற்கு நேர்மாறாக, ஆகஸ்ட் முதல் நவம்பர் இறுதி வரை, அடுத்த நான்கு மாதங்கள் நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் முடிவு செய்துள்ளேன். எந்த ஆசிரமத்திலும் அல்லது எந்த துறவியின் அருகிலும் இருக்க வேண்டாம்; எந்தப் பெண்மணியையும் தொடாதீர்கள்; எனக்காக எந்தப் பிரசார பணியும் செய்ய வேண்டாம்; ஆங்காங்கே அலைந்து திரியாமல் ஒரே இடத்தில் இருங்கள்; நான்கு மாதங்கள், முடிந்தவரை மௌனம் காத்து, என்னை நினைவில் கொள்ளுங்கள்.”**

கிருஷ்ணாஜி, பாபா கட்டளையிட்ட அதையே தான் செய்ய விரும்பியதாக பதிலளித்தார். அவர் தனது சொந்த கிராமமான மலபாரில் (கடலோர தென்னிந்தியா) ஒரு சிறிய குடிலில் தங்கி பாபா-புத்தகங்களைப் படிக்கப் போவதாக எடுத்துரைத்த அவருடைய ஆலோசனையை பாபா ஏற்றுக்கொண்டார்.

அப்போது, பேச்சின் தலைப்பை மாற்றிய பாபா, அந்த ஆண்டு டிசம்பரில், தமது உடலுக்கு தீவிரமான ஏதோ ஒன்று நடக்கும் என்று எதிர்பார்த்தாலும், ஆந்திரா, ஹமிர்பூர், மும்பை, பூனா, அஹமதுநகர் ஆகிய நகரங்களுக்கு 40 ஆண்களுடன் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார். அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு நிகழ்ச்சிகளின்போது இருந்ததைப் போல், அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்குவதற்கும், பூஜை, ஆரத்தி நிகழ்த்துவதற்கும், எந்தத் தடையும் இருக்காது. இந்த வகையில் முழுமையான சுதந்திரம் மேலோங்கும். ஆந்திரா குழுத் தலைவர்களிடம் இதைத் தெரிவிக்குமாறு ஆதி சீனியருக்குக் கூறப்பட்டது, மேலும் கேஷவ் நிகம் ஹமிர்பூரில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய இருந்தார்.

1953 ஜூலை 17 வெள்ளிக்கிழமை அன்று, பாபா, கிஷன் ஸிங்கின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், கேக் மற்றும் தேநீர் வழங்கினார். அதன்பிறகு, 'கடவுளின் நிலைகள்' (STATES OF GOD) குறித்த தமது சொற்பொழிவை, சில நாட்களுக்கு முன்பு வராதவர்களின் நலன் கருதி, தொடர்ந்து விளக்கினார்:

**மஜ்ஜூபின்** (MAJZOOB) **நிலை மிகவும் சிறப்பான நிலை, ஏனெனில் உலகத்துக்காகவும், அவருடைய உடலுக்காகவும் அவர் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. அவரே கடவுள் என்பதால் அவருள் மூழ்கிவிடுகிறார்! கடவுளைத் தவிர, அவருக்கு வேறு எதுவும் இல்லை.**

**ஜீவன்முக்தா** (JIVANMUKTA) **பூரண பௌதீக உணர்வுடன் இருப்பவர். அவர் உண்கிறார், அருந்துகிறார், ஆனால் உலகத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர் கூட உண்கிறார்கள், அருந்துகிறார்கள், ஆனால் அவர்களின் தொடர்பு முழு உலகுடனும், அனைவருடனும் உள்ளது.**

**கடவுள் தனது 'அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலை'யில்** (BEYOND, BEYOND STATE) **அளப்பரியதான சுதந்திரத்துடன் இருப்பதால், அவருக்குத் தன்னைப் பற்றிய உணர்வு கூட இல்லை. அந்த நிலையில், அவர் சக்தி, அறிவு, பேரின்பம், அழகு மற்றும் ஞானத்தின் ஆதாரமாகத் திகழ்கிறார், ஆனால் அவர் அவற்றைக் குறித்து முற்றிலும் அறியாமல் இருக்கிறார். அன்று நான் உங்களுக்கு, 'பரபிரம்மா' நிலையில் கடவுள் 'அல்லா' என்று அழைக்கப்படுகிறார் என்று சொன்னேன். அந்தப் பரிபூரணமான நிலையில், அவர் தனது அறிவு, சக்தி, பேரின்பம், நித்தியம் மற்றும் அளவிறுதியற்ற தன்மை ஆகியவற்றை உள்ளூர உணர்ந்திருந்தாலும், அந்த நிலையில் அவரால் அவற்றை வெளிப்படுத்த முடியாது.**

**மனித உருவில் வரும் இறை மனிதன்** (GOD-MAN, AVATAR), **இவை அனைத்தையும் வெளிப்படுத்த முடியும். கடவுள் என்றென்றும் சுதந்திரமானவர். கடவுள் நித்தியமானவர் என்று சொல்வதென்றால், அவர் எப்பொழுதும் உளதாயிருந்தார், எப்பொழுதும் உளதாயிருக்கிறார், எப்பொழுதும் உளதாயிருப்பார் என்று அர்த்தம். இதை நீங்கள் மூளையில்**

வாங்கிக் கொள்ள முடியாது. இந்த விஷயத்தை நாம், சாதாரண நிலையில் புரிந்துகொள்ளவும் முடியாது.

அவர் உளதாயிருந்தார் என கற்பனை செய்து பாருங்கள். 'உளதாயிருந்தார்' என்று சொல்வதானால் அதற்கு முன்பும் ஏதோ ஒன்று இருந்ததாக அர்த்தம். எனவே ஆரம்பம் என்ன, அது எப்போது ஆரம்பம் ஆனது? ஆரம்பமே இல்லாதபோது, முடிவு எப்படி இருக்கும்?

ஆரம்பமும் முடிவும் இல்லாததை, கற்பனையால் அளவிட முடியாது. கற்பனை வரம்புக்குட்பட்டதாக இருப்பதால், அது எல்லையற்ற நிலையைப் புரிந்துகொள்ள முடியாது; மேலும் கடவுளின் அப்பாற்பட்ட நிலை கற்பனைக்கு அப்பாற்பட்டது.

புத்தியின் மூலம் நாம் கடவுளை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது என்பதே இதன் பொருள். நான் என்ன சொல்கிறேன் என்பது கீதை, உபநிடதங்கள், வேதாந்தம், பைபிள் மற்றும் ஸூ்ஃபி இலக்கியங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் எழுதப்பட்டிருந்தாலும் கடவுள் அறிவுக்கு அப்பாற்பட்டவர் என்பதால், அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. (மனதின்) புரிதல் அவரை மூளையால் வாங்கிக் கொள்ள முடியாது. அப்படியானால் நீங்கள் அவரைப் படித்துப் புரிந்துகொள்ள முயல்வதால் என்ன பயன்? எனவே கடவுள் புரிந்துகொள்ள முடியாதவர்.

கடவுள், 'ஒருவரே' என்றும் சொல்ல முடியாது. ஒருமை பற்றிய எண்ணம் அவரைக் கட்டுப்படுத்துகிறது, மேலும் அவர் எல்லையற்றவர். எனவே 'கடவுள் உளதாயிருக்கிறார்' (GOD IS) என்று மட்டுமே சொல்ல முடியும். ஆதியும் அந்தமும் இல்லாத அப்பாற்பட்ட நிலையில் கடவுளைத் தவிர வேறு 'ஒன்றுமில்லை' என்றுதான் சொல்ல முடியும். அதைச் சொல்வதன் மூலம், கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று அர்த்தமாகிறது. எனவே, 'ஒன்றுமில்லை' என்ற நிலை ஒன்று உள்ளது! இந்த 'ஒன்றுமில்லாத' நிலை எப்படி பிரபஞ்சமாக உருவெடுக்கிறது என்பதை இப்போது பார்ப்போம்!

கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே இந்த 'ஒன்றுமில்லாத' நிலை கடவுளிடம் ஓர் உள்ளார்ந்த அங்கமாக உள்ளது. கடவுள் ஒருவரே என்றால் அவரே எல்லாம். எனவே இந்த எல்லையற்ற எல்லாவற்றிலும், 'ஒன்றுமில்லாத' தன்மை உள்ளார்ந்த அங்கமாக இருக்கும் - ஆனால் 'ஒன்றுமில்லை' என்ற நிலை இருக்கிறது.

வேதாந்தத்தில் முதல் கற்பனை 'லெஹர்' - LAHAR (தற்போக்கெண்ணம், WHIM - அதாவது, திடீரென காரணம் புரியாமல் தோன்றிய ஆர்வம்) என்று அழைக்கப்படுகிறது; ஸூ்ஃபிக்களால் இது 'குமன்' (GUMAN - ஆர்வம், நாட்டம் கொள்ளுதல்) என்று கூறப்படுகிறது. இந்த முதல் கற்பனையானது தன்னைத்தானே அறிய, ஆரம்பமற்ற தொடக்கத்தில், முதலாவதாக, தானே வந்த தற்போக்கான தூண்டுதலாக இருந்தது. இந்த உந்துதல் தோன்றியவுடன், தொடக்கத்தின் ஆரம்பம் தொடங்கியது - இது கடவுளின் ஆரம்பம் அல்ல, ஆனால் கடவுளில் உள்ளார்ந்த அங்கமாக உள்ள

'லெஹர்' அல்லது தற்போக்கெண்ணத்தின் ஆரம்பம். இந்தத் தற்போக்கெண்ணம் 'நான் யார்?' (WHO AM I?) என்ற முதல் கேள்வியை எழுப்பிய அடுத்த கணமே, 'ஒன்றுமில்லா' தன்மையுடைய 'மாயை' (NOTHING) உருவாக்கப்பட்டது, மேலும் தன்னை அறிவதற்கு பதிலாக, கடவுள் இந்த 'ஒன்றுமில்லா' தன்மையுடைய 'மாயை'யை அறியத் தொடங்கினார்.

எடுத்துக்காட்டாக, ஒரு தற்போக்கெண்ணம் (திடீர் ஆர்வம்) தோன்றும்போது நீங்கள் நன்றாகத் தூங்குகிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள்; இப்போது எல்சா, தொந்தரவு தரும் ஒரு நபராக இருந்து, உங்களை எழுப்புகிறார். இப்போது எல்சாவின் இந்த இடையூறுக்கு அர்த்தம், தன்னைத்தானே தெரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான். எனவே எல்சா தொந்தரவு செய்யும் அந்த வேளையில், நீங்கள் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து படிப்படியாக விழித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் விழித்ததும் என்ன பார்க்கிறீர்கள்? உங்கள் முன் உங்கள் நிழலைப் பார்க்கிறீர்கள். இவ்வாறு, கடவுள் திடீரென விழித்தெழுந்தபோது, அவர் தனது சொந்த நிழலை அவருக்கு முன்னால் காணநேர்ந்தது. பரிணாம வளர்ச்சியின் ஏழு நிலைகளைப் பார்த்து முடித்த பின்னர், அவரது கண்கள் முழுமையாக திறக்கப்பட்டு, அவர் தனது முழு 'நிழலை'யும் பார்த்தார்.

இந்த முழு நிழலின் பொருள் என்னவெனில், பரமாத்மாவில் உள்ளார்ந்த அங்கமாக இருந்த தற்போக்கெண்ணத்தின் தொடக்கத்துடன் தன்னை வெளிப்படுத்திய 'ஒன்றுமில்லாத' தன்மை.

ஏழு நிலைகளில் (எரிவாயு, கல், காய்கறி, புழு, மீன், பறவை, விலங்கு) இந்த 'ஒன்றுமில்லாத' தன்மையைக் கண்டு அவர் மனிதனாக உருவெடுத்தார். அவர் தனது எல்லையில்லா நிலையை முற்றிலும் மறந்துவிட்டார். அவர் தனது ஆற்றல், பேரின்பம், அறிவு ஆகியவற்றின் பார்வையை இழந்தார், மேலும் ஒன்றுமில்லாத நிழலின் ஊடகத்தின் மூலம், மனப்படிவங்களுக்கேற்ப, 'ஒன்றுமில்லா' நிலையில் தன்னைக் கண்டார்.

அவர் வடிவங்களை மாற்றிக்கொண்டே செல்கிறார் - சில சமயங்களில் ஆணாக அல்லது பெண்ணாக, சில சமயங்களில் அழகாக அல்லது அழகற்றவராக, சில சமயங்களில் பணக்காரனாக அல்லது ஏழையாக - அவர் வடிவங்களை மாற்றிக்கொண்டே இருக்கிறார். அவர் துன்பம், இன்பம், இறப்பு, பிறப்பு ஆகியவற்றை அனுபவிக்கிறார் - இவை அனைத்தும் மாயை, சுத்த கற்பனை, ஏனெனில் அனைத்தும் தற்போக்கெண்ணத்தின் தொடக்கத்தில் தோன்றிய ஒன்றுமில்லாத நிலை. ஏழு நிலைகளைக் கடந்ததும் அவர் கண்கள் முழுமையாகத் திறந்தன. அவை முழுவதுமாக மனித வடிவில் திறக்கப்பட்ட பின்னர், அவர் வெளி உலகத்தை அனுபவித்தார்; அதன் பின்னர் அவர் ஏழு ஆன்மீகத் தளங்கள் என்று அழைக்கப்படும் உள் சுழற்சியின் ஏழு நிலைகளில் தன்னைக் காணத் தொடங்கினார்.

கடவுள் தன்னை அறிய விரும்புகிறார், ஆனால் தன்னை அறிந்து கொள்வதற்கு முன்னர் அவர் துன்பத்தையும் இன்பத்தையயும் அனுபவிக்கத் தொடங்குகிறார். ஏழு ஆன்மீகத் தளங்கள் வழியாக பயணம் செய்த பின்னர், அவர் தனது தெய்வீகத்தை முழுமையாக உணர்கிறார். சிலர் துன்பமாகவும், சிலர் மகிழ்ச்சியாகவும், சிலர் அழகற்றவராகவும், சிலர் அழகாகவும், சிலர் பணக்காரராகவும், சிலர் ஏழைகளாகவும் இருப்பதைக் காண்கிறீர்கள். ஆனால் இவை அனைத்தும் மாயை. நீங்கள் இறைநிலையை அடைந்து சுதந்திரமாகும்போது, இதெல்லாம் ஒரு கனவு என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்!

கடவுள் தம்மைத் தெரிந்துகொள்ளும் திடீர் ஆர்வம், தற்போக்கெண்ணத்தை அடையப்பெற்றபோது, 'ஆரம்பம்' தொடங்கியது, 'ஆரம்பம்' என்று இருந்தால் 'முடிவு'ம் உண்டு. எனவே இப்போது திடீர் ஆர்வத்தால் 'பிறந்த' இந்த 'ஒன்றுமில்லா தன்மையுடைய மாயை', ஆரம்பம், முடிவு மற்றும் கடவுளுக்கு எதிரான அனைத்தையும் எதிர் கொள்கிறது அல்லது அனுபவிக்கிறது.

'அனைத்திற்கும் அப்பாற்பட்ட' நிலையில் கடவுள் உருவமற்றவர். எனவே 'ஒன்றுமில்லா' நிலையில் உருவம் இருக்க வேண்டும். எல்லாமே கடவுள் எனும்போது இந்த 'ஒன்றுமில்லா' நிலையும் அவருள் மறைந்து ஓர் அங்கமாக இருக்க வேண்டும். 'ஒன்றுமில்லா'தது, கடவுளின் 'எல்லாமே' என்ற நிலைக்கு எதிரானது. 'எல்லாமே கடவுள்' எனும்போது அது உருவமற்றது; எனவே, 'ஒன்றுமில்லா மாயை' உருவத்தைக் கொண்டிருக்கும். கடவுள் முடிவில்லாதவர்; மாயைக்கு முடிவு உள்ளது. கடவுள் எல்லையற்றவர்; மாயை வரையறுக்கப்பட்டது. கடவுளை 'ஒன்றானவன்' என்று அழைக்க முடியாது, ஏனெனில் அவர் 'ஒருமை'த்தன்மையில் (ஒப்பிடுவதற்கு அப்பால்) மிகவும் தனித்துவமானவர்; அதேசமயம் மாயை பன்மடங்கைத் தன்னுள் அடக்கியது.

மாயை வெளிப்படும் வேளையில், சுதந்திரமான மற்றும் சட்டத்திற்கு அப்பாற்பட்ட கடவுள், சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிறார். என்ன சட்டம்? ஒன்றுமில்லாத மாயையின் சட்டம்! இப்போது ஒன்றுமில்லாத மாயையின் அர்த்தம் ஒன்றுமில்லை என்பதால், அது நிழல் என்று அழைக்கப்படுகிறது. அப்படியென்றால் மாயை என்னும் நிழலின் நிழல் என்னவாக இருக்கும்? இங்கே இவை அனைத்தும் எப்படி நடந்தது?

எல்சாவின் கையின் நிழலைக் காட்டி, பாபா விளக்கினார்:

இந்த நிழல், ஒளி மற்றும் உங்கள் கையின் காரணமாக உள்ளது; நிழல் உங்கள் கையில் மறைந்திருந்தது. ஒளி என்பது திடீர் ஆர்வம் (தற்போக்கெண்ணம்). நிழல் உள்ளார்ந்த அங்கமாக மறைந்துள்ளதால் அது ஒன்றுமில்லாத நிலையில் உள்ளது! ஒன்றுமில்லாத இந்த நிலை மாயையை நிர்வகிக்கும் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

நம்மைப் பொறுத்தவரை, மாயை இந்தச் சட்டத்தால் பிணைக்கப்பட்டுள்ளது. மாயையில் திரிபுவன் (மூன்று ஆன்மீக நிலைகள்) எனப்படும் மூன்று நிலைகள் உள்ளன: ஆழ்மனம், சூட்சுமம் (நுட்பமான) மற்றும் பௌதீக நிலைகள். மூன்று நிலைகளும் மாயையின் சட்டத்தின் கீழ் கட்டுப்படுபவை. ஒவ்வொருவரின் முகத்தோற்றமும் வித்தியாசமாக இருந்தாலும், மாயையின் சட்டத்தின்படி ஒவ்வொருவருக்கும் இரண்டு காதுகள், ஒரு மூக்கு, இரண்டு கைகள் உள்ளன. இந்தச் சட்டமே ஒவ்வொரு பிணைப்புக்கும் காரணம், அதிலிருந்து ஒருவர் விடுவிக்கப்படும் வரை அது நீடிக்கும்.

மாயையின் இந்தச் சட்டத்தின்படி எல்லாம் சீரமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு வடிவங்களின் நிலையான எண்ணிக்கை, பிறப்பு, இறப்புகளின் நிலையான எண்ணிக்கை - அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உண்மையில், இதெல்லாம் ஒன்றுமில்லை! சில பிறவிகள் நல்லவை, சில அல்லாதவை. இது அலைவரிசை போல வளைந்து வளைந்து செல்லும் முறையைப் பின்பற்றுகிறது. ஒருமுறை பணக்காரன், பின்னர் ஓர் ஏழை பெண். பிறப்பு இறப்பு எனும் சுழற்சி முடிந்து விடுதலை அடையும் வரை இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும்.

ஒன்றுமில்லாத (மாயை) நிலையின் சட்டம், சொல்லப்போனால், ஒன்றுமே இல்லை! துன்பம் என எதுவும் இல்லை. இந்தச் சட்டத்தை அறியாததால் மக்கள் அழுது புலம்புகிறார்கள், துன்பப்படுகிறார்கள், அநீதி மற்றும் இதுபோன்ற எல்லாவற்றையும் பற்றி புகார் கூறுகிறார்கள். இது கடவுளின் அநியாயம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் கடவுளுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை!

ஒன்றுமில்லாத (மாயை) நிலையின் இந்தச் சட்டம் கடவுளிடம் இல்லை. இது ஆழ்மன, சூட்சும மற்றும் பௌதீக வடிவங்களில் உள்ளது. எனவே மாயை என்றால் ஒன்றுமில்லை - இன்பம் அல்லது துன்பம், பிறப்பு, இறப்பு, அறம், பாவம் என்று எதுவும் இல்லை!

ஓர் ஆன்மா இந்த மாயையின் விதியிலிருந்து தப்பித்து, கடவுளோடு - இந்தச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட கடவுளோடு - இணைந்தால், ஆன்மா தானே கடவுளாகிறது மற்றும் அனைத்து பிணைப்புகளிலிருந்தும் விடுபடுகிறது; எனவே, சட்டம் இல்லை, பிணைப்பு இல்லை. இறை உணர்வுக்குப் பின்னர் ஓர் ஆன்மா பௌதீக உணர்வைக் கொண்டிருந்தால் (சத்குருவாக மாறுகிறது), பின்னர் அவர் இந்தச் சட்டம் நிலவும் இவ்வுலகில் கடவுளைக் கொண்டு வருகிறார். அவர் சட்டமற்ற கடவுளை இப்பூவுலகில் கொண்டுவருகிறார், ஆனால் அவர் தனது சட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலையை - அவரது எல்லையற்ற சக்தியை - தொடர்ந்து உணர்ந்து வருவதால், சட்டம் அவரைத் தொட முடியாது. சட்டமற்ற கடவுள் எல்லையற்றவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர்.

**இப்போது ஜீவன்முக்தா** (கடமை எதுவும் இல்லாத கடவுளை உணர்ந்த ஆன்மா) **சட்டத்தால் ஒருபோதும் தீண்டப்படுவதில்லை. அவர் உண்கிறார், அருந்துகிறார், எல்லாவற்றையும் செய்கிறார். அவரது நிலை தனித்துவமானது. அவர் அனைத்தையும் செய்கிறார், அனைத்தையும் செய்யும் வேளையில், எதையும் செய்யாமலும் இருக்கிறார். அவருடைய நிலை மிகவும் தனித்துவமானது, எல்லாவற்றையும் செய்தாலும், அவர் எதையும் செய்யவில்லை. அவர் உண்ணுவதில்லை, அருந்துவதில்லை, தூங்குவதில்லை - ஒன்றும் செய்வதில்லை. பௌதீக உணர்வில், இது மஜ்ஜூபின் நிலை போன்றது.**

**ஜீவன்முக்தா என்பதன் பொருள், பௌதீக உடலில் இருந்தாலும், மாயையின் சட்டத்திலிருந்து விடுபட்டவர் என்பதே! புத்தியின் வழியாக எவராலும் இறைவனை உணர முடியாது. இறைவன் மீதான அன்பு நேசிப்பவனை எரித்து சாம்பலாக்கும் வகையில் இருக்க வேண்டும்.**

**இப்போது அவதார புருஷர் அல்லது பரிபூரண குருநாதரைப் பற்றிய விளக்கத்தைக் கேளுங்கள். அவதார புருஷர் பல யுகங்களுக்குப் பிறகு வருகிறார். மாயையின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட கடவுள், சட்டத்தால் ஆதிக்கம் செலுத்தும் பூமியில் இறங்கி வருகிறார். மாயையின் சட்டம் அவரைத் தொட முடியாது ஆனால் அவர் சட்டத்தைத் தொடுகிறார். அவர் ஒன்றுமில்லாத மாயையின் சட்டம் என்பதைப் புரிந்துகொண்டு, ஒரு சாதாரண மனிதனைப் போலவே செயல்படுகிறார், மேலும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களை அதிலிருந்து விடுவிக்க தனது அளவிறுதியற்ற சக்தி, அறிவு, பேரின்பம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்.**

**அதனால்தான் "நீங்கள்" போகலாம்** ("YOU" GO), **நான் "வருவேன்"** (I WILL "COME") **என்று சொல்கிறேன். இதன் பொருள் என்னவெனில், நீங்கள் ஒன்றுமில்லாத மாயையை விட்டுவிட வேண்டும், அப்போது, எல்லாமாகிய நான் உங்களுக்குள் வாழலாம்; அதனால், "நீங்கள்" என்பதே இல்லாமல், நீங்கள், நானாக மாறுகிறீர்கள்** (YOU BECOME ME)! **ஒன்றுமில்லை என்பது முற்றிலும் ஒன்றும் இல்லை, மேலும், அதை விட்டுவிடுவதன் அர்த்தம், அது உண்மையில் ஒன்றும் இல்லை என்பதை நீங்கள் உணர்ந்துகொள்வதே ஆகும்; மேலும் நீங்கள் அதற்குக் கட்டுப்பட வேண்டிய தேவை இராது.**

அன்று இரவும் மறுநாள் காலையிலும் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர். ஹமிர்பூர் தரிசன திட்டத்தைப் பற்றி விவாதிக்க கேஷவ் நிகமிடம் சில நாட்கள் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

ஆந்திர நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்க பாபா, குடும்ப சாஸ்திரியை டெஹ்ரா டூனுக்கு அழைத்தார். 1953 ஜூலை 26 ஞாயிற்றுக்கிழமை அன்று நிகழ்ந்த உரையாடலின் போது, பாபா, சாஸ்திரியிடம் இவ்வாறு விளக்கினார்:

கடவுளை அறிவது என்பது கடவுளாக மாறுவது. நீங்கள் ஒரு சத்குருவாக மாறாத வரை, சத்குரு என்றால் என்ன என்பதை நீங்கள் எப்படி அறிந்துகொள்வது? நான் அவதார புருஷராகவோ, சத்குருவாகவோ அல்லது சாதாரண மனிதனாகவோ இருக்கலாம். நான் எதுவாகவும் இருக்கலாம்; நீங்கள் என்னை என்னவாக கருதுகிறீர்களோ அதுவே நான். நான் அவதார புருஷர் என்று நீங்கள் நினைத்தால், நான்தான் அவதார புருஷர்; நான் ஒரு சாதாரண மனிதன் என்று நீங்கள் நினைத்தால், நான் ஒரு சாதாரண மனிதன். நான் என்னவாக இருக்கிறேனோ அதுவாகவே இருக்கிறேன். எல்லாமாக இருப்பதன் மூலம், நான் என்னவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதுவாகவே இருக்கிறேன்.

இருப்பினும், இது முக்கியமல்ல. நான் பாபா என்றால், எனது பணிக்கு எவரும் தேவையில்லை. இருந்தும் நான் உங்களை என்னுடன் இருக்கச் சொல்கிறேன், ஆந்திராவில் வாழும் சேவகர்களை எனக்காக நான்கு மாதங்கள் பணிபுரியுமாறு கேட்டுக்கொள்ளக் கூறுகிறேன். எனது வாழ்க்கையையும், பணியையும் திரும்பிப் பார்த்தால் எனக்கு நிரந்தரம் என்று எதுவும் இல்லை.

மருத்துவமனைகள், பள்ளிகள், ஆசிரமங்கள் கட்டப்பட்டு பின்பு தகர்க்கப்படுகின்றன. ஏனெனில் எனக்கு எந்த ஸ்தாபனமோ, அமைப்புகளோ தேவையில்லை. ஆனாலும் எனக்கு சேவகர்கள் தேவை. ஏன்? கடவுள், நான் வழங்குவதை அடையப்பெறும் விதத்தில் மக்களை ஆயத்தப்படுத்துவதற்காக. காலை உதய சூரியன் எல்லா இடங்களிலும் தனது கதிர்களை வீசுகிறது, ஆனால் சூரியனுக்கு முழு உலகத்துடனும் தொடர்பு தேவையில்லை. 400 அல்லது 700 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகம் முழுவதும் வீடுகளால் நிரம்பியிருந்தால், அதன் கதிர்கள் உலகில் ஊடுருவி மனிதகுலத்தை அடைய வழியில்லை என்றால், சூரியன், அதன் முழு கதிர்கள், அனைத்திலும், அனைவரின் மீதும் விழும்படி மக்களிடம் வீடுகளின் கூரைகளை அகற்றச் செய்யலாம். எனது அன்பின் செய்தியைப் பரப்புவதன் மூலம், கீழ்த்தரமான ஆசைகளின் கூரைகளை இடித்துத் தகர்க்கக்கூடிய அத்தகைய சேவகர்கள் எனக்குத் தேவை, அதனால் நேரம் வரும்போது - மேகமற்ற நடுப்பகலில் மக்கள் சூரியக் கதிர்களை அடையப் பெறுவதைப் போல் எனது அருளைப் பெற முடியும்.

சர்ச்சைகள், சமூகங்கள், பிரிவுகள், அல்லது இதுபோன்ற விவகாரங்களில் ஈடுபடாதீர்கள். நீங்கள் ஒரு மையமாக முழு மனதுடன் நான்கு மாதங்களுக்குப் பணியாற்ற விரும்புகிறேன். நேர்மை, அன்பு மற்றும் கடவுளுக்கான ஏக்கம் ஆகியவற்றின் செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம், உழைத்து அவர்களை தயார்படுத்துங்கள். டிசம்பரில் நான் வழங்குவதை அவர்கள் அடையப் பெறும் விதத்தில் அனைவரையும் உற்சாகப்படுத்துங்கள்.

**பொதுவாக நதிகள் கடலில் சென்றடையும். ஆனால் தற்போது நதிகள் வறண்டு வருகின்றன. எனவே, பெருங்கடலிலிருந்து நதிகளை நோக்கி 'வெள்ளம்' பெருக்கெடுக்கும் நேரம் இது!**

**நான் எதுவாகவும் இருக்கலாம், ஆனால் நீங்கள் முழு மனதுடன் உழைக்கும்போது, எங்கும் நிறைந்தவரும், அனைத்தையும் அறிந்தவருமான கடவுள், நீங்கள் கேட்காமலேயே வெகுமதிகளை வழங்குகிறார். நான் சைத்தானாக இருந்தாலும், உங்கள் செயலுக்கு ஏற்ப கடவுள் உங்களுக்கு வெகுமதி வழங்குவார்!**

**கடவுள் முற்றிலும் சுதந்திரமானவர்; மற்றும் அவரை அறிய, நாம் முழு மனதுடன், உள்ளார்ந்த ஐயப்பாட்டிற்கு இடமின்றி உழைக்க வேண்டும். சுதந்திரமாக இருப்பவர் எந்தவிதமான தயக்கத்தையும் விரும்புவதில்லை. நீங்கள் அவருக்காக நேர்மையாக, பரந்த மனதுடன் உழைத்தால், கடவுள் உதவுவார். பிறரின் புகழ் பாடுபவராக மாறாதீர்கள், உங்களுக்கும் பிறருக்கும் ஒருபோதும் நேர்மையற்றவர்களாக இருக்காதீர்கள். இயற்கையாக நேர்மையுடனும் எளிமையாகவும் இருங்கள். அன்பின் பொருட்டு என்னை முழு மனதுடன் நேசிக்கும் ஒருவரை எனது மையமாக நான் கருதுகிறேன். கடவுள் எனக்கு நிரந்தரமான அந்த வரத்தை வழங்கட்டும். கடவுள் மட்டுமே உண்மையானவர். கடவுள் அனைத்து அன்பு, அனைத்து ஞானம், அனைத்து சக்தி, அனைத்து அழகுக்கும் ஆதாரமானவர்; அனைத்துமே கடவுள்!**

பாபா, சாஸ்திரியுடன் இவ்வாறு எழுத்துப்பலகையில் கூறி முடித்தார், **"உங்களைக் கடவுளிடமிருந்து விலக்கி வைக்கும் ஒரே ஒரு விஷயம்தான் காமம். அதில் எப்பொழுதும் அகங்காரம் இருக்கிறது. எனவே தூய்மையான வாழ்க்கையை வாழுங்கள்."**

அந்த நாளின் பிற்பகுதியில், ஜூலை 26 அன்று, பாபா ஆண்களுக்கான பங்களாவில் எல்சா, ஹெலன், குமார், கேக்கி நலவாலா, ஹரிசந்த் மற்றும் கிஷன் ஸிங் ஆகியோருடன் கிரிக்கெட் விளையாடினார். எல்சா ஓர் அணிக்குத் தலைவராகவும், கிஷன் இரண்டாம் அணிக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். பாபா இருபுறமும் விளையாடினார். ஆட்டம் ஒன்பது மணிக்குத் தொடங்கியது, ஒரு சிலரைத் தவிர, இதர அனைவரும் பங்கேற்பாளர்கள், அவர்களில் சிலருக்கு விதிகள் கூட தெரியாது. பாபா ஒரு சிறிய கைக்குட்டையைத் தலையில் கட்டியபடி பந்தை அடிக்கவும், வீசவும் செய்தார்; சில வேளைகளில் அழைப்பின் பேரில் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார். எல்சாவின் அணி இறுதியில் தோல்வியுற்றது, பாபா அவருக்கு கிரிக்கெட் மட்டையால் அவரது பின்புறத்தில் இரண்டு 'அறை' கொடுத்தார். அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிரிக்கெட் விளையாட பாபா முடிவு செய்து, அவர்களின் வாராந்திர விளையாட்டுகள் சில காலம் தொடர்ந்தன. பாபா சிறந்த வீரராக இருந்ததால், இரு தரப்பினரும் பாபாவை தங்கள் பக்கம் சேர்க்க விரும்பினர். சில சமயங்களில் அவர்களிடையே எழும் பிரச்சினையைத் தீர்க்க

ஒரு நாணயத்தை வீசி ‘பூவா-தலையா’ போடுவது வழக்கம். பாபா விளையாடிய அணி தவறாமல் வெற்றி பெற்றது.

நாக்பூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிவில் பொறியியலாளர் டி.ஏ. பிள்ளை (T.A. PILLAI) மற்றும் அவரது குடும்பத்தினர் கேஷவ் நிகம் மூலம் பாபாவின் தொடர்பில் வந்தனர். அவர்களுக்கு வீணா, மீரா என்ற இரண்டு மகள்கள் இருந்தனர். நாக்பூரில் பாபாவை சந்தித்த பிறகு, வீணா ஒரு மஸ்தானியைப் போல நடந்து, உடல் நலிந்து போனார். அவர் மிக அரிதாகவே பேசவும், உண்ணவும் செய்து, தனியாகவே இருந்து வந்தார்; அவர் ஏதோ ஒன்றில் மனம் ஒன்றிய முக பாவனையுடன் மணிக்கணக்கில் அமர்ந்திருந்தார். பாபாவின் புகைப்படத்திற்கு முன்னால் அவர்கள் ஆரத்தி நிகழ்த்தும் வேளையில் மட்டுமே அவர் ‘உயிர்பெற்று’ - ஆரத்தியில் கலந்துகொள்ளும் விதத்தில் கூப்பிய கரங்களுடன் நின்றார். பாபா குடும்பத்தாரை அழைத்த போது அனைவரும் 27ஆம் தேதி வந்தனர்.

வீணாவைப் பற்றி பாபா கூறினார்: “**இத்தகைய** (அவரிடம் உள்ளதைப் போன்ற) **அன்பைப் பெற, ரிஷிகளும் முனிகளும், பல்லாயிரம் ஆண்டுகளாகத் தவம் புரிகிறார்கள். லட்சக்கணக்கான பேர்களில் ஒருவர் மட்டுமே இப்படிப்பட்ட அன்பை அடையப் பெறுகிறார். அவர் என்னில் முழுமையாக இணைந்திருக்கிறார். அவர் என்னுடையவர்.**”

பாபா அந்தப் பெண்மணியை மகளிர் மண்டலியிடம் அழைத்துச் சென்றார். வீணா உண்ணுவதைக் கிட்டத்தட்ட நிறுத்திவிட்டாலும், அன்று பாபாவின் கைகளிலிருந்து உணவு உண்டார். பாபா அவருக்கு சிறிது உணவை ஊட்டிவிட்டு இன்னும் கொஞ்சம் உண்ணுமாறு கூறினார். அவர் உடல் உணர்வை இழந்து, உண்மையில் இறை போதையில் மஸ்தானி போல் ஆகிவிட்டார். பாபா அவர் தந்தைக்கு உறுதி அளித்தார், “**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, அவர் இருக்கும் நிலையைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது.**”

இரண்டாவது மகள் மீராவிடம், பாபா, “**எனது அன்பில் மீராபாயாக மாறி, தூய்மையாக இருங்கள்**” என்று ஆசீர்வதித்தார். மீராவிற்கு ஏதேனும் பொருத்தமான வேலை தேடித் தருமாறு பாபா, சாஸ்திரியிடம் கேட்டுக்கொண்ட போது, அவரும் ஆந்திராவில் வேலை தேடுவதாக உறுதியளித்தார். பாபா, சாஸ்திரியுடன் குடும்பத்தினரை ஆந்திராவிற்கு அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா சமீபத்தில் கொரியா போர் (KOREAN WAR) குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார்; இந்தப் போர் 1953 ஜூலை 27 அன்று முடிவுக்கு வந்தது.

29ஆம் தேதி, பாபா, ‘நங்கா’ மஸ்திற்கு பாவ் கல்சூரி செய்யும் சேவையைக் குறித்து பேசினார்: “**நீங்கள் ஒரு முக்கியமான கடமையைச் செய்கிறீர்கள். இது எனது பணி. நீங்கள் எனது பணியில் எனக்கு உதவுகிறீர்கள், ஏனெனில் அவரது உடல்நிலையை நன்கு கண்காணித்து, அவரை நன்றாக வைத்திருப்பது, ஆகஸ்ட் முதல் எனது பணிக்கு உதவும். ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் அவருடன் தினமும் ஓரிரு மணிநேரம் அமர்ந்து,**

**இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை அவரை நீராட்டுவேன். உங்கள் வேலையைப் பொழுதுபோக்காக நினைக்காதீர்கள். அது ஒரு முக்கியமான கடமை. அவரை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்!"**

ஜூலை 30 அன்று, பாபா, துப்புரவாளரின் மகன் ஈஸாவை வணங்கி, இரண்டு ரூபாய் அன்பளிப்பாக வழங்கினார்.

பாபா எப்போதேனும் அந்த சிறுவனைத் தலைவணங்குவதை வழக்கமாகக் கொண்டார்; ஒவ்வொரு முறையும் ஈஸா மெய்சிலிர்த்துப் போனான், ஏனெனில் அவனுக்கு எப்போதும் இரண்டு ரூபாய் வழங்கப்பட்டது. உண்மையில், பாபா அடிக்கடி சிறுவனின் காலில் தலைவணங்க வேண்டும் என்று அவன் விரும்பினான். அவன் தனது நண்பர்களிடம், "நான் பாபாவை முழு மனதுடன் நேசிக்கிறேன்; அதனால்தான் அவர் எனக்கு இரண்டு ரூபாய் தருகிறார். நீங்களும் அவரை நேசிக்க வேண்டும், அதனால் நீங்களும் ஏதாவது அடைய முடியும்" என்று பெருமை பேசினான். ஈஸாவின் வற்புறுத்தலின் பேரில், அவனுடைய நண்பர்கள் பாபாவிடம் செல்வதும், ஈஸா அவர்களை பாபாவிடம் புகழ்ந்து பேசுவதும் அவ்வப்போது நடந்து வந்தது. ஆனால், பாபா ஒரு சிறுவனை மட்டும் தேர்ந்தெடுத்து தலைவணங்கினார். ஈஸா பிற நண்பர்களிடம், "உங்களுக்கு நேசிக்கத் தெரியாது! நான் என்ன செய்ய முடியும்? நான் எப்பொழுதும் உங்களைப் பற்றி பாபாவிடம் நல்லதையே கூறுகிறேன், ஆனால் உங்களுக்குள் போதிய அன்பு இல்லை" என்று கூறினான்.

அதே நாளில், பிரகாஷ்வதி, துறவி ஆனந்தமாயி மாயுடன் பாபாவைப் பார்க்க வந்தார். மாஞ்ஜ்ரி மாஃபியில் மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதற்காக மெஹர் பாபாவின் பங்களிப்பாக அந்தப் பெண் துறவிக்கு ரூ 1,000 வழங்கப்பட்டது.

ஹர்ஜீவன் லாலின் மகன் சுகந்த் (SUGANDH) கடந்த 30ஆம் தேதி அங்கு வந்த மற்றுமொரு பார்வையாளர் ஆவார். அவரது இளைய சகோதரர் இந்தர் (INDER) அப்போது இங்கிலாந்தில் இருந்தார்; பாபா, சுகந்திடம் உயர் கல்விக்காக அங்குச் செல்லும்படி கூறினார்.

குமாரின் நண்பர் பிரம்மா தத் (BRAHMA DUTT) என்பவர் அவ்வப்போது பாபாவிடம் வருவது வழக்கம். பிரம்மா தத், அன்றைய தினம் பாபாவிடம் வந்தபோது, ஏழெட்டு ஆண்டுகளாக ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட பிரம்மா தேவ் (BRAHMA DEV) என்ற நண்பரையும் அழைத்து வந்தார். உரையாடலின் போது, பாபா, அவரது நோயைப் பற்றி கேட்க, அவர் தனது நிலையை விவரித்தார். **"ஏழு நாட்கள் தண்ணீர் மட்டும் அருந்தி, உபவாசம் இருந்து, என்னை முழு மனதுடன் நினைவுகூருங்கள்"** என்று பாபா அவருக்கு அறிவுறுத்தினார். அவர் அதைச் செய்து தனது நோயிலிருந்து விடுபட்டார்.

1953 ஜூலை 31 அன்று உலக நிலைமைகளைப் பற்றி பாபா விளக்கினார்:

உலகில் எண்ணற்ற ஏற்ற தாழ்வுகள் ஏற்படும் என்று உணர்கிறேன்; மிகப்பெரிய எழுச்சிகள் நிகழும், மேலும் உலகின் பல பகுதிகள் பாதிக்கப்படும். இது இயற்கையான மற்றும் இயற்கைக்கு மாறான காரணங்களால் ஏற்படும் மற்றும் ஏதோ ஒரு சிறிய காரணத்தின் நிமித்தம் நடக்கும். எகிப்து, ஈரான், காஷ்மீர், பெர்லின் - இந்த நாடுகளைப் போலவே, இப்போது ஆஸ்திரியாவும் எழுச்சி அடைகிறது. போர் மூண்டால் பேரழிவு, முன்னெப்போதும் இல்லாதத்தை விட பெரிய அளவில் இருக்கும். அணுகுண்டுகளையும், கொடிய வாயுக்களையும் பயன்படுத்துவார்கள். ஆனால் நான் சொல்லப்போவது வேறு. இது போரைத் தூண்டலாம். ஒரு மேற்பரப்பில் பற்றிய நெருப்பை அணைப்பது எளிது, ஆனால் சுரங்கங்களும் அதைச்சார்ந்த கட்டிடங்களில் ஏற்படும் நெருப்பை அணைப்பது மிகவும் கடினம். நிலநடுக்கத்தால் குவெட்டா ஐந்தே நிமிடங்களில் தவிடுபொடியானது. அதில் நாற்பதாயிரம் பேர் உயிரிழந்தனர். அது நிகழும் போது அதைத் தடுக்க ஏதாவது பரிகாரம் இருந்ததா? இத்தகைய அழிவு இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான காரணங்களால் ஏற்படுகிறது.

கோஸி நதியில் (KOSI RIVER) ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நூற்றுக் கணக்கான மக்களைப் பலி கொண்டது; கிராமங்கள் சுத்தமாக அழிக்கப்பட்டன. ஆனால் அழிவைத் தடுக்க முடியவில்லை. இத்தகைய பேரழிவுகள் சிறிய அளவில், குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நிகழ்கின்றன. போர் மூண்டு, அணுகுண்டுகள் பயன்படுத்தப்பட்டால், அனைத்து நாடுகளும் இதில் ஈடுபடும். வெள்ளப்பெருக்கும், நிலநடுக்கமும் ஏற்படும், இதுபோன்ற பேரிடர்களுக்கு எந்தப் பரிகாரத்தையும் பரிந்துரைக்க முடியாது.

அணுகுண்டுகள் பரவலான நிலநடுக்கங்களை உருவாக்கும் என்று கூறப்படுகிறது. அணு ஆயுதப் போரில், பூமியின் வெளிப்புறத்தில் விரிசல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அணு மற்றும் ஹைட்ரஜன் குண்டைப் பரிசோதிக்கும் சோதனைகளின் விளைவாக, ஒரு முழுத் தீவு (பசிஃபிக் பெருங்கடலில் அமைந்த பிக்கினி அட்டோல் என்ற தீவின் ஒரு பகுதி - PART OF THE BIKINI ATOLL IN THE PACIFIC OCEAN) ஐந்து நிமிடங்களில் காணாமல் போனது. இதன் மூலப்பொருள் வாயு என்பதால் இப்படி நடந்தது. அதைப்பற்றி நான் எனது புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். மூலப்பொருள் ஆவியாகும் போது, விண்வெளி மற்றும் வாயுவில் மூன்று காரணிகள் உள்ளன. கோடிக்கணக்கான ஆண்டுகள் பழமையான உலகம் ஏழே நாட்களில் அழிந்துவிடும். இந்த உலகம் எவ்வளவு காலம் நீடிக்கும், ஏற்கனவே எத்தனை முறை அது உருவாகி அழிந்து விட்டது?

பல உலகங்கள் காணாமல் போனது போல், இதுவும் போகும். அதன் இடத்தைப் பிடிக்க, வேறுவோர் உலகம் தயாராகி வருகிறது. அதில் நான்கில் மூன்று பங்கு ஏற்கனவே தயாராக உள்ளது, மீதமுள்ள ஒரு பங்கு உருவாக்கப்பட உள்ளது. இன்று இந்த உலகம் அழிக்கப்பட்டால், பரிணாமம் இன்னொன்றில் தொடங்கும். பரிணாமம் என்பது காலங்களின் நிலையான

செயல்முறையைக் கொண்டுள்ளது - கற்காலம் (STONE AGE), காய்கறி காலம் (VEGETABLE AGE), புழு காலம் (WORM AGE) இதுபோன்ற மற்றும் பல. இந்த உலகம் இன்று அழிக்கப்பட்டால், ஒரு இடைவெளி இருக்கும், ஆனால் இயற்கையான செயல்முறைகளால் ஒரு புதிய உலகில் புதிய வாழ்க்கை, செயல்முறைக்கு வர லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகும். இன்னுமோர் உலகம் உருவாக பல லட்சம் வருடங்கள் தேவை.

இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான பேரழிவுகள், காலத்தின் சுழற்சிகளில் வருகின்றன, யுகங்களில் அல்ல. ஒரு சுழற்சி என்பது பல யுகங்களால் ஆனது. ஒரு நாளின் ஒரு பகுதியை மாதந்தோறும் சேர்ப்பதற்கு பதிலாக, கணக்கீட்டு நோக்கங்களுக்காக, நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், ஒரு நாள் சேர்க்கப்படுவதன் மூலம் ஒரு லீப் ஆண்டு (LEAP YEAR) நிகழ்கிறது. இதேபோல் இந்த அழிவு லட்சக்கணக்கான ஆண்டுகள் தாண்டுவதைக் குறிக்கும். நேரம் பற்றிய கேள்வியே இல்லை. லட்சக்கணக்கான ஆண்டுகள் என்பது ஒரு வினாடி என்று அர்த்தம், ஏனெனில் நேரம் என்று எதுவும் இல்லை.

எல்சாவின் வயது (எடுத்துக்காட்டாக) 40 என்று நினைத்துக் கொள்ளுங்கள். (எல்சாவைப் பார்த்து பாபா அவரிடம் கேட்டார்) இப்போது உங்களுக்கு 40 வருடங்கள் அப்படித்தானே? நீங்கள் 40 வருடங்களை புரிந்து கொள்ள முடியும், ஆனால் இந்த நேரத்தில் அல்ல. ஏன்? ஏனெனில் நேரம் பற்றிய கேள்வியே இல்லை.

இதன் பொருள் என்னவெனில் உங்களுக்கு 40 வயதாகிறது, ஆனால் இந்த 40 ஆண்டுகளைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டிய தேவையில்லை என்பதால், இந்த நேரத்தில் நீங்கள் அதைப் பற்றி உணரவில்லை. ஆனால் நீங்கள் அதை சிந்தித்துப் பார்த்தால், 40 வருடங்கள் முழுவதையும் ஒரு வினாடியில் நீங்கள் சித்தரிக்கிறீர்கள்; நீங்கள் அதைப்பற்றி நினைக்கவில்லை என்றால், அது உங்களுக்கு இல்லை. எனவே நித்தியத்தில் நேரம் பற்றிய கேள்வியே இல்லை.

அணு ஆயுதப்போர் (ATOMIC WARFARE) குறித்த பாபாவின் கருத்துக்கள், குறிப்பாக சரியான நேரத்தில் இருந்தன. பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு, ரஷ்யா தமது முதல் ஹைட்ரஜன் குண்டை (HYDROGEN BOMB) வெடிக்கச் செய்தது.

1953 ஆகஸ்ட் 2 அன்று நடந்த கிரிக்கெட் போட்டிக்குப் பிறகு, பாபா தனது குழந்தைப் பருவத்தை நினைவு கூர்ந்தார்:

(சிறுவயதில்) நான் அதிகாலையில் எழுந்து தேநீர் அருந்தி, வெளியே சென்று கிரிக்கெட் விளையாடினேன். திரும்பி வந்து நான் காலை சிற்றுண்டியை முடித்து, கோலிகள் விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டேன். மதிய உணவுக்குப் பிறகு, நான் சிறிது நேரம் ஓய்வெடுத்து கிட்டிப் புள்ளும், பிற்பகலில் தேநீர் அருந்திவிட்டு ஐந்து மணியளவில்

மீண்டும் காத்தாடிகளை பறக்கவிட்டு விளையாடினேன். இரவு உணவை முடித்து, சீட்டு விளையாடி நான் எனது நேரத்தைக் கழித்தேன்.

**நான் இப்போது அத்தகைய வாழ்க்கையை வாழ விரும்புகிறேன், ஆனால் மண்டலி என் அதிர்ஷ்டத்தை மாற்றிவிட்டனர். ஆரம்பத்திலிருந்தே எனக்கு விளையாட்டுகள் மற்றும் கதைகள் கேட்பதில் பிரியம் அதிகம். 700 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வரும் வேளையில், எனது நேரத்தை நான் அப்படியே கழிக்க முடியும்!**

அதைத் தொடர்ந்து பாபா, இந்தியாவைப் பற்றியும், பரிபூரண குருநாதர்கள் மற்றும் வெவ்வேறு அவதார புருஷர்களின் கடந்தகால பழக்கவழக்கங்களைப் பற்றியும் கூறினார்:

**இந்தியா ஆன்மீக பூமி என்று அழைக்கப்பட்டாலும், வேறு எந்த நாட்டிலும் மக்கள் இதுபோன்ற மூடநம்பிக்கை, குருட்டு நம்பிக்கை, மதச் சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றுவது இல்லை என்பது ஆச்சரியமாக உள்ளது. இப்போது, நான் கிரிக்கெட் விளையாடுவதைக் கண்டால், நான் ஆன்மீக குருநாதராகக் கருதப்படும் போது, மக்கள் என்ன கூறுவார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்! 99 சதவீதம் மக்கள், 'அவர் எப்படி ஆன்மீக குருவாக இருக்க முடியும்?' நாளை நான் மது அருந்தினால் அல்லது புகைப்பிடித்தால் அல்லது பொது இடத்தில் திரைப்படம் பார்க்கச் சென்றால், 99 சதவீதம் பேர் 'இது ஒரு குருநாதரின் செயல்களாக இருக்க முடியாது' என்று கூறுவார்கள். தாங்கள் உண்பதையே சத்குருவும் உண்கிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். மேலும் அவர்கள் திரைப்படம் பார்க்கப் போவதானால், ஒரு சத்குரு ஏன் போகக்கூடாது?**

**'ராமர் வேட்டையாடியதோடு மாமிசம் உண்டார், கிருஷ்ணர் கோபியர்களின் சகவாசத்தை அனுபவித்தார்' என்று நாம் அவர்களிடம் சொன்னால், அவர்களின் பதில் என்னவாக இருக்கும்: 'அவர்கள் இறை-மனிதர்கள், எதற்கும் கட்டுண்டவர்கள் அல்ல. இது அவர்களின் தெய்வீக லீலை… இறை நாடகம்…' என்று கூறுவர். நான் இப்போது கிரிக்கெட் விளையாடி வருகிறேன், திரைப்படங்கள் பார்க்கிறேன், இவையெல்லாம் ராமர் அல்லது கிருஷ்ணர் காலத்தில் நடைமுறையில் இல்லை. இன்றிலிருந்து, 400 முதல் 500 ஆண்டுகளுக்குப் பிறகு, மக்கள், 'பாபா அவதார புருஷர் ஆகையால் அவர் அதையெல்லாம் செய்ய முடிந்தது; அவர் என்றென்றும் சுதந்திரமாக இருந்ததால், அவர் கிரிக்கெட் விளையாட, திரைப்படங்களைப் பார்க்க முடிந்தது' என்று கூறுவார்கள்.**

**புகழ் வாய்ந்த துறவிகளும், ஸ்வாமிகளும் கூட நான் இப்படிப்பட்ட பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதைக் கண்டால் அதையே சொல்வார்கள். ஆனால் வேதாந்திகள், அறிவுப்பூர்வமாக நன்கு அறிந்தவர்கள் மற்றும் பரிபூரணம் என்பது ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொன்றிலும் - உயர்ந்த,**

தாழ்ந்த அனைத்திலும் மிகவும் தனித்துவமானது மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளது என்பதை நன்கு புரிந்து கொண்டவர்கள்.

மேற்கத்திய உலகம் பொருள்முதல்வாதத்தில் முன்னோடியாக இருக்க வேண்டும். அங்கு வாழும் என் அன்பர்களில் பலர் என்னை, திரை அரங்குகளுக்கு (சினிமாக்கள்) அழைத்துச் செல்கின்றனர், என்னை நேர்த்தியாக உடை அணியச் செய்கின்றனர், கிழக்கத்திய அன்பர்களுக்கு இருக்கும் எண்ணங்கள் அவர்களிடம் இல்லை. அவர்கள் என்னை 100 சதவீதம் கிறிஸ்துவைப் போலவே ஆன்மீக குருநாதராக எடுத்துக்கொள்கிறார்கள். கிறிஸ்து எப்படி நடந்து கொண்டார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

மேற்கத்திய நாடுகளிலும் புனிதர்கள் உள்ளனர், ஆனால் அவர்கள் கிழக்கத்தியர்கள் உணர்வதைப் போல் உணர மாட்டார்கள். அமெரிக்காவின் ஃபிலிஸ் ஃபிரடெரிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் என்னை 100 சதவீதம் நேசிக்கிறார், என் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர், மிகவும் கற்றறிந்தவர். நான் மண்டலியுடன் இருந்தபோது அவர் மர்ட்டில் பீச் மையத்திற்கு வந்தார். அவர் என்னை எப்பொழுதும் ‘பாபா டார்லிங்’ என்று அழைத்து, ‘இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள், மீன் உண்ணுங்கள், மாமிசம் உண்ணுங்கள், திரைப்படத்திற்கு வாருங்கள்’ என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

இயேசு, முஹமது இருவரையும் பற்றி பாபா இவ்வாறு விளக்கினார்:

கிறிஸ்துவின் வாழ்க்கை ஒரு துறவியின் வாழ்க்கையைப் போன்றது. சாதுக்களும், துறவிகளும் புனிதமான வாழ்க்கையை நடத்துகின்றனர், ஆனால் துறவியைக் குறித்த கருத்து, கிறிஸ்துவைக் குறித்த யோசனை மற்றும் பாபாவைப் பற்றிய எண்ணம் ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன! இன்று நாம், மனமார மது அருந்துகிறோம், பெண்கள் நம் முன் நடனமாடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அத்தகைய செயல்களை எனது மண்டலி பொருட்படுத்தமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் அவற்றின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்கிறார்கள். ஆனால் சில இரண்டு அல்லது மூன்று சுவாமிகள், ஏன் ஷிவானந்தாவே நம்மைப் பார்க்க நேர்ந்தால், அவர்கள் அதைப் பற்றி என்ன நினைப்பார்கள்? குருநாதர்கள் எப்பொழுதும் சுதந்திரமாக இருப்பதை அவர்கள் மறந்து, விமர்சனத்திற்குரிய எண்ணங்களை வெளிப்படுத்துவார்கள். ஆனால், மேற்கத்திய நாட்டைச் சேர்ந்த ஒரு தத்துவஞானி, நம்மைப் பார்க்க நேர்ந்தால், சுவாமிகளுக்குத் தெரிந்த அதே அளவு ஆன்மீகம் அவர்களுக்கும் தெரிந்திருந்தாலும், அந்தத் தத்துவஞானி முழு விருப்பத்துடன் அந்த நடன நிகழ்ச்சியில் பங்கெடுப்பார்.

முஹமது, அவருக்கு ஏழு மனைவிகள் இருந்தபோதிலும், நான்கு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவருக்குக் குழந்தைகளும் இருந்தனர். ஆனால் நான் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, குழந்தைகளைப் பெற நேர்ந்தால், நம் இந்திய மக்கள்,

‘அது பொருத்தமற்றது, அது உண்மையான ஆன்மீகம் அல்ல’ என்று கூறுவார்கள். முஹமதின் ஏழு மனைவிகள் மற்றும் குழந்தைகளைப் பற்றி நாம் அவர்களிடம் சொன்னால், அவர்கள் “அந்த நிலையை நீங்கள் அடைய முடியாது; அவர் கடைசியாக வருகை தந்த நபி!” என கூறுவர்; என்னை நேசிப்பவர்கள் இதுபோன்ற விஷயங்களில் அக்கறை காட்ட மாட்டார்கள். இவை அனைத்தும் கிழக்கத்திய நாட்டின் ஆன்மீக வீழ்ச்சியின் அறிகுறியாகும்.

இதைப் பற்றி மேலும் விரிவாக பாபா எடுத்துரைத்தார்:

**பார்சிகள், நடைமுறையில் அழிந்துவிட்டனர். அவர்களில் 50 சதவீதம் பேர் என் பக்கமும், 50 சதவீதம் பேர் எனக்கு எதிராகவும் இருக்கிறார்கள். என் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் தங்கள் பழைய சடங்கு முறைகளை, உதாரணமாக, சந்தனத்தை நெருப்பில் எறிவது போன்றவற்றை இன்னும் நம்புகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, நேர்மையாக இருந்து, மனித குலத்திற்கு சேவை செய்து, நல்ல பண்புள்ளம் படைத்தவர்களாக இருக்கும் அதே வேளையில், மதக் கட்டளைகளைப் பின்பற்றாதவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள். சந்தனம் எரிக்காதவர்கள் நரகத்திற்கான பயணச்சீட்டை வாங்கிவிட்டார்கள் என்று அடிக்கடி சொல்கிறார்கள்!**

**அவர்களின் நம்பிக்கையின்படி, ஸொராஸ்டர் கடைசி தீர்க்கதரிசி ஆவார், வேறொருவர்** (தற்போதைய) **கலியுகத்தில் வருவார். இக்காலத்தில், கல்வியறிவற்றவர்கள், குறிப்பாக கிராமங்களில் கல்லை கடவுளாக வழிபடுகின்றனர். இது கிழக்கத்திய நாட்டின் ஆன்மீக வீழ்ச்சியின் மற்றுமொரு அறிகுறியாகும்.**

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா பின்வருமாறு கூறினார்:

**எனது மௌனத்தால் நான் சோர்ந்து போனேன். எனது வெறுப்புணர்வுக்கு மனமோ, உடலோ, ஆன்மீகமோ காரணம் அல்ல; அது மண்டலி மீதான வெறுப்புணர்வு! மண்டலி உறுப்பினர்கள் மீதான உணர்வு தனிப்பட்டது. உலகத்தின் மீதானதும் தனிப்பட்டது. எல்லாவற்றிலும் வெறுப்புணர்வு இருக்கிறது. எனது மௌனத்தினால் எனக்கு சலிப்பும் வெறுப்புணர்வும் ஏற்படுகிறது; மண்டலியின் சலிப்பைப் பார்க்கும்போது, என்னுடையது அதிகமாகிறது.**

**அனைவரும் அலுத்துப்போய்விட்டனர், அனைவருடைய அலுப்பும் என் மீது வீழ்கிறது. எனது மௌனத்தைக் குறித்த வெறுப்புணர்வைத் தவிர, உலகம் உணரும் சலிப்பும், வெறுப்பும் என் மீது விழுகிறது. ஆனால் நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது இந்த வெறுப்பெல்லாம் காற்றில் பறந்துவிடும்.**

மண்டலியைப் பார்த்து பாபா கேட்டார், **“உங்களுக்கு வெறுப்பும், சலிப்பும் இருந்தால் என்னவாகும்? அதன் மீதே நீங்கள் வெறுப்புணர்வைக் காட்ட வேண்டியது வரும்!”**

பாபா தொடர்ந்து கூறினார்:

நான் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கிறேன். இந்த மௌனத்தால் நான் எவ்வளவு சலித்துப் போகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?

நான் தினமும் திறந்த வெளியில் நடக்க வேண்டும் என்ற நீலுவின் மருத்துவ பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதனால் எனது உடல்நிலை நிச்சயம் மேம்படும். மண்டலி மற்றும் நெருங்கியவர்களிடமிருந்து நான்கு மாதங்கள் விலகியிருந்து அவருடைய ஆலோசனையின்படி நான் செயல்பட்டிருக்க முடியும். ஆனால் இந்த நான்கு மாதங்களில் கூட, நான் ஒரு குறிப்பிட்ட முக்கியமான பணிக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன். அந்தப் பிணைப்பு தற்போதைய பிணைப்புகளை விட எண்ணற்ற வகையில் பெரியது. அது உண்மையில் என் உயிரையே வாங்கிவிடும் போலத் தோன்றுகிறது. நான் இதை காரணமில்லாமல் வெறுமையாகக் கூறவில்லை - அது எனது வாழ்க்கையை சிதைத்துவிடும்! என் உடல் நிலைத்திருந்தால் டிசம்பர் இறுதிக்குள் இந்தப் பணியைச் செய்தாக வேண்டும். இந்த முறை ஏற்படும் தாக்குதல் கடந்த காலங்களைவிட மிகவும் கடுமையானதாக இருந்தபோதிலும், உடல் ரீதியாக நேற்று நான் முதல் முறையாக, மிக மோசமாக உணர்ந்தேன்.

எனவே மண்டலியின் சலிப்பு எனக்கும் இருக்கிறது, மேலும் என்னிடம் நிலைகொண்ட உலகத்தின் சலிப்பு நான் மௌனத்தைக் கைவிடும் போது மறைந்துவிடும்; ஆனால் சலிப்பு அதிகரிக்கும் வரை என்னால் அதைச் செய்ய முடியாது.

இதை விளக்குவதற்காக பாபா கூறினார்:

நண்பகலில் சூரியன் எப்போதும் தீர்க்க ரேகையின் நடுக்கோட்டில் இருக்கும். காலையில் மேகமூட்டமாக இருக்கும் வேளையில், இருளாக இல்லாவிடிலும், சூரியன் தெரிவதில்லை. இரவில் மேகமூட்டமாக இருக்கும் போது இருள் அதிகமாக இருக்கும். மதியம் பன்னிரண்டு மணிக்கு, கால் மணி நேரம் முன் வரை மேகமூட்டமாக இருக்கும் என்றும், திடீரென மதிய நேரத்தில் மேகங்கள் மறைந்துவிடும் என்றும் வைத்துக்கொள்வோம். அவ்வேளையில், சூரியன் பிரகாசிக்கும் போது, அது வழக்கமான மதிய நேர பிரகாசத்துடன் இருக்கும். ஆனால் வளிமண்டலத்தில் ஏற்படும் வித்தியாசம் காரணமாக, மேகங்களுக்குப் பிறகு சூரியனின் திடீர் தோற்றம் மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் இருக்கும். ஆனால், அதே மேகங்கள் ஒரு மாதத்திற்கு, தொடர்ந்து இருந்தால், அது சலிப்பை ஏற்படுத்தும்; இந்த சலிப்பு ஒவ்வொரு நாளும் அதிகரிக்கும். இறுதியாக மேகங்கள் மறைந்தால், சலிப்பும் மறைந்துவிடும். பின்னர் எல்லாம் மகிழ்ச்சியாகவும் நன்றாகவும் இருக்கும், மேலும், சூரியனின் தாக்கம், மனம், இதயம் மற்றும் ஆரோக்கியத்தில் மிகவும் செழுமையாக இருக்கும்.

எனது விஷயத்திலும் அப்படித்தான். மதியம் பன்னிரண்டு மணிக்கு, ஒரு நிமிடம் இருக்கும் அந்தக் குறுகிய நேரத்தில் கூட, மேகங்கள் கலைந்து

போகலாம், ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் நான் அதிக சலிப்பை உணர்கிறேன். ஒரு கர்ப்பிணிப் பெண், பிரசவ வேதனை ஏற்பட்டு, குழந்தையை ஈன்றெடுக்கும் வரை களைப்பாக உணர்வது போல, மேகங்கள் கலைந்தோடும் நேரத்தில் எனக்கும் அதிக சலிப்பு ஏற்படுகிறது. ஐந்தே நிமிடத்தில் குழந்தை பிறக்கும் என்றும், தாய் தனது கஷ்டங்களிலிருந்து விடுபடுவார் என்றும் அந்த நேரத்தில் தெரியும்; இருந்தும், அதே ஐந்து நிமிட நேரத்தில் அவர் உயிரைத் துறப்பது நல்லது என்று உணர்கிறார். இந்த ஐந்தே நிமிட நேரத்தில் வெறுப்பின் எல்லையைப் பாருங்கள். எனது வெறுப்பும் இப்போது அந்த உச்சத்தை நெருங்கிவிட்டது! பிரசவ வலியில் துடிக்கும் பெண்ணை புத்தம் புது, காற்றோட்டமான இடத்தில் நடக்கச் சொல்வது எவ்வளவு அபத்தமானது. அந்தத் தாயார் ஏற்கனவே பத்து குழந்தைகளை ஈன்றெடுத்ததால், அவருக்கு என்ன நடக்கப் போகிறது என்பது நன்றாகத் தெரியும் என்று அவர் பதிலளிப்பார். எனவே இந்த வகையான வெறுப்பும், சலிப்பும் அனுபவித்த ஒருவருக்கு நன்றாகவே தெரியும்.

அதே நாளில் மண்டலியுடன் உரையாடும் போது, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நீங்கள் ஏன் நினைவாற்றலை இழந்து தவிக்கிறீர்கள்? ஒருவருக்குத் திடீர் அதிர்ச்சி ஏற்பட்டால், அவர் நினைவாற்றலை இழக்க நேரிடும். அவரது மனம் வெறுமையாகி, அது சம்பந்தப்பட்ட விஷயங்களுடனான அதன் கடந்தகால இணைப்பு துண்டிக்கப்படும். மனப்படிவங்கள் மனதில் இருந்தாலும், மன இணைப்பு துண்டிக்கப்படுவதால், எவரையும் அல்லது எதையும் அடையாளம் காண முடியாது. அவர் தனக்கு நெருக்கமானவர்களையும் அன்பானவர்களையும் கூட மறந்துவிடுகிறார்.**

**அதேபோல, மரணத்தின் போது ஒரு பெரிய அதிர்ச்சி உணரப்படுகிறது, இதன் விளைவாக நினைவாற்றலில் இழப்பு ஏற்படுகிறது. ஒருவன் தனது கடந்த கால வாழ்க்கையை முற்றிலும் மறந்து விடுகிறான். கடந்தகால வாழ்க்கையில் நீங்கள் ஒரு சிறுவனாகவோ அல்லது சிறுமியாகவோ, நல்லவராகவோ, அல்லாதவராகவோ இருந்தீர்கள் என்று வைத்துக்கொள்வோம், ஆனால் தற்போதைய வாழ்க்கையில் இணைப்பு துண்டிக்கப்பட்டதால், அதைப் பற்றிய அறிவு உங்களுக்கு இல்லை. மரணத்தின் போது, மனம் ஒரு பேரதிர்ச்சியைப் பெறுகிறது, அது எல்லா மனப்பதிவுகளையும் பாதிக்கிறது. மீண்டும் ஒரு குழந்தையாகப் பிறக்கும் போது, அதிர்ச்சியின் விளைவு மறைந்து, மனம் திறக்கிறது, இணைப்பு மீண்டும் மீட்கப்பட்டு வாழ்க்கை செயல்படத் தொடங்குகிறது. மறைந்திருந்த பதிவுகள் இப்போது வெளிப்பட்டு, செயல்களின் மூலமாகச் செலவழிக்கப்படுகின்றன.**

**இவை அனைத்தும் மாயை அல்லது கனவினால் உருவான மனப்படிவங்களாக உள்ளன. நிகழ்கால வாழ்வு என்பது கடந்தகால வாழ்வின் செயல்களின் விளைவேயன்றி வேறொன்றுமில்லை.**

**நினைவாற்றல் இழப்பு காரணமாக, நீங்கள் அந்த மனப்பதிவுகளை மறந்து, ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவது போல் உணர்கிறீர்கள்; ஆனால் உண்மையில் நீங்கள் பழைய வாழ்க்கையைத்தான் தொடர்கிறீர்கள். நீங்கள் என்னுடன் இருப்பதற்கும், என்னுடன் கிரிக்கெட் விளையாடுவதற்கும், சொற்பொழிவுகளைக் கேட்பதற்கும் உங்கள் கடந்தகால மனப்படிவங்களே காரணமாகும். மாயையைப் பொறுத்தவரை அதற்கென ஒரு சட்டம் உள்ளது; மேலும் சட்டம், வட்டவடிவத்தை அடிப்படையாகக் கொண்டது, ஆனால் அது வேறு விஷயம். சூரியன் தினமும் கிழக்கில் உதயமாவது போல, கடந்த பிறவியின் மனப்படிவங்கள் இந்தப் பிறவியில் செலவழிக்கப்படுகின்றன.**

**மனதின் கடந்த கால பதிவுகள், இக்கால வாழ்க்கையில் செயல்களாக மாறும்போது, புதிய மனப்படிவங்களை உருவாக்குகின்றன. மனம், மனப்படிவங்களால் நிறைந்துள்ளது, கடந்த கால மனப்படிவங்கள் செலவழிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செலவு செய்து விரயமாகும்போது, புதிய மனப்படிவங்களும் உருவாகின்றன. கிஷன் ஸிங் தனது கடந்த கால மனப்படிவங்களின் விளைவாக, நான் இப்போது கூறுவதைக் குறித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு எழுதும் போது, பாபா சொல்வதை, தான் எழுதுவதாக நினைக்கிறார். இந்த எண்ணம் கடந்த கால மனப்படிவங்களுக்குச் சொந்தமானது அல்ல, என்பதால் அவர் புதிய மனப்படிவங்களை உருவாக்குகிறார். அதாவது மனம் விடுவிக்கப்படும் அதே வேளையில் பிணைக்கவும் படுகிறது; அது தன்னை விடுவிப்பதன் மூலம் தன்னைப் பிணைக்கிறது. மனம் அழிந்து விடுதலை அடையும் வரை இது தொடரும்.**

இந்தக் காலகட்டத்தில் டெஹ்ரா டூனில், மெஹர் பாபா, ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) என்ற புத்தகத்தின் உள்ளடக்கப்பொருளான ‘படைப்பின் நோக்கம்’ (PURPOSE OF CREATION) என்பதைக் குறித்து எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கத் தொடங்கினார். அவர் எரச்சிற்கு ஒவ்வொரு நாளும் பல்வேறு கருத்துக்களை வழங்கி வந்தபோது, எரச் அவற்றை இரவில் விரிவாக்கம் செய்து, மறுநாள், அவர் எழுதியதை பாபாவிடம் வாசித்துக் காட்டி, தேவைப்பட்ட திருத்தங்களை உடனடியாகச் செய்தார். எவ்வாறாயினும், ‘கடவுள் பேசுகிறார்’ புத்தகம் இந்த நேரத்தில் நிறைவு பெறாமல், மஹாபலேஷ்வரிலும், பின்பு சத்தாராவிலும் பல மாதங்கள் தொடர்ந்தது.

1953 ஆகஸ்ட் 11 செவ்வாய்க்கிழமை முதல் 19ஆம் தேதி வரை, ஒவ்வொரு நாளும், பாபா, மண்டலியின் அறைக்கு வந்து, கீழே குறிப்பிட்ட ஒவ்வோர் இறை நாமத்தையும் ஏழு முறை உச்சரித்த பிறகு, மண்டலி உறுப்பினர் ஒவ்வொருவரின் கால்களிலும் அவர் தலைவணங்கினார்

பைதூல் - **யா எஸ்தான்**
நீலு - **பரபிரம்ம பரமாத்மா**
அலோபா - **அல்லா ஹு அக்பர்**

குஸ்தாஜி - **அஹுரமஸ்தா** (மௌனம் கடைப்பிடித்ததால் மனதளவில் ஏழு முறை)

டான் - **பிலவட் காட்** (BELOVED GOD, பிரியமான கடவுள்)

பெண்டு, எரச், விஷ்ணு, நீலு மற்றும் பாவ் - **பராத்பர் புத்தா**

கைக்கோபாத் தனது வழக்கமான பிரார்த்தனையை அல்லது பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்க வேண்டும். பாபாவும் இந்த நேரத்தில் மஸ்துகளுடன் பணிபுரிவதைத் தொடர்ந்தார்.

1953 ஆகஸ்ட் 13 வியாழன் அன்று டெஹ்ரா டூனில் 'பர்வர்திகார் - குருநாதரின் பிரார்த்தனை'யை (PARVARDIGAR.... MASTERS' PRAYER) மெஹர் பாபா எழுத்துப்பலகையில் வார்த்தைக்கு வார்த்தையாக எடுத்துரைத்தார். அன்று முதல் செப்டம்பர் 2ஆம் தேதி வரை, தினமும் மாலையில் பாபா, பிரார்த்தனையில் பங்கேற்றார். டான் அதை ஆங்கிலத்தில் சத்தமாகப் படித்தார் (O PARVARDIGAR! THE PRESERVER AND PROTECTOR OF ALL....). மேலும் ஒரு மண்டலி குஜராத்தியில் அதைத் திரும்பத் திரும்ப மொழிந்தார். பிரார்த்தனை நிறைவடைந்ததும், பாபா ஒவ்வொரு மண்டலியின் கால்களிலும் தலைவணங்கினார்.

ஒரு நாள் மாலை, பாபா, மண்டலியிடம் சில தீவிரமான விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தபோது, டாக்டர் நீலு இடையே குறுக்கிட்டு, "பாபா, எனக்கு பாஸந்தி உண்ண அதீத ஆசையாக உள்ளது" என்று சூழ்நிலையை சுவாரஸ்யமாக்கும் விதத்தில் கூற முயன்றார்.

அதற்கு பாபா, "**தவறான நேரத்தில் கூவும் சேவலின் கழுத்து துண்டிக்கப்படுகிறது! என்ன தண்டனையை விரும்புகிறீர்கள்?**" என வினவினார்.

"தண்டனை இல்லை, பாஸந்தி மட்டுமே!"

நீலுவின் அசட்டுத்தனமான பதிலில் சீற்றமடைந்த பாபா அவரைத் திட்டினார்; தொடர்ந்து தன்னைத்தானே விமர்சித்தார், "**கோபம் நல்லதல்ல. நான் கோபமுறுவது மிகவும் மோசமானது. இப்போது நீங்கள் ஒவ்வொருவரும் என்னை ஒரு முறை அறைந்து, 'கோபமுறுவது தவறு என்பதை நான் எப்பொழுதும் நினைவில் கொள்ளும் விதத்தில்' அதைச் செய்யுங்கள்.**"

ஒவ்வொரு மண்டலியும் அவ்வாறே செய்தனர் - அதற்குப் பிறகு பாபா, நீலு கோரிய பாஸந்தியை அனுமதித்தார்.

மண்டலியின் குடியிருப்பில் (101, ராஜ்பூர் சாலையில்) 'தீய ஆவி' ஒன்று இருப்பதாக ஒருவர் கூறினார். பல ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு தற்கொலை செய்து கொண்ட ஒரு பெண்மணியின் ஆவி அங்கு அலைந்து திரிவதாகக் கருதப்பட்டது. கிருஷ்ணா நாயர் தனக்கென அறை ஒன்றை விரும்பினார், ஏனெனில் இரவு நேரக் கண்காணிப்புப் பணியை முடித்து, அவர் காலையில் சிறிது நேரம் ஓய்வெடுக்க வசதியாக இருக்கும். ஆனால் அவர் தனியாக

தூங்கினால் ஆவி அவரை கொன்றுவிடலாம் என்று கூறி, பாபா அவருக்குத் தனி அறையை அனுமதிக்கவில்லை.

ஆவியிடமிருந்து விடுபட, டாக்டர் நீலு, “மிளகாய், தலைமுடி இரண்டையும் சுட்டெரித்து, அந்தப் புகையை பங்களா முழுவதும் நிரப்ப வேண்டும்” என்று பரிந்துரைத்தார். பாபா அவருடைய ஆலோசனையை ஏற்று, எரியும் நிலக்கரியை ஒரு சிறிய அடுப்பில் வைத்து, ஏழு முறை வீட்டைச் சுற்றி, ‘சூ, சூ, சூ’ என்று குரல் கொடுத்த வண்ணம் புகையைப் பரப்பும்படி கூறினார். நீலுவும் அவ்வாறே செய்தார், ஆனால் மிளகாய்கள் எரிந்து கொண்டிருந்ததால், அவர் கண்களில் நீர் வழிய, தும்மவும், இருமவும் செய்தார். பாபா, நீலுவின் அவல நிலையைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார்.

பாபாவின் அறைக்கு வெளியே அமர்ந்திருக்கும் இரவு கண்காணிப்பாளர், பாபாவின் கைதட்டல் சத்தம் கேட்டதும், உள்ளே நுழைய வேண்டும் என்ற நிலையான அறிவுறுத்தல் அமலில் இருந்தது. கிருஷ்ணா அந்த ஆவியைப் பார்த்ததில்லை, ஆனால் ஒரு பெண்ணின் சிரிப்பொலியை மட்டும் கேட்டதுண்டு. சிரிப்பொலியைக் கேட்டதும் அவர் உள்ளே வரலாமா என்று பாபாவிடம் கேட்டார். பாபா, “**இல்லை**” என்று கூறி, “**வெளியில் அமர வேண்டாம், அடுத்த அறைக்குச் சென்று, கதவை மூடிக்கொள்ளுங்கள்; நான் கைகளைத் தட்டும் வரை வெளியே வராதீர்கள். இல்லையேல் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும். பேய் சிரிக்கும் வேளையில் உள்ளே வந்தால் அது உங்களைக் கொன்றுவிடும்**” என்றார் பாபா. மறுபடியும் சிரிப்பொலி கேட்டதும் கிருஷ்ணா, அருகிலிருந்த அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார். பாபாவின் கைதட்டலைக் கேட்கும் முன்னர், அவர் அங்கேயே ஒரு மணி நேரத்திற்கு மேல் அமர்ந்திருந்தார். பாபாவின் அறைக்கு வந்தபோது பாபா அவரது முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தார். பாபா, கிருஷ்ணாவை அமரச் சொல்லி, “**வேலை முடிந்தது**” என்றார். அந்த நேரத்திலிருந்து ஆவி குறித்த தொந்தரவு எதுவும் இல்லை.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, 1953 ஆகஸ்ட் 20 அன்று, இரவு முழுவதும் அனைவரும் விழித்திருக்க வேண்டியிருந்தது. எனவே பாபா, பாவ் கல்சூரியிடம், “**அனைவரும் விழித்திருக்க வேண்டும் ஆகையால், ஏதேனும் நாடகத்தை நடத்துங்கள்**” என்று கூறினார். இது குறுகிய நேரத்தில் நிகழ்த்த வேண்டியிருந்தும், துர்காதாஸின் இந்தியக் கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடகத்தை பாவ் எழுதினார்; அதில் ஒரு ராணி, பேகம் குல்னார் - BEGUM GULNAR (எல்சா, பெண் வேடமிட்டு நடித்தார்), துர்காதாஸிடம் (விஷ்ணு) தனது அன்பை வெளிப்படுத்தி அவரைத் தழுவி, மயக்க முயற்சித்த போது, துர்காதாஸ், பேகம் குல்னாரின் காதலை நிராகரிக்கிறார்; பேகம் அவமானப்பட்டு, ஒரு மரணதண்டனை நிறைவேற்றுபவரால் (அலோபா) தலையை துண்டித்து விடுவதாக அச்சுறுத்துகிறார். படைத் தளபதி, திலேர் கான் - DILER KHAN (நீலு), அவரைக் காப்பாற்றும் நோக்கத்தில் குல்னாரின் கணவரான மன்னர்

ஔரங்கஸீபிடம் (பாவ்) ராணியின் தவறான போக்கைப் பற்றி தெரிவிக்கவும், ஔரங்கஸீப் தனது ராணியிடம் சென்று முறையிடுகிறார்: "அன்பே, எனக்கு வயதாகிவிட்டது, உங்களோடு நான் காதற்செயலில் ஈடுபட முடியாதிருந்தாலும், நீங்கள் இப்படி நடந்து கொள்வது முறையாகாது. என்றாலும், நான் உங்களை மன்னிக்கிறேன்."

எல்லா ஆண்களும் தத்தமது பாத்திரங்களை முறையாகச் செய்தனர், ஆனால் எல்சாவும் அலோபாவும் மிகப்பெரிய மகிழ்ச்சி ஆரவாரத்திற்குக் காரணமாக இருந்தனர். மரணதண்டனை நிறைவேற்றுபவராக மேடையில் அலோபா நுழைந்து, தவறான நேரத்தில் தாளம் தப்பியதைப் போல, வாளை மூர்க்கத்தனமாக வீசியதைக் கண்டு பாபா சிரித்துக் கொண்டிருந்தார்.

எல்சா அவரது வரிகளை மறந்துவிட்டார், பாவ் தனக்கு வயதாகிவிட்டதாக அவரது வரிகளை எடுத்துரைத்த போது, எல்சா அவருடைய சொந்த பாணியில் கூறினார்: "கிழட்டுக் கோமாளி, நீ ஏன் காட்டுக்குள் ஓடக்கூடாது? நீ ஏன் தொலைந்து போகக்கூடாது, அப்போது என்னால் நிம்மதியாக இருக்க முடியும்!" இதைக் கேட்டு பாபா சிரிப்பை அடக்க முடியாமல், அவரது கன்னங்கள் சிவந்தன. எல்சா தனது நாடக ஒத்திகை வரிகளை நினைவில் வைத்திருந்தால், நகைச்சுவைக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பு கிடைத்திருக்காது. எல்சா அவரது பங்கை, சிறப்பாகச் செய்ததாக பாபா அவரைப் பெரிதும் பாராட்டினார்!

1953 ஆகஸ்ட் 25-31 வரை, ஏழு நாட்களுக்கு, பாபா ஒவ்வோர் இரவும் மண்டலியின் அறைக்கு வந்து, இதற்கு முன்னர் ஆகஸ்ட் முதல் வாரத்தில் செய்ததைப் போலவே, ஏழு முறை இறை நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழியச் செய்து, ஒவ்வொரு மண்டலியையும் தலைவணங்கினார். கைக்கோபாத் பல ஆண்டுகளாக பாபாவின் பெயரை ஒரு நாளைக்கு 1,00,000 முறை திரும்பத் திரும்ப உச்சரிப்பதைத் தொடர்ந்து வந்தார். ஆகஸ்ட் 31 அன்று, அவர் பாபாவின் தெய்வீகத்தன்மையின் மற்றுமொரு 'காட்சி'யைக் கண்டு கிட்டத்தட்ட மயக்கமடைந்தார்.

பாபாவைச் சுற்றிலும் விவரிக்க முடியாத பிரகாசமான ஒளியைக் கண்டதாகவும், அந்த ஒளியிலிருந்து 'உலகங்கள்' தோன்றியதாகவும் கைக்கோபாத் விவரித்தார். "நீங்கள் என்னவென்று இப்போது எனக்குத் தெரியும்," என்று அவர் பாபாவிடம் கூறினார்.

பாபா மண்டலியிடம், "**அவர் அருகில் எனது பௌதீக உடல் இல்லாதிருந்தால், அவர் தனது உடலைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்**" என்று கூறினார்.



# உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்

**(Highest Of The High)**

1953 செப்டம்பர் 6 மாலை, மண்டலியை உணவுக்காக அனுப்பிய பிறகு, பாபாவுடன் எரச் அமர்ந்திருந்த வேளையில், பங்களாவிற்கு வெளியே கார் ஒன்று வந்து நின்றது. காரிலிருந்த சிலர், ஓர் இளம் பெண்ணைத் தாங்கிக்கொண்டு வந்தனர்; அவர் ஏதோ மனநிலை பாதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட கட்டுப்பாட்டை மீறியது போலத் தோன்றியது. அவர்கள் அந்தப் பெண்ணை பாபாவின் பாதங்களின் அருகே படுக்க வைத்து, அவரைக் குணப்படுத்தும்படி வேண்டினர். பாபா அந்தப் பெண்ணைப் பார்த்து, இதமாக வருடிக்கொடுத்து உறுதியளித்தார்: “**அவரை அழைத்துச் செல்லுங்கள்; எனது பார்வை அவர் மீது உள்ளது. எனது ஆசிகளை வழங்குகிறேன். அவரைத் திரும்ப அழைத்துச் செல்லுங்கள்.**”

இந்த சம்பவத்திற்குப் பின்னர், அந்த மக்கள் இப்படி ஒரு காரியத்திற்காக வந்ததைக் குறிப்பிட்டு பாபா வருத்தமடைந்தார். “**நான் யார் என்பதை அவர்கள் உணரவில்லையா?**” எரச்சிடம் குறிப்பிட்டார். “**அவர்கள் இதுபோன்ற விஷயங்களுக்காக என்னை அணுகுகிறார்கள் - அவர்களின் நன்மைக்காக நான் விதித்ததை, அவர்கள் தவிர்க்க விரும்புகிறார்கள்!**”

இந்த சம்பவத்தால் வருத்தமடைந்த பாபா, மறுநாள் காலை, திங்கட்கிழமை, 1953 செப்டம்பர் 7, (இது ஸொராஸ்டரின் பிறந்தநாளாகவும் இருந்தது), தன்னிச்சையாக தனது அற்புதமான, இன்றியமையாத ‘**உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்**’ (THE HIGHEST OF THE HIGH) என்ற செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**தெரிந்தோ அல்லது தெரியாமலோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஒவ்வோர் உயிரினமும் - ஏதோ ஒரு வகையில் அல்லது முறையில் - தனித்துவத்தை உறுதிப்படுத்த முயல்வது போல், ஒவ்வொரு மனிதனும் முயற்சிக்கிறான். ஆனால் இறுதியில் மனிதன், தான் எல்லையற்றவன், நித்தியமானவன் மற்றும் பிரிக்க முடியாதவன் என்பதை உணர்வுபூர்வமாக அனுபவிக்கும் போது, அவன் கடவுள் என்ற தனது தனித்துவத்தை முழுமையாக உணர்ந்து, எல்லையற்ற அறிவு, எல்லையற்ற சக்தி மற்றும் எல்லையற்ற பேரின்பத்தை அனுபவிக்கிறான். இவ்வாறு மனிதன் கடவுளாகி, ஒரு பரிபூரண குருநாதர், சத்குரு அல்லது ‘குதுப்’ ஆக அங்கீகரிக்கப்படுகிறார். இந்த மனிதனை வணங்குவது கடவுளை வணங்குவதற்கு சமம்.**

**கடவுள் மனித வடிவில் பூமியில் தோன்றி, மனிதகுலத்திற்கு அவரது தெய்வீகத்தை வெளிப்படுத்தும் போது, அவர் அவதார புருஷர் - மெஸையா - தீர்க்கதரிசி என்று அங்கீகரிக்கப்படுகிறார். இப்படி, கடவுள் மனிதனாக (இறை-மனிதனாக) மாறுகிறார்.**

எனவே, எல்லையற்ற கடவுள், யுகம் யுகமாக, அனைத்து காலச்சுழற்சிகளிலும், தமது எல்லையற்ற கருணையின் மூலம், மனித வடிவில், மனித நிலைக்கு இறங்கி வந்து, மானிடனின் மத்தியில் இருக்க விரும்புகிறார். ஆனால் மனிதகுலத்துடன் இணைந்து அவர் தமது பௌதீக உடலில் வாழ்வது, புரிந்துகொள்ளப்படாததால், அவர் உலகின் ஒரு சாதாரண மனிதனாகப் பார்க்கப்படுகிறார். எவ்வாறாயினும், அவர் தம்மை, யுகத்தின் அவதார புருஷராக அறிவிப்பதன் மூலம், பூமியில் தனது தெய்வீகத்தை உறுதிப்படுத்தும் தருவாயில், அவரைக் கடவுளாக ஏற்றுக்கொள்ளும் சிலரால் அவர் வணங்கப்படுகிறார், மேலும் அவரை பூமியில் கடவுளாக அறிந்த சிலரால் மகிமைப்படுத்தப்படுகிறார். ஆனால் அவர் உடல் ரீதியாக, அவர்கள் மத்தியில் இருக்கும்போது, அவரைக் கண்டனம் செய்வது என்பது, எஞ்சிய மனிதகுலத்தின் மாறாத்தன்மையாக இருக்கிறது.

இப்படி, அதே இறை-மனிதன், தன்னை அவதார புருஷராகப் பிரகடனப்படுத்தி, யாருக்காக அவருடைய அளவிறுதியற்ற அன்பு, அவரை மனித நிலைக்கு இறங்கி வந்து, மானிடனின் மத்தியில் இருக்கச் செய்ததோ, அதே மனிதகுலத்தால் அவர் கொடுமைப்படுத்துதலுக்கும், துன்புறுத்தப்படுவதற்கும், அவமானப்படுத்துதலுக்கும், கண்டனம் செய்யப்படுவதற்கும் ஆளாகிறார்; மனிதகுலம், அவதார புருஷரின் வடிவில் கடவுளின் வெளிப்பாட்டைக் கண்டிக்கும் செயல், மறைமுகமாக, கடவுள் அவரது எல்லையற்ற நித்திய நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

அவதார புருஷர் என்றென்றும் அதே ஒருவரே, ஏனெனில் கடவுள் எப்போதும் ஒருவரேயான - நித்தியமானவர், பிரிக்க முடியாதவர், எல்லையற்றவர், அவதார புருஷராக, மெஸையாவாக, தீர்க்கதரிசியாக, ஆதிகாலத்தவராகத் தன்னை வெளிப்படுத்துகிறார் - அவரே உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர். இந்த நித்தியமும், நிரந்தரமுமான ஒரே அவதார புருஷர், அவ்வப்போது, வெவ்வேறு காலச்சுழற்சிகளில், வெவ்வேறு மனித வடிவங்களையும், வெவ்வேறு பெயர்களையும் ஏற்று, வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு உடைகளிலும், வெவ்வேறு மொழிகளிலும் உண்மையை வெளிப்படுத்தி, மனிதகுலத்தை, அறியாமை எனும் பாதாளத்திலிருந்து உயர்த்தி, மாயைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க உதவுகிறார்.

அவதார புருஷராக, கடவுளின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் மிகையாக வணங்கப்படும் வெளிப்பாடுகளில், ஸொராஸ்டர் முதலானவர் - அவரைத் தொடர்ந்து ராமா, கிருஷ்ணா, புத்தா, இயேசு மற்றும் முஹமது ஆகியோர் எனக்கு முன் வந்தவர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஸொராஸ்டர், 'நல்ல எண்ணங்கள்', 'நல்ல வார்த்தைகள்', 'நல்ல செயல்கள்' ஆகிய மூன்று அடிப்படைக் கோட்பாடுகளின் வடிவில், சத்தியத்தின் சாரத்தை உலகுக்கு வழங்கினார். இந்த சத்திய போதனைகள், மனிதகுலத்திற்கு ஏதோ ஒரு வடிவில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஒவ்வொரு

காலச்சுழற்சியிலும், அந்தந்த யுகத்தின் அவதார புருஷரால், மனிதகுலத்தை, கண்ணுக்குத் தெரியாத வகையில், உண்மையை நோக்கி அழைத்துச் சென்று, தொடர்ந்து வெளிப்படுத்தப்படுகின்றன.

நல்ல எண்ணங்கள், நல்ல வார்த்தைகள் மற்றும் நல்ல செயல்களின் இந்த போதனைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது, வெளியளவில் தோன்றும் அளவுக்கு எளிதானது அல்ல, அதே வேளையில் அது சாத்தியமற்றதும் அல்ல. ஆனால் இந்த போதனைகளை நேர்மையாக, வார்த்தையின் முழு அர்த்தத்தில் வாழ்வது, வாழ்க்கையின் நடுவில் மரணத்தை நடைமுறைப்படுத்துவது போல சாத்தியமற்றதாகத் தோன்றும்.

உலகில் எண்ணற்ற சாதுக்கள், மஹாத்மாக்கள், மஹா புருஷர்கள், புனிதர்கள், யோகிகள் மற்றும் வாலிகள் உள்ளனர், இருப்பினும் உண்மையானவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. சில உண்மையானவர்கள், அவர்களின் ஆன்மீக நிலைக்கு ஏற்ப, அவர்களுக்கே உரிய ஒரு பிரிவில் உள்ளனர், இது சாதாரண மனிதனின் நிலையிலோ அல்லது உயர்ந்தவர்களில் உயர்ந்தவரின் நிலையிலோ இல்லை.

நான் மஹாத்மாவும் இல்லை, மஹா புருஷரும் இல்லை, சாது, துறவி, யோகி, அல்லது வாலியும் இல்லை. செல்வத்தை அடையும் அல்லது தங்கள் உடைமைகளைத் தக்க வைத்துக் கொள்ளும் ஆசையுடன் என்னை அணுகுபவர்கள், துன்பங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் விடுபட விரும்புபவர்கள், உலக ஆசைகளை நிறைவேற்றவும் திருப்திப்படுத்தவும் என்னிடம் உதவியை நாடுபவர்கள், அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை அறிவிக்கிறேன், நான் ஒரு சாதுவோ, துறவியோ, மஹாத்மாவோ, மஹா புருஷரோ, யோகியோ அல்ல, என் மூலம் இவற்றைத் தேடுவது வெளியளவில் முழு ஏமாற்றமாகத் தெரிந்தாலும், இறுதியில் இந்த ஏமாற்றமே, இவ்வுலக ஆசைகள் மற்றும் ஏக்கங்களின் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வரும் நிலையான கருவியாக இருக்கிறது.

சாதுக்கள், துறவிகள், யோகிகள், வாலிகள் மற்றும் இடை நிலைகளில் இருக்கும் இதர புனிதர்கள், அற்புதங்களைச் செய்து, உதவி மற்றும் நிவாரணத்திற்காக தங்களை அணுகும் நபர்களின் நிலையற்ற பொருள் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

எனவே நான் ஒரு சாதுவும் இல்லை, துறவியும் இல்லை, யோகியும் இல்லை, மஹா புருஷரும் இல்லை, வாலியும் இல்லை என்றால், நான் யார் என்ற கேள்வி எழுகிறது! இயற்கையான அனுமானம் என்னவெனில், நான் ஒரு சாதாரண மனிதனாக அல்லது நான் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவனாக இருக்க வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்கிறேன், உண்மையான சாதுக்கள், துறவிகள், யோகிகள் மற்றும் இதர இடைநிலை அந்தஸ்து படைத்தவர்களின் மத்தியில் என்னை ஒருபோதும் சேர்க்க முடியாது.

இப்போது, நான் ஒரு சாதாரண மனிதனாக இருந்தால், எனது திறன்களும் சக்திகளும் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும்; நான் ஒரு சாதாரண மனிதனை விட சிறந்தவனாக அல்லது வேறுபட்டவனாக இருக்க முடியாது. மக்கள் என்னை அவ்வாறு எடுத்துக் கொண்டால், அவர்கள் என்னிடமிருந்து அதிசயங்கள் அல்லது ஆன்மீக வழிகாட்டுதலின் வடிவத்தில் எந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவியையும் எதிர்பார்க்கக்கூடாது, மேலும் அவர்களின் ஆசைகளை நிறைவேற்ற என்னை அணுகுவது முற்றிலும் பயனற்றது.

மாறாக, நான் ஒரு சாதாரண மனிதனின் நிலைக்கு அப்பாற்பட்டவன் என்றால், மஹான்கள் மற்றும் யோகிகளின் நிலைக்கு அப்பாற்பட்டவன் என்றால், நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவனாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில், உங்கள் மனித அறிவு மற்றும் வரையறுக்கப்பட்ட மனதுடன் என்னை எடைபோடுவதும், சாதாரண ஆசைகளுடன் என்னை அணுகுவதும் முட்டாள்தனத்தின் உச்சம் மட்டுமல்ல, சுத்த அறியாமையும் ஆகும், ஏனெனில் எந்த அறிவுசார்ந்த மல்யுத்தங்களும் எனது வழிகளை புரிந்து கொள்ளவோ அல்லது எனது எல்லையற்ற தன்மையை நிர்ணயிக்கவோ முடியாது.

நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன் என்றால், எனது 'விருப்பமே சட்டம்', எனது 'ஆர்வமே சட்டத்தை ஆட்சி நடத்தும்', எனது 'அன்பு பிரபஞ்சத்தை நிலைநிறுத்தும்'. வெளியளவில் தோன்றும் பேரழிவுகள் மற்றும் தற்காலிக துன்பங்கள் எதுவாக இருந்தாலும், அவை, உங்களின் இறுதி நன்மைக்கான என் அன்பின் விளைவுகள் மட்டுமே. எனவே, உங்கள் இடர்பாடுகளிலிருந்து விடுபட என்னை அணுகுவது, உங்கள் உலக ஆசைகளை நான் நிறைவேற்றி திருப்திப்படுத்துவேன் என்று எதிர்பார்ப்பது, நான் ஏற்கனவே விதித்ததைத் தவிர்க்கவும், செய்ய முடியாததைச் செய்யுமாறு என்னிடம் கேட்பதாகவும் பொருள்படும்.

உங்கள் பாபாவை உயர்ந்தவர்களில் உயர்ந்தவராக நீங்கள் உண்மையாகவும், முழு நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொண்டால், உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக ஏங்குவதை விட, அவருடைய பாதங்களில் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பது, உங்களுக்கு உகந்ததாக இருக்கும். உங்களுடைய ஒரு வாழ்க்கை அல்ல, உங்களுடைய கோடிக்கணக்கான வாழ்க்கைகளை, உன்னதமான பாபாவைப் போன்ற ஒருவரின் பாதங்களில் சமர்ப்பிப்பது, ஒரு சிறிய தியாகமாகத்தான் கருதப்படும். பாபாவின் அளவிறுதியற்ற அன்பு மட்டுமே உங்கள் நிலையற்ற வாழ்வின் எண்ணிலடங்கா குருட்டுத்தனமான பாதைகளில் உங்களைப் பாதுகாப்பாக வழிநடத்தும் ஒரே உறுதியான, தவறாத வழிகாட்டியாக இருக்கும்.

தங்கள் உடல், மனம், உடைமைகள் அனைத்தையும் உள்நோக்கத்துடன் அர்ப்பணம் செய்து - எப்படியும் அவற்றை ஒருநாள்

கைவிடுவது நிச்சயம் என்றாலும் - அவர்களால் என்னைப் பிணைக்க முடியாது; அர்ப்பணம், ஏனெனில் பேரின்பத்தின் நிரந்தரப் பொக்கிஷத்தை அடைய, நிலைபேறற்ற உடைமைகளைத் துறக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். அதிக ஆதாயத்திற்கான இந்த ஆசை, அவர்கள் அர்ப்பணம் செய்வதன் பின்னால் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்குமானால் அது முழுமையான அர்ப்பணம் ஆகாது.

நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவனாக இருந்தால், உங்களுடைய அனைத்து உடைமைகளையும், விருப்பங்களையும் பறித்து, உங்கள் ஆசைகள் அனைத்தையும் நுகர்ந்து, அவற்றைப் பூர்த்தி செய்யாமல், உங்களை ஆசையற்றவராக ஆக்க வேண்டும் என்று எனது கடமை உணர்வு கோருவதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். சாதுக்கள், துறவிகள், யோகிகள் மற்றும் வாலிகளால் நீங்கள் விரும்புவதைத் தர முடியும்; ஆனால் நான் உங்களது தேவைகளை நீக்கி, பற்றுகளிலிருந்து விலக்களித்து, அறியாமையின் அடிமைத்தனத்திலிருந்து உங்களை விடுவிக்கிறேன். நான் உண்மையில் ஒன்றை 'எடுப்பவன்', நீங்கள் விரும்புவதை விரும்பியபடி 'கொடுப்பவன் அல்ல'.

புத்திஜீவிகள் தங்கள் புத்தியின் மூலம் மட்டும் என்னை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. நான் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவனாக இருந்தால், புத்தியால் அல்லது வரையறுக்கப்பட்ட மனித மனத்தால் எனது வழிகளை அளவிடுவது சாத்தியமற்றது.

என் மீது அன்பு காட்டுபவர்களால், பயபக்தியுடனும், ஒன்றிய மனதுடனும் என்னைப் போற்றிப் புகழ்வதன் மூலம் நான் அடையப் படமாட்டேன். என்னை இகழ்ந்து பேசி, ஏளனம் செய்பவர்களுக்காகவும், என்னை அவமதிப்பவர்களுக்காகவும் நான் இல்லை. என்னைச் சுற்றி அலைமோதும் கோடிக்கணக்கான மக்கள் கூட்டத்திற்காகவும் நான் இல்லை. மக்கள், கூட்டத்தில் ஆங்காங்கே சிதறி, அமைதியாக, ஆடம்பரமின்றி, உடல், மனம், உடைமைகள் அனைத்தையும் என்னிடம் ஒப்படைக்கும் குறிப்பிட்ட சிலருக்காக நான் இருக்கிறேன். அனைத்தையும் அர்ப்பணித்த பின்னர், அதைப் பற்றி ஒருபோதும் சிந்திக்காதவர்களுக்காக நான் இன்னும் அதிகமாக இருக்கிறேன். தங்கள் துறவு குறித்த எண்ணத்தைக் கூட, துறக்கத் தயாராக இருப்பவர்கள் அனைவரும் என்னுடையவர்கள், மேலும் தீவிரமான நடவடிக்கைகளுக்கு மத்தியில் தொடர்ந்து விழிப்புடன் இருந்து, என்னுடைய ஒரே பார்வை அல்லது சைகையில், சத்தியத்திற்காக தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யும் அந்தத் தருணத்திற்காகக் காத்திருக்கிறார்கள். அளவிலா பேரிடர்களை மனமுவந்து, மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளும் துணிச்சலான மனம் படைத்தவர்கள், என் மீது உறுதியான, தளர்வுறாத நம்பிக்கை கொண்டவர்கள், தங்கள் சுய மகிழ்ச்சியையும், சௌகரியங்களையும் பணயம் வைத்தேனும் என்னுடைய சிறிய ஆசையை நிறைவேற்றத் துடிப்பவர்கள், உண்மையிலேயே என்னை நேசிக்கிறார்கள்.

எனது பார்வையில், கடவுள் நம்பிக்கை கொண்டவர் என்று கருதி, தெய்வீக சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளைத் தட்டிக்கழித்து, சாதுக்கள், துறவிகள் மற்றும் யோகிகளின் பின்னால் ஓடி அலைந்து, இறுதியில், இறை அருளால் அவரது 'நித்திய விடுதலை'யை அடைய வாய்ப்பாக இருந்திருக்கும் துன்பத்திலிருந்து நிவாரணம் தேடும் மனிதரை விட, உலகப் பொறுப்புகளை நம்பிக்கையுடன் நிறைவேற்றும் நாத்திகர் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர். உடலின்ப மயக்கத்தில் ஒரு கண்ணைப் பதித்து, மற்றொரு கண்ணால் தெய்வீக பேரின்பத்தின் பிரகாசமான கதிர்களைக் காண நினைப்பது சாத்தியமற்றது மட்டுமின்றி, பாசாங்குத்தனத்தின் உச்சமும் ஆகும்.

நீங்கள், எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேனோ, அதை நீங்கள் ஒரே நேரத்தில் புரிந்து கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காலங்காலமாக, நானாகவே உங்களை எழுச்சியுறச் செய்து, யுகம் முழுவதும் உங்கள் வரையறுக்கப்பட்ட மனங்களில் விதையை விதைத்து, தக்க நேரம் வரும் வரை, உங்கள் தரப்பில் முறையான கவனத்துடனும், அக்கறையுடனும் இருந்து, அந்த உண்மைப்பொருளின் அறிவின் கனியை முளைக்கச் செய்து, செழிப்பாக வளரவிட்டு, உரிய பலனை அடையப்பெறுவது என்பது இயல்பாகவே உங்களுடையது.

அதற்கு மாறாக, உங்கள் அறியாமையால் வழிநடத்தப்பட்டு, உங்கள் சுய வழியில் செல்வதில் நீங்கள் விடாப்பிடியாக இருந்தால், உங்கள் முன்னேற்றத்தைத் தேர்ந்தெடுப்பதில் எவராலும் உங்களைத் தடுக்க முடியாது; சொல்லப்போனால், அதுவும் முன்னேற்றம்தான், எவ்வளவு மெதுவாகவும், வேதனையாகவும் இருந்தாலும், இறுதியில் எண்ணற்ற பிறவிகளுக்குப் பிறகு, நீங்கள் இப்போது தெரிந்துகொள்ள விரும்புவதை அப்போது தெரிந்து உணரச் செய்யும்.

உண்மையான குறிக்கோளைப் பற்றிய உங்கள் அறியாமையின் அளவிற்கு, நீங்கள் பின்னிப்பிணைந்திருக்கும் மாயை மற்றும் சுயமாக உருவாக்கப்பட்ட துன்பத்தின் பிரமைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள, இப்போதே விழித்துக் கொள்ளுங்கள்! அறியாமையை அதன் உண்மையான கண்ணோட்டத்தில் அனுபவிப்பதன் மூலம், ஆன்மீக சுதந்திரத்திற்காக பாடுபடுங்கள். உங்களுடனும் கடவுளுடனும் நேர்மையாக இருங்கள். ஒருவர் உலகையும், அக்கம் பக்கம் உள்ளவர்களையும் முட்டாளாக்கலாம், ஆனால் அனைத்தும் அறிந்த கடவுளின் அறிவிலிருந்து ஒரு போதும் தப்ப முடியாது - அதுதான் தெய்வீக சட்டம்.

என்னை அணுகும் உங்களுக்கும், என்னை அணுக விரும்புபவர்களுக்கும், நான் தெளிவுற தெரிவிக்க விரும்புவது என்னவெனில், உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவராக என்னை ஏற்றுக்கொண்டு, செல்வம் மற்றும் உலக ஆதாயத்திற்காக ஏங்கும் உங்கள்

இதயத்துடன் என்னிடம் ஒருபோதும் வரக்கூடாது; ஆனால், உங்கள் உடல், மனம் உடைமைகள் அனைத்தையும் - அவற்றின் எல்லா பிணைப்புகளுடனும் எனக்கு வழங்கும் தீவிர ஏக்கத்துடன் மட்டுமே வரவேண்டும். உங்களது இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து உங்களை விடுவிக்க என்னை நாடாமல், என்னுடைய விருப்பத்திற்கு முழு மனதுடன் உங்களை ஒப்படைப்பதற்காக என்னை நாடுங்கள். உலக சந்தோஷத்திற்காகவும், குறுகிய கால சௌகரியங்களுக்காகவும் என்னைப் பற்றிக் கொள்ள வேண்டாம்; மாறாக, எந்த பாதகமான சூழ்நிலையிலும், சுய மகிழ்ச்சியையும் சுகத்தையும் எனது பாதங்களில் தியாகம் செய்து, என்னைப் பற்றிக் கொள்ளுங்கள். எனது மகிழ்ச்சி உங்கள் புத்துணர்ச்சியாகவும், எனது ஆறுதல் உங்கள் இளைப்பாறலாகவும் இருக்கட்டும். உங்களுக்கு ஒரு நல்ல உத்தியோகத்தை ஆசீர்வதிக்கும்படி என்னிடம் கேட்காதீர்கள், ஆனால் விடாமுயற்சியுடன் நேர்மையாக, எந்த வெகுமதியையும் எதிர்பாராமல், எனக்கு சேவை செய்யும் விருப்பத்தை உருவாக்குங்கள். உங்கள் அல்லது உங்கள் அன்பானவர்களின் உயிரைக் காப்பாற்றும்படி என்னிடம் ஒருபோதும் கெஞ்சாதீர்கள், ஆனால் உங்களை ஏற்றுக்கொள்ளவும், எனக்காக உங்கள் உயிரைக் கொடுக்க அனுமதிக்கவும் என்னிடம் கெஞ்சுங்கள். உங்கள் உடல் உபாதைகளை நான் குணப்படுத்துவேன் என்று ஒருபோதும் எதிர்பாராதீர்கள், ஆனால் உங்கள் அறியாமையைப் போக்க என்னிடம் மன்றாடுங்கள். என்னிடமிருந்து எதையும் அடையும் எண்ணத்தில் ஒருபோதும் உங்கள் கைகளை ஏந்த வேண்டாம், ஆனால் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர் என்று நீங்கள் அணுகிய என்னை, உங்கள் கைகளை உயர்த்தி, போற்றிப் புகழுங்கள்.

நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன் என்றால், என்னால் முடியாதது எதுவுமில்லை; மேலும், தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நான் அற்புதங்களைச் செய்யாவிடிலும் - அதனால் வரும் திருப்தியானது தனிநபரை மேலும் மேலும் தற்காலிகமான மாயையின் வலையில் சிக்க வைக்கும் - இன்னும் சில காலகட்டங்களில், மீண்டும் மீண்டும் நான் எல்லையற்ற சக்திகளை, அற்புதங்களின் வடிவில் வெளிப்படுத்துகிறேன். ஆனால் இவை அனைத்தும் மனிதகுலம் மற்றும் எல்லா உயிரினங்களின் ஆன்மீக மேம்பாடு மற்றும் நன்மைக்காக மட்டுமே.

இருப்பினும், என்னை நேசிக்கும் மற்றும் என் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட அன்பர்களால் அற்புத நிகழ்வுகள் அடிக்கடி அனுபவிக்கப்படுகின்றன, மேலும் இவை, அவர்கள் மீதான எனது பார்வை அல்லது கருணையே காரணமாகும் என்று கூறுகின்றனர்.

ஆனால், இதுபோன்ற தனிப்பட்ட அற்புதங்களுக்கு, எனது உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்த நிலையே காரணம் என்று கூறுவது, எனது அன்பர்களுக்கு உகந்ததாக இருக்காது என்பதை அனைவரும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன்

**என்றால், நான், தெய்வீக சட்டத்தின் போக்கில், மாயாவின் இந்த மாய நாடகங்களுக்கு மேலே இருக்கிறேன். எனவே, என்னை அவ்வாறு அடையாளம் கண்டுகொள்ளும் என் அன்பர்களோ, அல்லது என்னை அறியாமல் இருந்து வேறு வழிகளில் என்னை நேசிப்பவர்களோ, எந்த அதிசயமான நிகழ்வுகளை அனுபவித்தாலும், அதற்கு அவர்கள் என் மீது வைத்திருக்கும் உறுதியான நம்பிக்கையின் விளைவுதான் காரணம். அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை, மாயாவின் நாடகத்தின் போக்கை அடிக்கடி முறியடித்து, அவர்கள் அற்புதங்கள் என்று அழைக்கும் அனுபவங்களை அவர்களுக்கு வழங்குகிறது. உறுதியான நம்பிக்கையின் மூலம் பெறப்பட்ட இத்தகைய அனுபவங்கள் இறுதியில் நன்மையே பயக்கும் என்றாலும், அவற்றை அனுபவிக்கும் நபர்களை மேலும் மேலும் மாயையின் பிணைப்புகளில் சிக்க வைக்காது.**

**நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவனாக இருந்தால், ஒவ்வொருவருக்கும் இறை உணர்வை வழங்கவும், அறியாமையின் பிணைப்பிலிருந்து ஒவ்வோர் உயிரினத்தையும் விடுவிப்பதற்கும், எனது 'பிரபஞ்சத்தின் இறை விருப்பம்' ஒன்றே போதுமானது. ஆனால் தெய்வீக சட்டத்தின்படி அறியாமையின் அனுபவத்தின் மூலம் பெறப்படும் அறிவு ஆசீர்வதிக்கப்பட்டது ஆகும். இந்த அறிவை நீங்கள் அறியாமைக்கு மத்தியில், பரிபூரண குருநாதர்களின் வழிகாட்டுதல் மூலமாகவும், உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவரிடம் சரணடைவதன் மூலமாகவும் அடைய முடியும்.**

1953 செப்டம்பர் 11 வெள்ளிக்கிழமை காலை, பாபா, டெஹ்ரா டூனிலிருந்து ஒரு 'தூக்கமில்லா மஸ்த் பயணம்' மேற்கொண்டார். அவருடன் எரச், பெண்டு, குஸ்தாஜி, பைதூல், ஹெலன், குமார், கிஷன் ஸிங், எல்சா ஆகியோர் சென்றனர். ஹெலன், கிஷன் ஸிங்கின் காரையும், எல்சா ஜீப்பையும் ஓட்டிச் சென்றனர். அனைவரும் டெல்லி வழியாக, பஞ்ஜாபை நோக்கிச் சென்று, பாபா, ஏற்கனவே பணிபுரிந்த ஏழு சிறந்த மேல்நிலை மஸ்துகளைத் தொடர்பு கொண்டனர். பாபா துறவிகள் மற்றும் சாதுக்களையும் தொடர்பு கொண்டு, ஏழு புகழ்பெற்ற சமாதிகளையும், ஏழு தர்காக்களையும் (துறவிகளின் கல்லறைகள்) பார்வையிட்டார், அவர் முன்பு கூறியது போல், ஒவ்வொருவருக்கும் வணக்கம் செலுத்தினார். ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு இரவும் பகலும் பயணம் செய்து, ஐந்து நாட்களுக்குப் பின்னர் அவர்கள் திரும்பி வரும் வரை, எவருக்கும் சில மணிநேரங்களுக்கு மேல் தூக்கம் இல்லை என்ற போதிலும், பாபா தனது பணியை உற்சாகமாகச் செய்தார்.

11ஆம் தேதி அவர்கள் தியோபந்த் (DEOBAND) என்ற இடத்தில் முதலாவதாக நின்று, பாபா, பல சமாதிகளில் வணங்கினார்.

காலை 11:00 மணிக்கு அவர்கள் மீரட் (MEERUT) நகரை வந்தடைந்து, ஒரு மாத காலமாக மீரட்டில் தங்கியிருந்த, மன்ஸாரியின் சகோதரர், நவ்ஸாரியைச் சேர்ந்த மினூ தேசாயை சந்தித்தார்; அவர் ராணுவத்தில் லெஃப்டினன்ட் கர்னலாக

(LIEUTENANT COLONEL) பணிபுரிந்து வந்தார். பாபா தன்னைப் பார்க்க வருவார் என்று அவருக்குத் தெரியாது, பாபாவைப் பார்த்ததும், மினூ பரவசமடைந்தார்.

"பாபா, நான் உங்களுக்கு என்ன உணவு ஏற்பாடு செய்ய வேண்டும்?" மினூ கேட்டார்.

**"ஸேவ்-கந்தியா"** (SEV-GANTHIA, ஒரு ஏழையின் உணவான வறுத்த கொண்டைக்கடலை) என்று பாபா பதிலளித்தார். மினூவின் வீட்டில் இதர உணவுகள் இருந்தன, ஆனால் ஸேவ்-கந்தியா இல்லை, இது குஜராத் மற்றும் மும்பை பகுதிகளில் பிரபலமானது.

**"நான் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்,"** பாபா சிரித்தார், **"உணவுக்காகவோ, பானம் அருந்தவோ அல்ல. நான் உடனடியாகப் புறப்பட வேண்டும்."**

மினூவின் மனைவி பபாய் மற்றும் அவர்களது மகள் மெஹரைப் பற்றி பாபா கேட்டார், **"மறந்துவிடாதீர்கள், மெஹர் என்னுடையவள், உங்களுடையவள் அல்ல. அவளைப் பற்றி கவலைப்படாதீர்கள்; எனது பார்வை அவள் மீது இருக்கும்"** என அவருக்கு நினைவூட்டினார்.

பாபாவும் மண்டலியும் அங்கிருந்து ஸூரஜ் குண்டிற்குச் (SURAJ KUND) சென்று, அங்கு 'ஆனந்த் நாத்' (ANAND NATH) மற்றும் 'மனோகர் நாத்'தின் (MANOHAR NATH) சமாதிகளில், உள்ளூர் பண்டிதர் ஒருவர் பிரார்த்தனை செய்வதற்காக அழைக்கப்பட்டார். பண்டிதர் சமஸ்கிருதத்தில் சில வசனங்களை ஓதிய பிறகு, பாபா, பைதூல், குஸ்தாஜி ஆகியோர் சமாதிகளில் வணங்கினர்.

மீரட் திரும்பி வந்ததும், பாபா நகரின் பொறுப்பாளரான, ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மெஹர்பன் பாபாவுடன் (MEHERBAN BABA) பணிபுரிந்தார்; அவரை பாபா, ஏழு ஆண்டுகளுக்கு முன்னரும் சந்தித்தார். பாபா, மஸ்தின் சிறிய குடிசையை நெருங்கியபோது, பணிவுநயம் வாய்ந்த மஸ்த், பூனைக்கு உணவளித்துக் கொண்டிருந்தார். குடிசைக்கு வெளியே கால்களை நீட்டக் கூட அவர் மறுத்தாலும், பாபா வழங்கிய பணத்தை அவர் ஏற்றுக்கொண்டார். பாபா அவரைத் தூரத்திலிருந்து வணங்கிய போது, மஸ்த் பாரசீக மொழியில் முணுமுணுத்தார்: "நான் சொன்னேன்; நான் பார்த்தேன்."

பின்னர், அருமையான ஹிந்தி மொழியில் பேசி, மென்மையாக மூன்று முறை திரும்பத் திரும்ப மொழிந்தார்: "அவரைப் பார்ப்பது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் என்பதை அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே அறிவர்!"

தொடர்ந்து பயணித்த பாபா, முஸ்லீம் புனிதர்களான ஷா பிர் (SHAH PIR), மக்தும் அலி ஷா (MUKHDUM ALI SHAH) ஆகியோரின் தர்காக்களில் தனது மரியாதையைச் செலுத்தினார்.

அப்போது மதியம் கடந்துவிட்டது, அவர்கள் டெல்லிக்குப் புறப்பட வேண்டிய நேரம். மாலை ஐந்து மணிக்கு டெல்லியை வந்தடைந்து வாஸ் தேவ் கெய்னின் இல்லத்தில் தங்கினர். அன்று மாலை ஓய்வு பெறுவதற்கு முன்பு, டெல்லியில் பல்வேறு தர்காக்கள் மற்றும் சமாதிகளுக்குச் செல்ல விரும்புவதாக

பாபா குறிப்பிட்டார்; ஆனால், மறுநாள் காலை நான்கு மணிக்குச் செல்லலாம் என பின்பு முடிவு செய்தார்.

திட்டமிட்டபடி, நகரத்தில் பல பிரபலமான தர்காக்களில் மரியாதை செலுத்திய பிறகு, பாபா, ‘டெக் பகதூர்’ (TEG BAHADUR) சமாதிக்குச் சென்றார். அங்கிருந்த பண்டிதருக்கு சிறிது பணம் கொடுத்து, பாபாவின் நான்கு மாத பணி வெற்றிகரமாக நிறைவடைய பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பாபா யார் என்று தெரியாதபோதும், “கடவுள் அவருக்கும் குழந்தை பாக்கியம் வழங்கட்டும்” என்று பண்டிதர் தனது பிரார்த்தனையில் இணைத்துக் கொண்டார்.

மண்டலி அனைவரும் பூசாரி கூறியதைக் கேட்டு சிரிக்கவே, அங்கிருந்து வெளியேறும் போது, பாபா, வேடிக்கையாகக் கூறினார் “**எனக்கு ஏற்கனவே எண்ணற்ற குழந்தைகள் உள்ளனர். அவர்களை கவனிப்பதே மிகவும் கடினம்**!” மதிய உணவுக்குப் பிறகு, பாபா டெல்லியில் மேலும் பல கோவில்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்தார்.

வாஸ் தேவ் கெய்னை அவர்களுடன் செல்ல அனுமதித்து, பாபா, குழுவுடன் 1953 செப்டம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை அன்று டெல்லியிலிருந்து பானிபட்டுக்குப் (PANIPAT) புறப்பட்டார், அங்கு அவர் ‘குதுப் புவாலி ஷா கலந்தரின்’ (QUTUB BUALI SHAH QALANDER) தர்காவைப் பார்வையிட்டார். திரும்பி வரும் வேளையில், ஹெலன் காரைக் கொண்டு வந்திருக்க வேண்டிய இடத்தைச் சென்றடைய, நகரத்தின் பஜார் வழியாக பாபா நடந்து சென்றார். ஆனால், அவர் பாபாவின் அறிவுறுத்தலை சரியாகப் பின்பற்றாததால், குமார் ரிக்ஷாவில் அவரைத் தேடிச் சென்றார். இதற்கிடையில், பானிபட் ஒரு குறிப்பிட்ட வகை இனிப்புகளுக்கு பிரபலமானது என்று ஒருவர் கூறவே, பாபா சிலவற்றை வாங்க அனுமதித்தார். அதிகாலையில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டிருந்தன, ஆனால் மண்டலி சில கடைகளைக் கண்டுபிடித்து, காரில் அமர்ந்திருந்த பாபாவிடம் இனிப்புகளை எடுத்துச் சென்றபோது, பாபா அவற்றை அனைவருக்கும் வழங்கி, தானும் உண்டார்.

ஹெலன் வந்ததும் அவர்கள் குருக்ஷேத்திரா (KURUKSHETRA) வழியாக ராஜ்புராவிற்குப் (RAJPURA) புறப்பட்டுச் சென்றனர். பாபா, வாஸ் தேவ் கெய்னை அங்கிருந்து டெல்லிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தினார். வாஸ் தேவ் கெய்ன் பின்பு கூறியதாவது: “நான் குறிப்பாக கவனித்தது என்னவெனில், பாபா மிகவும் சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்பட்டார், அவர் மஸ்த் பயணத்தில் செல்லும் போதெல்லாம், மஸ்துகளுக்காக மட்டுமே பூமிக்கு வந்திருப்பது போலத் தோன்றியது. மஸ்துகள் பாபாவை சந்திக்க ஆர்வமாக இருந்தனர், ஏனெனில் அவர்கள் பல்வேறு நிலைகளில் சிக்கிக் கொண்டவர்கள்; மாறாக, பாபா அவர்களை சந்திக்கும் அதீத ஆர்வத்தில் இருந்தார்.”

ஸர்ஹிந்த் (SIRHIND) குறுநகரில் , பாபா, ‘ஃபத்தே கர் குருத்வாரா’விற்குச் (FATEH GHAR GURUDWARA) சென்றார், அங்கு கோவிலின் சீக்கிய குரு பிரார்த்தனையை மொழிந்தார்.

கன்னா (KHANNA) நகரைச் சென்றடைந்த போது, பாபா மீண்டும் பாம்பி மஸ்தைத் (BAMBI MAST) தொடர்பு கொள்ள விரும்பினார். நிர்வாண நிலையில் சிறுவன் சாலையில் காணப்பட்டான்; பைதூலும் பாபாவும் அவனை அணுகுவதற்காக காரிலிருந்து இறங்கினர். பாம்பி, பைதூலின் கையை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அவருடன் நடந்தான், ஆனால் பாபா அவனுக்கு இரண்டு ஆப்பிள் பழங்களைக் கொடுத்தபோது அவன் அவற்றை கையிலிருந்து நழுவவிட்டான். தொடர்ந்து பாபாவுடன் கைகோர்த்து, ஒரு தேநீர் கடையை நோக்கி நடக்கத் தொடங்கினான். பாபா அவனுக்கு ஒரு கோப்பை தேநீர் மற்றும் சில இனிப்புகளை வழங்கி, பாம்பி மஸ்தின் கால்களைத் தொட்டு வணங்கினார்; அந்தத் தொடர்பில் பாபா மிகவும் திருப்தியடைந்தார்.

கன்னாவிலிருந்து புறப்பட்டு, ஃபில்லோர் (PHILLAUR) வழியாக மொஹல்லாவிற்குப் (MOHWALLA) பயணத்தைத் தொடர்ந்தனர். மேவ்வல் - MEWWAL (MIANWAL, மியான்வால்) கிராமத்தில், ஜூன் மாதம், பாபா, ஏற்கனவே சந்தித்த நிர்வாண மஸ்துடன் மீண்டும் தொடர்பு கொண்டார். மஸ்தின் கால்களை, பாபா அழுத்தத் தொடங்கியபோது, மஸ்த் அவரைப் பார்த்து, “விட்டுவிடுங்கள்! சென்றுவிடுங்கள்!” என்று கத்தினார். இருப்பினும், பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து, மேலும் அரை மணி நேரம் அவர் அருகாமையில் அமர்ந்திருந்தார். மஸ்த் எழுந்து, நடந்து சென்று சாலையோரம் அமர்ந்ததும், பாபா அவரைப் பின்தொடர்ந்து, ஆப்பிள் மற்றும் திராட்சைகளை ஊட்டினார். அவருக்குப் பழங்களை ஊட்டும் அவ்வேளையில், பாபா பலமுறை மஸ்தின் கால்களில் தலைவணங்கினார்.

அங்கிருந்து அவர்கள் சிறிய மண் சாலைகள் மற்றும் வயல்வெளி வழியாக ஸங்கத்பூர் (SANGATPUR) கிராமத்தை, அன்று இரவு பத்து மணியளவில் வந்தடைந்தனர். அவர்கள் சந்திக்கவிருந்த நூரியா பாபா (NURIYA BABA) என்ற மஸ்த், அவரது அறையை உள்ளிருந்து தாழ்ப்பாளிட்டு, வெளியே வர மறுத்துவிட்டார். இறுதியாக, கதவைத் திறக்க இணங்கச் செய்து, பாபா அவரைத் தலைவணங்கினார். பைதூல், பாபாவை ஆசீர்வதிக்கும்படி மஸ்திடம் கேட்டபோது, நூரியா அறிவித்தார்: “உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்!”

மேல்நிலையை அடைந்த மஸ்த் சிந்தா பகத்துடன் (CHINTA BHAGAT) பணிபுரிய, பாபா, அருகிலுள்ள நகரத்திலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த பாரா ரூர்கா (BARA RURKA) கிராமத்திற்கு விஜயம் செய்ய விரும்பினார். அங்குச் செல்லும் சாலை, செப்பனிடப்படாமல் இருந்ததால், சமீபத்தில் பெய்த பருவமழையால் சேறும் சகதியுமாக இருந்தது. இது நேரான சாலையாக இல்லாமல், இதர கிராமங்களுக்குச் செல்லும் வளைவு நெளிவுகளைக் கொண்டதாக இருந்தது. நீண்ட காலமாக இப்பகுதியில் தங்கியிருந்த எல்சா இவ்வாறு தெரிவித்தார்: “பாபா, இரவில் இந்த சாலை வழியாகச் செல்ல இயலாது. திருப்பங்களைத் தவறவிட்டுத் தொலைந்து போவோம். சாலையின்

இருபுறமும் கரும்பு வயல்கள் எல்லைகளாக இருப்பதால், எந்த சாலை எங்குச் செல்கிறது என்று சொல்ல முடியாது.”

பாபா, பைதூலிடம் அங்கு அழைத்துச் செல்ல முடியுமா என்று கேட்டார். பைதூல் தன்னால் முடியும் என்று உறுதியளித்து, அன்று இரவே அவர்கள் மஸ்தின் இருப்பிடத்தைச் சென்றடையலாம் என்று நம்பிக்கையுடன் கூறினார். எல்சா, “பாபா, அவர் சொல்வதற்கு செவி மடுக்காதீர்கள். நான் இந்த இடங்களை நன்கு அறிவேன். பைதூல் நம்மை வயல்களில் வீணாக அலைய விடுவார்” என்று மன்றாடினார். பைதூலை வழி நடத்துமாறு பாபா கூறிய வேளையில், ஹெலன் ஓட்டிச்சென்ற கார், பல வளைவு நெளிவுகளைக் கடந்து, இடது, வலது புறமாகச் சென்று, இறுதியில், இரவு பதினோரு மணியளவில், நேராக மஸ்த் இருந்த இடத்தைச் சென்றடைந்தது. எல்சா ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனார். அவர், நகைச்சுவை தோரணையில், பைதூலின் முன்னால் தரையில் விழுந்து வணங்கி, பாபாவிடம் உருக்கமாகக் கூறினார், “நான் இதுவரை அவரை ஒரு முட்டாள் என்று நினைத்தேன், ஆனால் நீங்கள் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு மண்டலியும் ஒரு ரத்தினக்கல்! ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விஷயத்தில் நன்கறிந்த நிபுணர்களாக இருந்தாலும், பைதூலைப் போன்றவர்கள் எவரும் இல்லை. அவருக்கு, திசைகாட்டி போன்ற ஒரு மூக்கு உள்ளது!”

சிந்தா பகத்தின் பராமரிப்பாளராகப் பணியாற்றிய சீக்கியர் ஒருவரை பைதூல் தூக்கத்திலிருந்து எழுப்பி, அவருடன் மஸ்தின் அறைக்குச் சென்றார்; அங்கு அவர் துணி நாடாவால் பின்னப்பட்ட கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். சீக்கியர் பக்தி வசனங்களை மொழியத் தொடங்கியதும், விரைந்து மஸ்த் எழுந்து அவரது படுக்கையில் அமர்ந்தார். அவரது பக்தர் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்த போது, மஸ்த் கைகளைத்தட்டி மகிழ்ச்சி பொங்க சிரித்தார். பாடலின் பல்லவியைத் திரும்பத் திரும்பச் சொல்லி, சிந்தா பகத் எழுந்து நின்று, பாபாவின் கைகளைப் பற்றிக் கொண்டு அறையில் அங்கும் இங்கும் நடக்கத் தொடங்கினார், சில சமயங்களில் பாபாவை வெளியே சாலைக்கும் அழைத்துச் சென்றார்.

சிந்தா பகத், பாபாவை விட்டபாடில்லை! பாபாவின் விரலை அவரது கையால் பற்றிக்கொண்டு அறையைச் சுற்றி வந்தார்; பாபாவும் அதற்கெல்லாம் இணங்க வேண்டியதாயிற்று. நள்ளிரவு 2:00 மணியளவில், கும்மிருட்டிலும், கடும் குளிரிலும், பாபா, மஸ்தைப் பின்தொடர்ந்து வெளியே சென்றார். பாபாவின் சைகையை கவனித்த எரச், மஸ்திடம், “நாங்கள் இப்போது செல்ல வேண்டும்; அவரை விட்டு விடுங்கள்!” என்று கூறியபோது, பாபாவின் கையைப் பற்றிக் கொண்டு, ஒரு நிமிடம் மஸ்த் அசையாமல் நின்றார், ஆனால் அவர் எரச்சை லேசாகத் தள்ளிவிட்டு, மீண்டும் குடிலைச் சுற்றி வரத் தொடங்கினார். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இது தொடர்ந்தது.

அன்பிற்குரியவர் தனது உண்மையான அன்பர்களின் அடிமையாக மாறுவது எப்படி என்பதைச் சித்தரிக்கும் ஓர் உன்னதமான காட்சி. “இது மஸ்துகளுடன் பாபாவின் தனித்துவமான வழி” என்று காலம் குறிப்பிட்டது. “அவர்களின் ஒவ்வொரு தற்போக்கெண்ணத்திற்கும், விருப்பத்திற்கும் அவர்

முற்றிலும் அடிபணிந்து, அர்ப்பணிப்புள்ள ஊழியரானார். மேலும் அவர் உடல் ரீதியாக சோர்வடைந்திருந்தாலும், அத்தகைய சூழ்நிலைகளை பாபா மிகவும் அனுபவித்து மகிழ்ந்தார்.”

பாபாவின் காலில் காயம் ஏற்பட்டதைக் கண்டு கவலைப்பட்ட எரச், சிந்தா பகத்திடம் தனது வேண்டுகோளை மீண்டும் முன்வைத்த போது, மஸ்த் சிறிது நேரம் அமைதியாக நின்று, மீண்டும் ஆரம்பித்து, அழுதுகொண்டே, முழு நேரமும் கோஷமிட்டார். இறுதியில், தானாக, பாபாவின் கையை விடுவித்து, நடையை நிறுத்தினார். தொடர்பின் முடிவில், பாபாவின் பணியை ஆசீர்வதிக்கும்படி சிந்தா பகத் கேட்டுக் கொள்ளப்பட்டார், அதை அவர் கடமை உணர்வுடன் செய்தார்.

இரவு வெகுநேரம் கடந்த பின்பு, பாபா குழுவுடன் ஃபில்லோர் ரயில் நிலையத்தைச் சென்றடைந்து, அங்கு, பாபா, மீண்டும் மஸ்தானி மாயுடன் பணிபுரிந்தார். அவருடனான முதல் சந்திப்பின் போது, மஸ்தானி ஒரு ரூபாய் நாணயம் கேட்டதும், பாபா அதை வழங்க, அவர் வாங்க மறுத்து, “நான் அதை எடுத்துக்கொள்கிறேன், ஆனால் விடியற்காலையில்” என்றார். பாபாவின் பணியை ஆசீர்வதித்து அவருக்கு விடையளிக்குமாறு இதமாக வலியுறுத்திய பின்னர், அவர் நாணயத்தை ஏற்றுக்கொண்டு, “கடவுள் உங்களுக்கு உதவுவார்” என்றார். பாபா காரில் ஏற ஆயத்தமான போது, மஸ்தானி மா அவரைப் பின்தொடர்ந்து சென்று, பத்து ரூபாய் கேட்டார். பாபா அவருக்கு ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார், ஆனால் மஸ்தானி பத்து ஒரு ரூபாய் நாணயங்களை விரும்பினார். அவர் ஆசையை நிறைவேற்ற காரின் டிக்கியிலிருந்த சாமான்களை அவிழ்க்க வேண்டியதாயிற்று. பின்னர் அவர் ஒரு பென்சிலைக் கேட்டு பாபாவின் முதுகில் சில கோடுகளையும் உருவங்களையும் வரைந்தார்.

பாபா குழுவுடன் ரூர்க்கி வழியாக ஹரித்வாருக்குப் புறப்பட்டு, வழியில் பல்வேறு சமாதிகளுக்கும் தர்காக்களுக்கும் விஜயம் செய்து, செப்டம்பர் 14 அன்று மாலை ஹரித்வாரை வந்தடைந்தார். பாபா கன்கலிலிருந்து (KANKHAL) சில மைல் தொலைவில், ஒரு தோட்டத்தில் வசித்து வந்த மஸ்துடன் பணிபுரிய விரும்பினார். ஆனால், சமீபத்தில் பெய்த மழையால், தோட்டத்திற்கு செல்லும் மண் சாலையில், பெரிய ஆழமான குட்டைகளும், பாதை சேறும் சகதியுமாக நிறைந்திருந்தது. இரண்டு அல்லது மூன்று முறை, பாபாவும் மண்டலியும் காரிலிருந்து இறங்கி, தண்ணீரில் தத்தளிக்க வேண்டியதாயிற்று, கார் வயல்களில் வழி தவறிச் சென்றது. இறுதியாக, மஸ்தைக் கண்டுபிடித்து மேற்கொண்ட தொடர்பு பாபாவைத் திருப்திப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, பாபா, குறிப்பாக மேல்நிலை மஸ்த்-துறவி நீல்கந்த்வாலாவுடன் மீண்டும் பணிபுரிய ஹரித்வாருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கிருந்து பாபா ரிஷிகேஷிற்குச் சென்று, மேலும் சில சாதுக்களுடனான தொடர்புகளை நிறைவு செய்து, பின்னர், ஆண்கள் இரவு உணவை உண்ண அனுமதிக்கப்பட்டனர்.

பாபா நள்ளிரவில் பிரார்த்தனை செய்ய விருப்பம் தெரிவித்து, அனைவரும் ரூர்க்கிக்கு அருகில் அமைந்த கலியார் நகரில் (KALYAR), சத்குரு ஸபீரின் தர்காவிற்குப் புறப்பட்டுச் சென்றனர். ஹெலனை வேகமாக ஓட்டுமாறு பாபா வற்புறுத்தி, அவர்கள் ஸபீரின் சமாதியை வந்தடைந்ததும், பைதூல் பராமரிப்பாளரிடம் சென்று அதைத் திறக்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த நபர் திட்டவட்டமாக மறுத்துவிட்டதால், பாபா, ஸபீரின் சமாதி தெரியும் விதத்தில் அமைந்த, குறுக்கு நெடுக்காகப் பொருத்தப்பட்ட மூங்கில் தட்டுக்கு அருகில் நின்று பிரார்த்தனை செய்ய வேண்டியதாயிற்று. ஸபீரின் தர்காவை 101 முறை சுற்றி வருமாறு பாபா தனது குழுவிற்கு அறிவுறுத்தினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன், ஒரு புனித நூலிலிருந்து வாசிக்கத் தொடங்கி, ஒவ்வொரு வரியிலும் கண்ணீர் சிந்த ஆரம்பித்தான்.

மீண்டும் ஹரித்வாருக்குத் திரும்பிய பாபா, அதிகாலையில் ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டு, தனது பணியை நிறைவு செய்து, குழுவுடன் டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் சென்றார். 1953 செப்டம்பர் 15 அன்று காலை அவர்கள் டெஹ்ரா டூன் வந்து சேர்ந்தனர், மேலும் பாபா தனது முழுப் பயணத்திலும் நிகழ்த்திய மஸ்த் தொடர்புகளில் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக தெரிவித்தார்.

பயணத்தைப் பற்றி ஆதி சீனியருக்கு எழுதுமாறு பாபா, மணியிடம் கூறினார். அவர் எழுதியதாவது (செப்டம்பர், 17):

நான்கு நாட்களுக்குப் பிறகு, பாபா தனது மஸ்த் பயணத்திலிருந்து திரும்பியுள்ளார். இரவும் பகலும் உறக்கமின்றி, சிறிதும் உணவின்றி இடைவிடாமல் உழைத்தார். (கடைசியாக தொடர்ந்து மேற்கொண்ட 60 மணி நேர பயணத்தில், அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வழியில் கார் நிறுத்தப்பட்டது). பாபாவும் மண்டலியும் முற்றிலும் களைத்துப்போய், மயங்கிய நிலையில் திரும்பி வந்தனர். ஆனால் பாபா சில சிறப்பான மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, அவருடைய பணி மிகவும் திருப்திகரமாக நிறைவடைந்ததாகக் கூறினார், இதுவே முக்கிய விஷயம்.

டெஹ்ரா டூனில் பாபாவின் பங்களாவை ஒட்டி கொய்யா மரங்களின் தோட்டம் இருந்தது. இரவில் பறவைகளை விரட்ட நான்கு காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். காவலர்கள் உரத்த குரலில் கூச்சலிடுவது குறித்து பாபா, மிகுந்த தொந்தரவாக இருப்பதாகப் புகார் கூறினார். ஒரு நாள் பாபா குமாரை அனுப்பி, இரவு நேரத்தில் அதிக குரல் எழுப்ப வேண்டாம் என்று காவலாளர்களிடம் சொல்லச் சொன்னார்.

குமார் அறிவுறுத்தியபடியே செய்தார், ஆனால் அவர்கள் ஏளனமாக சிரித்தனர், “நீங்கள் சொல்வது உண்மைதான், ஆனால் நாங்கள் அதைச் செய்யாவிட்டால், பறவைகள் எல்லா பழங்களையும் தின்றுவிடும், இழப்பை யார் ஈடு செய்வது? எங்கள் முதலாளி எங்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவார். நாங்கள் வேலை இல்லாமல் திண்டாடுவோம்.” திரும்பி வந்த குமார், பாபாவிடம்

தெரிவித்த போது, அவர் பறவைகளைத் துரத்தும் வேளையில் சத்தத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்ற செய்தியுடன் அவரை திருப்பி அனுப்பினார். குமார் அதையும் அவர்களுக்குத் தெரிவித்தார்.

அடுத்த நாள் சத்தம் முன்பை விட மோசமாக இருந்ததாக பாபா புகார் கூறினார். பாபாவின் முறையீட்டைக் கேட்டு குமார் எரிச்சலடைந்தார். இருப்பினும், பாபா, அவரை தோட்ட உரிமையாளரிடம் அனுப்பிய போது, அவர் தனது நேரத்தை வீணடித்ததற்காக மிகவும் வருத்தப்பட்டார்: "நான் எனது பணியாட்களிடம் சலசலப்பை ஏற்படுத்தச் சொல்லாவிட்டால், அவர்கள் தூங்கிவிடுவார்கள், பறவைகள் எனது தோட்டத்தை அழித்துவிடும், ஆனால் அவர்களின் கூச்சல்களால் உங்களுக்கு என்ன கலக்கம் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, அவர்களின் சத்தம் உங்கள் பங்களாவில் கேட்க வாய்ப்பில்லை."

பாபாவிற்கு இந்தத் தகவலைத் தெரியப்படுத்தியதும், "**இதற்கு என்ன பரிகாரம்?**" என்று குமாரிடம் கேட்டார்.

"தோட்டத்தை நாம் கையகப்படுத்தி, பறவைகள் எல்லா பழங்களையும் தின்பதை அனுமதிப்பதைத் தவிர வேறு பரிகாரம் இல்லை" என்று ஒருவித நகைச்சுவை கலந்த தொனியில் பதிலளித்தார் குமார்.

"**அற்புதமான யோசனை!**" பாபா உற்சாகமாக பதிலளித்தார். "**அங்குச் சென்று அதன் விலையைக் கேட்டு வாருங்கள்.**"

குமார் மீண்டும் ஒருமுறை உரிமையாளரை அணுக, அவர் மேலும் சீற்றமடைந்தார். "உங்களுக்கு ஏதேனும் புத்தி இருக்கிறதா? தோட்டத்தில் பழங்கள் நிறைந்திருக்கும் நேரம், விற்கும் தருணமா? எப்படியும், பழங்கள் ஏற்கனவே ஒப்பந்தக்காரரர் ஒருவருக்கு விற்கப்பட்டுவிட்டன, அவர் விளைச்சலை படிப்படியாக எடுத்துச் செல்கிறார்."

பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், குமாரை இந்தச் செய்தியுடன் திருப்பி அனுப்பினார்: "**ஒப்பந்தக்காரரிடம் பழங்களை படிப்படியாக எடுக்காமல், அனைத்தையும் ஒரே நேரத்தில் சேகரிக்கச் சொல்லுங்கள்.**"

குமார் திரும்பிச் சென்றதும், உடனடியாக வெளியேறுமாறு கூச்சலிட்டு, உரிமையாளர் கோபமாக கையை அசைத்து குமாரைத் துரத்தினார். பாபாவிடம் இதைக் கூறியபோது, "**எப்படியாவது இந்தக் கூச்சலை முறியடித்தாக வேண்டும். என்னால் தூங்க முடியவில்லை, இதனால் எனது உடல்நிலை, மனநிலை மற்றும் எனது வேலை பாதிக்கப்படுகிறது. ஏதாவது செய்தாக வேண்டும்**" என்று புகார் செய்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா கூறினார், "**அங்கிருப்பவர்களில் எல்லா பணியாளர்களும் இவ்வளவு உரக்க சத்தம் போடுவதில்லை, ஒரே ஒரு சிறுவன் மட்டும்தான் கூச்சலிட்டு சத்தம் செய்கிறான், அவனை இங்கே அழைத்து வந்து, பணியில் சேர்த்தால், பிரச்சினை தீர்ந்துவிடும்.**" குமார், தவறிழைத்த அந்த இளைஞனை அடையாளம் கண்டுகொண்டார், ஆனால் சிறுவன் தனது வேலையை விட்டுவிடும் மனநிலையில் இல்லை. குமார் அதிக

சம்பளம் வழங்குவதாக ஆசை காட்டியும், சிறுவன் இணங்குவதற்குத் தயாராக இல்லை. இருந்தபோதிலும், குமார் விடாப்பிடியாக இருந்து, கடைசியாக சிறுவனை இணங்கச் செய்து, பாபாவிடம் அழைத்துவந்த போது, பாபா, அவனைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பதினெட்டு வயது இளைஞன் நேபாளத்தைச் சேர்ந்தவன், அவனுக்கு ஹிந்தி மொழி நன்றாகத் தெரியாது. பாபா அவனிடம் சம்பளத்தைப் பற்றி கேட்டதும், மிகவும் வேடிக்கையான உச்சரிப்புடன் 25 ரூபாய் (பச்சீஸ் ரூபாய்க்கு பதிலாக 'பவ்சீஸ் ரூபாயா') என்று பதிலளித்தான். பாபா, அவனுடைய ஹிந்தியை ரசித்து அவனிடம் கூறினார், **"உனக்கு இங்கு வேலை செய்ய ரூ 50 வழங்கப்படும், மேலும் உணவு, உடையும் கிடைக்கும். இது தவிர நீ இங்கு கல்வி கற்க முடியும்"** என்று உறுதியளித்தார்.

சிறுவன் மகிழ்ச்சியில் மூழ்கினான்; அவனுக்குக் கல்வி கற்பிக்கும் கடமை பாவ் கல்சூரிக்கு வழங்கப்பட்டது; பருத்தி மற்றும் கம்பளி ஆடைகள் வழங்கப்பட்டன, மேலும் அவனுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன. ஆனால் அவன் இப்போது ஒரு முதலாளியைப் போல நடந்து கொள்ளத் தொடங்கினான் - பாவ் கல்சூரியைத் தனது பணியாளாக பாவித்தான். பாவின் கடமைகளில் முக்கியமாக, படுக்கையை தயார் செய்வது, உணவு கொண்டு வருவது, பாத்திரங்களை சுத்தம் செய்வது மற்றும் பொதுவாக அவன் மகிழ்ச்சியாக இருப்பதை ஊர்ஜிதம் செய்வது போன்றவை அடங்கும்.

தோட்டத்தில் இரவு சலசலப்பு தொடர்ந்தாலும், பாபா இப்போது அவர் தொந்தரவு செய்யப்பட்டதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தவில்லை. அவர் நேபாள சிறுவனை மிகவும் நேசித்தார், மேலும் அவன் அங்குத் தங்கியிருந்தது பாபாவை மகிழ்வித்தது. சிறுவன் அங்கு வந்த நாள் முதல், பாபா, சத்தத்தை பொருட்படுத்தவில்லை. சிறுவன் பாவ் கல்சூரியின் அறையில் தங்கி, தனக்குக் கற்பித்ததைக் கற்றுக்கொள்ள முயன்றான்; ஆனால் சிறிது நேரம் முயற்சித்து படிக்கும்போது, அவனது தலை வலிக்கத் தொடங்கியது. 'ஏ' என்று கற்றுத்தந்தால் அவன் 'ஆ' என்று உச்சரித்தான், இரண்டு மாதங்களுக்குப் பிறகும் அவன் கிட்டத்தட்ட எதையும் கற்றுக்கொள்ளவில்லை. பாபா அவனை தினமும் அழைத்து, **"உனக்கு அங்கு என்ன சம்பளம் வழங்கப்பட்டது?"** என்று திரும்பத் திரும்பக் கேட்ட வேளையில், அவனது விசித்திரமான உச்சரிப்பு பாபாவை மகிழ்வித்து சிரிக்க வைத்தது.

நேபாள சிறுவனின் பின்னணி என்னவெனில், அவன் பெற்றோருக்கு ஒரே குழந்தை; மேலும் சில காரணங்களால் வீட்டை விட்டு வெளியேறினான். அவன் காணாமல் போனதைக் கண்டு மனம் உடைந்த பெற்றோர், அவனை நினைத்து கதறி அழுதனர். அவர்கள் அவனைக் கண்டுபிடிக்க முயன்றும், முடியவில்லை. நேபாளத்தைச் சேர்ந்த சிறுவனின் நண்பர் ஒருவர் இரண்டு மாதங்களுக்குப் பிறகு டெஹ்ரா டூனில் அவனைப் பார்க்க வந்தபோது, இது தெரிந்தது. பாபாவிற்கு இதைத் தெரிவித்ததும், சிறுவனை வீடு திரும்புமாறு வற்புறுத்தினார். பாபா தினமும் அந்த இளைஞனின் கால்களில் தலை வணங்கி

அவனைத் தழுவிவந்தார். அவருடைய அன்பு மட்டுமே சிறுவனைக் கீழ்ப்படியச் செய்தது.

அந்த இளைஞனுக்கு ரூ. 300 வழங்கியதும் அவன் மனமுவந்து அதை ஏற்றுக்கொண்டு வெளியேறினான். அவன் பாபாவிடம் வராமல் இருந்திருந்தால், அவன் இல்லத்திற்குச் சென்றிருக்க மாட்டான். இப்படியாக ஓரிரு மாதங்களுக்குப் பிறகு, பாபாவின் 'தொந்தரவு'க்கான உண்மை காரணம் தெரிய வந்தது.

ஸஹாரன்பூரின் ராணியும், ராஜாவும் பாபாவின் இல்லத்திற்கு அருகில் அமைந்த ஒரு பங்களாவில் வாழ்ந்து வந்தனர். ராணியின் பெயர் மோகினி ராணி (MOHINI RANI) அவரது கணவர் சரத் ஸிங் (CHARAT SINGH). இவர்களது மகள்களில் ஒருவரான புஷ்ப் லதா (PUSHP LATA), பட்டியாலா ராஜாவின் (PATIALA RAJA) மனைவி, சமீபத்தில் குழந்தைப் பிரசவத்தின் போது உயிரிழந்தார். துக்கத்தால் துவண்டு போன ராணி, ஒரு பைத்தியக்காரப் பெண்ணைப் போல் ஆகிவிட்டார், இந்த நேரத்தில் பாபாவை சந்திக்காமல் இருந்திருந்தால், அவருடைய நிலை நிச்சயமாக சீர்குலைந்திருக்கும்.

ராணி, மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, 1953 செப்டம்பர் மாதம் ஒரு மாலையில், அவர் தனது கணவருடன் மண்டலியின் பங்களாவிற்கு வந்தார். எரச்சுடன் வெளியே வராண்டாவில் அமர்ந்திருந்த பாபா, '**அவருக்கு என்ன வேண்டும்**' என்று கேட்டார். அதற்கு மோகினி ராணி, "பாபா, நான் மிகவும் துன்பத்தில் உங்களிடம் வந்துள்ளேன், நான் ஒரு வேண்டுகோளுடன் வந்துள்ளேன்" என்று பதிலளித்தார்.

பாபா, "**என்ன அது? என்னிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?**"

"எனது மகள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. எனக்கு எனது மகள் திரும்ப வேண்டும். எனது மகளை உயிருடன் மீட்டுத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்!" அவர் தனது கதையைச் சொல்லும் போது அழுதுகொண்டிருந்தார்.

பாபா, "**ஏன் அழுகிறீர்கள்? உங்கள் மகளை நீங்கள் திரும்பப் பெறுவீர்கள்**" என்று ஆறுதல் கூறினார்.

மோகினி ராணி ஆச்சரியத்துடன், "அதே மகள், பாபா? அதே வடிவத்தில்?"

"**ஆம், அதே மகள்**" என்று அவர் உறுதியளித்தார்.

"ஆனால் அவள் உடல் எரிக்கப்பட்டது..."

பாபா புன்னகைத்தார், அந்தப் புன்னகை மோகினியின் வேதனையைக் கரைத்தது. "**நான் பரமாத்மா, என்னால் முடியாதது எதுவுமில்லை**" என்று அவருக்கு உறுதியளித்தார். "**பிரபஞ்சத்தை நான் படைத்தேன்! உங்கள் மகளை என்னால் உயிர்ப்பிக்க முடியாதா?**"

இந்த வார்த்தைகள் ராணியின் இதயத்திலிருந்த பயங்கரமான சுமையை அகற்றியது மட்டுமின்றி அவரது விரக்தி, நம்பிக்கையாக உருவெடுத்தது. அவர், "உண்மையாகவே எனது மகளைத் திருப்பித் தருவீர்களா?" என வினவினார்.

பாபா புன்னகையுடன் அவரிடம் உறுதியளித்தார், “**ஆம், நான் உங்களுக்கு அதைத்தான் சொல்கிறேன், இப்போது கவலைப்படுவதை விட்டுவிட்டு, பொறுமையாக இருங்கள். உங்கள் மகள் உங்களிடம் திரும்பி வருவார். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் என்னை நினைவில் வைத்து, நேசிப்பதுதான். என்னை எப்பொழுதும் நினைவில் வைத்து நேசியுங்கள். உங்களால் முடிந்த அளவு நேசியுங்கள், ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அதிகமாக நேசியுங்கள். நீங்கள் அதைச் செய்வீர்களா?**”

மஹாராணி ஒப்புக்கொண்டார்; நீண்ட, நெடிய காலத்திற்குப் பிறகு முதல் முறையாக, அவர் இதயத்தின் சுமை லேசானதாக உணர்ந்தார். தம்பதியர் வெளியேறினர். பாபாவின் வார்த்தைகளை விளக்கமாக எடுத்துரைத்துக் கொண்டிருந்த எரச் வாயடைத்து நின்றார்: ‘கடவுளே! பாபா எந்த விதமான வாக்குறுதியை வழங்குகிறார்? இப்படியெல்லாம் அறிவிப்பது அவர் செய்வது போல் இல்லை” என்ற எண்ணம் அவர் மனதில் அலைபோல பாய்ந்தது.

எரச் உடனே பாபாவிடம், “அவருடைய மகள் திரும்பி வருவார் என நீங்கள் அவருக்கு வாக்குறுதி அளித்துள்ளீர்கள், ஆனால் அவரைத் திரும்ப அடைய முடியாதபோது என்ன நடக்கும்?” என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார், “**என்னிடம் எல்லா நோய்களுக்கும் பரிகாரம் உள்ளது, எனது சிகிச்சை ஒருபோதும் தவறாது. தற்பொழுது அவருக்கு நோய் குணமடையும் வரை இந்த மருந்து தேவைப்படுகிறது. அவர் மகிழ்ச்சியாக இருந்தார், அவருடைய நிலைமை மோசமடையாமல் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்; மாறாக, அது மேம்படும்.**”

சில நாட்களுக்குப் பிறகு, மோகினி ராணி, பாபாவின் அறையைத் தானே துடைத்து சுத்தம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார். பாபாவின் சம்மதத்துடன் அவர் அதைச் செய்தார். அவர், பாபா, தனிப்பட்ட முறையில் பயன்படுத்திய ஏதேனும் பொருள் ஒன்றை வேண்டிய வேளையில், பாபாவின் சத்ரா ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது.

பாபா டெஹ்ரா டூனில் தங்கியிருந்தது வரை, மோகினி ராணி மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் இருந்தார், பாபா மீதான நேசம் மேலும் மேலும் அதிகரித்தது. பாபா அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகு, தனது மகளின் நினைவு வரும்போதெல்லாம், பாபாவிற்குக் கடிதம் எழுதுவதும், அவர் பொறுமையாக இருக்கக் கூறி பதில் வழங்குவதும் வழக்கமாக நடந்து வந்தது; அவருடைய மகள் நிச்சயமாக திரும்பி வருவார், ஆனால் இதற்கிடையில் ‘**மஹாராணி மேலும் மேலும் பாபாவை நினைவில் கொள்ள வேண்டும். ராணி தனது மகளைக் கனவில் காண்பார் என்றும், அதுவே அவள் விரைவில் திரும்பி வருவதற்கான அறிகுறியாக இருக்கும்**’ என்றும் பாபா கூறினார்.

பின்னர் 1954ஆம் ஆண்டில், மோகினி ராணி தனது கணவருடன் தரிசன நிகழ்ச்சிக்காக அஹமதுநகருக்கு வந்தார்; இறுதியாக பாபாவிடம் தனது மகளை

உயிர்ப்பித்து கொண்டு வர வேண்டும் என்று கேட்கும் உறுதியுடன் வந்திருந்தார். ஆனால் பாபாவின் முன்னிலையில் ராணி அதை முற்றிலும் மறந்துவிட்டார்.

சில வருடங்கள் கழித்து, தம்பதிகள் குருபிரசாத்தில் பாபாவை தரிசனம் செய்ய வந்தபோது, பாபா, மோகினி ராணியிடம், "**எப்படி இருக்கிறீர்கள்?**" என வினவினார்.

"பாபா, நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்," என்று அவர் பதிலளித்தார்.

அன்றைய தினம் பாபா அற்புதமான பிரகாசத்துடன் தென்பட்டார், திடீரென, "**இந்த நேரத்தில் நீங்கள் எதைக் கேட்டாலும் உங்களுக்கு அதைக் கொடுக்கும் மனநிலையில் இருக்கிறேன். உடனே என்னிடம் கேளுங்கள்: உங்களுக்கு உங்கள் மகள் திரும்பி வர வேண்டுமா, அல்லது நான் வேண்டுமா?**"

ராணி மெதுவாக பாபாவின் முழங்கால்களில் கைகளை வைத்து, "பாபா, எனக்கு நீங்கள் வேண்டும்" என்று பதிலளித்தார்.

அதற்கு பாபா, "**இப்போது உங்கள் மகள் மீண்டும் வந்திருக்கிறார். உங்கள் மகள் உட்பட முழு உலகமும் என்னிடத்தில் உள்ளது**" என்று பதிலளித்தார்.

பாபா, மோகினி ராணிக்கு தனது மகளைத் திரும்பக் கொடுத்தார். தனது மகளின் மரணத்தால், மோகினி ராணி, பாபாவின் நெருங்கிய தொடர்புக்கு வந்து, பாபாவின் அரவணைப்பில் நிரந்தரமாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றார். அவரது கணவர் சரத் ஸிங்கும் பாபாவின் பாதங்களைப் பற்றிக் கொண்டார், மேலும் அவர்களின் மற்றுமொரு மகள் குஸூம் (KUSUM), பாபாவின் அன்பில் பரவசம் அடைந்தார். குஸூமின் கணவரான சர்தார் மோக்கம் ஸிங்குக்கு (SARDAR MOHKAM SINGH) ஆரம்பத்தில் பாபா மீது நம்பிக்கை இல்லாத நிலையில், ஒருமுறை அவரை தரிசனத்திற்காக அழைத்து வந்தபோது, பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, புது டெல்லியில் அமைந்த அவர்களது இல்லத்தில் அடிக்கடி பஜன்-கீர்த்தனை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார்.

மோகினி ராணியின் உறவினர்கள் சுமார் 50 பேர் (அவரது மூத்த சகோதரி, முகிம்பூரைச் (MUKIMPUR) சேர்ந்த ரமாதேவி மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட) பாபாவின் தொடர்புக்கு வந்து, அவரது பாதங்களில் அர்ப்பணிக்கும் பாக்கியத்தைப் பெற்றனர் - இவை அனைத்தும் புஷ்ப் லதாவின் துயர மரணத்தால் நிகழ்ந்தது. இதனால் மெஹர் பாபாவின் அன்பில் மகள் உயிர்த்தெழுந்தார்.

பாபாவின் நெருங்கிய சீடரான மற்றுமோர் இளம் பெண் இந்த நேரத்தில் காலமானார். எரச்சின் தங்கை மெஹரு தமானியா, செப்டம்பர் 28 அன்று, தனது 32ஆவது வயதில் கணையப் புற்றுநோயால் காலமானதைப் பற்றி பாபாவிற்குத் தெரிவிக்கும் வகையில், ஆதி சீனியரிடமிருந்து ஒரு தொலைத்தந்தி வந்தது.

கடைசியாக பாபா, அவரைப் பார்த்தபோது, "**நீங்கள் கடினமாக உழைத்தீர்கள், ஆனால் விரைவில் உங்களுக்கு ஓய்வு கிடைக்கும்**" என்று குறிப்பிட்டிருந்தார்.

குஷ்ரு குவார்ட்டர்ஸில் மரணப் படுக்கையில், மெஹருவின் இறுதி வார்த்தைகள்: "எனது பயணம் முடிவுக்கு வந்துவிட்டது என்று பாபாவிடம் சொல்லுங்கள். அவருக்கு எனது வணக்கங்கள்."

நீலப்பேருந்து பயணத்தின் போது மெஹரு உணவு தயார் செய்வதில் பெருமளவு உதவினார்; மெஹரு, கணவர் ஸவக்கை மணந்த அவ்வேளையில், எரச், ஸவக்கின் சகோதரியை இரட்டை திருமண சடங்கு நிகழ்வில் திருமணம் செய்து கொண்டார், மேலும் பாபா அவர்களின் திருமணத்தில் கலந்து கொண்டார். அவர் காலமானதைப் பற்றிய தொலைத்தந்தி கிடைக்கப் பெற்றதும், பாபா, எரச்சையும் பிற அனைவரையும் திரைப்படம் பார்க்க அனுப்பி வைத்தார். எரச், தங்கையின் மரணச் செய்தியால் சிறிதும் பாதிக்கப்படவில்லை. எதுவுமே நடக்காதது போல் அவர் தனது வழக்கமான சுய நிலையில் இருந்தார்.

ஆனால் பெண்டு வருத்தத்தை வெளிப்படுத்தினார், மேலும் மனோனாஷ் ஏகாந்தவாசம் நிகழ்ந்த காலகட்டத்தில், பிம்பல்காவ்மில் இருந்த அவருக்கும், எரச், பைதூல் மற்றும் குஸ்தாஜிக்கும் மெஹரு உணவு தயார் செய்து வழங்கியதை நினைவு கூர்ந்தார். புது வாழ்வில் பாபா இல்லாத நேரத்தில் மெஹராஸாத்தில் அனைத்தையும் மெஹரு தூய்மையாக வைத்து பராமரித்தார்.

மெஹருவின் மறைவுக்குப் பிறகு, பாபா, அஹமதுநகரில் வாழ்ந்த ஸட்டா குடும்பத்தினருக்கு, மெஹரு மகிழ்ச்சியாக இருப்பதாகவும், டெஹ்ரா டூனில் தனது பணிக்காக ரூ 5,000 தக்ஷிணையாக (பிரசாதம்) வழங்குமாறும் அனுப்பிய தொலைத்தந்திக்கு இணங்க, அவர்கள் அதை உடனடியாகச் செய்தனர்.

1953 அக்டோபர் 1 வியாழன் முதல், மண்டலி, கிஷன் ஸிங், குமார், எல்சா, ஹெலன், கேக்கி நலவாலா ஆகியோரால் ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் தொடங்கி, டெஹ்ரா டூனின் பல்வேறு இடங்களில் பிரார்த்தனை மொழியப்பட்டது. அவர்களில் இந்துக்கள் கோவிலுக்கும், முஸ்லீம்கள் மசூதிக்கும், கிறிஸ்தவர்கள் (டான்) தேவாலயத்திற்கும் அனுப்பப்பட்டனர். டெஹ்ரா டூனில் நெருப்புக் கோயில் இல்லாததால், பார்சி கல்லறைக்குச் செல்ல கேக்கி அறிவுறுத்தப்பட்டார். சில மண்டலி பாபாவின் முன்னிலையில் தங்கள் மதச் சின்னங்களை முன்வைத்து, பிரார்த்தனை செய்தனர். ஒவ்வொரு பிரார்த்தனையிலும் பாபா பங்கேற்றார். அதன் பின்னர், அவர் தேவாலயம், மசூதி, கோவில் மற்றும் குருதுவாரா (GURUDWARA, சீக்கியர்களின் கோவில்) போன்ற புனிதஸ்தலங்களுக்குச் செல்ல இருந்தார்; அங்கு ஏற்கனவே அறிவுறுத்தியபடி, மண்டலியில் ஒருவர் நள்ளிரவில் தனது பிரார்த்தனையை மொழிய இருந்தார். இந்தச் சடங்கு அதிகாலை 2:00 மணி வரை, ஒரு முழு வாரமும் நடைபெறவிருந்தது.

இந்த நேரத்தில், ஆந்திரா, ஹமிர்பூரில் வாழ்ந்த அன்பர்கள் மற்றும் பக்தர்களுடன், அந்தந்த இடங்களுக்கான பாபாவின் பயணம் குறித்து, பல கடிதப்

பரிமாற்றங்கள் நடந்து கொண்டிருந்தன. கேஷவ் நிகம், புக்கார், கயா பிரசாத் கரே ஆகியோர் ஹமிர்பூர் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்க டெஹ்ரா டூனுக்கு அழைக்கப்பட்டனர். கடந்த 20ஆம் நாள், மூவரும் அங்கு வந்து நான்கு நாட்களுக்குப் பிறகு திரும்பிச் சென்றனர். 'உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்' (HIGHEST OF THE HIGH) செய்தியை ஹிந்தியில் மொழிபெயர்க்குமாறு கேஷவிடம் கூறி, பாபா அவருடைய மொழிபெயர்ப்பைக் கேட்டு, 5000 பிரதிகளை அச்சிட்டு, ஹமிர்பூர் மாவட்டத்தில் விநியோகிக்க ஏற்பாடு செய்தார்.

1953 அக்டோபர் 22அன்று, பாவ் கல்சூரியிடம் பாபா, "**நான் இன்று பிறந்தேன்!**" என்று கூறி, முதலில் பாவைத் தழுவிய பின்னர், ஒவ்வொரு மண்டலியையும் அழைத்து, அரவணைத்து இனிப்புகளை வழங்கினார். பாவ் கல்சூரியின் மனைவி ரமாவிற்கு ஆண் குழந்தை பிறந்ததாக நாக்பூரிலிருந்து தொலைத்தந்தி வரும் வரை, பாபா கூறியதன் அர்த்தம் எவருக்கும் புரியவில்லை. பாபாவே குழந்தைக்கு மெஹர்நாத் (MEHERNATH, கருணையின் இளவரசர்) என்று பெயர் சூட்டி, அது முந்தைய வாழ்க்கையில் ஜால் கேரவாலாவாக இருந்ததை பாவ் கல்சூரிக்கு வெளிப்படுத்தினார். பாபா ஒரு மாதத்திற்குப் பிறகு, புதிய மகனைப் பார்க்க ஒரு குறுகிய விஜயத்திற்காக அவரை நாக்பூருக்கு அனுப்பி வைத்தார்.

பாபா அவரது கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் (ஆண், பெண், இளைஞர்கள், வயதானவர்கள் அனைவரும்) 1953 அக்டோபர் 28 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 1:00 மணியிலிருந்து, இடைவிடாமல் ஒரு மணி நேரம் விழித்திருந்து, தத்தமது மதக் கோட்பாடுகளின்படி கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

டெஹ்ரா டூனில், பாபா, கேக்கி நலவாலாவை இரவு முழுவதும் இறைநாமத்தை உச்சரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அவர் சில மணிநேரங்களுக்கு 'அஹூரமஸ்தா, அஹூரமஸ்தா' (AHURAMAZDA) என்று திரும்பத் திரும்ப மொழிந்து, பின்னர் அதற்கு பதிலாக, 'மெஹர் பாபா, மெஹர் பாபா' என்று காலை 5:00 மணி வரை உச்சரிக்கத் தொடங்கினார். மறுநாள், பைதூல், பாபாவிடம் இதைப் பற்றிக் கூறினார், ஆனால் கேக்கி தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளும் விதத்தில், அது தனக்குத் தெரியாது, ஆனால் மீண்டும் மீண்டும் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததாகக் கூறி, பாபாவிடம் மன்னிப்பு கோரினார். "**கவலைப்படாதீர்கள், மெஹர் பாபாவே அஹூரமஸ்தா**" என்று பாபா அவரிடம் கூறினார்.

நாக்பூர் மற்றும் பிற இடங்களில் வாழ்ந்த பாபாவின் அன்பர்களுக்கு, நள்ளிரவில் விழித்திருந்து, கடவுளின் நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழிவது குறித்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டபோது, தேஷ்முக் 'இது இறை உணர்வை அடையும் இரவு! சிலர் அந்த தெய்வீக நிலையை அடைவார்கள்' என்றும் உற்சாகத்துடன் அறிவித்தார்... அதைக் கேள்விப்பட்ட மண்டலி, அக்டோபர் 30

அன்று, தேஷ்முக், டெஹ்ரா டூனுக்கு வரவிருந்த வேளையில், ஒரு நடைமுறை நகைச்சுவை விளையாட்டுடன், அவரை முட்டாளாக்க திட்டமிட்டிருந்தனர். தேஷ்முக் அன்று காலை வந்தபோது, மண்டலியின் திட்டப்படி, பாவ் அவரை வாசலில் அணுகி, அவரை ஓரமாக அழைத்துச் சென்றார்.

"டாக்டர் ஸாஹேப், ஏதோ நடந்துவிட்டது! 28ஆம் தேதி இரவு முதல், மண்டலி அனைவரும் மஸ்த் போலாகிவிட்டனர். நான் மட்டும் துரதிர்ஷ்டவசமாக அந்த நிலையிலிருந்து தப்பித்தேன். என்னுடைய துரதிர்ஷ்டம், எனக்கு எதுவும் ஆகவில்லை" என்றார்.

ஆர்வத்துடன் செவிமடுத்த தேஷ்முக் கண்களை விரித்து, "என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

பாவ் மிகவும் தீவிரமாக பதிலளித்தார், "அனைவரும் மஸ்துகளாக மாறிவிட்டனர்! ஆனால் பாபாவின் முன்னிலையில் அவர்கள் முற்றிலும் சாதாரணமாகி விடுகிறார்கள். பாபா வெளியே சென்றதும், அவர்கள் மீண்டும் அந்த நிலைக்குத் திரும்பி விடுகின்றனர். எனக்கு எந்த அனுபவமும் வழங்கப்படவில்லை என்பது உண்மையில் துரதிர்ஷ்டவசமானது."

"கவலைப்படாதீர்கள்" தேஷ்முக் அவரை சமாதானப்படுத்தினார். "நீங்கள் மண்டலி உறுப்பினர்களில் ஒருவர், பாபா நிச்சயமாக ஒரு நாள் உங்களுக்கு ஆசீர்வாதங்களை வழங்குவார்."

பாவ், தேஷ்முக்கை தங்கள் பங்களாவிற்குள் அழைத்துச் சென்றார். ஓர் அறையில் எரச், டாக்டர் நீலு, பெண்டு, விஷ்ணு ஆகியோர் இருந்தனர். எரச், தலை முதல் கால் வரை போர்வையால் மூடிக் கொண்டு படுத்திருந்தார். பெண்டு ஒரே நேரத்தில் இரண்டு சிகரெட்டுகளை புகைத்துக் கொண்டும், டாக்டர் நீலு தனது எதிரில் வைக்கப்பட்ட குப்பைக் குவியல் முன் அமர்ந்த வண்ணமும், விஷ்ணு ஒரு துணி மூட்டையில் தலையை சாய்த்துக் கொண்டும் இருந்தனர். தேஷ்முக்கிடம் ஒருவரும் பேசவில்லை. அவர் எரச்சின் போர்வையை அகற்ற முயன்றார், ஆனால் எரச் அதைப் பறித்து தூங்குவது போல பாசாங்கு செய்தார். பெண்டு தரையில் ஊர்ந்து கொண்டிருந்தார். தேஷ்முக் அவரது கவனத்தை ஈர்க்க முயன்றபோது, பெண்டு கோபத்தில் உறுமினார். தேஷ்முக் அஞ்சி நடுங்கி அவசரமாக வெளியேறினார். வெளியே வரும் வேளையில், மரக்கிளைகளை இடுப்பில் கட்டிக்கொண்டு, புல் வெட்டுவதற்காக இரண்டு அரிவாள்களை செருகிக்கொண்ட டாக்டர் டானை எதிர்கொண்டார்! அவர் எரியாத ஒரு சுருட்டையும் மென்று கொண்டிருந்ததை பார்த்த தேஷ்முக் அனைவரும் மஸ்துகளாக மாறிவிட்டனர் என்பதை உறுதியாக நம்பினார்.

தேஷ்முக்கிற்கு சிற்றுண்டி வழங்கப்பட்டபோது, பெண்டு அதைப் பற்றிக்கொள்ள வேகமாக வெளியே ஓடினார். தேஷ்முக் தட்டுடன் தப்பித்து, பாவிடம் சென்று கூறினார்: "பெண்டுவைத் தவிர இதர அனைவரும் ஜமாலி மஸ்துகள் போல் இருக்கிறார்கள். பெண்டு ஜலாலி வகையைச் சார்ந்தவர் போலத் தெரிகிறது!"

“இரண்டு நாட்களாக இப்படித்தான் இருக்கிறார்கள், இப்போது, நான் அவர்களை கவனித்துக்கொள்ள வேண்டிய நிலை” என்று பாவ் அவரிடம் தெரிவித்தார்.

பாபா, மண்டலியின் பங்களாவிற்கு வந்தபோது, வழக்கம் போல் அனைவரும் அவருக்கு முன்பாக அமர்ந்தனர். எவரும் பாபாவிடம் தங்கள் நகைச்சுவை நாடகத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட மூச்சு விடவில்லை. அவர் தேஷ்முக்கிடம், **“மண்டலி உங்களுடன் பேசினார்களா?”** என வினவினார்.

“இல்லை பாபா,” தேஷ்முக் சொல்ல ஆரம்பித்தார், “அவர்கள்...”

ஆனால் பாபா இடையே குறுக்கிட்டு, **“அதைப் பற்றி ஒன்றும் நினைக்காதீர்கள். அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. நான் உங்களுடன் பேசுகிறேன் அல்லவா! வேறு என்ன வேண்டும்?”** என்று சைகையால் தெரிவித்தார்.

தேஷ்முக், பாபாவிடம் சொல்லத் தொடங்கியபோது, பாபா, அதிருப்தி அடைந்துவிடுவாரோ என்று மண்டலி அஞ்சினர். ஆனால் அவர் ‘மண்டலி சாதாரணமானவர்கள் அல்ல’ என்று பாபா, தேஷ்முக்கிற்கு உறுதியளித்தது, அவர்களை நிதானமாக இருக்கச் செய்தது. பாபா, இதை உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொண்டு, இப்போது மண்டலி அனைவரும் மஸ்துகளாக மாறிவிட்டதாக தேஷ்முக் உறுதியாக நம்பினார்.

பாபா, உரையாடலைத் தொடங்கிய வேளையில் தேஷ்முக் அவரது மனைவி இந்துமதியைப் பற்றி குறிப்பிட்டார். பாபா அப்போது பாவிற்கு சைகையால் தெரிவித்தார், **“தேஷ்முக், இந்துமதியின் பெயரை எடுத்தவுடன், அவரை ஓர் ஊசியால் குத்த வேண்டும்!”**

பாபா, தேஷ்முக்கிடம், **“என்ன சொல்கிறீர்கள்?”** என்று கேட்டார்.

“ஒன்றுமில்லை பாபா” என்றார். “பாவின் கையில் ஊசி உள்ளது; இல்லையேல், நான் உங்களிடம் சொல்லியிருப்பேன்.”

**“இந்துவிற்காக உங்களைக் குத்தினால் என்ன கெட்டுபோகும்? என்ன சொல்ல போகிறீர்கள் சொல்லுங்கள்.”** தேஷ்முக் சிரிக்க ஆரம்பித்தார். அவர் உண்மையில் பாபாவின் விளையாட்டுத் தோழராக இருந்தார், பாபா எப்பொழுதும் கேலியும் கிண்டலும் செய்து அவருடன் நகைச்சுவையான நேரத்தைக் கழிப்பது வழக்கம்.

பாபா, சிறிது நேரத்திற்குப் பிறகு, பாவிடம், **“இந்து-பதி** (இந்துவின் கணவர்) **என்று சத்தமாகக் கத்தவும்”** என்று கூறினார். பாவ் அவ்வாறே கத்தி, குரல் கொடுக்க, தேஷ்முக் விரைந்தோடி வந்தார்.

**“பாவ் உங்களை எப்படி அழைத்தார்?”** பாபா அவரிடம் கேட்டார்.

“அவரிடம் இருக்கும் ஊசிக்கு நான் அஞ்சுகிறேன் பாபா,” என்று தேஷ்முக் கூறினார். “என்னால் உங்களிடம் சொல்ல முடியாது.” இது மீண்டும் பாபாவை சிரிக்க வைத்தது.

மெஹர் பாபாவைப் பற்றி அறிந்துகொள்ள அப்பகுதி மக்கள் ஆர்வமாக இருந்ததால், டெஹ்ரா டூன், சுஹார்பூர் (CHUHARPUR), ராய்பூர் (RAIPUR) ஆகிய இடங்களில் பொது சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. தேஷ்முக், பாவ் கல்சூரி இருவரையும் சொற்பொழிவு வழங்க பாபா அனுப்பி வைத்தார். ராய்பூரில் 5,000 பேர் கூடியிருந்த கூட்டத்தில் ஒலிப்பெருக்கி செயலிழந்ததால், தேஷ்முக் அது இல்லாமல் உரையாற்றும் இயலாமையை வெளிப்படுத்தினார்; ஆனால் பாவ் உரையை நிகழ்த்தினார்; தேஷ்முக்கின் இடத்தில் பால் கிஸன் (BAL KISAN) எழுந்து நின்று, ஒரு சக்திவாய்ந்த, ஒலிக்கும் குரலில் பேசத் தொடங்கினார்: "சகோதர சகோதரிகளே, ஜெய் பாபா! நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள், அதனால் அதைச் சொல்வதில் என்ன பயன்! எல்லாம் சரிதான், அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!"

இந்தக் குறுகிய 'பேச்சை'க் கேட்டு பார்வையாளர்கள் சிரித்தனர். பால் கிஸன், அவரது மனைவி மெஹர் காந்தா இருவரும் பாபாவின் வெளியளவிலான பணிகளில் உதவத் தொடங்கினர், மேலும் அவர்கள் அப்பகுதியில் பாபாவின் பணிகளில் முக்கிய பங்கு வகித்தனர்.

தேஷ்முக், டெஹ்ரா டூனில் சுமார் பத்து நாட்கள் தங்கியிருந்தார், அவர் அங்கிருந்த முழு நேரமும் மண்டலி அவர்களின் வேடிக்கை நாடகத்தைத் தொடர்ந்து நடத்தினர். மண்டலியின் வெறும் பாசாங்குத்தனம் தேஷ்முக்கிற்குத் தெரியாது, மேலும் அவர்கள் உண்மையில் மஸ்துகளாக மாறிவிட்டார்கள் என்று நம்பி நாக்பூருக்குத் திரும்பிச் சென்றார்.

கேஷவ் நிகம், புக்கார், கயா பிரசாத் கரே ஆகியோரையும் பாபா, டெஹ்ரா டூனுக்கு வரவழைத்து, ஹமிர்பூரில் தனது எதிர்கால தரிசன நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்களுடன் கலந்துரையாடினார். கேஷவ், ஹமிர்பூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து, பாபாவைப் பற்றி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்; மக்கள், மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெற ஆர்வமாக இருந்தனர். அவர்களை சந்தித்த பிறகு, புக்கார், கயா பிரசாத் இருவரையும் பாபா உடனடியாக ஹமிர்பூருக்கு அனுப்பி வைத்தார்; கேஷவ் மேலும் ஐந்து நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார், அந்த நேரத்தில் அவர் 'உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்' என்ற பாபாவின் செய்தியை ஹிந்தியில் மொழிபெயர்த்தார்.

டெஹ்ரா டூனில் பாபாவை தரிசனம் செய்ய பலர் வந்தனர், ஆனால் தரிசனம் நிறுத்தப்பட்டதால் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். இருப்பினும், ஏமாற்றம் அவர்களின் ஏக்கத்தை அதிகரித்தது, அவர்கள் மத்தியில் வாழும் இறை-மனிதனைக் காண அவர்கள் மேலும் மேலும் தணியா தாகத்தைக் கொண்டிருந்தனர். கிஷன் ஸிங், பிற மண்டலி அனைவரும் பாபாவிடம் முறையிட்டனர், அவர் நகரத்தில் தங்கியிருப்பதை பொதுமக்கள் அறிந்திருந்தும், அவரது தொடர்பு இல்லாமல் போனது எவ்வளவு துயரமானது என்று கூறினர். இறுதியில் பாபா தரிசனம் வழங்க ஒப்புக்கொண்டார்.

1953 நவம்பர் 1 ஞாயிற்றுக்கிழமை அன்று டெஹ்ரா டூனில் இறைவனின் அன்பான புன்னகையின் ஒளிரும் கதிரவனைக் காலம் கண்டது. மண்டலியின் பங்களாவிற்கு எதிரே, ஹரிசந்த் கோச்சாரால் ஒரு பெரிய கூடாரம் அமைக்கப்பட்டது, மேலும் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பெண்டுவின் மேற்பார்வையில் நடந்தது. பிரகாஷ்வதி, மெஹர் காந்தா மற்றும் ஃப்ரீனி நலவாலா ஆகியோர் மண்டலியின் பங்களாவில் மண்டபத்தை அலங்கரித்தனர், மேலும் பங்களாவும் மைதானமும் பிரகாசத்தில் ஜொலித்தன.

பொது தரிசனத்திற்காக, பாபா இரண்டு செய்திகளை எழுத்துப்பலகையில் ஏற்கனவே எடுத்துரைத்திருந்தார்; அவற்றை, பாவ் கல்சூரி, கிருஷ்ணா இருவரும் அச்சிட்டு, மக்கள் வருகை தரும் வேளையில் பங்களாவின் வாயில்களுக்கு அருகில் விநியோகித்தனர். மெஹர் பிரபுவின் வருகையை எதிர்பார்த்து காலை முதல் மக்கள் கூட்டம் அலைமோதியது. கூடாரத்தில் நாள் முழுவதும் ‘மங்கள் சாய்’ (MANGAL SAI) என்ற பாடகரால் பஜனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பாபா வருவதற்கு முன்னர், அவரது பாதங்களைத் தொடவோ, அவரைத் தலைவணங்கவோ, நமஸ்காரம் செய்யவோ, பொருள் உதவி கேட்கவோ கூடாது, நேர்காணல்களையும் கோர வேண்டாம் என்ற கண்டிப்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இரண்டு செய்திகளில் ஒன்று ‘உண்மையான தரிசனம்’ (REAL DARSHAN) பற்றியது:

**உங்கள் மத்தியில் இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.**

**என் அன்பர்கள் சிலரின் அன்பு ஒன்றுதான் இன்று உங்கள் அனைவரையும் எனது தரிசனத்திற்கு வரவழைத்தது. ஆனால் எனது உண்மையான தரிசனத்தை அடையப் பெறுவது அவ்வளவு எளிதல்ல. என்னை அருகில் இருந்து பார்ப்பது, எனக்கு வணக்கம் செலுத்துவது, பூ, பழங்களை எனக்கு வழங்குவது, என்னைத் தலைவணங்கிவிட்டு உங்கள் இல்லங்களுக்குத் திரும்புவது என்பது எனது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டதாக அர்த்தம் ஆகாது. உங்கள் கண்களால் என்னைப் பார்த்த நீங்கள், இன்னமும், என்னை எனது சுய ரூபத்தில் பார்க்கவில்லை. ‘தரிசனம்’ என்று அழைக்கப்படும் வழக்கமான ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டத்தின் வழியாக நீங்கள் வந்தபோதிலும், எனது உண்மை ரூபத்தின் ஒரு குறுகிய பார்வை கூட உங்களுக்குக் கிடைக்கவில்லை.**

**எனது உண்மையான தரிசனம் என்பது என்னைக் கண்டுகொள்வதாகும். என்னுள் உங்களது இருப்பிடத்தைக் கண்டறிவதற்கான ஒரே உறுதியான வழி, என்னை நேசிப்பதே ஆகும். நான் உங்களை நேசிப்பது போல், என்னையும் நேசிக்க, நீங்கள் என் அருளைப் பெற்றவராக மாற வேண்டும். என் அருள் மட்டுமே தெய்வீக அன்பின் பரிசை வழங்க முடியும். என் அருளைப் பெற, நீங்கள் முழு மனதுடன், என் மீது அசைக்க முடியாத நம்பிக்கையின் உறுதியான அடித்தளத்துடன் கீழ்ப்படிய வேண்டும். எனது விருப்பம் உங்களது சட்டமாகி, என் அன்பு உங்களின்**

**வாழ்வை நிலைநிறுத்தும் வகையில், உங்களை முழுவதுமாக என்னிடம் ஒப்படைத்தால் மட்டுமே, நான் விரும்பியபடி தன்னிச்சையாக எனக்குக் கீழ்ப்படிய முடியும்.**

**காலங்காலமாக, பலர் அத்தகைய சரணடைதலுக்கு ஆசைப்படுகிறார்கள், ஆனால் மிகச் சிலரே நான் விரும்பியபடி முழுமையாக என்னிடம் சரணடைய முயற்சிக்கிறார்கள். இறுதியில் வெற்றி பெறுபவர் என்னை மட்டும் கண்டு கொள்ளாமல், நானாக மாறி, வாழ்க்கையின் லட்சியத்தை உணர்ந்து கொள்கிறார்.**

**நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புவதை, இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் புரிந்து கொண்டாலும், இன்று நான் உங்கள் மத்தியில் இருப்பதன் நோக்கம் நிறைவேறும். உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

டெஹ்ரா டூனில் இந்த அற்புதமான காட்சியை, காலம் இவ்வாறு ஆய்வு செய்தது: "காலை 7:30 மணியளவில் பாபா தனது பங்களாவிலிருந்து மண்டலியை நோக்கிச் சென்றார். அவர் தனது வெள்ளை நிற சத்ரா மற்றும் இளஞ்சிவப்பு நிற கோட் அணிந்திருந்தார், அவரது தலைமுடி பின்னலிடப்பட்டு, அவரது கோட்டின் காலருக்குக் கீழே மறைந்திருந்தது. அவரது புன்னகை மகிழ்ச்சியின் கதிர்களைப் பரவச் செய்தது; அவரது ஒளிரும் அம்சங்கள், பிரகாசிக்கும் கதிரவனைப் போல் இருந்தன! அவரது கண்களின் அழகு - அதிலிருந்து நிலையாக பாய்ந்த தெய்வீக மதுபானம் - எல்லோரும் பார்க்கும்படியாக ஒளிர்ந்தது."

கிஷன் ஸிங், பாபாவின் தலைக்கு மேல் குடை ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தார், அவரது மூத்த மகன் மதன் லாலா அரோரா, நிகழ்வைப் படம்பிடித்த வண்ணம், கேமராவுடன் முன்னால் நகர்ந்து சென்றார். சுற்றுப்புற சூழ்நிலைகள், எதிர்பார்ப்புடன் கூடியதாகத் தெரிந்தது. 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற உரத்த குரல்கள் பாபா, விதானத்தை நோக்கிச் செல்லும் வேளையில் காற்றில் தவழ்ந்தன. ஒரு சில மண்டலி பாபாவின் அருகில் எவரும் அணுகாதபடி பார்த்துக் கொண்டனர், மேலும் டெஹ்ரா டூனின் பெண் அன்பர்கள் தரிசன கூட்டத்தில் இருந்த பெண்களைக் கண்காணித்தனர்.

கையை உயர்த்தி, பாபா அனைவரிடமும் பொறுமையாக இருக்குமாறு சைகையால் தெரிவித்து, நேராக மண்டபத்திற்குச் சென்றார். அங்கு அவர் டெல்லியிலிருந்து வந்த சில பிரியமானவர்களை சந்தித்தார், வெளியில் அமர்ந்திருந்த அன்பர்கள் மேலும் உற்சாகமடைந்தனர். பிரகாஷ்வதியும் பால் கிஸனும் மனமார்ந்த கீர்த்தனைகளைப் பாடினர், சுற்றுப்புறம் முழுவதும் அன்பில் மூழ்கியிருந்தது.

ஆண்களுக்கும் பெண்மணிகளுக்கும் தனித்தனியாக இரண்டு நீண்ட வரிசைகள் அமைக்கப்பட்டன. தரிசனம் தொடங்கியதும், பாபா பிரசாதம் வழங்கினார். ஆனால், அவரருகில் நின்று அவரைப் பார்க்க வேண்டும் என்ற

ஆவல் அதிகமாக இருந்தாலும், நீண்ட நேரம் அருகில் இருக்கும் அதிர்ஷ்டம் எவருக்கும் கிடைக்கவில்லை.

ஒரு புத்திசாலிப் பெண்மணி பாபாவின் முன் நின்று, குரு கிரந்த ஸாஹேப் (GURU GRANTH SAHEB), சீக்கியர்களின் புனித நூலிலிருந்து பிரார்த்தனை செய்தார். இது மேலும் சிறிது நேரம் பாபா முன்னிலையில் இருக்கும் வாய்ப்பாக அமைந்தது. மற்றுமொரு பெண்மணி பாபாவின் முன்னால் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார், அதைத் தொடர்ந்து இதர பெண்களும் அவ்வாறே செய்ய முயன்றனர்.

மேடையில் நின்று, காவல் துறையின் துணை ஆய்வாளர் சர்தார் விரீந்தர் ஸிங் (SARDAR VIRINDER SINGH) ஒரு சொற்பொழிவை வழங்கினார்; பாபா அவரைத் தழுவி முத்தமிட்டார்.

பாபா அறிவுறுத்தியபடி எரச் எழுத்துப்பலகையை வாசித்தார்:

**“நான் உங்களால் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஆழ் இதயத்தில் என்னைக் கண்டுகொள்ள முயற்சி செய்யுங்கள்.”**

“அதை எப்படி செய்வது என்று எனக்குக் கூறுங்கள்,” என்று அதிகாரி கேட்டார்.

**“இயன்றவரை என்னைப் பற்றி சிந்தனை செய்யுங்கள் - அதுவே ஒரே வழி”** என்று பாபா அவரிடம் கூறினார்.

சர்தார் விரீந்தர் ஸிங், எரச் மூலமாக பாபாவின் செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்த வேளையில், பிற அனைவரும் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர்; பெரிய அளவில் கூட்டம் நின்றுகொண்டிருந்தது. ஸிங் மீண்டும் வரிசையில் நின்றார், பிற மக்களும் தரிசனத்திற்காக மீண்டும் வரிசையில் நிற்கத் தொடங்கினர்.

தரிசனத்தின் போது, பாபா மண்டபத்தின் உள்ளேயும், கூடாரத்திலும் மாறி மாறி நகர்ந்து கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில், வெளியில் கூடியிருந்தவர்களுக்கு தரிசனம் வழங்க, பாபா, கூடாரத்திற்குள் நுழைந்தார். பிரசாதம் வழங்குவதைத் தொடர, அவர் கூடாரத்தை விட்டு வெளியேறிய வேளையில், அவரது தரிசனத்திற்காக மக்கள் தொடர்ந்து வரிசையில் நின்றனர். அவரைப் பார்க்க இயலாதபோதும், ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜே! அவதார் மெஹர் பாபாவிற்கு ஜே!” எனும் கோஷம் முழங்கிக் கொண்டிருந்தது. பாபா அவர்களின் இதயங்களின் அழுகைக்கு செவிமடுத்தாலும், அவர் வேண்டுமென்றே அவர்களுடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தார். சில சமயங்களில் கூடாரத்தில் அமர்ந்தும், தொடர்ந்து மண்டபத்திலும் தரிசனத்தை வழங்கினார். பூக்கள், மலர் மாலைகள், பழங்கள் குவியல் குவியலாக அவர் முன் இருந்ததை, பெண்டு, எரச், நீலு ஆகியோர் அகற்ற முயன்றனர். வெளியில் தரிசனத்திற்காகக் காத்திருந்த பெரும் கூட்டத்தைக் குறித்து பெண்டு பாபாவிடம் தெரிவித்தார். பாபா சிரிக்க மட்டுமே செய்தார். சிலர் பஜனை பாடினர், சிலர் பிரார்த்தனை செய்தனர்.

அன்று மதியம் ‘நன்னி துனியா’ (NANHI DUNIYA, மழலை உலகம்) கல்வி நிறுவன முதல்வர் லேக் ராஜ் உல்ஃபத் (LEKH RAJ ULFAT), பள்ளியின் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத குழந்தைகளுடன் வந்தார்.

அவர்கள் பாபாவிற்கு பிரமாண்டமான மலர் மாலையும், கிரீடமும் கொண்டு வந்தனர். குழந்தைகள் பாபாவின் தலையில் கிரீடத்தை வைத்தபோது, அவர் கிருஷ்ணரைப் போல தோற்றமளித்தார். பாபா ஒரு குழந்தையை முத்தமிட்டார், மற்றொரு குழந்தையை இதமாக வருடி, குழந்தைகளிடம் பாசமழை பொழிந்து, மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அவர் குழந்தைகளுக்கு இந்தச் செய்தியை வழங்கினார்: **“கடவுளுக்கு விழாக்களும் நிகழ்ச்சிகளும் தேவையில்லை, அவர் அன்பை மட்டுமே விரும்புகிறார். நம் அன்பு மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும், நம் இதயம் கடவுளை நேசிக்கும் வேளையில், நம் மனம் கூட அதை அறியக்கூடாது.”**

நிகழ்ச்சி காலை 8:00 மணி முதல் 11:00 மணி வரை, மீண்டும் மதியம் 1:00 முதல் மாலை 6:00 மணி வரை தொடர்ந்தது. டெஹ்ரா டூன் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டது!

அன்றைய தினம் பாபாவிடமிருந்து பொதுமக்களுக்கு ‘மாயையுடனான விளையாட்டு’ (PLAYING WITH ILLUSIONS) என்ற தலைப்பில் மற்றுமொரு செய்தி வழங்கப்பட்டது:

**உங்களை இங்கு அழைத்து வந்த நம்பிக்கையை நான் பாராட்டுகிறேன். உங்கள் அன்பையும் பக்தியையும் நான் பாராட்டுகிறேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. உங்கள் கஷ்டங்கள், பிரச்சினைகள், துன்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை நான் அறிவேன், புரிந்துகொள்கிறேன். தனிநபர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கியுள்ளது. துன்பம் வரும்போது, அது தெய்வீக கர்ம விதியின்படி வரும். பின்னர் அதை கருணையுடனும், மன உறுதியுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் உங்களின் பெரும்பாலான துன்பங்களுக்கு உங்கள் சுய செயல்களே காரணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். புத்திசாலித்தனமான செயலின் மூலம், துன்பங்களை மட்டுப்படுத்த முடியும். மனிதகுலத்திற்குத் தேவை ஆன்மீக ஞானம்; இதற்கு, தவிர்க்க முடியாத சூழ்நிலையில், பரிபூரண குருநாதர்கள் மற்றும் அவதார புருஷரை நோக்கி நமது பார்வை திரும்ப வேண்டும்.**

**துன்பம் என்பது அறியாமை அல்லது மாயைகளின் மீதான பற்றுதல் மூலம் வருகிறது. குழந்தைகள் பொம்மைகளுடன் விளையாடுவது போல, பெரும்பாலான மக்கள் மாயையுடன் விளையாடுகின்றனர். இவ்வுலகின் நிலைபேறற்ற விஷயங்களில் சிக்கி, மாயப்பொருட்களுக்கு மதிப்பளித்தால், துன்பம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. சிறு குழந்தைகள் தங்கள் பொம்மைகளை விட்டுவிடுவது எளிதானது அல்ல, ஏனெனில் அவர்கள் தவிர்க்க முடியாத ஒரு பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். அதுபோலவே, கோடிக்கணக்கான பிறவிகள் மூலம், மாயைகளுடன் விளையாடும்**

பழக்கத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். அவற்றிலிருந்து நீங்கள் பிரிந்து செல்வது கடினம்.

யுகம் யுகமாக, ஆத்மா அதன் சுய நிழலை மட்டுமே கண்டுகொள்வதோடு வடிவங்களின் மாயையான உலகில் மூழ்கி வருகிறது. அது தனது சொந்த படைப்பின் காட்சிக்கு அடிமையாகி, படைப்பின் காலச்சுழற்சிகள் மூலம் அதைப் பார்க்க விரும்புகிறது. தெய்வீக தன்மைமிக்க ஆன்மா உள்நோக்கித் திரும்பி, இறை அறிவைப் பெற ஏங்கும்போது, அது ஆன்மீக சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறது. ஆனால் அங்கும் கூட, சில காட்சிகளைப் பார்க்க விரும்பும் இந்தப் பழக்கம், பல பிறவிகளுக்குத் தொடர்கிறது. ஆன்மா சில அற்புதங்கள் அல்லது கண்கவர் நிகழ்வுகளை அனுபவிக்க விரும்புகிறது அல்லது மேல்நிலை ஆன்மீகத் தளங்களில், அது அற்புதங்களைச் செய்து, நிகழ்வுகளைக் கையாளத் துடிக்கிறது. ஆன்மீக ரீதியில் முன்னேறியவர்கள் கூட, மாயைகளுடன் விளையாடும் இந்த பழக்கத்தைக் கைவிட கடினமாக உள்ளது. அற்புதங்களுடன் விடாப்பிடியான இணைப்பு என்பது மாயைகளுடன் விளையாடும் பழக்கத்தின் தொடராக இருக்கும்.

இது அற்புதங்களால் அல்ல, ஆனால் சரியான புரிதலால் மட்டுமே உங்களுக்கு உண்மையான சுதந்திரத்தை வழங்க முடியும். இறை-மனிதன் மீது உங்களுக்கு உறுதியான நம்பிக்கையும், தளராத அன்பும் இருந்தால், நிலைத்திருக்கும் உண்மைக்கான உங்கள் வழி தெளிவாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும். அதற்குப் பிறகு தேவையில்லாத விஷயங்களில் விளையாட உங்களுக்கு நேரமிராது. அன்பு மற்றும் உண்மையால் வழிநடத்தப்பட வேண்டும்! இதுவே இறைவனிடம் செல்லும் எளிய வழி. மயக்கும் மாயைகளின் முடிவில்லாத சூழ்ச்சியால் அல்ல, ஆனால் மாறாத உண்மைக்கு விசுவாசமாக இருப்பதன் மூலம், நீங்கள் அமைதியை நிலைநிறுத்த முடியும் என்று நம்பலாம்.

நான் பேசும்போது, அது ஒரு தெய்வீக வார்த்தையாக மட்டுமே இருக்கும், ஆனால் அது வார்த்தைகளின் 'இறை-வார்த்தை'யாக அல்லது 'உண்மைப்பொருளின் வெளிப்பாடாக' இருக்கும். இந்த இறை-வார்த்தை இதயத்தால் கேட்கப்பட வேண்டும், மனத்தால் மட்டும் அல்ல. அது உங்கள் ஆழ் இதயத்திற்குள் நுழைந்து விழிப்புணர்வைக் கொண்டுவரும். எனது அன்பும் ஆசிகளும்.

வாஸ் தேவ் கெய்ன், அவரது மனைவி பிரபா மற்றும் டெல்லியில் இதர அன்பர்களை (தர், கஞ்சூ, ஹர்ஜீவன் லால், அவரது மகள் அங்கூரி, மகன் சுகந்த் போன்றவர்களை) பாபா அழைக்கவில்லை. அன்று காலை, டெல்லியிலிருந்து வந்தவர்களை சந்தித்தபோது பாபா சீற்றமடைந்தார், **"என்னுடைய அழைப்பின்றி ஏன் வந்தீர்கள்? தரிசனம் வழங்காமல் இருப்பதற்கு இது எனக்கு ஒரு பாடம், நீங்கள் எப்போதும் எனது மார்பில் அமர்ந்திருக்கிறீர்கள்!"**

வாஸ் தேவ் கெய்ன், பாபாவிடம் மன்றாடினார்: “எப்போது டெல்லிக்கு வருவீர்கள், பாபா, ஆண்டு முடிவதற்குள் வருவேன் என்று உறுதியளித்துள்ளீர்கள்?”

**“நீங்கள் இங்கு வராமல் இருந்திருந்தால், நான் நிச்சயமாக வந்திருப்பேன். அதுமட்டுமின்றி, நீங்கள் என்னை, நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே எடுத்துக் கொண்டீர்களேயானால், நான் ஏற்கனவே அங்கே இருக்கிறேன்!”**

ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி சர்தார் வி. ஸிங் (SARDAR V. SINGH), சில நாட்களுக்கு முன்பு, பாபாவைப் பார்க்க வந்தவர், தரிசன நிகழ்ச்சியின் போது, காலை முதல் மாலை வரை, பல ஏற்பாடுகளை கவனிப்பதில் முழு முனைப்புடன் ஈடுபட்டார். பாபா அவரை பகல் வேளையில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அடிக்கடி அழைத்து, ‘**நீங்கள் உணவு உண்டீர்களா? தேநீர் அருந்தினீர்களா?**’ என அவ்வப்போது கேட்டுக்கொண்டிருந்தார். பாபா அவரைக் குறித்து மிக்க மகிழ்ச்சியாக உணர்ந்தார், மேலும் அவரை ‘**புதிய தௌலத் ஸிங்**’ என்று அழைக்குமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார், ஏனெனில் அவரது ஆழ்ந்த அன்பு, மற்றுமொரு சர்தார்ஜியான டாக்டர் தௌலத் ஸிங் என்பவரை பாபாவிற்கு நினைவூட்டியது. சர்தார் வி. ஸிங்கின் முழு குடும்பமும் பாபாவின் அரவணைப்பில் வந்தது.

மெஹர் பாபாவை இதற்கு முன்பு சந்தித்ததாக, பலர் உணர்ந்ததைக் கூறியபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார்: **“பெரும் எண்ணிக்கையிலான மக்களில் பலருக்கு, தங்கள் கடந்தகால வாழ்க்கையிலிருந்து என்னுடன் தொடர்பு உள்ளது. ஒவ்வொருவரும் ஒரே பெருங்கடலின் துளிகள், கடலை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருப்பவர்கள். பார்வையாளர்களில் பெரும்பாலோர் தங்கள் கடந்தகால வாழ்க்கையில் என்னை சந்தித்துள்ளனர். பல ஆண்டுகளாக என்னை சந்திக்கும் அவர்கள், புதிய தோற்றத்தில் பழைய நண்பர்கள்.”**

உதாரணமாக, குமாரை நோக்கி பாபா, **“உங்கள் கடந்தகால வாழ்க்கையில், ஹெலன் உங்கள் மாமாவாக இருந்தார்”** என்று வெளிப்படுத்தினார்.

அன்று மதியம் 2:25 மணிக்கு, தரிசன நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்களில் ஒருவரிடம் பாபா எழுத்துப்பலகையில் விவரித்தார்: **“கடவுள் நம் அனைவருள்ளும் சமமாக இருக்கிறார், நாம் அவரை நேசிக்க வேண்டும், அவரை உணர வேண்டும். அப்போது நம் துன்பங்கள் அனைத்தும் முடிவுக்கு வரும். அந்த அனுபவத்திற்காக, நாம் அவரை நேசிக்க வேண்டும். மேலும் இந்த அன்பை வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் வெளிப்படுத்த முடியும். ஆனால், நமது சொந்த மகிழ்ச்சியை விலையாகக் கொடுத்து, பிறருக்கு மகிழ்ச்சியை அள்ளி வழங்கும் தருவாயில் அது தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.”**

ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அவர் மற்றுமொரு நபரிடம் கூறினார்: **“ஒன்றே உருவான ஏக இறைவனுக்காக வாழ்வதும், சாவதும் அனைத்திலும் சிறந்தது, மகத்துவம் மிக்கது. நாம் அவரை தீவிரமாக, நேர்மையாக, கள்ளம் கபடம் இல்லாமல் நேசித்தால், அவரை நம்மிலும் அனைவரிலும் காண்கிறோம். பாசாங்குத்தனத்தின் குறைந்தபட்ச அடிச்சுவடு கூட அவரை நம்மிடமிருந்து விலகி இருக்கச் செய்யும். நாம் அவரைக் கண்டுகொள்ளும் போது, எல்லையற்ற பேரின்பத்தின் நித்திய உடைமையாளர்களாக மாறுகிறோம், அதன் பின்னர் அவரை நாம் எல்லா இடங்களிலும் நாமாகவே காண்கிறோம்.**

பாபாவின் தரிசனத்திற்காக அனைத்து மதத்தினரும், சமூகத்தினரும், ஏழைகள், செல்வந்தர்கள் அனைவரும் திரள்திரளாகக் குவிந்தனர். தரிசனத்தின் போது, பாபா இந்தச் செய்தியை எடுத்துரைத்தார்:

**ஏழை, பணக்காரன், பெரியவன், சிறியவன், ஆண் அல்லது பெண், எல்லோருமே ஏதோ ஒருவிதமான துன்பத்திற்கு ஆளாகிறார்கள். எல்லாவித துன்பங்களுக்கான நிவாரணம் நமக்குள்ளேயே இருக்கிறது. நாம் நேர்மையாக வாழ முயற்சித்தால், நேர்மையாக சிந்தித்து, செயல்பட்டு, வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும், எல்லா சூழ்நிலைகளிலும், முழு மனதுடன் கடவுள் மீது நம்பிக்கை வைக்க முயன்றால், அந்த நிவாரணமும், மன நிம்மதியும் கிடைக்கும். நாம் ஏற்கனவே எல்லையற்ற சக்தி மற்றும் எல்லையற்ற மகிழ்ச்சியின் உடைமையாளராக உள்ளோம்; ஆனால் நாம் வாழும் வழிகளும், முறைகளும் கடவுளின் இந்த நித்தியமும், நிரந்தரமுமான பொக்கிஷங்களை அனுபவிப்பதிலிருந்து நம்மைத் தடுக்கின்றன. அந்த அன்பிற்காக நான் உங்களுக்கு எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்; அவை, கடவுளை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்க வழிவகுக்கும்.**

கேக்கி நலவாலா, பாபாவைப் பற்றிய இலக்கிய படைப்புகளை விற்பனை செய்வதில் வெளியே மும்முரமாக இருந்தார், மேலும் பாபாவைத் திரைப்படமாக எடுக்கப்படும் காணொளியில் அவரும் தோன்ற வேண்டும் என விரும்பினார். ஆனால் அவர் தனது கடமையில் உறுதியாக இருந்ததால், நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியவில்லை. திடீரென பாபா அவரை வரவழைத்து, அந்தக் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்த மதன் என்பவரிடம், இருவரையும் அதில் இணைக்குமாறு அறிவுறுத்தினார். கேக்கி மிகவும் மகிழ்ச்சியடைந்தார், மேலும் அவரை பாபா மறக்கவில்லை என்பதை அறிந்துகொண்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மற்றுமொரு பெரிய தரிசன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. டெஹ்ரா டூன் நகரிலிருந்து 25 மைல் தொலைவில் அமைந்த சுஹார்பூர் (CHUHARPUR) கிராமத்தில் வாழ்ந்து வந்த குமாரின் நண்பர் பிரம்ம தத் (BRAHMA DUTT), பாபாவிடம் அங்கு தரிசனம் வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கு, பாபா இணக்கம் தெரிவித்தார். பாவ் கல்சூரி, டாக்டர்

தேஷ்முக் இருவரும் ஏற்கனவே அங்கு சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தனர், அந்த கிராமத்து மக்கள் பாபாவை சந்திக்க ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். பிரம்ம தத் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்தார், நிகழ்ச்சி ஒரு தர்மசாலாவில் நடைபெற்றது.

1953 நவம்பர் 3 செவ்வாய் அன்று மதியம் 2:30 மணியளவில், பாபா, சில மண்டலியுடன் சுஹார்பூருக்கு வருகை தந்தார்; இதர அன்பர்கள் அனைவரும் பேருந்தில் முன்கூட்டியே சென்றனர். ஏறக்குறைய 2,000 பேர் ஒன்றுதிரண்ட அந்தக் கூட்டத்தில், மக்கள் உரத்த குரலில் கோஷமிட்டு பாபாவை வாழ்த்தி, வரவேற்றனர். தரிசனத்தின் போது, பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**நாம் நமது வாழ்க்கையை, கடவுளுக்காக அல்லது பரிபூரண குருநாதருக்காக அர்ப்பணிக்க வேண்டும். நமது இன்ப துன்பங்கள், நற்பண்புகள், தீய குணங்கள், நமது பலம், பலவீனங்கள் அனைத்தையும் அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். நமது வாழ்க்கையை உண்மையாக அர்ப்பணிப்பதன் மூலம், நாம் சுதந்திரமாகி விடுகிறோம், கடவுள் அல்லது பரிபூரண குருநாதர் நம் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.**

**காலாதி காலமாக, அன்பு ஒன்றுதான் கடவுளின் செய்தியாக இருந்து வருகிறது; அந்த அன்பு ஒன்றே எப்பொழுதும், நித்திய செய்தியாக இருக்கும், மேலும் கடவுளின் மீதான அன்பு மட்டுமே, உண்மையாக இருக்க முடியும். பக்தி, தீவிர பிரார்த்தனை, துறவு, தியானம், கடவுளுடன் ஐக்கியத்திற்கான தீவிர ஏக்கம் மற்றும் இறை-மனிதனிடம் சரணடைவதன் மூலம் கடவுள் மீதான அன்பை தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்த முடியும். பிறருக்கு சேவை செய்து, பிறரை மகிழ்ச்சியாக இருக்கச் செய்யும் செயல்பாடுகள் மூலமாகவும் அந்த அன்பை வெளிப்படுத்த முடியும். அத்தகைய அன்பு இல்லாமல், வாழ்க்கை வாழத் தகுதியற்றது. கடவுளின் மீது அன்பு இல்லாமல் எண்ணற்ற வாழ்க்கையை கடந்து செல்லும் ஒருவர் பொய்யும் போலியுமான வீண் வாழ்க்கையை வாழ்கிறார்.**

இறுதியில் பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **எனது எல்லா ஆசீர்வாதங்களையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன், உங்கள் மத்தியில் இன்று நான் இருப்பது, கடவுள் மீதான இந்த அன்பை அடையப் பெறும் தாக்கத்தை சில ஆன்மாக்களிடையே உருவாக்கும் என்று நம்புகிறேன்.**

பாபாவின் செய்தி ஹிந்தி மொழியில் வாசிக்கப்பட்ட அவ்வேளையில், பாபா பிரசாதம் வழங்கத் தொடங்கினார். கேவல் ஸிங் (KEWAL SINGH) என்றழைக்கப்பட்ட உள்ளூர் வங்கியின் கணக்காளர் பாபாவிடம், “கடவுளை அடைய எளிதான வழி எது?” என வினவினார்.

“**உங்களை மறந்துவிடும் அளவுக்குக் கடவுளை நேசியுங்கள்!**” பாபா பதிலளித்தார்.

அன்று மாலை நான்கு மணி வரை தரிசனம் தொடர்ந்தது. பிரம்ம தத் எனும் அன்பரைத் தழுவி, பாபா பின்னர் அவரது இல்லத்திற்குச் சென்று, மண்டலியுடன் டெஹ்ரா டூன் திரும்பிச் சென்றார்.

இதற்கிடையில், ஆந்திராவின் கொவ்வூர் (KOVVUR) நகரில் வாழ்ந்த அன்பர்கள், மெஹர் பாபாவின் பெயரில் ஒரு மையத்தைத் தொடங்க விரும்பினர், அதற்கு அவர் ஒப்புதல் அளித்தார். நவம்பர் 15ஆம் நாள் வெளியிடப்பட்ட செய்தியில், அவரை 'இணைபிரியா துணைவனாக' (CONSTANT COMPANION) ஏற்றுக்கொள்வது குறித்து விளக்கினார்:

**என்னை உங்கள் இணைபிரியா துணைவனாக இருக்கச் செய்யுங்கள். உங்கள் சுயத்தைக் குறித்து நினைவில் கொள்ளாமல், என்னைப் பற்றி அதிகம் சிந்தியுங்கள். நீங்கள் என்னை எவ்வளவு அதிகமாக நினைவில் கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்கள் மீதான என் அன்பை உணர்வீர்கள்.**

**உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் முழுவதிலும் தொடர்ந்து என்னை உங்களுடன் கொண்டிருப்பதை கடமையாகக் கருதுங்கள். தமது ஆணித்தரமான நம்பிக்கையிலும் அன்பிலும் நேர்மையாக என்னிடம் சரணடைந்தவர்கள், தத்தமது கடமையைச் செவ்வனே செய்கிறார்கள் - 'பாபா' என்ற எனது தெய்வீகத்தின் மீதான அசைக்கமுடியாத நம்பிக்கையால் அவர்கள் வழி நடத்தப்படுகிறார்கள்.**

**பாபா பொய்யும், போலியுமானவர் என்ற உண்மையும் நேர்மையும் வாய்ந்த நம்பிக்கையால் என்னைப் பற்றி அவதூறாகப் பேசி, கண்டனம் செய்பவர்களும் தங்கள் கடமையைச் செவ்வனே செய்கிறார்கள்.**

**ஆனால், அவர்கள் தங்கள் சுய மனதை அறியாமல், தொடர்ந்து சந்தேகப் பேர்வழிகளாக இருக்கும் பாசாங்குத்தனம் படைத்தவர்கள். அவர்கள் சில நேரங்களில், தவறான உணர்ச்சிகள் மூலமாக, என்னை நம்ப முனைகின்றனர்; இதர நேரங்களில், எனக்கு எதிராக அவதூறான வதந்திகளில் ஈடுபடுகின்றனர். எந்த அளவிலான அவதூறுகளும் என்னை பாதிக்கவோ, என்னில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவோ முடியாது; அது போல் எந்த அளவிலான போற்றுதலும் புகழும் எனது தெய்வீகத்தை மேம்படுத்தவோ அல்லது மகிமைப்படுத்தவோ செய்யாது.**

பாபா மேலும் கூறினார், "**பாபா என்னவாக இருக்கிறாரோ அவ்வாறே இருக்கிறார். நான் பாபாவாக இருந்தேன், பாபாவாக இருக்கிறேன், மேலும் என்றென்றும் பாபாவாக இருப்பேன். உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகள்.**

அதன் பின்னர் ஒரு தொலைத்தந்தி மூலமாகக் கீழ்வரும் செய்தியை அனுப்பி வைத்தார்: "**அன்பிற்குரிய இறைவன் தமது அன்பர்களின் அடிமை மட்டுமின்றி, அவர்களுக்குத் தம்மை அர்ப்பணிக்கிறார். இது, கொவ்வூர் ஆந்திரா மெஹர் மையத்தின் சார்பாக நான் உலகிற்கு வழங்கும் செய்தி.**"

இதற்கிடையில், 'பார்லிமென்ட்' உறுப்பினர்களுக்கும் (MEMBERS OF PARLIAMENT), 'பிரதமர்' அணிக்கும் (PRIME MINISTER'S TEAM) இடையிலான அசாதாரண கிரிக்கெட் போட்டியைக் காண, வாஸ் தேவ் கெய்ன், பாபாவை டெல்லிக்கு அழைத்தார். 1953 நவம்பர் 18 புதன்கிழமை அன்று, பாபா, டெஹ்ரா டூனிலிருந்து எரச், பெண்டு, டாக்டர் நீலு, கிஷன் ஸிங், குமார், ஹெலன் ஆகியோருடன் புறப்பட்டுச் சென்றார். மும்பையிலிருந்து மெஹர்ஜி, நரிமன் இருவரும் அதற்காக அழைக்கப்பட்டனர். டெல்லி செல்லும் வழியில், மீரட் நகரில் மினூ தேசாய் பாபாவை சந்திக்க நேர்ந்தது. டெல்லியில், 16 பிரசிடெண்ட் எஸ்டேட் (PRESIDENT ESTATE), வாஸ் தேவ் கெய்னின் இல்லத்தில் பாபாவும் மண்டலியும் தங்கியிருந்தனர்.

மறுநாள் கிரிக்கெட் போட்டியைக் காண, பாபா மண்டலியுடன் தேசிய மைதானத்திற்குச் (NATIONAL STADIUM) சென்ற வேளையில், எவரும் தன்னை அடையாளம் கண்டுகொள்ளாதபடி பாபா, கருப்பு நிற தொப்பியும், கண்ணாடியும் அணிந்திருந்தார். ஒருவரும் அவரைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி மண்டலியும் அவரை சூழ்ந்து கொண்டனர். இருந்தும், பார்வையாளர்கள், ஆட்டம் தொடரும் நேரம் முழுவதும் அவரைப் பார்த்த வண்ணம் இருந்தனர். பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, தூரத்திலிருந்து பாபாவைப் பார்த்து, அவருடைய தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், அவ்வப்போது அவரைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

மெஹர்ஜி இவ்வாறு நினைவு கூர்ந்தார். "விளையாட்டு மைதானம் நிரம்பியிருந்தது; இந்திய தேசத்தின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், பிரதமர் அனைவரும் விளையாடினர்; வெளிநாட்டுத் தூதரக உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் என அனைத்து துறைகளைச் சார்ந்த மனிதர்களும் அங்குக் கூடியிருந்தனர். பாபாவின் நோக்கமும் இவர்கள் அனைவரையும் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதே.

"குறிப்பாக மும்பையில், வெஸ்ட் இன்டீஸ் (WEST INDIES), இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாட்டு அணிகள் விளையாடும் போதெல்லாம், போட்டிகளைப் பார்வையிட மைதானம் முழுவதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும்; பாபா, ஆயிரக்கணக்கான மக்களுக்கிடையே அரங்கின் காட்சிக் கூடத்தில் அமர்ந்திருப்பது வழக்கம். சில நேரங்களில், ஆங்கிலேய ஆடை மற்றும் தொப்பி அணிந்து, பாபா தமது வெளித்தோற்றத்தை மறைத்த வண்ணம், விளையாட்டுப் போட்டியை காணச் சென்றாலும், சிலர் அவரை அடையாளம் கண்டுகொள்ள நேர்ந்தது.

"நாங்கள் விளையாட்டில் கவனம் செலுத்தும் வேளையில், பாபாவின் மனம் வேறு எங்கோ விரைந்தது; அவரது விரல்கள் தாளமிடுவது போல நகர்ந்தன; அவர் எங்கோ, எதையோ பார்த்துக் கொண்டிருந்தது போலத் தோன்றினார். பாபா, அவரது நோக்கத்தை ஒருமுறை விவரித்தார்: அவர் விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்வதன் நோக்கம், '**விளையாட்டைப் பார்வையிடுவது மட்டுமல்ல; அதே நேரத்தில் அங்குக் கூடியிருந்த 30 முதல்**

**40 ஆயிரம் மக்களின் ஒருமித்த கவனமும் விளையாட்டின் மீது இருப்பதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வெகுஜன தொடர்பில் தனது பணியைச் செய்ததாகக்**' கூறினார்.

1953 நவம்பர் 20ஆம் நாள், பாபா, இந்தியாவில் மிகவும் பிரபலமான ஸூஃபி துறவிகளில் ஒருவரான நிஜாமுதீனின் சமாதிக்கு (NIZAMUDDIN SHRINE) விஜயம் செய்தார். வாஸ் தேவ் கெய்ன், கேக்கி தேசாய் ஆகியோருடன், டெல்லியில் வேறு சில இடங்களிலும், பாபா மரியாதை செலுத்தினார். கெய்னின் இல்லத்திற்குத் திரும்பி வந்து, பாபா இருவரிடமும், "**இனிமேல் கோவில், தேவாலயம், மசூதி - அல்லது எந்த சாது, துறவி, வாலிகளிடமும் செல்ல வேண்டாம்**" என்று அறிவுறுத்தினார்.

டெல்லியில் தங்கியிருந்த நான்கு நாட்களும், பாபா எவரையும் பார்க்க விரும்பவில்லை. ஆனால், அவரது வருகையின் கடைசி நாளில், அவருக்கு நெருக்கமானவர்கள் அவரை சந்திக்க ஆர்வமாக இருந்தபோது, பாபா அவர்களை ஐந்து நிமிடங்கள் அனுமதித்தார். 21ஆம் நாள், பாபாவின் நெருங்கிய அன்பர்களில் சிலர், பிற்பகல் 2:30 மணிக்கு வாஸ் தேவ் கெய்னின் இல்லத்தில் ஒன்று திரண்டனர். இது ஒரு விளையாட்டுத் தன்மையிலான வேடிக்கை நிறைந்த சந்தர்ப்பம். பாபா முதலில் ஒவ்வொருவரிடமும் அவரவர் உடல்நிலையைப் பற்றிக் கேட்டு, முன்னும் பின்னுமாக கேலி செய்தார்.

'கேம்ப் கல்லூரி'யின் (CAMP COLLEGE) முதல்வர் நிரஞ்சன் ஸிங், மாணவர்களுக்கு பாபா ஒரு சிறப்புச் செய்தியை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்; பாபா, உடனே நகைச்சுவையாக பதிலளித்தார்: "**இன்று காலை நான் கழிப்பறையில் இருந்தபோது, உங்களைப் பற்றி நினைத்தேன், நீங்கள் இப்படி ஒரு செய்தியைக் கேட்பீர்கள் என உறுதியாக உணர்ந்தேன். உங்கள் அறிவியல் மனப்போக்கிற்கு இணங்க நான் இரண்டு செய்திகளை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தேன்.**"

பாபா அன்று காலை 7:45 மணிக்கு 'பொருளுலக மற்றும் ஆன்மீக அறிவியல்' (MATERIAL AND SPIRITUAL SCIENCE) என்ற தலைப்பில் அமைந்த செய்தியை வாசிக்குமாறு எரச்சிடம் கூறினார்:

**கடவுள் அளவிறுதியற்றவராக இருப்பது போல, கற்பனையும் அளவிறுதியற்றது; மேலும் கடவுளின் நிழல் என்று அழைக்கப்படும் கற்பனையிலிருந்து வெளிவந்த அனைத்தும், அந்தக் கற்பனையும் அளவிறுதியற்றது. நாம் எதையும், எல்லாவற்றையும் முடிவில்லாமல் கற்பனை செய்யலாம்.**

**இன்று புரிந்து கொண்டதற்கு இணங்க, விஞ்ஞானம் என்பது, ஆற்றல் மற்றும் பொருள் சார்ந்த அனைத்தையும் கையாளுகிறது. இந்தப் பொருள் சார்ந்த அறிவியல், மனதின் எல்லைக்கு உட்பட்டது.**

**இதுபோல் ஆன்மீக அறிவியல் 'மனதிற்கு அப்பாற்பட்ட' நிலையைக் கையாளுகிறது. பொருள் சார்ந்த அறிவியல், ஆன்மீக அறிவியல் இரண்டும்**

ஆதாரங்களுடன் செயல் விளக்கங்களை வழங்குகின்றன. பொருள் சார்ந்த விஞ்ஞானம், அறிவுத்திறன் மூலமாக விளைவுகளை உருவாக்கும் அதே வேளையில், ஆன்மீக அறிவியல் அன்பின் மூலமாக அவற்றை உருவாக்கும். அன்பை முழுமையாக அனுபவிக்கும் போது, ஒருவர் ஆன்மீக அறிவியலின் ஆதாரமான அளவிறுதியற்ற இறை உணர்வை அடையப் பெறுகிறார்; அதன் பின்னர், இதர அனைத்தும் வெறும் மாயையின் நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன.

அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக விஞ்ஞானம், முறையான மனப்புரிதலுக்கு அப்பாற்பட்டது; வெளியளவில் தோன்றும் ஏற்ற தாழ்வுகள், முரண்பாடுகள் மற்றும் மாறுபாடுகள் நிறைந்த இதை, அன்பு மட்டுமே எதிர்கொள்ளவும் வெல்லவும் முடியும். ஏனெனில், பொருள் அறிவியல் அகங்கார வாழ்க்கையை மேம்படுத்தும் அதே வேளையில், ஆன்மீக அறிவியல் அதை அழித்துவிடுகிறது.

அதைத் தொடர்ந்து எரச் 'இதயத்தின் திட நம்பிக்கை' (INTERNAL CONVICTION) என்ற செய்தியை வாசித்தார் (இந்தச் செய்தி அன்று காலை 9:30 மணிக்கு மெஹர் பாபாவால் எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கப்பட்டது):

இரண்டு வகையான அனுபவங்கள் உள்ளன - ஒன்று வெளியளவிலானது மற்றொன்று உள்ளளவிலானது. வெளியுலக அனுபவங்களை, பௌதீக வழிமுறைகளால் அடையப் பெறலாம். பௌதீக உலகை நாம் உண்மையில் புறக்கண்களால் பார்ப்பது நமக்கு ஒருவித நம்பிக்கையைத் தருகிறது, ஆனால் சில நேரங்களில் இந்த நம்பிக்கையும் கூட தவறான பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டது. ஒருவன் பனை மரத்தின் கீழ் அமர்ந்து பால் அருந்துவதைப் பார்க்கும்போது, அவன் கள் அருந்துவதாக உறுதியாக நம்பத் தோன்றுகிறது, இது தவறானது. ஆனால் அகக்கண்ணால் பார்க்கப்படுவது முழுமையான அசைக்கமுடியாத நம்பிக்கையை வழங்குகிறது, அது ஒருபோதும் தோல்வியை சந்திக்கவோ, பொய்யாகவோ இருக்க முடியாது.

ஒருவன் உண்மையில் அகக்கண்ணால் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை பார்க்கும்போது, அவன் அந்த எல்லையற்ற வாழ்வை அனுபவிக்க வேண்டும். எனவே உண்மையில் தேவைப்படுவது வெறும் கோட்பாடும் பகுத்தறிவும் அல்ல, ஆனால் என்றென்றும் நிலைத்திருக்கும் நம்பிக்கையைத் தரும் உண்மையான அனுபவம், இதை அன்பின் மூலம் மட்டுமே அடைய முடியும்.

இந்தச் செய்திகளை வாசித்த பிறகு, பாபா, நிரஞ்சன் ஸிங்கிடம் கூறினார்: "உண்மை என்னவெனில், மனம் இல்லாத போது மட்டுமே நாம் புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை, மனதின் மூலம் புரிந்து கொள்ள முயற்சிக்கிறோம்! நீங்களே உங்கள் சொந்த முகத்திரையாக இருக்கிறீர்கள்.

"கண்ணுக்கு 'நீங்கள்' தெரியாதவராக மாறும்போது, கடவுள் புலப்படுகிறார்! ஆனால் இதற்கு 'இறை அனுபவம்' தேவை, அந்த 'இறை

**அனுபவத்தின் அருளை அடையப்பெற வேண்டியது அவசியம். புரிதலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை மனதின் மூலம் கிரகிக்க முயற்சிப்பது பயனற்றது.**”

நிரஞ்சன் ஸிங், “ஒரு வாரமாவது உங்கள் சகவாசத்தில் இருக்காத வரை, எனது தாகம் தணியாது” என்று கெஞ்சினார்.

புன்னகைத்த பாபா, “**நான் தாகத்தைத் தணிக்கவில்லை, அதை நான் அதிகரிக்கிறேன்! உங்கள் தாகத்தை அதிகரிக்க, நீங்கள் எப்போது என்னுடன் ஏழு நாட்கள் இருக்க விரும்புகிறீர்கள்?**”

“ஏப்ரல் மாதத்தில் கல்லூரி மூடப்படும்போது.”

“**பார்க்கலாம், ஏப்ரல் வெகு தொலைவில் உள்ளது**” என்று கூறி பாபா கேலி செய்தார்.

அதன் பின்பு பாபா, பிறரிடம் கூறினார்: “**என்னுடைய சொற்பொழிவுகள் மற்றும் வேதாந்தம், உபநிடதங்கள், அனைத்து மதம் சார்ந்த இலக்கியங்களிலும் எந்த மதிப்பும் இல்லை. இவை விளக்க முடியாதவற்றின் விளக்கங்கள் ஆகும். புரிந்து கொள்ள முடியாததை விளக்க முயல்வது முடியாத ஒன்று. எனவே இவை அனைத்தையும் நான் வெறும் வெற்றுப் பேச்சு என்றழைக்கிறேன். இறை அனுபவத்தை அடைவது ஒன்றுதான் ஒரே தேவை. அதன் பின்னர் எல்லா செய்திகளும் சந்தேகங்களும் என்றென்றும் நிரந்தரமாக மறைந்துவிடும். பிறகு நாம், எப்போதும் அளவிறுதியற்றவர்களாக இருந்தோம், நாம் எல்லையற்றவர்களாக இருக்கிறோம், முடிவில்லாதவர்களாக இருப்போம் என்பதை அறிவோம்.**

“இறை உணர்வை அடைய நான் என்ன செய்ய வேண்டும், பாபா?” என்று தாதி மேத்தா (DADI MEHTA) வினவினார்.

“**நேர்மையின் மொத்த உருவம் இறைவன்; ஆதலால், அவரை உணரும் நமது முயற்சிகளில், பூரண நேர்மை இன்றியமையாதது. நமது பேச்சு, செயல், சிந்தனை அனைத்திலும் நேர்மையாக இருக்க வேண்டும்.**”

திரிலோக் ஸிங் (TRILOK SINGH), ஸாஹஜ் ஸிங் (SAHAJ SINGH) இருவரும் தௌலத் ஸிங்கின் மருமகன்கள். அவர்கள், “பாபா, நாங்கள் ஆப்பிரிக்காவிற்குத் (திரிலோக் வாழ்ந்த இடம்) திரும்பிச் செல்கிறோம். உங்கள் ஆசீர்வாதத்தை நாடுகிறோம்” என்றனர்.

பாபா அமைதியாகப் புன்னகைத்து, “**நீங்களும் பிற அனைவரும், நான் உடனடியாக எனது மௌனத்தைக் கலைக்கும் விதத்தில் ஆசீர்வதிக்க வேண்டும். உண்மையான ஆசீர்வாதம் உங்களுக்குள் உள்ளது; எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்**” என்று எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்.

அங்கிருந்த அனைவருக்கும், பாபா இவ்வாறு கருத்துரை வழங்கினார்: “**நமது ஆன்மீகப் பாதையில் தடையாக இருக்கும் மிகவும் பாதகமான ஒரே விஷயம் பாசாங்குத்தனம். நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில்**

**பாசாங்குக்காரர்கள். சிறிதளவு பாசாங்குத்தனம் இருந்தால் கூட கடவுள் நம்முடன் இல்லை என்று அர்த்தம்! அனைத்தும் அறிந்த அந்தக் கடவுளை நாம் ஏமாற்ற முடியாது!"**

அன்று மதியம் 2:40 மணிக்கு, பாபா திடீரென வீட்டை விட்டு வெளியேறி, டெஹ்ரா டூனுக்குத் திரும்புவதற்காக காரில் அமர்ந்தார். குழுவினர் அனைவரும் ஆச்சரியமடைந்தனர், ஏனெனில் அவர்கள் முறையான பிரியாவிடையை வழங்க விரும்பினர். பாபா காரில் வந்து அமர்ந்ததும், ஹெலன் மெதுவாகக் காரை ஓட்டிச் சென்றார்; அன்பர்கள் அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாபா மீரட் வழியாக அன்றிரவு டெஹ்ரா டூன் திரும்பி வந்தார்.




ரயில் நிலையத்தில் ஒரு பக்தரை ஆசீர்வதிக்கும்
காட்சி, டெஹ்ரா டூன், **1953**
(BLESSING A DEVOTEE FROM THE TRAIN, DEHRA DUN, 1953)



# மஹாபலேஷ்வர் வருகை

**(Return To Mahabaleshwar)**

மெஹர் பாபா டெஹ்ரா டூனிலிருந்து புறப்பட்டு, மஹாபலேஷ்வர் செல்வதற்கான ஏற்பாடுகள் தொடங்கின; பாபா, பெண் மற்றும் ஆண் மண்டலி அனைவரும் தங்குவதற்குக் தேவையான பங்களாக்களை ஏற்பாடு செய்ய விஷ்ணு ஏற்கனவே அனுப்பப்பட்டார். ஆகா கான் அரண்மனை - AGA KHAN BUNGALOW (1950 அக்டோபர் மாதத்தில் அவர்கள் தங்கியிருந்த மாளிகை) வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

டெஹ்ரா டூன் நகரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா துப்புரவு சிறுவன் ஈஸாவை அழைத்து, **"என்னுடன் மஹாபலேஷ்வருக்கு வருகிறீர்களா?"** என்று கேட்டார்.

"எனது பெற்றோர் எனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள்," என்று ஈஸா பதிலளித்தான்.

**"நீங்கள் என்னுடன் வர விரும்புகிறீர்களா அல்லது திருமணம் செய்துகொள்ளப் போகிறீர்களா என்று மட்டும் சொல்லுங்கள்"** என்று பாபா மீண்டும் வினவினார்.

"எனது பெற்றோரின் விருப்பப்படி, நான் திருமணம் செய்துகொண்டு, பின்னர் ஒரு காட்டுக்குள் சென்று உங்கள் பஜனைகளைப் பாடுவேன்!" ஈஸா அறிவித்தான்.

பாபா இதைக் கேட்டு நன்றாகச் சிரித்துவிட்டு, **"திருமணத்திற்குப் பிறகு காட்டுக்குப் போகாமல் என்னிடம் வாருங்கள். நீங்கள் வருவீர்களா?"** என்று மறுபடியும் கேட்டார்.

"ஆமாம், நான் வருவேன். எனது பெற்றோரின் விருப்பம் நிறைவேறுவதோடு, உங்கள் விருப்பமும் நிறைவேறும்." மனதார சிரித்துக்கொண்டே பாபா அவனைத் தழுவினார்.

மெஹர் பாபா டெஹ்ரா டூனில் தலைமையகத்தை அமைத்து ஒன்பது மாதங்கள் ஆயின. 1953 நவம்பர் 29 நண்பகல் வேளையில் ஆண், பெண் மண்டலியுடன் பாபா டெஹ்ரா டூனிலிருந்துப் புறப்பட்டுச் சென்றார். பீட்டர், காக்கர் ஸ்பானியல் மற்றும் ஷெபா என்று அழைக்கப்பட்ட கழுதை, மற்றும் மண்டலிக்கு உணவு தயார் செய்வதில் உதவியாக இருந்த இரண்டு நேபாள சிறுவர்கள், கிர்பால் (KIRPAL), குஷால் (KHUSHAL) ஆகியோரும் மஹாபலேஷ்வருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாபாவின் பெரும்பாலான அன்பர்கள் ரயில் நிலையத்தில் அவருக்குப் பிரியாவிடை அளிக்க விரும்பினர், ஆனால் அவர் அதை அனுமதிக்காமல், கீழ்வரும் அன்பர்களை - கிஷன் ஸிங், பிரகாஷ்வதி, கேக்கி நலவாலா, அவரது குடும்பத்தினர், குமாரின் குடும்பத்தினர், பால் கிஸன், மெஹர் காந்தா, வீரேந்திரா, அல்கா பாண்டே, விரீந்தர் ஸிங், மோகினி ராணி, சார்பத் ஸிங், ஹெலன்,

ஹரிசந்த் கோச்சார், எல்சா மிஸ்திரி ஆகியோரை மட்டுமே அனுமதித்தார். இத்தகைய பிரிவு அவர்களுக்கு வேதனையை அளித்தாலும் அதனால் உருவான வலி, நல்ல அதிர்ஷ்டத்தின் விளைவாகும்.

டூன் எக்ஸ்பிரஸ் ரயில் நிலையத்தை விட்டு நகரத் தொடங்கியபோது, நீர் வழியும் கண்களுடன் அன்பர்கள் அமைதியாக பாபாவை வாழ்த்தினர். அவர்களின் உதடுகளிலிருந்து ஒரு சத்தமும் எழவில்லை. வாசலில் நின்றுகொண்டு "**தைரியமாக இருங்கள்... தைரியமாக இருங்கள்**!" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பாபாவும் குழுவும் மும்பை வந்தடைந்து, பெண் மண்டலியுடன் நரிமனின் காரில் மஹாபலேஷ்வருக்குப் பயணம் செய்து, 1953 டிசம்பர் 1 அன்று மதியம் தாமதமாக வந்து சேர்ந்தனர். மறுநாள், எரச், பெண்டு, பைதூல், குமார் ஆகியோருடன் பாபா பூனா வந்தடைந்து, பிந்த்ரா ஹவுஸில் மதிய உணவை உண்டார்; அங்கு அவர் கெய்மாய், மனு, மெஹர்வான், பப்பா ஜெஸவாலா ஆகியோரை சந்தித்தார். அவரது அறிவுறுத்தலின்படி, ஆதி சீனியர், நஸர்வான் இருவரும் பாபாவை சந்திக்கக் காத்திருந்தனர். அதற்குப் பிறகு, பாபா தனது சகோதரர்களான ஜால்பாய், பெஹராம் ஆகியோரை பாபாவின் குடும்ப இல்லத்தில் சந்தித்தார்.

குழுவுடன் ஜால்பாய் இணைய, பாபா அதே நாளில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, நரிமன், அர்னாவாஸுடன் ஆஷியானாவில் தங்கினார். குமார் அடுத்த நாள் டெஹ்ரா டூன் திரும்பிச் சென்றார். பாபாவின் இந்த வருகையின் முக்கிய நோக்கம் மும்பையில் வாழும் மஸ்துகளைத் தொடர்பு கொள்வதாக இருந்தாலும், அவர் ஆஷியானாவில் ஒரு நாள் தரிசன நிகழ்ச்சியை அனுமதித்தார். அவரது பழங்கால தோழர்கள் மற்றும் நெருங்கிய அன்பர்கள், மேலும் ஒரு புதிய தொடர்பில் வந்த ஜால் தஸ்தூர் உட்பட அனைவரும் அவரைப் பார்க்க வந்தனர். பாபாவை முதன்முதலில் சந்தித்த பிறகு, ஜால் தஸ்தூர், உலகம் முழுவதும் அவரது காலடியில் தவழ்கிறது என்பதை உறுதியாக நம்பினார்; மேலும், ஒரு வருடத்திற்கு முன்னதாக, தனது மனைவி டாலியுடன் பாபாவை சந்திக்க வராததன் தவறுக்காக அவர் வருந்தினார்.

பாபா மும்பையில் இருந்த வேளையில், அண்ணா 104, 1953 டிசம்பர் 4 அன்று ஷோலாபூர் நகரில் 64 வயதில் காலமானார். அவர் 1925 முதல் பாபாவின் மண்டலியில் ஒருவராக பல ஆண்டுகள் மெஹராபாத்தில் இருந்ததோடு, புது வாழ்விலும் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார்.

மற்றுமோர் ஆரம்ப கால சீடரான அப்துல்லா ஹாரூன் ஜாஃபர் (ABDULLA HAROON JAFFER), இரண்டு வாரங்களுக்கு முன்னர், 1953 நவம்பர் 23 அன்று நாசிக் நகரில் காலமானார்.

ஆறு நாட்களில் மும்பையில் தமது மஸ்த் பணியை நிறைவு செய்து, பாபா, 1953 டிசம்பர் 6 அன்று மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்ததும், ஹமிர்பூர்

மற்றும் ஆந்திரப் பிரதேச மாவட்டங்களில் நடத்த திட்டமிட்ட தரிசன சுற்றுப்பயணங்களுக்கான விரிவான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன.

அடுத்த மூன்று வாரங்களுக்கு ஏராளமான கடிதங்களும் தொலைத்தந்திகளும் பரிமாறப்பட்டன. ஹமிர்பூர், ஆந்திரா ஆகிய இரண்டு இடங்களிலும், இதயபூர்வமான, அவருக்கே உகந்த வரவேற்பை வழங்கும் விதத்தில் ஏற்பாடுகளைச் செய்வதில் மக்கள் முழுவீச்சில் ஈடுபட்டிருந்தனர்.

டிசம்பர் 25 அன்று பாபாவின் வருகைக்கு முன்னதாக, காக்கிநாடா (KAKINADA) நகராட்சி மண்டபத்தில், எதிர்வரும் தரிசன நிகழ்ச்சியை விளம்பரப் படுத்துவதற்காக, பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது; பாபா பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**டிசம்பர் 25ஆம் தேதி தரிசன நிகழ்ச்சிக்கான எனது செய்தியை உங்கள் அனைவருக்கும் வழங்குகிறேன்: 'அன்பு' உங்கள் தனிப்பட்ட தாழ்வு மனப்பான்மையை நிர்மூலமாக்கி, எனது எல்லையற்ற சுயத்தை வெளிப்படுத்தட்டும். உங்கள் செவிகள் மாயையின் போலி வாசகங்களுக்குச் செவிடாகி, இறை அன்பின் எனது மௌன மொழியைக் கேட்கட்டும். உங்கள் கண்கள் மாயத் தோற்றங்களுக்குக் குருடாகி, எனது சுய ரூபத்தைக் காணட்டும். என்னை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு உங்கள் இதயம் திறந்தே இருக்கட்டும்.**

**எனது ஆசீர்வாதத்துடன் இன்று, உங்கள் அனைவருக்கும் இதுவே எனது செய்தி.**

ஆதி சீனியர் 10ஆம் நாள் மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டு, ஸாக்கோரியில் கோதாவரி மாய்க்கான தகவல்களை வழங்கினார். மினூ போஹோவாலா, மினூ கராஸ் இருவரையும் மெஹர்ஜி, டிசம்பர் 18ஆம் நாள் அழைத்து வந்தார். இதற்கிடையில், பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அவர் வேண்டிய சிகிச்சைகளை எடுத்துக்கொள்ளுமாறு மண்டலி வலியுறுத்தினர். பாபா, நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்தாலும் கூட, வெகுஜன தரிசன நிகழ்ச்சி, உடலளவில் கடினமான சோர்வை உருவாக்கும் என்ற அச்சத்தில் அவர்கள் இருந்தனர். மண்டலி டாக்டர்களில் கோஹெர், டான், நீலு, மற்றும் எரச், பெண்டு ஆகியோர் மருத்துவ சிகிச்சைக்காக மும்பைக்குச் செல்லும் முயற்சியில் அவரை இணங்கச் செய்வதில் வெற்றி கண்டாலும், பாபா ஒரு நிபந்தனையை முன்வைத்தார்: "**நான் சிகிச்சை எடுக்கத் தொடங்கும் நாள் முதல், நீங்கள் அனைவரும் ஒரு கண நேரமும் கண் மூடாமல், விழிப்புடன் என் அருகில் இருக்க வேண்டும்.**"

மண்டலி உடனடியாக அதற்கு ஒப்புக்கொண்டனர், ஆனால் எரச், பெண்டு இருவரும், "டாக்டர் செய்ய வேண்டியதைத் துல்லியமாகவும் அவர் விரும்பியபடியும் உங்களுக்கு சிகிச்சை அளிக்க எந்தத் தயக்கமும் இல்லாமல், நீங்கள் ஒத்துழைக்க வேண்டும், என்பதே எங்கள் பிரார்த்தனை."

பாபா அதற்கு ஒப்புக்கொண்டார்; மேலும் நரிமன், மெஹர்ஜி இருவரும் மும்பையின் அமைதியான சுற்றுப்புறத்தில் ஒரு தனிக் குடியிருப்பை ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இந்த நேரத்தில், டாக்கே அஹமதுநகரிலிருந்து மஹாபலேஷ்வருக்கு வந்தார். அந்த நாட்களில் பாபா உண்ணுவதை கிட்டத்தட்ட நிறுத்திவிட்டதால், டாக்டர் கோஹெர், டாக்கேயிடம், "பாபாவை ஏதாவது உண்ணச் சொல்லுங்கள்; ஒருவேளை அவர் உங்கள் பேச்சைக் கேட்பார்" என்று கூறினார்.

டாக்கே, பாபாவிடம் மன்றாடிய போது அவர் கூறினார், "**நான் இப்போது வெண்ணெயை உண்டால் கூட, அது எனது வயிற்றில் கல்லைப் போல் இருக்கும். நான் இப்போது சில சிறப்புப் பணிகளைச் செய்யவிருக்கும் வேளையில், எந்த உணவையும் உண்ணுவது நல்லது அல்ல. அதனால்தான் நான் உண்ணுவதை நிறுத்தினேன்.**"

அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்த நிலையில், 1953 டிசம்பர் 31 அன்று, எரச், பெண்டு, குஸ்தாஜி, டாக்டர் நீலு ஆகியோருடன் பாபா, மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். சகன், சிது இருவரும் பாபாவின் அறிவுறுத்தலின்படி மும்பையில் அவர்களை சந்தித்தனர். நரிமன் மற்றும் மெஹர்ஜியைத் தவிர, வெர்ஸோவா கடற்கரைக்கு (VERSOVA BEACH) அருகில் வாடகைக்கு எடுக்கப்பட்ட இரண்டு மாடி வீட்டிற்கு வெளியாட்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை; மேலும் பாபாவின் இருப்பிடம் இரகசியமாக வைக்கப்பட்டது. மண்டலி தமது சேவையில் இரவும் பகலும் விழித்திருந்தனர், பாபா ஒரு சாதாரண நோயாளியைப் போல மருத்துவரின் ஆலோசனையை விடாமுயற்சியுடன் பின்பற்றினார். ஆனால், பாபா பல புகார்களை முன்வைத்து, ஒவ்வொரு மருந்தையும் கேட்கத் தொடங்கினார். எரச், பெண்டு இருவரும், "நீங்கள் மருத்துவர் கூறுவதைக் கடைப்பிடிக்க வேண்டும், நாங்கள் உங்களை ஒரு நோயாளியாக மும்பைக்கு அழைத்து வந்துள்ளோம், நாங்கள் மருத்துவர் சொல்வதை மட்டுமே பின்பற்றுவோம்" என்று பாபாவிற்கு நினைவூட்டினர்.

இந்த நேரத்தில் பாபா, பயங்கரமான உடல்வலிகளை அனுபவித்தார். ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் சுமார் 1:00 மணியளவில் வலியைத் தணிக்கும் நோக்கத்தில் அவர் தமது உடலை முட்டிகளால் தாக்குமாறு மண்டலியிடம் கேட்டதுண்டு - இது அவரது உலகளாவிய பணியின் விளைவு என்பதில் ஐயமில்லை. இவ்வாறு மூன்று நாட்கள் இரவு பகல் முழுவதும் மண்டலி விழித்திருக்க வேண்டியதாயிற்று. மும்பைக்கு வந்ததிலிருந்து பாபா, கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து போவது போலத் தோற்றமளித்தார். அவரால் எழுந்து அமரக்கூட முடியாத நிலை, மண்டலியின் உதவியால்தான் அவர் அதைச் செய்ய முடிந்தது. டிசம்பர் மாதத்தில் அவரது உடலுக்கு, தீவிரமான சம்பவம் ஏதேனும் நிகழும் என்று அவர் கூறியிருந்தார், மேலும் அவரது கூற்று உண்மையாவது போலத் தோன்றியது. ஆனால் நான்காவது நாளில், அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில், அவர் திடீரென எழுந்து அமர்ந்து, முழுமையான உடல்

ஆரோக்கியத்துடன் இருந்தது போலத் தோற்றமளித்தார். வழக்கமான ஊக்கமும், உற்சாகத்துடனும் அவர் மண்டலியிடம், **"என்னை நீங்கள் என்னவென்று நினைத்தீர்கள்?"** என வினவினார்.

"கடவுள்" அவர்கள் பதிலளித்தனர்.

அப்போது அவர் கேட்டார், **"நான் கடவுள் என தெரிந்தும், நீங்கள் இன்னும் என்னை ஒரு சாதாரண மனிதனாக நடத்துகிறீர்கள், நான் கடவுள் என்றால், எனக்கு எல்லாம் தெரியும், நான் சொன்னபடி செய்வது உங்கள் கடமை, நான் உங்களிடம் விஷத்தைக் கேட்டாலும், சிறிதளவும் தயக்கமின்றி அதை எனக்குக் கொடுக்க வேண்டும். நான் என்ன ஒரு சாதாரண நோயாளியா? எந்த மருத்துவராலும் எனது உண்மையான நோயை எப்போதாவது கண்டறிய முடியுமா? அப்படி நினைப்பதானால் நீங்கள் என்னுடன் இருப்பதில் எந்த பயனும் இல்லை!"** மண்டலியில் எவரும் ஒரு வார்த்தைக் கூட பேச முடியாத அளவுக்கு பாபா அவர்களைக் கடிந்துகொண்டார்; ஆகையால் 1954 ஜனவரி 4 திங்கட்கிழமை அன்று, அவர்கள் தத்தமது பெட்டிகளை எடுத்துக்கொண்டு பாபாவுடன் மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றனர்.

மஹாபலேஷ்வரில், மண்டலி தினமும் இரண்டு மைல் தூரம் ஷஹஸ்த்ரபுத்தேயின் விருந்தினர் மாளிகைக்கு (SHAHASTRABUDHE'S GUEST HOUSE) மதிய உணவிற்காக நடந்து சென்றனர். குஸ்தாஜி, கைக்கோபாத் இருவரின் உணவு மட்டுமே பங்களாவிற்கு அனுப்பப்பட்டது. பாபாவிற்கும், பெண்மணிகளுக்கும் வேண்டிய உணவை நாஜா, பங்களாவிலேயே தயார் செய்தார்.

பாபா மஹாபலேஷ்வரில் பாவ் கல்சூரிக்கு இரண்டு மணிநேர இரவுக் கண்காணிப்புப் பணியை வழங்கத் தொடங்கினார். கிருஷ்ணா இரவு 9:00 மணி முதல் காலை 4:00 மணி வரை, பாவ் காலை 4:00 முதல் 6:00 வரையிலும் கண்காணிப்பில் அமர்ந்தனர். காலை ஆறு மணிக்கெல்லாம் ரானோ அரை மணி நேரத்துக்காக வருவது வழக்கம். அந்த நேரங்களில், கண்காணிப்புப் பணிபுரிபவர்கள் பாபாவின் அறைக்கு வெளியே கவனமாக, விழிப்புடன் அமர்ந்திருக்க வேண்டும்; பாபா, கைகளைத் தட்டும்போதுதான் அவருடைய அறைக்குள் நுழைந்தனர். தங்கள் கடமை முடிந்ததும், அவர்கள், பாபாவின் அறையை வெளியிலிருந்து பூட்டிவிட்டு, திறவுகோலை, அவர்கள் இடத்தில் வந்தவரிடம் கொடுத்துச் சென்றனர்.

ஒரு நாள் இரவு கிருஷ்ணா, பாபாவின் அறையைப் பூட்டிவிட்டு, திறவுகோலை எங்கே வைத்தார் என்பதை பாவிற்குச் சொல்ல மறந்துவிட்டார். சிறிது நேரத்தில், பாபா கைகளைத் தட்டவும், பாவ் வெறித்தனமாகத் திறவுகோலைத் தேடினார்; அவர் ஜன்னலைத் திறந்து பார்த்தபோது, பாபா அவரை உள்ளே வருமாறு சைகையால் தெரிவித்தார், ஆனால் பாவ், "அறை பூட்டப்பட்டுள்ளது" என்று பதிலளித்தார்.

பாபா சிறுநீர் கழிக்க விரும்பியதால், கதவைத் திறந்து உடனே உள்ளே வருமாறு பாபா மீண்டும் அழைத்தார். பாவ், திறவுகோலைக் காணவில்லை என்று பதிலளித்ததும், அவர் ஓர் உதவாக்கரை என்று கூறி, பாபா, மீண்டும் அவரை அமருமாறு சைகையால் கூறினார். பாபாவே எழுந்து சிறுநீர் கழிக்க கொள்கலனை எடுத்தார். இந்தக் குளறுபடியான நிகழ்வுகளால், பாவ் கடுமையான குளிரிலும் வியர்த்துக் கொண்டிருந்தார்.

முழுக்கதையும் இத்துடன் முடியவில்லை. காலை 6:30 முதல் 7:00 மணிக்குள் பாபா எழுந்திருக்க விரும்புகிறார் என்பதை ரானோவிடம் தெரிவிக்க வேண்டும் என்று கிருஷ்ணா, பாவிடம் கூறியதற்கு இணங்க, ரானோ வந்ததும் தகவல் தெரிவிக்கப்பட்டது, அதற்கு ரானோ, "நான் அவரை 6:30 அல்லது 7:00 மணிக்கு எழுப்பலாமா?" என்று கேட்டார்.

குழப்பமடைந்த பாவ் தயக்கத்துடன், "ஏழு மணிக்கு" என்று பதிலளித்தார்.

காலை எட்டு மணிக்கு பாபா மண்டலியின் அறைக்கு வந்தபோது, **"நீங்கள், உங்கள் 'எம்.ஏ.' பட்டத்தை எப்படிப் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை! உங்களுக்கு அறிவே இல்லை"** என்று பாவை கிண்டல் செய்தார். இரவில் நடந்ததை அவர் பிற மண்டலிக்குத் தெரிவித்தார், அனைவரும் பாபா கூறியதைக் கேட்டு நகைத்தனர்.

பாபா மஹாபலேஷ்வருக்குத் திரும்பிய பிறகு, கிஷன் ஸிங், குமார் இருவரையும் டெஹ்ரா டூனிலிருந்து அழைத்தார்; அவர்கள் ஜனவரி 25 அன்று மாலை வந்தனர். ஹமிர்பூர், ஆந்திரா பயணத்திற்காக, பாபா 'உளதாயிருப்பது உண்மைப்பொருள், வாழ்க்கை உருநிழல்' (EXISTENCE IS SUBSTANCE AND LIFE IS SHADOW) என்ற செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**உளதாயிருப்பது உண்மைப்பொருள், நித்தியமானது, அதேவேளை, அதன் உருநிழலே வாழ்க்கை, அழியக்கூடியது.**

**ஒப்பீட்டளவில், மனிதனுக்கு உளதாயிருப்பது அவனது உடல், மேலும், வாழ்க்கை என்பது அவனது உடலை மூடும் ஆடை போன்றது. இறைவாழ்வின் எண்ணற்ற, மாறுபட்ட அம்சங்களில் ஏக இறைவன், நித்தியமாக உளதாயிருப்பதைப் போல், அதே மனித உடல், வேறுவேறு பருவகாலம், நேரம், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் ஆடைகளை மாற்றிக்கொள்கிறது.**

**பலவகையான விதங்களில், வண்ணங்களுடன் கூடிய வாழ்க்கையின் மேலாடையால், அடையாளம் காண முடியாத அளவிற்கு மறைக்கப்பட்டிருப்பது, 'மாற்றமில்லாத உண்மைப்பொருள்'. அது, மனம், ஆற்றல் மற்றும் பௌதீக வடிவங்களின் திரைகளுடன் கூடிய இறைவாழ்வின் ஆடையாகும், அவை, 'நிழல்கள்' போல் உறைந்து, உளதாயிருக்கும் உண்மைப்பொருளை மூடி மறைத்து, நித்திய, பிரிக்க முடியாத மற்றும் மாறாத ஏக இறைவனை நிலையற்றதாக, பல்வேறு**

உருவில் எப்போதும் மாறிக்கொண்டே இருப்பதுபோலத் தோன்றச் செய்கிறது.

உளதாயிருக்கும் உண்மைப்பொருள் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளது மற்றும் உயிருள்ள, உயிரற்ற, உண்மையான அல்லது உண்மையற்ற, இனங்களில் வேறுபட்ட, வடிவங்களில் சீரான, கூட்டு அல்லது தனிப்பட்ட, கருத்துருவான அல்லது உறுதியான அனைத்திற்கும் அடிப்படை சாராம்சமாக உள்ளது.

உளதாயிருக்கும் உண்மைப்பொருளின் நித்தியத்தில், 'நேரம்' என்ற ஒன்று இல்லை. கடந்த காலமும் இல்லை எதிர்காலமும் இல்லை, நித்திய நிகழ்காலம் மட்டுமே உள்ளது. நித்தியத்தில் எதுவும் நடந்ததுமில்லை, எதுவும் நடப்பதுமில்லை. முடிவிலாத 'இப்பொழுதில்' மட்டுமே 'எல்லாமும்' நிகழ்கிறது.

உளதாயிருப்பது கடவுள்; அதேவேளை
வாழ்க்கை என்பது மாயை.
உளதாயிருப்பது நிதர்சனம்; அதேவேளை
வாழ்க்கை என்பது கற்பனை.
உளதாயிருப்பது நிரந்தரமானது; அதேவேளை
வாழ்க்கை என்பது நிலையற்றது.
உளதாயிருப்பது மாறாதது; அதேவேளை
வாழ்க்கை எப்பொழுதும் மாறிக்கொண்டே இருப்பது.
உளதாயிருப்பது சுதந்திரம்; அதேவேளை
வாழ்க்கை ஒரு பிணைப்பு.

உளதாயிருப்பது பிரிக்க முடியாதது;
அதேவேளை வாழ்க்கை பலதரப்பட்டது.
உளதாயிருப்பது புலப்படாதது;
அதேவேளை வாழ்க்கை ஏமாற்றமளிப்பது.
உளதாயிருப்பது சுதந்திரமானது; அதேவேளை வாழ்க்கை,
மனம், ஆற்றல் மற்றும் பௌதீக வடிவங்களைச் சார்ந்தது.
உளதாயிருப்பது நிலையான 'இருப்பு நிலை'; அதேவேளை
வாழ்க்கை இருப்பதுபோலத் தோற்றமளிப்பது.
உளதாயிருப்பது, எனவே, வாழ்க்கை அல்ல.

பிறப்பும் இறப்பும் 'வாழ்க்கை'யின் தொடக்கத்தையோ முடிவையோ குறிப்பதில்லை. பிறப்பு, இறப்பு என்று அழைக்கப்படுவது, வாழ்க்கையின் பல நிலைகளான பரிணாமம், மறுபிறவி என்பவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன; 'வாழ்க்கை' ஒரு முறை மட்டுமே வரும்; அது, வரையறுக்கப்பட்ட உணர்வு நிலையின் முதல் மங்கலான கதிர்களின் வருகையுடன், அளவிறுதியற்ற இறை உணர்வை அடையப்பெறும் அந்தத் தருணத்தில், ஒரே ஒருமுறை மட்டுமே மரணத்தை சந்திக்கும்.

உளதாயிருக்கும் ஏக இறைவன், அனைத்தும் அறிந்தவர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர் ஏனெனில், அவர் காரணம், விளைவு, காலம், இடம் மற்றும் அனைத்து செயல்களுக்கும் அப்பாற்பட்டவர். எங்கும் நிறை ஏக இறைவன் அனைத்தையும், அனைத்து உருநிழல்களையும், அனைத்து பொருட்களையும் தொடுகிறார்; உளதாயிருக்கும் அவரை எதுவும் ஒருபோதும் தொட முடியாது; உளதாயிருக்கும் உண்மை கூட அவரைத் தொட முடியாது.

உளதாயிருக்கும் ஏக இறைவனை உணர, வாழ்க்கை இழக்கப்பட வேண்டும். வரம்பற்ற சுயமாகத் திகழும் ஏக இறைவனுக்கு வரம்புகளை வழங்குவது வாழ்க்கை. வரம்புக்குட்பட்ட சுயமாக இருக்கும் வாழ்க்கை, மனதில் மனப்படிவங்களை உருவாக்குவதன் மூலம் நிலைநிறுத்தப்படுகிறது; சக்தியின் தூண்டுதலால் மனப்படிவங்கள் வெளிப்படுவதன் மூலம் இந்த மனப்படிவங்களை சிதறடிப்பதற்கும், புதிய மனப்படிவங்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கிறது; மேலும், பௌதீக வடிவங்கள் மற்றும் உடல்கள், கருவிகளாக செயல்படுவதன் மூலம், இந்த மனப்படிவங்கள் செலவழிக்கப்பட்டு, வலுவூட்டப்பட்டு இறுதியில் செயல்கள் மூலம் நிர்மூலமாக்கப்படும்.

வாழ்க்கை செயல்களுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. செயல்கள் மூலமாக வாழ்க்கை வாழப்படுகிறது, மதிப்பிடப்படுகிறது. உயிர் வாழ்வது என்பது செயல்களைச் சார்ந்தது. வாழ்க்கையின் அறிவாற்றல் என்பது செயல்கள் - இயற்கைக்கு எதிரான செயல்கள், சாதகமான மற்றும் எதிர்மறையான செயல்கள், ஆக்கபூர்வமான மற்றும் அழிவுகரமான செயல்கள்.

எனவே, வாழ்க்கையை அதன் இறுதி மரணத்திற்கு அடிபணிய வைப்பது என்பது, அனைத்து செயல்களையும் முடிவுக்குக் கொண்டுவருவதாகும். செயல்கள் முற்றிலுமாக முடிவடையும் போது, வரம்புக்குட்பட்ட சுயமாக இருக்கும் வாழ்க்கை, தன்னிச்சையாக வரம்பற்ற சுயமாக உணரப்படுகிறது; அதாவது, உளதாயிருக்கும் ஏக இறைவனாக உணரப்படுகிறது; பரிணாமம், உட்சுழற்சியின் ஊடுருவல் நிறைவடைந்து, மாயை மறைந்து, மறுபிறவியின் விதியால் இனி பிணைக்கப்படாத சூழல் உருவாகிறது.

செயல்களைச் செயல்படுத்தாமல் தவிர்ப்பது, ஒருபோதும் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது ஆகாது. இது மற்றுமொரு செயலைச் செயல்படுத்துவதைக் குறிக்கும் - அதாவது செயலற்ற தன்மை. செயல்களிலிருந்து தப்பிப்பது செயல்களை வேரோடு அழிப்பதற்கான பரிகாரம் அல்ல. மாறாக, இது மட்டுப்படுத்தப்பட்ட சுயத்தை தப்பிக்க வைக்கும் செயலில், அதிக அளவில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்கும், இதனால் மேலும் அதிகமான செயல்களை உருவாக்கும். செயல்களில் நல்லது, தீயது இரண்டும் உள்ளன, இவை, வாழ்க்கையின் சிக்கலான

இழையில் முடிச்சுகள் போன்றது. செயலின் முடிச்சுகளை அகற்றுவதற்கான விடாமுயற்சியில், முடிச்சுகள் உறுதியானதாக மாறி, சிக்கல்களை அதிகரிக்கும்.

விஷம், விஷத்தின் விளைவுகளை எதிர்ப்பது போல, செயல்கள் மட்டுமே செயல்களை, செயலிழக்கச் செய்ய முடியும். ஆழமாக ஊன்றப்பட்ட முள் ஒன்று, செயல்திறன் மற்றும் முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்தப்படும் மற்றொரு முள் அல்லது ஊசி போன்ற கூர்மையான பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் அகற்றப்படலாம். இதேபோல, செயல்கள் - அவை 'சுயத்தை' தவிர வேறு சில செயல்படுத்தும் காரணிகளால் செய்யப்படும்போது - பிற செயல்களால் முற்றிலும் வேரோடு அழிக்கப்படுகின்றன.

கர்ம யோகா, தியான யோகா, ராஜ யோகா, பக்தி யோகா ஆகியவை உண்மைப்பொருளான சத்தியத்தின் பாதையில் முக்கிய அடையாளச் சின்னங்களாக இருப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்புரிகின்றன; மேலும், இறைவனைத் தேடுபவர்களின் இறுதி இலக்கை நோக்கி வழிநடத்துகின்றன. ஆனால், செயல்களால் உறுதிப்படுத்தப்படும் வாழ்க்கையின் பிடிப்பு, ஆன்மீக ஆர்வலர் மீது மிகவும் இறுக்கமாக இருப்பதால், இந்த எழுச்சியூட்டும் அடையாளச் சின்னங்களின் உதவியாலும், அவர் சரியான பாதையில் வழிநடக்கத் தவறிவிடுகிறார். தனிப்பட்ட 'சுயமானது' செயல்களால் பிணைக்கப்பட்டிருக்கும் வரை, ஆன்மீக ஆர்வலர் அல்லது சத்தியத்தை நோக்கி செல்லும் பாதையில் பயணிப்பவர் கூட, சுய ஏமாற்றத்தின் மூலம் வழிதவறிச் செல்வது உறுதி.

எல்லா காலத்திலும், சாதுக்கள், ஆர்வலர்கள், முனிவர்கள், துறவிகள், தபஸ்விக்கள், சன்யாசிகள், யோகிகள் மற்றும் ஸூஃபிகள் தங்கள் வாழ்நாளில் போராடி, செயல்களின் பிரமையிலிருந்து தங்களை விடுவித்து, என்றென்றும் உளதாயிருக்கும் ஏக இறைவனை உணரும் முயற்சியில் சொல்லொணா துன்பங்களை அனுபவித்தனர். அவர்கள் தங்கள் 'சுயத்துடன்' எவ்வளவு அதிகமாக போராடுகிறார்களோ, அவ்வளவு உறுதியான சுயத்தன்மை மிக்க துறவறம், தவம், ஜபம், ஏகாந்தவாசம், புனித யாத்திரை, தியானம், உறுதியான வாய்ப்பாடு, அமைதியான சிந்தனை, தீவிர செயல்பாடு, செயலற்ற தன்மை, மௌனம் மற்றும் வாய்மொழி, இறை நாமத்தை (திரும்பத் திரும்ப) உச்சரித்தல், அனைத்து வகையான யோகாக்கள், சிஷ்யத்துவம் போன்றவற்றால் வாழ்க்கை வேரூன்றப்படுவதால் அவர்கள் தங்கள் முயற்சிகளில் தோல்வியடைகின்றனர்.

வாழ்க்கையின் இறுக்கமான பற்றுதல் மற்றும் செயல்களின் தளர்ச்சியிலிருந்து விடுதலை என்பது அனைவருக்கும் சாத்தியம்; மேலும் பரிபூரண குருநாதர், சத்குரு ஒருவருடைய அருள் மற்றும் வழிகாட்டுதல் மூலமாக ஒரு சிலர் அதை அடையப்பெறுவது நிதர்சனம். பரிபூரண குருநாதரின் நிலையான அறிவுரை, அவரிடம் முழுமையாக சரணடைதல்

**ஆகும். யார் ஒருவர் தனது மனம், உடல், உடைமைகள், தனிப்பட்ட 'சுயத்தன்மை' அனைத்தையும் குருநாதரின் பாதங்களில் அர்ப்பணித்து, முழுமையாக சரணடைகிறார்களோ, அவர்கள் குருநாதரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, தனது செயல்களில் விழிப்புடன் இருக்கிறார்.**

**அத்தகைய செயல்கள், 'சுய' சரணடைதலுக்குப் பின்னர், இனிமேல் தனி ஒருவரின் சொந்த செயல்களாக இராது. எனவே, இச்செயல்கள் உயிருக்கு ஊட்டமளித்து நிலைநிறுத்தும் இதர எல்லா செயல்களையும் வேரோடு களையக் கூடியவை. அதற்குப் பிறகு, வாழ்க்கை படிப்படியாக உயிரற்றதாகி, இறுதியில் முழுநிறை குருவின் அருளால், அதன் இறுதி மரணத்திற்கு அடிபணிகிறது. ஒரு காலத்தில் விடாமுயற்சியுடன் நிரந்தர, உளதாயுள்ள ஏக இறைவனை உணரவிடாமல் தடுத்து நிறுத்திய வாழ்க்கை, இப்போது அதன் சுய ஏமாற்று வேலைகளை செய்ய முடியாமலாகிறது.**

**நான் கடந்த காலத்திலும் இதை வலியுறுத்தினேன், இப்போதும் நான் உங்களுக்குச் சொல்கிறேன், மேலும் காலங்காலமாக என்றென்றும் நான் இதையே மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறேன்: 'உங்கள் வாழ்க்கையின் மேலங்கியைக் களைந்துவிட்டு, நித்தியமாக உளதாயிருக்கும் ஏக இறைவனை உணர்ந்து கொள்ளுங்கள்'.**

**மாற்றமில்லாத, பிரிக்க முடியாத, எங்கும் நிறை உண்மைப்பொருளை உணர்ந்து கொள்ளும் எளிமையான வழி, என்னிடம் முழுமையாக சரணடைவதே; உங்களின் சரணாகதி அந்த அளவுக்கு முழுமையாக இருக்கும் போது, சரணாகதியைப் பற்றி சிறிதளவும் உணர்வில்லாமல், எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது ஒன்றையே உணர்வுபூர்வமாக நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.**

**நீங்கள் ஏக இறைவன் எனும் நிரந்தரத் தன்மையுடன் வாழ விரும்பினால், என்னிடம் 'முழுமையாக' சரணடைதலின் கைகளில், உங்கள் 'ஏமாற்றும் இயல்புடைய சுயத்தின்' மரணத்திற்காக ஏங்குங்கள். இந்த 'யோகா' ஒன்றுதான் அனைத்து யோகாக்களின் சாராம்சம்.**

பாபா, டெஹ்ரா டூனில் இருந்த வேளையில், எரச்சிடம் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்தின் ஒரு பகுதியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து, மஹாபலேஷ்வரில் வழங்கிய விளக்கங்களையும் எரச் குறிப்பெடுத்துக் கொண்டார். அதே நாள் இரவில், எரச் விளக்கங்களை வாக்கியங்களாக விரிவுபடுத்தி, அடுத்த நாள், வேண்டிய திருத்தங்களைச் செய்ய, பாபாவின் முன்னிலையில் அவை வாசிக்கப்பட்டன. (உரைக்குத் தேவையான முக்கியமான வார்த்தைகளை வழங்கும் நோக்கத்தில், மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்பட்ட எழுத்துக்களை, பாபா, கைத்தட்டலுடன் பாவ் கல்சூரிக்கு அவ்வப்போது எடுத்துக்காட்டினார்) இந்தப் பணி பல மாதங்கள் தொடர்ந்தது.

1954 ஜனவரி 28 அன்று, பாபா இந்த சிறு கவிதையை எடுத்துரைத்தார்:

**புரிந்து கொண்டால், வாழ்க்கை,**
**பிறரை மகிழ்விக்கும் வெறும் கேலிப்பேச்சு.**
**தவறாகப் புரிந்து கொண்டால், அது,**
**வாழ்க்கையைப் பாழ்படுத்தும் சிறிய பூச்சி.**
**முழு முயற்சியுடன் கடந்து சென்றால்**
**வாழ்க்கை ஓர் இளைப்பாறும் சோலை.**
**ஆன்மீகப் பாதையில் செல்லும் பக்தர்களுக்கு**
**வாழ்க்கை ஒரு சோதனை.**
**அன்பின் மூலம் அழிந்தால், அது,**
**சீரும் சிறப்புமான ஒரு வாழ்க்கை.**

ஆதி சீனியர், பாதிரி இருவரையும் பாபா மஹாபலேஷ்வருக்கு அழைத்து, அவர்களுடன் சில குறிப்பிட்ட பணிகளைப் பற்றி விவாதித்தார். பாபாவின் சகோதரர்கள் ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர் ஆகியோரும் தனிப்பட்ட ஆலோசனைகளுக்காக அழைக்கப்பட்டனர்.

1954 பிப்ரவரி 1ஆம் நாள் பாபா ஹமிர்பூருக்குப் புறப்பட இருந்தார்; அவர் தன்னுடன் செல்லவிருந்த மண்டலியை எச்சரித்தார், “**என்னை ஒரு பூவைப் போல்** (ஹமிர்பூருக்கு) **அழைத்துச் செல்லுங்கள், அதே போல் என்னை திரும்ப அழைத்து வாருங்கள். இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்; இது உங்களுக்கு நான் வழங்கும் எச்சரிக்கை!**”

இது பாபாவின் உடல்நிலை இன்னமும் சரியில்லாமல் இருந்ததைக் குறிக்கிறது. அவர் உடல் முழுவதும் வலி இருப்பதாகப் புகார் கூறினார், பல வாரங்களாக சரியாகத் தூங்கவுமில்லை. மாத இறுதியில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், “**ஜனவரி எனக்கு, வாழும்போது உயிரை விடும் மாதமாக இருக்கும்! நான் ஜனவரியில் இறந்து விடுவேன், ஆனால் பிப்ரவரியில் மீண்டும் எழுவேன்.**”

ஹமிர்பூரில் சேவகர்களை ஒன்றுதிரட்டி கூட்டத்தை நடத்துமாறு கேஷவ் நிகமிடம் கூறப்பட்டது. அந்த சந்திப்பைப் பற்றி பாவ் கல்சூரியிடம் பாபா, “**ஆன்மீகத் தற்கொலை செய்பவர்களின் குழுவுக்கு, உங்களைத் தலைவராக்குவேன்! என்னுடன் ஹமிர்பூருக்குச் செல்லுங்கள், நீங்கள் அதைப் பார்க்கலாம்**” என்று கூறினார். பாவ் அல்லது வேறு எந்த மண்டலியாலும் பாபாவின் இந்தக் கூற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பெண்டு, வழக்கம் போல, முழுப் பயண ஏற்பாடுகளுக்கான மொத்த பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, பயணத்தின் மேலாளராகப் பணிபுரிந்தார்; குமார் தலைமை தளபதியாக செயல்பட இருந்தார். சதாஷிவ் பாட்டீல் பூனாவிலிருந்து வந்து அவர்களின் உணவுக்கான ஏற்பாடுகளை கவனித்தார். (பாபா அவருக்கு, ‘தாய்-தந்தை’ என்று செல்லப்பெயரிட்டு அழைத்தார், அவர் எப்பொழுதுமே கூப்பிய கரங்களுடன், மரியாதையாக அணுகினார்.) நரிமன், மெஹர்ஜி, ஜால்பாய், சகன், சிது, டாக்கே, நானா கேர், ராம்ஜூ, காடேக்கர், பங்க்ராஜ்,

ஹெலன் உட்பட வேறு சிலர், பாபா மற்றும் மண்டலியுடன் ஹமிர்பூருக்குச் செல்ல இருந்தனர். ஹர்ஜீவன் லால் டெல்லியிலிருந்தும், பிரம்ம தத் டெஹ்ரா டூனிலிருந்தும் நேரடியாக வந்திணைந்தனர். சுற்றுப்பயணத்தின் போது எரச், மெஹர்ஜி இருவரும் எப்பொழுதும் அவருடன் இருக்க வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார். எரச் இல்லாத பட்சத்தில் ஜால்பாய் எழுத்துப்பலகையை வாசிக்க வேண்டும். சகனும், சிதுவும் தனிப்பட்ட உதவியாளர்களாக அவரது சௌகரியங்களை கவனிக்க வேண்டும்; டாக்கே, குமார் இருவரும் குடை-மனிதர்கள், தரிசன ஸ்தலங்களுக்குச் செல்லும் போதெல்லாம் பாபாவை (அவரது குடை நிழலின் கீழ்) அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. கிஷன் ஸிங் வைத்திருந்த குறிப்புகளிலிருந்து தொகுக்கப்பட்ட நாட்குறிப்பை ராம்ஜூ பராமரிக்க வேண்டும்.

அவதார புருஷரின் செயல்பாடுகளைப் பார்த்து, புறப்படுவதற்கு முன்னதாக எழுந்த சலசலப்பில் காலம் சிக்கிக்கொண்டது. பாபா, தனது பிரபஞ்சத்திற்கான பணியை எவ்வளவு இயல்பாகச் செய்துகொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. இறைவனைத் தேடுபவராகத் தன்னை பாவித்து, அவதார புருஷர் எப்படித் தனது புது வாழ்வை வாழ்ந்து, மனதை நிர்மூலமாக்கினார் என்பதை அது கவனித்தது. முதலில், அவதார புருஷரின் உலகளாவிய மனம், எப்படி நிர்மூலமாக்கப்படும் என்று காலம் குழப்பமாக இருந்தது. ஆனால், அவதார புருஷரின் உலகளாவிய மனம் ஒவ்வோர் உயிருள்ள மற்றும் செயலாற்றலற்ற மனதுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை அது உணர்ந்தது; இந்த எண்ணற்ற ஆத்மாக்களில் சிலவற்றை ஒருவேளை அவர் மனோநாஷிற்காக தேர்ந்தெடுத்திருக்கலாம்!

ஏகாந்தவாசத்தில் நிகழ்த்திய மனோநாஷைத் தொடர்ந்து, அவதார புருஷர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அனல் பறக்கும் பயணத்தை மேற்கொண்டு, மேலும் அதைத் தீவிரப்படுத்த, அவர் இறை அன்பின் சூறாவளிக் காற்றை வரவழைத்தார்.

நெருப்பை விசிறியால் மேலும் தீவிரப்படுத்தும் நோக்கத்தில் அவதார புருஷர், ‘உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவராக’, இந்த இடங்களுக்கு மீண்டும் செல்லவிருந்தார்.

‘லார்ட் மெஹர்’ (LORD MEHER) வாழ்க்கைச் சரித்திரத்தில், பாபாவின் செயல்பாடுகளின் ஒவ்வொரு தருணத்தையும் படம்பிடித்து பதிவு செய்ய, காலம் அதன் பார்வையை, வட இந்தியாவில் ஹமிர்பூர் மாவட்டம் மற்றும் தெற்கில் ஆந்திரப் பிரதேசத்தின் மீது செலுத்தியது. என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம்…



மெஹரா, பீட்டர் மற்றும் ஷீபாவுடன் -
மஹாபலேஷ்வர்
(WITH MEHERA, PETER & SHEBA IN MAHABALESHWAR )





# ஹமிர்பூர் - 'அவதார புருஷர்' பிரகடனம்

**(Hamirpur - Declaration of 'Avatarhood')**

1954 பிப்ரவரி 1 திங்கள் அன்று, அலோபா, பைதூல், பாவ் கல்சூரி, எரச், குஸ்தாஜி, கைக்கோபாத், கிஷன் ஸிங், குமார், பெண்டு ஆகிய ஒன்பது அன்பர்களுடன் பாபா, ஹமிர்பூருக்குப் புறப்பட்ட அதேவேளையில், டாக்டர் டான், கிருஷ்ணா, டாக்டர் நீலு, விஷ்ணு ஆகியோரை பெண் மண்டலியுடன் விட்டுச்சென்றார். இந்த நேரத்தில், மெஹராவின் கண்காணிப்பில் இருந்த குட்டிக்குதிரை ஷீபாவை, பாபாவின் அறைக்கு அழைத்துச் சென்று, அவர் இல்லாததால், பாபா இல்லை என்பதை அதற்குக் காட்டினார். மணி மேற்கத்திய நாடுகளுடன் தனது கடிதப் பரிமாற்றங்களைச் செய்து கொண்டிருந்தார், அவருடைய சிறிய கையடக்கமான தட்டச்சுப்பொறி, எப்பொழுதும் அவர் முன்னால் இருந்தது. கோஹெர், ரானோ இருவரும் அவர்களுக்கு இடையேயான வீட்டு விவகாரங்களை நிர்வகித்தனர், மேலும், நாஜா சமையலில் மும்முரமாக இருந்தார். மெஹரு, மெஹராவிற்கு உதவியாக, பல்வேறு பணிகளைச் செய்து வந்தார்.

மஹாபலேஷ்வரிலிருந்து நரிமனின் காரில் பூனாவிற்கு வந்த பாபாவுடன், சகன், டாக்கே, காடேக்கர், ஜால்பாய், கிருஷ்ணாஜி, ராம்ஜூ, சதாஷிவ், ஸவக், சிது, யஷ்வந்த் ராவ் ஆகியோரும், மும்பையிலிருந்து நரிமன், மெஹர்ஜி இருவரும் ரயில் நிலையத்தில் குழுவுடன் இணைந்தனர். பாபாவுடன் முழுக் குழுவும் பூனாவிலிருந்து ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தனர்.

நாக்பூரிலிருந்து வந்த நானா கேர், பங்க்ராஜ் ஆகியோர் இட்டார்சியில் (ITARSI) இணைந்தனர். அவரைப் பார்த்ததும் பாபா, நானாவிடம், **"எனக்காக உணவு கொண்டு வந்தீர்களா?"** என்று கேட்க, தன்னை அறியாமல் கேள்வியில் அகப்பட்ட நானா, "இல்லை" என்று பதிலளித்தார். வருத்தமடைந்த பாபா, அவரை ரயிலிலிருந்து இறங்குமாறு கூறினார்! பாபா, அவரைப் பற்றிப் பிடித்த வண்ணம், **"என்னைப் பற்றி நீங்கள் கொஞ்சமேனும் யோசித்திருக்க வேண்டும்! உங்கள் தாயாரின் சமையலும், அண்ணி தயார் செய்த சட்னியும் எனக்கு எவ்வளவு பிடிக்கும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும், இருந்தும் நீங்கள் எதுவும் எடுத்துவரவில்லை. நீங்கள் உண்மையிலேயே ஒரு மூடன், விவேகமற்றவன்!"** என்றார். நானா சிரித்துக்கொண்டே வெறுங்கையுடன் வந்ததற்கு மன்னிப்புக் கோரினார்.

பயண வேளையில், ஜால்பாய், டாக்கே ஆகியோர் நகைச்சுவை கலந்த வேடிக்கையான கதைகளை எடுத்துரைத்து, பாபாவை மகிழ்வித்தனர்; மேலும், குமார் விசித்திரமான கதைகளையும் விவரித்தார். களிப்பூட்டும் வார்த்தைகளால், பாபா அனைவரின் கவனத்தையும் தம் மீது ஈர்த்தார். வெளியிலிருந்து வந்த அன்பர்கள் பாபாவின் சகவாசத்தில் இந்த நேரத்தை ரசித்தாலும், மண்டலி

ஒருபோதும் நிம்மதியாக இல்லை, ஏனெனில் பாபா, அவர்கள் அனைவரையும் கடிந்துகொள்வதோடு, கேலியும் கிண்டலும் செய்தார். அவர்களுடைய 'சிஷ்ய வாழ்க்கை'யின் ஆரம்பத்திலிருந்தே ஏளனமும், இகழ்ச்சியும் அவர்களுடைய வாழ்வின் ஓர் அங்கமாக மாறிவிட்டன.

ரயிலில் ஒன்றரை நாள் பயணத்திற்குப் பிறகு, பிப்ரவரி 3ஆம் நாள் அதிகாலை 3:00 மணிக்கு, குழு ஒரை (ORAI) ரயில் நிலையத்தை வந்தடைந்தது; அங்கு கேஷவ், புக்கார், ஹெலன், பிரம்ம தத் மேலும் சில நெருங்கிய அன்பர்கள் பாபாவை வரவேற்கக் காத்திருந்தனர். ராஜா ரகுராஜ் ஸிங்கின் (RAJA RAGHURAJ SINGH) இல்லத்தில் பாபா தங்கினார், அங்கு அவர் ஹமிர்பூர் சேவகர்களுடன் முதலில் அனைத்து விஷயங்களைப் பற்றியும் விவாதித்தார்.

கேஷவ், பாபாவின் பெயரையும் செய்தியையும் அவர் வருவதற்கு முன்னரே, மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் தெரியப்படுத்த கடுமையாக உழைத்து வந்தார், மேலும் மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

ரகுராஜ் ஸிங் மற்றும் அவரது குடும்பத்தினர் முதல் முறையாக பாபாவை சந்தித்தனர். அவர் அரச குடும்பத்தில் பிறந்தவராயினும், எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். சமூக அந்தஸ்தில் உயர்ந்தவராக இருந்தாலும் உள்ளத்தில் அவர் எளிய, கள்ளம் கபடமற்ற மனிதராக, மெஹர் பாபாவின் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தார்; அதன் பின்னர், அவதார புருஷரின் ஆன்மீகப் பணியின் பல நிகழ்வுகளில் பேருதவியாக இருந்தார்.

பாபா மற்றும் குழுவினரின் சில மணிநேர ஓய்வுக்குப் பிறகு, நூற்றுக்கணக்கான மக்களுக்குப் பிரசாதத்தை வழங்க, அதிகாலையில் பாபாவின் தரிசன நிகழ்ச்சி ஆரம்பமானது. காலை 6:00 மணிக்கு, 'இதயத்தின் மொழி' (THE LANGUAGE OF THE HEART) என்ற செய்தி ஒரை கிராமத்தில் ஒன்றுதிரண்ட மக்களுக்கு வழங்கப்பட்டது:

**கடவுள், நாவின் அல்லது மனதின் மொழியைக் கேட்பதில்லை, ஆனால் அவர் இதயத்தின் குரலுக்கு செவிமடுக்கிறார். இதயத்தின் மொழி என்பது அன்பிற்குரியவருக்கான காதல் கீதம்.**

**அன்பிற்குரியவருடன் இணைவதற்காக இதயம், அழுது கதறும் போதும், மனம், பிரிவின் வேதனையால் அவதிப்படும் போதும், அவருடைய எதிர்வினை, ஒன்றே உருவான ஏக இறைவனின் இறுதி அரவணைப்பாக இருக்கும்.**

**இதன் பொருள் என்னவெனில், கடவுளை நேசிப்பதற்கு, ஒருவர் அவரை தன் இதயத்துள் வைத்திருக்க வேண்டும், ஒருபோதும் அவரை விட்டு விலகி இருக்கக்கூடாது. அனைத்து கடமைகளில் ஈடுபடும்போதும், அனைத்து செயல்களைச் செய்யும்போதும், அனைத்து எண்ணங்களும் மனதில் எழும்போதும், அனைத்து வார்த்தைகளை பேசும்போதும், அனைவருக்கும் அனைத்திற்கும் பின்புலமாக அவரை பாவித்துக்கொண்டு, அவரை நாம் எப்பொழுதும் நினைவுகூர வேண்டும். இதன் அர்த்தம்**

**என்னவெனில், ஒவ்வொரு சிறிய விஷயத்திலும், நல்லது அல்லது தீயது எதுவாயினும், நாம் அவரை நினைவில் கொள்ள வேண்டும், பின்னர் அனைத்து பொறுப்பும் அவரையே சார்ந்திருக்கும்.**

பாபா அன்று காலை ஔரையிலிருந்து பதினைந்து மைல் தொலைவில் அமைந்த இச்சுவரா (ICHHUARA) கிராமத்திற்குச் செல்லவிருந்தார். இந்தத் தொலைதூர இடத்திற்கு இதுவரை கார், பேருந்து அல்லது சரக்கு வாகனம் எதுவும் சென்றதில்லை, ஏனெனில் அங்குச் செல்ல ஒரு குறுகிய மண் சாலை மட்டுமே இருந்தது. அந்தச் சாலை பேட்வா நதியால் (BETWA RIVER) இரண்டாகப் பிரிந்து, செப்பனிடப்படாததால், சமீபத்திய மழையின் காரணமாக, அது பயணிக்க முடியாததாகிவிட்டது. இருந்தபோதிலும், படைப்பின் இறைவன் சற்று சௌகரியமாக பயணம் செய்ய வேண்டும் என்பதில் உள்ளூர் பக்தர்கள் உறுதியாக இருந்து, அவர் வருவதற்கு சில வாரங்களுக்கு முன்னர், எட்டு மைல் தூர சாலையை விரிவுபடுத்தவும், மேடு பள்ளங்களையும், கரடுமுரடான திட்டுகளையும் மண்ணால் நிரப்பி, பாபாவின் கார் அதன் மேல் பயணிக்கும் வகையில் சீரமைக்கவும் தீவிரமாக உழைத்தனர். அவர்களின் அன்பின் வெளிப்பாட்டைக் கண்டு பாபாவின் மனம் நிரம்பி வழிய, அவர் அந்த கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

இருப்பினும், கேஷவ் ஒரு காரை ஏற்பாடு செய்யத் தவறிவிட்டதால் பாபா, ஆண் மண்டலியுடன் பேருந்து ஒன்றில் இச்சுவராவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஔரை கிராமத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் அமைந்த பாலத்தைக் கடந்ததும், கால்வாய் வழியாகச் செல்லவிருந்த பேருந்து இடது பக்கம் திரும்பிய போது, அதன் இடது சக்கரம் எதையோ தாக்கி, திடீரென நின்றது.

ஓட்டுநர் அதை மீண்டும் இயக்க முயன்றார். வலது பக்கத்தில் அமர்ந்திருந்த கிஷன் ஸிங், தற்செயலாக ஜன்னலுக்கு வெளியே சாய்ந்து பார்த்துவிட்டு, உடனடியாக ஓட்டுநரிடம் பேருந்தை நிறுத்தும்படி அவசரமாகக் கூக்குரலிட்டார். ஓட்டுநர் இறங்கிப் பார்த்தபோது, பேருந்தின் வலது சக்கரம், சாலையிலிருந்து அங்குல தூரத்தில் இருந்த ஆழமான கால்வாயில் விழும் நிலையில் இருந்தது. பாபா உட்பட அனைவரும் பேருந்திலிருந்து, வெளியேறினர், அவர்கள் மயிரிழையில் தப்பியதைப் பார்த்து பாபா புன்முறுவல் செய்தார். பேருந்து, சற்று முன்னோக்கி சென்றிருந்தால் நிச்சயமாகப் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும். பாபாவின் உள்ளளவிலான உதவிக்கு நன்றி செலுத்தும் வகையில், பேருந்தில் சென்ற ஹமிர்பூர் சேவகர்கள் ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்று முழங்கினர். இது பாபா மீதான அவர்களின் நம்பிக்கையை மேலும் பலப்படுத்தியது.

முழுக் குழுவும் படகில் பேட்வா நதியைக் கடந்து சென்று, பின்னர் உள் பகுதிக்குள் பயணிக்க, அவர்கள் மாட்டு வண்டிகளில் சவாரி செய்ய வேண்டியிருந்தது. கிராம மக்கள் பாபாவை வரவேற்க ஒரு மைல் தூரம்

முன்னால் வந்து, 'ஹரி பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா, ஹரி ஹரி!' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். நதியைக் கடக்கும்போது, பாபா தனது கைவிரல்களையும் கால்களையும் தண்ணீரில் நனைத்த வண்ணம் இவ்வாறு குறிப்பிட்டார்: '**பிரபஞ்சத்தின் இறைவன் தமக்கு நெருக்கமானவர்கள் மற்றும் அன்பர்களுடன் இங்கே இணைந்திருக்கும் இவ்வேளையில், அலஹாபாத்தில் மக்கள் திரள் திரளாக கூடியிருக்கின்றனர்**.'

அப்போது, பாபா கூறிய வார்த்தைகளின் முக்கியத்துவம் எவருக்கும் புலப்படவில்லை. அன்றைய தினம் அலஹாபாத்தில் நடந்து கொண்டிருந்த கும்பமேளாவில், ஒரு மாபெரும் விபத்து நிகழ்ந்தது. இது, முக்கிய நீராடும் நாளாக இருந்ததால், கங்கை, யமுனை நதிகள் சங்கமிக்கும் இடத்தில் ஏறக்குறைய இருபது லட்சம் மக்கள் நீராட ஒன்றுதிரண்டனர். காலை 9:00 மணியளவில், சாதுக்கள் மற்றும் புனித மனிதர்களின் ஊர்வலத்தைக் காண, பெருந்திரளாகக் கூடியிருந்த மக்களிடையே பீதியும், நெரிசலும் ஏற்பட்டது; ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்தனர், சுமார் 800 பேர் உயிரிழந்தனர் அல்லது நீரில் மூழ்கினர். பாபா பயணம் செய்த பேருந்து மர்மமான முறையில் நின்ற அதே நேரத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவந்தது.

பாபா, மாட்டு வண்டியிலிருந்து இறங்கிய வேளையில், பிரபு தயாள் நிகம் (PRABHU DAYAL NIGAM), சதுர்புஜ் லம்பர்தார் (CHATURBUJ LUMBERDAR) இருவரும் அவருக்கு மாலை அணிவித்து, 30 முதல் 40 மாட்டு வண்டிகள் ஊர்வலமாகச் செல்ல, பாபா, இச்சுவரா கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். வெயிலிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக மாட்டுவண்டியின் மேலே துணியால் விதானம் ஒன்று அமைக்கப்பட்டது. அனைவரும் அன்று காலை 10:30 மணியளவில் கிராமத்தை வந்தடைந்தனர். தொலைதூரத்தில் அமைந்த ஒவ்வொரு வீடும், வீதியும் பாபாவின் வருகையால் புனிதப்படுத்தப்பட்டது. கிராம மக்கள் பாபாவின் வருகைக்கு உகந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மண்டலி மற்றும் பாபாவுடன் பயணம் செய்தவர்கள் கிராமப் பள்ளிக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டனர், பாபா ஒரு தனி வீட்டில் தங்கியிருந்தார். எரச், சிது, சகன், மெஹர்ஜி ஆகியோர் அவருடன் இருந்தனர், மேலும் பாபாவிற்கு எந்த இடையூறும் ஏற்படாதவாறு ஜராக்கர் (JARAKHAR) கிராமத்தின் குஞ்ச் பிஹாரி (KUNJ BEHARI) சற்று தூரத்தில் காவல் புரிந்தார்.

ஹமிர்பூர் மக்களின் அன்பை விவரிப்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. பெரும்பாலும் கல்வி அறிவற்ற இந்த ஏழை மக்களின் இதயங்கள் பேசிக்கொண்டிருந்தன, அவர்கள், இதயத்தின் மொழி வாயிலாக மெஹர் பாபாவை அடையாளம் கண்டுகொண்டனர். அந்த நேரத்தில் பாபாவுடன் இருக்கும் பாக்கியம் பெற்றவர்கள், அவரது அன்பில் ஆழ்ந்து போயினர். எங்கும் அன்பு ஒன்றுதான் வியாபித்திருந்தது! விழிப்புணர்வின் நெருப்பு, ஏற்கனவே குறிப்பிட்டபடி, பல மாதங்களுக்கு முன்பே பரவவிடப்பட்டது. பாபாவின் பிரசன்னத்தின் காற்று, இப்போது தீப்பொறிகளைக் காட்டுத்தீயாக மாற்றியது.

பாபாவை வரவேற்க, இந்த மண்ணும், அதன் மக்களும் திறந்த மனதுடன் தயாராக இருந்தனர், மெஹர் பாபாவைத் தவிர, வேறு எதுவும் உரையாடலில் தென்படவில்லை. இச்சுவரா கிராமவாசிகள் - ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்து வயதினரும் - அற்புதமான மகிழ்ச்சியில் தவழ்ந்தனர். காலம் இதை, பல வருடங்களாக இருள் சூழ்ந்த அவர்களின் வாழ்வில் சூரியன் உதித்ததைப் போல பார்த்தது!

**"இன்று உங்கள் மத்தியில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்"** என்று மாலை 5:15 மணிக்கு பாபா, அவர்களிடம் கூறினார். **"என்னை உளமார நேசியுங்கள், நீங்கள் எப்பொழுதும் என்னை உங்களுடன், உங்களில் ஒருவனாகக் காண்பீர்கள், ஏனெனில் நான் எப்பொழுதும் உங்கள் அனைவரிலும் வாழ்கிறேன்."**

அன்று மாலை, பாபா இச்சுவரா கிராமத்திற்கு அருகாமையில் அமைந்த காட்டின் ஒரு பகுதிக்கு, சிறிது நேரம் தனியாக நடந்து சென்றார். அதன் பின்னர், அன்றிரவு, பாபா, அவரது சிறப்பு ஆன்மீக உட்பணிக்காக, தமது மண்டலி மட்டுமல்ல, இச்சுவரா கிராமத்து அன்பர்கள் அனைவரும், முழு அமைதி காக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார். பாபாவைத் திருப்திப்படுத்தும் விதத்தில் உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

மறுநாள் அதிகாலை, 4:00 மணியளவில், பாபா, பேட்வா நதியின் நீரில் நீராடி அதைப் புனிதப்படுத்தினார். (சிறிது தண்ணீரை அருந்தவும் செய்தார்.) பாபா பிப்ரவரி 4ஆம் நாள் இச்சுவரா கிராமத்தில் தரிசனம் வழங்கினார், மேலும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பக்கத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்ததால் ஆயிரக்கணக்கானோர் அவருடைய பிரசாதத்தைப் பெற முடிந்தது. சதுர்புஜ், பகவான்தாஸ் ராத்தோர் (BHAGWANDAS RATHOR) மற்றும் ராம்ஸய்யா ஸிங் பாகேல் (RAMSAIAH SINGH BAGHEL) ஆகியோரின் இல்லங்களுக்கு பாபா விஜயம் செய்தார்.

மஹாபலேஷ்வரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா பொதுமக்களுக்கு 12 செய்திகளை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், அவை இந்தி மற்றும் தெலுங்கில் மொழிபெயர்க்கப்படுவதற்காக ஹமிர்பூர் மற்றும் ஆந்திராவிற்கு முன்னதாகவே அனுப்பப்பட்டன. 'கலப்படமில்லா அன்பு' (LOVE UNADULTRATED) என்ற கீழ்வரும் செய்தியை எடுத்துரைத்தபோது, **"இந்த யுகத்தின் குழப்பம், தூய அன்பின் நெருப்பால் கரைந்துவிடும். இது எனது முக்கிய செய்தி!"** என்று வெளிப்படுத்தினார்.

**அன்பு என்பது பொதுவாகவும், பரவலாகவும் புரிந்து கொள்ளப்படுவது போல, சுயநல சிந்தனைகள் மற்றும் உள்நோக்கங்களுடனான ஒரு பிணைப்பு.**

**தூய்மையான, உண்மையான, கலப்படமற்ற அன்பில், காமத்தின் சாயல் இருக்காது. பாலியல் மோகம், அதிகார மோகம், பேர், புகழ் மீதான மோகம், சுய சௌரியங்களுக்கான மோகம் ஆகியவை அன்பின் தூய்மையைக் கெடுத்துவிடும்.**

**தூய, உண்மையான அன்பும் அதன் வெவ்வேறு நிலைகளைக் கொண்டுள்ளது, அவற்றில் மிக உயர்ந்தது அவரை நேசிப்பதற்கான கடவுளின் அன்பளிப்பாக வருவது. ஒருவன் கடவுளை உண்மையாக நேசிக்கும் போது, அவருடன் ஒன்றிணைய ஏங்குகிறான்; இந்த உன்னதமான ஏக்கம், தன்னையும், தனது முழு ஆஸ்தியையும் அன்பிற்குரியவருக்கு விட்டுக்கொடுக்கும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டது.**

**ஒரு பரிபூரண குருநாதரை ஒருவர் நேசிக்கும்போது, அவருக்கு சேவை செய்யவும், அவருடைய விருப்பத்திற்கு சரணடையவும், அவருக்கு முழு மனதுடன் கீழ்ப்படியவும் ஆசைப்படுகிறார். எனவே, தூய்மையான, உண்மையான அன்பு அனைத்தையும் கொடுக்க ஏங்குகிறது, பதிலுக்கு எதையும் கேட்பதில்லை.**

**ஒருவர் மனித இனத்தை உண்மையாக நேசித்தாலும், அதன் மகிழ்ச்சிக்காக தனது அனைத்தையும் கொடுக்க ஆசைப்படுகிறார். ஒருவர் தனது நாட்டை உண்மையாக நேசிக்கும் போது, எந்த வெகுமதியையும் எதிர்பாராமல், நேசித்து, சேவை செய்த எண்ணமும் இல்லாமல் தன் உயிரையே தியாகம் செய்ய வேண்டும் என்ற ஏக்கத்தைக் கொண்டிருக்கிறார். ஒருவர் தனது நண்பர்களை உண்மையாக நேசிக்கும் போது, அவர்களைக் குறைந்த அளவிலேனும் நன்றிக்கடன் பட்டவர்களாக உணரச் செய்யாமல் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஏக்கம் இருக்கும். ஒருவர் தன் எதிரிகளை உண்மையாக நேசிக்கும் போது, அவர்களை நண்பர்களாக பாவித்துக்கொள்ள ஆசைப்படுகிறார். ஒருவரின் பெற்றோர் அல்லது குடும்பத்தின் மீதுள்ள உண்மையான அன்பு, ஒருவரை, தனக்காக இல்லை என்றாலும் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் வழங்க ஏங்குகிறது.**

**தூய்மையான, உண்மையான அன்பின் பல்வேறு நிலைகளுடன் தொடர்புடைய அன்பின் வெவ்வேறு செயல்களில், தனது சுயத்தைப் பற்றிய எண்ணம் எப்பொழுதும் இருப்பதில்லை; தன்னைப் பற்றிய சிறிதளவு எண்ணம் இருந்தால் கூட, அன்பு கலப்படமானதாக மாறிவிடும்.**

இச்சுவராவில் பல இலந்தை மரங்கள் இருந்தன - செர்ரி பழங்களைப் போன்ற புளிப்பு சுவை மிக்க இதற்கு விற்பனை மதிப்பு இல்லை. குறிப்பாக இந்தப் பழங்களை விரும்பிய குஸ்தாஜி, ஒரு மரத்திலிருந்து சில இலந்தைப் பழங்களைப் பறிக்கத் தொடங்கினார். அவரைப் பார்த்ததும், பாபாவுடன் வந்திருந்த பிற அன்பர்களும் அவற்றைக் கையகப்படுத்த முன்வந்தனர். பாபா அவர்களை சற்று தூரத்திலிருந்து கவனித்து, அழைத்து, கடுமையாகக் கண்டித்ததோடு நிலத்தின் உரிமையாளரை உடனடியாக வரவழைத்து, பாபா அவரிடம், **"தயவுசெய்து மன்னித்து விடுங்கள். எனது குழு உறுப்பினர்கள் உங்கள் அனுமதியின்றி மரங்களிலிருந்து பழங்களைப் பறித்துள்ளனர். அவர்கள் செய்த இந்தத் தவறுக்காக, நான் உங்களிடம் மன்னிப்புக்**

**கோருகிறேன். அவர்கள் என்னுடன் வந்தவர்கள் ஆகையால், அவர்களுக்கு நான் பொறுப்பு**" என்று கூறினார்.

"என்னுடைய அனுமதி என்ற கேள்விக்கு இடமில்லை, அவர்கள் பழத்தை ருசித்ததற்காக நான் கௌரவிக்கப்பட்டேன்" என்று அந்த நபர் பதிலளித்தார். ஆனால், பாபா பிடிவாதமாக, "**உங்களுக்கு அந்த மரங்கள் சொந்தம், அவை அதிக மதிப்பைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், முதலில் உங்கள் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று நேர்மை கோருகிறது. தவறு நிகழ்ந்துள்ளது, எனவே எங்களை மன்னிக்கவும்.**" பாபா, அந்த மனிதரின் கால்களில் தலை வைத்து மன்னிப்புக் கோரியபோது அவர் திகைத்துப் போனார்.

இதற்கிடையில், கயா பிரசாத் கரே, அவரது மகன் ஆதர்ஷ் இருவரும் கார் மற்றும் சரக்கு வாகனத்துடன் இச்சுவராவிற்கு வரவிருந்தவர்கள், குறிப்பிட்ட நேரத்தில் வராததால், பாபா ஒரு மாட்டு வண்டியில் ஐந்து மைல் தொலைவில் அமைந்த போக்கர் (BOKHAR) கிராமத்திற்குக் குழுவுடன் புறப்பட்டார். கிராமவாசிகள் கரடுமுரடான மண் சாலையை அமைத்திருந்ததால், சவாரி மேலும் கடினமாக இருந்தது. பாபாவும் மண்டலியும் மாட்டு வண்டிகளில் முன்னும் பின்னுமாகத் தூக்கி எறியப்பட்டனர், சாலையில் இருந்த மேடு பள்ளங்களில் ஏதேனும் ஒரு சக்கரம் ஏறி இறங்கிய வேளையில் மேலும் கீழுமாகத் தள்ளப்பட்டனர். பழுதுபார்க்கப்பட்ட அனைத்து சாலைகளும் கடும் மழையால் அடித்துச் செல்லப்பட்டன. அன்று மதியம் 2:30 மணிக்கு அனைவரும் போக்கர் கிராமத்தை வந்தடைந்தபோது பாபா களைப்பாக இருந்தபோதிலும், கிராமத்து மக்களுக்குக் கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**உங்கள் மத்தியில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னையும் உங்களில் ஒருவனாக நினைத்து நேசிக்க முயற்சி செய்யுங்கள். ஆனால் அதை நேர்மையாகச் செய்யுங்கள், ஏனெனில் கடவுள் எப்பொழுதும் நேர்மையை விரும்புகிறார். எனவே நீங்கள் என்னை நேசிப்பீர்களேயானால், உங்கள் இதயங்களிலும், இல்லங்களிலும் நீங்கள் என்னைக் காண்பீர்கள். நான் உங்களுக்கு எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

சிறிது தூரம் மாட்டு வண்டிகளில் அசௌகரியமான பயணத்தைத் தொடர்ந்த பாபா, 3:30 மணிக்கு ஜராக்கரிலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் ஊர்வலத்தை நிறுத்தினார். மண்டலி மற்றும் ஹமிர்பூர் சேவகர்களை அழைத்து, "**ஆரம்பத்திலிருந்தே என்னை ஒரு மென்மையான மலர் போல நடத்த வேண்டும் என்று எச்சரித்து வந்தேன். அப்படிச் செய்தீர்களா? எனக்காக ஏதாவது யோசனை செய்து, என் மீது அக்கறை காட்டுகிறீர்களா? இந்தப் பயணத்தை என்னால் தாங்க முடியவில்லை! பேருந்தும், காரும் வருமா வராதா? நான் இப்போது வேறு இடங்களுக்குச் செல்லாமல், இங்கிருந்து திரும்பப் போகிறேன்**" என்று கூறினார்.

பாபா அந்தக் குழுவைக் கண்டித்துக் கொண்டிருந்த வேளையில், கயா பிரசாத், ஆதர்ஷ் இருவரும் எதிர் திசையிலிருந்து வந்துகொண்டிருந்த காரிலும்

பேருந்திலும் அனைவரும் ஏறிச் சென்றனர். பாபா அவர்களைக் கடிந்துகொண்டார். ஆதர்ஷ் கண்களில் நீர் ததும்பியது, அவர்கள் அதிகாலையில் புறப்பட்டுவிட்டதாகவும் ஆனால் சாலையின் ஒரு பாகம் வெள்ளத்தில் மூழ்கியதால் தாமதமாகிவிட்டதாகவும் விளக்கினார். பாபா அவரைத் தழுவ அனைவரும் வாகனங்களில் குவிந்தனர்.

பாபாவும், குழுவும் ஜராக்கர் கிராமத்தை வந்தடைந்தபோது, அங்கு அமைக்கப்பட்ட பெரிய விதானத்தின் கீழ், திரள் திரளாக மக்கள் கூடி, பாபாவின் வருகைக்காக மணிக்கணக்கில் காத்திருந்தனர். ராய்ஸாஹேப் ராமஷங்கர் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார், மேலும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' வழக்கம் போல காற்றை நிரப்பியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவின் அனல் பறக்கும் சுதந்தர வாழ்வின் போது, ஜராக்கரில் வாழ்ந்த மக்களின் இதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன, இந்த இரண்டாவது தருணத்தில், அவர்கள் குதூகலத்தால் முன்பை விட பிரகாசமாக ஜொலித்தனர்.

பாபா வந்த அடுத்த கணமே, தரிசனம் ஆரம்பமானது, ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பிரசாதம் வழங்கினார். ஒட்டுமொத்த மாவட்டமே அவர் அன்பில் வெறித்தனமாக மாறிவிட்டது போலத் தோன்றியது. மேடையிலிருந்து அவரது புகழ் பாடல்கள் தொடர்ந்து பாடப்பட்டன. அது ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இறை மதுபானத்தை மீண்டும் மீண்டும் அருந்தி அனைவரும் தாகத்தைத் தணித்துக் கொண்டிருந்தனர். 'தெய்வீக அன்பு' (DIVINE LOVE) என்ற தலைப்பில் இந்தச் செய்தி வழங்கப்பட்டபோது அவர்களின் போதை மேலும் அதிகரித்தது:

**'தெய்வீக அன்பு' எனும் எனது செய்தி, எப்பொழுதும் இருந்து வருவது போல், என்றென்றும் இருக்கும். ஒருவன் கடவுளை, முழு மனதுடன் நேசிக்கும் போது, அவன் இறுதியில் அன்பிற்குரியவரில் தன்னை இழந்து கடவுளின் நித்திய வாழ்வில் நுழைகிறான்.**

**ஒரு மரத்தைப் போலவே, இந்த அன்பிற்கும் பல கிளைகள் உள்ளன: இதயபூர்வமான பக்தி, முழுமையான அஹிம்சை, முழுநிறைவான தன்னலமற்ற சேவை, சுய மறுப்பு, சுய தியாகம், சுய துறப்பு, உண்மை மற்றும் சுயமாக நிர்மூலமாதல் - இதுவே கிளைகள்.**

**இந்த அன்பில், துறவிகள், சாதுக்கள் மற்றும் இறைவனை நாடுபவர்கள் அறிந்த அனைத்து யோகாக்களும் அடங்கியுள்ளன. இந்த அன்பின் மிக உயர்ந்த அம்சம் என்னவெனில், அன்பையே மிஞ்சும் விதத்தில், அன்பிற்குரியவரின் விருப்பத்திற்கு முழுமையான சரணடைதல், அதாவது, எந்த விலை கொடுத்தேனும் அவரது விருப்பத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிதல்.**

அன்று மாலை 5:30 மணியளவில், பாபா, ஜராக்கர் கிராமத்தில் அவரது பெயரில் அமைந்த இள நிலை உயர்நிலைப் பள்ளி உறைவிடத்திற்குச் சென்றார். 1952ஆம் ஆண்டில் அவர் வந்தபோது, மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து எழுப்பிய இந்த விடுதியைக் கட்டுவதற்கான முதல் செங்கல்லை ஆசிர்வதித்தார்.

அதன் திறப்பு விழாவை நிகழ்த்தும் விதத்தில் நுழைவாயிலின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பூக்களின் சரத்தை வெட்டி, பாபா, அறைக்குள் நுழைந்து அமர்ந்தார்; மண்டலிக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

பாபா, மாணவர்களிடம் இவ்வாறு கூறினார்: **"ஆண்கள் பள்ளி மற்றும் விடுதி பற்றி என் அன்பான ஸ்ரீபத் ஸஹாய் கூறியதைக் கேட்டு இன்று நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; மேலும் இங்கு, மாணவர்கள் பயிலும் சாதாரண கல்வியுடன், ஒரே உண்மைப்பொருளான இறைவனை நேசிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதற்காக மாணவர்களுக்கும், உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்."**

பாபா, அன்றிரவு (1954 பிப்ரவரி 4ஆம் நாள்) ஜராக்கரிலிருந்து புறப்பட்டு தக்வான் (DHAGWAN) கிராமத்தைச் சென்றடைந்தார். மாட்டு வண்டிகளுக்காக உருவாக்கப்பட்ட கரடுமுரடான பாதை, வயல்வெளிகள் வழியாகச் சென்றது; பல வளைவு நெளிவுகள் நிறைந்ததாக இருந்தது, எனவே, பாபாவும் அவருடைய குழுவும் வழி தவறிவிடக்கூடாது என்பதற்காக, 'இறை போதையில் மயங்கிய நிலையில்' இருந்த கிராமவாசிகள், வழியில் விளக்குகளை ஏந்திய வண்ணம் அவர்களை அங்கு வழிநடத்தினர். பாபா, தக்வானை சென்றடைந்தும், காதுகளைச் செவிடாக்கும் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார். விஷ்ணு ஷர்மாவும், இதர கிராம மக்களும் பாபாவிற்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். 'ஸாக்கி' (SAKI) எனும் இறைத் தோழனுக்கும், இறை போதையில் இருக்கும் கிராம வாசிகளுக்கும் இடையேயான நாடகம், கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அற்புதம், அதை அனுபவிக்கத்தான் முடியும். தெய்வீக மதுபானத்தின் மொழி, வார்த்தைகள் இல்லாத மொழி, அது என்ன பேசினாலும் அனலாக மாறும் தன்மையுடையது. மதுபான சத்திரத்திலிருந்து, அன்பிற்குரியவர் பிரசாதமாக தெய்வீக மது கோப்பைகளை விநியோகித்தார். அவர் வாழைப்பழங்கள், இதர பழங்கள் மற்றும் இனிப்புகளை வழங்குவதற்கு பதிலாக, இறை வாழ்வை உறைவிடமாக்கும் திறன் படைத்த மதுபானத்தை வழங்கினார்!" என்று காலம் பறைசாற்றியது.

பாபா கிராம மக்களிடம், **"பிரசாதத்தை அன்புடன் பெற்றுக் கொள்ளுங்கள், அன்புடன் உண்ணுங்கள், உண்ணும் போது என்னை நினைவில் கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் இதயங்களில் அன்பு விதையாக விதைக்கப்படும்"** என்று வலியுறுத்தினார்.

பாபா தரிசன நிகழ்ச்சியை இரண்டே மணி நேரத்தில் நிறைவு செய்து, ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தனது ஸ்பரிசத்தை வழங்கினார். பின்னர் அவர் அங்கிருந்து நவ்ரங்கா (NAURANGA) கிராமத்திற்குச் சென்றார். ஒவ்வோர் இடத்திலும் அங்கு வாழும் பெண்மணிகள், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர். ஆனால் பாபா தக்வான் கிராமத்தில் மிகவும் மும்முரமாக இருந்ததால், காரில்

அமர்ந்து, உள்ளூர் சேவகர்கள் பலருடன் உரையாடிக் கொண்டிருந்த போது மட்டுமே அவரை வழிபட வாய்ப்பு கிடைத்தது.

1952ஆம் ஆண்டில் பாபாவை எதிர்த்தவர்கள், அவர் கிராமத்திற்குள் நுழைவதைத் தடுக்க கால்வாயை உடைத்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திய இடம் நவ்ரங்கா கிராமம்; அப்போது பாபா, ராம்பிரசாத்தின் வயலில் மரத்தடி ஒன்றில் அமர்ந்து தரிசனம் வழங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த முறை முழு கிராமமும் மனம் திருந்தி, அவரை வரவேற்க கால் மைல் தூரம் முன்னால் ஒன்றுதிரண்டது. இசை வாத்தியங்களுடன் மத்தளங்கள் முழங்கின. அந்த அற்புத காட்சியைப் பார்த்து மகிழ்ச்சியுடன் நின்றுகொண்டிருந்த பாபு ராம்பிரசாத்தின் உதடுகளை தெய்வீக மதுபானம் மூடி வைத்தது. ஒட்டுமொத்தக் கூட்டமும் மெஹர் பாபாவிற்கு ஜெய் என்று முழக்கமிட்டது. மேலும் பாபா ஒரு நீண்ட நெடிய ஊர்வலத்தின் தலைமையில் நவ்ரங்கா கிராமத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

“பண்டைய எதிர்ப்பு மாறி விழிப்புணர்வு உருவானது,” என்று காலம் கண்டுகொண்டது. “ஒவ்வொரு பாதையிலும் இப்போது தெய்வீக மதுபானம் வற்றாத நதிபோலப் பெருக்கெடுத்தது; ஒட்டுமொத்த மக்களும் இறை கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தனர். மெஹர் பாபாவின் அன்பின் பிரகாசமான கதிரொளிகள் மக்களை சூழ்ந்துகொண்டன; அவர்களின் வாழ்க்கை என்றென்றும் அவரது காலடியில் இருந்தது. அவதார புருஷரின் தெய்வீக நாடகத்தில், விமர்சனம், சந்தேகம் மற்றும் வெளிப்படையான விரோதம் உருவாயின. அறியாமையும் இருளும் முதலில் இந்த இடத்தை சூழ்ந்துகொண்டு அவரது ஒளியை மறைத்துவிட்டன, ஆனால், இப்பொழுது இறை ஒளி சிதறி, நவ்ரங்காவைப் பிரகாசிக்கச் செய்தது!”

பாபு ராம்பிரசாத் என்பவருக்கு நர்சிங்தாஸ் (NARSINGDAS) என்ற சகோதரர், அவர், பாபா மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தார். நர்சிங்தாஸ் வாழ்க்கையைத் துறந்த ஒரு துறவியாக வாழ்ந்து வந்தார். அவர் ஒன்பது மாதங்கள் அயராது பணிபுரிந்து, கிணற்றின் அருகே நிலத்தடி அறை ஒன்றை அமைத்து, கிணற்றின் சுவரில் ஒரு ஜன்னலைக் கட்டினார். அறைக்குக் கீழே செல்லும் படிகள் இருளால் மூடிருந்தன, மேலும் இந்த நிலத்தடி அறையில் நர்சிங்தாஸ், மெஹர் பாபாவின் தெய்வீகத்தை நினைந்து, தியானத்தில் ஆழ்ந்தார். பிப்ரவரி 5ஆம் நாள், பாபா, அந்த சிறிய அறைக்குள் இறங்கிய வேளையில், காடேக்கர் ஆரத்தியை நிகழ்த்தினார்.

மேலே வரும் வேளையில் விஷ்ணு ஷர்மா கீழே விழுந்ததில், காலில் பலத்த காயம் ஏற்பட்டது. பெண்டு அவரது காலில் சில மருந்துகளைத் தடவி, கட்டிட்டார்.

அன்றைய தினம் நவ்ரங்காவில் மாபெரும் தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. முழு கிராமமும் தெய்வீக மதுபானத்தை மனமார அருந்தியதைப் போலவே, சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த கிராமவாசிகளும் அதில் பங்கெடுத்தனர். ஹமிர்பூர் மாவட்டத்தில், எங்கு தரிசன நிகழ்ச்சி நடந்தாலும்,

ஆயிரக்கணக்கில் மக்கள் ஒன்றுதிரண்டனர், எல்லா திசைகளிலும், மைல்கள் தூரத்திற்குப் பரந்து விரிந்த மனிதக் கடலின் காட்சியாகவே தென்பட்டது. இது வெறும் பழங்களும் இனிப்புகளும் பிரசாதமாக வழங்கும் நிகழ்ச்சி அல்ல. இந்த சந்தர்ப்பங்கள், இறை மனிதனிடம் மக்களை விழிப்படையச் செய்தன; அவர், மக்களின் மாசு படிந்த மனப்படிவங்களை அவரது அருட்பெருங் கடலில் கலக்கச் செய்தார். இத்தகைய தரிசன நிகழ்ச்சிகள் எப்போதுமே அவதார புருஷர் அல்லது பரிபூரண குருநாதர், தனிமனிதனின் மனப்படிவங்களைத் தாமே எடுத்துக் கொள்ளும் வாய்ப்பாக அமைந்தன. மெஹர் பாபா, தனது தரிசனத்தை மக்களுக்கு வழங்குவதன் மூலம், அவர்களின் வாழ்நாள் துன்பங்களைத் தன்மீது சுமந்து கொண்டிருந்தார். அதன் முக்கியத்துவத்தை அல்லது இரக்கத்தன்மையை எவரால் புரிந்து கொள்ள முடியும்?

போலி துறவிகளும், யோகிகளும் பொதுமக்களுக்கு தரிசனம் வழங்குகின்றனர். அவர்களும் இறைநிலையை அடைந்த குருநாதர்களைப் போலவே வெளியளவில் பாசாங்கு செய்து, பிரசாதம் மற்றும் ஆசீர்வாதங்களை அள்ளி வழங்கினாலும், தெய்வீக மதுபானத்தை அவர்களால் வழங்க முடியாது! மானிடனின் மனப்படிவங்களின் சுமையை அவர்களால் தம்மீது ஏற்றுக் கொள்ளவோ, எவரையும் கருணைக்கடலில் ஒன்றிணையவோ செய்யமுடியாது. மெஹர் பாபாவைப் பொறுத்தவரை, தரிசனம் என்பது அவரை அணுகும் ஒவ்வொருவரின் நல்ல, தீய மனப்படிவங்களின் சுமையைத் தம்மீது தாங்கிக்கொள்வதற்கான வேதனை மிகுந்த வேலையைக் குறிக்கிறது. அந்தத் தருணங்களில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர், மேலும், பாபா அவர்களின் சுமையைத் தன்மீது தாங்கிக்கொள்வதன் மூலம், அளவிலா துன்பத்தைத் அனுபவித்தாலும், அவர்களின் மகிழ்ச்சியில் பூரண பங்கெடுத்தார். அவதார புருஷர் ஒருவரே அவரது சிறப்புப் பொறுப்பாக எப்பொழுதும் பிரபஞ்சத்தின் சுமையைச் சுமக்கிறார். இக்காரணத்திற்காக, அவதார புருஷரிடம் சரணடைந்து, அவரது பாதங்களில் என்றென்றும் தலை வணங்குபவர்கள் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

அன்றைய தினம், ஆயிரக்கணக்கானோர் பாபாவை தரிசனம் செய்தனர். முதல்முறையாக, பெண்களுக்கு பதிலாக ஆண்கள் பாபாவின் ஆரத்தியை, மேள தாளத்துடன் நிகழ்த்தினர். பிற்பகல் 2:40 மணிக்கு, பாபா, தன்னிச்சையாக தனது எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த இந்தச் செய்தியை எரச் வாசித்தார்:

**நான் மௌனமாக இருப்பது போலத் தோன்றினாலும், உங்கள் அனைவர் மூலமாகவும் பேசுகிறேன். நான் எப்பொழுதும் மௌனமாக இருக்கிறேன், எப்பொழுதும் பேசுகிறேன், ஆனால் விரைவில் நான் இந்த வெளியளவிலான மௌனத்தைக் கலைக்கும் நேரம் நெருங்கிவிட்டது, என்னை நேசிப்பவர்கள் என் உண்மையான சுய ரூபத்தைக் காண்பார்கள்.**

**எனவே, நான் வழங்கும் அன்பின் பிரசாதத்தை, அன்புடன் ஏற்றுக்கொண்டு, அன்புடன் உண்ணுங்கள், அதில் அன்பின் விதை புதைந்திருக்கும்.**

அதற்குப் பிறகு, பாபா பல வீடுகளுக்குச் சென்றார். ஒவ்வொரு வீட்டிலும், அப்பகுதியின் சம்பிரதாய முறைப்படி, ஏழு பெண்மணிகள், தங்கள் தலையில் தண்ணீர் குடங்களின் மேல் எரியும் விளக்குகளை வைத்து, பாபாவை வரவேற்றனர்.

ஹீராலால் என்பவரின் இல்லத்தில் அமர்தான் (AMARDAN) என்ற கவாலி பாடகர் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். அங்கு நிலவிய சூழ்நிலை, அதீத அன்பால் நிறைந்திருந்தது, அங்கிருந்தவர்களில் பலர், தங்கள் வாழ்க்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கண்கலங்கி அழுதனர். பல இல்லங்களுக்கு விஜயம் செய்து, பின்பு, பாபா காரில் கிராமம் வழியாகச் சென்றார். சில பெண்மணிகள் தங்கள் கைகளில் ஆரத்தி தட்டுகளுடன் காத்திருந்தனர், அவர்கள் ஏமாற்றமடையாத வகையில், பாபா காரை நிறுத்தி, அதன் பின்னர், அவர் நடந்து சென்று, ஆரத்தி நிகழ்ச்சிக்கான வாய்ப்பை வழங்கினார். 'வாருங்கள், அவதார் மெஹர் பிரபு, வருகை தாருங்கள்!' என்ற கிராமவாசிகளின் எளிய அன்பான பல்லவியால் வானம் அதிர்ந்தது போலத் தோன்றியது.

அதே நாளில், 1954 பிப்ரவரி 5, பாபா, நவ்ரங்காவிலிருந்து மாலை 5:00 மணிக்கு ரத் (RATH) கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்ற வேளையில், நவ்ரங்கா கிராமவாசிகள் அவர் வெளியேறியதைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதனர். தெய்வீக மதுபானம் எவ்வளவு மகிமை வாய்ந்தது, எவ்வளவு விலைமதிப்பற்றது! பிறவிக்குப் பின் பிறவிகள் எடுத்து, துறவு மற்றும் கடுமையான தவங்கள் புரிந்தாலும், அதில் ஒரே ஒரு துளி மட்டுமே கிடைக்கும்! ஆனால் ஒவ்வொரு துளிக்குள்ளும் முழுக்கடலும் மறைந்துள்ளது!

கிராமம் கிராமமாக பயணம் செய்யும் வேளையில், சேவகர்கள் மற்றும் அமைப்பாளர்கள் மண்டலியுடன் பின்தொடர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டனர்; ஹமிர்பூரில், கேஷவ், புக்கார் மற்றும் பலர் தொடர்ந்து பாபாவுடன் பயணத்தில் பங்கெடுத்தனர். மாலையில் ரத் கிராமத்தை வந்தடைந்த பாபா மற்றும் குழுவினரை, கயா பிரசாத் கரே, கௌரி சங்கர் வைத்யா மற்றும் பலர் அன்புடன் வரவேற்றனர். பாபாவுடன் முழுக் குழுவும் ஒன்றாக ஒரு தர்மசாலாவில் தங்குவதற்கான ஏற்பாடுகளை, கரே செய்திருந்தாலும், இதை பாபா விரும்பவில்லை. தனியாக ஓரிடத்தில் அமைதியாக இரவுகளை கழிக்க விரும்புவதாக அவர் முன்பே குறிப்பிட்டிருந்தார். பாபாவின் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது என்ற குழப்பம் இரவு முழுவதும் தொடர்ந்தது. குழுவில் ஒருவராகப் பங்கெடுத்த பாவ் கல்சூரியின் மருமகன் வீரேந்திர சிங், கடுமையான வயிற்றுவலியால் அவதிப்பட்டு, இரவு முழுவதும் புலம்பி, முனகிக்கொண்டிருந்தது பாபாவை மேலும் தொந்தரவு செய்தது.

பாபா, மண்டலியை அழைத்து கடுமையாகக் கண்டித்தார்: "**இதுதான் நீங்கள் பூவைப் போல் என்னை கவனித்துக்கொள்ளும் முறையா? நான்**

**உங்களை அவ்வப்போது எச்சரித்தேன், ஆனால் நான் சொல்வதை நீங்கள் கண்டுகொள்ளாமல், கவனக்குறைவாக இருக்கிறீர்கள்.”**

பாபா, தொடர்ந்து கூறினார், “**இன்று நான் ஒரு விஷயத்தை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒவ்வொருவருக்கும் அவரவர் கடமை வழங்கப்பட்டுள்ளது, அனைத்தையும் கண்காணிப்பது பெண்டுவின் பொறுப்பு. எனவே நீங்கள் அனைவரும் அவருக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இங்கு பரவாயில்லை, ஆனால் இதே விஷயம் ஆந்திராவில் நடக்குமானால், அது பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும், நாற்பது பேர் என்னுடன் இருக்கும் வேளையில், எனது சுதந்திரமான இயல்புடன், தனிப்பட்ட உத்தரவுகளை நீங்கள் அனைவரும் கடைப்பிடிக்காமல், அதே நேரத்தில் பெண்டுவுடன் ஒத்துழைக்கவில்லை என்றால், அனைத்து விஷயங்களையும் நிர்வகிப்பதில் அவர் தடுமாறிப்போவார்.”**

அடுத்த நாள், கயா பிரசாத்தின் தவறுகளுக்காக பாபா கடிந்து கொண்டார், ஆனால் அவரிடம், “**புது வாழ்வின் போது நீங்கள் எனக்கு செய்த சேவையைக் கருத்தில் கொண்டு, நான் உங்களை மன்னிக்கிறேன்; இல்லையேல், நான் உங்களை ஒருபோதும் மன்னித்திருக்க மாட்டேன்!**” என்றார்.

மண்டலி மற்றும் ஹமிர்பூர் சேவகர்களை வெளியே ஒரு திறந்தவெளியில் வரிசையாக நிற்க வைக்குமாறு பாபா, குமாரிடம் கட்டளையிட்டார். பாபா தர்மசாலாவிலிருந்து வெளியே வந்து, ஒவ்வொருவரிடமும் வரிசை முறையில் எண்களைக் கூறுமாறு அறிவுறுத்தினார்: “நான் முட்டாள் எண் ஒன்று… நான் முட்டாள் எண் இரண்டு… நான் முட்டாள் எண் மூன்று, இப்படி, முட்டாள் எண் 80 வரை!” முடிவில், பாபா கேலி செய்தார், “**நேற்றிரவு நான் 80 முட்டாள்களுடன் தூங்க வேண்டியிருந்தது, அதனால் எனது நிலைமையை நீங்கள் கற்பனை செய்யலாம் - அது மோசமாக இருந்ததைத் தவிர வேறு எதுவாகவும் இருந்திருக்க முடியாது!**”

ஆனால் அவரது வசைபாடலுக்கு மத்தியில் அன்பும், சுவாரஸ்யமுமான நகைச்சுவையும் இருந்தது, ஏனெனில் ஆண்டுகள் கடந்து செல்லச் செல்ல, அவருடனான கடிதப் பரிமாற்றத்தில், அன்றைய தினம், வரிசையில் நின்றவர்கள் தங்கள் கடிதங்களில் “முட்டாள் எண் 5” அல்லது அவர்களின் எண்களைக் குறிப்பிட்டு கையெழுத்திடுவது வழக்கம்.

ஹர்ஜீவன் லால் கடந்த 6ஆம் நாள், ரத் வந்து பாபாவுடன் குழுவில் இணைந்தார். அன்று மதியம் 1:35 மணிக்கு, ‘பிரம்மானந்த் இடைநிலைக் கல்லூரி’யில் (BRAHMANAND INTER COLLEGE) மாணவர்கள் குழுவிற்கு பாபா தரிசனம் வழங்கி, கூறியதாவது: “**உங்கள் மத்தியில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், குறிப்பாக சுவாமிஜியை** (கல்லூரியின் நிறுவனர் சுவாமி பிரம்மானந்த்) **சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சுவாமிஜி உங்களுக்காக இதுவரை செய்ததும், இன்றும் செய்து வருவதும் தெய்வீக**

**அன்பின் ஓர் அம்சமே. எனது அன்பையும் ஆசிர்வாதத்தையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**"

சுவாமி பிரம்மானந்தாவை மேடையில் தன்னுடன் இணையுமாறு பாபா கேட்டுக் கொண்டார், ஆனால் அவர் தரையில் அமருவதையே விரும்பினார். சிறிது நேரத்தில், பாபாவும் மேடையை விட்டு வெளியேறி வராந்தாவின் படிக்கட்டில் அமர்ந்திருந்தார். பிரம்மானந்தா, பாபாவிடம் தேநீர் அருந்துமாறு கேட்டுக் கொண்டபோது பாபா கூறினார்: "**உங்கள் அனைவரையும் இங்கே பார்த்ததில், என் இதயம் நிறைந்துவிட்டதால், தேநீருக்கு என்ன தேவை?**" இருப்பினும், முதல்வரின் வேண்டுகோளின் பேரில், பாபாவும் மண்டலியும் தேநீர் மற்றும் சிற்றுண்டியில் பங்கெடுத்தனர். கல்லூரி பேராசிரியர்களில் ஒருவரை முதல்வர் பாபாவிடம் அறிமுகப்படுத்தியபோது, அவர் "**நானும் பேராசிரியர்களுடன் ஒன்றிணைந்து, அனைவரிலும் ஒருவனாக இருக்கிறேன்**" என்று சிலேடையாக எடுத்துரைத்தார்.

அன்று மதியம் ரத் கிராமத்தில் பொது தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. கீழ்வரும் இந்தச் செய்தி பிற்பகல் 3:05 மணிக்கு பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது.

**நான் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்து, உங்கள் நிலைக்கு வந்துள்ளேன். எனவே என்னை உங்களுடையவனாக எடுத்துக்கொள்ளும் வேளையில், இயற்கையாகவே, தானாகவே, நீங்கள் என்னுடையவனாக மாறிவிடுகிறீர்கள். நீங்கள் ஏழையாக இருந்தால், என்னை ஏழையாக எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செல்வந்தராக இருந்தால், என்னை அவ்வாறே எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் படிப்பறிவில்லாதவராக இருந்தால், என்னையும் படிக்காதவர் என்று எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கல்வி ஞானம் பெற்றவராக இருந்தால், என்னையும் அவ்வண்ணமே எடுத்துக் கொள்ளுங்கள். நான் உங்கள் நிலைக்கு வந்துவிட்டதால், அந்த நிலையில் நீங்கள் என்னை முழு மனதுடன் நேசிப்பீர்களேயானால், நீங்களும் என் உண்மையான உயர்ந்த நிலைக்கு வந்துவிடுகிறீர்கள், ஏனெனில் நான் உங்கள் அனைவரிலும் இருக்கிறேன்.**

**இப்போது நான் உங்களுக்கு வழங்கும் பிரசாதத்தை, அன்புடன் என்னை நினைத்து, அன்புடன் உண்ணுங்கள். அப்போது உங்களுள் அன்பு எனும் விதை தளிர்விடும்.**

1954 பிப்ரவரி 7 ஞாயிற்றுக்கிழமை அன்று, ரத் கிராமத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு, பாபா, கரே, கௌரி ஷங்கர் ஆகியோரின் குடும்பத்தினரை சந்தித்தார்.

பாபா வருவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் ஹமிர்பூர் முழுவதும் பயணம் செய்த வேளையில், கேஷவ் நிகம் பக்தர்களின் இரண்டு வெவ்வேறு பட்டியல்களை வரைந்தார். ஒரு பட்டியலில், அனைத்தையும் துறந்த உணர்வுடன், மெஹர் பாபாவின் பெயரில் பணிபுரிந்தவர்களின் பெயர்களையும், மற்றொன்றில் பாபாவின் பணிக்காக எங்கும், எதற்காகவும் செல்லத் தயாராக

இருந்தவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. பாபா இரு குழுக்களின் தொண்டர்களையும் சந்திக்க இருந்தார், மேலும் எந்தவகையான குறுக்கீடுகள் அல்லது தடங்கல்களையும் தவிர்க்கும் நோக்கத்தில் ஏதேனும் ஒதுங்கிய, அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று முன்னரே அறிவுறுத்தியிருந்தார்.

தனவ்வுரி (DHANAURI) கிராமத்தில் நடந்த இந்த சேவகர்களின் சிறப்புக் கூட்டத்திற்காக, பாபா வருகை தந்தார். கேஷவ் இந்த சபையை 'தர்பார்-இ-காஸ்' (DARBAR-E-KHAS, 'தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் அவை') என்று அழைத்தார். பாவ் கல்சூரி இதற்கிடையில், என்ன நடக்கப் போகிறது என்ற பதற்றத்தில் ஆழ்ந்தார், ஏனெனில் பாபா மஹாபலேஷ்வரில் இருந்த போது, அவரை 'ஆன்மீகத் தற்கொலை' குழுவின் ('SPIRITUAL SUICIDE' SQUAD) தலைவராக நியமிக்கப் போவதாகக் கூறியிருந்தார். ஒருவேளை இதுவே அந்தக் குழு என்று அவர் நினைத்தார்.

பாபா, தனவ்வுரி கிராமத்தைச் சென்றடைந்த போது, தரிசனம் நடைபெறும் கூடாரத்தின் ஓரத்தில்தான் இந்த சந்திப்பிற்கான இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைக் கண்டார். பாபா முற்றிலுமாக மறைக்கப்பட்ட ஓர் அறையை விரும்பினார். "**இந்த முக்கியமான பணிக்காக, ஒரு குருவியால் கூட கேட்கமுடியாத இடம் ஒன்று எனக்கு வேண்டும்! இந்த இடம் முற்றிலும் பொருத்தமற்றது**" என்று கொந்தளித்தார்.

எனவே, பாபாவும் மண்டலியும் கிராமப் பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், ஆனால் பாபா, மண்டலி, சேவகர்கள் அனைவரும் தங்குவதற்கு அந்தக் கட்டிடம் மிகவும் சிறியதாக இருந்தது. அப்போது கேஷவிடம் பாபா வினவினார்: "**என்னுடைய தெய்வீகப் பணிக்காக, என் வசம் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தவர்கள் அனைவரும் இங்கே இருக்கிறார்களா?**"

"இருவரைத் தவிர இதர அனைவரும் வந்துள்ளனர் பாபா" என்று கேஷவ் பதிலளித்தார்.

அவரது பதிலைக் கேட்டு பாபா மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை, "**ஆரம்பமே இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான நடத்தையை அடிப்படையாகக் கொண்டிருந்தால், முழு அமைப்பும் தகர்ந்துவிடும்!**" என்றார்.

அவர் கூட்டத்தை ரத்து செய்து, இவ்வாறு கூறினார்: "**மக்கள், தலைமை ஊழியரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத போது, எனது கட்டளைகளைப் பின்பற்றுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர்கள் இதுபோன்ற எளிய விஷயங்களைக் கடைப்பிடிக்காத போது, எனக்காக அவர்கள் எப்படித் தங்கள் உயிரைத் தியாகம் செய்வார்கள்? அவர்களின் அதீத ஆர்வத்தால் தங்கள் பெயர்களைப் பட்டியலில் இடம் பெறச் செய்தனர், ஆனால் போதிய வலுவற்ற இத்தகைய ஆர்வம் தேவையற்றது.**"

பாபா அந்தப் பட்டியலை ரத்து செய்துவிட்டு, மேலும் எடுத்துரைத்தார், "**சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் அன்றாட கடமைகளைச் செய்து கொண்டே என் மீதான அன்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். 700**

**ஆண்டுகளுக்குப் பிறகு, நான் மீண்டும் வரும்போது, இது போன்ற மற்றுமொரு கூட்டம் நடைபெறும்!"**

தொடர்ந்து கூறினார், "**பாபா உண்மையானவர். எனவே, உங்களுக்கு என் மீது நம்பிக்கை இருந்தால், நானே 'உண்மைப்பொருள்' என்று நான் கூறும்போது, எனது வார்த்தைகளை நம்புங்கள். எனது லட்சியத்திற்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்ய இது சரியான முறையல்ல என்பதால், இந்தப் பட்டியலை ரத்து செய்துள்ளேன். தங்கள் குடும்பத்திற்காகவும், நண்பர்களுக்காகவும், நாட்டிற்காகவும் மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்கிறார்கள்; ஆனால் எனது பணிக்காக அவ்வாறு செய்வது முற்றிலும் மாறுபட்ட விஷயம்.**

"**நான், எனது பணியைத் தனிப்பட்ட முறையில் மண்டலியுடன் செய்வேன். நேரம் இப்போது நெருங்கி வருகிறது, ஏனெனில், எனது பேச்சு, எனக்கேற்படும் அவமானம், எனது பெருமை ஆகியவற்றை உள்ளடக்கும் காலம் மிகவும் குறுகியதாக இருக்கும்.**"

இறுதியில், பாபா இவ்வாறு எச்சரித்தார், "**உண்மையில், நான் இந்த உடலுடன் உலகில் இறங்கி வந்தது, தரிசன நிகழ்ச்சிகள், ஆரத்தி மற்றும் பூஜைகளுக்காக அல்ல. தேவதைகள் அதை எனக்காகச் செய்து வருகிறார்கள்! இவற்றில் எனக்கு எந்த விருப்பமும் இல்லை, ஆனால் எந்த நோக்கத்திற்காக நான் இந்த உடலில் வந்தேனோ, அது விரைவில் வரவுள்ளது; மண்டலியில் யார், என்னைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.**"

தீவிரமான இந்த சூழ்நிலையில், சேவகர்கள், பாபாவை அதிருப்தியான மனநிலையில் காணும் வாய்ப்பு கிடைத்தது. அவரைப் பற்றி வெளிப்படையாகவும், நேர்மையாகவும் பிறரிடம் எடுத்துரைக்க வேண்டியிருந்ததால், அவதார புருஷரின் இயற்கையான குணநலம் மற்றும் மனநிலையின் அனைத்துப் பக்கங்களையும் அவரது பணியில் அனுபவிக்கவேண்டியது மிகவும் முக்கியம்.

முடிவில், பாபா அனைத்து ஊழியர்களுக்கும் இவ்வாறு வலியுறுத்தினார்: "**நான் விளக்கியது போல, நீங்கள் முதன்முதலில் செய்ய வேண்டியது என்னை நேசிப்பதாகும். இந்த நேசம் உங்களை வெறி பிடித்தவராக மாற்ற வேண்டும், ஆனால் அதில் எந்த ஒரு பாசாங்குத்தனத்தின் சாயலும் இருக்கக்கூடாது. அது சாத்தியமில்லை என்றால், நீங்கள் உங்கள் உலகக் கடமைகளை தொடர்ந்து செய்ய வேண்டும்; ஆனால், அனைத்தையும் பாபாவுக்காகச் செய்கிறீர்கள் என்ற தெளிவான புரிதலுடன் செய்யவேண்டும்; இதுவும் முடியாவிட்டால், மூன்றாவது மாற்று வழி, வெகுமதி அல்லது தலைமைப் பதவிகளுக்கு ஆசைப்படாமல், மனித குலத்திற்கு சேவை செய்வதாகும்.**"

மனித குலத்திற்கான சேவையின் அர்த்தம் என்ன என்பதை விளக்கி, பாபா கூறினார்: "**மனித குலத்திற்குச் செய்யும் சேவையின் சாராம்சம்**

**என்னவெனில், உங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பணயம் வைப்பதன் மூலம், பிறருக்கு மகிழ்ச்சியை வழங்குவதாகும். மிகச் சிறந்த சேவை என்பது, மக்களை என்னை நேசிக்கத் தூண்டுவதுதான்; ஏனெனில் என்னை நேசிப்பதன் மூலம், முழுமையான, நித்திய சுதந்திரம் அடையப் பெறுகிறது! மனித குலத்திற்கான சேவை என்பது என் அன்பை மிகப் பெரிய அளவில் பரப்பக்கூடிய ஒரு முக்கியமான கருவியாகும்.**"

பாபா ஒவ்வொரு சேவகரையையும் தனித்தனியாக அரவணைத்தார். நடைமுறையில் அனைவரும் பாபாவின் ஏமாற்றத்தைக் கண்டு கண்கலங்கினர். பாபா, தான் கூறியதை மீண்டும் வலியுறுத்தி, ஆதர்ஷ் கரே என்பவருக்கு அறிவுரை வழங்கினார், "**உங்கள் பணியை எனக்காக செய்கிறீர்கள் என்ற உள்ளார்ந்த உணர்வுடன் செய்யுங்கள். நீங்கள், உங்கள் மனைவி, குழந்தைகள் அனைவரும் எனக்குச் சொந்தமானவர்கள். உங்களுக்கு அத்தகைய உணர்வு வேண்டும், ஏனெனில் நீங்கள் என்னை எந்த அளவுக்கு நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நானும் உங்களை நேசிக்கிறேன்.**"

இந்த சந்திப்பு, ஊழியர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது; மேலும், உத்தரபிரதேசத்தில் பாபாவிற்கும் அவரது பணிக்கும், படிப்படியாக, ஊழியர்கள் அனைவரும் அடிப்படை தூண்களாக மாறினர். இந்த வழியில், 'ஆன்மீகத் தற்கொலைப் படை' உருவாகத் தொடங்கியது - அவர்களின் அகங்காரம் படுகொலை செய்யப்பட்டது!

கூட்டத்திற்குப் பிறகு, பாபா, சில சேவகர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். சிறிது நேரத்தில் பொது தரிசனம் தொடங்கியது. கேஷவின் தாய் மாமா, பகவான் தின் (BHAGWAN DIN), அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் சிறப்பாகச் செய்திருந்தார், தனவ்வுரியில் வாழும் அனைவரும் பாபாவின் அன்பின் புனிதக் கடலில் மூழ்கினர்.

மதியம் 12:40 மணிக்கு, பாபா இந்தச் செய்தியை மக்களுக்கு வழங்கினார்:

**நான் இப்போது உங்களில் ஒருவன். நான் உங்கள் நிலையில் இருக்கிறேன். நீங்கள் எந்தச் செயல்திறன் படைத்தவராக இருந்தாலும், எந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும், நான் அதிலும் இருக்கிறேன். நான் சிறியவன், பெரியவன், ஏழை, பணக்காரன், கற்றவன், கல்லாதவன்; ஆனால் அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் என்னை நேசிப்பவர்கள் மட்டுமே எனது உண்மையான நிலையில் என்னை அறிய முடியும். எனவே என்னை நேசிக்கவும், என்னை உங்களுடையவனாக்கவும் முயற்சி செய்யுங்கள், ஏனெனில் ஏற்கனவே நிர்பந்தமான முறையில், நீங்கள் என்னுடையவர்கள்.**

**பல இடங்களில் எனக்காக மக்கள் காத்திருப்பதாகக் கூறப்படுவதால், நான் இப்போது சென்றாக வேண்டும். இல்லையெனில், அதிக நேரம் நான் உங்களுடனிருந்து, தனிப்பட்ட முறையில் பிரசாதத்தை விநியோகித்திருப்பேன். எனவே உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக நான் வழங்கும் பிரசாதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.**

விழா நிறைவடைந்ததும், பாபா, சானி (CHHANI) கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில், அவர் அடிக்கடி காரை நிறுத்த வேண்டியிருந்தது, ஏனெனில் சில இடங்களில் மக்கள், சாலையில் வரிசையாக நின்று, அவரைக் காணக் காத்திருந்தனர். பாபா, முஸ்காரா (MUSKHARA) கிராமத்தில், 'இளையோர் உயர்நிலைப் பள்ளி'யில் (JUNIOR HIGH SCHOOL) மதியம் 1:50 மணிக்கு தரிசனம் வழங்குவதற்காக சிறிது நேரம் நின்றார். அங்கேயும், தரிசன நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேடையில் அமராமல், பாபா தரையில் பணிவுடன் அமர்ந்தார். ராம் கோபால் தீக்ஷித் (RAM GOPAL DIXIT) என்ற பள்ளிக்கூட ஆசிரியர் அவரை வரவேற்ற பின்பு, பாபா இந்தச் செய்தியை மக்களுக்கு வழங்கினார்:

**உங்கள் அனைவரின் மத்தியிலும் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் என்னுடையவராக இருப்பதை நான் உணர்கிறேன்; நீங்கள் ஒவ்வொருவரும் என்னையும் உங்களுடையவனாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**ஏழைகளுக்கு நான் வறுமையின் முழு உருவம். செல்வந்தர்களுக்கு நான் பேரரசர்களின் பேரரசர், ஆனால் என்னை நேசிப்பவர்களுக்கு நான் அடிமை.**

**எனவே நீங்கள் என்னை நேசித்தால் நான் இங்கு வந்தது மதிப்புக்குரியதாக இருக்கும். நான் உங்களுக்கு எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

ஹமிர்பூர் மாவட்டம் முழுவதும் 'பாபாவின் இறை தீபம்' ஏற்றப்பட்டது, அதை விட்டில்பூச்சிகள் சூழ்ந்துகொண்டு படபடத்தன. ஒரே ஒரு முறையேனும் பாபாவைப் பார்க்க வேண்டும் என்று மக்கள் துடியாகத் துடித்தனர், இந்த ஒரு கண நேர பார்வைக்காக, எந்த தியாகத்திற்கும் தயாராக இருந்தனர். ஆனால், ஒருமுறை கூட அவரைப் பார்ப்பது என்பது அனைவரின் விதியில் இல்லை. உலகில் கோடிக்கணக்கான மக்கள் இருந்தும், ஒரு சிலரால் மட்டுமே அவதார புருஷரைப் பார்க்க முடிந்தது; இந்த சிலரில் வெகு சிலரே அவரிடம் சரணடைந்தனர். ஹமிர்பூர் மற்றும் ஆந்திரா மக்களில் பலர் அவருடைய பாதங்களில் பணிந்து அங்கேயே அடைக்கலமான பாக்கியவான்களில் அடங்குவர்.

பிப்ரவரி 7ஆம் நாள் மாலை 3:45 மணிக்கு, பாபா, சானி (CHHANI) கிராமத்தை வந்தடைந்தார். மீண்டும், அவருக்காக போடப்பட்ட நாற்காலியில் பாபா அமராமல், அரசு கிராம மருந்தகத்தின் வராந்தாவில் அமர்ந்துகொண்டு, கூடியிருந்த மக்களுக்கு தரிசனத்துடன் கீழ்வரும் செய்தியை வழங்கினார்.

**நீங்கள் இறைவன் மீது பாறை போன்ற நம்பிக்கையும், அனல் போன்ற அன்பும் கொண்டிருந்தால், இந்த உலகில் எதுவும் உங்களை பாதிக்காது. முகப் புகழ்ச்சியும், போலிப் பாராட்டும் உங்களை தீண்டாது. மகிழ்ச்சி உங்களுக்கு மனநிறைவை அளிக்காது. துன்பம் உங்களைத் தொந்தரவு செய்யாது. ஆகவே, என்னை நேசிக்கவும், கடவுள் மட்டுமே உண்மையானவர் என்பதைக் கண்டறிய, எனது எல்லா ஆசீர்வாதங்களையும்**

**நான் உங்களுக்கு வழங்குகிறேன்; இது உங்களை இந்தக் கற்பனை நிகழ்வுகளுக்கு அப்பால் எடுத்துச் சென்று, பாபா மட்டுமே உண்மையானவர் என்பதை உங்களுக்குப் புரிய வைக்கும்.**

பாபா வந்தபோது, கிராம மக்கள் பலர், உள்ளூர் மல்யுத்தப் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், மெஹர் பாபாவின் வருகையின் செய்தி பரவியதும், போட்டி நிறுத்தப்பட்டது, அனைவரும் தரிசனத்திற்காக விரைந்தனர். இந்தக் கூட்டம் வந்தபோது, பாபா காரில் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். அவர்கள் அனைவரும் ஒழுங்காக அமர்ந்தால் மட்டுமே வெளியே வர சம்மதித்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், அமைதியும், ஒழுங்கும் திரும்பியது, தாமதமாக வந்தவர்களுக்கு தரிசனம் வழங்க பாபா மீண்டும் மேடையில் ஏறினார். இந்தப் பாமர மக்கள் அவரை மனதாரப் பாராட்டினர். சற்று நேரத்தில் பாபா ஹமிர்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஹமிர்பூர் அன்பர்கள் பாபாவை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று, 'சர்க்யூட் ஹவுஸுக்கு' (CIRCUIT HOUSE) அழைத்துச் சென்றனர், அங்கு அவர் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பவானி பிரசாத் நிகமின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட மண்டலி அனைவரும் அன்புடன் வரவேற்கப்பட்டனர்.

1954 பிப்ரவரி 8 திங்கட்கிழமை காலை ஏழு மணியளவில், மண்டலி மற்றும் ஹமிர்பூர் சேவகர்களுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா, மெஹர்ஜிக்கு விளக்கினார்:

**பொருளுலகில், ஒவ்வொரு நயா பைசாவும் முக்கியம்.**

**சூட்சும உலகில், ஒவ்வோர் அவுன்ஸ் சக்தியும்** (ஆற்றல்) **இன்றியமையாதது. ஆழ்மன உலகில், ஒவ்வோர் எண்ணத்தின் வலிமையும் முக்கியமானது. இவற்றையெல்லாம் கடந்த 'அப்பாற்பட்ட நிலை'யில், இறைவன் ஒருவரே எல்லாமுமாக இருப்பவர்; இறை-மனிதர்களின் (அவதார புருஷர்கள்) உலகில், எல்லாம், ஒன்றும் இல்லாததாகவும், ஒன்றும் இல்லாதது, எல்லாமுமாகவும் இருக்கிறது.**

**ஜபம், சிந்தனைகள், மந்திரங்கள் மற்றும் பக்தி கீதங்கள் அடங்கிய நாவின் மொழிகளுக்குக் கடவுள் செவிமடுப்பதில்லை. தியானம், ஒருமித்த கவனம் மற்றும் இறைவனைப் பற்றிய எண்ணங்களைக் கொண்ட மனதின் மொழியையும் அவர் கேட்பதில்லை. அன்பின் உருவாகத் திகழும் இதயத்தின் மொழிக்கு மட்டுமே அவர் செவிமடுக்கிறார்.**

**எனவே கடவுளை நேசித்து, இந்த வாழ்விலேயே விடுதலையாகி விடுங்கள். பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தும் இந்த அன்பு, இறுதியில் இறைவனுடன் ஐக்கியமாக வழிவகுக்கும். அன்றாட கடமைகளைச் செய்து கொண்டே, அன்பாகப் பேசுவதும், அன்பாக சிந்திப்பதும், ஜாதி, மதம், அந்தஸ்து எனும் வேறுபாடின்றி, எல்லா மனிதர்களிடமும் அன்பாகச் செயல்படுவதும், ஒவ்வொருவரிடமும் கடவுள் இருப்பதை உணர்ந்து**

**நடப்பதே சாமான்ய மனிதர்கள் இந்த அன்பை வெளிப்படுத்துவதற்கான நடைமுறை வழியாகும்.**

தனவ்வுரியில் நடந்த 'தர்பார்-இ-காஸ்' கூட்டத்தில், பாபா மண்டலியின் உதவியுடன் பணியை மேற்கொள்ளப் போவதாகக் கூறியிருந்தார். எரச் பாபாவிடம், "உங்கள் மண்டலியின் உறுப்பினராக இருப்பதற்கான தகுதி என்ன? மண்டலி என்பவர் யார்?" என வினவினார்.

பாபா பதிலளித்தார், "**மண்டலி என்றால் என்னுடன் பல்லாண்டு காலமாக இருந்து வருபவர்கள்; ஆனால் என்னிடமிருந்து எதையும் கேட்பதில்லை. தற்போது, குமார், மண்டலியில் ஒருவராக இருக்கிறார். சுருக்கமாக, மண்டலி என்றால் 'என்னுடனான அவர்களின் நெருக்கத்தை நான் உணர்கிறேன்' என்று கூறுவேன்.**" பாபா மேலும் விளக்கினார்: "**நான் புகைபிடித்தேன் என்று வைத்துக்கொள்வோம். அப்போது என்னோடு நெருங்கியவர்களுடன் அவ்வாறு செய்ய நான் 100 சதவீதம் மகிழ்ச்சிகரமாக உணர்வேன்.**"

பாபா தொடர்ந்து கூறினார், "**என்னோடு நெருங்கியவர்கள், எனக்காக எல்லாவற்றிலும், தமது அனைத்தையும் தியாகம் செய்ய எப்பொழுதும் தயாராக இருப்பவர்கள். எனக்காகத் தமது உயிரையே கொடுப்பவர்கள், நான் கூறுவதைக் கேட்டு, எனக்குக் கீழ்ப்படியத் தயாராக இருப்பவர்கள். எந்த விதமான வெகுமதியையும் எதிர்பாராமல், அதன் விளைவைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், அவர் அழிந்தாலும் அல்லது செழித்தாலும், எனது மகிழ்ச்சியைத் தமது மகிழ்ச்சியாக எடுத்துக்கொள்பவர்கள், ஆனால் அதே நேரத்தில், யார் ஒருவருடைய நெருக்கத்தை நானும் உணர்கிறேனோ, அவரே மண்டலி உறுப்பினர்.**"

எரச் பின்னர், "ஒருவர் உங்களுடன், ஒரு வருடம் அல்லது 30 வருடங்கள் நெருங்கிப் பழகினாலும், தன்னை மண்டலியில் ஒருவர் என்றழைக்க உரிமை உண்டா?" என்று கேட்டார்.

"**நான் அவருடன் நெருக்கமாக இருப்பதை நீங்கள் கண்டால் மட்டுமே,**" என்று பாபா பதிலளித்தார், "**டெஹ்ரா டூனில் வாழும் எல்சாவை** (மிஸ்திரி) **எடுத்துக் கொள்ளுங்கள். நான் அவருடன் முற்றிலும் சுதந்திரமாக உணர்கிறேன், ஆனால், அவர் அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இல்லை என்றால், அவர் மண்டலியில் ஒருவராக இல்லை என்று அர்த்தம்.**"

'பாபா, யார் ஒருவரை மண்டலி உறுப்பினராக உணர்ந்தாரோ, அவர் மட்டுமே அவ்வாறு இருப்பதாகவும், வேறு எவருக்கும் அவரை மண்டலியில் ஒருவர் என்று கூற உரிமை இல்லை' என்றும் வலியுறுத்தி கூறி, எரச், மேலும் தெளிவான வரையறையைக் கோரினார். "**உணர்வு இருபுறமும் இருக்க வேண்டும்**" என்று பாபா பதிலளித்தார்.

பாபா, ஹரிசந்த் கோச்சாரிடம், "**நீங்கள் மண்டலியில் ஒருவராக இருக்கிறீர்களா?**" என்று கேட்டதற்கு, பாபாவின் சகவாசத்தில் அவர்

மகிழ்ச்சியாகவும், மன நிறைவுடனும் இருப்பதை உணர்ந்ததாக கோச்சார் பதிலளித்தார்; மேலும் பாபா கூறினார், "**இது உண்மைதான். நானும் உங்களுடன் மகிழ்ச்சியாக உணர்கிறேன், ஆனால் எனக்காக அனைத்தையும் தியாகம் செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? நான் கூறுவதை எந்த நேரமும் செய்யத் தயாரா? உங்கள் மகள் ராஜின் கழுத்தைத் துண்டிக்கச் சொன்னாலும் தயக்கமின்றி அதைச் செய்வீர்களா?**" கோச்சார் ஆம் என்று கூறினார், பாபா அவரிடம், "**அப்படியானால் நீங்களும் எனது மண்டலியில் ஒருவராக இருக்கிறீர்கள்**" என்று உறுதியளித்தார்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**நெருக்கம் இருபுறமும் மிகவும் அவசியம். ஒருபுறம், நான் அவரை மண்டலியில் ஒருவராக ஏற்றுக்கொள்ளும் வேளையில், மண்டலியின் தரப்பில் நேர்மை, நாணயம் இரண்டும் இன்றியமையா தேவை.**"

ஹமிர்பூரில் தரிசன நிகழ்ச்சி காலை 8:00 மணிக்குத் தொடங்கியது. சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேற்கவிகையின் கீழ், 9:20 மணிக்கு, பாபா இந்தச் செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**நாம் அனைவரும் ஒன்று - ஏழை, பணக்காரர், ஆண், பெண், பெரியவர், சிறியவர், கற்றவர், கல்லாதவர். நம் அனைவருள்ளும் குடிகொண்டிருக்கும் தெய்வீகத்தை சமமாக உணர, அனைவருக்கும் உரிமை உண்டு; நம்மை நாம் கடவுளுடன் ஐக்கியமாக அறிந்து கொள்வதற்கான ஒரே வழி, அவரை நேசிப்பதே.**

**ஜபம், மந்திரங்கள், பக்தி கீதங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் நாவின் மொழியைக் கடவுள் கேட்பதில்லை. தியானம், ஒருமித்த கவனம் மற்றும் இறைவனைப் பற்றிய எண்ணங்களைக் கொண்ட மனதின் மொழியையும் அவர் கேட்பதில்லை. அன்பின் உருவாகத் திகழும் இதயத்தின் மொழிக்கு மட்டுமே அவர் செவிமடுக்கிறார்; இந்த அன்பிற்கு விழாக்களும், கலைநிகழ்ச்சிகளும் தேவையில்லை; பிரியமானவருக்கான அமைதியுடன் கூடிய பக்தி ஒன்றே தேவை.**

**எல்லையற்ற நேர்மை, நாணயம் என்பது கடவுளின் அம்சங்களில் ஒன்றாகும். எனவே நமக்குள் படரும் மிகக் குறைந்த பாசாங்குத்தனம், நம்மை கடவுளிடமிருந்து விலக்கி வைக்கும்.**

**உங்கள் அனைவருக்கும் மத்தியில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; எனது எல்லா ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**

பாபாவை தரிசனம் செய்வதற்காக மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஹமிர்பூருக்கு வருகை தந்தனர். இதர இடங்களைப் போலவே, நிகழ்ச்சி முழுவதும் பஜனை, கீர்த்தனைகள் தொடர்ந்தன. அமர்தன், வாமன் ராவ் என்ற இரண்டு பாடகர்களும் குழுவுடன் பயணித்தனர். பிப்ரவரி 8ஆம் நாள், மதியம் வரை தரிசனம் தொடர்ந்தது;

அதற்குப் பிறகு, கேஷவ் நிகம், பவானி பிரசாத், புக்கார், ராய்ஸாஹேப் ராமஷங்கர் மற்றும் பல நெருங்கியவர்களின் இல்லங்களுக்கு பாபா விஜயம் செய்தார்.

கேஷவின் மனைவி சுதாதேவியிடம் பாபா, **"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என்று கேட்டார்.

அவர்கள், குடும்பத்தில் நான்கு குழந்தைகளையும் இழந்துவிட்டதால், சுதாதேவி, பாபாவிடம் ஒரு மகனைக் கேட்கலாம் என்று கேஷவ் நினைத்தார்; அவர் ஒரே ஒரு குழந்தைக்காக ஏங்குகிறார் என்பதும் அவருக்குத் தெரியும். அதற்கு பதிலாக, "உங்களைக் கண்டுகொண்டதிலிருந்து, பாபா, எங்களுக்கு எல்லாமே கிடைத்துவிட்டது, இப்போது நான் வேறு எதையும் விரும்பவில்லை" என்ற சுதாதேவியின் பதிலில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பாபா, புக்காரின் தாயாரிடம், **"புக்கார் எப்படி இருக்கிறார்?"** என்று கேட்டதற்கு,

"உங்களுக்கு அது தெரியும் பாபா!" என அவர் பதிலளித்தார்.

**"அவரைக் கடினமாக உழைக்கச் செய்வதன் மூலம், நான் அவரை மெலிதாக்கிவிடுவேன்"** என்று பாபா கேலி செய்தார்.

"நீங்கள் உங்கள் விருப்பம் போல செய்யலாம் பாபா, புக்கார் உங்களுடையர்" என்றார் தாயார்.

புக்காரின் மனைவி ஒரு குழந்தையை, எந்த நேரத்திலும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். பாபா, அவரிடம், **"ஒரு சிறந்த ஆத்மாவை நான் உங்களுக்கு அருளியுள்ளேன். எதற்கும் கவலைப்படாதீர்கள்"** என்று உறுதியளித்தார். இத்தகைய சிறப்பு பிரசாதத்தை வழங்கி, பாபாவை என்றென்றும் அவர் நினைவில் கொள்ளுமாறு செய்தார். பாபா, ஹமிர்பூரில் புக்காரின் மாவு ஆலைக்கும் சென்று, தமது கைகளால் தானியங்களை அதில் கொட்டினார்.

இதற்குப் பிறகு, பாபா உடனடியாக இங்கோட்டா (INGOHTA) கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார், அங்கு தரிசனத்திற்கான ஏற்பாடுகளை லக்ஷ்மிசந்த் பாலிவால், அவரது சகோதரர் டிக்காராம் (TIKARAM) இருவரும் பவானி பிரசாத், சகோதரர் பிந்த்ர பிரசாத் (BINDRA PRASAD) ஆகியோரின் உதவியுடன் செய்தனர். பாபா இங்கோட்டா கிராமத்தை வந்தடைந்ததும் தரிசனம் வழங்கத் தொடங்கினார்.

பிற்பகல் 3:45 மணியளவில், அங்கு ஒன்றுதிரண்ட மக்களுக்கு கீழ்வரும் செய்தியை பாபா வழங்கினார்:

**ஆரம்பமில்லா ஆரம்பம் முதல், முடிவில்லா முடிவு வரை, நாம் அனைவரும் ஒன்றே. நாம் இருந்தோம், இருக்கிறோம், என்றென்றும் இருப்போம். உங்கள் அனைவரிலும் நான் இருக்கிறேன். நான் ஏழை, பணக்காரன், ஆண், பெண், சிறியவன், பெரியவன் அனைவரிலும் இருந்தாலும், என்னை நேசிப்பவர்களுக்கு மட்டுமே நான் உண்மையானவன்.**

**என்னை நேசிப்பதற்காக, எனது எல்லா ஆசீர்வாதங்களையும் நான் வழங்குகிறேன்; உங்கள் அன்பினால், என்னை உங்கள் அடிமையாக்குங்கள்**.

இங்கோட்டா கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆண், பெண், குழந்தைகளும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். அதைத் தொடர்ந்து, பாபா, பிந்த்ர பிரசாத்தின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். கூட்டத்தினூடே அவரது கார் மெல்ல மெல்ல நகர்ந்து செல்ல, பூ மழை பொழிவது போலத் தோன்றியது. அன்றிரவு பாபா, பாலிவாலின் இல்லத்தில் தங்கியிருந்தபோது, அவரை மகிழ்விக்க நீண்ட மூங்கில் தடிகளைக் கொண்ட ஒரு விளையாட்டின் கண்காட்சி நடத்தப்பட்டது.

அடுத்த நாள் அதிகாலை, 1954 பிப்ரவரி 9 அன்று, பாபா, மஹோபா (MAHOBA) கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில், புக்காரின் மாமியார் வசிக்கும் பன்வாடி (PANVARI) கிராமத்தில் தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. கிஷன் ஸிங் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: "கீர்த்தனை பாடகர்கள் தங்கள் கைகளில் ஜாலராக்களை இசைத்து, கொழுந்துவிட்டு எரியும் அன்பு மற்றும் பக்தியின் வெப்பத்தின் பின்னணியில் வெளிப்படுத்திய காட்சி ஒருபோதும் மறக்க முடியாததாக இருந்தது. பாபா அவர்கள் மத்தியில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுடன் வாத்தியங்களை இசைத்து நடனமாடிய போது, அவர்களின் உடலின் ஒவ்வொரு பாகமும் பரவசத்தில் துள்ளிக் குதித்தன."

பன்வாடி கிராமத்திலிருந்து, பாபா, மஹோபாவிற்குச் சென்றார், அங்கு கயா பிரசாத்தின் சகோதரர் ராம்சேவக் கரே (RAMSEVAK KHARE) தரிசனத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்த சந்தர்ப்பத்தில், பாபு ராம்பிரசாத் நவ்ரங்காவில் ஒரு 'பாபா-கோயில்' எழுப்பும் விருப்பத்தை முன்வைத்த போது, "**எனது கோயில் உங்கள் இதயத்தில் மட்டுமே உள்ளது**" என்பதை நினைவில் கொள்ளுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த பாபு ராம்பிரசாத், "உங்கள் வருகையின் அடையாளச் சின்னமாகப் பார்ப்பதற்காகவே அந்தக் கோயில் கட்டப்படும்; அதன் அடிப்படையில் உங்களை எப்போதும் எங்கள் இதயங்களில் வைத்திருக்க முடியும்; உங்கள் நினைவின் ஓர் ஊடகமாகத் திகழும் விதத்தில் நாங்கள் அதை எழுப்ப விரும்புகிறோம், பாபா" என்றார்.

பாபா அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, பாபு, அடித்தளம் அமைப்பதற்காக எடுத்து வந்த கல்லை பாபா தொட்டார். இவ்வாறு, பெருமளவிலான எதிர்ப்புகள் இருந்த நவ்ரங்காவில் 'மெஹர் தாம்' (MEHER DHAM) நிறுவப்பட்டது. உண்மையில், மெஹர் தாம் அங்கு வாழும் அவதார புருஷரின் நெருங்கிய அன்பர்களின் இதயத்தின் உதிரத்திலிருந்து உருவானது, அவர்கள் பாபாவின் ஆன்மீகப் பணிக்காக செய்யாதது எதுவும் இல்லை. பாபுவின் சகோதரர் நர்ஸிங்தாஸ் ராம்பிரசாத், பாபாவின் லட்சியத்திற்காக தனது வாழ்க்கையையே அர்ப்பணித்தவர். மேலும் அவருடைய கடின உழைப்பின் காரணமாக,

நரஸிங்தாஸ் நோய்வாய்ப்பட்டு, பாபாவின் வருகைக்கு பின்னர் அவருடைய நாமத்தை உதடுகளில் உச்சரித்துக்கொண்டே உயிரைத் துறந்தார்.

புக்கார் தனது அச்சகத்தை மஹோபா கிராமத்தில் பாபாவின் சேவையில் அர்ப்பணித்து, பாபாவின் பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிட விரும்பினார்; அதற்காக, புக்கார், கேஷவ், ஸ்ரீபத் ஸஹாய், பவானி பிரசாத், கயா பிரசாத், லக்ஷ்மிசந்த் பாலிவால் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை பாபா நியமித்தார். சில மாதங்களுக்குப் பின்னர் இந்தி இதழ் 'மெஹர் புக்கார்' ('MEHER PUKAR' - மெஹரின் அழைப்பு) வெளிவந்தது.

மஹோபாவில் தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, கப்ரே (KABRAI) கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஐந்து மணிக்கு கோஹரி (GAUHARI) கிராமத்தில் அமைந்த 'அகண்ட் ஜூனியர் உயர்நிலைப் பள்ளி'யில் (AKHAND JUNIOR HIGH SCHOOL) தரிசனம் வழங்கினார். பள்ளிக்கூட ஆசிரியர்களில் ஒருவரான ருத்ர பிரதாப் (RUDRA PRATAP) வரவேற்புரையாற்றிய போது, பாபா, கீழ்வரும் செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**முழுமையாக வளர்ச்சியடைந்த பூரண உணர்வு நிலையை எட்டிய மனிதன், சூதுவாதற்ற குழந்தையைப் போலவும், ஆசையற்றவனாகவும், காம இச்சையற்றவனாகவும் மாறும்போது, அவன் கடவுளை நெருங்கி வருகிறான். நான் குழந்தைகள் மத்தியில் இருக்கும்போது, நான் ஒரு குழந்தையாக உணர்கிறேன். நான் ஏழைகளின் மத்தியில், என்னை விட ஏழை இல்லை என்று உணர்கிறேன். நான் செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்களிடையே, நான் அனைவருக்கும் பேரரசராக உணர்கிறேன்.**

**மாணவர்களான உங்களுக்கு இரண்டு விஷயங்கள் இன்றியமையாதது - நேர்மை மற்றும் பணிவு. பணிவு என்பதன் பொருள் அமைதியான குணம் என்பதல்ல, மகத்துவத்தைப் பரப்பும் பணிவு. எனவே மாணவர்களாகிய நீங்கள் இதை உணர்ந்தால், நான் உங்களிடையே இருப்பதன் நோக்கம் நிறைவேறும்.**

**உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

பாபா, மஹேவாவிற்குச் செல்லும் வழியில் கன்னா (KHANNA) கிராமத்தில் நின்றார். அவர் திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டதால், தரிசன நிகழ்ச்சிக்கான இடத்தில் ஒரு சிலர் மட்டுமே காத்திருந்தனர். ஆனால் பாபாவின் கார் நிறுத்தப்பட்ட அடுத்த கணமே, அவரது வருகையை மேளம் முழக்கி அறிவிக்கப்பட்டது (வழக்கமாக கிராமத்து மக்களை ஒன்று கூடச்செய்யும் முறை). பாபா, தாமாகவே கிராமத்தின் உட்பகுதிக்குள் நேரடியாகச் சென்று, ராம்நாத் ஸோனாரின் (RAMNATH SONAR) இல்லத்திற்கு வெளியே ஓர் உயர்ந்த மேடையில் அமர்ந்து, தடையின்றி அனைவருக்கும் தரிசனம் வழங்கினார்; எழுத்துப் பலகையில், **"நீங்கள் என்னிடம் வருவதற்கு பதிலாக, நானே உங்களிடம் வந்துவிட்டேன்"** என்று எடுத்துரைத்தார்.

பாபா, அங்கிருந்து திரும்பி வரும் வேளையில், டாக்கே பின்தங்கி நிதானமாக நடந்து வருவதை கவனித்தார். எப்பொழுதும் பாபாவின் அருகிலேயே இருக்கும் கடமையைச் செய்யாமல், அலட்சியமாக இருந்ததற்காக பாபா அவருக்கு அறிவுரை கூறினார். குமாரும் அவ்வப்போது இதே போன்ற மெத்தனத்தால் குற்றம் சாட்டப்பட்டார்.

பாபா, இந்தப் பயணத்தில் ஒன்பது முக்கிய மையங்களில் தரிசனம் வழங்கினாலும், அவர் வழி நெடுகிலும் வெவ்வேறு குக்கிராமங்களிலும், தொலைதூர இடங்களிலும் நின்று, மக்களைத் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை வழங்கினார். நஹதௌரா (NAHDAURA) என்ற சிறிய கிராமத்தில் தரிசனத்திற்காக 400 பேர் ஒன்றுதிரண்டனர். பெண்மணிகள் பாபாவின் ஆரத்தி மற்றும் பக்தி பாடல்களைப் பாடினர்; பின்னர், அவரது கார் புறப்படும் வேளையில், மேலும் அதிகமான பெண்கள் விரைந்து வரவே, பாபா, ஓட்டுநரிடம் காரை நிறுத்தக் கூறி, தரையில் அமர்ந்து அவர்களுக்காகக் காத்திருந்தார். தாமதமாக வந்தவர்களில் ஒரு வயதான பெண்மணியின் தலையைத் தொட்டு, தன் அன்பை வெளிப்படுத்தினார். முழு நேரமும் அந்தப் பெண்மணி ‘ஜெய், ஜெய், ஜெய்’ என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார். பின்னர், பாபா சாதாரணமாக மண்டலியிடம், “**நான் அந்த வயதான பெண்மணிக்கு வழங்கிய தொடர்புக்குப் பின்னால் ஒரு முக்கியத்துவம் இருந்தது**” என்று குறிப்பிட்டார்.

அதே மாலையில், பாபா மிகவும் சிரமமான பயணத்திற்குப் பின்னர், அவர், நிகழ்ச்சியின் கடைசி இடமான மஹேவாவை (MAHEVA) வந்தடைந்தார். (அங்குச் செல்வதற்குள் பேருந்தின் ‘அதிர்ச்சியைத் தாங்கும் கருவி’ உடைந்துவிடும் என்று மண்டலி நினைத்தனர்!) கேஷவ் நிகமின் பிறந்த இடமான, காட்டுப்பகுதியாக இருந்த மஹேவா கிராமத்தில், 1952ஆம் ஆண்டில் பாபாவுக்காக எழுப்பிய ஒரு குடிலுக்கு அவர் ‘மெஹரஸ்தானா’ என்று பெயரிட்டார்.

மஹேவா கிராமத்தில் தரிசனத்திற்குத் தயாராக இருந்த மக்களுக்கு, தனது பிரசாதத்துடன் பாபா அதை வழங்கினார். தரிசன வேளையில், ”**எனது தரிசன பயணம் இங்கு நிறைவடைவது மிகவும் நல்ல அதிர்ஷ்டமான விஷயம்**” என்று பாபா குறிப்பிட்டார். அதன் பின்னர் அவர் தமது குடில் அமைந்த மெஹரஸ்தானாவிற்கு புறப்பட்டுச் சென்றார். ஹமிர்பூரில் அவர் தரிசனம் வழங்கும் நிகழ்ச்சியின் இறுதி நாள் இது என்பதால், அவருடன் வரும் ஆண்கள் அனைவரும் அன்று இரவு 9:00 மணி முதல், காலை 4:30 மணி வரை விழித்திருக்க வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார்; அவர்களுக்கு உதவியாக அஸிஸ் கவால் என்பவரின் கவாலி இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், இரவில் இரண்டு அல்லது மூன்று முறை காஃபி வழங்கவும் உத்தரவிடப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்து முன்னணி சேவகர்கள் ஒன்று கூடினர், அந்த இரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக நிரூபிக்கப்பட்டது.

அன்று இரவு ஒன்பது மணிக்கு, பஜனைகள் மற்றும் கவாலிகளுடன் நிகழ்ச்சி ஆரம்பமான போது, பெண்டு, குமார் இருவருக்குமிடையே முறுகல் நிலை உருவானது. குமார், அங்கு வந்தவர்களின் காலணிகள், பாதையில் தடையாக இருக்கும் என்பதால், வாசலின் முன்னால் வைக்க வேண்டாம், என்று கேட்டுக் கொண்டார், ஆனால் மக்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை.

அதைத் தொடர்ந்து, குமார், அவற்றை அங்கிருந்து அகற்றுமாறு கூற, அனைத்து காலணிகளும் ஒரு பக்கமாகக் குவிக்கப்பட்டன. இதை கவனித்த பெண்டு, குமாரை எதிர்கொண்டு, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? மக்கள் தத்தமது காலணிகளை எவ்வாறு கண்டுபிடிக்க முடியும்?" என வினவினார்.

அதற்கு குமார், "அது அவரவர் பிரச்சினை" என்று பதிலளித்தது, ஒரு சூடான விவாதத்திற்கு வழிவகுத்தது; பாபா உடனே அவர்கள் இருவரையும் அழைத்துவரக் கூறினார்.

உடனிருந்த ஹர்ஜீவன் லாலை அழைத்து, பாபா அவரிடம், "**பெண்டு ஒருங்கிணைப்பாளர், குமார் தலைமை தளபதி. நீங்கள் ஒரு வழக்கறிஞர். இப்போது சொல்லுங்கள், இவர்களில் யார் உயர்ந்தவர், ஒருங்கிணைப்பாளரா அல்லது தலைமை தளபதியா, யார்?**" என வினவினார்.

ஹர்ஜீவன் லால், "உங்கள் தர்பாரில் (அவையில்) எந்த அதிகாரம் யாருடையது என்பதை உறுதியாகக் கூறுவது கடினம். அது உங்களுக்கே தெரியும்!" என்றார்.

அவருடைய கூற்றை நிராகரிக்கும் சைகையுடன் பாபா, "**அதையெல்லாம் மறந்துவிடுங்கள்! உங்களின் சட்டரீதியான கருத்தை மட்டும் எனக்குத் தெரிவியுங்கள்**" என்றார்.

ஹர்ஜீவன் லால் விளக்கினார், "ஒரு வழக்கறிஞரின் கண்ணோட்டத்தில் அவருக்கு எந்தக் கட்சி அதிக பணம் கொடுக்கிறதோ அதைப் பொறுத்து, அவர்களின் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் மாறும்! ஒவ்வொரு வழக்கறிஞரும் அப்படித்தான்!"

இதைக் கேட்டு பாபா சிரித்துக்கொண்டே, "**யார் காலணிகளை வீசியது?**" என வினவினார். வேறு பலரும் அதில் பங்கெடுத்தாலும், பங்க்ராஜ் மட்டுமே கையை உயர்த்தினார். பாபா அவரைக் கடுமையாகக் கண்டித்தார், அவர் உண்மையைச் சொன்னதன் விளைவு இது என்று பங்க்ராஜ் திகைப்பில் ஆழ்ந்தார். இது ஒரு வசைமொழி என்றாலும், பங்க்ராஜுக்குக் கிடைத்த பாபாவின் 'பரிசு', பிறருக்கு இல்லாமல் போய்விட்டது.

அப்போது பாபா, "**ஹர்ஜீவன் லால் இங்கு ஆலோசகராக பங்கெடுக்க விரும்பவில்லை; அதற்கு அவருக்குக் கட்டணம் தர வேண்டும். ஆனால் பெண்டு, குமார் இருவரிடமும் பணம் இல்லாததால், இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் அரவணைத்து, அனைத்தையும் மறந்துவிடுவதே சிறந்த வழி**" என்று கூறவே, சிரிப்பு ஆரவாரத்திற்கு மத்தியில், பெண்டுவும் குமாரும் கட்டித் தழுவினர், இந்த சம்பவம் ஹமிர்பூர் சேவகர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

நள்ளிரவுக்கு 20 நிமிடங்கள் இருக்கும் வேளையில், பாபா அனைவரிடமும் முகத்தையும் கைகளையும் சுத்தம் செய்து, பத்து நிமிடங்களில் பிரார்த்தனைக்கு வருமாறு கேட்டுக்கொண்டார். பாபாவும் அவ்வாறே செய்தார். சரியாக நள்ளிரவில், மனம் வருந்தி மொழியும் பிரார்த்தனையை (REPENTANCE PRAYER) எரச் ஆங்கிலத்தில் வாசித்தார், பின்னர் உருதுவில் ராம்ஜூவும், மராட்டியில் டாக்கேயும் மொழிந்தனர்.

அஸிஸ் கவால் தனது இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்; இடையிடையே ஒரு சில குறிப்பிட்ட வரிகளை விளக்க பாபா அவ்வப்போது குறுக்கிட்டு வந்தார். ஒரு கட்டத்தில் பாபா குமாரிடம், **"என்னை நீங்கள் பரமாத்மா என்று எப்படி அழைக்க முடியும்?"** என வினவினார்.

அவர் அதற்கு, "எனக்கு, எனது பாபாவை மட்டுமே தெரியும், மேலும் அவரை விட உயர்ந்தவர் வேறு எவரும் இல்லை என்பதும் தெரியும். அவர் பரமாத்மாவை விட உயர்ந்தவராக இருந்தாலும், அந்த பரமாத்மாவே பாபா!" என்று பதிலளித்தார்.

**"உங்கள் வார்த்தைகள் என் இதயத்தைத் தொட்டன"** என்று பாபா குறிப்பிட்டார்.

பாபாவை கடவுள் என்று ஏன் அழைத்தீர்கள் என்று கைக்கோபாத்திடம் கேட்டதற்கு அவர், "எனது அனுபவத்திலிருந்து பாபாவை கடவுள் என்று என்னால் சொல்ல முடியும்" என்று பதிலளித்தார்.

நள்ளிரவு 1:00 மணியளவில், பாபா கேஷவிடம், **"இந்த நேரத்தில் உங்களுக்கு என்ன அதிர்ஷ்டம் வழங்கப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியாது"** என்று கூறினார்.

பின்னர், அங்கிருந்த அனைவரையும் நோக்கி, பாபா தொடர்ந்தார், **"நான் இப்போது மிகவும் நல்ல மனநிலையில் உணர்கிறேன், 700 ஆண்டுகளுக்குப் பின்னர், எனது அடுத்த வருகையைப் பற்றி கூறுவது முறையாகத் தெரியவில்லை என்றாலும், நான் குமாருக்கு உறுதியளித்தபடி, இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்; இன்றைக்கு ஒரு முறை இதைப் பற்றி நான் தெளிவாகக் கூறுகிறேன். ஆனால் என்னுடைய தற்போதைய நல்ல மனநிலையில் இவ்வளவுதான் சொல்ல முடியும், விரைவில் கடவுள் எனது மௌனத்தைக் கைவிடச் செய்வார், அதாவது கடவுள் தம்மை வெளிப்படுத்துவார் என்று அர்த்தம். மேலும், ஒரு குறுகிய காலத்திற்குள், அவமானம், மகிமை இரண்டும் வரும், அதைத் தொடர்ந்து கொடூரமான முறையில் எனது பௌதீக உடலைத் துறக்க நேரிடும். 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் மீண்டும் வருவேன்; இதைத்தான் என்னால் இப்போது சொல்ல முடியும்."**

பாபாவின் இந்த அறிவிப்பு சிலரின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது, மேலும், எழுத்துப்பலகையில் விரலை நகர்த்தி, கையை உயர்த்தி, பாபா, **"அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!"** என்றதும், அனைவரும்

அந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, பலமுறை அதைத் திரும்பத் திரும்ப மொழிந்தனர்.

பாபாவே '**அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்**' என்று எழுத்துப்பலகையில் உச்சரித்தது இதுவே முதல் முறை.

அவர்களின் அழுகைக் குரலுடன் காலமும் இணைந்தது! "ஜெய் அவதார் மெஹர் பிரபு! உங்கள் பணி வெற்றிவாகை சூடட்டும்!"

மங்களகரமான இந்த நிகழ்வை கௌரவித்த மெஹர்ஜி, பார்சி நாட்காட்டியின்படி, பாபாவின் 60ஆவது பிறந்தநாள் அன்று, அதாவது 1954 பிப்ரவரி 10 புதன்கிழமை என்பதைச் சுட்டிக்காட்டினார். அனைவரும் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளை ஆழ் இதயத்திலிருந்து பாடினர். கேஷவ் தனது 'மெஹர் சாலிஸா' (MEHER CHALISA) கவிதையை மொழிந்தார், பாபா ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவினார். ஹமிர்பூர் அன்பர்கள் பலர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நடனமாடத் தொடங்கினர்.

அதிகாலை 4:30 மணியளவில், வாமன் ராவ், 'யோகி, போகாதே (மத் ஜாவ்), போகாதே யோகி!' என்ற பல்லவியைத் தொடங்கினார். ஆனால் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன, பெட்டி படுக்கைகள் தயாராக இருந்தன. பாபா தனது ஹமிர்பூர் அன்பர்களின் இதயங்களில் தம்மை ஆழமாக வேரூன்றச் செய்ததன் மூலம், அவருடைய பணி நிறைவுக்கு வந்தது. அவர் உண்மையில் ஒருபோதும் வெளியேற மாட்டார்.

காலை 5:00 மணிக்கு (பாபா பிறந்த நேரம்), நிகழ்ச்சி நிறைவடைந்தது. தக்வான் கிராமத்தில் வாழும் விஷ்ணு, நிறைவு ஆரத்தி மற்றும் பூஜைகளை செய்தார். டாக்கே குஜராத்தியில் ஆரத்தியைப் பாட, பலர் அதில் பங்கெடுத்தனர்.

மஹேவா கிராமத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா தமது மண்டலியை மெஹரஸ்தானாவிற்கு அருகில் அமைந்த ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். திரும்பி வந்த பிறகு, காலை 8:00 மணியளவில், அவர் தனது அறைக்கு வெளியே அமர்ந்து உள்ளூர் சேவகர்களுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார். அப்போதைய விவாதத்தின் முக்கிய தலைப்பு, கேஷவ் மற்றும் கயா பிரசாத் இடையேயான கருத்து வேறுபாடு சார்ந்தது. "**எனது அன்பர்களிடையே இத்தகைய கருத்து வேறுபாடுகள் காலாதி காலமாக, நித்தியம் முழுவதும் ஒரே மாதிரியாக இருந்து வருகின்றன**" என்று பாபா விளக்கினார். "**கிருஷ்ணா, ராமா, புத்தா, இயேசு மற்றும் முஹமது காலத்திலும் - அத்தகைய கருத்து வேறுபாடுகள் எப்போதும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. நான் என்றென்றும் இதுபோன்ற சர்ச்சைகளைக் கேட்டறிவது வழக்கம். இது சலிப்புத்தன்மையை உடைத்தெறிகிறது!**

"**என்னை உணரும் வரை, ஒருவரால் அகங்காரத்திலிருந்து தப்பிக்க முடியாது; மேல்நிலையை அடைந்த மனிதர்களுக்குக் கூட அகங்காரத் தூண்டுதலிலிருந்து விடுதலை கிடையாது. நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒருவரின் சிறிதளவு அகங்காரச் செயலால், அவர் அதல**

**பாதாளத்தில் வீழ முடியும். ஐந்தாவது ஆன்மீகத் தளத்தை அடைந்த பின்னரே அதிலிருந்து ஒருவர் பாதுகாப்பாக இருக்கிறார். எனவே இப்போது வேறு எவரேனும் குறை கூறி முறையிடும் நிலையில் உள்ளனரா?"**

புக்கார் எதையோ சொல்லத் தொடங்கினார், பாபா அவரைத் தடுத்து, **"எல்லோரும் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும், உங்கள் மனதின் சுமையைக் குறைக்க நான் வழங்கும் இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எவரும் சுதந்திரமாக, தடையின்றி பேசத் தயங்க வேண்டாம்"** என்று கூறினார்.

கயா பிரசாத், கேஷவ் நிகம் இவர்களிடையேயான தவறான புரிதல் தீர்ந்ததும், பாபா, **"நான் உங்களை நேசிப்பதால், பலவீனங்களை வெளியே கொண்டு வருகிறேன். நேர்மையாக இருங்கள்; பலவீனங்கள் இருக்கத்தான் செய்யும். நீங்கள் பலவீனங்களுக்கு அஞ்சக்கூடாது. அனைவரும் நேர்மையின்மைக்கு மட்டுமே அஞ்ச வேண்டும். தீய எண்ணங்கள் எவருக்கு வருவதில்லை? அவையே வாழ்க்கையின் அடித்தளம். அஸ்திவாரம் இல்லாமல் எந்த வீடும் எழும்பி நிற்க முடியாது.**

**"எண்ணங்கள் சிறந்ததாகவோ அல்லது சீரற்றதாகவோ இருக்கலாம், ஆனால் ஒருவர் தனது செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரிடமும் பலவீனங்கள் இல்லாமல் இருந்திருந்தால், எனக்கும் உங்களுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருந்திருக்காது."**

அவர் இவ்வாறு கூறி முடித்தார், **"மிகச் சிலருக்கே, அன்பில் உண்மையாக எரியும் தன்மை இருக்கும். அது ஆரம்பமாகும் போது, அதை அணைக்க முயற்சிக்காதீர்கள். எனது அர்ஜுனன் கூட அவனது பலவீனத்தால் தோல்வியுற்றான், அது அவனுக்கு (எனது உலகளாவிய உடலின்) அனுபவத்தை வழங்க என்னைக் கட்டாயப்படுத்தியது. அர்ஜுனனுக்கு எனது கட்டளைகளை நிறைவேற்றும் அனுபவத்தை நான் வழங்கியதால், அதை எனது பலவீனம் என்றும் கூறலாம்."**

பாபா மீண்டும் எழுத்துப்பலகையில் **"அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்"** என்று உச்சரித்து, **"எனது பிறந்தநாளான இன்று, முதல்முறையாக 'நானே எனக்கு ஜெய்!' என்று குரல் கொடுக்கிறேன்"** என்றார்.

கேஷவின் மனைவி சுதாதேவி தனது சகோதரி லலித் கிஷோரி (LALIT KISHORI), இறுதி மூச்சை விடும் தருவாயில் இருப்பதாக பாபாவிடம் தெரிவித்தார். அவர் அம்மை நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டது, இப்போது உயிருக்கு ஆபத்தானதாக மாறிவிட்டது. பாபா, நோய்வாய்ப்பட்டு, படுக்கையில் இருந்த அந்தப் பெண்மணிக்கு ஆறுதல் கூறினார்.

திரும்பி வந்து கேஷவிடம் பாபா, **"தொண்ணூற்றொன்பது சதவிகிதம், லலித் பிழைப்பார் என்ற நம்பிக்கை இல்லை. ஆனால் அவரது இறுதி மூச்சு வரை, எனது பெயரைத் தொடர்ந்து உச்சரிக்கச் சொல்லுங்கள்."** கேஷவின்

சகோதரர் டாக்டர் தேவேந்திராவிடம் பாபா சில மருந்துகளை பரிந்துரைத்தார், அதன் மூலம் பல நாட்களுக்குப் பிறகு, லலித் முழுமையாகக் குணமடைந்தார்.

முன்பு கூறியது போல, பாவ் கல்சூரியின் மருமகன் வீரேந்திர ஸிங், பாபாவைப் பார்க்க வந்தவர், தரிசன யாத்திரையின் போது குழுவுடன் இருந்தார். கல்லூரியில் பயின்று வந்த அவர் புறப்படுவதற்கு முன்பு, பாபா மூன்று அறிவுரைகளை வழங்கினார்: "**எந்தவொரு தீய செயலிலும் ஈடுபடாதீர்கள்; எப்போதும் நேர்மையாக இருக்க வேண்டும்; பாபாவை நேசிக்க வேண்டும்**."

பிப்ரவரி 10ஆம் நாள் பாபா, மெஹரஸ்தானாவிலிருந்து லக்னோவிற்குக் காரில் புறப்பட்டார். ஹமிர்பூர் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் அவரது அன்பில் உயிர்ப்பிக்கப்பட்டது. சேவகர்கள் தங்கள் பணியை, முழு மனதுடன் செய்ய, அதிக விழிப்புடன் இருந்தனர், மேலும், அவர்களுக்காக அவரது 'எல்லையற்ற இதயத்தில்' ஒரு சிறப்பு இடமளித்த பின்னர், இறை-மனிதன் புறப்பட்டுச் சென்றார். 'மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற பாராட்டுக் குரல்கள், அவர் காரில் சென்றபோது இடிபோல முழங்கின. சிலர் அழுதனர்; சிலர் கண்ணீரை அடக்கிக் கொண்டு அமைதியாக இருந்தனர்; மேலும் சிலர் அவரது நாமத்தைத் தொடர்ந்து மொழிந்தனர்.

மண்டலி பேருந்தில் பின்தொடர்ந்தனர், வழியில் ஓர் அற்புதமான காட்சியை அவர்கள் காண நேர்ந்தது. 'ஹரி பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா, ஹரி, ஹரி!' என்று பாடிய வண்ணம், கிணற்றில் நீரிறைத்துக் கொண்டிருந்த சில உள்ளூர் பெண்மணிகளுக்குத் தெரியாமலேயே, அவ்வழியே சென்று கொண்டிருந்த இறை-மனிதன், அவர்களின் தன்னிச்சையான முழக்கத்தைக் கேட்டார்.

குழு கான்பூர் நகருக்கு வந்ததும், பாபா அவர்களிடம், "இங்கே உண்ணுவதற்கு சிறந்தது எது?" என்று கேட்டார்.

அவர்களுடன் வந்திருந்த ஹமிர்பூர் சேவகர்களில் ஒருவர், "பெனாரஸி பர்ஃபி (மென்மையான இனிப்புப் பண்டம்)" என்று பதிலளித்தார். அனைவரும் பின்தொடர, பாபாவே அருகிலிருந்த மிட்டாய் கடைக்குச் சென்று, இனிப்புப் பண்டத்தை வாங்கினார், ஆனால் ஏன் என்று எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. இனிப்புப் பண்டத்தை வாங்கி, பாபா, அந்தக் கடையில் சில நிமிடங்கள் நின்று, இனிப்புகளை ரசித்துக் கொண்டிருந்தார். திடீரென, அந்த மிட்டாய் கடை யாருக்கு சொந்தமானது என்பதை விசாரிக்குமாறு அவர் எரச்சிடம் கேட்டுக்கொண்டார். பாபாவை தரிசனம் செய்வதற்காக ஹமிர்பூர் சென்று இன்னும் திரும்பிவராத பாபாவின் அன்பரான சீதாராம் என்பவருக்கு சொந்தமானது என்பது தெரிய வந்தது. சீதாராமின் வளாகத்தில் நுழைந்து, சில இனிப்புப் பண்டங்களை ருசித்து, பாபா அந்த ஸ்தாபனத்தைப் புனிதப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, குழு லக்னோவிற்கு வந்ததும், ஹமிர்பூர் சேவகர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். கேஷவ், பவானி பிரசாத் மற்றும் பிறரைத் தழுவிய பிறகு, பாபா லக்னோவிலிருந்து ரயிலில் புறப்பட்டு, 1954 பிப்ரவரி 12

வெள்ளிக்கிழமை அன்று மஹாபலேஷ்வரை வந்தடைந்ததும் ஆந்திரா பயணத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாயின.



**ஆந்திரா, பிப்ரவரி 1954**
(ANDHRA**,** FEBRUARY 1954)

# ஆந்திர பிரதேஷ், ‘தெய்வீகப் பணி’ பிரகடனம்

**(Andhra Pradesh - Declaration of Divine Work)**

முந்தைய இரண்டு ஆண்டுகளில், ஆந்திரப் பிரதேசத்தில் ஒவ்வோர் இல்லத்திலும் இறையன்பின் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது, மேலும் மெஹர் பாபாவின் பெயரில் பல்வேறு இடங்களில் மையங்கள் நிறுவப்பட்டன. மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக கூக்குரல் விடுத்தனர், அதற்கான ஏற்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டன. மக்களே ‘பாபா மையங்களாக’ மாறிவிட்டனர். இந்த முறை, பாபா மற்றும் அவரது குழுவினருக்கான பயணச் செலவு முழுவதையும் ஆந்திர அன்பர்கள் ஏற்க வேண்டும்; அதேவேளை, முந்தைய வருகையின் போது, வேறு வேறு இடங்களிலிருந்து வந்த அன்பர்கள், அனைத்து பயணச் செலவுகளை ஏற்றுக்கொண்டனர்.

பாபாவுடன் ஹமிர்பூருக்குச் சென்ற அதே தனிநபர்கள் குழு, ஆதி சீனியர், ஃபிரான்சிஸ் பிராபஸோன் (ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிற்கு இரண்டு வாரங்களுக்கு வருமாறு அழைக்கப்பட்டார்), கிருஷ்ணா நாயர் மற்றும் ஷஹஸ்த்ரபுத்தே (SHAHASTRABUDHE, மஹாபலேஷ்வர்) ஆகியோரும் ஆந்திராவிற்குச் சென்றனர் - மொத்தத்தில் பதினெட்டு ஆண்கள்.

திரைப்பட தயாரிப்பாளரான கேப்ரியல் பாஸ்கலும் அமெரிக்காவிலிருந்து வரவிருந்தார், ஆனால் இயலவில்லை. இதர அனைத்து அன்பர்களும் ஆந்திராவிற்குச் சென்று, விஜயவாடா நகரில் பாபாவை சந்திக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இவர்களில், கஜானன் போஃபலி, அப்துல் மஜித் கான் ஆகியோர் ஸாவ்னேரைச் சேர்ந்தவர்கள், நாக்பூரிலிருந்து நானா கேர், பங்க்ராஜ், டாக்டர் தேஷ்முக், மற்றும் ஹமிர்பூரைச் சேர்ந்த கேஷவ் நிகம், பவானி பிரசாத், ஸ்ரீபத் ஸஹாய், கயா பிரசாத் கரே ஆகியோர் அடங்குவர்.

மஹாபலேஷ்வரில் ஒரு வாரம் தங்கியிருந்து, 1954 பிப்ரவரி 19 வெள்ளிக்கிழமை அன்று, எரச், குஸ்தாஜி, கிருஷ்ணா ஆகியோருடன் பாபா, ஆதியின் காரில், பூனாவிற்குச் செல்ல ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். (மண்டலியில் பெரும்பாலோர் முந்தைய நாள் பூனாவிற்குச் சென்றுவிட்டனர்.) அன்று அதிகாலையில், பூனாவிலிருந்து பாபாவின் அன்பர்கள், அவருக்கு மனதார பிரியாவிடை அளிக்க ரயில் நிலையத்தில் ஒன்றுதிரண்டனர். அவதார புருஷரின் முன்னிலையில் அத்தகைய வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பதால், அனைத்து சாதி, மதங்களைச் சார்ந்த அன்பர்கள் அனைவரும் ஒன்றாகக் காத்திருந்தனர். ஆரம்பத்திலிருந்தே, குருநாதரின் பக்தர்கள் அவரது விருப்பத்தைப் பின்பற்றுவதற்காக பிரிவினையின் மதத் திரையைக் கைவிட்டனர்.

பாபா, மேம்பாலத்தின் வழியாக எதிரே அமைந்த நடைமேடைக்கு நடந்து சென்றதால், மக்கள் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது. நடைமேடையில் அவர் அமர, அனைவரும் பாபாவை சூழ்ந்து கொண்டனர். அவர் ஒவ்வொரு நபரையும் சந்தித்தார். இந்தத் தருணத்தில்தான் கே.கே. ராமகிருஷ்ணன் (KORASERI KUNJAN RAMAKRISHNAN, பூனா மையத்தின் வருங்கால செயலாளர்) பாபாவை முதன்முதலாக சந்தித்தார். மெஹர் பாபாவின் 'காந்த சக்திமிக்க ஆளுமை'யால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டார், "அவரைப் போன்ற ஒரு மனிதனை நான் பார்த்ததில்லை!" என்று கூறி, அன்று முதல் அவர் பாபாவின் நோக்கத்திற்காகப் பணிபுரிவதில் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.

பாபாவும் அவரது குழுவினரும் காலை 10:00 மணிக்கு ஆந்திராவை நோக்கிச் செல்லும் ரயிலில் பயணத்தைத் தொடங்கினர்; பெண்டு, பாவ் கல்சூரி, அலோபா, சிது ஆகியோர் ரயிலில் பெட்டி படுக்கைகளைக் குவித்தனர், ரயில் நகரத் தொடங்கியதும், 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற கூக்குரல் ஒலித்தது. ஆதி சீனியர், ஃபிரான்சிஸ் பிராபஸோன் ஆகியோரைப் போலவே, பாபாவும் எரச்சும் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் தத்தமது இருக்கைகளை ஆக்கிரமித்தனர், இதர அன்பர்கள் அனைவரும் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தனர்.

ஒரு ரயில் நிலையம் கடந்ததும், பாபா கீழே இறங்கி, மண்டலியின் பெட்டிக்குள் நுழைந்து, அவர் ஃபிரான்சிஸிடம் விளக்கினார்: **"உங்களை ஏன் ஆஸ்திரேலியாவிலிருந்து அழைத்தேன் என்று சொல்கிறேன். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் பின்பு நான் சொல்கிறேன். இதற்கிடையில், எல்லாவற்றையும் உன்னிப்பாக கவனியுங்கள்; ஏனெனில், நீங்கள் பார்த்து புரிந்து கொண்டதை, என்னிடம் சொல்ல வேண்டும்.**

**"நினைவில் கொள்ளுங்கள், நான் அதிமிக தெய்வீகமானவன், அதே நேரத்தில், அதிமிக மனிதனாகவும் இருக்கிறேன், அதனால், எவரும் - ரிஷிகள் கூட - என்னை ஆழங்காண முடியாது, ஏனெனில் நான் எல்லையற்ற அளவுக்குப் பிடிகொடாமல் வழுகிச் செல்பவன். என் மீதான அன்பை வெளிப்படுத்த மக்கள் பின்பற்றும் வழிகளையும், சம்பிரதாய முறைகளையும் நான் விரும்பவில்லை; அதாவது எனக்கு மாலை அணிவிப்பது, ஆரத்தி நிகழ்த்துவது இதுபோன்ற மற்றும் பல. எனவே ஆந்திராவில் நான் அன்பின் வேறு சில வழிமுறைகளை வெளிப்படுத்துவேன். அன்பிற்குரியவரை மகிழுறச் செய்யும் விதத்தில் அன்பை வெளிப்படுத்த வேண்டும்."**

ஒருமுறை அவர்களது பயணத்தின் போது, பாபா, மண்டலியுடன் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் இருந்த வேளையில், ராம்ஜூ, ஆஸ்துமாவால் அவதிப்பட்டு, ஓரளவு இருக்கைகள் காலியாக இருந்த பாபாவின் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஓய்வெடுக்கச் சென்றார். பாபா, ராம்ஜூவை அழைக்குமாறு கூறியபோது, அவர், பாபா இருந்த பெட்டிக்குச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதும், பாபா சீற்றமடைந்தார்: **"மண்டலியுடன் நேரத்தை**

**செலவிட்டு, எனது சகவாசத்தை வழங்க நான் இங்கு வந்துள்ளேன், அதே நேரத்தில் அவர் வேறு எங்கோ சென்றுவிடுகிறார்.**"

சீற்றமடைந்த பாபா எழுத்துப்பலகையில் விஷ்ணுவிடம், "**அவரிடம் சொல்லுங்கள்: 'ராம்ஜூ அப்துல்லா, நீங்கள் ரயிலிலிலிருந்து குதித்து உயிரைத் துறக்க வேண்டும்!**'" பாபா கோபமாக இருந்ததைக் கண்டு, மண்டலி நடுங்கினர். சூழல், பதற்றம் நிறைந்ததாகக் காணப்பட்டது. "**இந்தச் செய்தியை ராம்ஜூவிடம் போய் சொல்லுங்கள்!**" என்று மீண்டும் கூறியதும் விஷ்ணு, புக்கார் இருவரும் அழ ஆரம்பித்தனர்; இந்தச் செய்தியை வழங்கினால், ராம்ஜூ நிச்சயமாக அதைச் செய்வார்.

"**ஏன் அழுகிறீர்கள்?**" பாபா, புக்காரிடம் கேட்டார். ராம்ஜூவை மன்னிக்க வேண்டும் என்று புக்கார் முறையிட்டார். சிறிது நேரத்தில், பாபா நடந்ததை மறந்து விடுங்கள் என்று கூறிய வேளையில், அவருடைய மனநிலை சீரானது.

குருதுவாடி ரயில் நிலையத்தில், பால் நாத்து அவசரமாக ரயிலுக்குள் நுழைந்து, அங்கு வந்த மக்களுக்கு பாபா, தரிசனம் வழங்குமாறு வேண்டினார். அதற்கு இணக்கம் தெரிவித்த பாபா, ரயில் பெட்டியைவிட்டு வெளியேறியபோது, திரள் திரளாக மக்கள் காத்திருந்தனர். பாபாவை மூன்றாம் வகுப்பு காத்திருப்பு அறைக்கு அழைத்துச் செல்வது முடியாதது போலத் தோன்றினாலும், மண்டலி கூட்டத்தைச் சமாளித்து, அவரை சுற்றி அனைத்து பக்கங்களிலும் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கினர். இந்த நிலையில் பாபாவை அனைவராலும் பார்க்க முடியாததால், கூட்டம் அதிருப்தி ஆரவாரத்தை ஏற்படுத்தியது. கூட்டத்தைத் திருப்திப்படுத்த, பாபா ஒரு தேநீர் முகப்பிடத்திலும், பின்னர் ஓர் அலமாரியின் மேலேயும் நின்றார், இதனால் அனைவரும் அவரைப் பார்க்க முடிந்தது. பூக்கள் மற்றும் பழங்களை வழங்க மக்கள் முன்னோக்கி விரைந்து செல்ல ஆர்வமாக இருந்ததால், தள்ளு முள்ளு தொடங்கியது. மிகுந்த சிரமத்திற்குப் பிறகு, பாபா மீண்டும் தமது ரயில் பெட்டிக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்; 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற கோஷம், பாபா ரயில் நிலையத்தை விட்டு வெளியேறும் போதும் எதிரொலித்தது.

ஷோலாப்பூரில் ரயில் நின்றதும், ராமகிருஷ்ண ஜாஜு (RAMAKRISHNA JAJU), மணிபேன் பாரேக் (MANIBEN PAREKH) இருவரும் அங்குக் கூடியிருந்த மக்களுக்கு தரிசனம் வழங்குமாறு பாபாவிடம் மன்றாடினர். எனவே பாபா ரயில் நிலையத்தை விட்டு வெளியே சென்றபோது, அங்கும் திரளான மக்கள் காத்திருந்தனர். பாபா எழுத்துப்பலகையில் இந்தச் செய்தியை எடுத்துரைத்தார்:

**நான் எனது மௌனத்தைக் கைவிடும் வரை, நான் உங்கள் மூலமாகக் கேட்கிறேன், பேசுகிறேன். என்னை அறிய, நீங்கள் என்னை நேசிக்க வேண்டும். நான் உங்களில் ஒருவன். அன்பின் மூலம் நீங்கள் என்னை அறியலாம்.**

**கடவுளின் அம்சங்களில் ஒன்று எல்லையற்ற நேர்மை. நேர்மையுடன் மக்களுக்கு சேவை செய்தால் அதுவும் அன்புதான். தன்னையே**

**மறக்கும் அளவுக்கு என்னை நேசிப்பவன் எனது உண்மையான சுயத்தை அறிய முடியும்.**

**கடவுளை விளக்க முடியாது; அவர் இதயத்தின் மொழிக்கு மட்டுமே செவிமடுக்கிறார்.**

இந்தச் செய்தியை வழங்கி, பாபா உடனடியாக தமது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார்.

இரவில், ஒரு ரயில் நிலையத்தில் நின்றபோது, பெண்டு, பாவ், சிது மூவரையும் பாபா அழைத்து, "**நான் விழித்திருக்கும் வேளையில் நீங்கள் தூங்குகிறீர்கள்! உங்களுக்கு வெட்கமாக இல்லையா?**" என்று கேட்டு அவர்களைக் கண்டித்தார்.

பெண்டு, "நாங்கள் தூங்குகிறோம் என்று யார் கூறுகிறார்கள்? நாங்கள் எப்போதும் விழித்திருந்தோம், நாங்கள் தூங்குவதற்கு நேரம் எங்கே இருக்கிறது?" என வினவினார்.

பாவ், சிது இருவரையும் எச்சரித்த பாபா, அவர்களை அடுத்த ரயில் நிலையத்தில் இறங்கி மெஹராபாத்திற்குத் திரும்புமாறு கூறி, "**நீங்கள் என்னுடன் வருவதால் என்ன பயன்?**" என்று கேட்டார்.

உண்மையாக நடந்தது என்னவெனில், ஜால்பாய், அலோபா, டாக்கே, சகன், குஸ்தாஜி, கிஷன் ஸிங், கிருஷ்ணா, கிருஷ்ணாஜி, குமார், ஷஹஸ்த்ரபுத்தே ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தனர்; அதே வேளையில் பெண்டு, பாவ், சிது மட்டுமே விழித்திருந்தனர். ஆனாலும் அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள்! பிற அனைவரும் இதை அறிந்ததும், பாபாவின் இந்தக் கண்டன வார்த்தைகள் அனைவரையும் விழிப்படையச் செய்தது.

மீண்டும் அடுத்த ரயில் நிலையத்தில், பாவ் கல்சூரியை வரவழைத்து பாபா வினவினார், "**என்ன நோக்கத்திற்காக என்னுடன் வந்தீர்கள்? நான் தூங்கிக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் கதவைத் தட்டுவது என்னைத் தொந்தரவு செய்தது. நீங்கள் ஏன் ஒவ்வொரு முறையும், ரயில் நிற்கும் வேளையில் கீழே இறங்கி வந்து, எவரும் எனது பெட்டிக்குள் நுழைந்து என்னை தொந்தரவு செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடாது?**"

இதற்கிடையில், சிதுவை மன்னித்து பாபா அனைத்து ஆண்களையும் தூங்க அனுமதித்தார். ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அவர்கள் மஹாபலேஷ்வருக்குத் திரும்பும் வரை, பாவ் ஒவ்வொரு நிறுத்தத்திலும், இரவும் பகலும் இறங்கி, பாபாவின் கதவுக்கு முன்னால் காவல் காக்க வேண்டியிருந்தது.

ரயில் விஜயவாடா நிலையத்தை இரவு 8:20 மணிக்கு வந்தடைந்தது. 1954 பிப்ரவரி 20 சனிக்கிழமை, நடைமேடை முழுவதும் பாபாவின் அன்பர்கள் மற்றும் பக்தர்களால் நிரம்பி வழிந்தது. 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' எனும் முழக்கம் காற்றை நிரப்பியது. சிந்தா சர்வராவ் (CHINTA SARVARAO), அவரது தொழில் பங்குதாரர் மற்றும் விஜயவாடா நிகழ்ச்சியின் தலைமை பொறுப்பாளர் மஜேட்டி

ராமமோகன் ராவ் (MAJETY RAMAMOHAN RAO), மாணிக்யால ராவ் (MANIKYALA RAO) ஆகியோர் ரயிலில் பாபாவின் இருக்கைக்கு விரைந்து வந்து அவருக்கு மாலை அணிவித்தனர். ஸாவ்னேர், நாக்பூர், ஹமிர்பூர் ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள் விஜயவாடாவில் குழுவுடன் இணைந்தனர். அவர்களில் கிஷன் ஸிங்கின் மகன் மதன் (MADAN) டெல்லியிலிருந்து நிகழ்ச்சிகளைத் திரைபடமாக்க வந்திருந்தார்.

ரயிலிலிருந்து இறங்கியதும், பாபாவிற்கு ஏராளமான மக்கள் மாலைகளை அணிவித்தனர். பாபாவை கூட்டத்தினூடே அழைத்துச் செல்வது கடினமாக இருந்தது, ஆனால் மண்டலி அவரை, வெளியே கவனமாக வழிநடத்தினர்; அங்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கார் ஒன்று காத்திருந்தது. மஜேட்டி ராமமோகன் ராவின் குடும்ப இல்லத்திற்கு பாபா அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து மண்டலி பேருந்தில் சென்றனர். சிந்தா, மஜேட்டி, மாணிக்யால ராவ் குடும்பங்கள் மற்றும் முக்கிய ஆந்திர சேவகர்களையும் பாபா சந்தித்தார். பாபாவின் ஆரத்தியின் நிறைவில் பல்வேறு தரிசன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் அனைவருக்கும் அறிவுரைகளை வழங்கினார்:

**"ஆந்திராவின் ஒவ்வொரு சேவகரும், சிறியவர், பெரியவர் அனைவரும், மார்ச் 2 அன்று நடைபெறும் கூட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அனைத்து சேவகர்களுக்கும் நான் விளக்க விரும்புவதை விளக்குவேன்; ஏனெனில் இது எனது கடைசி பயணம். ஆந்திராவில், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, மார்ச் 21ஆம் நாள் அஹமதுநகரில் மற்றுமொரு நிகழ்ச்சி நடைபெறும். அதைத் தொடர்ந்து, நான் பேசும் கடைசி நிகழ்ச்சியைத் தவிர, வேறு எந்த நிகழ்ச்சியும் இருக்காது! இதை அனைத்து சேவகர்களுக்கும் விளக்க விரும்புகிறேன். எனவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். எனக்காகப் பணிபுரிபவர்கள் என்று கே.டி.ஆர்.எம்** - K.D.R.M. (**குடும்ப சாஸ்திரி** - KUTUMBA SASTRI, **தனபதி** - DHANAPATHY, **ரங்கா ராவ்** - RANGA RAO, **மல்லிகார்ஜுன ராவ்** - MALLIKARJUNA RAO ஆகிய நான்கு பேரைக் குறிப்பிட்டு) **தேர்ந்தெடுக்கும் அனைவரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்."**

பாபாவின் மண்டலி அனைவரும் கன்யகா பரமேஸ்வரி தர்மசாலாவில் (KANYAKA PARAMESHWARI DHARAMSHALA) தங்கியிருக்க எரச், சகன், சிது, மெஹர்ஜி ஆகியோர் பாபாவுடன் இருந்தனர். மறுநாள் அந்தக் குழு குண்டூர் (GUNTUR) நகரம் செல்ல இருந்தது. இம்முறை தர்மராவ் (DHARMARAO) கார், பேருந்து, வேன், ஜீப் என்று வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து பாபாவின் காரை அவரே ஓட்டிச் சென்றார்,.

1954 பிப்ரவரி 21 காலை 6:30 மணிக்கு, மண்டலி, பாபாவின் இருப்பிடத்தில் அவருக்கு முன்பாக கூடியிருந்தனர். **"நன்றாகத் தூங்கினீர்களா?"** என பாபா அவர்களிடம் கேட்டு, பின்பு கூறினார், **"எனது**

தூக்கத்தில் இரண்டே நிமிடம் தூங்கினால், நீங்கள் கடவுளை உணர்ந்துவிடுவீர்கள்!"

பாபா, தனபதி ராவிடம் இவ்வாறு தெரிவித்தார்: "(மார்ச் 2ஆம் தேதி) சிறிய மற்றும் பெரிய சேவகர்கள் அனைவரும் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஏனெனில், பணி நேர்மையாக செய்யப்பட வேண்டும் அல்லது நிறுத்தப்பட வேண்டும். நான் காலங்காலமாக பணிபுரிந்து வருகிறேன். நான் மட்டுமே பணிபுரிகிறேன். ஆனால் நீங்கள் எனது பணியைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால், அது நேர்மையாக செய்யப்பட வேண்டும். பணி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன், இதில் எந்த சமரசம், போட்டி மனப்பான்மை, ஆணவத்திற்கும் இடமில்லை,

"நான் எங்குச் சென்றாலும், மக்களுக்கு நான் யார் என்று கூட தெரியாது, அவர்கள் எனது பெயரைக் கேட்ட மறு கணமே, என்னிடம் ஒன்று திரண்டு விடுகிறார்கள், இன்று காலை (5:50 மணிக்கு) மூன்று செய்திகளை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தேன். செய்திகள் என்றால் அவற்றில் ஒன்றும் இல்லை என்று காலாதி காலமாக எனக்குத் தெரியும். என்னைப் போல் உங்களையும் மாற்றுவதே எனது ஒரே செய்தி!"

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "நான் பிடிகொடாமல் அதிமிகையாக வழுகிச் செல்லும் தன்மையுடையவன். நீங்கள் என்னை ஒருபோதும் பற்றிக்கொள்ள மாட்டீர்கள், ஏனெனில், தெய்வீகத் தன்மையுடன் இருப்பதோடு, நான் மனிதனாகவும் இருக்கிறேன். எனது விருப்பத்தில், 100 சதவிகிதம் உங்கள் விருப்பத்தை இழந்தால் மட்டுமே, நீங்கள் என்னை அறிவீர்கள், இல்லையேல் இல்லை. ஏக இறைவன் எனும் உண்மையான அனுபவத்துடன் ஒப்பிடுகையில், இதர எல்லா அனுபவங்களும் பயனற்றவை.

"இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்," என்று கூறி, பாபா எடுத்துரைத்த மூன்று செய்திகளை வாசிக்குமாறு எரச்சிடம் கேட்டுக்கொண்டார்.

முதல் செய்தி:

மனதின் குரலுக்கு செவிமடுக்காதீர்கள். இதயத்தின் குரலை மட்டும் கேளுங்கள். மனம் அலைபாய்வது; இதயம் தளராதது. மனதில் அச்சம் இருக்கும்; இதயம் அஞ்சாது. மனம் என்பது சந்தேகங்கள், தர்க்கரீதியான சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளின் வீடு; இதயம் சுத்திகரிக்கப்படும்போது, அன்பான கடவுளின் வாசஸ்தலமான இல்லம். எனவே உங்கள் இதயம் கீழ்த்தரமான மனோ இச்சைகள், சபலம் மற்றும் சுயநலம் ஆகியவற்றிலிருந்து விடுபடும் வேளையில், கடவுள் உங்களில் சுயமாக வெளிப்படுவார்.

இரண்டாவது செய்தி:

ஏழையாக இருந்தாலும், செல்வந்தனாக இருந்தாலும், மகிழ்ச்சியாக அல்லது துன்பமாக இருந்தாலும், உங்களது சூழ்நிலைகளைப் பொறுத்தவரை

**திருப்தியுடன் இருங்கள். கடவுள் அதை உங்கள் சொந்த நலனுக்காக வடிவமைத்துள்ளார் என்பதைப் புரிந்துகொண்டு அவருடைய விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள்.**

**நீங்கள் என்றென்றும் இருந்தீர்கள், எப்பொழுதும் இருப்பீர்கள். ஆண், பெண், அழகானவர், அழகற்றவர், வலிமையானவர், பலவீனமானவர், ஆரோக்கியமானவர், நோய்வாய்ப்பட்டவர், சக்தி வாய்ந்தவர், ஆதரவற்றவர் என எண்ணிலடங்கா வடிவங்களை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆன்மீக சுதந்திரம் உங்களை வந்தடையும் வரை, நீங்கள் பல வடிவங்களில் பிறவி எடுப்பீர்கள். அப்படியானால், அதிக பிணைப்புகளை உருவாக்கும் தற்காலிக நிவாரணத்தை ஏன் தேட வேண்டும்?**

**கடவுளிடம் பணம், புகழ், அதிகாரம், உடல்நலம் அல்லது குழந்தைகளைக் கேட்காதீர்கள், ஆனால் நித்திய பேரின்பத்திற்கு வழிவகுக்கும் அவருடைய அன்பின் அருளை நாடுங்கள்.**

<u>மூன்றாவது செய்தி</u>:

**செல்வந்தர்களுக்கு நானே செல்வந்தன். ஏழைகளுக்கு நானே ஏழை. எழுத்தறிவு உள்ளவர்களுக்கு, நான் மிகவும் எழுத்தறிவு பெற்றவன். படிப்பறிவில்லாதவனுக்கு நான்தான் அதிகம் படிக்காதவன். இவ்வாறு நான் உங்களில் ஒருவன், உங்களோடு ஒருவன், உங்கள் மத்தியில் ஒருவன். நாம் அனைவரும் ஒன்று.**

**இந்த 'ஏக இறைநிலை'யின் ஒன்றான தன்மையை உணர, கடவுளை முழு மனதுடன், நேர்மையாக நேசிக்கவும், இந்த உயர்ந்த அன்பின் பலிபீடத்தில் அனைத்தையும் தியாகம் செய்தால், உங்களுள் இருக்கும் அன்பானவரை நீங்கள் உணர்வீர்கள்.**

இ.என். மூர்த்தி (E.N. MURTHY), அவரது சொந்த ஊரான பெனுகொண்டாவில் (PENUGONDA) கே.டி.ஆர்.எம். (K.D.R.M.) எந்த ஒரு தரிசன நிகழ்ச்சியையும் நிர்ணயிக்கவில்லை என்று, பாபாவிடம் புகார் கூறினார், அங்கு வாழும் மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக மிகவும் ஆர்வமாக இருந்தனர். சேவகர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பாபா இறுதியில் 24ஆம் தேதி ஐந்து நிமிடங்களுக்கு பெனுகொண்டா செல்ல ஒப்புக்கொண்டார்.

விஜயவாடாவிலிருந்து 20 மைல் தொலைவில் அமைந்த குண்டூர் நகருக்கு, பாபாவும் குழுவினரும் புறப்பட்டனர். கே.டி.ஆர்.எம். மற்றும் இதர சேவகர்களும் உடன் சென்றனர். கிருஷ்ணா நதி, அதன் கால்வாயின் இனிமையான இயற்கைக்காட்சிகளுடன் இணைந்து சென்ற வாகனங்கள், காலை 9:15 மணிக்கு குண்டூரைச் சென்றடைந்தன. மட்டி சுதர்ஷனம் (MADDI SUDARSHANAM) என்பவர் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்; துப்பாக்கி சத்தம் முழங்க, பாபாவை மனதார வரவேற்றார்! பாபா, சுதர்ஷனத்தின் குடும்பத்தாரை சந்தித்து, பெண்மணிகளுக்கு தரிசனம் வழங்கத் தொடங்கினார். ஆந்திராவில் காணப்பட்ட பூக்கள், பழங்கள் மற்றும் இனிப்புகளின் குவியல்கள், வார்த்தைகளுக்கு

அப்பாற்பட்டு இருந்தன. பாபா சென்ற இடமெல்லாம் அவற்றின் குவியல்களாகவே தென்பட்டன. தரிசனத்திற்கு வருபவர்கள் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கக் கூடாது என்று கூறப்பட்டதால், அவர்கள் விரைவாக, கூப்பிய கைகளுடன் அவருக்கு முன்னால் சென்றனர்.

குண்டூர் நகர பெண்மணிகளுக்கு தரிசனம் வழங்கிய பின்பு, பாபா, சுதர்ஷனத்தின் இல்லத்திற்குச் சென்று, அவர்களின் பூஜை அறையில் அமர்ந்தார்; அங்கு அவரது ஆளுயர ஓவியம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இல்லத்துப் பெண்மணிகள் கண்ணீர் நிறைந்த கண்களுடன் அவரது ஆரத்தியை நிகழ்த்தினர்.

காலை 9:35 மணிக்கு, சாய் ஸமாஜின் (SAI SAMAJ) சார்பில் கட்டப்பட்டு வரும் சாய் பாபா கோவில் நிலைகொண்ட இடத்திற்கு, பாபா விஜயம் செய்தார். மெஹர் பாபாவின் இருக்கையாக, முழுமையாக அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனம் அங்கு வைக்கப்பட்டிருந்தாலும், அதற்கு பதிலாக அவர் தரையில் அமர்ந்தார். அவர் சாய் பாபாவின் புகைப்படத்தையும், கோவிலின் அடிக்கல்லையும் தொட்டு, **“இந்த சந்தர்ப்பத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். இந்த மகத்தான முதியவர் (சாய் பாபா) ஆன்மீக உலகில் ஒரு தனித்துவமான ஆளுமையைக் கொண்டிருந்தார்; அவருக்கும், அவரைப் போன்ற பரிபூரண குருநாதர்களில் சிலருக்கு மட்டுமே தெரியும் - நான் ஆதிகால புருஷன், அவதார புருஷன் என்று!”**

அதைத் தொடர்ந்து, பாபாவும் மண்டலியும் குண்டூரில், முனிசிபல் பூங்காவில் அமைக்கப்பட்ட வெகுஜன தரிசன பந்தலுக்குப் புறப்பட்டுச் சென்றனர், அங்கு பாபாவிற்கு வரவேற்புரை வழங்கி அவரது ஆரத்தியும் நிகழ்த்தப்பட்டது.

பல்வேறு உரைகளுக்குப் பிறகு, ராம்ஜூ ‘உண்மையான தரிசனம்’ (REAL DASHAN, டெஹ்ரா டூனில் வழங்கப்பட்டது) பற்றிய பாபாவின் நற்செய்தியைப் படித்தார். காலை 10:30 மணிக்கு, பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நாம் அனைவரும் ஒன்று. உங்கள் ஒவ்வொருவருள்ளும் அளவிறுதியற்ற தன்மை உள்ளது, ஆனால் அறியாமையின் காரணமாக, ஒவ்வொருவரும், ஒருவிதமான உதவியற்ற தன்மையை உணர்கின்றனர். ஒவ்வொருவரும், மிகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும், பேரின்பமிக்கவர்களாகவும் இருந்தும், மிகவும் பலவீனமாகவும் பரிதாபமாகவும் உணர்கின்றனர் என்பது மிகப்பெரிய தெய்வீக நகைச்சுவை. இந்த அறியாமை உங்களை விட்டு நீங்கும் அடுத்த கணமே, நீங்கள் அனைத்து சக்தி மற்றும் பேரின்பத்தின் எல்லையற்ற ஆதாரமாகத் திகழ்வீர்கள். மேலும், நான் உங்கள் அனைவருள்ளும் இருப்பதால், என்னில் உங்களை இழக்கும் வகையில், நீங்கள் முழு மனதுடன் என்னை நேசித்தால், இந்த அறியாமை நீங்கிவிடும் என்று என்னால் அதிகாரப்பூர்வமாகச் சொல்ல முடியும்.**

**ஏழை, செல்வந்தர், படித்தவர், படிப்பறிவற்றவர், சிறியவர், பெரியவர் - அனைவரும், ஒளிரும் உணர்வுடன் என்னை நினைவில் கொண்டு நேசிக்க**

**முடியும், அதற்கு எந்தவிதமான சடங்குகளும், முயற்சிகளும் தேவையில்லை. மனிதகுலத்திற்கு தன்னலமற்ற சேவை செய்வதன் மூலமும் நீங்கள் என்னை நேசிக்கலாம். 'தன்னலமற்ற சேவை' என்ற சொற்றொடர் மிகவும் பொதுவாகவும், சாதாரணமாகவும் பயன்படுத்தப்படுவதால், அதைக் குறிப்பிடுவதில், அதன் உண்மையான நோக்கம் இழக்கப்படுகிறது. உங்கள் சுய மகிழ்ச்சியைக் கூட ஈடாக வைத்து, நீங்கள் அதைச் செய்யும்போது மட்டுமே, பிறருக்கு சேவை செய்கிறீர்கள், அப்போது உங்கள் மனதில் 'சேவை செய்தோம்' என்ற எண்ணம் சிறிதளவும் இருக்காது.**

**'எனது மௌனத்தால் நான் சோர்வடைந்து போனதால், விரைவில் இந்த எழுத்துப்பலகையைக் கைவிட்டு, மௌனத்தைக் கலைக்க வேண்டும்' என்ற நல்ல செய்தியை இப்போது எனக்கு நானே தெரிவித்துக் கொள்கிறேன்.**

பாபா, பிரசாதம் விநியோகிக்கத் தொடங்கினார், குவியல் குவியலாக பூக்களும் பழங்களும் அவரை சூழ்ந்திருந்தன. பாபா மலர் மாலைகளில் சிலவற்றையும் அன்புடன் வழங்கினார்; அத்தகைய பரிசைப் பெற்றவர்கள், மகிழ்ச்சியில், அவற்றை விலைமதிப்பற்ற நினைவுச் சின்னங்களாக தத்தமது இல்லங்களில் பாதுகாத்தனர். காலம் இதை இவ்வாறு பறைசாற்றியது, "பாபாவின் அலைபாயும் கண்கள், அனைத்து திசைகளிலும் அன்பின் கதிர்களை வீசின; தரிசனத்திற்காக வந்தவர்கள் அவற்றில் நனைந்தனர். அன்பின் கதிர்கள் அவர்களின் இதயங்களில் ஊடுருவி, அவற்றை மதுக் கோப்பைகளாக மாற்றின. இறை போதையின் தாக்கத்தால், மெஹர் பாபா மட்டுமே அவர்கள் கண்களின் முன்னால் இருந்தார். பல வாரங்கள் அவர்கள் உலகையும் அதன் விவகாரங்களையும் மறந்து அவருடைய ஒளியில் மூழ்கினர்!"

குண்டூரில் ஏறக்குறைய 5,000 பேர் ஒன்றுதிரண்டனர். பாபா தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்து புறப்படும்போது, ஒரு சிறுவன் அவரை நோக்கி ஓடி வந்து, சாஷ்டாங்கமாக வணங்கி, பாபாவின் பாதங்களில் தலை வைத்தான். பாபா இவ்வாறான வணக்கத்தைத் தடை செய்திருந்ததால், பதிலுக்கு அவர், எரச்சின் கால்களில் தலைவணங்கி, **"சிறுவன் ஆன்மீகப் பாதையில் பயணிக்கிறான்"** என்பதை வெளிப்படுத்தினார்.

பாபாவும் மண்டலியும் காலை 11:25 மணிக்கு சுதர்ஷனத்தின் இல்லத்தில் மதிய உணவு உண்டனர். அலங்கரிக்கப்பட்ட வராண்டாவில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் பாபா முதலில் அமர்ந்ததும், மண்டலியும் அமர்ந்தனர்.

பாபா, பின்னர் இறங்கி வந்து, புல்வெளியில் சில நிமிடங்கள் நடந்தார். இறுதியாக, சிறிது நேரம் தரையில் அமர்ந்திருந்த பாபா, கைகளைக் கழுவிவிட்டு, தனது அறைக்குச் சென்று, அங்கேயே உணவை உண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்தார்.

மதியம் சுமார் 1:00 மணியளவில், பாபா மண்டலியை தன் அறைக்கு அழைத்தார். பாபா, ஆன்மீகப் பாதையில் இருப்பதாகக் கூறிய அந்த சிறுவன், பாபாவின் அருகில் படுக்கையில் அமர்ந்து, பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு,

உற்சாகமாகத் தனது கைகளால் சைகைகளைக் காட்டிக்கொண்டும் இருந்தான். மஹாதேவைப் (சிவன்) பற்றிய ஒரு பாடலைப் பாடுமாறு பாபா அவரிடம் சைகையால் தெரிவித்ததை, அவன் மிகுந்த அன்புடன் செய்தான்.

உள்ளூர் சேவகர்களில் ஒருவர், "பாபா, குண்டூர், பக்தி பாடகர்களுக்கு மிகவும் பெயர் பெற்றது" என்றார்.

சிறுவனைச் சுட்டிக்காட்டி பாபா, "**உண்மையான பக்தி இசை இங்கே இருக்கிறது**" என்று பதிலளித்தார்.

இறை போதையில், சிறுவன் பாபாவைப் பற்றி பேசத் தொடங்கினான்; பாபா அவனைத் தழுவி, அவரது சித்திரத்துடன் கூடிய ஒரு பேழையை சிறுவனிடம் கொடுத்தார். மேலும் அவனைத் தனது மடியில் அமரச் செய்து, பாபா சிறுவனிடம், "**பாபா கடவுள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்**" என்றார்.

அன்று மதியம் 1:30 மணிக்கு, பாபா விஜயவாடாவிற்குத் திரும்பிச்செல்ல இருந்தார். வழியில் அவர் பாரம்பரிய புனித ஸ்தலங்களான ராம்நாம், ஓங்காரா மற்றும் ராமருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கோவிலுக்கும் சென்றார், அங்கு அவரது ஆரத்தி நிகழ்த்தப்பட்டது.

பிற்பகல் நான்கு மணிக்கு விஜயவாடா வந்தடைந்த பாபா, நேரடியாக, ராம மந்திரத்தில் (RAMA MANDIRAM) எழுப்பிய தரிசன பந்தலுக்குச் சென்றார்; அங்கும் திரள்திரளாக மக்கள் கூடியிருந்தனர். அவருக்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவித்து, ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. ஒரு கட்டத்தில், பாபா, திடீரென மேடையிலிருந்து இறங்கி, மக்கள் மத்தியில் தரையில் அமர்ந்து கூறினார்: "**நான் உங்களில் ஒருவன் என்பதை நீங்கள் உணர வேண்டும், அதனால்தான் நான் இப்போது உங்களுடன் தரையில் அமர்ந்திருக்கிறேன். நான் உங்கள் ஒவ்வொருவரின் நிலையிலும் இருக்கிறேன், ஏழையாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும், சிறியவராக அல்லது பெரியவராக இருந்தாலும், நான் உங்கள் ஒவ்வொருவரையும் போலவே இருக்கிறேன், ஆனால் என்னை நேசிப்பவர்கள் மட்டுமே என்னை அணுக முடியும்**.

**"எனது அன்பில் தன்னை இழக்கக்கூடியவர்கள் மட்டுமே என்னில் தங்களைக் கண்டுகொள்வார்கள்.**

**"இது வெற்றுப்பேச்சு அல்ல, ஆனால் ஓர் அதிகாரப்பூர்வ அறிக்கை: நித்தியமாக, என்றென்றும் நான் என் அன்பர்களின் அடிமையாக இருந்தேன், எப்பொழுதும் அப்படியே இருப்பேன்.**"

பாபா ஏன் திடீரென மேடையை விட்டு வெளியேறினார்? சில பண்டிதர்கள், இந்து சமய நூல்களையும் தத்துவங்களையும் கற்றறிந்தவர்கள், "இதோ, இங்கே தன்னைக் கடவுள் என்று அழைக்கும் ஒருவர், சோஃபாவில் சௌகரியமாக சாய்ந்து கொண்டிருக்கிறார். மக்கள் அவருக்கு மாலை அணிவித்து ஆரத்தி நிகழ்த்துகின்றனர். அங்கே அவர் சோஃபாவில் அமர்ந்து ஓய்வெடுக்கிறார்; இங்கே நாம் வெயிலில் தரையில் அமர்ந்திருக்கும் வேளையில், அவரை எப்படிக் கடவுள் என்று சொல்ல முடியும்?" என்று

விமர்சிக்கத் தொடங்கினர். ஆனால், பாபா, தாமே தரையில் அமர்ந்து செய்திகளை வழங்கியபோது, அவர்கள் பாபாவின் சர்வ ஞானத்தைப் புரிந்துகொண்டு, வெட்கத்தில் ஆழ்ந்தனர். தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, பண்டிதர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி பிறரிடம் பேசியபோது, பாபா ஏன் மேடையை விட்டு வெளியேறினார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

பாபாவை விஜயவாடா மையத்தினர் வரவேற்றனர்; அப்போது அவருடைய விருப்பத்திற்கிணங்க, ராம்ஜூ வாசித்த ‘மாயைகளுடன் விளையாட்டு’ (PLAYING WITH ILLUSIONS) என்ற செய்தியை, குடும்ப சாஸ்திரி தெலுங்கில் மொழிபெயர்த்து வழங்கினார்.

பிப்ரவரி 21ஆம் தேதி பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த மூன்று செய்திகள் வாசிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து வெகுஜன தரிசனம் ஆரம்பமானது.

ஏறக்குறைய 10,000 பேர் தரிசனத்திற்காக வந்திருந்தனர்; அவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகிக்கொண்டே இருந்தது. சில சமயங்களில், கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனது. பாபா இது குறித்து மண்டலியை முன்கூட்டியே எச்சரித்திருந்தார், மேலும் ஆந்திரா சேவகர்களின் உதவியுடன், குமார், அனைத்தையும் மேற்பார்வையிட முன்வந்தார். ஆனால் பிரசாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அவசரத்திலும் ஆர்வத்திலும் மக்கள் கூட்டம் மேடையை நோக்கி விரைந்தது.

ஒரு தடித்த மனிதர், பாபாவின் பாதங்களைத் தொட விரும்புவதாக வலியுறுத்திக் கூறினார். புக்காரின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அவர் பாபாவை அணுகி, அவரது பாதங்களைத் தொட்டார். புக்கார் உடல் அமைப்பிலும், வலிமையிலும் கணிசமான அளவுடன் இருந்தபோதிலும், புக்காரால் அந்த மனிதனைத் தடுக்க முடியவில்லை.

ஒரு மணி நேரத்தில், ஏறக்குறைய 10,000 பேர் தரிசனம் செய்தனர், ஆனால் ஏறக்குறைய அதே எண்ணிக்கையில் தரிசனத்திற்காக மக்கள் காத்திருந்தனர். குழப்ப நிலையில் இருந்த கும்பலை கட்டுப்படுத்த முடியாமல் போனது. சரியாக ஆறு மணிக்கு, பாபா எழுந்து நின்று, கரங்களைக் கூப்பி, வணங்கிவிட்டு, தன் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். முந்தைய சந்தர்ப்பங்களில், அவர் இரவு வெகுநேரம் வரை, பிரசாதம் விநியோகிப்பதைத் தொடர்ந்தார், ஆனால் அன்று மாலை பாபா, அவருக்கே உரிய காரணங்களுக்காக அவராகவே வெளியேறினார்.

மஜேட்டி ராமமோகன் ராவ் இல்லத்தில், பாபா மண்டலியுடன் இருந்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்:



ஆந்திரா, பிப்ரவரி **1954** (ANDHRA, FEBRUARY 1954)



**"இன்றைய நிகழ்ச்சியை நான் விரும்பினேன்; மிகவும் விரும்பினேன். முதலாவதாக, அவர்கள் மட்டத்தில் அவர்களுடன் தரையில் அமர்ந்தேன். நான் அங்கு அமர்ந்தது வெறும் நிகழ்ச்சிக்காக அல்ல, ஆனால் முழு மனதுடன் நான் அமர்ந்திருந்தேன். மூன்று அல்லது நான்கு முறை நான் எழுந்து நின்றேன், ஆனால் குமார் கூறியது போல, நான் விரும்பியிருந்தால், இந்த குழப்பத்தைத் தவிர்த்திருக்கலாம், ஏனெனில் பெண்மணிகளுக்கு தரிசனம் வழங்குவதை நிறுத்தி, பிரசாதத்தைப் பெற ஆண்களை அழைக்க நான் பலமுறை கேட்டுக்கொண்டேன். எதுவாயினும் இன்றைய நிகழ்ச்சி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது."**

குமாரின் கூற்றுப்படி, "பாபா தரிசன நேரத்தில் குழப்பத்தை விரும்பினார், அதனால்தான் அது ஏற்பட்டது. அவர் எழுந்து நிற்பதைக் கண்டு, மக்கள் அவர் புறப்பட்டுச் செல்லப்போவதாக நினைத்தனர், அதனால் அவர்கள் தரிசனத்தைத் தொடருமாறு கூச்சலிட்டனர். இது பெண்மணிகள் தரிசனம் பெறுவதை தடுத்ததற்காக அல்ல. பாபா குழப்பத்தை விரும்பியதால், அவர் வேண்டுமென்றே அதை உருவாக்கி மகிழ்ந்தார்!"

அதற்கு பதிலளித்த பாபா, "**இதனால் அவர்களின் கவனம் எனது பக்கம் ஈர்க்கப்பட்டது. இதைக் குறித்து உங்களுக்குத் தெரியாது. நான் மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தேன். நான் உங்களுக்கு அறுதியான உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் கவனத்துடன் இருந்திருந்தால், நீங்கள் அதை நம்பியிருப்பீர்கள்.**

**"பல ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தப் பேரளவிலான கூட்டங்களுக்கு மத்தியில், நான் தன்னந்தனியாக, ஒரே ஒருவனாக இருப்பதை ஒரு கணம் உணர்ந்தேன். நான் ஒரு கணம் அவ்வாறு இருந்தேன் என்பதற்கு முழுநிறை நேர்மையும், நாணயமுமான கடவுளே சாட்சி. உண்மையில் என்னை நான் தனியொருவராக உணர்ந்தேன். நேர்மையாக உரைப்பதானால், நான் அவர்களில் ஒன்றிணைந்தேன்.**

**"சில நேரங்களில், நீங்களும் மனதளவில் தனியாகவும், வெறுமையாகவும் உணர்கிறீர்கள். ஏக இறைவனுடன் ஐக்கியமாகும் உண்மையான அனுபவத்துடன் ஒப்பிடுகையில், இந்த அனுபவங்கள் அனைத்தும் பூஜ்யம் - முற்றிலும் பூஜ்யம். இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் பாபாவாக இருந்தால், நானே அனைத்தையும் செய்தேன் என்று அர்த்தம். நான் பாபா இல்லை என்றால் அதனால் என்ன பயன்?"**

மாணிக்யால ராவ், "உங்களின் ஏக இறைத்தன்மையைப் பற்றி நாங்கள் எப்படி அறிவது?" என வினவினார்.

சிரித்துக்கொண்டே பாபா கேலி செய்தார்: "**சில நேரங்களில் நான் ஏன் இந்த அளவுக்கு அளவிறுதியற்றவன் என்று எனக்குப் புரியவில்லை! உண்மையாகச் சொல்கிறேன். நீங்கள் நானாக மாறாதவரை எப்படி என்னை புரிந்துகொள்வீர்கள்?"**

மறுநாள் காலை, 1954 பிப்ரவரி 22 திங்கட்கிழமை, பெனுகொண்டா செல்வது குறித்து மீண்டும் ஒரு விவாதம் நடந்தது. கே.டி.ஆர்.எம். குழுவைச் சார்ந்த சிலர், பாபா அங்கு தரிசனம் வழங்குவதற்கு ஆதரவாக இருந்தனர்; பிறர் ஆதரவு தெரிவிக்கவில்லை. பாபா, கே.டி.ஆர்.எம். உறுப்பினர்களை நோக்கி, **“நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் பெனுகொண்டா மக்கள் என்னை நேசிக்கிறார்களா? எனக்கு, தேவையற்ற கும்பல் வேண்டாம், அன்பர்கள் மட்டுமே வேண்டும், நான் ஏன் கும்பலை விலக்கி வைக்கிறேன்? நான் முழு உலகையும் என்னிடம் கொண்டு வர முடியும். ஆனால் நான் விரும்புவது அன்பு, நேசம். பெனுகொண்டாவில் (உண்மையாக) எனது அன்பர்கள் இருக்கிறார்களா?”**

“பெனுகொண்டா அன்பர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும்” என சேவகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்: **“காலங்காலமாக, வாக்குறுதிகளைக் கடைப்பிடிக்காததில் நான் ஒரு கடந்த கால குருநாதர். நான் கடவுளுக்கு அளித்த முதல் வாக்குறுதியை காப்பாற்றியபோது, இந்த முழுப் படைப்பும் எனது கழுத்தைச் சுற்றிக்கொண்டது. கடைசி வாக்குறுதியை, நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது காப்பாற்றுவேன். இப்போது நீங்கள் நால்வரும் (கே.டி.ஆர்.எம்.) நான் அங்குச் செல்ல வேண்டும் என்று கூறுவதால், நாம் பெனுகொண்டாவிற்குப் போகலாம்.”**

சிந்தா சர்வராவ், மஜேட்டி ராமமோகன் ராவ் இருவரும் அவரவர் அன்பை வெளிப்படுத்தியதில், பாபா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து, அவர்களது குடும்பத்தினரை சந்தித்து, புகைப்படம் எடுத்துக் கொண்டார். வீட்டிற்கு வெளியே, பல அன்பர்கள் ஒன்று திரண்டு ‘மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்று குரல்கொடுத்தனர்!

அன்று காலை 8:00 மணியளவில், பாபா மசூலிப்பட்ணம் (MASULIPATNAM) நகருக்கு, தர்ம ராவ் ஓட்டிச் சென்ற ஃபோர்டு காரில் புறப்பட்டார்; அவருடனான நெருங்கிய தோழமை உணர்வுடன் பாபா, மிகவும் நகைச்சுவையாக உரையாடினார். மசூலிப்பட்ணம் செல்லும் வழியில் பல்வேறு இடங்களில் கூட்டங்கூட்டமாகக் காத்திருந்த மக்களுக்கு, பாபா தரிசனம் வழங்கினார். ஒரு கிராமத்தில் நடந்து கொண்டிருந்த கண்காட்சி விழா ஒன்றில், கைகளால் சுழற்றும் குடை ராட்டினம் மற்றும் சில மகிழச்சியூட்டும் பொழுதுபோக்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. காலை 9:00 மணியளவில் காரை நிறுத்திவிட்டு, பாபா சிறிது நேரம் உல்லாசமாக அவற்றில் அமர்ந்து, சுற்றி மகிழ்ந்தார். இந்தக் காட்சிகளை மதன் காணொளி படமாக்கினார்.

பமாரூ (PAMARU) கிராமத்தில், கூடாரம் ஒன்றில் கூடியிருந்த சுமார் 500 பேருக்கு, மௌன ஸ்வாமி (MAUNA SWAMI) என்பவர் தரிசனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாபா, அங்குச் சென்று கூறினார்: **“நான்**

**உங்களுக்கு எனது எல்லா ஆசீர்வாதங்களையும் வழங்குகிறேன், இப்போது நான் தொடும் இந்தப் பிரசாதத்தில் எனது அன்பு நிரம்பி வழியும்.**"

இரண்டு சிறுமிகள் ஒரு பாடலைப் பாடிய பிறகு, பாபா அங்கிருந்து புறப்பட்டு, காலை 10:15 மணிக்கு மசூலிப்பட்ணத்தை வந்தடைந்தார். பி. லோகநாத ராவ் (P. LOKANADHA RAO) வீட்டில் அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது, மேலும் பாபாவை சந்திக்க முழுக் குடும்பமும் அங்கு வருகை தந்தனர். உணவு பரிமாறப்பட்ட பின்னர், எம்.எஸ்.ஆர். சாஸ்திரியின் (M.S.R. SASTRI) இல்லத்திற்கு பாபா விஜயம் செய்தார். சாஸ்திரி ஒரு வழக்கறிஞராக இருந்தார், அவருடைய குடும்பத்தினர் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர். மசூலிப்பட்ணத்தில் புதிய மெஹர் மையத்தின் திறப்பு விழாவை, காலை 11:30 மணிக்குத் நடத்துமாறு அவர் பாபாவிடம் வேண்டினார். பாபா, அவரே சுயமாகக் கையெழுத்திட்ட புகைப்படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார்.

பாபா கூறினார்: "**என்னைத் தவிர தலைவணங்க நான் வேறு எவரையும் காணவில்லை, ஏனென்றால் எல்லாவற்றிலும் நான் என்னைக் காண்கிறேன். நீங்கள் அனைவரும் ஏற்கனவே நித்தியமாக என்னுடன் இருப்பதால், என்னை உங்களுடையவராக ஏற்றுக் கொள்வதானால், நான் இங்கு வந்து, இந்த மையத்தைத் திறப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இந்த மையம், கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை மக்களுக்குப் புரிய வைப்பதன் மூலம், எனது அன்பின் செய்தியை அது பரப்புமேயானால், அதன் பெயருக்குரிய மதிப்பு இருக்கும். பாபா, உங்கள் அனைவருக்கும் அவரது ஆசீர்வாதங்களை வழங்குகிறார்.**"

மையத் தலைவர்கள் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, பிரசாதம் வழங்குவதற்கு முன்னர், "**எவரேனும் எனது பாதங்களில் தலைவணங்கினால், நான் இங்கிருந்து சென்றுவிடுவேன்**" என பாபா எச்சரித்தார்.

பாபா, சாஸ்திரியின் இல்லத்தில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார், பின்னர் அவர் அன்று மதிய வேளையில், 'சாய் ஸமாஜ்' அனாதை இல்லத்திற்கும் விஜயம் செய்தார். இந்த நிறுவனத்தை நடத்தும் பெண்மணி, திருமதி ஏராப்ரோல் சத்திய நாராயணம்மா (MRS. YERRAPROLE SATYA NARAYANAMMA), பல குழந்தைகளை, பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார். குழந்தைகள் பாடல்களைப் பாட, பாபா அவர்களுடன் ஒரு சிறிய மத்தளத்தை இசைத்தார். திருமதி நாராயணம்மா, பாபாவிற்கு ஒரு டம்ளர் பழரசத்தைக் கொடுத்ததும், அவர் அதில் சிறிதளவை அருந்திவிட்டு, எஞ்சியதை அந்தப் பெண்மணியிடம் அருந்தக் கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து, பாபா, லோகநாத ராவின் இல்லத்திற்குத் திரும்பிய போது, அவரை சந்திக்க அங்குக் கூடியிருந்தவர்களுடன் பாபா உரையாடினார். மதியம் 3:00 மணிக்கு, உணவுக்குப் பின்னர், அவர் முனிசிபல் டவுன் ஹாலில் (MUNICIPAL TOWN HALL) அமைந்த தரிசன கூடாரத்திற்குச் சென்றார், அங்கு இனிமையான பக்தி இசை முழங்க, மக்கள் அவரது வருகைக்காக

காத்திருந்தனர். 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற கோஷத்துடன் பாபா வரவேற்கப்பட்டார்!

அவர் அன்று மாலையில், 'ஷெனாய்' (SHEHNAI) இசைத்ததைப் பெரிதும் பாராட்டி இவ்வாறு கூறினார்: **"இந்த இசையைக் கேட்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது பல்லாண்டுகளுக்கு முன்பு பாடப்பட்ட முதல் பாடலை எனக்கு நினைவூட்டுகிறது, மேலும் அந்தப் பாடல் பிரபஞ்சம் என்று அழைக்கப்படும் இந்த நூதன நிகழ்வை உருவாக்கியது.**

**"கடவுள் எனது மௌனத்தை விரைவில் கலைப்பார், அப்போது, அந்த 'மூல முதலான அசல் பாடல்' மீண்டும் பாடப்படும். கடவுள் மட்டுமே உண்மையானவர், நாம் ஒவ்வொருவரும் கடவுளுடன் நித்தியமாக ஒன்றே என்பதை உலகம் உணரும்."**

இசை நிகழ்ச்சி தொடர்ந்தபோது, பார்வதி என்ற சிறுமி பாடிய பாடல் அவரது இதயத்தைத் தொட்டதாக பாபா குறிப்பிட்டார்.

பாபா, ஏற்கனவே எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த 'சுயத்தை இழப்பது, சுதந்திரத்தை அடையப் பெறுவது' (SELF LOST IS FREEDOM GAINED) என்ற செய்தியை ராம்ஜூ வாசித்தார்:

**எங்கு, எப்போது, காமம், பேராசை, கோபம், பொறாமை, வெறுப்பு, புறம்கூறல் மற்றும் சுயநல ஆசைகள் முற்றிலும் இல்லாமல் இருக்குமோ, அங்கு, அப்போது, கடவுள், அவர் எங்கும் வியாபித்திருப்பவர் என்பதை வெளிப்படுத்துகிறார். ஆனால், அவை கடந்தகால வாழ்க்கையின் ஒன்றிணைந்த மனப்படிவங்களின் விளைவாக இருப்பதால், அவற்றை அவசியம் வெளிப்படுத்தியாக வேண்டும், அவற்றிலிருந்து விடுபடுவது என்பது சாதாரணமாக சாத்தியமற்றது; அது, ஒரு பாறை தன்னைத்தானே தூக்கிக் கொள்ள முயற்சிப்பது போல் இருக்கும்.**

**ஆயினும்கூட, அவற்றிலிருந்து விடுபடுவதற்கு கடந்தகால மனப்படிவங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்தக் கடந்தகால மனப்படிவங்களை வெளிப்படுத்தி, விரயமாக்கும் அதே நேரத்தில், ஒருவரின் கீழ்நிலை குணங்களின் வலியுறுத்தல் காரணமாக, புதிய மனப்படிவங்கள் உருவாக்கப்படுகின்றன. கடந்த கால மற்றும் நிகழ்கால, முடிவிலா மனப்படிவங்களின் பிணைப்பிலிருந்து ஒருவர் விடுபட வேண்டுமாயின், இந்த சுய உறுதித்தன்மை மிக்க தாழ்வுநிலை, ஒழிக்கப்பட வேண்டும்.**

**ஒருவரின் உறுதித்தன்மை மிக்க சுயத்தை அகற்றினால் மட்டுமே, புதிய மனப்படிவங்களின் பிணைப்பை ஏற்படுத்தாமல், பழைய மனப்படிவங்கள் தானாகவே செலவழிக்கப்படும். இந்த நிலையை அடைந்த ஒருவர், நல்லது, தீயது என்ற தனது செயல்களுக்குக் கட்டுப்படவோ, பொறுப்பாகவோ இருக்க முடியாது, ஏனெனில், இது அவரது கடந்தகால குணங்களாகிய நல்லொழுக்கம், பொறுமை, காமம், கோபம், பேராசை போன்றவற்றின் வெளிப்பாடாகும். இவ்வாறு, புதிய மனப்படிவங்கள் உருவாவது தடுக்கப்படுவதால், கடந்தகால மனப்படிவங்கள் அனைத்தும்**

**இயற்கையாகவே விரயமாகும் தருணத்தில், ஒருவர் அனைத்து மனப்படிவங்களிலிருந்தும் விடுபடுகிறார்.**

**உண்மையான யோகாக்களின் (கர்ம யோகா, தியான யோகா, ராஜ யோகா, பக்தி யோகா போன்றவற்றின்) பாதையைப் பின்பற்றுவதே, கடந்த கால மனப்படிவங்களிலிருந்து அடையப் பெற்றதை, நிலையான செயல்களால் வெளிப்படுத்தி, புதிய மனப்படிவங்களின் தொடர்ச்சியான உருவாக்கத்தால் நிலைத்திருக்கச் செய்யும் இந்தத் தீமைகளின் பாரம்பரியத்தை வேரோடு களைவதற்கான தீர்வாகும்.**

**கர்ம யோகாவில் ஒருவர் பிறருக்காகப் புரியும் தன்னலமற்ற சேவையில், தனது 'சுயத்தை' இழக்க முயற்சிக்கிறார்; தியான யோகாவில் ஒருவர் மனதை ஒருநிலைப்படுத்தி, தியானத்தில் ஈடுபட்டு, தனது 'சுயத்தை' இழக்க முயற்சிக்கிறார். ராஜ யோகாவில் ஒருவர் தனிமனித சுயத்துடனான தனது அடையாளத்தை இழந்து, 'உலகளாவிய ஏக இறை'யுடன், நிலையான மன சமநிலை மற்றும் பற்றற்ற தன்மை மூலம் அதாவது, உலகில் இருந்துகொண்டே, ஆனால் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல், தனது அடையாளத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறார். பக்தி யோகாவில் ஒருவர் இறை பக்தியில் தனது சுயத்தை இழக்க முயற்சிக்கிறார். இந்த யோகாக்களில் கூட, உச்சநிலையை அடைந்தால் மட்டுமே, கீழ்நிலை குணங்களின் தனித்தன்மை அழிந்து, உணர்வு நிலைத்திருக்கும்.**

**ஆனால் ஒருவரின் சுயத்தை இழப்பதற்கான எளிதான மற்றும் பாதுகாப்பான வழி, ஒரு பரிபூரண குருநாதர் அல்லது சத்குருவிடம் முழுமையாக சரணடைவதாகும். அதற்குப் பிறகு, சரணடைந்த ஒருவரின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவை குருநாதரின் ஆதிக்கத்தில் மூழ்கிவிடுகின்றன, மேலும் அவர் குருநாதருக்கு முற்றிலுமாக கீழ்ப்படியும் வேளையில் வெளிப்படுத்தப்படும் நல்ல அல்லது தீய செயல்களுக்கு, அவர் இனி கட்டுப்பட்டவராகவோ அல்லது பொறுப்பாகவோ இருக்க மாட்டார். எனவே, பரிபூரண குருநாதரிடம் முழுமையாக சரணடைவதில்தான் முழு சுதந்திரமும் அடங்கியுள்ளது.**

இந்தச் செய்தியை வழங்கியதும், பாபா மேடையை விட்டு வெளியேறி மக்களுடன் தரையில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் மேடைக்குத் திரும்பிய அவர், **"நானும் உங்களில் ஒருவன், அதனால்தான் கீழே வந்து உங்களுடன் அமர்ந்திருந்தேன்"** என்று கூறினார்.

விஜயவாடாவில் வழங்கப்பட்ட முதல் மூன்று செய்திகளையும் வாசிக்குமாறு பாபா ராம்ஜூவிடம் கூறினார். அதே வேளையில் தொடங்கிய தரிசனம் மாலை 5:30 வரை தொடர்ந்தது. ஏறக்குறைய 3,000 பேர் பாபாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சி முடிந்ததும், பாபா என்.எஸ். மூர்த்தியின் இல்லத்திற்குச் சென்றார், அங்கு திருமதி தாயாரம்மா, பாபா முன்னிலையில் பாடி, ஆரத்தியை நிகழ்த்தினார்.

அடுத்ததாக, அங்கிருந்து பாபா, வெங்கட ரத்னம் நாயுடுவின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். கார், வாசலருகில் வந்து நின்றபோது, மாபெரும் மலர் மாலை ஒன்றைத் தாங்கிய வண்ணம் ஒரு சிறுமி வெளியே வந்தாள். பாபா சிரித்துக்கொண்டே, **“ஏற்கனவே எனது கழுத்தில் ஒரு டன் எடை அளவுக்கு மாலைகள் உள்ளன”** என்று அவளிடம் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து, ஏழை குடிசை வாசிகள் வாழும் பாதையில் பாபா நுழைந்தார். அப்போது மாலை 6:45 மணி, பொழுது சாய்ந்து இருள் நிரம்பும் நேரம். வெளியே கட்டிலுடன் காணப்பட்ட ஒரு குடிலை நேரடியாக அணுகி, பாபா தரையில் அமர்ந்தார். அந்தக் குடில், கொத்தனார் ஒருவருடையது, உள்ளே ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பந்துமல்லி லக்ஷ்மாடு (BANTMALLI LAKSHMADU) என்றழைக்கப்பட்ட கொத்தனார், திடுக்கிட்டு வெளியே வந்து, பாபாவின் அருகில் அமர்ந்தார். பாபா முற்றிலும் அமைதியாக இருந்தார், அவரது விரல்கள் வேகமாக நகர்ந்தன. ஐந்து நிமிடம் அங்கேயே இருந்துவிட்டு, தனது பணியில் ஆழமாக மூழ்கி, பின்பு, நாயுடுவின் இல்லத்திற்குத் திரும்பி வந்தார்.

அந்த முதியவர் தீண்டத்தகாத இனத்தவர்களில் (ஹரிஜனங்கள்) மிகவும் தாழ்ந்த நிலை சாதியைச் சேர்ந்தவர் என்பதை மண்டலி பின்பு தெரிந்துகொண்டனர். அப்போது ஆந்திராவில் ஜாதி, மத அமைப்பு கடுமையாக அமலில் இருந்ததால், உயர் ஜாதியினர் கலந்து கொண்ட தரிசன நிகழ்ச்சிகளில், அந்த முதியவர் பங்கெடுக்க முடியவில்லை. பாபா, குடிலுக்கு வருவதற்கு முன்னர், அந்த முதியவர் சோகமாக நினைத்துக் கொண்டிருந்தார்: “நான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி, அவதார புருஷர் இங்கு வந்து, தரிசனம் வழங்குகிறார். பெரும்பாலான மக்கள் அதில் பங்கெடுக்கிறார்கள், ஆனால் என்னால் அவரை ஒரு கண நேரம் கூட பார்க்க முடியவில்லை. கடவுளே, என்னால் முடிந்தாலும் நான் அவரைப் பார்க்க முடியாத நிலை!”

கடவுள் இந்தத் தீண்டத்தகாத ஏழையின் பிரார்த்தனைக்கு செவிமடுத்தது மட்டுமல்லாமல், அதற்கு பதிலளித்தார். கடவுள் அந்த ஏழையின் வீட்டிற்கு வருகை தந்தார். அது மிகவும் மனதைத் தொடும் காட்சியாக இருந்தது. அந்த மனிதர் மிக்க மகிழ்ச்சியடைந்தார், பாபா, அவரை அருகில் அமரும்படி கேட்டுக் கொண்டபோது, அவரால் ஒரு வார்த்தைக் கூட பேச முடியவில்லை.

அவர் வாயடைத்துப்போனார். பாபாவின் தரிசனம் கிடைத்த அதிர்ஷ்டத்திற்கு நன்றி கூற அவரிடம் வார்த்தைகள் எதுவும் இல்லை. எனவே, இந்த வழியில், தன்னை மிகவும் துரதிர்ஷ்டவசமாக நினைத்த அவர் கடவுளின் நேரடி ஆசீர்வாதத்தை மிகையாகப் பெற்றுக்கொண்டார்.

நாயுடுவின் இல்லத்தில், அவரது மகள், பாபாவிற்கு மாலை அணிவித்தார்; அந்த நபர் உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால், அவர் சார்பில் மகள், பாபாவிற்காக எழுதிய கடிதத்தை வாசித்தார், அதில், நாயுடு, பாபாவின் பாதங்களில் சரணடையும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

படுக்கையில் அமர்ந்து, பாபா நாயுடுவின் கால்களைத் தடவி, "**நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நான் ஆதிகால புருஷன். நானே கிருஷ்ணா**" என்று குறிப்பிட்டார்.

பிரசாதம் கொண்டுவந்ததும் பாபா அதைத் தொட்டு, ஆசீர்வதித்து மீண்டும் நாயுடுவிற்கு உறுதியளித்தார், "**நான் என் அன்பர்களின் அடிமை என்று கூறுவது தற்செயலான நிகழ்வு அல்ல. கடைசி நிமிடம் வரை, எனது பெயரை மீண்டும் மீண்டும் கூறுங்கள்: பாபா, பாபா, பாபா!**"

தனபதி ராவ், நாயுடு காது கேளாமல் இருப்பதாக பாபாவிடம் தெரிவித்தார். பாபா, "**நானும் காது கேளாதவன். எனது காதுகளில் விழுவது மிக மிக...**" என்று அவரது வாக்கியத்தை முடிப்பதற்குள், நாயுடுவின் மகள் அவரது ஆரத்தியைப் பாடத் தொடங்கியதால், அவருடைய கருத்தை நிறைவு செய்யாமல், அவர் புறப்பட்டார்.

அன்று இரவு எட்டு மணிக்கு, பாபா மண்டலியுடன் ஏலூரு (ELURU) நகருக்குக் காரில் புறப்பட்டுச் சென்றார், மசூலிப்பட்ணம் அன்பர்கள் அவருக்கு உற்சாகமான பிரிவு உபசாரத்தை வழங்கினர். வழியில் பாபாவிற்குத் தாகம் ஏற்படவே, கோதாவரி கிராமத்தின் அருகே காரை நிறுத்தினார். ஒரு கையில் விளக்கும் மறு கையில் வாழைப்பழத்தையும் ஏந்திய வண்ணம் ஒரு மனிதர் சாலையோரம் நின்று கொண்டிருந்தார். காரை நிறுத்தியதும், அவர் முன்னோக்கிச் சென்று பாபாவை வணங்கி, வாழைப்பழத்தை வழங்கினார். பாபாவின் கார் அவ்வழியாக செல்லும் என்பதை அவர் எப்படிக் கண்டுபிடித்தார் என்பது மர்மமாகவே இருந்தது.

அருகில் கடைகள் எதுவும் இல்லாததால், சிறிது தூரம் சென்றதும் 'துர்கா குளிர்பானக் கடை' என்று அழைக்கப்பட்ட கடை ஒன்றைக் கண்டுகொண்டனர். பாபாவிற்கு சோடா நீர் எடுத்து வர, எரச் உள்ளே சென்றார். எரச் தானே டம்ளரை சுத்தம் செய்ய, அது யாருக்காக என்று கடைக்காரர் விசாரித்தபோது, "எனது குருநாதருக்கு" என்று எரச் பதிலளித்தார்.

"யார் அந்த குருநாதர்?" அவர் வினவினார்.

"மெஹர் பாபா" என்று கூறியபோது, கடையின் உரிமையாளர் சென்று பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். சோடா நீரின் விலையை அவர் ஏற்க மறுத்ததால், '**அதைப் பிரசாதமாகக் கருதி ஏற்றுக்கொள்ளுங்கள்**' என்று பாபா கூறியதும், அவர் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டார். பாபா பின்னர் அனைவரையும் குளிர் பானத்திற்காக உள்ளே அனுப்பி, அவரும் உடன் சென்று, அனைவருக்கும் அவரது கைகளால் பானங்களை விநியோகித்தார். கடை உரிமையாளர் எவ்வளவு அதிர்ஷ்டசாலி, கடவுளே அவரது கடையில் தாகத்தைத் தணித்துக்கொண்டார்.

பாபா மற்றும் குழுவினர் இரவு 11:15 மணிக்கு ஏலூரு வந்தடைந்து, கட்டா சுப்பா ராவ் (KATTA SUBBA RAO) தோட்டத்திற்கு சென்றனர். நுழைவாயிலில்,

பெண்மணிகள் அவரது ஆரத்தியை நிகழ்த்தினர், அதைத் தொடர்ந்து கட்டா சுப்பா ராவ், பாபாவை ஓய்வெடுக்க உள்ளே அழைத்துச் சென்றார். டாக்டர் தேஷ்முக் அவரது மகன் பிரபோத்துடன் ஏலூரு வந்து குழுவுடன் இணைந்தார்.

மறுநாள் காலை, 1954 பிப்ரவரி 23, செவ்வாய்கிழமை, கே.டி.ஆர்.எம். மற்றும் இதர அன்பர்கள் வருகை தந்தனர், ஆனால் கட்டா சுப்பா ராவ் அவரது வீட்டின் கதவுகளை பூட்டியிருந்ததால், அவர் அனுமதித்தவர்கள் மட்டுமே உள்ளே செல்ல முடிந்தது. கதவுகளைத் திறந்து வைக்க பாபா அறிவுறுத்தியதும், கூடியிருந்த அனைவரும் உள்ளே வந்தனர். பாபா அவர்கள் அனைவரையும் அன்புடன் சந்தித்தார். இசைக் குழுவினர் இசைக் கருவிகளை இசைக்க, மக்கள் வரிசையாக பாபாவை அணுகினர். பாபாவை சந்திக்க வந்த பெண்மணிகள் தங்கள் குழந்தைகளை அவரது பாதங்களில் வைக்க, பாபா குழந்தைகளுக்கு முத்தமளித்தார்.

காலை தரிசனம் நிறைவடைந்ததும், கே. நாராயண் ராவ், குருநாதரின் 'பர்வதிகார்' பிரார்த்தனையை (PARVARDIGAR PRAYER) ஆங்கிலத்தில் ஓதினார், ஒரு சேவகர் அதைத் தெலுங்கு மொழியிலும் திரும்பத் திரும்ப மொழிந்தார். சில பண்டிதர்கள் பாபாவின் துதியில் ஸ்லோகங்களைச் எடுத்துரைத்தனர், அதற்குப் பிறகு, பாபா 8:30 மணியளவில் வெளியே வந்து புல்வெளியில் அமர்ந்தார்.

பாபாவின் முன்னிலையில் ஆண்களும் பெண்களும் அமைதியாக நின்றுகொண்டிருக்க, குழந்தைகள் அங்கு விளையாடிக் கொண்டிருந்தனர். அவர் கூறினார்: "**வெளியளவில், நான் அமைதியாக இருக்கிறேன், ஆனால் எனக்கு, சத்தமிடுவது பிடிக்கும் என்று தோன்றுகிறது; அதனால்தான் நான் இந்த சத்தத்தை உங்கள் மூலம் உருவாக்கி** (சத்தம் வரும் குழந்தைகள் விளையாடும் திசையை சுட்டிக்காட்டி), **எவரையும் அவர் விரும்பியபடி பேச அனுமதிக்காமல் தடுக்கிறேன். நீங்கள் அனைவரும் அமைதியாக இருந்தால், நான் திரும்பிச் சென்று, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தபடித் தொடர அனுமதிக்கிறேன், இல்லையென்றால், எல்லோரும் இங்கே அமர்ந்து முடிந்தவரை சத்தம் போடுவோம், ஏனெனில் எனக்கு இங்கே சத்தமிடுவது பிடிக்கும், ஆனால் அங்கு, வீட்டின் வரவேற்பு அறையில் அல்ல.**"

முடிவில், பாபா கூறினார், "**உங்கள் அனைவரின் மூலமாகவும் பேசுவது பாபாதான். உங்கள் அனைவரின் மூலமாக செவிமடுப்பதும் அவரே**".

இதனால் வீட்டு வரவேற்பு அறையில் இருந்த சத்தம் முற்றிலுமாக நின்று போனது. மண்டபத்திற்குத் திரும்பிய பாபா, தனது இருக்கையில் அமர்ந்தார். டாக்டர் கனகதண்டி (DR. KANAKADANDI) வழங்கிய இசை நிகழ்ச்சியை, பாபா பாராட்டினார்.

காலை 9:35 மணிக்கு பாபா கூறினார், "**இந்த ஆண்டு முடிவதற்குள், கடவுள் என்னை 'மூல முதலான பாடலை'ப் பாட வைப்பார், மேலும் என்னை நேசிப்பவர்கள் அந்தப் பாடலில் தொலைந்துபோய், ஒவ்வொருவரிலும் நான் இருப்பதைக் கண்டுகொள்வார்கள்.**"

விஜயவாடாவில் வழங்கிய செய்திகளை ராம்ஜூ மீண்டும் வாசித்தார். அதைத் தொடர்ந்து, பாபா இவ்வாறு கூறினார்: “**நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது, அனைத்து காலங்களிலும் நிகழாத மிகப் பெரிய அதிசயம் நிகழும். அந்தத் தருணத்தில் தெய்வீக அருளைப் பெறுவதற்குத் தகுதியுடையவராக இருங்கள், அதற்காக என் அன்பைப் பெற இப்போதே தயாராகுங்கள். எனது உண்மையான அன்பர்களின் அடிமையாக, நான், எப்பொழுதும் இருந்தேன், இருக்கிறேன்.**”

பாபா அவரது ‘மூல முதலான பாடலை’க் குறிப்பிட்டதும் பலரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. பலர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்; சுவாமி சீதாராம் (SWAMI SITARAM) என்று அழைக்கப்பட்டவர் நடனமாடத் தொடங்கினார். பாபா இசைக்கருவி ஒன்றை எடுத்து இசைக்க ஆரம்பித்தார். சிறிது நேரம் நடனமாடிய சீதாராம், பாபா, இசைப்பதை நிறுத்தியபோதுதான் அமர்ந்தார்.

காலை விழா நிறைவடைந்ததும், மதியம் 1:45 மணிக்கு, பாபா மண்டலியின் அறையை நோக்கி நடந்தார். அவர் தனது கடைசி வருகையின் போது, அவரால் தொட்டு எழுப்பப்பட்ட கல் மேடையின் ஓரத்தில் நின்றார். அந்த மேடையில் பாபாவின் சிலை அமைக்கப்படுவதாக திட்டம், ஆனால் அதற்கு பதிலாக அவரது உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. பாபா அந்த ஓவியத்தை வணங்கிவிட்டு, கட்டா சுப்பா ராவ் ஏன் சிலை எழுப்பவில்லை என்று கேட்டார். இந்த விவகாரம் இன்னும் தீவிரமாக தொடரப்பட்டு வருவதாகவும், தரமான பளிங்குக் கல் கிடைக்கவில்லை என்றும் சுப்பா ராவ் பதிலளித்தார்.

அன்று மதியம் பாபா சிறப்பான மனநிலையில் காணப்பட்டார். வெறுங்காலுடன் வீட்டையும் தோட்டத்தையும் சுற்றி வந்தார். சுமார் பத்து நிமிடங்கள் அவர் புல்வெளி முழுவதும் வேகமாக, முன்னும் பின்னுமாக உலா வந்தார், தீவிர சிந்தனை தோய்ந்த முகத்துடன் தென்பட்டார். பின்னர் அவர் தனது அறைக்கு வெளியே அமைந்த வராண்டாவிற்குத் திரும்பி வந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அவரது வலது கை விரல்கள் அதி விரைவில் தாளமிடுவதுபோல நகர்ந்தன. அவரது வெளிப்பாடும் தீவிரமாக இருந்தது. ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர் எழுந்து வராண்டாவில் நடக்கத் தொடங்கினார். அவர் மீண்டும் அமர்ந்தபோது அவரது விரல்கள் துடிப்புடன் தாளத்தைத் தொடர்ந்தன.

பாபா அங்கே அமர்ந்திருந்த வேளையில், அப்போது வந்த ஒரு தொலைத்தந்தியைப் பற்றி ஆதி சீனியர் அவரிடம் தெரிவிக்க முயன்றார், ஆனால் பாபா அதைக் கண்டுகொள்ளாதவர் போல் இருந்தார். மீண்டும் எழுந்து, பாபா முன்னும் பின்னுமாக நடந்து, பின்னர் அவரது அறைக்குள் நுழைந்தார். அங்கே அவர் நாற்காலியில் தலைக்குப் பின்னால் கைகளைக் கட்டிக்கொண்டு சாய்ந்து அமர்ந்தார். ஆதி அவருக்கு செய்தியை வாசித்தபோது, பாபா சில அறிவுரைகளை வழங்கினார். பாபா பின்னர் எழுந்து நின்று, கதவின் இருபுறமும் கைகளை ஊன்றி, நாற்காலியில் அமருவதற்கு முன்பு, பல நிமிடங்கள்

வராண்டாவையே உற்றுப் பார்த்தார். மூன்றாவது முறையாக, அவர் வராண்டாவில் வெறுங்காலுடன் முன்னும் பின்னும் நடந்தார்; மதியம் 2:50 மணியளவில், குடும்ப சாஸ்திரி கொண்டு வந்த சில அச்சிடப்பட்ட செய்திகளை எடுத்துரைத்து ஆதி அவரது கவனத்தை ஈர்த்தார்.

சாஸ்திரியை நோக்கி பாபா, **“இந்த வாழ்க்கை ஒரு மிகப்பெரிய தெய்வீக நகைச்சுவை. ‘நகைச்சுவை’ என்பது மிகவும் பொருத்தமான வார்த்தை - மிகப்பெரிய தெய்வீக நகைச்சுவை மட்டுமின்றி மிகப்பெரிய பூஜ்ஜியம். இதைப் பூஜ்ஜியம் என்று அழைப்பது கூட, அது வாழ்வதைக் குறிக்கும்”** என்று எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்.

ஏலூரில் ராம் கோட்டி (RAM KOTHI) என்ற பெரிய மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெகுஜன தரிசன நிகழ்ச்சிக்காக பாபா மூன்று மணிக்கு, தனது இருப்பிடத்திலிருந்து புறப்பட்டார் (அவர் அதற்கு முந்தைய ஆண்டும், இங்கு, மாபெரும் தரிசனத்தை வழங்கினார்). முதலில் மேடையில் அமர்ந்த பாபா, கீழே இறங்கி வந்து, சிறிது நேரம் தரையிலும் அமர்ந்தார்.

மேடைக்குத் திரும்பிய அவர், மக்கள் கூட்டத்தில் கூறியதாவது:

**நான் உங்களில் ஒருவன், ஆதலால் நான் உங்களுடன் அமர்ந்தேன். இது வெறும் காட்சி அல்ல, உங்களில் ஒருவராக இருந்த எனது நித்திய, நிரந்தர அனுபவம். நீங்கள் அனைவரும் என்றென்றும் என்னுடையவர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் என்னை உங்களுடையவராக மாற்ற விரும்புகிறேன். அப்போது நீங்கள் ஒவ்வொருவரும் பாபா என்பதை உணர்வீர்கள்!**

குடும்ப சாஸ்திரி தெலுங்கில் ‘குருநாதரின் அன்பும், அருளும்’ (THE MASTER’S LOVE AND GRACE) என்ற தலைப்பில் மொழிபெயர்த்த பின்வரும் செய்தியை, ராம்ஜூ ஆங்கிலத்தில் வாசித்தார்:

**உங்கள் அனைவரையும் இங்குப் பார்ப்பது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது, மேலும், அன்பு மற்றும் பக்தி உணர்வுடன் நீங்கள் என்னை அணுகிய விதத்தை நான் பாராட்டுகிறேன். உங்கள் கஷ்டங்கள், பிரச்சினைகள், துன்பங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நான் அறிவேன், புரிந்துகொள்கிறேன்; இவற்றை நீங்கள் வார்த்தையாலோ செயலாலோ என்னிடம் குரல் கொடுக்க வேண்டியதில்லை.**

**உலகம் பல்வேறு விதத்தில் இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான பேரிடர்களை சந்தித்து வருகிறது. முழு மனித இனத்தையும் சித்தரிக்கும் விதம் உண்மையில் வருந்தத்தக்கது, ஆனால் துன்பம் மனிதகுலத்தின் பாரம்பரியம். தனி மனிதனின் துன்பம் மட்டுமின்றி, உலகம் முழுவதும் அச்சம் மற்றும் வேதனையின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. மனித துன்பங்களுக்குப் பின்னால் இருப்பது ‘தெய்வீக சித்தம்’, ஏனெனில் தெய்வீக சித்தம் இல்லாமல் எதுவும் நடக்காது.**

**உலகில் தனிப்பட்ட, தேசிய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் பல உள்ளன, இவற்றிற்கு சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர்களின் ஆன்மீக வழிகாட்டுதல் இன்றியமையாதது. காலங்காலமாக இந்த இறை-மனிதர்கள் தமது தெய்வீக நற்செய்திகள் மூலம், மனிதகுலத்தை வழிநடத்துகிறார்கள். அவர்கள் பௌதீக உடலைத் துறந்த பின்னரும், இந்த நற்செய்திகளை அவர்களின் சீடர்கள், பக்தர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் உலகின் தொலைதூர மூலைகளுக்கு எடுத்துச் செல்கின்றனர், அவர்கள் தங்கள் உயிரை விலையாக வைத்து கூட அன்பானவரின் வார்த்தையைப் பரப்புகிறார்கள்.**

**அவதார புருஷர்கள் மற்றும் சத்குருக்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட, தனித்துவமான மற்றும் புரிந்துகொள்ள முடியாத வழிகளில், மனித இனத்திற்கும், உலகிற்கும் தங்கள் வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும் வழங்குகிறார்கள். பரிபூரண குருநாதர்கள் மனிதகுலத்தின் உண்மையான இரட்சகர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டும் அல்ல. அவர்களின் அன்பும் அருளும் மட்டுமே பிரபஞ்சத்தை நிலைநிறுத்துகின்றன.**

**ஒரு சீடர் அல்லது பக்தர், ஏன், எப்பொழுது, எதற்காக என்ற சந்தேகக் கேள்விகளின் மேகங்களால் மூடிய மனதுடன் ஒரு குருநாதரை அணுகக்கூடாது. புத்தியின் ஆய்வுகளுக்கு அப்பாற்பட்ட குருநாதரின் அருளைப் பெறுவதற்கு இது ஒரு தடையாக இருக்கலாம்.**

**எனவே, நான் தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன், உறுதியான நம்பிக்கையுடனும், அன்புடனும், பக்தியுடனும், எனது தெய்வீக அன்பையும் அருளையும் அடையப்பெறுவதற்கான ஏக்கத்துடன் என்னை அணுகுங்கள்.**

வரவேற்பு குழு தலைவர் இடரே வெங்கடராவ் (EDARA VENKATA RAO), பாபாவிற்கு ஆரத்தி நிகழ்த்தி, அவரை தரிசனம் செய்து, நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.

பாபா இரண்டு கைகளாலும், ஒரு கையால் ஆண்களுக்கும், மற்றொரு கையால் பெண்களுக்கும் பிரசாதம் வழங்கினார். ஒரு பக்கத்தில் ஆண்கள் வரிசையாக நின்று அவரை அணுகும் அதே நேரத்தில், மறுபுறம் பெண்மணிகள் வரிசையாக வந்தனர். ஸாக்கோரியின் யஷ்வந்த் ராவ், பாபாவின் கைகளில், விரைவாக பழங்களை விநியோகிப்பதற்காக அவருக்கு உதவினார். ஏலூரில் மிகவும் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால், தளபதி குமார் அல்லது இதர மண்டலிக்கு அதிக சிரமம் எதுவும் இல்லை.

இடுப்பில் லங்கோட்டியை உடுத்திய வண்ணம் ஒரு மஸ்த் பிரசாதத்திற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தார். அவர் பாபாவைப் பார்த்து "ராமா, ராமா, ராமா..." என்று உச்சரித்துக் கொண்டிருந்தார்; பாபா அவரைத் தழுவி, தனதருகில் அமர வைத்தார். பாபா தனது கைகளால் அவருக்கு வாழைப்பழத்தை ஊட்டினார். மண்டலியிடம், "**60,000 பேர் அடங்கிய இந்தக் கூட்டத்தில்,** (மஸ்தை சுட்டிக்காட்டி) **அவர் ஒருவரே என்னைப் புரிந்துகொள்பவர்!**" என்று கூறினார்.

தரிசன நிகழ்ச்சி, அன்று மாலை 7:30 வரை நீடித்தது; கிட்டத்தட்ட 20,000 பேர் தெய்வீக, ஒப்பற்ற, புரிந்துகொள்ள முடியாத அன்பான பாபாவின் கைகளிலிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டனர். அதற்குப் பிறகு பாபா தோட்டத்திற்குத் திரும்பிச் சென்றார். இரவும் பகலும் ஆந்திர சேவகர்கள் பாபாவுடன் இருந்தனர். பாபா கூறியது போல், அவர்கள் 'அவரது மார்பில்' இருந்ததால், அவருக்கு ஓய்வு என்பதே இல்லை. அவர் தோட்டத்தைச் சென்றடைந்ததும், அவரது ஆசிர்வாதத்திற்காக மேலும் பலர் வந்தனர்.

'கவுஸ் பாபா' (GHOUS BABA) என்று அழைக்கப்பட்ட மரியாதைக்குரிய இஸ்லாமியர் ஒருவரிடம், பாபா உருது மொழியில், **"என்னில் உங்களை இழக்க நான் எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன், அதனால் நீங்கள் கடவுளை மட்டுமே காண முடியும்!"** என்றார். அந்த நபர் வெளியே சென்றதும், பாபா, ராம்ஜூவை அவருக்குப் பின்னால் அனுப்பி, "அவர் பாபாவைப் பற்றி அதிகமாக சிந்திக்க வேண்டும், அதனால் அவர் 'சுய நிர்மூல நிலையை' (ஃபனா) அடைவார்" என்பதைத் தெரியப்படுத்தினார்.

தரிசனத்திற்கு வந்தவர்களில் மேலுமொருவர், பமாரு (PAMARU) கிராமத்தில் தரிசனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்த மௌன சுவாமி. 1953ஆம் ஆண்டில், பாபா கடைசியாக ஏலூருக்கு விஜயம் செய்த வேளையில், இந்த சுவாமியே, சுப்பா ராவுடன் தங்கி, பாபாவிற்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தோட்டத்தில், சுப்பா ராவ் எழுப்ப விரும்பிய கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்ற முன்வந்தார். பாபா அதற்கு ஒப்புக்கொண்டார், ஆனால் சுவாமியை நிரந்தரமாக ஏலூரில் தங்கும்படி கட்டளையிட்டார். பாபாவின் கட்டளையை மீறி, சிறிது காலத்தில் சுவாமி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

**"நீங்கள் ஏன் இந்த இடத்தை விட்டுச் சென்றீர்கள்?"** பாபா அவரிடம் வினவினார்.

"இங்குள்ளவர்கள் என்னை சரியாக நடத்தவில்லை" என்றார்.

அதற்கு பாபா பதிலளித்தார்: **"இது நீங்கள் யோசிக்க வேண்டிய விஷயமா? அந்த இடத்தை விட்டுச் செல்வதை விட நீங்கள் அங்கேயே உயிரைத் துறந்திருக்கலாம்! கடவுளுக்கு, எந்த விதமான அசௌகரியங்களிலும் ஒன்றும் இல்லை. அவற்றை, சாக்குப்போக்காகப் பயன்படுத்த கூடாது. இப்போது நான் ஆந்திராவை விட்டு வெளியேறும் நாளிலிருந்து, ஒரே இடத்தில், 40 நாட்கள் தங்க வேண்டும்.**

**அந்த நாட்களில் உண்ண வேண்டாம்; பசியாக இருந்தால், பால் மட்டும் அருந்துங்கள், இரவும் பகலும், 'பாபா, பாபா, பாபா' என்று திரும்பத் திரும்ப எனது நாமத்தைக் கூறுங்கள். இந்த உத்தரவை நீங்கள் கடைப்பிடித்தால், நான் மகிழ்ச்சி அடைவேன்; இல்லை என்றால் இந்த வாழ்க்கையை நீங்கள் வீணடிக்கிறீர்கள் என்று அர்த்தம். எனவே 40 நாட்களுக்கு எதையும் உண்ண வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பசி எடுக்கும் போதெல்லாம், தேநீர் அல்லது பால்**

**அருந்தவும், வேறு எதுவும் வேண்டாம். காலையில் இயற்கையின் அழைப்பைத் தவிர, 40 நாட்களுக்கு இருந்த இடத்தை விட்டு நகர வேண்டாம். நான் கடவுள், எனவே நீங்கள் எனது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

மௌன சுவாமி அழத் தொடங்கியதும், பாபா சில நிமிடங்களுக்கு அமைதியானார். தமது உத்தரவை மீண்டும் வலியுறுத்தி, அவர் தொடர்ந்தார்: **“மார்ச் 5 முதல் 40 நாட்கள் இரவும் பகலும் ஒரு நிமிடம் கூட தூங்க வேண்டாம். ஒரு டம்ளர் பால், ஒரு டம்ளர் தேநீர் எடுத்துக் கொள்ளலாம், வேறு எதுவும் வேண்டாம். நீங்கள் வேண்டிய அளவு நீர் அருந்தலாம். ஆனால் நீங்கள் தங்கும் இடத்தை விட்டு, பஜாருக்கோ அல்லது வெளியூர்களுக்கோ செல்ல வேண்டாம். ‘பாபா, பாபா, பாபா’ என்று திரும்பத் திரும்பக் கூறுங்கள்.**

**“நீங்கள் பைத்தியம் ஆனாலும், அல்லது உயிரைத் துறந்தாலும், கட்டளைகளை மீறாதீர்கள், பாசாங்குத்தனத்தில் ஈடுபடாதீர்கள். எவரும் உங்களுக்குத் தலைவணங்கவோ அல்லது உங்கள் முன்னால் கைகளைக் கூப்பி வணங்கவோ அல்லது உங்களைப் பின்பற்றவோ அனுமதிக்காதீர்கள். அமைதியாக எனது நாமத்தை உச்சரியுங்கள். நீங்கள் 100 சதவிகிதம் கீழ்ப்படிந்தால், பாபா யார் என்ற காட்சியை நீங்கள் காண்பீர்கள்!”**

சுவாமி சோகமாகவும், மனச்சோர்வுடனும் காணப்பட்டார், பாபா, **“பதற்றம் வேண்டாம். அன்புடன், முழு மனதுடன் செய்யுங்கள். முழு மனதுடன் செய்தால், நான் உங்களுக்கு உதவுவேன். அப்போது உங்களுக்கு பாபாவின் உண்மையான தரிசனம் கிடைக்கும்”** என்று அறிவுறுத்தினார்.

கதையின் பின்னிகழ்வு என்னவெனில், 1954 மார்ச் 4ஆம் தேதி காக்கிநாடாவில், பாபா, ஆந்திராவில் இருந்த கடைசி நாளன்று, சுவாமி, பாபாவிடம் வந்து, ஏலூருக்கு தனது தாயாரைப் பார்க்கச் செல்ல அனுமதி கோரினார். 40 நாட்களையும் கொவ்வூரில் கழிக்குமாறு பாபா ஏற்கனவே அவருக்கு அறிவுறுத்தி இருந்தார். பாசாங்குத்தனத்தை முற்றிலும் கைவிடவேண்டும் என்று பாபா கூறியதற்கு மாறாக, உள்ளூர் ஆந்திரவாசிகளில் ஒருவர், 40 நாட்களுக்குப் பிறகு ஸ்வாமி, மக்களை தரிசனம் செய்ய அழைத்ததாக பாபாவிடம் தெரிவித்தார்.

பாபா அவருக்கு, கீழ்வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார்: **“நாளை மதியம், உங்கள் மனம் திருப்தியுறும் அளவுக்கு ஆடம்பரமான உணவை உண்ணுங்கள். இன்றிரவு நன்றாகத் தூங்குங்கள். நாளை மதியம் முதல் 40 நாட்களுக்கு, ஒரு டம்ளர் தேநீர், ஒரு டம்ளர் பால் மற்றும் நீங்கள் விரும்பும் அளவுக்கு தண்ணீர் தவிர, வேறு எதுவும் உண்ண வேண்டாம் - பழங்கள், இனிப்புப் பண்டங்கள் எதுவும் வேண்டாம்! பாலில், சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம், 40 நாட்களுக்கு எனது பெயரைத் தொடர்ந்து உச்சரியுங்கள்.**

**“தூங்க அனுமதி இல்லை, ஆனால் நீங்கள் உங்களை அறியாமல் தூங்கி விழுந்தாலும், தூங்கினாலும் அஞ்சவோ, கவலைப்படவோ**

**வேண்டாம், ஆனால் இரவும் பகலும் விழிப்புடன் இருக்க முயற்சி செய்யுங்கள்; ஒருவேளை நீங்கள் உங்களை அறியாமல் தூங்கி விழுந்தால் அல்லது தூங்கினால், கவலைப்பட்டு, எனக்குக் கீழ்ப்படியாமல் தோல்வியுற்றதாக நினைத்து அனைத்தையும் கைவிட்டுவிடாதீர்கள்.**

**"இதை நீங்கள் பிறருக்காக செய்யவேண்டாம், இதில் எந்தவித பாசாங்குத்தனமும் கூடாது. நீங்கள் எதற்காக மக்களை அழைத்தீர்கள்? உங்களுக்கு பாபா வேண்டுமா அல்லது பாராட்டு வேண்டுமா? குறைந்த அளவிலான கபடநாடகமும் உங்களை அதல பாதாளத்திற்கு தள்ளிவிடும். நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள், எனக்குத் தெரியும். ஏனெனில் நீங்கள் விரும்புகிறீர்கள். அதனால்தான் நான் யார் என்பதன் ஒரு குறுகிய காட்சியை நீங்கள் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் உபவாசத்திற்கும் விழித்திருப்பதற்கும் எந்த முக்கியத்துவமும் கொடுக்க வேண்டாம். எனக்காக அதைச் செய்யுங்கள்!"**

பாபா, மௌன ஸ்வாமியைத் தழுவிக்கொண்டார், அவர் அடுத்த நாள் முதல் பாபாவின் அறிவுரைகளைப் பின்பற்றத் தொடங்கினார். ஆனால் மீண்டும், பாபாவின் கட்டளைக்கு மாறாக, அவர் நிறைய வம்பு தும்புகளில் ஈடுபடுவதோடு, பல விஷயங்களில் குறைபாடுகள் நிறைந்தவராகக் காணப்பட்டார்.

ஏலூரில் தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், அன்று இரவு எட்டு மணிக்கு, பெண்கள் குழு ஒன்று, தசாவதாரம் (பத்து அவதாரங்கள்) என்ற நாடகத்தை நடத்தியது; இது பாபாவை மிகவும் மகிழ்வித்தது. நாடகத்தில் அங்கம் வகித்த ஒவ்வொருவருக்கும் பாபா அன்பான அரவணைப்பை வழங்கினார்.

அமலாபுரத்தைச் சேர்ந்த முடபாக கங்காதரம் (MUDAPAKA GANGADHARAM OF AMALAPURAM) என்பவர் புல்லாங்குழலை ஒத்த ஓர் இசைக் கருவியில் பாபாவையும் மண்டலியையும் தனது கலை நுணுக்கத் திறனால் பெரிதும் மகிழ்வித்தார். குஸ்தாஜி அப்போது அங்கு இல்லாததால், பாபா அவரை, குறிப்பாக அழைத்து, அந்தக் கலைஞரை குஸ்தாஜிக்காக மீண்டும் இசைக்கச் செய்தார்.

ஆந்திராவில் அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தன, ஆனால் வாகனங்களிலிருந்து சாமான்களை இறக்கவும், பல்வேறு குடியிருப்புகளுக்கு எடுத்துச் செல்லவும், எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. சுற்றுப்பயணத்தில் மண்டலியைத் தவிர, இதர இடங்களிலிருந்தும் ஏராளமான அன்பர்கள் இருந்தனர்; அதே போல், ஆந்திரா சேவகர்களும் பாபாவுடன் அவர் செல்லும் எல்லா இடங்களிலும் பயணம் செய்தனர். ஆனால் ஓர் இடத்தைச் சென்றடைந்தும், குழு அவசரமாக இறங்கி, பாபாவைப் பின்தொடர்ந்து, அவருடைய முன்னிலையில் இருக்க முயன்றனர். பாவ் கல்சூரி ஒரு சாதாரண கூலியைப் போல், அனைத்து சாமான்களையும் அவரது தலையிலும் தோளிலும் எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று.

ஏலூரில் சுப்பா ராவ் தோட்டத்திலிருந்து சாலை சற்று தொலைவில் இருந்தது, சரக்கு வண்டியிலிருந்து பொருட்களை இறக்குவதற்குப் பல மணி நேரம் ஆனது. குழு இரவு 11:00 மணிக்கு அங்கு வந்ததால், பாவ், சில மணிநேரம் கூட தூங்க முடியவில்லை. மறுநாள் காலையில், அனைவரும் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வேளையில், பாவ் கல்சூரி, உடல் நலம் குன்றி, ஜுரத்தால் அவதிப்படுவது தெரியவந்தது.

1954 பிப்ரவரி 24 புதன்கிழமை காலை, பாபா மண்டலியின் அறைக்கு வந்து, பாவ் கல்சூரிக்கு ஆறுதல் கூறி, சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். தேஷ்முக்கின் மகன் பிரபோத், இரண்டு மணி நேரத்தில் தயார் செய்த பென்சில் ஓவியத்தை பாபாவிற்குப் பரிசாக வழங்கினார். சிறுவனின் கலைத்திறன் மற்றும் புத்திசாலித்தனத்தை பாபா பாராட்டினார்.

பாபா அன்று காலை 8:30 முதல் 11:30 மணி, மீண்டும் மாலை 3:30 முதல் 6:00 மணி வரையிலும், தனி நபர் இல்லங்களுக்கு விஜயம் செய்ய தமது நேரத்தை அர்ப்பணித்தார். ஏலூரில் குறைந்தது 60 வீடுகள், ஒரு சில பள்ளிகள், சாய் பாபா கோயில், தியோஸொஃபிக்கல் உயர்நிலைப் பள்ளி (THEOSOPHISICAL HIGH SCHOOL) மற்றும் வெங்கடராம் அச்சகம் (VENKATARAM PRINTING PRESS) போன்ற பாபா அன்பர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களால் நிர்வகிக்கப்பட்ட பல்வேறு வணிக நிறுவனங்களை பாபா பார்வையிட்டார்; முன்னறிவிப்பின்றி பல இல்லங்களுக்குச் சென்றார். குடியிருப்பாளர்கள் பாபாவின் திடீர் வருகையைக் கண்டு ஆச்சரியமடைந்தனர், சிலர் தங்கள் சிறப்பு விருந்தினருக்காக நாற்காலியைத் தேடி ஓடினர், பிறர் அவசரமாக பூக்கள் மற்றும் மாலைகளுக்காக அங்கும் இங்கும் அலைந்தனர். பாபா அமைதியாக அனைத்து குழப்பங்களையும் ரசித்தார்.

அந்தப் பரபரப்பான நாளை கிஷன் ஸிங் பின்வருமாறு விவரித்தார்:

“வானில் ஒளிரும் மின்னலைப் போல, பூமியில் பாபா பணிபுரிந்தார், மிக அவசரமாகவும், வேகமாகவும் இடம் விட்டு இடம் நகர்ந்து... பாபா அவர்களின் இல்லங்களுக்குச் சென்றபோது அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டபடி, அந்தந்த அன்பர்களின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தனது அன்பை வெளிப்படுத்தினார். அவர்களில் சிலர், சிறப்புப் பிரசாதம் வழங்குவது, பாபாவுடன் புகைப்படங்கள் எடுப்பது, சில இடங்களில் இளநீர், குளிர் பானங்களை சிறிது அருந்திவிட்டு, மீதியை பாபா, தனது அன்பர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் அருந்தக் கொடுப்பது போன்ற மற்றும் பல. பாபா சென்ற இடங்களில் எல்லாம் பெரும்பாலும் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. மலர்கள், தங்க ஜரிகைகள் மற்றும் கற்பூர மணிகள் - அனைத்து வகையான மாலைகளும் அவரது கழுத்தில் அடுத்தடுத்து அணிவிக்கப்பட்டது. ஆந்திராவிற்கு இதுவே தனது கடைசி வருகை என்று பாபா கூறியதால், வேகம் மேலும் அதிகமானது.”

மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களில் ஒருவர், ஷிர்டி சாய் பாபா, இந்தியா முழுவதும் பிரபலமானவர். கே.என். சௌத்ரியின் (K.N. CHOUDARY)

இல்லத்தில் ஓரறையில் சாய் பாபாவின் புகைப்படம் சுவரை அலங்கரித்தது. அதைச் சுட்டிக்காட்டி பாபா, "**அவருடைய கண்கள் நிகரற்றவை. உலகில் எவருக்கும் அத்தகைய கண்கள் இல்லை**" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பதினோரு மணியளவில் சாய் பாபா கோவிலில் அவருடைய உருவப்படத்தைச் சுட்டிக்காட்டி, "**ஒரு விதத்தில், ஐந்து பரிபூரண குருநாதர்கள் என்னை, நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே, ஆதி கால புருஷனாக அறியச் செய்தனர்; அவர் எனது தாத்தா**" என்று கூறினார்.

20 நிமிடங்களுக்குப் பிறகு, மற்றுமொரு சாய் பாபா கோவிலுக்குள் நுழைந்த பாபா, சாய் பாபாவின் புகைப்படத்திற்கு முன்னால் கூப்பிய கரங்களுடன், "**உண்மையான அன்பு இருந்தால், அது இங்கே இருக்கிறது. அவர் எங்கும் இருக்கிறார், நானும் எங்கும் இருக்கிறேன்**" என்று கூறினார்.

பாபா தொடர்ந்து வெவ்வேறு குடும்ப இல்லங்களுக்கு விஜயம் செய்தார். வெங்கட ராவ் மற்றும் அவரது குடும்பத்தினருக்குப் பிரசாதம் வழங்கிய பின்பு, பாபா, "**கேட்காமல் எதையும் நான் கொடுக்கும்போது, அது உண்மையில் கொடுக்கப்படுகிறது**" என்று குறிப்பிட்டார்.

சுப்ரமணியம் சாஸ்திரி வீட்டில் ஒரு நகைச்சுவை சம்பவம் நடந்தது. பாபா, சாஸ்திரியிடம் அவருக்கு எத்தனை குழந்தைகள் என வினவி, அவர்கள் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். அவருக்கு ஏழு குழந்தைகள், நான்காவது குழந்தையை அறிமுகம் செய்யும் போது, சாஸ்திரி பெயரை நினைவுகூர முடியாத நிலையில், அனைவரும் வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தனர். பாபாவின் முன்னிலையில் சாஸ்திரி அளவிலா மகிழ்ச்சியுடன் இருந்ததால், அவர் தனது எஞ்சிய குழந்தைகளின் பெயர்களை நினைவில் கொள்ள முடியாமல், அவரது மனைவியைக் கேட்க வேண்டியதாயிற்று.

இது பாபாவிற்கு சிரிப்பை வரவழைத்தது. அவரது மனைவி பாபாவிற்கு மாலை அணிவிக்க முன்னோக்கிச் சென்ற வேளையில், அவரைத் தடுத்து நிறுத்தி, எழுத்துப்பலகையில் பாபா, "**மாலையும் தேவையில்லை, ஆரத்தியும் தேவையில்லை. மெய்யான இந்த இல்லத்து சூழலில் நான் அமர்ந்து, இளைப்பாறி, அனுபவித்து மகிழட்டும். அந்த ஆடம்பர விழாக்கள் அனைத்தும் இயற்கையானவை அல்ல. அன்பு ஒன்றுதான் மிகவும் இயற்கையானது, மேலும், சுப்ரமணியம் அவரது குழந்தைகளின் பெயர்களை நினைவில் கொள்ளாததை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்**" என்று எடுத்துரைத்தார்.

ராமலிங்கம் சாஸ்திரிகளின் இல்லத்தில், குடும்ப உறுப்பினர் ஒருவர் பாபாவிடம், "இறை பேரரசரே! என் இதயத் தாமரைக்கு அப்பால் நான் உங்களுக்கு என்ன வழங்க முடியும்?" என வினவினார்.

"**என்னுடையதல்லாததை எனக்குக் கொடுங்கள்**" என்று பாபா பதிலளித்தார். "**என்னைத் தவிர அனைத்தும் என்னுடையது. எனவே என்னை நேசிப்பவர்களுக்கு நான் சொந்தம்.**"

வீட்டிலிருந்து வெளியே செல்லும் வேளையில், பாபா வராந்தாவில் அமர்ந்திருந்த ஒரு வயதான பெண்மணியைக் கடந்து சென்றார். பாபாவுக்காக அவர் வைத்திருந்த பொருட்களைக் கைகளில் எடுத்து, அவரை அன்புடன் தொட்டார். 99 வயதான அந்த மூதாட்டி கண் பார்வையற்றவர்.

டாக்டர் கனகதண்டியின் இல்லத்தில், அவரது சகோதரியின் மகள் மெட்ரிகுலேஷன் தேர்வில் (METRICULATION EXAMINATION) முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதாக பாபாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது. **"எனக்கு முதல் தர மக்களைப் பிடிக்கும், ஏனெனில் நான் எல்லாவற்றிலும் முதல் தரத்தில் இருக்கிறேன்!"** என்று பாபா கிண்டல் செய்தார்.

கே.எல். ராதாவின் மனைவிக்கு, பாபா, சிறிது பழரசத்தை அருந்திவிட்டு மீதியை அருந்தக் கொடுத்து, அந்தப் பெண்மணியிடம், **"கடவுள் உங்களுக்கு ஒரு மகனைக் கொடுக்கும் போது, அவனுக்கு மெஹர்தாஸ்** (மெஹரின் சேவகன்) **என்று பெயர் சூட்டுங்கள்"** என்று கூறினார்.

கே.பி. தியோஸொஃபிக்கல் உயர்நிலைப் பள்ளியில் (K.P. THEOSOPHICAL HIGH SCHOOL), அன்று பிற்பகல் 3:30 மணிக்கு, பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நான் சொல்ல விரும்புவதை ஒரு சில வார்த்தைகளில் சொல்கிறேன். நான் குழந்தைகளை நேசிக்கிறேன், அவர்கள் மத்தியில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியாக உணர்கிறேன். மாலை அணிவிப்பது, பூஜை, ஆரத்தி போன்ற சம்பிரதாய நடைமுறைகளை விட, அவர்களுடன் விளையாடுவதற்கான நேரத்தைக் கண்டுகொள்வதையே நான் விரும்புகிறேன்; குறிப்பாக நான் கோலி விளையாடுவதில் அதி நிபுணன். பல யுகங்களுக்கு முன்பு, நான் விழித்து எழுந்தவுடன் பிரபஞ்சத்துடன் கோலி விளையாட ஆரம்பித்தேன்.**

**மாணவர்களாகிய நீங்கள் ஒரு நாள் தெய்வீக அன்பின் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், பாபா என்ற சத்தியத்தின் ஜோதியை கைகளில் ஏந்துபவர்களாகவும் மாறினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.**

அன்று மாலை வரை பாபா பல இல்லங்களுக்கு விஜயம் செய்வதில் முழு வீச்சாக ஈடுபட்டிருந்தார். பாபா, வெங்கடராமன் தொடக்கப் பள்ளிக்குச் சென்றபோது ஒரு மனதைக் கவரும் சம்பவம் நிகழ்ந்தது. பாபாவின் புகைப்படத்துடன் அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்கள் மூலம், பாபாவின் ஏலூரு விஜயம் விளம்பரப்படுத்தப்பட்டது. அந்த விளம்பரத்தைப் பார்த்த ஒரு சிறுவன், அவனது பெற்றோரிடம் மெஹர் பாபாவை சந்திக்க அழைத்துச் செல்லும்படி தயவுடன் வேண்டினான். ஆனால், ஆச்சாரமான மரபுவழி பிராமணக் குடும்பமாக இருந்ததால், அவர்களால் 'பார்சி துறவி'யைப் பார்ப்பதில் எந்த பயனும் இல்லை

என சிறுவனின் வேண்டுகோளை நிராகரித்தனர். சிறுவன் தனது இரவு உணவை மறுத்து அழுது அடம்பிடித்தும், பெற்றோர் மனமிரங்கவில்லை.

மனம் உடைந்த சிறுவன், அன்று காலை பள்ளிக்குச் சென்றான், மெஹர் பாபாவை சந்திக்கும் வாய்ப்பை அவன் தவறவிட்டதாக நம்பினாலும், அவரைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தான். எனவே, பாபா, அவனது வகுப்பறைக்குள் நுழைந்தபோது அவன் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். சிறுவன், பாபாவின் பரந்த கரங்களில் குதித்து மகிழ்ச்சி பொங்க அழுதான். மீண்டும், தெய்வீக அன்பிற்குரியவர் தமது உண்மையான அன்பனின் பிரார்த்தனைக்கு பதிலளித்தார்.

பாபாவின் அன்பின் தாக்கம் ஏலூரு முழுவதும் நிரம்பி வழிந்தது. இரவு 8:30 மணிக்கு பாபா, பெனுகொண்டாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். ஏலூரு, அவருக்கு மனதைத் தொடும் வகையில் பிரியாவிடை அளித்தது. கட்டா சுப்பா ராவ், பாபா மற்றும் குழுவின் தங்கும் வசதிக்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். அவரது தோட்டத்தில் பாபாவின் பிரார்த்தனை, அவரது நினைவின் அடையாளமாக, தொடர்ந்து உச்சரிக்கப்படுகிறது, மேலும் இது எதிர் வரும் தலைமுறைகளுக்கும் வழிவகுப்பதாக இருக்கும்.

பீமாடோலே (BHIMADOLE) கிராமத்தில் தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்து, தாடேபள்ளிகுடத்தில் (TADEPALLIGUDEM) சிறிது நேரம் நின்றுவிட்டு, பாபாவும் அவரது குழுவினரும் அதிகாலை ஒரு மணியளவில், பெனுகொண்டா கிராமத்திற்கு வந்தனர். அன்று மாலை ஏழு மணியிலிருந்து 500 பேர் காத்திருந்த இடத்தில் ஒரு பெரிய கூடாரம் எழுப்பப்பட்டிருந்தது. காலதாமதமானாலும், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தியபோது, அனைவரையும் ஆசீர்வதித்து, அவர் கீழ்வரும் சுருக்கமான செய்தியை வழங்கினார்:

**இந்தத் தாமதமான நேரத்திலும், நான் இங்கு ஒரு குறுகிய காலத்திற்காக வந்திருந்தாலும், நீங்கள் என்னை நேசித்து, என்னை உங்களுள் ஒருவனாகக் கண்டுகொள்ள முயற்சிப்பதன் மூலம், இந்த வருகை சிறப்புமிக்கதாகவும், மதிப்புக்குரியதாகவும் இருக்கச் செய்தீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகள்.**

மிகவும் தாமதமானதால், பாபா பிரசாதத்தைத் தொட்டு ஆசீர்வதித்து, அனைவருக்கும் வழங்க உத்தரவிட்டார். அங்கிருந்து உடனடியாகப் புறப்பட்டு, அதிகாலை 2:45 மணிக்கு தாடேபள்ளிகுடம் திரும்பி வந்தார்.

டாக்டர் தனபதி ராவ், பாபாவை அரசு பங்களாவிற்கு அழைத்துச் சென்ற அதே வேளையில், மண்டலி ஒரு பள்ளிக்கூடத்தில் தங்கினர். பாபா, அவரது பிறந்தநாளை முன்னிட்டு, "**விழிப்புறச் செய்யும் ஒருவருக்காக விழித்திருக்க வேண்டும்**" என்று மண்டலி மற்றும் தாடேபள்ளிகுடம் அன்பர்களுக்கு உத்தரவிட்டார்.

சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு, பாபா, அதிகாலை 4:45 மணிக்கு, தனபதியின் இல்லத்திற்குச் சென்றார். மாபெரும் கூட்டம் பாபாவை எதிர்நோக்கி காத்திருந்தது; மண்டலியைத் தவிர, பாபா, அங்குக் கூடியிருந்த அனைவரையும்

அவரது பாதங்களைத் தொட்டு வணங்க அனுமதித்தார். பாபா, பின்னர் ஒரு பெரிய அறைக்குள் நுழைந்தார், அங்கு மண்டலி, கே.டி.ஆர்.எம். மற்றும் தனபதியின் குடும்பத்தினரைத் தவிர, வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை. கதவுகள் சரியாக காலை 5:00 மணிக்கு மூடப்பட்டன; பாபா பிறந்த அந்த நேரத்தில், எரச் மனம் வருந்தி இரங்கும் பிரார்த்தனையை (REPENTANCE PRAYER) ஆங்கிலத்தில் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து, ராம்ஜூ உருதிலும், டாக்கே மராட்டியிலும் மொழிந்தனர்.

பிரார்த்தனை நிறைவடைந்ததும், பாபா இவ்வாறு கூறினார்: **"கடவுள் யாராக இருந்தாலும், நம்முடைய எல்லா பலவீனங்களையும் மன்னிக்கும்படி நான் அவரிடம் கேட்டுக்கொண்டேன். எனவே, இன்று முதல், உங்கள் சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் நேர்மையாக இருங்கள். இன்று முதல், உங்கள் செயல்களுக்கு நீங்களே பொறுப்பு."**

அதைத் தொடர்ந்து, தனபதி ராவும் அவரது குடும்பத்தினரும் பாபாவின் பாதங்களை, பாலும் தேனும் ஊற்றி அபிஷேகம் செய்தனர். பாபா கேலி செய்தார், **"இப்பொழுது அவற்றை தண்ணீரில் சுத்தம் செய்யுங்கள்; இல்லையெனில், எறும்புகள் என்னைக் கடிக்கும்! 1927 முதல், இதுபோன்ற வழிபாட்டை நான் அனுமதிப்பது இதுவே முதல் முறை."**

எரச், குஸ்தாஜி இருவரும் பாபாவின் பாதங்களை சுத்தம் செய்தனர். பிள்ளை என்பவரின் இரண்டு மகள்களான மீரா, வீணா ஆகியோர் பாபாவிற்கு மாலை அணிவித்தனர். 1953இல் பிள்ளையின் குடும்பத்தை பாபா, சாஸ்திரியுடன் டெஹ்ரா டூனிலிருந்து ஆந்திராவிற்கு அனுப்பி வைத்ததை முன்பு பார்த்தோம். மீரா ரயில்வே துறையில் நல்ல வேலையைத் தேடிக்கொண்ட அதே வேளையில், வீணா ஒரு மஸ்தானியைப் போலவே இருந்தார்; ஆனால், இப்போது அவர் உணவு உண்டு சற்று ஆரோக்கியமாகத் தென்பட்டார்.

அன்று காலை சுமார் 5:30 மணியளவில், தனபதியின் இல்லத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த வெகுஜன தரிசன பந்தலில், பாபா நுழைந்தார். பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்க மக்கள் ஆர்வமாக இருந்தனர், ஏனெனில் பலர் ஜன்னல்கள் வழியாக அறையின் உள்ளே நிகழ்ந்த தனபதியின் விழாவை ரகசியமாக கவனித்தனர்.

பாபா அவர்களுக்கு அறிவுரை கூறினார்: **"நீங்கள் என்னை நேசிக்கிறீர்களேயானால், ஏன் நான் சொல்வதற்கு செவிசாய்ப்பதில்லை? எனது பாதங்களைத் தொடாதீர்கள் என்று சொன்னால், நீங்கள் ஏன் கீழ்ப்படிவதில்லை? இந்தத் தருணத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை; இதற்காக, யுகம் யுகங்களாக மாபெரும் மஹான்கள் கூட காத்திருக்கின்றனர்! எனவே, நான் சொல்வதைச் செய்து, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது அமைதியாக இருங்கள்."**

அனைவரும் அமைதியான பின்பு, மண்டலி குஜராத்தியில் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர், பாஸ்கர ராஜு (BHASKARA RAJU) தனது 'நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா!' என்ற பஜனையைப் பாடினார்.

தொடர்ந்து தெலுங்கு ஆரத்தி பாடப்பட்டது, பப்பிராஜு (BAPIRAJU) தெலுங்கில் பிரார்த்தனையை மொழிந்தார். அப்துல் மஜித் கான் (ABDUL MAJID KHAN) அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; பெண்மணிகளும் மராட்டியில் பாபாவின் ஆரத்தியைப் பாடினர். தரிசனத்துடன் பிரசாதம் வழங்கி, பின்பு, பாபா அவரது இல்லத்திற்கு ஓய்வெடுக்கச் சென்றார்.

ஏழு மணியளவில், சிறிது ஓய்வுக்குப் பிறகு, பாபா நீண்ட ஊர்வலமாக நகரத்தின் வழியாக அழைத்துச் செல்லப்பட்டார். அவரது வாகனம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, மேலும் இசைக்குழு ஒன்று மேளதாளத்துடன் கலகலப்பான இசையை இசைத்தது. 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய், பகவான் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற கோஷம், இடிமுழக்கம் போல வானில் எதிரொலித்தது. ஆண்களும் பெண்களும் பாபாவிற்கு மாலை அணிவிக்க, தங்கள் இல்லங்களை விட்டு விரைந்தனர்.

இது ஓர் அற்புதமான காட்சி. மதுபான சத்திரத்தின் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன; மக்கள் அவரது மதுபானத்தை ருசித்த பின்னர், இறைபோதையில் அவதார புருஷரைப் புகழ்ந்து பாடி, உள்ளே விரைந்தனர்! பல யுகங்களுக்குப் பின்னர் இப்படியொரு காட்சி இந்தப் பூவுலக மேடையில் நிகழ்வதைக் கண்டனர். அன்றைய தினம் கட்டுக்கடங்காத கோஷத்துடன் ஆதிகாலப் புருஷனை அனைவரும் வரவேற்றனர். காலம் இதைக்கண்டு மகிழ்ச்சியுடன் புன்னகைத்தது. சூரியன் உதயமாகி, வணங்கி, தனது கதிர்களால் அவதார புருஷரின் பாதங்களைத் தொட்டது.

ஊர்வலம் காலை 8:40 மணிக்கு தனபதியின் வீட்டை வந்தடைந்தபோது, பாபா பந்தலில் அமர்ந்தார். பண்டிதர்கள் பாபாவின் துதியில் ஸ்லோகங்களைப் பாடினர், ராம்ஜூ உருது மொழியில் பிரார்த்தனையை ஓத, டாக்டர் தேஷ்முக் மராட்டியிலும், ஜெகந்நாதம் பந்துலு தெலுங்கிலும் மொழிந்தனர். குடும்ப சாஸ்திரி ஒரு சிறிய வரவேற்பு உரையை நிகழ்த்தினார், மேலும் ராம்ஜூ (1954 ஜனவரி) 'தி அவேக்கனர்' (THE AWAKENER) இதழில் வெளிவந்த 'தெய்வீகப் பிறப்பு' (DIVINE BIRTH) குறித்த ஃபிலிஸ் ஃபிரடெரிக்கின் (FILIS FREDERICK) தலையங்கத்தை வாசித்தார்.

காலை 9:30 மணிக்கு, மஹாபலேஷ்வரிலிருந்து புறப்படுவதற்கு சற்று முன்பு, பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த இந்தச் செய்தியை ராம்ஜூ வாசித்தார்:

**நான் பிறப்பதில்லை, இறப்பதுமில்லை. என்றாலும், ஒவ்வொரு நொடியும் நான் பிறக்கிறேன், இறக்கவும் செய்கிறேன். இந்த மாய உலகில், மனிதன் எதிர்கொள்ளும் எண்ணற்ற பொய்யும், போலியுமான பிறப்புகளும் இறப்புகளும், உண்மைப்பொருளை அடைவதற்கான உணர்வு நிலையின் முற்போக்குப் பாதையில் அடையாளச் சின்னங்களாகும் - அதாவது**

‘உண்மையான மரணம்’ மற்றும் ‘உண்மையான பிறப்பு’க்கான முன்னுரை. ‘உண்மையான மரணம்’ என்பது தனிமனித சுயத்தின் மரணமாகும்; ‘உண்மையான பிறப்பு’, தனிமனித சுயத்தின் மரணத்தை சந்திக்கும் வேளையில், அவனுடைய நித்திய இறை வாழ்க்கையை என்றென்றும் இறை உணர்வுடன் வாழ்வதற்காக அவன் இறைவனில் பிறக்கிறான்.

நான் எல்லா இடங்களிலும் நித்தியமாக இருந்தாலும், எனது உருவமில்லா, எல்லையில்லா நிலையில், அவ்வப்போது நான் மனித உருவைப் பெறுகிறேன்; மேலும் மனித உருவில் பிறவி எடுப்பது, (பௌதீக) பிறப்பு என்றும், மனித உடலைத் துறப்பது, (பௌதீக) இறப்பு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த அர்த்தத்தில், நான் 60 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தேன், எனது உலகளாவிய பணி முடிந்ததும் நான் உடலைத் துறந்துவிடுவேன்.

இன்று எனது 60ஆவது பிறந்தநாளை உங்களின் அன்பு, உற்சாகம் மற்றும் ஆர்வத்துடன் கொண்டாடுவது, என்னை ஆழமாகத் தொட்டு, நாம் அனைவரும் ஒன்றே, கடவுள் ஒருவரே உண்மையானவர், பிற அனைத்தும் பொய் என்ற இறுதிப் புரிதலுக்கான ஆசீர்வாதங்களை உங்களுக்கு வழங்க வைத்தது.

பந்துலு இந்தச் செய்தியை தெலுங்கில் மொழிபெயர்த்தார், அதற்குப் பிறகு பாபா கீழ்வரும் கருத்துக்களை எடுத்துரைத்தார்:

இந்த அறிக்கைகள், செய்திகள் அனைத்தும் நம்மை ஆன்மீகப் பாதையில் எங்கும் கொண்டு செல்ல முடியாது. அதுபோல, பகுத்தறிவும், மன உறுதியும் நம்மை எங்கும் அழைத்துச் செல்லாது. உண்மையான அனுபவம் கூட உச்ச நிலையை எட்ட முடியாது.

நீங்கள் எவ்வளவு அதிகமாக கடவுளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறீர்களோ, அவ்வளவுக்கு குறைவாக அவரைப் புரிந்துகொள்கிறீர்கள். அனைத்தையும் விளக்குவதற்கு அப்பாற்பட்ட அவர், எவ்வாறு வெளிப்படுத்தப்பட முடியும்? அவர் எல்லையில்லா அளவுக்கு எளிதாக இருப்பது, அவரை அடைவதை எல்லையற்ற கடினமாக்கியுள்ளது. இதில் புதைந்துள்ள இரகசியம் என்னவெனில், நீங்கள் ஏற்கனவே என்னவாக இருந்தீர்களோ அவ்வாறே ஆக வேண்டும்.

நம்மைப் பிரித்து வேறுபடுத்திய திரைகள் விலகும் போதுதான், என்னை உங்களில் ஒருவராகவும், உங்களுள் ஒருவராகவும் அறிய முடியும்; நீங்கள் என்னை நேர்மையாகவும் முழு மனதுடனும் நேசித்தால், இதைச் செய்ய முடியும். பாபாவில் உங்களை இழந்து விடும்போதுதான், நீங்கள் நிரந்தரமாக பாபாவாக இருந்ததைக் காண்பீர்கள். அன்பில் எந்த சமரசமும் இருக்க முடியாது. அது முழுதாக இருக்க வேண்டும் அல்லது அறவே இல்லாமல் இருக்கவேண்டும்.

இன்று நான் தெய்வீக அதிகாரத்துடன் சொல்கிறேன், நான் ஆதிகாலத்தவன்; நான், என்னை உண்மையாக நேசிப்பவர்களின் அடிமை.

சிறிது நேரம் பாபா தரையில் அமர்ந்து, பின்னர் எழுந்து நின்று, ஜெகந்நாதமிடம் கீழ்வருவனவற்றை தெலுங்கில் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்: ‘**உண்மையாக, நான் அவர்களில் ஒருவன் என்பதை அனைவரும் உணரும் நோக்கத்தில், நான் அவர்களிடையே, அவர்கள் நிலையில் அமர்ந்திருந்தேன் என்று சொல்லுங்கள்**.’

காலை 10:30 மணிக்கு, டாக்டர் தேஷ்முக், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினார், பின்னர் அவரது கைகளிலிருந்து ஆரத்தி தட்டை எடுத்து, பாபா, தனது சுய ஆரத்தியை நிகழ்த்தினார். கிட்டத்தட்ட 2,000 பேர் அடங்கிய கூட்டம், அந்த மறக்க முடியாத, கண்கொள்ளா காட்சியைக் காணக் கிடைத்த அதிர்ஷ்டத்தைக் கண்டு வியந்தனர்.

காலம் கூட இதை ஆச்சரியமாகப் பார்த்தது. “இதுபோன்ற தெய்வீக லீலையைக் காண தேவதைகளுக்குக் கூட வாய்ப்பு இல்லை! அதனால்தான், இறை-மனிதனின் திருவிளையாடலை அனுபவிக்க, அவர்கள் பூமியில் மனித உருவில் பிறவி எடுக்க வேண்டும் என்ற ஏக்கத்தைக் கொண்டிருக்கின்றனர்.”

‘**அவதார யுகத்தில், பிற கிரகங்களிலிருந்தும் பல ஆன்மாக்கள் பூமியில் பிறவி எடுக்கின்றன. இக்காலகட்டத்தில், குழந்தை பிறப்பு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களின் பரவலான பயன்பாடு இருந்தபோதிலும், உலக மக்கள்தொகையில் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது**’ என்று பாபா ஒருமுறை சுட்டிக் காட்டினார். ‘**இந்த மக்கள் தொகை பெருக்கம் ஏன் ஏற்பட்டது? ஏனெனில், அவதார புருஷர் பூமியில் மனித உருவில் வரும்போது, பிற கிரகங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு பிறவி எடுப்பது வசந்த காலம் போன்றது. மேலும் அவை அறிவியல் ரீதியாக மிகவும் முன்னேறிய ஆத்மாக்கள் ஆதலால், அவதார புருஷரின் வருகையின் போது, இந்த உலகில் அறிவியல் அதன் உச்சத்தை எட்டுகிறது.**

‘**பரிணாம வடிவங்களுடன் எண்ணற்ற கிரகங்கள் இருந்தாலும்**, 18,000 **கிரகங்களில் மட்டுமே மனிதர்கள் வாழ்கின்றனர். இருப்பினும், இந்த** 18,000 **கிரகங்களில் வாழும் மக்கள் ஆன்மீகத்தில் முன்னேற வாய்ப்பில்லை. அன்பும், நேசமும் இல்லாமல், அவர்கள் ஆன்மீக ரீதியில், முற்றிலும் ‘உலர்ந்தவர்’களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் அறிவியலில் மிகவும் முன்னேறியவர்கள், சில கிரகங்களில் வாழும் மக்கள், பிறரின் மனதை அறிந்து, புரிந்துகொள்ளும் அளவுக்கு முன்னேறியவர்கள்; ஆனால் தெய்வீக மதுபானம் எனும் தண்ணீரை ஊற்றாத வரையில், இறை கீதமான ஊட்டத்தை வழங்காத வரையில், இதயம் மலராது. இந்த கிரகங்களில் அவதார புருஷர், பரிபூரண குருநாதர்கள், மேல்நிலை ஆன்மாக்கள் அல்லது இறை நாட்டம் மிக்கவர்கள் எவரும் வாழ்வதில்லை.**

**தெய்வீக அன்பு பூமியில் மட்டுமே அனுபவிக்கப்படுகிறது, இக்காரணத்திற்காக, துன்பத்தின் மேலோட்டமான மேகங்களிலிருந்து தப்பிக்க, மக்கள் தெய்வீக அன்பின் பாதையில் தஞ்சம் அடைகிறார்கள்.**

**இறைவனின் மதுபான சத்திரம் பூமியில் மட்டுமே உள்ளது, இங்குப் பிறவி எடுப்பவர்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள்.'**

நண்பகலில், பாபா, 'சாவித்திரி அரிசி ஆலை'க்கு (SAVITRI RICE MILL) அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு ஏழைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கானோர் கூடியிருந்தனர், பாபா அவர்களில் பலருக்கு, தமது கைகளால் உணவு வழங்கினார். வறியவர்களுக்கான நிகழ்ச்சி, சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது.

தாடேபள்ளிகுடத்தில் அரசு பங்களாவிற்குத் திரும்பிச் சென்ற பாபா, மதியம் 2:00 மணிக்கு, ஆந்திர சேவகர்களின் சந்திப்பைப் பற்றி விவாதித்து, ரங்கா ராவிடம், "**மார்ச் 2ஆம் தேதி கூட்டத்தில், கட்டா சுப்பா ராவை சேர்த்துக் கொள்ளுங்கள். இது முக்கியம். நேரம் விரைவில் நெருங்கி வருகிறது. இது 100 சதவீதத்தை நெருங்குகிறது, நீங்கள் அனைவரும் 100 சதவீதம் பணிபுரிய வேண்டும்**" என்று கூறினார்.

பாபா தொடர்ந்தார்: "**இப்படியெல்லாம் தலைவணங்குவதில் நான் சோர்வடைந்துள்ளேன். தெய்வங்கள் என்னை வணங்குகிறார்கள்! எனவே மனிதர்களைப் பற்றி என்ன சொல்வது? எனக்கு இதெல்லாம் வேண்டாம். எனக்கு சேவகர்கள் - நேர்மையான சேவகர்கள் வேண்டும். எல்லோரிடமும் பலவீனங்கள் இருப்பது எனக்குத் தெரியும், ஆனால் நமது பலவீனங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து, அவற்றிலிருந்து வலிமையின் கோபுரத்தை நாம் எழுப்புவோம்.**

"**அதுவே எனது திட்டம். உதாரணத்திற்கு இங்கே ஒரு முள், அங்கே ஒரு முள் இருப்பதில் எந்த பயனும் இல்லை. சிதறியிருந்தால் குத்தத்தான் செய்யும். ஆனால் முட்களை ஒன்று சேர்த்தால், எவரும் நுழைய முடியாத வேலியை உருவாக்க முடியும். அதே சிதறிய முட்கள் ஒரு வேலியாக உருவாகும்போது, அது பாதுகாப்பின் ஆதாரம். இதேபோல், அனைத்து பலவீனங்களும் ஒன்றிணைந்து வலிமையின் கோபுரத்தை உருவாக்கலாம்.**"

தரிசன நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு முன்பு, பாபா சாதாரண முறையில் நினைவு கூர்ந்தார்:

**நான் டெக்கன் கல்லூரியில் பயிலும் போது, எனக்கு ராம்நாத் என்ற நண்பர் இருந்தார்; அவர் புனிதர்களின் வாழ்க்கை குறித்த புத்தகங்களைப் படிக்க விரும்பினார். நாங்கள் நல்ல நண்பர்களாக இருந்தோம்; ஒரு நாள் ராம்நாத், புத்தரின் வாழ்க்கையைப் படிக்க, ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். அதைப் புரட்டிப் படித்துக்கொண்டிருந்த வேளையில், புத்தர் மீண்டும் மனித உடலில் 'மைத்ரேயா' (இரக்கமுள்ள இறைவன்) என்ற பெயரில் வருவதாகக் கூறியிருந்த பகுதியைக் கண்டேன். நான் இன்னமும் பாபாஜானை சந்திக்கவில்லை. ஆனால் அந்தக் குறிப்பைப் படித்த பிறகு, புத்தர் குறிப்பிடும் அதே 'இரக்கமுள்ள இறைவன்' நானே என்று நினைத்தேன், அல்லது தன்னிச்சையாக அதை உணர்ந்தேன்.**

அதற்குப் பிறகு, நான் அவதார புருஷர் என்பதை உபாஸனி மஹாராஜ் எனக்கு வெளிப்படுத்தினார். பாபாஜானும் ஒரு நாள் என்னிடம் கூறினார், “எனது மகனே, முழு உலகையும் உனது தாளத்திற்கு ஆட வைப்பாய்!” ஆனால் இன்று, ‘நானே அவர்’ என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். எனது பெயர் மெஹர், மெஹர் என்றால் கருணை!

பேச்சின் தலைப்பை மாற்றி, மூன்று மணியளவில், பாபா, சேவகர்களுக்கு விளக்கினார்:

தாழ்வு மனப்பான்மை என்பது பலவீனம், ஆனால் பணிவு என்பது பலம். எனவே, இரண்டுக்கும் இடையே, உலகளவு வித்தியாசம் உள்ளது. ‘எல்லா தாழ்மையுடனும் நான் சொல்கிறேன்’ என்று நீங்கள் சொல்லும் வேளையில், அது உங்கள் அகந்தையின் வெளிப்பாடாக இருக்கும். உங்கள் மனதில், நீங்கள் பணிவுடன் இருப்பதாக உணர்ந்தாலும், இந்த உணர்வு அகங்காரத் தன்மையுடையதாக இருக்கும்.

உண்மையான நேர்மையுடன், உண்மையான பணிவை வெளிப்படுத்த முயன்றாலும், சிக்கலான நிலை இத்துடன் முடிவதில்லை. உங்கள் பணிவு வெளிப்படுவதைப் பற்றி பிறர் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தைப் போன்ற தடைகள் வரத்தான் செய்யும். அடக்கமாக இருக்கும் வேளையில், உங்கள் சரியான நடத்தை பற்றிய எண்ணங்களால், நீங்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறீர்கள், அந்த அளவிற்கு ஒரு தாழ்வு மனப்பான்மை உங்களுக்குள் உருவாகிறது; அது பலம் அல்ல, பலவீனம்.

பணிவுக்கு, வெளியளவிலான ஒரு தோற்றம் கொடுக்கப்பட்டால், அது பணிவு ஆகாது. பணிவுக்கு வேண்டுமென்றே ஒரு தோற்றம் கொடுப்பது சுத்த போலித்தனம். பணிவுடன் ஒன்றிய வாழ்க்கை என்பது தன்னிச்சையாக வாழும் வாழ்க்கை, அது பணிவைக் குறித்தோ அல்லது தன்னடக்கத்தைப் பற்றியோ எந்த எண்ணத்தையும் ஏற்படுத்தக்கூடாது. உதாரணமாக, நீங்கள் ஒரு கழிப்பறையை சுத்தம் செய்யத் தொடங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், ஆனால் நீங்கள் உண்மையில் அதைச் செய்யத் தொடங்கும் போது, துர்நாற்றம் வீசுவதைத் தவிர்க்க முடியாது, அதேசமயம் ஒரு துப்புரவாளர் தனது வாழ்நாள் முழுவதும் அவற்றை சுத்தம் செய்வதால் துர்நாற்றத்தால் பாதிக்கப்படாமல் இருக்கிறார்.

அதேபோல, பார்ப்போர் கவனத்தை ஈர்க்கும் வகையில் பணிவை வெளிப்படுத்துபவர், கழிவறையை சுத்தம் செய்யும் வேளையில் துர்நாற்றத்தை நுகர்வோரைப் போன்றவர், அதேசமயம் உண்மையான பணிவுடன் வாழ்பவர் துப்புரவுத் தொழிலாளியைப் போன்றவர், அவர் துர்நாற்றத்தால் எந்த பாதிப்புமின்றி, அவரைப் பற்றியும், அவருடைய பணியைப் பற்றியும் ‘பிறர் என்ன நினைப்பார்களோ’ என்று சற்றும் சிந்திக்க மாட்டார், ஏனெனில் அவர் உண்மையில் ஒரு துப்புரவு தொழிலாளியின் வாழ்க்கையை வாழ்கிறார்.

**பணிவுடன் இருக்க முயற்சிப்பதும் கூட போலித்தனமாகும். நீங்கள் மிகவும் இயல்பாக இருக்கும் போது, உங்கள் வாழ்க்கையே பணிவின் மொத்த உருவமாக மாறும்; அதுவே பலவீனமில்லாத அனைத்து வலிமையும் ஆகும். கடவுளும் பரிபூரண குருநாதர்களும் மட்டுமே அத்தகைய வாழ்க்கையை வாழ முடியும். அவர்கள் மட்டுமே உண்மையிலேயே அடக்கமானவர்கள். எனவே, நீங்கள் எதுவாக இருந்தாலும், பொதுக் கருத்தையோ அல்லது பிறரின் எதிர்வினையையோ பொருட்படுத்தாமல் வெளிப்படுத்துங்கள்.**

**இயல்பாக இருங்கள். நீங்கள் நேர்மையற்றவராக இருந்தால், நேர்மை எனும் திரைக்குப் பின்னால் உங்களை மறைக்க முயற்சிக்காதீர்கள். எதுவாயினும், நீங்கள் நேர்மையற்றவராக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நீங்கள் குறைந்த அளவிலான பாசாங்குத்தனத்தையும் வெளிப்படுத்தாமல் மிகவும் இயல்பாக இருக்க வேண்டும்.**

பாபா, மதியம் 3:30 மணிக்கு தரிசன இடத்தை வந்தடைந்தார். பாஸ்கர ராஜு, உடல்நிலை சரியில்லாமல் இருப்பதைக் கண்ட பாபா, மேடையில் ஏறுவதற்கு முன்னர், அவரைத் தழுவி, தனதருகில் அமர வைத்தார். குடும்ப சாஸ்திரி சமஸ்கிருதத்தில் பாபாவைப் புகழ்ந்து வரைந்த கவிதைகளின் பிரதியை வழங்கி, பாபாவிற்கு உரிய வரவேற்பை அளித்தார். தரிசனம் தொடங்கியது, பாபா கிட்டத்தட்ட 7,000 பேருக்குப் பிரசாதம் வழங்கினார்.

மாலையில் தர்ம ராவின் இரண்டு மகள்கள், முன்னிலை வகித்த நடனம் மற்றும் நாடகம் நடைபெற்றது. ஏலூரிலும் அவர்கள் பாபாவுக்காக நாடகத்தை அரங்கேற்றினர், தர்ம ராவின் முழுக் குடும்பமும் அவருடைய அன்பில் நெருங்கி வந்தது. ஆந்திராவில் இந்தப் பயணத்தின் போது, தர்ம ராவ், பாபாவுடன் காரை ஓட்டிக்கொண்டிருந்தார்; முன்பு குறிப்பிட்டது போல, பாபா அவரை அடிக்கடி கேலி செய்தது, அவருடன் எவ்வளவு நெருக்கமாக உணர்கிறார் என்பதற்கான அறிகுறியாகும்.

தனபதியின் இளம் பேத்தியும் நாடகத்தில் பங்கேற்று, நடனமாடும் போது பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினாள். கிருஷ்ணா, ராதா இருவருக்கும் இடையேயான அன்பைச் சித்தரித்து, தர்ம ராவின் மகள்கள் ஆடிய நடனம் பாபாவை மகிழ்வித்தது; அதைத் தொடர்ந்து பாபா, “**மார்ச் 2 அன்று, எனது நடனத்தைப் பற்றி விளக்குமாறு எனக்கு நினைவூட்டுங்கள். இந்த முதலும் அசலுமான எனது நடனம், என்னால் இன்னும் விளக்கப்படவில்லை**” என்று குறிப்பிட்டார். ஆனால் அதற்குப் பின்னர், எவரும் பாபாவிற்கு அதை நினைவூட்டாததால், விளக்கப்படாமலேயே இருந்தது.

மெஹர் பாபாவின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், இரவு 11.45 மணியளவில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. இதைக் காண ஏறக்குறைய எட்டாயிரம் பேர் ஒன்றுதிரண்டனர். இவ்வாறு, பிறந்தநாள் நிகழ்ச்சி நள்ளிரவு 1:00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

அடுத்த நாள், 1954 பிப்ரவரி 26, வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்கு, ஸுஃபி சொற்களான 'நாஸ்' (NAAZ) மற்றும் 'நியாஸ்' (NIAZ) குறித்து எழுத்துப்பலகையில் விளக்க விரும்புவதாக பாபா, ராம்ஜூவிடம் தெரிவித்தார். கிஷன் ஸிங் அருகில் இல்லாததைக் கண்டு பாபா, அவர் எங்கே என வினவினார்; ஆனால், கிஷன் மண்டலி இருக்கும் இடத்தில் சில வேலைகளில் மும்முரமாக இருந்தார். பாபா, குறையாக முறையிடுவது போல கூறினார், "**நான் முக்கியமான ஒன்றைச் சொல்ல முன்வரும் போதெல்லாம், ஏதோ ஒன்று தவறாகிவிடுவது வழக்கம்; ஒன்று ஒலிப்பெருக்கி வேலை செய்வதில்லை, அல்லது வேறு ஏதேனும் இடையூறுகள், சம்பந்தப்பட்ட நபர்கள் இருப்பதில்லை இது போன்ற பல. எப்பொழுதும் ஏதோ ஒன்று எனது வழியில் வந்துவிடுகிறது!**"

இருப்பினும், பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, கிஷன் ஸிங், பாபாவின் இருப்பிடத்தில் குழுவுடன் இணைந்தார், அதன்பின் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**இன்று, நான் 'நாஸ்'** (NAAZ) **மற்றும் 'நியாஸ்'** (NIAZ) **என்பதைக் குறித்து விளக்க விரும்புகிறேன். பழங்காலத்தில், நாஸ் மற்றும் நியாஸ், ஷமா மற்றும் பர்வானா** (SHAMA, மெழுகுவர்த்தி; PARWANA, விட்டிற்பூச்சி) **பற்றி ஸுஃபிகள் எப்பொழுதும் இந்தக் கருத்தை வலியுறுத்தினர். பிற்காலத்தில், இந்தச் சொற்கள் மிகவும் பொதுவானதாகிவிட்டதால், ஒவ்வொரு பெரிய, சிறிய முஸ்லீம் கவிஞரும், அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினர்.**

**இப்போது, 'நாஸ்' என்பதன் அர்த்தம் 'வீண் ஆர்ப்பாட்டம்', அதாவது, மகிழ்விப்பது கடினம், ஒருபோதும் திருப்தியடையாத குணம் (தற்போக்கெண்ணம்); இது அன்பிற்குரியவரின் முக்கிய பண்புகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. ஸுஃபிகள், கடவுள் மற்றும் பரிபூரண குருநாதர்களை இந்தத் 'தற்போக்கெண்ணத்தின்' மொத்த உருவம் என்று குறிப்பிடுகிறார்கள் - எப்பொழுதும் அவர்களை மகிழ்விப்பது கடினம் என்று கூறுகிறார்கள். ஏன்? அவர்கள் சுதந்திரமாகவும் அலட்சியமாகவும் இருப்பதால் - எதிலும் அக்கறை இல்லாதவர்கள், முற்றிலும் பற்றற்றவர்கள்.**

**இப்போது, அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழும் கடவுளும், கடவுளாக உருவான சத்குருக்களும் எப்படி அலட்சியமாக இருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கலாம்? இது அபத்தமான தொனியாகத் தோன்றுகிறது. ஏனெனில், கடவுள் முற்றிலும் சுதந்திரமாகவும் அலட்சியமாகவும் இருப்பதால் தான்.**

**'நியாஸ்' என்றால் அன்பிற்குரியவரின் ஒவ்வொரு கோரிக்கைக்கும், (அதாவது, வீண் ஆர்ப்பாட்டம், தற்போக்கெண்ணம்) அவரது ஒவ்வொரு மனநிலைக்கும் ஏற்றாற்போல நடனமாடுவது. 'நியாஸ்' என்றால் கீழ்ப்படிதல் அல்ல, சரணடைதல்.**

**கடவுள் மற்றும் சத்குருக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது ஒரு சிறப்பான காரியம். இது முற்றிலும் சுதந்திரமாகவும், அலட்சியமாகவும்**

இருக்கும் அன்பிற்குரியவரின் ஒவ்வொரு மெட்டுக்கும் நடனமாடுவதாகும். கடவுளும் அப்படித்தான்; கடவுளை நேசிப்பவன் அன்பிற்குரியவரின் ஒவ்வொரு விருப்பத்தையும் சார்ந்து இருக்கிறான். ஒரு சத்குரு அலட்சியமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறார் என்பது அர்த்தமற்றதாகத் தெரிகிறது, அதே வேளையில், அவரது அன்பன் சத்குருவைச் சார்ந்து இல்லை, மாறாக சத்குருவின் ஒவ்வொரு தற்போக்கெண்ணத்தையும் சார்ந்து இருக்கிறார். ஆனால் இது அப்படித்தான்.

இப்போது இரண்டாவது அம்சம் மிக அற்புதமானது. நாம் இப்போது கடவுள் மற்றும் சத்குருவின் சுதந்திரமான இயல்பு பற்றி பேசினோம். அந்த 'இயல்பு' எல்லையற்ற யதார்த்தம்; ஆனால் சத்குரு மாயையின் ஓர் உருவத்தை எடுத்துள்ளார். ஒரு சத்குருவின் உருவில், கடவுள், அவரது முழு அலட்சியத்துடனும், அளவிறுதியற்ற தன்மையுடனும், மாயையின் அங்கியை அணிந்துகொள்கிறார். இப்போது என்ன நடக்கிறது என்றால், இந்த மாயையான அங்கியை (உடல்) அணிந்தவுடன், சத்குரு, மாயையின் அடிப்படையான அறியாமையால் விளையும் முழுப் பிரபஞ்சத்தின் அனைத்து துன்பங்களையும் அவர் மீது எடுத்துக்கொள்கிறார்.

எல்லையில்லா பேரின்பத்தை அனுபவிக்கும் ஒரு சத்குரு அல்லது அவதார புருஷர், ஏன் ஒரே நேரத்தில் எல்லையற்ற துன்பத்திலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது என்பதன் முரண்பாட்டை இப்போது விளக்குகிறேன்.

"நான் தேஷ்முக்கிடம், என்னைப் போல் இந்தப் பிரபஞ்சத்தில் எவரும் துன்பப்படுவதில்லை" என்று கூறும்போது, அவர் புன்னகைத்து வினவுகிறார், "பாபா, பேரின்பத்தின் ஆதாரமான உங்களால் எப்படி, எப்பொழுதேனும் துன்பப்பட முடியும்?" சத்குரு இந்த மாயை எனும் போர்வையை அணிந்துள்ளார். ஏன்? எதற்காக? மாயையில் சிக்கிய பிற அனைவரையும் அவரைப் போல் அளவிறுதியற்றவர்களாக உணரச் செய்வதற்காக! அவர் பிறரின் துன்பத்தைப் பார்க்கிறார் - தொழுநோயாளிகள், முடவர்கள், மேலும் பலர் பணம், குழந்தை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, "எங்களைக் காப்பாற்றுங்கள், இந்தத் துன்பத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்!" என எழுப்பும் இதுபோன்ற கூக்குரல்களை அவர் கேட்கிறார்.

இதையெல்லாம் அவர் தம்மீது எடுத்துக் கொண்ட மாயையின் போர்வையோடு பார்க்கிறார்; ஆனால், நித்திய, எல்லையில்லா பேரின்பத்தைத் தமது பின்னணியாகக் கொண்டு, அந்தத் துன்பங்கள் எல்லாம் ஒன்றுமில்லை என்பதை அவர் அனுபவிக்கிறார். இது வெறும் அறியாமை. அதனால் அவர்களின் மாயையால் விளையும் பொய்யும் போலியுமான துன்பத்தை அவர் கண்டுகொள்வதில்லை. பாதிக்கப்பட்டவர்கள் 'உண்மையில் துன்பப்பட வேண்டும்' என்று அவர் விரும்புகிறார், மேலும் இந்த 'உண்மையான' துன்பத்தில் அவர்களின் மாயையான துன்பத்தை எரிக்க

**விரும்புகிறார் - அதாவது, அவர்களின் தவறான வாழ்க்கையை எரிப்பதால் விளையும் அந்தத் துன்பங்களை** (கடவுளுக்காக) **அனுபவிக்க வேண்டும்.**

**ஆனால் அதை எப்படிச் செய்வது? அவர்களுக்குள் 'உண்மையான' துன்பத்தை எப்படி உருவாக்குவது? அதற்காக, சத்குரு மாயையின் மூலம் மிகவும் பாதிக்கப்படுகிறார். பிறருடைய பொய்யான மாய வாழ்வை அவர் எரிக்க விரும்புகிறார்; எனவே, அவர் பிறருக்காக அணிந்திருந்த மாயையின் போர்வையை எரித்து, ஒரு மெழுகுவர்த்தியைப் போல மாறுகிறார்; மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியதும், விட்டில்பூச்சிகள் அதைச் சுற்றி ஈர்க்கப்படுகின்றன. மெழுகுவர்த்தி எரியும் தருணத்தில், ஆயிரக்கணக்கான விட்டில்பூச்சிகளும் அதில் எரிகின்றன. இவ்வாறு பிறருக்காக அவர் துன்பப்படுகிறார், பிறரையும் தமக்காகத் துன்பப்படுத்துகிறார்.**

**"இவ்வாறு, மாயையின் போர்வையை அணிந்து, இறை-மனிதன் தாமும் துன்பப்பட்டு, பிறரையும் துன்பப்படுத்தும் இரட்டை வேடத்தை வகிக்கிறார். ஆனால் அந்தத் துன்பம் அவர்களை விடுவிக்கிறது"** என்று பாபா கூறி முடித்தார்.

ஏலூரைப் போலவே, தாடேபள்ளிகுடத்திலும் பாபா, அவரது பத்து அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். பப்பிராஜூ தனது வேலையை இழந்து பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டார்; பாபா அவருக்கு இவ்வாறு ஆறுதல் கூறினார்:

**நான் அவதார புருஷர், சத்குரு, எதுவாகவும் இருக்கலாம். நான் என்னவாக இருக்கிறேனோ அதையும் தாண்டி நான் இருக்கிறேன். நீங்கள் பாபாவை நேசிப்பதால், இந்த விளைவை சந்திக்கிறீர்கள்; பாபாவை நேசிக்கும் அனைவரும் துன்பப்படுகிறார்கள், ஏனெனில் அந்த அழிவில்தான் உண்மையான ஆக்கம் வெளிப்படுகிறது, மொத்த அழிவுதான் உண்மையான செழிப்புக்கு வழிவகுக்குகிறது.**

**சராசரி வாய்ப்பு, வசதிகளைக் கொண்ட உலகின் சாதாரண மனிதன், பூமியில் ஒரு திடமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக உணர்கிறான், ஆனால் அவனுடைய இந்த வசதிகளை உள்ளடக்கிய நிலைப்பாடு, புதைமணல் அல்லது நெருப்பில் இருப்பதைப்போல், அவனை மேலும் மேலும் கீழே இழுத்துச் செல்கிறது என்பதை அவன் அறியாமல் இருக்கிறான்.**

**அதைத்தான் நாம் உலகில் காண்கிறோம். உலகில், வெளித் தோற்றத்தில் வசதியாக இருக்கும் ஒரு மனிதன், மேலும் அதிக அளவிலான வசதிகளைத் தேடுகிறான்; இப்படி, அவன் தேடுவதற்கும், தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் முடிவே இல்லை. ஆனால், ஒரு நிரந்தர உறுதிப்பாட்டைப் பெறுவதற்கு, அவனுடைய வெளிப்படையான நிலைப்பாடு முற்றிலும் அகற்றப்பட வேண்டியது அவசியம். இதன் பொருள் என்னவெனில், அவனது வெளியளவில் தோன்றும் வசதிகளுடன் கூடிய சுற்றுப்புறங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட வேண்டும்.**

**கடவுளை நேசிப்பவர்களின் விஷயத்தில், அவர்கள் தங்களுடையது என்று திடமாகக் கூறக்கூடிய அளவுக்கு எதுவுமில்லை. தங்கள் குருநாதரின் அளவிலா அன்பின் பொருட்டு, அவரது அன்பர்கள், பேரிடர்களையும் துன்பங்களையும் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள். இந்த பூமியில் அவர்களின் முழு நிலைப்பாடும் முற்றிலும் அதிர்ந்து போனதால், அவர்களின் அன்பான குருநாதர் மீதான அன்பைத் தவிர, வேறு எதையும் பற்றிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவை காற்றில் மிதக்கும் தூசித் துகள்கள் போலத் தோன்றுகின்றன.**

**இறுதியில், குருநாதர் மீதான அன்பு உருவானதும், அந்த அன்பு அவர்களில் பாறை போன்ற அடித்தளமாக அமைகிறது. அன்பன், அன்பிற்குரியவரின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை எனும் பாறையின் மீது தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறான், மேலும் அவன், அழிவை நோக்கி இழுத்துச் செல்லும் வெளிப்படையான வாய்ப்புகள் மற்றும் வசதிகளுக்காக இனி ஏங்கப்போவதில்லை.**

தாடேபள்ளிகுடத்தில் அமைந்த சில நிறுவனங்கள், கோவில்கள் மற்றும் பள்ளிகளுக்கும் பாபா விஜயம் செய்தார். உள்ளூர் 'தெய்வீக வாழ்க்கை சங்கம்' (DIVINE LIFE SOCIETY) எனும் ஒரு நிறுவனத்தில், ஒரு பெண்மணி பாபாவைத் தலைவணங்கியதும், அதை பாபா அவ்வாறே திரும்பச் செலுத்தி, "**பிறர் என்னைத் தலைவணங்குவதை நான் விரும்பவில்லை. நான் அதை அசௌகரியமாக உணர்கிறேன், ஏனெனில், உண்மையில், தலைவணங்குவதும் நானே! நிஜத்தில் எனது தொடர்ச்சியான அனுபவம் என்னவெனில் நான் உங்களில் இருக்கிறேன்; அதனால் எவரேனும் என்னை வணங்கினால், நானே என்னை வணங்குவதாக அர்த்தம். அப்படியானால் ஏன் இந்தத் தேவையற்ற சம்பிரதாயச் செயல்கள்?**" என எடுத்துரைத்தார்

கணேஷ் அரிசி ஆலையில், டாக்டர் தனபதி, தனது குடும்ப உறுப்பினர்கள் சிலரை பாபாவிற்கு அறிமுகப்படுத்த மறந்துவிட்டார். பாபா அவரிடம், "**உலகில் எவரையும் என்னால் மறக்க முடியாது, இங்கே நீங்கள் உங்கள் நெருங்கிய உறவினர்களை மறந்து விடுகிறீர்கள்**" என்று கூறினார்.

நரம்புத் தளர்ச்சியால் உடல்நலம் குன்றிய தனபதியின் மைத்துனியைப் பார்த்த பிறகு, பாபா, "**ஒரு குறைபாடும் இல்லை; அவர் சீராகிவிடுவார்!**" என்று கூறினார்.

ஏழைகளுக்கு, மேலும் ஓர் உணவு வழங்கும் நிகழ்ச்சி, அரிசி ஆலை தொழிற்சாலையில் நடத்தப்பட்டது; அவ்வேளையில், பாபா கூறினார், "**ஏழைகளுக்கு சேவை செய்பவர்கள் எனக்கு சேவை செய்கிறார்கள், ஏனெனில் நான் ஏழைகளில் ஏழை.**"

அன்று காலை பல இல்லங்களுக்கு விஜயம் செய்ய இருந்தவர்களின் பட்டியலில் பாஸ்கர ராஜுவின் வீடு குறிப்பிடப்படவில்லை, எனவே அவரும் அவரது மனைவியும் பாபாவை சந்திக்க தனபதியின் இல்லத்திற்குச் சென்றனர்.

இதற்கிடையில், அசல் திட்டத்தைப் பொருட்படுத்தாமல், பாபா முதலில் அவரது இல்லத்திற்குச் சென்றார். இல்லத்தில் அவர்கள் இல்லாததால், பாபா மனம் நொந்து அடுத்த நபரிடம் சென்றார்.

அப்போது அருகாமையில் பாஸ்கர ராஜு, பாபாவின் காரைப் பார்த்ததும், பாபா அவரைக் கூர்ந்து நோக்கிக் கேட்டார், **"கடவுளே உங்கள் வீட்டிற்கு வருகை தந்த போது, நீங்கள் எங்கே சென்றீர்கள்?"**

"பாபா, நான் தவறாக வழிநடத்தப்பட்டேன். உங்களின் தரிசனத்திற்காக தனபதியின் இல்லத்தில் காத்திருந்தேன்" என்று பாஸ்கர ராஜு பதிலளித்தார்.

அவர் அச்சத்தில் நடுங்குவதைப் பார்த்து, பாபா அவரை சிரிக்க வைக்கும் விதத்தில் விரல்களால் மென்மையாக வருடி, பின்னர் அவரிடம், **"இப்போது, உங்கள் வீட்டிற்குச் சென்று அங்கே காத்திருங்கள். இதர எல்லா வீடுகளுக்கும் சென்று, பிறகு நான் மீண்டும் வருவேன்"** என்று அவரிடம் கூறினார்.

பாபா, பாஸ்கர ராஜுவின் வீட்டிற்குத் திரும்பி வந்தார். காரிலிருந்து இறங்கும் வேளையில், **"உங்கள் வீட்டிற்கு இரண்டு முறை வந்துள்ளேன்"** என்று கூறினார். பாபா உள்ளே நுழைந்து, ஒரு மடிப்புக் கட்டிலில் அமர்ந்து, பாஸ்கர ராஜுவிடம் **"எனக்காக ஓர் இனிமையான பாடலைப் பாடுங்கள்; நான் விரைவில் செல்ல வேண்டும்"** என்றார்.

பாஸ்கர ராஜு, அவரே ஹிந்தி மொழியில் இசையமைத்த ஒரு பாடலைப் பாடினார்; பாபா, அவரது இல்லத்திற்குத் திரும்பி வந்ததை அடிப்படையாகக் கொண்டு, 'மீண்டும் எங்கள் இல்லம்' (ஃபிர் அப்னா கர் - PHIR APNA GHAR) என்ற தலைப்பில் அமைந்த பாடலைப் பாடினார். பாபா தனது அளவிலா மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, அவரை நோக்கி, அவரது மனைவி கோவிந்தம்மாவிடம், **"நான் கூறுவதைக் கேளுங்கள்! அவர் என்னுடையவர், உங்களுடையவர் அல்ல. நான் அவரை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அவரை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்"** என்றார்.

பாபாவை தரிசனம் செய்ய அக்கம் பக்கத்தினர் பலர் ஒன்றுதிரண்டனர். பாபா ஒரு டம்ளர் தண்ணீரைக் கேட்டதும், கோவிந்தம்மா அதைக் கொண்டுவந்தார்; பாபா அதில் அவரது மூன்று விரல்களை நனைத்து, **"இந்தத் தண்ணீரை இங்கு வந்திருக்கும் பெண்மணிகள் அனைவருக்கும் எனது பிரசாதமாக வழங்கவும்"** என்று கேட்டுக்கொண்டார். பாபா, பாஸ்கர ராஜுவை கோபாலபுரத்திற்கு பின் தொடருமாறு அறிவுறுத்தினார்.

அன்று மதியம் 1.50 மணிக்கு பாபா, கோபாலபுரம் புறப்பட்டுச் சென்றார். 1954 பிப்ரவரி 26 அன்று, கனத்த இதயத்துடனும், கண்களில் நீர் வழிய, தாடேபள்ளிகுடம் அன்பர்கள் அனைவரும் அவருக்குப் பிரியாவிடை அளித்தனர்.

வழியில் பாபா, ராமச்சந்திரபுரத்தில் பாஸ்கர ராஜூவின் மூத்த சகோதரர் ராமபத்ர ராஜுவின் இல்லத்திற்குச் சென்று, அங்கு பலர் பாபாவின் தரிசனத்தைப்

பெற்றுக்கொண்டனர். அங்கு சந்தித்த அனைவருடைய இதயங்களையும் கவர்ந்து, பாபா, ஆரத்திக்குப் பின்னர், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அன்று பிற்பகல் சுமார் மூன்று மணியளவில், குழுவினர் அனைவரும் கோபாலபுரம் வந்தனர். மெடிகோனா நாராயணா (MEDIKONA NARAYANA) என்பவரின் வீட்டில் பாபா தங்க வைக்கப்பட்டார். முழு வீடும் அவருக்காக சிறப்பாக வைக்கப்பட்டது, அங்கு அவர் சுதந்திரமாக இருக்க முடிந்தது. அவர்கள் வந்ததும் தனபதி, மத்திபாட்டி சுப்பராயுடுவின் (MADDIPATTI SUBBARAYUDU) வீட்டிற்கு தேநீர் அருந்துவதற்காக மண்டலியுடன் பிற அனைவரையும் அழைத்துச் சென்றார். பாஸ்கர ராஜு பாபாவுடன் அங்கேயே இருந்தார்.

வளாகத்திற்கு வெளியே மாபெரும் கூட்டம் ஒன்று உருவாகிக்கொண்டிருந்தது. அமைதியின்றி, பொறுமையிழந்த சிலர் பாபாவை தரிசனம் செய்வதற்காக மதில்கள் மீது ஏற முயன்றனர். இதைக் கண்ட பாஸ்கர ராஜுவிற்குப் பதட்டம் அதிகரித்தது, ஆனால் பாபா அவரது தோள்களில் கைகளை வைத்து, அவரை அமைதியாக அமரச் சொன்னார். பின்னர் அவரிடம், **“எங்கே எனது தேநீர்?”** என்றதும் பாஸ்கர ராஜு அது, அவருக்கு அருகிலிருப்பதைக் காட்டினார், பாபா தேநீர், இரண்டு பிஸ்கட் மற்றும் ஒரு கைப்பிடி மாதுளை விதைகளைக் கொண்டு வந்து, அதை பாஸ்கர ராஜுவின் வாயில் வைத்தார்.

அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து, பல்லாயிரக்கணக்கானோர் ஒன்றுதிரண்டு, கொளுத்தும் வெயிலில் பாபாவுக்காக காத்திருந்தனர். பாபாவின் அனுமதியின்றி மண்டலி வெளியேறியதால், பாபா பொறுமை இழந்த நிலையில், அவர்கள் இன்னமும் திரும்பி வராததால், நிகழ்ச்சி தாமதமானது. அவர்கள் திரும்பி வந்ததும், பாபா மண்டலியைக் கடிந்துகொண்டார்.

பெண்டு அவர்களைப் பாதுகாக்கும் விதத்தில், “மண்டலியாகிய நாங்கள் தேநீர் அருந்தவில்லை; ஆனால் எங்களுடன் வந்தவர்கள்” என்று கூறினார்.

**“ஆனால், அவர்கள் ஏன் தேநீர் அருந்தச் சென்றார்கள்?”** பாபா வினவினார்.

“தனபதி அவர்களை அழைத்துச் சென்றார்,” பெண்டு பதிலளித்தார்.

பாபா, தனபதியைக் கடிந்துகொண்டார், **“என்னை மக்களுக்காக இங்கே அழைத்து வந்தீர்களா அல்லது மண்டலிக்கு தேநீர் வழங்க வந்தீர்களா? நான் ஐந்து நிமிடம் இங்கேயே இருப்பேன். நான் இந்த மக்களுக்காக வந்திருக்கிறேன், உல்லாசமாக சுற்றுலாவுக்காகவோ அல்லது தேநீர் அருந்துவதற்காகவோ அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். மக்கள் எனக்காக அங்கே காத்திருக்கும் போது, நான் இங்கே அமர்ந்திருப்பதை விரும்பவில்லை. எனது பொறுமையை இழக்கச் செய்தால், நான் உங்கள் அனைவரையும் அறைவேன்! மூடர்களைப் போல செயல்படாதீர்கள்!”**



ஆந்திரா, பிப்ரவரி **1954** (ANDHRA**,** FEBRUARY 1954)

பாபா உடனடியாகப் பந்தலுக்குள் நுழைந்தபோது, மக்கள் கூட்டம் அவரை பலத்த ஆரவாரத்துடன் வரவேற்றது. சில நிமிடங்களுக்கு முன்பு, வானம், நீலமாகவும் தெளிவாகவும் இருந்தது; ஆனால் திடீரென கார்மேகங்கள் ஒன்றுதிரண்டு, தூறல் மழை பொழிந்து, காலநிலையில் இனிமையான குளிர்ச்சியை வரவழைத்தது, கிராமவாசிகளுக்கு ஒரு நல்ல அறிகுறியாக இருந்தது.

15,000க்கும் மேற்பட்ட மக்கள், கூட்டத்தில் பாபாவின் அருகில் வர முயன்றனர். மேடை, பார்வையாளர்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்தது. பாபா எழுந்து நின்று, கூப்பிய கரங்களுடன், மேடையின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் சென்று, தம்மை சூழ்ந்திருந்த மக்களை வணங்கி, அவர்களை அமரச் சொன்னார்.

மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்ததாலும், போதிய நேரம் இல்லாததாலும், தனித்தனியாக பிரசாதம் வழங்க முடியவில்லை. எனவே, பாபா பிரசாதத்தின் பெரும்பகுதியைக் கைகளால் தொட்டு ஆசீர்வதித்து, காரில் தனது இருக்கையில் அமர்ந்தார். பலர், மலர் மாலைகளையும் பழங்களையும் காரை நோக்கி வீசிய வண்ணம் விரைந்தனர். ஆனால் அனைவரும் அவர்கள் விரும்பியபடி நெருங்க முடியாததால், அங்கும் இங்கும் செல்லத் தொடங்கினர்.

மக்களை சமாதானப்படுத்த, கார் சுமார் 20 மீட்டர் தூரம் சென்றதும், பாபா அதை நிறுத்திவிட்டு, இறங்கி ஒரு பனைமரத்தின் கீழ், பனை ஓலையில் அமர்ந்தார். தரிசனத்திற்கு வந்தவர்கள் பாபாவை நோக்கி விரைந்தனர், ஆனால் வெகு சிலரே பாபாவைக் காண முடிந்தது. எனவே, பாபா, காரின் கூரை மீது ஏறி அமர்ந்தபோது, கார் கூட்டத்தினூடே மெதுவாகச் சென்றது. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், பாபாவின் புன்னகை அவர்களின் அமைதியற்ற இதயங்களுக்கு ஓர் இனிமையான அருமருந்தாக இருந்தது. மக்கள் அவருடைய 'ஜெய்' முழக்கங்களுக்கு மத்தியில் பஜனை பாடத் தொடங்கினர்.

பாபா, நிடாடாவோலு (NIDADAVOLE) குறுநகரத்திற்கு புறப்பட்டு, மாலை 4:15 மணிக்கு அங்குச் சென்றடைந்தார். அன்று மாலை, குடும்ப சாஸ்திரி, மல்லிகார்ஜுன ராவ் இருவரும் தரிசன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர், அதற்கு, கிட்டத்தட்ட 5,000 பேர் ஒன்றுதிரண்டனர். வழக்கம் போல, பாபாவிற்கு ஆரத்தி நிகழ்த்தி, மாலை அணிவித்த பின்பு, விஜயவாடா செய்திகள் வாசிக்கப்பட்டன. 'விடுதலை' (LIBERATION) என்ற தலைப்பில் அந்த நேரத்தில் வழங்கப்பட்ட மற்றுமொரு செய்தி பின்வருமாறு:

**கடவுள் என்றென்றும் சுதந்திரமானவர். இறை உணர்வை அடைவது என்பது மாயையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைவதாகும். விடுதலையை அடைவதற்கான போராட்டம், எந்த அளவுக்கு அதிகமாகி, மேலும் தீவிரப்படுத்தப்படுகிறதோ, அந்த அளவுக்கு மாயையைப் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டு வருவதால், இது இறுதியில் மிகவும்**

**சுவாரசியமாகவும், யதார்த்தமாகவும் மாறும் தருவாயில், பெரும்பாலும் மாயையின் கட்டுப்பாட்டுத் தன்மை உணரப்படுகிறது. எல்லா செயல்களும் - நல்லவை, தீயவை, நியாயமானவை, நியாயமற்றவை, தொண்டு அல்லது தொண்டு புரியாத தன்மை எதுவாயினும், அவை மாயையின் பிணைப்பை உறுதியாகவும் இறுக்கமாகவும் ஆக்குவதற்குப் பொறுப்பாக இருக்கின்றன.**

**முழுமையான செயலற்ற தன்மையை அடைவதே குறிக்கோள், இது வெறுமனே செயலில் ஈடுபடாத சுறுசுறுப்பின்மையைக் குறிக்காது. தனிப்பட்ட ஒருவரின் சுயத்தைக் குறித்த சிந்தனையே இல்லாத போது, அவர் ஒவ்வொரு செயலிலும் செயலற்ற தன்மையை அடைகிறார். எவ்வாறாயினும், அதிகப்படியான கர்ம யோகா, தியான யோகா மற்றும் பிற யோகாக்களின் தீவிரமான செயல்பாட்டின் மத்தியில், செயலற்ற தன்மையைக் கடைப்பிடிப்பது, அனைத்து செயல்களுக்கும் ஒரு முடிவை அடைவதற்கான கருவியாகத் திகழும்.**

**எதுவாயினும், அத்தகைய முழுமையான செயலற்ற வாழ்க்கை வாழ்வதற்கான ஒரே வழி, ஒரு பரிபூரண குருநாதரிடம் முழுமையாக சரணடைவதே ஆகும், இதனால் ஒருவர் தனக்காக வாழாமல், குருநாதருக்காக மட்டுமே வாழ்ந்து, அன்பிற்குரியவரின் கட்டளைகளை செயல்படுத்தவும் நிறைவேற்றவும் செய்கிறார்.**

**உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகள்.**

தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா குடும்ப சாஸ்திரி, மல்லிகார்ஜுன ராவ் ஆகியோரின் இல்லங்களுக்கும், ஆந்திரா மெஹர் மையத்திற்கும் விஜயம் செய்தார். அவரது இல்லத்தில் ஒரு பெண்மணியை அறிமுகப்படுத்திய சாஸ்திரி, பாபாவிடம், “அவரது கணவர் அவரை விட்டுச் சென்றுவிட்டார்; அவர் மிகவும் துரதிர்ஷ்டவசமானவர்” என்று கூறினார்.

அதற்கு பாபா, “**ஏன் துரதிர்ஷ்டவசமானவர் என்று சொல்கிறீர்கள்? அவர், கடவுள் நேரில் நிற்பதைக் காண்கிறார், மிகவும் அதிர்ஷ்டசாலி. மிக மிக வயதான மற்றும் எனது தரிசனத்திற்கான ஏக்கத்துடன் காத்திருக்கும் ரிஷிகள் மற்றும் முனிகளை விடவும் அதிக அதிர்ஷ்டசாலி**” என்று பதிலளித்தார். அந்தப் பெண்மணியை நோக்கி பாபா, “**என்னையே நினைவில் கொள்ளுங்கள், கவலைப்படாதீர்கள்**” என்றார்.

நிடாடாவோலு குறுநகரத்திலிருந்து புறப்பட்டு, அன்று இரவு எட்டு மணிக்கு பாபா கொவ்வூர் வந்து சேர்ந்தார். முதலில் வழக்கறிஞர் பலகொடேற்றி ராமலிங்கேஷ்வர ராவ் (PALAKODETI RAMALINGESHWARA RAO) இல்லத்திற்குச் சென்ற அவர், அதற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட பந்தலில் காத்திருந்த ஏராளமான மக்களை நோக்கிச் சென்றார். பாபா விதானத்தில் சிங்கத்தோலின் மேல் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தார். வழக்கறிஞர் தனது குடும்பத்தினரையும் நண்பர்களையும் பாபாவிடம் அறிமுகப்படுத்த விரும்பினார், ஆனால் அவர் எதையும் கூறுவதற்கு முன்பு, பாபா, அவர் விறுவிறுப்பாகக்

கழித்த அன்றைய தினத்தைப் பற்றி அவரிடம் கூறினார், **“நான் ஓய்வெடுப்பதை நீங்கள் உறுதி செய்வீர்கள் என்று நினைத்தேன், ஆனால் இங்கே மிகவும் வித்தியாசமான சூழல் நிலவுவதை நான் காண்கிறேன்.”**

குடும்ப சாஸ்திரி, வழக்கறிஞரிடம், “இன்று இரவு பாபா ஓய்வெடுக்கட்டும். நாளை நீங்கள் அவருடைய ஆரத்தியை நிகழ்த்தி, அனைத்து மக்களையும் அறிமுகப்படுத்தலாம்” என்றார்.

அதைக் கேட்ட பாபா, **“ஓய்வு, ஓய்வின்மை இரண்டும் காலாதி காலத்திலிருந்தே எனது இணைபிரியா நண்பர்களாக, தொடர்ந்து என்னுடன் இருந்து வருகின்றன. எனது ஓய்வைப் பற்றி கவலைப்படாதீர்கள், ஆனால், நான் சொல்வதை எப்பொழுதும் கவனமாகக் கேளுங்கள். கோபாலபுரத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. நிடாடாவோலு கிராமத்தில் நான் ஒன்றை எடுத்துரைக்க விரும்பினேன், அங்கு ஒலிப்பெருக்கி இல்லை. நான் தன்னிச்சையாக வழங்கும் செய்திகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் உண்டு; ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டு அச்சிடப்பட்ட செய்திகளுக்கு அதற்குரிய முக்கியத்துவம் மட்டுமே உள்ளது. எழுத்துப்பலகையில், அக்கணமே, சம்பவ இடத்தில் நான் எடுத்துரைப்பது என்பது வேறு.”**

தனபதி இடையே குறுக்கிட்டு, “பாபா இங்கே ஒரு மஸ்த் வாழ்கிறார்!” என்றார்.

ஆனால் பாபா அவரது பேச்சைத் தொடர்ந்தார், **“நேற்று இரவு, தாடேபள்ளிகுடத்தில் ஒரு நடன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அங்குக் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்திற்கு நான் ஒரு செய்தியை வழங்க விரும்பினேன், ஆனால் ஒலிப்பெருக்கி பழுதான காரணத்தால் என்னால் செய்தியை வழங்க முடியவில்லை. நான் சொன்னேன், ‘தனபதியின் மனம் என் மீதான அன்பால் செயலிழந்துவிட்டது’ என்று! இப்போது, ’இங்கே ஒரு மஸ்த் இருக்கிறார்’ என்கிறார்.**

**“தனபதி எனது உண்மை ரூபத்தைப் பார்க்கும்போது அல்லது நான் என்னவாக இருக்கிறேனோ அந்த நிலையில் எனது கடைக்கண் பார்வை கிடைத்தாலும், ’பாபா, உணவு உண்ணுங்கள், பாபா, ஓய்வெடுங்கள், பாபா, இங்கே ஒரு மஸ்த் வாழ்கிறார்’ என்றெல்லாம் சொல்லமாட்டார். அப்போது அவரே ஒரு மஸ்தாக மாறிவிடுவார்!”**

யாரோ ஒருவர் தனது குடும்பத்தை பாபாவிடம் அறிமுகப்படுத்த வந்தபோது, பாபா இந்தக் கருத்தை எடுத்துரைக்கத் தூண்டப்பட்டார், **“நான் எனது சொந்த மனைவி, எனது சொந்த கணவன் மற்றும் எனது சொந்த குழந்தை. இது வெறும் வெற்றுப்பேச்சு அல்ல. நானே அதுவாக இருக்கிறேன்!”**

ராமலிங்கேஷ்வர ராவ் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். சில நிமிடங்களில், பிற அனைவருக்கும் தரிசனம் வழங்கியபோது, பாபாவின் கழுத்தில் மாலைகள் மலைபோல குவிந்தன, அவற்றை எரச் அகற்றி ஒரு பக்கமாக குவித்து வைத்தார். ஆந்திராவில்

பாபாவின் கழுத்தை மிகவும் விலையுயர்ந்த மாலைகள் அலங்கரித்தன, அவர் செல்லும் இடமெல்லாம் மாலைகள் குவிந்த வண்ணம் இருந்தன!

தரிசனத்திற்குப் பிறகு, பாபா ராமலிங்கேஷ்வரரின் இல்லத்திற்குச் சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்தார். அந்த வழக்கறிஞர், பாபா ஆந்திராவிற்கு வருகை தருவதற்கு முன்னரே அவருக்குக் கடிதம் எழுதி, சுற்றுப்பயணத்தின் போது அவருடைய தனிப்பட்ட செயலாளராகச் செயல்பட முன்வந்தார். இதன் காரணமாக பாபா அவருக்கு பி.எஸ். (P.S. - PERSONAL SECRETARY) என்ற புனைப்பெயரை வழங்கினார்.

இரவு உணவுக்குப் பின்னர், ஒன்பது மணியளவில், பாபாவும் மண்டலியும் கோதாவரி நதி அருகே, கோடூரி கிருஷ்ணாராவ், வெகுஜன தரிசனத்திற்காக ஏற்பாடு செய்திருந்த இடத்திற்குச் சென்றனர். பாபா ஒரு பந்தலின் கீழ் மேடையில் அமர்ந்தார், அவருடைய மகிமை நிறைந்த பிரமாதமான தோற்றம், சுற்றுப்புறத்தை மின்மயமாக்கியது. ஏறக்குறைய 5,000 பேர் ஒன்றுதிரண்டனர், பாபாவின் முகம் இறை ஒளியில் பிரகாசித்தது, அதனால் அனைவரின் கவனமும் அவர் மீது ஒருமுகமாக ஈர்க்கப்பட்டது. அன்று இரவு நிகழ்ந்த தரிசன நிகழ்ச்சியில், பாபா இயற்கைக்கு மாறான, விசித்திரமான தோற்றத்துடன் காணப்பட்டார். அவர் தமது எல்லையற்ற இதயத்தின் நுழைவாயில்களைத் திறந்து, அன்பின் பெருங்கடலில் அனைவரையும் மூழ்கச் செய்தார்.

கோடூரி, வெளி மைதானத்தில் வாணவேடிக்கைகளை ஏற்பாடு செய்திருந்தார்; ஆனால் குழந்தைகள் கூட வெளியே சென்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதற்கு பதிலாக, பந்தலில் பாபாவைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தனர். பத்து மணிக்கு பாபாவின் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. கோதாவரி நதியில் மிதக்கும் படகுகளில், பாபாவும் மண்டலியும் தங்குவதற்கான ஏற்பாடுகளை கோடூரி செய்திருந்தார், பாபா ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அங்குச் சென்றார். பாபாவின் படகில் மின் விளக்குகளுடன், அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. மண்டலி இதர மூன்று படகுத் தளங்களில் தங்கினர். அவர்கள் படுக்கைச் சுருள்களுடன் படகுகளில் ஏறியபோது, ஹெலன் வழுக்கி, இடுப்பளவு ஆழமான தண்ணீரில் விழுந்தார், அவருடைய படுக்கைச் சுருள் நீரில் மிதந்தது. படகுகள் நதியின் எதிர் கரைக்கு கொண்டு செல்லப்பட்டன, அங்கு மிகவும் நிசப்தமான சூழ்நிலை நிலவியது. இவ்வாறு பாபாவும் மண்டலியும் நீண்ட நாள் பயணத்திற்குப் பிறகு கோதாவரி நதியில் ஓய்வெடுத்தனர்.

1954 பிப்ரவரி 27, சனிக்கிழமை அன்று அனைவரும் படகுகளில் காலை சிற்றுண்டியை உண்டனர். உணவு மற்றும் தேநீர் ஏற்பாடுகளை ஸவக் கொத்வால் கவனித்து வந்தார். கோடூரி, பாபாவின் காலை உணவை அவரது படகில் ஏற்கனவே அனுப்பிவிட்டதாக எண்ணி, ஸவக் அதை அனுப்பாமல், மண்டலிக்கு மட்டும் போதுமான அளவு தயார் செய்தார். பாபாவின் படகுடன் வேறொரு படகு இணைக்கப்பட்டிருந்தது, அங்கு எரச், சகன், சிது, மெஹர்ஜி

ஆகியோர் ஓய்வெடுத்தனர்; எனவே பாபாவின் தேவைகளை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று ஸவக் கருதினார்.

ஆனால் பாபாவிற்கு எதுவும் அனுப்பப்படவில்லை என்பது பின்னரே தெரியவந்தது. காலை 7:20 மணிக்கு, பாபா நதிக்கரையில் நடந்து சென்றவர், அதிருப்தியில் ஸவக்கைத் திட்டினார். பெண்டு, பாவ் கல்சூரி ஆகியோரும் அவரது கடுமையான விமர்சனத்திலிருந்து தப்பவில்லை, ஏனெனில் பெண்டு தலைமை கண்காணிப்பாளராகவும், பாவ் உதவியாளராகவும் இருந்தனர். பாபா, கோடூரிக்குக் கட்டளையிட்டார், "**ஸவக்கின் கழுத்தில் ஒரு கனமான கல்லைக் கட்டி நதியில் வீசி எறியுங்கள்**!"

கோடூரி, பாபாவின் சினத்தைக் கண்டு அஞ்சி, கூப்பிய கைகளுடன் அமைதியாக நின்றார். ஸவக் உடனே அவரை அணுகி, "தயவுசெய்து பாபாவின் கட்டளையை நிறைவேற்றுங்கள்" என்றார். கோடூரி முற்றிலும் திகைத்துப் போய் என்ன செய்வது என்ற குழப்பத்தில் ஆழ்ந்தார்; அவர் இந்த விதத்தில் சாக விரும்பும் ஒரு நபரைக் கண்டதேயில்லை.

கோடூரியின் குழப்பத்தை உணர்ந்த பாபா, கவலைப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறினார். ஆனால் இந்த நிகழ்வு கோடூரியை மிகவும் பாதித்தது. இதற்கு முன்னர் அவர் அப்படி ஒரு நிகழ்வைப் பற்றி கேள்விப்பட்டதில்லை அல்லது நேரில் பார்த்ததுமில்லை. அதற்குப் பிறகு, கொவ்வூரில் 'மெஹர்ஸ்தான்' மையத்தை நிறுவிய அவருக்கு, அது வாழ்நாள் பாடமாக இருந்தது. இந்த நிகழ்வு, உலகில், எந்த விலை கொடுத்தேனும் அவதார புருஷருக்குக் கீழ்ப்படியத் தயாராக இருக்கத் தூண்டும், மேலும் அவரது பாதங்களில் பணிவுடன் தலைவணங்கச் செய்யும்.

மெஹர் பாபாவின் பெருமையைப் பறைசாற்றியபடி பலர் நின்றுகொண்டிருந்த மறு கரைக்கு, படகுகள் கொண்டு செல்லப்பட்டன. அங்கு அவர் மிகுந்த அக்கறையும், ஆரவாரத்துடனும் வரவேற்கப்பட்டு தரிசன கூடாரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்; ஆரத்தி நிகழ்த்திய பின்பு, பாபா மேடையில் ஏறினார், ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு, கீழே வந்து, சிறிது நேரம் தரையில் அமர்ந்தார். அவரது விஜயவாடா செய்திகள் வாசிக்கப்பட்டன, மேலும் பாபாவை ஒரு 'இணைபிரியா துணைவனாக' (CONSTANT COMPANION) ஏற்றுக்கொள்வது குறித்த செய்தியும் வாசிக்கப்பட்டது (இது டெஹ்ரா டூனிலிருந்து கோடூரிக்கு அனுப்பப்பட்டது).

பின்னர் ஒரு கட்டத்தில், பாபா தமது சீடர்களுக்கு விளக்கினார்:

**எனது பக்தர்களில் சிலர், தங்கள் ஆர்வத்தினாலும், உற்சாகத்தினாலும், என்னைப் பற்றி மிக உயர்ந்த வார்த்தைகளில் பேசும்போது, நாம் அவர்களை ஊக்குவிப்பது இயல்பானது. ஆனால், பிற்காலத்தில், அந்த உற்சாகம் குன்றி, அவர்கள் என்னைப் பற்றி தரக்குறைவான வார்த்தைகளில் பேசினால், நாம் அவர்களை ஊக்குவிக்கவில்லை என்றாலும், குறைந்தபட்சம் அவர்களைத் தடை**

**செய்யவோ, துன்புறுத்தவோ அல்லது அவர்கள் நினைப்பதை வெளிப்படையாகச் சொல்வதைத் தடுக்கவோ முயற்சிக்கக்கூடாது.**

**உலகம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறது என்பது முக்கியமல்ல, ஆனால் கடவுள் நம்மைப் பற்றி என்ன அறிந்திருக்கிறார் என்பதுதான் முக்கியம். நாம், அனைத்து அகங்காரப் போக்குகள் மற்றும் ஆசைகளிலிருந்து அகற்றப்படாவிட்டால், நமது ஆன்மா, அதன் அசல் நிர்வாண நிலையை அடையாத வரை, அவரது அளவிறுதியற்ற நிலையில் நித்தியமாக, நிர்வாணமாக இருக்கும் அன்பான கடவுளை நாம் தழுவ முடியாது.**

தரிசனம் ஆரம்பமானதும், மக்கள் பாபாவிற்கு மாலை அணிவிக்கத் தொடங்கினர். எரச், சாஸ்திரி இருவரும் ஒலிப்பெருக்கியில் இவ்வாறு அறிவித்தனர்: "தயவுசெய்து, பாபாவிற்கு மாலை அணிவிப்பதில் நேரத்தை வீணாக்காதீர்கள். அது முக்கியமல்ல. பாபாவின் அன்பின் பிரசாதத்தைப் பெறுவது மிகவும் முக்கியம். அவருக்கு மாலை அணிவிக்காதீர்கள், ஆனால் அவரிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்."

பாபா விரைவாகப் பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தார், அன்று காலை பதினொரு மணிக்கு நிகழ்ச்சி நிறைவடைந்தது. ஏறக்குறைய 2,000 பேர் பங்கெடுத்தனர், மேலும் பலர் வரிசையில் நின்று கொண்டிருந்தனர், ஆனால் பாபா இடையே நிறுத்திவிட்டு, தமது அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார்.

பாபா முதலில் கோடூரியின் வீட்டிற்குச் சென்று, அவரது குடும்பத்தினரை சந்தித்தார் - பக்திமிக்க அன்பரான அவரது மனைவி மற்றும் அவரது மகன் பிரசாத் என்பவரை பாபா அன்புடன் தழுவினார். பாபா கொவ்வூர் வருகையை முன்னிட்டு, கோடூரி அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், ஏழைகளுக்கு உணவு வழங்கியதில், ஏறக்குறைய 15,000 பேர் கலந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து பப்பா ராவ் (PAPPA RAO), ஆலா சதிராஜு (ALA SATHIRAJU), திருமதி தாயாரம்மா ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்றார். பப்பா ராவ் ஓர் ஏழை மனிதர், குடிசையில் வாழ்ந்த அவர், எந்த அழைப்புமின்றி, அவரது குடிலில் பாபா நுழைந்தபோது, அந்த மனிதர் மகிழ்ச்சி பொங்க, ஆச்சரியத்தில் அவர் அருகில் இருந்தார். இக்கால கிறிஸ்து, ஏழையின் பாழடைந்த வீட்டைப் புனிதப்படுத்திக் கொண்டிருந்தார். கோடூரியின் ஓட்டுநர் பப்பிராஜு போகியின் (BAPIRAJU BOGI) இல்லத்திற்கும் பாபா திடீர் விஜயம் செய்தார்.

பாபா எங்குச் சென்றாலும், அந்த இடத்தில் நீண்டகாலமாகக் குடியிருப்பவர் போலத் தோன்றினார். அவர் ஒவ்வொரு வீட்டிலும் சுற்றுமுற்றும் உலாவி, அறைக்கு அறை உள்ளே சென்று, அதன் உரிமையாளரைப் போன்ற உணர்வை வெளிப்படுத்தினார்.

அவரை தரிசனம் செய்ய வந்தவர்களும் பாபாவை நீண்ட நாட்களாக அறிந்தவர்கள் என்ற உணர்வைக் கொண்டிருந்தனர்; அவர்கள் உடனடியாக அவருடனான ஆழமான உறவை உணர்ந்தனர். பாபா அவர்களை மிகவும்

நேசித்தார் என்று ஒவ்வொருவரும் அறிந்தனர். காரணம், பாபா உணர்வுப்பூர்வமாக அனைவரின் நிலையிலும் இருந்தார்; அவரது தெய்வீக உணர்வு அவர்களின் வரையறுக்கப்பட்ட உணர்வுடன் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து இருந்தது, அதன் விளைவாக அவர்கள் பாபாவுடனான நெருங்கிய தொடர்பை உணர்ந்தனர்.

பாபாவும் அவரது குழுவினரும் பிப்ரவரி 27ஆம் நாள் மதியம் 1:50 மணியளவில், கொவ்வூரிலிருந்து ராஜமுந்திரிக்குப் (RAJAHMUNDRY) புறப்பட்டு, ஒரு மணி நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தனர். கோதாவரி நதி, கொவ்வூருக்கு மேற்குப் பாகத்திற்கும், ராஜமுந்திரிக்கு கிழக்குப் பகுதிக்கும் இடையே பாய்ந்து ஓடுகிறது. இதுவரையான அனைத்து நிகழ்ச்சிகளும் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் நடந்தன. கிழக்கு கோதாவரியில் நிகழ்ச்சிகள் இப்போது ராஜமுந்திரியில் தொடங்கின.

இதற்கு முந்தைய ஆண்டு அவர் தங்கியிருந்த அதே குருகுல விடுதியில் (ஒரு உறைவிடப் பள்ளி) பாபா மற்றும் மண்டலி தங்குவதற்கான ஏற்பாடுகள் இப்போதும் செய்யப்பட்டிருந்தன. முனிசிபல் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் எழுப்பப்பட்ட மிகப்பெரிய பந்தலில் தரிசனம் நடைபெற இருந்தது. 6,000க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டனர், மேலும் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்ட கார்களின் தோற்றம், வேறு எங்கும் காணப்படாத ஒரு நிகழ்வு, அது அப்பகுதியின் வசதியான குடிமக்கள் பலர் வந்திருப்பதற்கான அடையாளமாக அமைந்தது. இங்கு பாபாவின் தரிசனத்திற்காக ஊரில் வாழும் ஏழை, பணக்காரர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்தனர். தெய்வீகப் பெருங்கடலில் மூழ்குவதற்கு, தூய்மையான இதயம் ஒன்றுதான் தேவை; செல்வம், சம்பாத்தியம் ஆகியவற்றின் வெளிப்புற வேறுபாடுகளில் முக்கியம் எதுவும் இல்லை.

தர்ம ராவின் மூன்று மகள்களும் பிரார்த்தனை மொழிந்ததைத் தொடர்ந்து, ஆரத்தி நிகழ்ச்சிகளுடன், வரவேற்பு உரைகளும் வழங்கப்பட்டன. அடுத்ததாக, வழக்கமான மூன்று செய்திகள் சத்தமாக வாசிக்கப்பட்டன. இதர இடங்களைப் போலவே, பாபா மக்களுடன் தரையில் அமர்ந்து, அவ்வாறு செய்வதற்கான காரணத்தை விளக்கினார். பின்னர், 4:30 மணிக்கு, அவரது விரல்கள் எழுத்துப்பலகையின் மீது விரைந்து, இந்தத் தன்னிச்சையான செய்தியை வழங்கியது:

**ஆன்மீகப் பாதையில், இந்தச் செய்திகள் மற்றும் சொற்பொழிவுகளுக்கு அர்த்தம் எதுவும் இல்லை. உண்மையான அனுபவம் இல்லாமல், அனைத்து தத்துவ வாய்மொழிகளும் வெற்றுப்பேச்சு; மேலும் இந்த விழாக்கள் அனைத்தும் ஏற்கனவே செழித்தோங்கும் மாயைக்கு மேலும் செழிப்பை சேர்ப்பதாக விளங்குகின்றன.**

**தேவாலயங்கள், நெருப்புக் கோவில்கள், கோவில்கள், மசூதிகள் கட்டுவதற்கு பதிலாக, மக்கள் தங்கள் அன்பான கடவுளுக்காக, அவருடைய**

**இல்லத்தை, தத்தமது இதயங்களில் நிறுவினால், எனது பணி முடிவடைந்ததாக இருக்கும். பழங்கால பழக்க வழக்கங்களைப் போல், இயந்திரத்தனமாக சடங்கு சம்பிரதாயங்களில் ஈடுபடாமல், மக்கள் தன்னலமற்ற அன்புடன், சக உயிர்களுக்கும் சேவை செய்ய வேண்டுமாயின், கடவுள் எல்லோரிடமும் சமமாக குடியிருப்பதாகக் கருதி, பிறருக்கு சேவை செய்வதன் மூலம், கடவுளுக்கு சேவை செய்கிறோம் என்று நினைத்தால், எனது பணி நிறைவடைந்ததாக எடுத்துக்கொள்ளப்படும்.**

**நீங்கள் அனைவரும், இல்லாவிடில் உங்களில் சிலர், அல்லது உங்களில் ஒருவர் கூட கடவுளை நேர்மையாக நேசிக்கவும், எல்லோரிடமும் எல்லாவற்றிலும் என்னைக் காணவும், எனது அனைத்து ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**

**நீங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டிய அன்பின் பிரசாதத்தை இப்போது நான் வழங்குகிறேன். எவரும் என்னைத் தலைவணங்கவோ, பழங்கள், பூக்கள் போன்றவற்றை வழங்கவோ கூடாது. நான் அன்புடன் கொடுப்பதை, அன்புடன் மட்டும் பெற்றுக்கொள்ளுங்கள்.**

மண்டலி 'பாபாவின் பாதங்களைத் தொடாதீர்கள்' என்பதற்கான தெலுங்கு வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, மக்கள் பிரசாதத்தைப் பெற வரும் வேளையில், அவர்கள் அந்த வாசகத்தை மீண்டும் மீண்டும் உரத்த குரலில் மொழிந்தனர். இது ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் நடந்தது, டாக்கேயின் குரல் ஓங்கிய ஒலி எழுப்பியது.

பாபா, மாலை 6:45 மணி வரை, தொடர்ந்து பிரசாதம் வழங்கினார். பாதங்களைத் தொடாதீர்கள் என்று எச்சரித்தபோதிலும், மக்கள் அதைச் செய்யத் தொடங்கியதும், அவர் அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறி, குருகுலத்திற்குத் திரும்பிச் சென்றார். அதற்கு முன்னதாக, அவர் எஞ்சியிருந்த பழங்கள் மற்றும் இனிப்புகளைக் கைகளால் தொட்டு ஆசீர்வதித்தார்; உள்ளூர் சேவகர்கள் அவற்றை கூட்டத்தில் விநியோகித்தனர்.

மாலை 7:15 மணிக்கு, மண்டலி மற்றும் ஆந்திர சேவகர்களுடன் ஓய்வெடுத்த வண்ணம் நிதானமாகப் பேசிக் கொண்டிருந்த போது, பாபா இவ்வாறு கூறினார்: "**இன்று நான் முன்பு கூறியது போல், ஒவ்வொரு முறையும் நான் எதையாவது விளக்க நினைத்த வேளையில், ஒலிப்பெருக்கி பழுதடைந்தது. இன்று எனக்கு மனதில் தோன்றியது, எனது மௌனத்தைக் கலைக்கும் தருணத்தில், அனைத்து மதங்களுக்கும், அவற்றைச் சார்ந்திருக்கும் பாதிரியார்களுக்கும் நான் என்ன செய்வேன் என்பதை விளக்க இருந்தேன்; ஆனால் மீண்டும், எனது ஆங்கிலத்திலான செய்திகள் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு, ஒரே நேரத்தில் வெளியிடப்படும்போது ஒலிப்பெருக்கி சில சிரமங்களை ஏற்படுத்தியது.**

**"நான் கோவில்கள், மசூதிகள், மற்றும் தேவாலயங்களைக் குறித்து எனது உரையைத் தொடங்கினேன்; நான் மிகவும் சிறப்பான மனநிலையில் இருந்ததால், பூசாரிகள், பாதிரியார்களைப் பற்றி இன்னும் பல**

**விஷயங்களைச் சொல்ல விரும்பினேன், ஆனால் சூழ்நிலைகள் அனுமதிக்கவில்லை. அதற்கும் பின்னால் ஏதோ ஒரு நோக்கம் உள்ளது. நான் இப்போது விளக்கினாலும், விளக்காவிட்டாலும் கூட, எது நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும்."**

1954 பிப்ரவரி 28 ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணியளவில், குருகுல விடுதியின் சிறுவர்களுக்கு, பாபா, தனது தனிப்பட்ட சகவாசத்தை வழங்கினார். அவரும் ஒரு சிறுவனைப் போல மகிழ்ச்சியான மனநிலையுடன் கோலி விளையாடினார். பாபா, அப்போது 'உங்களில் சிறந்த பாடகர் யார்?' என்று கேட்க, சிறுவர்கள் உடனடியாகப் பாடத் தொடங்கினர்; பாபா ஒரு மத்தளத்தைக் கழுத்தில் தொங்கவிட்டு, தாளத்துடன் இசைக்கத் தொடங்கினார். பின்னர், அன்புடன் கீழ்வரும் உரையை வழங்கினார்:

**நேர்மையாக இருங்கள். ஒருபோதும் பொய் பேசாதீர்கள். எது நடப்பதாக இருந்தாலும் பொய் சொல்ல வேண்டாம். இந்தப் பிறவியில் நானும் ஒரு காலத்தில் உங்களை போலக் குழந்தையாக இருந்தேன். இப்போது நான் கடவுள். நீங்கள் என்னை நேசித்தால் இந்த ஆன்மீகப் பாதையில் நீங்களும் முன்னேறலாம்.**

**உங்கள் ஆசிரியர்களை, உங்கள் முதல்வரை மதிக்க வேண்டும். உங்கள் படிப்பில் கவனம் செலுத்துங்கள், உங்கள் கடமைகளைச் செய்யுங்கள், ஆனால் ஒவ்வொரு நாளும், ஒரு முறையாவது, என்னை நினைவில் கொள்ளுங்கள். அப்போது எனது பார்வை உங்கள் அனைவரின் மீதும் இருக்கும், 'எனது பார்வை உங்கள் மீது இருக்கும்' என்பதன் அர்த்தம், நான் உங்களுக்கு எல்லா வகையிலும் உதவுவேன் என்பதாகும். ஆனால் நேர்மையாக இருங்கள்.**

இந்தச் சுருக்கமான சொற்பொழிவுக்குப் பிறகு, பாபா, **"நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, உங்களில் யார் அதைச் செய்வார்கள்?"** என்று வினவ, பெரும்பாலான சிறுவர்கள் கைகளை உயர்த்தினர். மீண்டும் பாபா அவர்களுடன் விளையாடத் தொடங்கினார், அவர்கள் பிடிப்பதற்கென ஆப்பிள் பழங்களை வீசினார். ஒரு திசையை நோக்கி, அவர் பழங்களை மற்றொரு திசையில் வீசினார்; குழந்தைகள் பாபாவின் உற்சாகமான சகவாசத்தை முழுமையாக அனுபவித்தனர்.

காடேக்கர், மதன் அரோரா, டாக்டர் தேஷ்முக் ஆகியோர் தத்தமது அலுவலக வேலைக்குத் திரும்ப வேண்டியிருந்ததால், அன்று தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. பாபா அவர்களை அரவணைத்து விடையளித்தார். மதன் விஜயவாடாவில் தொடங்கி அனைத்து விழாக்களையும் காணொளியில் படமாக்கிக் கொண்டிருந்தார், ஆனால் அவரது விடுமுறையும் நிறைவடைந்ததால், அவர் திரும்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



**குருகுல  சிறுவர்களுடன், ராஜமுந்திரி, 1954**
(WITH THE BOYS OF THE GURUKUL, RAJAHMUNDRY, 1954)



**ஆந்திரா, பிப்ரவரி  1954** (ANDHRA, FEBRUARY 1954)

குருகுலக் குழுவின் தலைவரின் மனைவி, உடல்நலமின்றி இருந்ததால், பாபாவின் தரிசனத்திற்காக வர முடியவில்லை என்றும், அவருடைய ஆசீர்வாதத்திற்காகப் பிரார்த்தனை செய்வதாகவும் குருகுலத்தின் முதல்வர் தானேரி புல்லையா (THANNERI BULLIAH), பாபாவிடம் கூறினார். பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நான் அவரை ஆசீர்வதிக்கிறேன். ஆனால் அனைத்திற்கும் மேலாக, எனது போதனைகளுக்கு உண்மையாக இருக்க வேண்டும், அன்பானவரில் ஒருவன் தனது சுயத்தை இழக்காதவரை, உண்மையான பக்தன் என சொல்ல முடியாது என்று நான் கூறவேண்டியது அவசியம்.**

"**கடவுளை நேசிப்பதில் எந்த சமரசமும் இருக்க முடியாது. கடவுளின் அம்சங்களில் ஒன்று எல்லையற்ற நேர்மை, நாம் கடவுளை நமது ஆழ் இதயத்திலிருந்து நேர்மையாக நேசிக்காவிட்டால், நாம் அவரைக் கண்டுகொள்ள முடியாது. வாசித்தல், கொள்கை, கோட்பாடு, பகுத்தறிவு, சிந்தனையின் உருவாக்கம் நம்மை எங்கும் கொண்டு செல்லாது. அன்பு, அதாவது அன்பில் மட்டுமே ஒருவர் அனைத்தையும் இழக்கும் தருவாயில் கடவுளில் தன்னைக் காண்கிறார். எப்படியாயினும் நான் அவரை ஆசீர்வதிக்கிறேன்.**"

தொடர்ந்து பாபா கூறினார், "**திரு. புல்லையா, அவரது பார்வையில் அவர் சொல்வது சரிதான். அவர் என்னை அந்தப் பெண்மணிக்கு உதவுமாறு கேட்கிறார், ஆனால் நாம் நம்மை இழக்க வேண்டும், இழந்து, பின்பு நித்தியமாக வாழ வேண்டும். நான் அவரை ஆசீர்வதிக்கிறேன்.**"

உண்மை என்னவெனில், கல்லூரித் தலைவரின் மனைவி வேண்டுமென்றே பாபாவின் தரிசனத்திற்கு வரவில்லை, ஏனெனில் அவருக்கு பாபா மீது நம்பிக்கை இல்லை.

உள்ளூர் ராதாகிருஷ்ணா ஆசிரமத்திலிருந்து சுவாமி ஒருவர் பாபாவிடம் வந்தபோது, பாபா அவரிடம், "**ராதா, கிருஷ்ணா இருவரும் நானே. உங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்**" என்று கூறினார்.

1953 நவம்பர் மாதத்தில் டெஹ்ரா டூனில் நடந்த தரிசன நிகழ்ச்சியை, மதன் காணொளி திரைப்படமாக எடுத்தது, அன்று காலை திரையிடப்பட்டது; அதற்குப் பிறகு பாபா அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்.

அன்று காலை ஒன்பது மணியளவில், பாபா, குழுவுடன் அமலாபுரம் (AMALAPURAM) நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். செல்லும் வழியில் தௌலீஸ்வரத்தில் (DOWLAISWARAM) வாழ்ந்த என். பிள்ளையின் (N. PILLAI) இல்லத்திற்கு பாபா விஜயம் செய்தார். பிள்ளை, தர்ம ராவின் சக ஊழியர். பாபாவை அவரது இல்லத்திற்கு அழைப்பதற்காக அவர் முன்னதாகவே கொவ்வூருக்கு வந்திருந்தார். அங்கு ஒன்று திரண்ட அன்பர்களிடம் பாபா கூறினார்: "**நான் காலை 7:30 மணிக்கு இங்கு வந்து, அரை மணி நேரம் நின்று, செய்திகளையும், பிரசாதத்தையும் வழங்க விரும்பினேன். ஆனால் இப்போது**

**ஒன்பது மணி, கால தாமதம் ஆகிவிட்டதால் நான் பிரசாதத்தைத் தொட்டு ஆசீர்வதித்துச் செல்கிறேன்.**"

பாபா, மௌனம் கடைப்பிடிப்பதை, பிள்ளை நிச்சயமாக அறிந்திருந்தார், ஆனால் அவர் எழுதுவதில்லை என்பது அவருக்குத் தெரியாது, ஆதலால் ஒரு கற்பலகையும், சாக்குக்கட்டியும் தயாராக வைத்திருந்தார். பாபா சிரித்துக்கொண்டே டாக்கேயுடன் 'டிக்-டாக்-டோ' எனும் (TICK-TACK-TOE, ஒரு சதுரத்தில் 9 சதுரங்கள் வரைந்து விளையாடும்) விளையாட்டை விளையாடினார். ஒரு கட்டத்தில், பாபா, பிள்ளையிடம் அவரது குடும்பத்தினரை அறிமுகப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். பிள்ளை, "எனது மனைவியும், குழந்தைகளும் வெளியூர் சென்றுள்ளனர், நான் இங்குத் தனியாக இருக்கிறேன்" என்றார்.

பாபா புன்னகைத்து, "**நான் என்றென்றும் தனியாகவே இருக்கிறேன்; குறைந்தபட்சம் நீங்கள் தற்காலிகமாகத் தனியாக இருக்கிறீர்கள், நான் மகிழ்ச்சியடைகிறேன்**" என்று கூறினார்.

பாபாவும் குழுவினரும் அமலாபுரத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் வழியில், பாபாவிற்கு பசி ஏற்படவே, மெஹர்ஜி அவருக்கு சிறிது பாலாடைக் கட்டியும், மெல்லிய பிஸ்கட்டுகளையும் கொடுத்தபோது, பாபா அவரது வழக்கமான சாதம் மற்றும் பருப்பை விரும்பினார். கார் நின்றதும், பின்னால் பேருந்தும் வந்து சேர்ந்தது. மெஹர்ஜி பேருந்தில் பயணம் செய்த சகனிடம் 'சாதமும், பருப்பும் தயாரா?' என்று கேட்க, 'பருப்பு தயார் ஆனால், அதனுடன் உண்ண சாதம் அல்லது ரொட்டி எதுவும் தயாராகவில்லை' என்றார் சகன். பயண வேளையில் சகன், பாபாவிற்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார்; தேவையான அனைத்து பொருட்களையும் அவருடன் வைத்திருந்தார், ஆனால் இந்த முறை சாதம், சப்பாத்தி, ரொட்டி எதுவும் தயாராக இல்லை.

பாபாவும் குழுவும் அடுத்த கிராமத்தைச் சென்றடைந்ததும், தயார் செய்த சாதம் வாங்க முடியுமா என்று விசாரிக்குமாறு குடும்ப சாஸ்திரிக்கு அறிவுறுத்தினார். காலை 9:45 மணியளவில் அவர்கள் போபர்லங்கா (BOBBARLANKA) கிராமத்தை வந்தடைந்தனர், அங்கு கிராம மக்கள் தரிசனத்திற்காக விரைந்தனர். சாஸ்திரி ஒரு சிறிய உணவகத்தைக் கண்டுபிடிப்பதில் வெற்றி கண்டார்; அங்கு சாதம் தயாராகிக் கொண்டிருந்தது. சகன் பருப்பைச் சுட வைக்கத் தொடங்கினார், மெஹர்ஜி அனைத்து செயல்முறைகளையும் விரைவுபடுத்த அழுத்தம் கொடுத்தார்.

பாபா, குடும்ப சாஸ்திரியிடம், "**ஐந்து நிமிடத்தில் சாதம் தயாராகுமா?**" எனக் கேட்டார்.

"பதமாக சமைக்க குறைந்தது 20 நிமிடங்களாவது ஆகும் பாபா" என்றார். இப்போது, காத்திருப்பதற்கு பதிலாக, பாபா அங்கிருந்து வெளியேற முடிவு செய்தார். எனவே சகன் அடுப்பை அணைத்துவிட்டு அவர்கள் போபர்லங்காவை விட்டு வெளியேறினர்.

காரில் இருந்த பாபா, "**எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது, வேகமாக ஓட்டுங்கள். காரை நிறுத்தாமல், நேராக அமலாபுரம் செல்லுங்கள்**" என்று தர்ம ராவை வற்புறுத்தினார்.

தர்ம ராவ் அவ்வாறே செய்தார், ஆனால் அவர்கள் கொட்டபெட்டா (KOTTAPETA) கிராமத்திற்கு வந்தபோது, பலர் சாலையில் கூடியிருந்தனர். பாபா, காரை நிறுத்தியதும் உள்ளூர் பணியாட்களில் சிலர் பாபாவை அணுகி, "இங்கே சிறிது நேரம் ஓய்வெடுங்கள்; கொஞ்சம் இளநீரை அருந்தி, மண்டலியையும் அருந்த அனுமதியுங்கள்" என்று கேட்டுக்கொண்டனர்.

பாபா அமைதியாக இருந்தார், ஆனால் எரச் அவருக்கு நினைவூட்டினார், "கொட்டபெட்டா அன்பர்கள் உங்களிடம் இந்த சந்தர்ப்பத்திற்காக வேண்டியபோது, நீங்கள் ராஜமுந்திரியில் இதற்கு இணக்கம் தெரிவித்தீர்கள்."

எனவே பாபா ஒப்புக்கொண்டார், "**சரி, மண்டலி இளநீரை அருந்தட்டும்; ஆனால் எனது காரை அமலாபுரத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். எனக்கு இளநீர் வேண்டாம்**" என்று கூறினார்.

பாபாவின் கார் 50 கெஜம் தூரம் கூட செல்லவில்லை, அப்போது இரண்டு பேர் உணவு நிரப்பப்பட்ட தட்டுகளுடன் வருவதைக் கண்டனர். எப்படியோ, பாபா சாப்பிட விரும்புகிறார் என்ற செய்தியை, குடும்ப சாஸ்திரி முன்னரே தெரிவிக்க முடிந்தது. இதனால் மக்கள் கூட்டம் அலைமோதியது, பாபா மீண்டும் காரை நிறுத்தினார். இதற்கிடையில், பின்தங்கி இருந்த மண்டலியின் பேருந்தும் வந்தது. பாபாவின் கார் நின்ற இடத்தில் சேவகர்கள் அதை நிறுத்திவிட்டு, மண்டலி இளநீர் அருந்துவதற்கு பாபா ஒப்புக்கொண்டதைப் பற்றி பெண்டுவிடம் தெரிவித்தனர். பாபாவின் காருக்குப் பின்னால் பேருந்து நிற்க வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவு அமலில் இருந்ததை பெண்டு அறிவார். பாபாவின் கார் அப்போது சுமார் 50 கெஜம் முன்னால் இருந்ததால் என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாமல் திணறினார். பாபாவிடம் கலந்து ஆலோசனை செய்ய பெண்டு கீழே இறங்கியபோது, பாபா காரில் அமர்ந்திருக்க, எரச் வெளியே நின்று கொண்டிருந்தார். பெண்டு எரச்சிடம் கூறியபோது எரச், "என்ன சொல்வது? பாபா இன்று உறுதியான பதில் எதுவும் கூறவில்லை" என்றார்.

இதைக் கேட்ட பாபா, காரிலிருந்து இறங்கி, ஒரு குடிசைக்குச் சென்று, அங்கே அமர்ந்து எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கத் தொடங்கினார், "**எனக்கு மிகவும் பசியாக இருக்கும் இவ்வேளையில், நீங்கள் இளநீர் அருந்துகிறீர்கள். காரை நேராக அமலாபுரத்திற்கு ஓட்டச் சொன்னேன். அதற்கு எவரும் செவிசாய்க்கவில்லை. இப்போது நீங்கள் அனைவரும் மனமார இளநீரை அருந்தலாம். நீங்கள் ஒவ்வொருவரும் நான்கு தென்னை இளநீரை அருந்தும்படி நான் கட்டளையிடுகிறேன்.**"

பெண்டு அமைதியாக நின்றபோது, பாபா அவருக்கு அறிவுறுத்தினார், "**உடனே சென்று ஏற்பாடு செய்யுங்கள். தென்னை இளநீர் வழங்குபவர் ஒவ்வொருவருக்கும் நான்கு இளநீர் வழங்க வேண்டும், அதனால் நீங்கள் அனைவரும் திருப்தி அடைவீர்கள்.**"

பாபாவின் குழுவில் 60 பேர் இருந்தனர்; அவர்களுடன் வந்தவர்களில் ஆந்திர அன்பர்களே அதிகம். பெண்டு திரும்பி வருவதற்குள் அவர்கள் அனைவரும் ஏற்கனவே தாகத்தைத் தணித்துக் கொண்டனர். எவ்வாறாயினும், ஒவ்வொருவருக்கும் நான்கு இளநீர் வழங்க வேண்டும் என்று பெண்டு அந்த விருந்தோம்புநரிடம் கூறினார். போதுமான காய்கள் இல்லாததால் அது சாத்தியமல்ல. மேலும் அவற்றைக் கொண்டு வர நேரம் பிடிக்கும், எனவே, என்ன செய்வது என்று அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தவிரவும், ஒரே நேரத்தில் இவ்வளவு தேங்காய்களை கொண்டு வருவது என்பது கேள்விக்குறியாக இருந்தது.

இதற்கிடையில், பாபா, எரச்சைக் கடுமையாகக் கண்டித்தார். சாஸ்திரி, தர்ம ராவ் இருவரும் முதன்முதலாக பாபாவின் அனல் பறக்கும் மனநிலையைக் கண்டு குழப்பத்தில் பதற்றமடைந்தனர். பெண்டு திரும்பி வந்து, தேங்காய்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாக பாபாவிடம் தெரிவித்தார், எனவே பாபா அனைவரையும் பேருந்தில் தத்தமது இருக்கைகளில் மீண்டும் அமருமாறு கூறினார். பாபாவின் விருப்பத்திற்கு எதிராக எதையும் வலியுறுத்துவது புத்திசாலித்தனம் அல்ல, என்ற ஒரு நல்ல பாடத்தை விருந்தோம்புநர் கற்றுக்கொண்டார்.

கொட்டபெட்டாவில் பாபா ஒன்றும் உண்ணாததால், உணவுத் தட்டுகளை அப்படியே திரும்ப எடுத்துச் சென்றனர். பாபா, அவரது சொந்த காரணங்களுக்காக இவ்வாறு செய்ததை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

பல மைல்கள் சென்றதும், காலை 11:30 மணிக்கு காரை நிறுத்திய பாபா, அனைத்து மண்டலியையும் அழைத்தார், “**நான் இன்று அதிகாலையில், எனது அறையிலிருந்து வெளியே வந்த வேளையில், பல நாட்களுக்குப் பின்னர், இன்று எனக்கு நன்றாக பசித்தது, ஆனால், அங்கு உண்ண எதுவும் கிடைக்கவில்லை. தொடர்ந்து, கொட்டபெட்டாவில் சிறிது நேரம் நின்று உண்ணலாம் என்று நினைத்தேன், ஆனால் கூட்டம் அதிகமாக இருந்ததால் முடியவில்லை. கூட்டத்தை அங்கிருந்து கலைக்க காரை முன்னால் அனுப்பச் சொன்னேன். ஆனால், அப்போது அங்கு இந்த சம்பவம் நடந்தது. அனைத்தும் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இருந்ததால், என்னால் அங்கு உண்ண முடியவில்லை.**

“**இப்போது அமலாபுரம் செல்வோம்; தர்ம ராவ், காரை கவனமாக ஓட்டுங்கள்**” என்று பாபா கூறி முடித்தார்.

பாபா ஏன் இவ்வாறு கூறினார் என்று தர்ம ராவ் ஆச்சரியப்பட்டார். ஆனால் அவர்கள் பயணத்தைத் தொடர்ந்த சிறிது நேரத்தில், அமலாபுரம் நகரத்திலிருந்து ஏறக்குறைய ஆறு மைல் தொலைவில் பாபாவின் கார் திடீரென நின்றது. சாதாரணமாக, ஜாக்கிரதையான ஓட்டுநராக இருந்த தர்ம ராவ், லேசாகக் கண்களை மூடி சாய்ந்தார். அவர்கள் ஒரு கால்வாய் சாலையில் சென்று கொண்டிருந்தனர், அவர் கண்களை மூடிய அந்த நேரத்தில், கார் சாலையில் இருந்த கற்குவியல் மீது மோதியது. காரின் வலது சக்கரங்கள் குவியலுக்கு மேல்

சென்றன; பாபா, விரைவாக ஸ்டியரிங்கைப் பிடித்து, காரின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்காவிட்டால், கார் நிச்சயமாக கால்வாயில் கவிழ்ந்திருக்கும்.

காரில் பயணித்தவர்கள் மூச்சைப் பிடித்துக்கொண்டு, மௌனமாக, தங்கள் அன்பான கடவுளுக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தனர் - ஆனால் பாபா மகிழ்ச்சியாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். அந்த சம்பவத்தால் தர்ம ராவ் வருத்தமும் மனச்சோர்வும் அடைந்திருந்ததைக் கண்ட பாபா, அவரை உற்சாகப்படுத்த, கேலி செய்யத் தொடங்கினார். "**இப்போது நீங்களும் இதர அனைவரும் விழித்துள்ளீர்கள்! கொட்டபெட்டாவில் நடந்த சம்பவத்தால் நான் பசியை இழந்தேன், ஆனால் இப்போது அது திரும்பி வந்துவிட்டது! எனவே அமலாபுரத்திற்கு விரைவில் சென்று, அங்கே நான் நன்றாக உணவு உண்ணலாம்.**"

பாபாவின் காரும், அதைத் தொடர்ந்து ஜீப்பும், பேருந்தும் சென்றன. ஆனால் புல்லேற்றிக்குரு (PULLETIKURU) கிராமத்தில் பாபாவின் தரிசனத்திற்காக மக்கள் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டதால் கார் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது.

இறுதியாக, பிப்ரவரி 28ஆம் நாள் மதியம் 12.30 மணிக்கு அமலாபுரம் வந்தடைந்து, அவர்கள் கோனசீமாவின் (KONASEEMA) இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கலா வெங்கட ராவ் (KALA VENKATA RAO), பாபாவை அவரது அறைக்கு அழைத்துச் சென்றார்; பாபாவிற்கும் அவரது குழுவினருக்கும் உணவு தயாராக இருந்தது. அவர்கள் மதிய உணவை உண்ட பிறகு, பாபாவின் அறைக்குச் செல்லும் படிக்கட்டுகளின் கீழே வெங்கட ராவ், எவரும் அவருக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகக் காவல் புரிந்தார். வெங்கட ராவ், சென்னை அரசாங்கத்தில் முன்னாள் அமைச்சராகவும், இந்திய தேசிய காங்கிரஸின் (அரசியல் கட்சி) பொதுச் செயலாளராகவும் இருந்தார். ஆனால், உயர்ந்த உலகப் பதவிகளில் இருந்தபோதிலும், பாபா மீது ஆழ்ந்த அன்பு கொண்ட அடக்கமான மனிதராக இருந்தார்.

உணவுக்குப் பிறகு, சாஸ்திரி, பாபாவிடம், சமீபத்திய வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெங்கடராவ் உதவாமல் இருந்திருந்தால், பல குடும்பங்கள் ஆதரவற்றதாக பட்டினியில் தவித்திருக்கும் என்று கூறினார். இதைக் கேட்ட பாபா, எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**கடவுள் மீதான அன்பை, பல வழிகளில் வெளிப்படுத்தலாம், ஏனெனில் அவருக்கு எல்லையற்ற சிறப்பு பண்புகள் உள்ளன. சக்தி, ஞானம், பேரின்பம் ஆகிய மூன்று பண்புகளும் நன்கு அறியப்பட்டவை, ஆனால் எல்லையற்ற நேர்மை மற்றும் எல்லையற்ற நற்குணம் ஆகியவை முக்கிய பண்புகளாகும் - மேலும், நற்குணம், சுயத்தைக் குறித்த சிந்தனை இல்லாத இடத்தில் இருக்கும் என்று பொருள்படும்.**

**நீங்கள் உங்கள் சக உயிர்களுக்கு, தன்னலமின்றி சேவை செய்யும்போது, கடவுளுக்கு சேவை செய்கிறீர்கள்; ஆனால் இந்த 'சுயநலமின்மை' என்ற வார்த்தை வரம்பில்லாமல், தளர்வாகப் பயன்படுத்தப்படுவதால், உள்நோக்கம் இழக்கப்படுகிறது. தன்னலமற்ற**

**சேவை என்பது மிகவும் இயல்பானதாக இருக்க வேண்டும், நீங்கள் சேவை செய்தீர்கள் என்ற எண்ணம் கூட இல்லாமல் இருக்க வேண்டும்.**

**நேர்மை எனும் கடவுளின் பண்பு என்னவெனில், உங்கள் சொந்த மகிழ்ச்சியை விலையாக அளித்து, பிறரை மகிழ்வுறச் செய்வதாகும். உங்கள் சேவையில் எதையும் வீண் பகட்டாகக் காட்டிக்கொள்ளாமல், உங்கள் சொந்த அன்பானவர்களை நீங்கள் நடத்துவது போல, பிறரையும் நடத்த வேண்டும் என்று நேர்மை கோருகிறது.**

இந்தச் செய்தியை வழங்கும் போது, தர்ம ராவ் அரைத் தூக்கத்தில் இருந்தார்; பாபா நகைச்சுவையாகக் கூறினார், "**கார் ஓட்டும்போதும் அவர் தூக்கத்தில் இருந்தார், ஸ்டீயரிங் வீலை நான் சரியான நேரத்தில் கட்டுப்படுத்தவில்லை என்றால், நாங்கள் இப்போது இங்கே இருந்திருக்க மாட்டோம்; மாறாக கால்வாயில் இருந்திருப்போம். இப்போதும் கூட அவர் தூங்கி விழுகிறார்!**"

பாபா, தொடர்ந்து கூறினார், "**நான் கடவுளோடு ஐக்கியமாக இருப்பதைக் கண்டபோது, நான் இழக்காத ஒரே விஷயம் எனது நகைச்சுவை உணர்வு! எனவே, சிலரால் எனது தெய்வீகத்தை ஆழங்காண முடிகிற அதே வேளையில், குறைந்தபட்சம் எல்லோராலும் நான் மனிதனாக இருப்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.**"

தரிசன நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது; அங்கு எந்தச் செய்தியை வாசிக்க வேண்டும் என்று ராம்ஜூ, பாபாவிடம் கேட்டதற்கு, பாபா பதிலளித்தார், "**எனது அறிக்கைகளையும், செய்திகளையும் வழங்குவதை விட, நான் வழங்கும் பிரசாதம் மூலம் மக்களுடன் தொடர்பு கொள்வது மிகவும் முக்கியமானது.**"

கோனசீமாவின் வீடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது: அவர் ஒரு பகுதியில் குடியிருந்தார், அன்றிரவு பாபா ஓய்வெடுத்த கூட்டுறவு வங்கி, மற்றொரு பகுதியில் இருந்தது. கட்டிடத்திற்கு முன்னால் அமைந்த தோட்டத்தில், சிறிது நேரம் பாபா, முன்னும் பின்னுமாக நடந்து சென்றார். வங்கியின் இரவு காவலாளி தாத்தைய்யாவிற்கு (TATTAYYA) ஒரு குடிலும் இருந்தது, பாபா அதன் வராந்தாவில் அமர்ந்து, அவரது எளிமையான குடிலைப் புனிதமாக்கினார்.

பிற்பகல் மூன்று மணியளவில், பாபா, தரிசன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றார். காக்கிநாடாவைச் சேர்ந்த வி.வி. நாராயண ராவ், கூடாரத்தில் பாபாவின் தரிசனத்திற்காகக் காத்திருந்தார். பாபா, முதலில் தரையில் சிறிது நேரம் அமர்ந்து, பின்னர் எழுந்து நின்று, அங்குக் கூடியிருந்த மக்களுக்கு, தலைக்கு மேல் கைகளை உயர்த்தி வணக்கம் செலுத்தினார். பின்னர் அவர் தமது எழுத்துப்பலகை வழியாக இந்தச் செய்தியை வழங்கினார்:

**நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல. எல்லா மதமும் எனக்குச் சொந்தமானது. எனது சொந்த மதம், நான் ஆதிகாலத்து எல்லையற்ற ஏக**

**இறைவனாக இருப்பதே! மேலும் நான் அனைவருக்கும் கற்பிக்கும் மதம் கடவுள் மீதான அன்பு ஒன்றே!**

**இந்த அன்பை, உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், வறியவர் என யார் ஒருவரும் நடைமுறைப்படுத்தலாம்; அது மட்டுமின்றி, அனைத்து சாதி, மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் கடவுளை நேசிக்க முடியும். நம் அனைவரிலும் சமமாகக் குடியிருக்கும் ஒரே கடவுளை, அன்பின் மூலம் அனைவரும் அணுக முடியும். ஆகவே, உங்களில் சிலரேனும் கடவுளை நேசிக்கும் விதத்தில் நேசிக்க எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

விஜயவாடாவில் பாபா வழங்கிய செய்திகளை ஜெகந்நாதம் பந்துலு தெலுங்கில் மொழிபெயர்த்து வாசித்தார். நான்கு மணிக்கு இது நிறைவடைந்ததும், பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**இந்தச் செய்திகள், கட்டுரைகள், விரிவுரைகள் அனைத்திலும் ஒன்றும் இல்லை. சாமானிய மக்களைப் பொறுத்தவரை, கடவுளை நேசிப்பதற்கான நடைமுறை வழி, பிறருக்கு அன்புடன் உதவுவதாகும். கடவுள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார், எனவே நீங்கள் பிறரை நேசிக்கவும், பிறருக்கு உதவவும், பிறரை மகிழ்வுறச் செய்யவும் முயற்சித்தால், நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்கள். இவ்வண்ணம், அன்றாட வாழ்க்கையில் உங்கள் கடமைகளில் தவறாமல் இருப்பதன் மூலம், நீங்கள் கடவுளை நேசிக்க முடியும். உங்களில் சிலரேனும் கடவுளை நேசிக்க முயன்றால், நான் இங்கு வந்ததன் நோக்கம் நிறைவேறும்.**

"பாபாவின் பாதங்களைத் தொடாதீர்கள்!" என்று தெலுங்கில் சத்தமாக டாக்கே கூக்குரல் கொடுத்த அவ்வேளையில், பாபா பிரசாதத்தை வழங்கத் தொடங்கினார். ஏறக்குறைய 7,000 பேர் தரிசனத்திற்காக வரிசையில் காத்திருந்தனர். மனிதகுலத்தின் ஓட்டத்தை அவதானித்தபோது, நதிகள் இறைப்பெருங்கடலில் பாய்வது போலத் தோன்றியது. இறை அன்பு எங்கும் வியாபித்திருந்தது, அதன் இனிமை, இறை-மனிதனைத் தவிர இந்த உலகில் வேறு எவராலும் வழங்க முடியாத மகிழ்ச்சியில் மக்களை மெய்மறக்கச் செய்தது.

மாலை 5:30 வரை பிரசாதம் வழங்கி, பாபா, கூடாரத்தை விட்டு வெளியேறி, கூட்டுறவு வங்கி கட்டிடத்திற்கு திரும்பிச் சென்றார். பல்லாயிரக்கணக்கானோர் தரிசனத்திற்கு வந்திருந்தாலும், ஒவ்வொருவரும் அவரவர் கேள்விக்கான பதிலைப் பெற்றுக்கொண்டனர்: பாபாவின் ஒவ்வொரு செயலிலும், முகபாவங்களிலும் அவர்களுக்கான பதில் இருந்தது. ஏதோ ஒரு வகையில், பாபா, அவர்களின் மனதை தமது இறை அன்பெனும் கடலில் மௌனமாக்கி, ஒவ்வொருவரின் கேள்வியையும் ஆழமாக மூழ்கச் செய்தார்.

வங்கிக் கட்டிடத்தை அடைந்ததும், பாபா குடும்ப சாஸ்திரியிடம் கூறினார்: **"இந்த வாழ்க்கையில் இது எனது கடைசி ஆந்திரப் பயணம். இதற்குப் பிறகு, மார்ச் 21ஆம் தேதி, அஹமதுநகரில் நடக்க இருப்பதைத் தவிர, வேறு எந்த நிகழ்ச்சிகளும் இல்லை. பின்னர் எனது 'உண்மையான**

**திட்டம்' தொடங்கும்; இது இப்போது நாம் பார்ப்பதைப் போலல்லாமல், நான் எனது மௌனத்தைக் கலைக்கும் நேரமாக இருக்கலாம்.**

**"இது எனக்கு காந்திஜியை நினைவூட்டுகிறது. நான் இங்கிலாந்திற்கு கப்பலில் சென்று கொண்டிருந்தபோது, அவரும் அதே கப்பலில் இருந்தார். நான் எனது அறையில் இருந்தேன், மூன்று இரவுகள் காந்தி, அவரது செயலாளர் மஹாதேவ் தேசாயுடன் என்னைப் பார்க்க வந்தார். ஒவ்வொரு முறையும் இரண்டு முதல் மூன்று மணி நேரம், ஆன்மீகத்தைப் பற்றி எழுத்துப்பலகையில் அவருக்கு விளக்கி வந்தேன்.**

**"அவரது மூன்றாவது மற்றும் கடைசி வருகையின்போது, அவர் என்னிடம் குஜராத்தியில் கூறினார், 'இப்போது, பாபா, இந்தச் சித்திரவதை போதும். உங்கள் மௌனத்தைக் கலைத்து, உங்கள் செய்தியை உலகுக்கு வழங்குங்கள்.'**

**"நான் அவருக்கு இவ்வாறு பதிலளித்தேன்: 'விரைவில் நான் எனது மௌனத்தைக் கலைப்பேன்!' அந்த 'விரைவில்' என்று எழுத்துப்பலகையில் எழுதி சுமார் 23 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் இப்போது நான் 'விரைவில்' என்று கூறுவது, அது நிஜமாகவே விரைவில் நிகழும் - உண்மை என்றால் உண்மை என்று அர்த்தம்! காந்திஜி ஆன்மாக்களில் ஒரு மாணிக்கக் கல்.**

**"நான், காலாதி காலத்திற்கும் ஆதிகால புருஷன்; விரைவில் நான் பேசுவேன்; அவமானம், மகிமை, கொடூரம் போன்றவற்றை எதிர்கொண்டு, பின்னர் பௌதீக உடலைக் கைவிடுவேன்."**

பேச்சின் தலைப்பை மாற்றி பாபா மேலும் கூறினார்: **"மண்டலி, ஆந்திர அன்பர்கள், பக்தர்கள் மற்றும் சேவகர்கள், மார்ச் 1ஆம் தேதி இரவு விழித்திருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும். மார்ச் 2ஆம் தேதி திட்டமிடப்பட்ட சேவகர்களின் கூட்டம் அப்போது சிறப்பாக நிகழும்.**

**"ஒரு கவாலி இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய முடிந்தால், நான் விழித்திருப்பதை பொருட்படுத்த மாட்டேன்; இல்லையெனில், பூட்டிய அறையில் எனது சொந்த கவாலியைக் கேட்பேன்."** (பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதைச் சுட்டிக்காட்டினார்.)

இதற்கிடையில் விருந்தோம்புநர் கலா வெங்கடராவ், பாபாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பாபா அவரிடம், **"எனது பணியைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்வதற்காக, நான் சில சமயங்களில், பிறரிடம், நகைப்பூட்டும் தொனியில் பேசுவேன், ஆனால் நான் உங்களை மிகவும் விரும்புகிறேன் என்று கூறும்போது அதில் வேடிக்கை எதுவும் இல்லை. நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."**

வெங்கடா தனது குடும்பத்தினரையும் உறவினர்களையும் பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார், அவர் அவர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்தார்.

ஆந்திரப் பயணம் முழுவதும், ஃபிரான்சிஸ் பிராபஸோன் தொடர்ந்து மண்டலியுடன் இருந்தார். சில வேளைகளில் உள்ளூர் விருந்தோம்புநர்கள்

அவருக்கு வித்தியாசமான உணவு வகைகளை வழங்க முன்வந்தனர், ஏனெனில் அவர் ஒரு மேற்கத்தியர், ஆனால் அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல், மண்டலியுடன் இருப்பதிலேயே திருப்தியடைந்தார். உண்மையில், இதுவே அவரது ஆரம்ப கால பயிற்சியாகும், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மீண்டும் இந்தியாவிற்கு வந்து பாபாவுடன் நிரந்தரமாக (1959ஆம் ஆண்டு) இணைந்தார்.

பாபா, வங்கி கட்டிடத்தில் இரவு ஓய்வு எடுத்தார், மேலும் மண்டலி, அவர்கள் ஓய்வெடுக்கும் கொல்லூரி வாரி தெரு (KOLLURI VARI STREET) தர்மசாலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

1954 மார்ச் 1ஆம் நாள் காலை 7:00 மணிக்கு, கே.டி.ஆர்.எம்., ஆந்திர அன்பர்கள், மண்டலி ஆகியோருடன் நடக்கவிருந்த சேவகர்கள் கூட்டம் குறித்து, ஆலோசனை செய்துகொண்டிருந்த போது பாபா, "**இன்றிரவு சேவகர்கள் கூட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும்; எப்படியும் இன்றிரவு அனைவரும் விழித்திருக்க வேண்டும்**" என்று கூறினார்.

குடும்ப சாஸ்திரியை நோக்கி, பாபா கேட்டார், "**இன்றிரவு கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா?**

**"என்னைப் பொறுத்தவரை பணி முடிய வேண்டும், அது 100 சதவீதம் நேர்மையாகச் செய்யப்பட வேண்டும் அல்லது நிறுத்தப்பட வேண்டும். என்னால் தனியாகப் பணிபுரிய முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**"முடிந்தால், சிறிய மற்றும் முக்கிய சேவகர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். 'பணிபுரிவது எப்படி?' என்ற ஒவ்வொரு விஷயத்தையும் நான் விவாதித்து, பிரச்சினையை முழுமையாகத் தீர்த்து வைப்பேன், ஏனெனில் இந்த வெகுஜன தரிசனங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை, நான் வெறுமனே பெயருக்காக நடத்த விரும்பவில்லை. சேவகர்கள் என்னை நேசிக்கும் அதேவேளையில், 100 சதவீதம் நேர்மையுடன் பணிபுரியாவிட்டால், அவர்கள் தேவைப்பட மாட்டார்கள்."**

பாபா மீண்டும் கூறினார், "**முடிந்தால், இன்றிரவு சந்திப்பை ஏற்பாடு செய்யுங்கள், இல்லையெனில், நாளை காலை. அனைவரும் இன்றிரவு வர முடியாவிடில், அவர்கள் நாளை வர வேண்டும், நான் இந்தப் பௌதீக உடலில் மீண்டும் இங்கு வரமாட்டேன் என்பதால் இதையெல்லாம் சொல்கிறேன்.**

**"ஹமிர்பூரில், நான் சேவகர்களுடன் இதைப் பற்றி விவாதித்தேன், இங்கும் நான் உங்களை எச்சரிக்கிறேன், ஏனெனில், நான் ஆந்திராவை நேசிக்கிறேன்; நான் ஏன் அதை விரும்புகிறேன் என்பது உங்களுக்கு புரியாது. ஆனால் நேர்மையாக செய்யும் வேலை உண்மையான வேலை, இல்லையெனில், வேலை செய்யவே வேண்டாம்.**

**“எனது வேலையை நான் நித்தியமாக, தனியாக செய்து வருகிறேன் - காலாதி காலம் முதல்!”** என பாபா கூறி முடித்தார்.

கே.டி.ஆர்.எம். அன்றிரவு சந்திப்புக்கான ஏற்பாடுகளை அவர்கள் கவனித்துக் கொள்வதாகவும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தொலைத்தந்தி மூலம் தெரிவிப்பதாகவும் பாபாவிற்கு உறுதியளித்தனர்.

அங்கு இருந்த துணை ஆட்சியாளர் எஸ்.பாமுலு (DEPUTY COLLECTOR S. PAMULU), என்பவரைப் பார்த்து, **“எனக்காக முழு மனதுடன் உழைப்பதோடு, என் அன்பை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். மக்களுக்காக உழைத்தால் எனக்காக உழைக்கிறீர்கள்”** என்று பாபா அறிவுரை வழங்கினார்.

ஆட்சியாளர் பாமுலு, கலா வெங்கட ராவ் மற்றும் இதர அன்பர்களின் இல்லங்களுக்கு பாபா விஜயம் செய்தார்; மேலும், எந்த அறிவிப்பும் இல்லாமல், ஏழை ஒருவரின் குடிலுக்கும் சென்றார்.

அன்று காலை 7:30 மணிக்கு பாபா, குழுவினருடன் அமலாபுரத்திலிருந்து ரஸோல் (RAZOLE) குறுநகருக்குப் புறப்பட்டுச் சென்றார். சேவகர்களின் சந்திப்பில் ஏற்பட்ட மாற்றம் குறித்து 100க்கும் மேற்பட்ட தொலைத்தந்திகளை அனுப்ப சாஸ்திரி, தனபதி, ரங்கா ராவ், மல்லிகார்ஜுனா ஆகியோர் பாபாவைப் பின் தொடராமல் தமது பணியில் மும்முரமாக இருந்தனர்.

ஒரு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, பாபா காரிலிருந்து இறங்கி, மண்டலி அவரை சூழ, இவ்வாறு எடுத்துரைத்தார்: **“நேற்றிரவு எனக்கும், இரவுக் கண்காணிப்புப் புரிந்த சகனுக்கும், வேடிக்கையும் விசித்திரமுமான ஒன்றாக இருந்தது. அனைத்தும் அமைதியாக இருந்த சூழலில், ஒரு பைத்தியக்காரன், சில நிமிட இடைவெளி கூட இல்லாமல், இரவு முழுவதும் அலறிக் கொண்டிருந்தான், ‘என்னை ஓய்வெடுக்க அனுமதிக்காத அளவுக்கு, எந்த விதமான பைத்தியக்காரத்தனம்’ என நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். இன்று இரவு நாம் கூட்டத்திற்காக விழித்திருக்க வேண்டும் என்பதால் நான் சீக்கிரம் ஓய்வு பெற விரும்பினேன்.”**

குமாரை நோக்கி, பாபா, ஏன் இப்படி நடந்தது என்று கேட்க, அதற்கு அவர், “ஏனெனில் அப்படி நடக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள்” என்று பதிலளித்தார்.

**“நிச்சயமாக, அது அப்படி நடந்திருக்க வேண்டும், அல்லது அவதார புருஷரின் அடித்தளம் எங்கும் இல்லை.”** என்று கூறி பாபா ஒப்புக்கொண்டார்.

குமாரைச் சுட்டிக்காட்டி, பாபா கூறினார், **“குமாரைப் பொறுத்தவரை, அவருக்கு, கடவுள், அவதார புருஷர், சத்குரு எவரைக் குறித்தும் எதுவும் தெரியாது. ஆனால், சரியானதைக் கூறவும், கீழ்ப்படியவும் அவருக்குத் தெரியும்.”**

புக்காரைப் பார்த்து, பாபா வினவினார், **“ஏன் இவ்வளவு மனச்சோர்வாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு நல்ல மனைவி இருக்கிறார், விரைவில் உங்களுக்கு நல்ல குழந்தை பிறக்கும். உங்கள் அரிசி ஆலையை, தனிப்பட்ட முறையில் நான் திறந்து வைத்தேன் - இப்போது நான் உங்களை அதில்**

**அரைப்பேன்! இன்னும் சில நாட்களில் நீங்கள் தூள் தூளாகிவிடுவீர்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும். அன்பர் தன்னைத்தானே தியாகம் செய்யும்போது, அன்பிற்குரியவர் சிரிக்கிறார், அதே வேளையில் குத்துவாள் கண்ணீர் சிந்தி அழும்!"**

அவர் மேலும் கூறினார், "**அன்பானவர், இறுதி மரணதண்டனையை நிறைவேற்றுபவர்!"**

முந்தைய நாள் காரில் நடந்த அசம்பாவிதத்தை நினைவுகூர்ந்த பாபா இவ்வாறு கூறினார்: "**உண்மையாகக் கூறினால், நேற்று, தர்ம ராவ் ஓட்டிய கார் கவிழ்ந்திருக்க வேண்டும்; கடவுள் நம்மைக் காப்பாற்றினார். இது என்னால் நிகழ்ந்த அதிசயம் என்று கூறப்படுகிறது, ஆனால், நான் அப்படி எதுவும் செய்வதில்லை. நான், எனது மௌனத்தைக் கலைத்து பேசும் வரை, எந்த அற்புதத்தையும் செய்வேன் என்று எதிர்பார்க்காதீர்கள். எப்படியோ, ஏதோ ஒரு வழியில் நான் ஸ்டீயரிங் வீலைப் பற்றிக்கொண்டேன். கடவுள் என்னை அவ்வாறு செய்ய வைத்தார்."** பாபா தர்ம ராவ் பக்கம் திரும்பி, "**இப்போது, எனது அல்லது கடவுளின் நிமித்தம், வாகனம் ஓட்டும் போது விழித்திருங்கள்!"**

கார், பேருந்து இரண்டையும் மீண்டும் ஓட்டிச் சென்று, காலை 8:45 மணிக்கு அனைவரும் ரஸோல் குறுநகரை வந்தடைந்தனர். பாபா, நேராக தரிசன இடத்திற்குச் சென்றார். இதர எல்லா இடங்களையும் போலவே, தரிசன நிகழ்ச்சிகளுக்கிடையே செய்திகள் வழங்கப்பட்டன, விநியோகத்திற்கான பிரசாதத்தைத் தொட்டு ஆசீர்வதித்து, 9:30 மணிக்கு பாபா அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ரஸோல், கொட்டபெட்டா (KOTTAPETA) இரண்டு இடங்களுக்கும் இடையே, சீதாராமைய்யா என்ற ஏழையின் குடிசையின் முன்னால், பாபா காரை நிறுத்தி, சிறிது நேரம் குடிசைக்கு எதிரே நின்று, பின்னர் அந்த எளிய மனிதரை சந்தித்தார்.

அதற்குப் பிறகு மண்டலியை தன் முன் அழைத்து, பாபா, அவர்களின் நலம் விசாரித்து, ஒவ்வொருவரின் முதுகிலும் தட்டிக் கொடுத்தார். உடல்நிலை சரியில்லாதவர்களைத் தனிமைப்படுத்தி, டாக்டர் கனகதண்டிக்கு பாபா உத்தரவிட்டார், "**அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளித்து நாளை காலைக்குள் குணப்படுத்தி விடுங்கள்!"**

பயணத்தைத் தொடர்ந்து, பாபா, குழுவுடன் காலை 11:15 மணிக்கு கொட்டபெட்டாவை வந்தடைந்தார். சாலையில் கூட்டம் திரள்திரளாக நின்றதால், வாகனங்கள் ஊர் வழியே மெதுவாக ஊர்ந்து சென்று, அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாரிய உயர்நிலைப் பள்ளியை சென்றடைந்தன. அங்கிருந்த சிப்பாய் சிறுவர்கள் அவர்கள் பாணியில் பாபாவிற்கு வணக்கம் செலுத்தியபோது, அதை அவர் முறையாகத் திருப்பி அளித்தார்.

குழுவினர் பள்ளிக்கூடத்தில் உணவு உண்டு, பின்பு மதியம் 1:00 மணியளவில், பாபா, புக்காரிடம் "**அனைவரையும் விழித்தெழச் செய்யும் அல்லது தூங்க வைக்கும் அத்தகைய பாடலைப் பாடுங்கள்!"** என்று

கேட்டுக்கொண்டதும், புக்கார் பாடியது பாபாவைப் பெரிதும் மகிழ்வித்தது. அதையே பாபா பிறரிடம் சொன்னதும், அவர்களும் அவ்வாறே செய்தனர்.

முந்தைய இரவில் நிகழ்ந்த குழப்பத்தைப் பற்றி குறிப்பிட்ட பாபா, **“நேற்றிரவு அமலாபுரத்தில் அந்தப் பைத்தியக்காரன் அலறிக் கொண்டிருந்தபோது, திடீரென என்னில் உதயமான எண்ணத்தின்படி ‘ஃபனா’** (FANA) **மற்றும் ‘பக்கா’** (BAQA) **குறித்த குழப்பத்தை மண்டலிக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்”** என்று கூறி, பின்னர் அவர் கீழ்வரும் உரையை வழங்கினார்:

**ஸூஃபி தத்துவத்தில், ‘ஃபனா’ என்ற சொல்லுக்கு ‘மறைதல்’ என்றும், ‘பக்கா’ என்றால் ‘நிலைத்திருத்தல்’ எனவும் பொருள்படும். ‘ஃபனா’ என்பது மஜ்ஜூப்களைப் போலவே ‘நான்-கடவுள்’ எனும் நிலையை அனுபவிக்கும் இறுதி இலக்காகும், மேலும் ‘பக்கா’ என்றால் கடவுளில் நிலைத்திருப்பது அல்லது வாழ்வதாகும்.**

**‘ஃபனா’வில் இரண்டு நிலைகள் உள்ளன. அதன் முதல் நிலை முழுமையான வெற்றிடம், அங்கு மனம், உடல், ஆற்றல், பிரபஞ்சங்கள், சொல்லப்போனால் ‘நான்’ எனும் சுய எண்ணம் அனைத்தும் மறைந்துவிடும் - அதாவது எதுவும் இல்லாத நிலை. அந்த நிலையில் இறையுணர்வு மட்டுமே இருக்கும். ‘ஃபனா’ எனும் நிலையை அடைவது வரை, உங்களைப் பற்றிய உணர்வு, மனம், ஆற்றல், உடல் அனைத்தும் இருக்கும். ‘ஃபனா’வின் முதல் அல்லது வெற்றிட நிலையில், இறையுணர்வைத் தவிர அனைத்தும் மறைந்துவிடும். ஆனால் அதை அடையப் பெற்ற அடுத்த கணமே, வெற்றிட நிலையைப் பின்தொடர்ந்து, மனமும் உடலும் திரும்பி வராத ‘ஃபனா’வின் இரண்டாவது நிலை உருவாகும். உடல் இருப்பதாகத் தோன்றினாலும் கூட, ‘நான்-கடவுள்’ எனும் நிலையின் ‘நான்’ திரும்பி வரும். இதுவே இறுதி இலக்கு ஆகும்**

**இருப்பினும், இந்த நிலையை எய்தியவர்களில் மிகச் சிலரே, சாதாரண உணர்வு நிலைக்கு - அதாவது ‘கடவுளில் நிலைத்திருக்கும்’ ‘பக்கா’ நிலைக்கு வருகிறார்கள். அந்த நிலையில், கடவுளின் வாழ்க்கை வாழப்படுகிறது. ‘பக்கா’ நிலையில், மனம், உலகளாவிய மனமாகவும், ஆற்றல், எல்லையற்ற சக்தியாகவும், உடல், உலகளாவிய உடலாகவும்** (மஹாகாரன்) **அடையப்படும். இந்த உலகளாவிய உடல் நிலைத்திருக்கும், ஏனெனில், அது ஒவ்வோர் உணர்வு நிலையிலும் - அதாவது பௌதீக, சூட்சும, மற்றும் ஆழ்மன நிலையில் இருக்கும்.**

**எனவே ‘ஃபனா’வில் இரண்டு நிலைகள் உள்ளன. முதல் நிலைக்குப் பின்னர், இரண்டாவது நிலை தவறாமல் தொடர்ந்து வரும். உதாரணமாக, ‘ஃபனா’வை நமது ஆழ்ந்த தூக்க நிலையுடன் ஒப்பிடுங்கள். ஆழ்ந்த தூக்கத்தில், மனம், சக்தி, உடல் அனைத்தும் மறைந்துவிடும்: அதாவது, நீங்கள் அவற்றைப் பற்றிய உணர்வைக் கொண்டிருக்க மாட்டீர்கள். ஆனால் நீங்கள் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தவுடன், நீங்கள் முதலில்**

உங்களைப் பற்றி உணர்ந்து, 'நான்' என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறீர்கள். அதேபோல், 'ஃபனா'வில் நீங்கள் 'உண்மையான நான்' அல்லது 'நான்-கடவுள்' எனும் உணர்வை அடையப்பெறுகிறீர்கள். 'ஃபனா' தானாகவே 'பக்கா'வால் பின்தொடரப்படுகிறது. பௌதீக 'பக்கா' என்பது இந்த உலகில் உங்கள் வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

கடவுள் இல்லாத நிலையே நிர்வாண நிலை. கடவுள் இல்லாத ஆனால் உணர்வு இருக்கும் ஒரே நிலை அதுதான்.

இது 'ஃபனா'வின் முதல் நிலை, இதைத்தான் புத்தர் வலியுறுத்தினார், ஆனால் அதன் பிறகு, கடவுள் இல்லை என்று புத்தர் கூறியதாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது! உண்மை என்னவெனில் கடவுள் உளதாயிருக்கிறார் (GOD IS) ; ஆனால் அந்த முழுமையான, வெற்றிட நிலையில் - நிர்வாண் - உணர்வு மட்டுமே எஞ்சியிருக்கும், 'நான்-கடவுள்' நிலையை அனுபவித்தவுடன், 'பக்கா' உணரப்படுகிறது; அதாவது, கடவுளில் நிலைத்திருப்பதும், வாழ்வதும் அனுபவபூர்வமானது, இதுவே 'குதுப்'களின் நிலை (அதாவது சத்குருக்கள், பரிபூரண குருநாதர்களின் நிலை).

சுருக்கமாக, பாபா '**நான்கு பயணங்களை**' விவரித்தார்:

**ஆன்மாவிற்கு மேலான ஆன்மாவை** (பரமாத்மா) **நோக்கி நான்கு பயணங்கள் உள்ளன: முதல் பயணம் 'ஃபனா' எனப்படும் இரண்டு நிலைகளிலும் முடிவடைகிறது - அதாவது 'வெற்றிடம்' மற்றும் 'நான்-கடவுள்' நிலைகள். இரண்டாவது பயணம் 'பக்கா'வில் முடிகிறது. மூன்றாவது பயணம் 'குதுப்'** (QUTUBIYAT) **அல்லது பரிபூரண குருநாதராக** (சத்குருவாக, SADGURU) **மாறுவதில் முடிவடைகிறது. நான்காவது பயணம் உலகளாவிய உடலைத் துறப்பதோடு முடிகிறது.**

**'ஃபனா'வின் இரண்டாவது நிலையில் 'நான்' உளதாயிருக்கும், ஆனால் அது 'நான் கடவுள்' என்பதில் உள்ள 'நான்'. அதுவே இறுதி இலக்கு.**

**முதல் பயணம் கடவுளாக மாறுவதில் முடிகிறது - அதாவது 'நான் கடவுள்',** ('**அஹம் பிரம்மாஸ்மி**', '**அனல் ஹக்**', 'I AM GOD').

**இரண்டாவது பயணம் கடவுளில் வாழ்வதில் முடிகிறது. அது உண்மையில் கடவுளில் நிலைத்திருப்பது.**

**மூன்றாவது பயணம் கடவுள் எனும் வாழ்க்கையை வாழ்வதில் முடிகிறது.**

**மேலும் நான்காவது பயணம் உடலைத் துறப்பதில் முடிவடைகிறது. நான்காவது பயணத்தில், உடலைத் துறந்த பின்னர், 'ஃபனா'வின் இரண்டாவது நிலை தொடர்ந்து, எப்பொழுதும் அனுபவிக்கப்படுகிறது. உடலைத் துறந்த பின்னரும், 'நானே-கடவுள்' என்ற உணர்வு, எல்லையற்ற தனித்தன்மை** (உறுதிப்பாடு) **நித்தியமாகத் தக்கவைக்கப்படுகிறது.**

அந்த நேரத்தில் மெஹர்ஜி தூங்கி விழுவதைக் கண்டு, யாரோ அவரைத் தட்டி எழுப்ப, பாபா அவரைச் சுட்டிக் காட்டி, "**இங்கே இருக்கும் ஒரே சோம்பேறி**

**- தூக்கத்தில் மூழ்கி வெற்றிட நிலையை உணர்ந்து மகிழ முயற்சிக்கிறார்!"** என்றார்.

பாபாவின் சொற்பொழிவு நிறைவடையும் அந்த நேரத்தில், தொலைத்தந்திகளை அனுப்பிவிட்டு சாஸ்திரி, தனபதி, ரங்கா ராவ், மல்லிக் நால்வரும் திரும்பிக் கொண்டிருந்த ஜீப், ரஸோல் மற்றும் கொட்டபெட்டா இடையே சாலையில் விபத்துக்குள்ளானது என்ற செய்தி பெறப்பட்டது. ஆனால், அந்தச் செய்தி வந்த சற்று நேரத்தில் ஜீப்பும் வந்தது. ஜீப் கொட்டபெட்டாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து நிகழ்ந்தது. சாலையின் தவறான பக்கத்தில் ஒரு நபர் சைக்கிளில் வருவதை அவர்கள் எதிர்கொண்டனர். அவர் மீது மோதுவதை தவிர்க்கும் முயற்சியில், ஜீப் டிரைவர் ஒரு பக்கமாக வேகமாக திரும்பினார். அப்போது, ஜீப் கட்டுப்பாட்டை இழந்ததால், அருகிலிருந்த பள்ளத்தில் கவிழ்ந்து, அதில் இருந்தவர்கள் அனைவரும் தூக்கி வீசப்பட்டனர்.

தனபதிக்கு ஏற்பட்ட லேசான காயத்தில் கையில் கட்டு போடப்பட்டிருந்தது. இதர அனைவருக்கும் சிறிய உரசல் காயங்கள் மட்டுமே இருந்தன. ஒரு தடுப்புச் சுவர் ஜீப் முன்னோக்கி நகர்வதைத் தடுக்காவிடில், ஜீப் முழுவதுமாக கவிழ்ந்து இழப்பு நேர்ந்திருக்கலாம். முந்தைய நாள், பாபாவின் கார் கிட்டத்தட்ட கால்வாயில் சென்ற அதே இடத்தில்தான் இன்றைய விபத்தும் நிகழ்ந்தது.

டாக்டர் தனபதி, பாபாவிடம், "கடவுளே, எங்களைக் கொல்லாமல் காப்பாற்றினீர். உமது அருளே எங்களைக் காப்பாற்றியது; இல்லையேல், நாங்கள் அனைவரும் நசுங்கி உயிரைத் துறந்திருப்போம். இது உமது அற்புதத்தால் நிகழ்ந்தது" என்று கதறினார்.

அதற்கு பாபா, "**நான் எந்த அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை. இந்தச் செய்தி இப்போதுதான் எனது செவிகளுக்கு வந்தது**" என்று பதிலளித்தார்.

பாபா, கே.டி.ஆர்.எம். நால்வரிடமும் மதிய உணவை உண்ணுமாறு கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து மதியம் இரண்டு மணிக்கு, பாபா, குழுவுடன், தேசிய கிளப் (NATIONAL CLUB) கட்டிடத்திற்குச் சென்று தரிசனம் வழங்கினார். மெஹர் மையத்தின் செயலாளர் வரவேற்பு உரை வழங்கியதும், பாபா தரையில் சிறிது நேரம் அமர்ந்தார்; அப்போது விஜயவாடாவில் வழங்கிய செய்திகள், கூட்டத்திற்கு வாசிக்கப்பட்டன. ஜெகந்நாதம் தெலுங்கில் மொழிபெயர்த்த 'பொருள் சார்ந்த மற்றும் ஆன்மீக அறிவியல்' (MATERIAL AND SPIRITUAL SCIENCE) என்ற செய்தியை ராம்ஜூ வாசித்தார்.

ஏறக்குறைய 4,000 பேர் கலந்துகொண்ட கூட்டத்தில் பாபா, இரண்டு மணி நேரம் பிரசாதம் வழங்கினார். பிற்பகல் நான்கு மணியளவில் பாபா, வெளியில் ஒரு மாமரத்தை நோக்கிச் சென்று, அதன் கீழ் அமர்ந்து சில நிமிடங்கள் அமைதியாக இருந்தார். பின்பு சேவகர்கள் கூட்டம் நிகழவிருந்த ராஜமுந்திரிக்கு அனைவரும் புறப்பட்டுச் சென்று, மாலை ஆறு மணிக்கு வந்தடைந்தனர்.

1954 மார்ச் 1ஆம் நாள் இரவு ஒன்பது மணிக்கு ராஜமுந்திரி குருகுல மண்டபத்தில் ஒன்று திரண்ட சேவகர்களின் கூட்டம் ஆரம்பமானது. (மண்டலி மற்றும் ஆந்திரா சேவகர்களில் பலர், கூட்டம் ஆரம்பித்த பிறகு வந்தனர்.) இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாக, காலம் அதைப் பார்த்தது: 'மெஹர் பாபாவின் விளக்கங்கள், எதிர் காலங்களில், ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் யாத்ரீகர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகச் செயல்படும். அவதார புருஷருக்கான உண்மையான பணி மற்றும் அதன் உள்பொருள் என்ன என்பதைப் புரிய வைக்கும்."

பாபா முதலில் அனைவருக்கும் ஒரு கோப்பை காஃபி வழங்கியது, அனைவரும் விழித்திருக்க உதவியாக இருந்தது. அதைத் தொடர்ந்து, தமது தரிசன நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை விளக்கி அவர் கூறியதாவது:

**இன்றைய சந்திப்பு, ஓர் அரசியல் அல்லது சமூக நிகழ்வு அல்ல, ஆனால் 'தெய்வீக நோக்கத்திற்கான' கூட்டம். இந்த சந்திப்பு, எனது முந்தைய அவதார காலகட்டங்களில் நிகழ்ந்த சந்திப்புகளை எனக்கு நினைவூட்டுகிறது. ஆன்மீகக் காரணத்தைத் தவிர, வரலாறு மீண்டும் மீண்டும் திரும்பி வரும் என்பது எப்பொழுதும் உண்மையாக இருந்ததில்லை. அந்தக் கடந்த காலங்களில், சூழ்நிலைகள் வேறுபட்டவை, ஆனால் கடவுள் ஒருவரே, அதுபோல நோக்கமும் ஒன்றே! என்னுடைய நோக்கத்திற்காக உழைத்த (இயேசுவின்) அப்போஸ்தலர்கள்** (APOSTLES), **(முஹமதின்) அஷாபுகள்** (ASHABS), **அனைத்தையும் அர்ப்பணித்தது மட்டுமின்றி உயிரையும் துறக்கத் தயாராக இருந்தனர்.**

**நான் இப்போது முன்னுரையை மட்டுமே மொழிகிறேன்; அது முடிந்ததும் உண்மையான கருத்துகள் தொடங்கும். எனவே மிகவும் கவனமாகக் கேளுங்கள்.**

**ஹமிர்பூர், உ.பி.** (**உத்தரப்பிரதேசம்**), **ஆந்திரா, டெக்கன் போன்ற இடங்களில் நடைபெற்ற வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள் இப்போதைக்குப் போதுமானது. இந்த நிகழ்ச்சிகள், செய்திகள் மற்றும் விளக்க உரைகள் அனைத்தும், ஆன்மீகப் பாதையில் ஒன்றும் இல்லை என்பதை எனது தெய்வீக அதிகாரத்துடன் நான் உங்களுக்கு 'திருமறையின் உண்மை உருவில்' கூறுகிறேன். எனது ஆரத்தி, பூஜை, எனக்கு மாலை அணிவித்தல், தலை வணங்குதல் போன்றவை முற்றிலும் அர்த்தமற்றவை. காலங்காலமாக, தேவ தேவதைகள் என்னை வழிபட்டு வருகின்றனர். அப்படியிருக்க, மாலைகள், கனிகள், காணிக்கைகள் என்று தேவையில்லாமல் பணத்தை வீணடிப்பது ஏன்? நான் விரும்புவது உண்மையான பணி.**

**'கிழக்கிலும் மேற்கிலும் நிகழும், அற்புதங்கள் என்று கூறப்படும் அனைத்திற்கும், பாபாவே காரணம்'** என்ற கூற்றைத் தெளிவுபடுத்தும் விதத்தில் பாபா விளக்க விரும்பினார். இப்போது நடந்த ஜீப் விபத்து குறித்து அவர் ரங்கா ராவிடம் கூறியதாவது:

எனது தெய்வீக நேர்மையின் அடிப்படையில், இந்த வாழ்க்கையில் நான் இதுவரை உணர்வுப்பூர்வமாக எந்த அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உங்களைக் காப்பாற்றியது நான் அல்ல. இந்த வெகுஜன கூட்டம்தான் உங்களைக் காப்பாற்றியது. நான் சொல்ல விரும்புவது என்னவெனில், இந்த அற்புதங்கள் அனைத்தும் என்னால் நிகழ்ந்தது என்று கூறி, மக்கள் எனது தரத்தைக் குறைத்து, 'உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்' என்ற அந்தஸ்தைத் தாழ்த்துகின்றனர். ஆனால், இதை நான் இன்று சொல்கிறேன், நான் எனது மௌனத்தைக் கலைத்து, அந்த மூலமுதலான வார்த்தையை உச்சரிக்கும் தருணத்தில், இந்த வாழ்க்கையில் பாபாவின் முதல் மற்றும் கடைசி அற்புதம் நிகழ்த்தப்படும்! அது, நான் இதுவரை செய்யாத அதிசயமாக இருக்கும். நான் உயிர்த்துறந்தோரை உயிர்த்தெழச் செய்யாமல், உலகத்துக்காக வாழக்கூடியவர்களை அதற்காக வாழவிடாமல், இறைவனுள் வாழவைப்பேன். நான் பார்வையற்றவர்களுக்குப் பார்வை வழங்காமல், மாயையைப் பார்ப்பவர்களை அதைப் பார்க்க முடியாமல் செய்வதன் மூலம், அவர்கள் கடவுளை மட்டுமே உண்மையாகக் காணச் செய்வேன்.

அன்றிரவு கூட்டத்திற்கு அவர்களை அழைத்ததற்கான காரணங்களை பாபா, பின்பு சேவகர்களுக்கு எடுத்துரைத்தார்:

ஒவ்வொருவருக்கும் இடையேயான அறிமுகம் முடிந்துவிட்டது, இப்போது உண்மையான கருத்துகளுக்கு வருவோம், அவற்றை நீங்கள் அனைவரும் மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். இது, உங்களை இங்கு அழைத்ததற்கான பணியைப் பற்றியது. நீங்கள் சேவகர்கள் என்று அழைக்கப்படுகிறீர்கள். சேவை அல்லது பணி என்றால் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆந்திர சேவகர்களான நீங்கள், பெரியவர்களும், சிறியவர்களும், செல்வந்தர்களும், ஏழைகளும், நிகழ்ச்சிகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவுறச் செய்ய உங்களால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளீர்கள். அது எனக்குத் தெரியும். எனது அன்பின் செய்தியை பரப்புவதன் மூலம், என் மீதான உங்கள் அன்பை வெளிப்படுத்த நீங்கள் முயற்சித்தீர்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எப்படியோ, ஏதோ, ஆழமாக வேரூன்றிய தவறு நிகழ்ந்திருப்பதாக நான் உணர்கிறேன். அரசியல், சமூகம் அல்லது ஆன்மீகம் என எந்தவொரு காரணத்திற்காகவும் சேவகர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; அத்தகைய கருத்து வேறுபாடுகள் மட்டுமின்றி, போட்டி, பொறாமைகளும் இருக்கலாம், இது பணியின் அடிப்படையின் முழுமையான தோல்விக்கு வழிவகுக்கிறது.

இப்போது நீங்கள் பாபாவிற்காகப் பணிபுரிகிறீர்கள். இது தேவையானதா? நான் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவராகவும், கடவுளின் அவதாரமாகவும் இருந்தால், எனது பணியில் இந்தச் சிக்கல்கள், அமைப்புகள், செய்திகள், இது மற்றும் அது என்றெல்லாம் இருக்க வேண்டிய

தேவை எங்கே? நான் அளவிறுதியற்றவராக இல்லாமல் உங்களைப் போன்ற ஒருவர் என்றால், இதுபோன்ற ஆயிரக்கணக்கான திட்டங்களால் எந்த பயனும் இல்லை. நான் எனக்கே உரிய அமைதியான வழியில், உலகளாவிய பணியை நானே செய்ய முடியாதா? ஏனெனில், நான் பாபாவாக இருந்தால், அதில் எந்த சந்தேகமும் இல்லாதபோது, முழு உலகமும் எனக்கு எதிராகச் சென்றாலும் அல்லது என்னை வணங்கினாலும், எனக்கு எல்லாமே ஒன்றுதான். ஒருவேளை, நான் எனது சேவகர்களை அழைப்பதற்கான ஒரே காரணம், என்னுடைய தெய்வீகப் பணியில் நீங்களும் பங்கெடுக்க வேண்டும் என்பதற்காகவே; என்னுடைய பணியில் பங்கெடுக்க நீங்கள் தயாராக இருந்தால், அது 100 சதவிகிதம் நேர்மையாகச் செய்யப்பட வேண்டும். என் அன்பின் செய்தியை பரப்புவதற்கு நீங்கள் எனக்காக உழைக்க வேண்டும்.

எப்படி? நான் அதை இப்போது விளக்குகிறேன்.

முதலாவதாக, என்னிடமிருந்தோ, பிறரிடமிருந்தோ நீங்கள் பாராட்டுக்களை நாடவோ, எதிர்பார்க்கவோ கூடாது. நான் கட்டளையிடுவதைச் செய்வது மிகவும் எளிதானதாகத் தோன்றினாலும், அதைச் செய்து முடிப்பது இயலாத காரியம். பணி என்பதே அதன் நிறைவுத் தன்மையில் சுய பாராட்டாகும். நீங்கள் பாராட்டுகளை நாடும் அந்த கணத்தில், பணி செய்யப்படாதது ஆகிவிடும். உங்களில் சிலர் 100 சதவீதம் எனக்காகவும், எனது நோக்கத்திற்காகவும் உழைக்கத் தயாராக இருக்கலாம் என்பது உண்மைதான். உங்களில் சிலர் ஏழைகளாகவும் பெரிய குடும்பங்களைக் கொண்டிருப்பதாலும், உங்களால் எனது பணிக்காக உங்கள் நேரத்தையும், பொருளையும் செலவிட முடியாது. ஆனால் ஏன் உங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட பணி? நீங்கள் எனக்காகப் பணிபுரிய சில உதவிகளை ஏன் சார்ந்திருக்க வேண்டும்? ஒரு சேவகர் எதையும் அல்லது எவரையும் சார்ந்திருக்கும் தருணத்தில், பணி செய்யப்படாதது ஆகிவிடும். உங்களால் முடிந்தவரை செய்யுங்கள், ஆனால் நேர்மையாகச் செய்யுங்கள்.

பணம் வசூலிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, செலவழிக்கவும் படுகிறது, ஆனால் அதற்கான வரவு செலவு கணக்கு எதுவும் வைக்கப்படவில்லை என்று மக்கள் புகார் கூறுவதை நான் கேள்விப்பட்டேன். இது உண்மையாக இருந்தால், எல்லா பணிகளையும் உடனடியாக நிறுத்திவிடுங்கள். அடிப்படை உண்மை இல்லாமல், எனது பெயரில் சேகரிக்கப்பட்ட ஒவ்வொரு நயா பைசாவும், நேர்மையின்மையின் அடையாளமாகும். எனவே, இன்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இதயங்களைத் திறந்து, உண்மையை மொழியவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; மேலும், முடிவாக, பணிபுரிவது அல்லது அதை நிறுத்துவது பற்றி தீர்மானிப்போம். என் அன்பான நண்பர்களே, மக்கள் என்னை நேசிக்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், உண்மையில் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்பதை அவர்களுக்குக் காட்டுங்கள். வெறுமனே எனது புத்தகங்களையும், செய்திகளையும் வாசிக்கச் செய்யாமல், தானாக என்னை

**நேசிக்கும் வகையில், எனக்காகத் தியாகம் செய்யும் வாழ்க்கையை வாழுங்கள்.**

கே.டி.ஆர்.எம். குழுவின் அமைப்பு பற்றி பாபா சுருக்கமாக விளக்கி, அவர்களின் பணி குறித்து கேள்வி எழுப்பினார்:

**கடந்த முறை எனது ஆந்திரா விஜயத்தின் போது, நான் கே.டி.ஆர்.எம். எனும் நால்வரின் குழுவை ஆந்திராவில் எனது பணியின் நான்கு தூண்களாக நிறுவினேன். கே - குடும்ப சாஸ்திரி; டி - தனபதி ராவ்; ஆர் - ரங்கா ராவ்; மற்றும் எம் - மல்லிகார்ஜுன ராவ். உங்களில் ஒவ்வொருவரும் என்னை இதயபூர்வமாக நேசிப்பதையும், எனக்காக முழு மனதுடன் பணிபுரிவதையும் நான் அறிவேன், அதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால் இப்போது கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற எந்த ஒரு புள்ளியிலும் சந்திக்க முடியாது - அவை நான்கு வெவ்வேறு திசைகளில் இருப்பதை நான் மறந்ததை, எனது சொந்த தவறாக நான் பார்க்கிறேன். எனவே, முதலில் இந்த நால்வரும் இணைந்து, நான் விரும்பியபடி செயல்பட முடியுமா அல்லது முடியாதா என்பதைக் கண்டுபிடிப்போம். ஆகையால், உங்கள் இதயங்களை, எந்தத் திரையும் மறைக்க இடந்தராமல், உள்ளதை உள்ளபடி நேர்மையாக என்னிடம் கொட்டி விடுங்கள். இது என்னை, மிகவும் அசலான மற்றும் நிலையான ஒன்றை அனைவருக்கும் சொல்ல வைக்கும். ஒருவரை ஒருவர் பார்க்காதீர்கள், எதற்கும் பயப்படாதீர்கள்.**

பாபா, குடும்ப சாஸ்திரியிடம் அவர் விரும்புவதைச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டதற்கு, அவர் தனது சக ஊழியர்களைப் பற்றி ஒருபோதும் புகார் கூறவில்லை என்று கூறியதும், பாபா இவ்வாறு வினவினார், "**அப்படியானால் இதர மூவரின் பணியில் நீங்கள் முற்றிலும் திருப்தி அடைகிறீர்களா?**" 'இது அவரது உணர்வுகள் தொடர்பான கேள்வி அல்ல, மாறாக பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கான கேள்வி' என்று சாஸ்திரி விளக்கினார். கே.டி.ஆர்.எம். குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் பணிபுரிய வேண்டும் என்பதை, பாபா தெளிவுற புரியவைத்தார்; ஆனால், சாஸ்திரி விளக்கியது போல, மூன்று காரணங்களால் இது நடைமுறைக்கு ஒவ்வாது என்று குறிப்பிட்டார்:

**முதலாவது: அவர்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வது; இரண்டாவது: அவர்களின் வெவ்வேறு குணாதிசயங்கள் மற்றும் பணிபுரியும் முறைகள்; மூன்றாவது: ஒருவரையொருவர் கலந்தாலோசிக்க வாய்ப்பில்லாத சூழ்நிலை. தொடர்ந்து, அவர் தனது சக ஊழியர்கள் சில விஷயங்களைச் செய்யும் முறைகளை விரும்பவில்லை என்று கூறினார்: அதாவது, அனைத்து நிதி சம்பந்தமான வரவு செலவு பரிவர்த்தனைகளுக்கும் சரியான கணக்கு வழக்குகளை வைத்திருக்கத் தவறியது போன்ற சில குறைபாடுகள்.**

பாபா, பின்னர் இதர கே.டி.ஆர்.எம் உறுப்பினர்களிடம் கேட்க, அவர்கள் கூற வேண்டியதைக் கூற, அதைத் தொடர்ந்து நடந்த வாக்குவாதம், நான்கு

பேருக்கும் இடையே ஆழமான வேறுபாடுகள் இருப்பதை உணர்த்தியது. நால்வரும் பாபாவிற்கு அன்புடன் பணிபுரிய விரும்பினாலும், ஒருமித்த கருத்து இல்லாததால், இதர சேவகர்கள் கே.டி.ஆர்.எம். மீது மிகுந்த அதிருப்தியை வெளிப்படுத்தி, அவர்கள் மீது கடுமையாகப் புகார் கூறினர்.

பதிலுக்கு பாபா இவ்வாறு கூறினார்:

**நீங்கள் எனக்காக என்ன பணிபுரிகிறீர்கள் என்று எனக்கே புரியவில்லை. பிரசாரம் மட்டுமே செய்வது மிகவும் அபத்தமானது. வெறும் பிரசாரத்தையோ, பொய்யான விளம்பரங்களையோ நான் விரும்பவில்லை. ஒருபோதும் இல்லை. அன்பும் நேர்மையும் எனக்குத் தேவை. உங்களால் அதைச் செய்ய முடியாவிடில், நீங்கள் பணி என்று அழைப்பதை நிறுத்துங்கள். எனது பணியைச் செய்ய நான் மிகவும் திறமையானவன். எனவே, இன்று நாம், இந்தப் பணி என்று அழைக்கப்படும் அனைத்தையும் நிறுத்த முயற்சிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இதைத்தான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.**

**'நான் நேசிக்கப்பட வேண்டிய அளவுக்கு, என்னை நேசிக்கக்கூடிய ஒருவரை நான் இன்னும் கண்டுகொள்ளவில்லை' என்று அடிக்கடி கூறுவதுண்டு. கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் சுமார் 220 ஆண்களும் பெண்களும் நான் சொல்வதைச் செய்யும் வகையில் என்னிடம் சரணடைந்துள்ளனர். இது உண்மை.**

**உதாரணமாக, எரச்சை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் புத்திசாலி, நல்ல இதயம் படைத்தவர். நான் ஏதாவது செய்யும்படி கட்டளையிட்டால், 100 சதவீதம் விடாமுயற்சியுடன், அனைத்து இடர்பாடுகளையும் தாங்கிக்கொண்டு, முழு வீச்சில் முயற்சிக்கிறார். பெண்டு, மெஹர்ஜி மற்றும் மண்டலியில் இதர அனைவரும் என்னுடன் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள், அவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். இந்த 220 மண்டலியில் ஒவ்வொருவருக்கும் எனது ஒரு வார்த்தையே போதும், தங்கள் உயிரை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறார்கள். நான் கூற விரும்புவது என்னவெனில், அன்பை விட அர்ப்பணம் செய்வது மேலானது; மேலும், முரண்பாடாகத் தோன்றினாலும், என்னை நேசிப்பது சாத்தியமற்றது; எனக்குக் கீழ்ப்படிவது சாத்தியம் என்றாலும் மிகவும் கடினமானது. எனவே, உங்களை எனது சேவகர்கள் என்று கூறிக்கொண்டு, எனக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது சுத்த பாசாங்குத்தனம்.**

அப்போது, ஒரு கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது, மாணிக்யால ராவ் மிகவும் வருத்தமடைந்து, கத்த ஆரம்பித்தார். பாபா அவரை நிறுத்தச் சொல்லியும் அவர் அறிவுறுத்தலைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. பாபா, அவரை ஐந்து நிமிடங்களுக்கு மண்டபத்தை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார்.

**“அனைவரின் பலவீனம் மற்றும் தோல்விகளுக்காக நான் கடவுளிடம் மன்னிப்புக் கோர விரும்புகிறேன், விரைவில் உங்கள் முகத்தையும்**

**கைகளையும் கழுவி, மனம் வருந்தி மொழியும் பிரார்த்தனைக்காகத் திரும்பி வாருங்கள்**” என்று பாபா அறிவித்ததும், விவாதம் முடிவுக்கு வந்தது.

அனைவரும் அறிவுறுத்தியபடிச் செய்ததும், பிரார்த்தனை மொழியப்பட்டது. பாபாவும் நின்றபடியே பிரார்த்தனையில் கலந்து கொண்டார். மீண்டும், காஃபி பரிமாறப்பட்டது; அனைவரும் அமர்ந்ததும், பாபா, மாணிக்யால ராவிடம் கூறினார்:

**உங்கள் உற்சாகமும், அன்பும் உங்களை வழிதவறச் செய்தது. நீங்கள் புத்தகங்கள் மூலம் எனது பெயரைப் பரப்ப விரும்புகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், மேலும் நீங்கள் அதை சிறந்த நோக்கத்துடன் செய்தீர்கள், ஆனால் சாதுரியம் இல்லாமல் செய்தீர்கள். நீங்கள் அடிப்படை கொள்கையைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டீர்கள். இன்றிரவு, நமது பலவீனங்களுக்காக நான் மனம் வருந்தி, பிரார்த்தனையின் மூலம், மன்னிப்புக் கோரியதை நீங்கள் பார்க்கவில்லையா? உங்கள் சார்பாக, நான் எப்படி உண்மையை எடுத்துரைத்து, மன்னிப்புக் கோருபவராக மாறினேன்? நான் அவ்வாறு செய்வதாகத் தோன்றினாலும், அந்தப் பங்கை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி, அதுவாகவே மாறினேன். நான் இப்போது முழு மனதுடன் அதைச் செய்தேன், நான் முழுப் பிரபஞ்சத்திற்காகவும் அதைச் செய்தேன், ஆனால் உண்மையில் நான் மன்னிப்புக் கோருபவராக மாறினேன். நான் எனது சொந்த அடிப்படை கொள்கையை மீறவில்லை. நான் சுதந்திரமாக இருக்கிறேன், ஆனாலும் அடிப்படை கொள்கை பாதுகாக்கப்பட வேண்டும்.**

மெஹர் பாபாவின் பெயரில், பணிக்கான பணம் பற்றிய கேள்வி எழுப்பப்பட்டபோது, ஒருவர் கேட்டார், “நிதி இல்லாமல் பிரச்சாரம் எப்படி சாத்தியம்?”

பாபாவின் விரைவான பதில்:

**பணம் இல்லாமல்தான் பாபாவின் உண்மையான பணியைச் செய்யமுடியும். ஏன் ‘பிரச்சாரம்’? அந்த வார்த்தை என்னைத் தலை குனிய வைக்கிறது. நீங்கள் மக்களுக்கு என்ன சொல்வீர்கள்? உங்களிடம் நிறைய பணம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்; என்னுடைய நோக்கத்தை எப்படிப் பிரச்சாரம் செய்வீர்கள்? பல்லாண்டுகளுக்கு முன்னர் எனது பணி, பணம் இல்லாமல்தான் முடிந்தது. பணம் பற்றிய கேள்வி எழுந்ததும், யூதாஸ் என்னை விற்பனைப் பொருளாக்கி விட்டார். நான் இப்போது எனது கருத்துக்களைத் தெளிவாக முன்வைக்கப் போகிறேன். எனக்குத் தெரியும் கே.டி.ஆர்.எம். நேர்மைக்குப் புறம்பானவர்கள் அல்ல. பணத்தைக் குறித்து குடும்ப சாஸ்திரி மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார். அது எனக்குத் தெரியும். தனபதியிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. ரங்கா ராவிடம் பணமில்லை; மல்லிக்கும் அதே போலத்தான். எனவே பாபாவின் பணிக்குப் பணம் தேவை என்று அவர்கள் நினைப்பது இயல்பு. ஆனால், பாபாவின் பணிக்காகப் பணத்தை சார்ந்திருப்பதும், பாபாவின் பணிக்காகப்**

பிறரிடமிருந்து பணத்தைப் பறிப்பதும் எனது பார்வையில் முற்றிலும் நேர்மையற்ற செயலாகும்.

இப்போது நான் பணத்தைப் பற்றியும், அதைக் குறித்து நான் என்ன நினைக்கிறேன் என்பதைப் பற்றியும் கூறுகிறேன். மௌனம் தொடங்கிய நாள் முதல், எழுதுவதை நிறுத்திவிட்டேன். பணத்தைத் தொடுவதையும் நிறுத்திவிட்டேன். ஆனால் அன்று முதல் இன்று வரை, எனது கைகள் வழியாக எவ்வளவு பணம் வழங்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியாது. ஏறக்குறைய ஒரு கோடி (10,000,000) ரூபாய்! ஆனாலும் என்னிடம் பணம் இல்லை. நான் ஒரு பரதேசி, ஏழை. பணம் என்னிடமிருந்து செல்கிறது. அது வரும், போகும். ஆனால் நீங்கள் எனது பணிக்காக, பணத்தை சார்ந்திருந்தால், எனக்காகப் பணிபுரியாதீர்கள், ஏனெனில் உங்களுக்கு பணம் எப்படி, எங்கிருந்து வரும்? எதையும் மிகவும் நடைமுறையில் பார்க்க வேண்டியது அவசியம்.

இந்த நேரத்தில், குடும்ப சாஸ்திரி, “நாம் நடத்தும் வாழ்க்கைதான் முக்கியம் என்று நான் உணர்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

அவரது அவதானிப்புகளைப் பாராட்டி பாபா தொடர்ந்தார்:

மிகவும் நல்லது. பிறர் என்னை நேசிக்கும் அளவுக்கு உங்கள் வாழ்க்கையை வாழுங்கள். நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்துங்கள். பணம் கொடுங்கள் என்று மக்களைக் கேட்பதும், அதற்கு பதிலாக நீங்கள் பாபாவைப் பற்றி பிரச்சாரம் செய்வதும், எந்த விதமான எண்ணத்தை உருவாக்கும்? எனவே, மக்களிடம் பரிந்துரைக்க உங்களிடம் வேறு எந்த நடைமுறை வழியும் இல்லாவிட்டால், நீங்கள் நால்வரும் ‘பாபா-பணி’ என்று அழைப்பதை நிறுத்திவிட்டு, அன்பான வாழ்க்கையை வாழுங்கள், உங்கள் வாழ்க்கையின் மூலம் பிறர் என்னிடம் வரட்டும் என்று நான் நினைக்கிறேன். நாம், இதுவிஷயத்தில் உடன்பாடு செய்து கொண்டாலும், மீண்டும் நேர்மையின்மை தலைதூக்கும். கட்டா சுப்பா ராவ் சொல்வார்: “நான் மூடன் அல்ல. பாபாவின் பணியை என்னால் சுதந்திரமாக செய்ய முடியும். கே.டி.ஆர்.எம். யார்?” கொவ்வூர் மக்கள் சொல்வார்கள்: “நாங்கள் பாபாவின் அன்பைப் பரப்புவதில் வல்லவர்கள், ஏன் கே.டி.ஆர்.எம் எங்களிடம் ஆதிக்கம் செலுத்த வேண்டும்?” இப்படி இதர அனைவருடனும் பல.

இந்தப் பௌதீக உடலில், எனது 60 ஆண்டுகால வாழ்க்கையில், இதுபோன்ற ஒரு கூட்டத்தில் நான் கலந்துகொண்டு, இத்தனை விவரங்களைப் பற்றி விவாதிப்பது இதுவே முதல் முறை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஹமிர்பூரில் கூட இப்படி ஒரு கூட்டம் நடத்தப்படவில்லை. ஆனால் ஏதோ தவறு நிகழ்வதாக உணர்ந்ததால், நான் உங்களை இந்தக் கூட்டத்திற்காக அழைத்தேன். முழுமையான நேர்மை இன்றியமையாதது, இல்லையேல், பாபா இல்லை! நான் ‘பாபா’. எனக்கு அது தெரியும். இப்போது

**கே.டி.ஆர்.எம். குழு கலைக்கப்படட்டும். நீங்கள் வேறு எதையேனும் பரிந்துரைக்க விரும்புகிறீர்களா? கே.டி.ஆர்.எம். குழுவைக் கலைப்பதில் நான் நியாயமாகச் செயல்படுகிறேனா?**

நான்கு உறுப்பினர்களிடம் **“கே.டி.ஆர்.எம். குழுவைக் கலைப்பது முறையற்றது என்று நினைக்கிறீர்களா?”** என்று கேட்டபோது, அவர்கள் ஒவ்வொருவரும் இல்லை என்று பதிலளித்தனர்.

அதைத் தொடர்ந்து, பாபா இவ்வாறு முடிவு செய்தார்: **“கே.டி.ஆர்.எம். குழு இப்போது கலைக்கப்படும். மையங்கள் கலைக்கப்படும். ஒவ்வோர் உண்மையான ஊழியரும் ‘பாபா-மையம்’ ஆகிறார்! மேலும் கடவுளின் நிமித்தம், பாபாவின் நிமித்தம், பணத்தைப் பொறுத்தவரை எச்சரிக்கையாக இருங்கள். ஒரு நயா பைசா கூட பிறரிடமிருந்து** (தவறான முறையில்) **அடையப் பெறுவது, ஒருவர் லட்சக்கணக்கான மரணத்தை சந்திப்பது போலாகும்!”**

பாபா, மேலும் கூறினார்:

**நான் நிச்சயமாக ஆந்திராவை நேசிக்கிறேன் என்று எனக்குத் தெரியும், ஆந்திர மக்கள் என் இதயத்தைத் தொடும் வகையில் தங்கள் அன்பை வெளிப்படுத்தியுள்ளனர். இன்றிரவு இங்கே இருக்கும் ஒவ்வொருவரும் என்னை நேசிக்கிறார்கள். அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். ஆந்திராவில், அனைத்து சிறிய மற்றும் பெரிய** (தரிசன) **நிகழ்ச்சிகளின் போது, அனைவராலும் வெளிப்படுத்தப்பட்ட தனித்துவமான அன்பு என்னை மிகவும் ஆழமாகத் தொட்டது.**

**இன்றிரவு, நான் முதன்முறையாக, மனம் வருந்தி மன்னிப்புக் கோரிய போது, ஏலூரு மக்கள் இங்கு இல்லாத காரணத்தால், இப்போது மீண்டும் ஒருமுறை, கடவுளிடம், அவர் யாராக இருந்தாலும், உங்கள் அனைவரின் சார்பாகவும், நம்முடைய பலவீனங்களுக்காக மன்னிப்புக் கோருகிறேன். இந்தப் பிரார்த்தனைக்குப் பிறகு, நீங்கள் உண்மையில் என்னை சிறிதளவேனும் நேசிக்கிறீர்கள் என்றால், உங்கள் இதயங்கள் ஒருவருக்கொருவர் இடையே தூய்மையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் பாபாவை நேசிப்பீர்களேயானால், உங்கள் கடந்த கால வேறுபாடுகளை மறந்து, உங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்தி, பாபாவுக்காக வாழுங்கள்.**

மையங்கள் கலைக்கப்பட்ட பிறகு, பாபாவின் செய்திகள் ஒவ்வொருவரையும் எவ்வாறு சென்றடையும் என்று ஊழியர்களில் ஒருவர் கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**நீங்கள் அனைவரும் பாபாவின் ஊழியர்கள். பணம் இருப்பவர்களும், அதைச் செலவிடத் தயாராக இருப்பவர்களும் இடம் விட்டு இடம் சென்று, என் அன்பின் போதனைகளை மக்களிடம் எடுத்துரைக்கலாம். சிறிதளவு பணம் இருப்பவர்கள், தங்கள் சொந்த ஊர் மக்களை அணுகலாம், மேலும், அன்பான வாழ்க்கை வாழ்வதன் மூலம், பிறரை கடவுளை நேசிக்கச்**

**செய்யலாம். பணமும், நேரமும் இல்லாதவர்கள், பெரிய குடும்பத்துடன் வாழ்பவர்கள், தங்கள் சொந்த இல்லங்களை பாபாவின் அன்பின் மையமாக மாற்றலாம். எனவே, இனி, மையங்கள் இல்லை, அலுவலகம் இல்லை, கணக்கு வழக்கு இல்லை. மக்களிடம் பணம் கேட்கக்கூடாது, பாபாவின் அன்பு ஒன்றுதான் அங்கு நிலைபெற்றிருக்கும். இது சரியானதாக இல்லையா?**

ஓர் ஊழியர், "மையங்கள் மூடப்பட்ட பிறகு, நாங்கள் உங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாமா?" என வினவினார்.

**"நான் அனைத்து கடிதப் பரிமாற்றங்களையும் நிறுத்தப்போகிறேன்"** என்று பாபா கூறினார்.

மேலும் ஊழியர் ஒருவர், "பிறரின் தவறுகளுக்கு நாங்கள் கஷ்டப்பட வேண்டும்!" என்றார்.

**"இது யாருடைய தவறும் இல்லை"** என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். **"அது உங்கள் தவறாகக்கூட இருக்கலாம், யாருக்குத் தெரியும்? பலவீனங்களும் குறைகளும் குறைபாடுகளும் இல்லாதவர்கள் எவரேனும் இருக்கிறார்களா?"**

ஊழியர்களில் ஒருவர், "ஒரே ஒரு பாபா! அது நீங்களே! பாபா என்றால் கடவுள்!" என்றார்.

அதற்கு பாபா பதிலளித்தார்:

**கடவுள் என்றால் எல்லாம் அறிந்தவர், எங்கும் இருப்பவர் என்று பொருள். அதனால் நான் எல்லோரிலும் இருக்கிறேன், எல்லாவற்றையும் அறிவேன். இது எனது தவறு. அது வேறு யாருடையதாக இருக்க முடியும்? எனக்கு எல்லாம் தெரியும், நான்தான் எல்லாமும், அதனால் எந்தத் தவறும் இல்லை. நீங்கள் சொல்வது போல, நான் கடவுள் என்றால் அது யாருடைய தவறும் இல்லை. நான் கடவுள் இல்லை என்றால், இந்தப் பிரபஞ்சத்தில் தவறிழைத்தது என்னைத் தவிர வேறு எவரும் இல்லை.**

கட்டா சுப்பா ராவைப் பார்த்து பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **இந்த எழுத்துப்பலகை மற்றும் மௌனத்தால் நான் இப்போது சோர்வடைந்துவிட்டேன். பௌதீக உடலைத் துறக்கும் முன்னர் எனது மௌனத்தைக் கைவிட வேண்டும். மேலும், நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, எனது தொடர்பில் வந்த நீங்கள் அனைவரும் என்னுடைய கணநேரக் காட்சியை - சிலர் சிறிய அளவில், சிலர் பெரிய, சிலர் குறுகிய, சிலர் இன்னும் சிறிது அதிகமாகக் காண்பீர்கள். மின்சார உற்பத்தி மையத்தின் முக்கிய மின் இயக்கியைச் செயல்படச் செய்தால், மின்விளக்குகளுடன் எங்கெல்லாம் இணைப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் விளக்கு எரியும். மின்விளக்கு சிறிய சக்தியுடையதாக இருந்தால், குறைந்த வெளிச்சத்தைப் பெறுவீர்கள். அது அதிகமாக இருந்தால், மிகையாக ஒளிரும்; மற்றும், மின்விளக்கு பழுதாகிப்போனால், ஒளியே இருக்காது! அதனால்தான் நான் எந்த அதிசயமும் செய்யவில்லை என்று கூறினேன்; ஆனால், நான் எனது**

**மௌனத்தைக் கலைக்கும்போது, எல்லாவற்றிலும், முதலும் முடிவுமான, மிகப் பெரிய அற்புதம் நிகழ்த்தப்படும்.**

**என்னை முழு மனதுடன் நேசிக்கவும்; அது மட்டுமே முக்கியம். என்னை நேசியுங்கள், நேசியுங்கள், நேசியுங்கள், அப்போதுதான் நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள்.**

கூட்டத்தில் பாபாவின் அருகில் அமர்ந்திருந்த கலா வெங்கட ராவ், பாபா, தனது எழுத்துப்பலகை மூலம் ஆங்கிலத்தில் எடுத்துரைத்த ஒவ்வொரு வார்த்தையையும் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

அதன் பின்னர், இரண்டாவது முறையாக, மதியம், 1:50 மணிக்கு, மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனை (REPENTANCE PRAYER) மொழியப்பட்டது. அதைத் தொடர்ந்து, பாபாவின் 'உளதாயிருத்தல் உண்மைப்பொருள் மற்றும் வாழ்க்கை உருநிழல்' (EXISTENCE IS SUBSTANCE AND LIFE IS SHADOW) என்ற சொற்பொழிவு வாசிக்கப்பட்டது. முடிவில் பாபா கூறினார், **"ஆந்திராவில் உங்களிடமிருந்து எனக்கு எதுவும் வேண்டாம் - சரணாகதி வேண்டாம், கீழ்ப்படிதல் வேண்டாம், மனம், உடல், உடைமை எதுவும் வேண்டாம். எனக்கு உங்கள் அன்பு மட்டுமே வேண்டும்!"**

கூட்டம் அதிகாலை 2:30 மணிக்கு முடிவடைந்தது. இந்த நேரத்தில்தான் மௌன சுவாமியை 40 நாட்கள் கொவ்வூரில் தங்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

1954 மார்ச் 2 செவ்வாய்க்கிழமை காலை, மீண்டும், முழுக் குழுவையும் ஒன்றாக அழைத்து, பாபா கூறினார்:

**நேற்றைய இரவு நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தொகுத்து, சில விஷயங்களை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் கே.டி.ஆர்.எம். குழுவைக் கலைத்துவிட்டேன், மேலும், நேற்று இரவு நான் கூறியது போல், அதிகாரப்பூர்வமாக ஆந்திரா மெஹர் மையங்கள் எதைக் குறித்தும் நான் கவலைப்பட மாட்டேன். பாபாவைப் பற்றிய புத்தகங்கள் மற்றும் இதர இலக்கியங்களுக்கும் கூட நான் பொறுப்பாக இருக்கவோ அல்லது கவலை கொள்ளவோ மாட்டேன்.**

**நான் விரும்புவது என்னவெனில், என்னை உண்மையாக நேசிப்பவர்கள் மற்றும் எனக்காக பணிபுரிய விரும்புபவர்கள் ஒவ்வொருவரும், பாபா மையமாக மாற வேண்டும். வசதி உள்ளவர்கள், இல்லாதவர்கள் அனைவரும் எனக்காக எப்படிப் பணிபுரிய முடியும் என்பது நேற்று இரவு என்னால் விளக்கப்பட்டது. கிராமங்களிலும், உங்கள் சொந்த இல்லங்களிலும், அது உங்கள் சுய விருப்பத்தைச் சார்ந்ததே தவிர என்னுடையது அல்ல.**

**நேற்றிரவு நான் சொன்னது போல், இப்போது, எனது மௌனத்தையும், மௌனத்தைக் கலைக்கும் திட்டத்தையும் தனிப்பட்ட முறையில் உருவாக்க வேண்டும். அதனால் நான் எந்தக் கடிதத் தொடர்பைக் குறித்தும் கவலைப்பட மாட்டேன். இப்போது, கே.டி.ஆர்.எம். குழு மற்றும் ஆந்திரா மெஹர் மையங்கள் கலைக்கப்படுவதால், அத்துடன் நேரடியாக**

சம்பந்தப்பட்டவர்களுக்கு, பல சிக்கல்கள் இருக்கலாம் - அலுவலகம், வெளியீடுகள் போன்ற மற்றும் பல. எனவே, நான் உங்களின் சிரமங்களை சீர்படுத்தும் விதத்தில் உதவுமாறு ஆதியை (சீனியர்) அறிவுறுத்தியுள்ளேன். நீங்கள் அனைவரும் விரும்பினால், ஆதி, எரச், பெண்டு அல்லது இதர மண்டலி எவருடனும் தொடர்பு கொள்ளலாம். ஆனால், நீங்கள் எழுதும் கடிதங்களில் ஒரு வார்த்தைக் கூட எனது காதுக்கு வரக்கூடாது என்று மண்டலிக்கு நான் கட்டளையிடுகிறேன்.

நீங்கள் கேட்கும் போது, மண்டலி உங்களுக்கு ஏதேனும் ஆலோசனை வழங்கினால், அது என்னிடமிருந்து வந்ததாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர்கள் என்னுடன் நீண்ட காலமாக இருப்பதால், அவர்கள் நிச்சயமாக உங்களுக்கு, சிறந்த ஆலோசனைகளை வழங்குவார்கள். இருந்தும், அவற்றை எனது ஆலோசனைகளாகக் கருத வேண்டாம். வெளியீடுகள், புத்தகங்கள் போன்றவற்றைக் கையாளுவதில் சிரமங்கள் இருந்தால், ஆதியின் ஆலோசனையையும் உதவியையும் நாடுங்கள். உங்கள் அனைவருக்கும் உதவுமாறு நான் அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். ஆனால் அவர் உங்களுக்கு வழங்கும் அறிவுரையைக் குறித்து நான் கவலைப்பட மாட்டேன்.

'மெஹர் பப்ளிகேஷன்ஸ்' (MEHER PUBLICATIONS) கலைக்கப்பட்டதால், மல்லிகார்ஜுன ராவின் பொறுப்பில் இருந்த பிரசுரங்கள் அல்லது 'ஆந்திரா மெஹர் பப்ளிகேஷன்ஸ்', சில சிக்கல்களை சந்திக்க நேரிடும். ஆதியின் உதவி இல்லாமல், இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடுவது சிரமமாக இருக்கும். ஆதலால், மல்லிகார்ஜுன ராவிற்கு இக்கட்டான நிலை ஏற்படாத வகையில், ஆதி உதவ வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் நேர்மையாகச் செய்து நிறைவேற்ற வேண்டும். அலுவலகம் அல்லது வெளியீடுகள் தொடர்ந்தாலும், அல்லது நிறுத்தப்பட்டாலும், எனக்கு எந்தக் கவலையும் இல்லை. இது உங்கள், கே.டி.ஆர்.எம். நால்வரின் பொறுப்பாக இருக்க வேண்டும். அவர்கள் அதைத் தொடர விரும்பினால், எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. நீங்கள், அத்துடன் எதையும் சேர்க்கலாம், கழிக்கலாம் அல்லது பூஜ்ஜியமாக வைத்துக்கொள்ளலாம். அதைப் பற்றிய எந்தக் கவலையும் எனக்கு இருக்காது. நான் ஒரே நேரத்தில் சேவகன் அதுபோல் எஜமானும் கூட.

ஆதி அல்லது இதர மண்டலியிடம், நீங்கள் உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும், உங்கள் கஷ்டங்களில் உதவவும் கேட்டுக்கொள்ளலாம், ஏனெனில் அவர்களுக்கு எனது வழிகளும் முறைகளும் தெரியும். வேண்டுமென்றே உங்களைத் தவறாக வழிநடத்த மாட்டார்கள் என்று நீங்கள் நம்பலாம். ஆனால், அவர்களிடம் ஆலோசனையும் உதவியும் கேட்ட பின்னர், அதையும் நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும், ஏனெனில் மண்டலி பாபா அல்ல!

நீங்கள் பாபாவை எப்படி நேசிக்கிறீர்கள், எப்படி பாபாவுக்காகப் பணிபுரிகிறீர்கள் என்பதை இப்போது பார்க்கிறேன். நான் எங்கும் இருக்கிறேன், உங்களை கவனிக்க உங்களிலும் இருக்கிறேன்.

இப்போது, நீங்கள் விரும்பினால் எதையேனும் கேட்கலாம். உங்கள் சிரமங்களைத் தீர்ப்பது குறித்தும் என்னிடம் முறையிடலாம்.

ஜெ.வெங்கடேஸ்வர ராவ், "ஆன்மீகம் தொடர்பான எங்கள் குறைபாடுகள் என்ன?"

பதிலுக்கு பாபா கூறினார்:

எவரும் தோல்வியுறும் அளவுக்கு குறைபாடுகள் எதுவும் இல்லை என்று நான் உங்களுக்குக் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் என்னை முழு மனதுடன் நேசிக்கிறீர்கள். நேசம் அதன் உச்சத்தில் இல்லாதபோது, அது எப்பொழுதும் குழப்பத்தை உருவாக்குகிறது. தோல்வி என்ற கேள்விக்கே இடமில்லை. உங்கள் அனைவருடனும் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நேற்றிரவு நான் சொன்னது போல், எனது 60 வருட வாழ்க்கையில், நான் தெய்வீக நோக்கத்திற்காக இதுபோன்ற ஒரு கூட்டத்தை நடத்துவது இதுவே முதல் முறை. எனது தெய்வீகத்தின் ஒரு சிறிய அம்சத்தையேனும் நீங்கள் அடையப் பெற்றிருந்தால், எல்லா சந்தேகங்களும் விலகி உண்மையான இறை அன்பு நிலைகொண்டிருக்கும். மாயையின் இறுக்கமான பிடியில் நாம் உண்மைப்பொருளான ஏக இறைவனை மறந்து விடுகிறோம்.

100 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த உடல் வடிவம் உங்களிடம் இருக்காது என்ற இந்த உண்மையை இன்று நீங்கள் உணரவில்லை. நேற்று நிகழ்ந்த கார் விபத்து கே.டி.ஆர்.எம். நால்வரையும் இந்த உலகத்திலிருந்து அழைத்துச் சென்றிருந்தால், அதாவது அவர்கள் உயிரைத் துறந்திருந்தால், அவர்களின் மனதில் இந்த நேரத்தில் இருக்கும் குழப்பம் இருந்திருக்காது. அப்போது கே.டி.ஆர்.எம். நால்வரும் இறந்து விட்டார்கள் என்று நினைத்து, இனிமேல் எனக்காக மட்டும் வாழ்வார்கள்.

வெங்கடேஸ்வர ராவ் அப்போது, "நாங்கள் ஊதாரிக் குழந்தைகள், சிரத்தை இல்லாதவர்கள். ஆதியின் மூலமாக எங்களுக்கு உதவுங்கள்; அதுவே எனது பிரார்த்தனை" என்றார்.

நாம் முற்றிலும் நேர்மையாக இருப்போம். ஆதி என்னுடன் பல சோதனைகளை எதிர்கொண்ட மண்டலியில் ஒருவராக, நீண்ட காலமாக என்னுடன் இருந்து வருகிறார்; 20 ஆண்டுகளாக 100 சதவிகிதம் அலுவலக வேலையைச் செய்கிறார், அப்போதும் கூட, நான் சொன்னது போல், எனது மண்டலியில் எவருமே 'பாபா' இல்லை! அனைவருக்கும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளன. நீங்கள் ஆதியிடமிருந்து அறிவுரைகளைப் பெறலாம், ஆனால் பாபாவிடமிருந்து ஆதியின் மூலமாக அல்ல.

'வெலுகு' (VELUGU) பத்திரிகையின் ஆசிரியர் அன்னபூர்ணய்யா (ANNAPURNIAH), "பாபா மௌனத்தைக் கலைக்கும் நேரத்தையும் இடத்தையும் ஆந்திர அன்பர்களுக்குத் தெரிவிப்பீர்களா?" என்று கேட்டார்.

**என் அன்பான வெலுகு, நான் மௌனத்தைக் கலைப்பதன் அர்த்தம் இதுதான் என்றால், நான் அதைக் கலைக்காமல் இருப்பது நல்லது. அனைவரும் அதை அறிவர்.**

**நேற்றிரவு நான் உங்களிடம் எடுத்துரைத்தது போல, மின்சார உற்பத்தி மையத்தின் முக்கிய மின் இயக்கியை இயங்கச் செய்தால், மின்விளக்குகளுடன் இணைப்பு இருக்கும் இடமெல்லாம் விளக்கு எரியும்; அது இங்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் நிகழும். ஆனால் பழுதாகிப்போன மின்விளக்கு ஒளிராது! அதனால்தான், எல்லோரும் என்னை அதிகமாக நேசிக்கவேண்டும் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.**

**இலக்கியம், புத்தகங்கள் பற்றிய இந்தப் பேச்சுக்கள் அனைத்தும் அடித்தளத்தைத் தயார்படுத்துவதற்காகவே. ஆனால் மின்சார உற்பத்தி மையம் இயக்கப்படும் நேரம் மிக அருகாமையில் உள்ளது; இப்போது, முக்கியமாகக் கருதப்படும் ஒரே விஷயம் அன்பு, நேசம்.**

தொடர்ந்து பாபா கூறினார்:

**மீண்டும் நான் சொல்கிறேன், ஆந்திரா மக்கள் என்னை நேசிக்கவும், நான் அவர்களை நேசிக்கிறேன் என்பதை அவர்களுக்கு உணர்த்தவும், நீங்கள் விரும்பினால், அது, உங்கள் கைகளில்தான் உள்ளது. இதன் அர்த்தம், நீங்கள் தனித்தனியாகப் பணிபுரிய வேண்டும் என்பதல்ல. நான் ஒருபோதும் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொல்வது என்னவெனில், நீங்கள் ஒவ்வொருவரும், ஒரு பாபா மையமாக இருங்கள் அல்லது பாபா மையங்களாக குழுக்களாகப் பணிபுரியுங்கள். இதன் அர்த்தம் நீங்கள் சுயமாகப் பணிபுரியக்கூடாது என்றல்ல, பணிபுரிவது எப்படி என்பதை இப்போது நான் உங்களுக்குக் காட்டியுள்ளேன். ஆனால், அது இப்போது உங்கள் சொந்த பொறுப்பு என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் பாபாவிற்கு 100 மையங்களை நிறுவலாம், அவற்றில் எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை. இது உங்கள் கவலை, என்னுடையது அல்ல. ஆனால், எனக்காக உழைக்க விரும்புபவர்கள், பாபாவின் அன்பின் வாழ்க்கையை வாழ வேண்டும், அதாவது, நீங்கள் பாபாவை எப்படி நேசிக்கிறீர்கள் என்பதை மக்களுக்குக் காட்டுங்கள், அப்போது உங்களைச் சுற்றி பாபா அன்பர்கள் இருப்பார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**



**ஆந்திரா** (ANDRA)**, 1 மார்ச்** (MARCH) **1954**

எனக்கு வேண்டியது ‘காசு மீது கருத்தற்ற நேசம்!’ நான் அற்புதங்களைச் செய்யாவிடிலும், ஆழ் இதயத்திலிருந்து எதைக் கேட்டாலும் கொடுப்பேன் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நான் பாபாவாக இருந்தால் எதையும் செய்ய முடியும். நீங்கள் இதயபூர்வமாக என்னிடம் ஒன்றைக் கேளுங்கள், அதை என்னிடமிருந்து அடையப் பெறுவீர்கள். ஆனால் என் அன்பைக் கேட்பவர் என்னை நேசிக்கத் துணிந்தவராக இருப்பார் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் சிறிது காலத்திற்குள், என் அவமானம், எனது மகிமை, எனது வெளிப்பாடு, அத்துடன் நான் உடலையும் கைவிடும் நேரம் மிக அருகில் உள்ளது. இவை அனைத்தும் விரைவில், குறுகிய காலத்தில் நடக்கும். எனவே, இந்த நிமிடத்திலிருந்து என்னை மேலும் அதிகமாக நேசிக்கவும்.

ஆனால் பொய் பிரச்சாரம் வேண்டாம். என்னைப் பற்றி உங்கள் இதயம் சொல்வதையும், உங்கள் மனசாட்சி கூறுவதையும் தயக்கமின்றி கொட்டி விடுங்கள். ஆனால் எனக்காக உங்கள் இதயத்தின் கூற்றை பிறரிடம் எடுத்துரைப்பதில் நீங்கள் ஏளனம் செய்யப்பட்டாலும், ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதைப் பற்றி கவலைப்படாமல் இருங்கள். நீங்கள் பாபாவை கடவுளாக எடுத்துக் கொண்டால், அப்படியே சொல்லுங்கள்; தயங்க வேண்டாம். பாபாவை, சைத்தான் என்று நீங்கள் நினைத்தால், கூக்குரல் எழுப்புங்கள்; எதற்கும் அஞ்சவேண்டாம்.

நீங்கள் என்னை எதுவாகவும் நினைக்கும் அனைத்தும் நானே; மேலும், அதற்கு அப்பாற்பட்டவனும் நானே. அப்படியானால், நீங்கள் என்னைப்பற்றி உணர்வதையும், நினைப்பதையும் எடுத்துரைப்பதற்கு ஏன் அஞ்சவும், தயங்கவும் வேண்டும்? வெளிப்படையாகப் பேசுங்கள். இரண்டும் நானே. ஆனால் உங்கள் மனசாட்சியை மீறாதீர்கள், வெறும் பிரச்சாரத்திற்காக அதைப் பெரிதுபடுத்தாதீர்கள். உங்கள் மனசாட்சி, ‘பாபா, அவதார புருஷர்’ என்று சொன்னால், அதற்காக நீங்கள் கொல்லப்பட்டாலும் அதையே சொல்லுங்கள். ஆனால், ‘நான் அப்படி இல்லை’ என்று நீங்கள் உணர்ந்தால், ‘பாபா, அவதார புருஷர் அல்ல’ என்று நீங்கள் உணர்வதாகச் சொல்லுங்கள். அஞ்ச வேண்டாம், ஆனால் நீங்கள் உணர்வதை வெளிப்படுத்தத் தயாராக இருங்கள். எனது சுய அனுபவத்தில், நான் ஆதிகாலப்புருஷன், உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவன் என்று மீண்டும் மீண்டும் கூறுகிறேன்.

இவ்வாறு, ராஜமுந்திரியில் ஆந்திரா சேவகர்களின் கூட்டம் நிறைவடைந்தது; மெஹர் பாபாவின் பெயரில் பணிபுரிவது எப்படி என்பது குறித்து அவரது அன்பர்கள் சரியான திசையில் வழிநடத்தப்பட்டனர். இந்த யுகத்தில், கடவுளை நாடுபவர்கள், அவரை வழிபட பல வழிகள் உள்ளன: தியானம், ஜபம், தவம், உபவாசம், ஏகாந்தவாசம் - ஆனால் பாபாவின் பாதையில், செய்யவேண்டிய அனைத்தையும் செய்துகொண்டே தியானத்தில் ஈடுபடுவது

இன்றியமையாதது; துறவறம், தவம் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதில் பலனில்லை. உண்மை, நேர்மை மற்றும் பற்றற்ற வாழ்க்கை வாழும் வேளையில், அவரைப் பற்றி மக்களிடம் கூறுவது, நம்மையே மேம்படுத்துவது மட்டுமின்றி, அவர்களை பாபாவின் அன்பின் அரவணைப்பில் அழைத்துச் செல்கிறது. கடவுளுடன் ஐக்கியமாக, இக்காலகட்டம், மிகவும் இயற்கையான மற்றும் எளிதான பாதையை நோக்கி வழிநடத்தப்படுகிறது, இது அனைவருக்கும் சாத்தியமான பாதையாகும். இது உண்மையான 'பாபா-பணி', அங்கு நமது அகங்காரத்திற்கு இடமில்லை, பாபாவின் அன்பின் நெருப்பில் அது எரிக்கப்பட வேண்டும்.

இத்தகைய 'பாபா-பணி' அனைத்து யோகாக்களிலும் தலைசிறந்த யோகாவாகும்; மேலும், வார்த்தையின் மெய்யான அர்த்தத்தில், நேர்மையான பாபா ஊழியர்கள் உண்மையில் யோகிகள். அவர்களின் அகங்காரம் செயலற்ற நிலையில் இருக்கும் போது, அவர்கள் தங்களை எப்பொழுதும் உண்மை, நேர்மை மற்றும் அன்பின் விழிப்புணர்வுடன் வைத்திருக்கிறார்கள். இத்தகைய ஊழியர்கள், யோகிகளில் மிகவும் உயர்ந்தவர்கள் மற்றும் உண்மையான சந்நியாசிகள்.

'பாபா-பணி'யில் ஈடுபடுவது என்பது நமது அகந்தையை அழித்து, ஒவ்வொரு செயலிலும், வாக்கிலும், வார்த்தையிலும் பாபாவைக் காண்பதாகும். இவ்வாறு வாழ்க்கையின் ஒழுங்குமுறை முற்றிலும் அவர் கையில்; மேலும், அவரது கையை தங்கள் கைகளால் பற்றிக்கொண்டிருக்கும் ஊழியர்கள் அவரைப் பின்பற்றலாம். பாபாவை, கைகோர்த்து பின்பற்றுவதில் ஒரு மெய்ப்பொருள் மறைந்துள்ளது. அது: நம் மனதின் கட்டளைப்படி வழிநடத்தப்படாமல், பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, நம் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் அனைத்திலும் உண்மை, நேர்மை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் வழிநடத்தப்படுகிறார். ஒன்றை செய்பவரும், அவருடைய சொல்லும், செயலும் - அனைத்தும் பாபாவே. தனது ஒவ்வொரு சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் பாபாவை ஆதாரமாகக்கொண்டு, 'நான்' எனும் நிலைப்பாடு அதில் இல்லாமல் பார்த்துக் கொள்பவரே உண்மையான ஊழியர்!

மார்ச் 2ஆம் நாள் காலை, 9:00 மணிக்கு கூட்டம் நிறைவடைந்ததும், குருகுல மாணவர்களுடன் பாபா சிறிது நேரம் விளையாடி, ஆப்பிள் பழங்களை வீசி எறிந்த வேளையில், அவர்கள் சாமர்த்தியமாக அவற்றைப் பிடித்தனர். பாபா பின்னர் அவரது அன்பர்களின் இல்லங்களுக்குப் புறப்பட்டு, முதலில் அவர் தர்ம ராவ் இல்லத்திற்குச் சென்றார். அவருடைய முழுக் குடும்பமும் பாபாவின் அன்பில் மூழ்கியிருந்தது. அவர்கள் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தியபோது, பாபா பலாப்பழத்தைப் பிரசாதமாக வழங்கினார். ஆந்திரா பயணம் முழுவதும், பாபாவின் காரை தர்ம ராவ் தனியாக ஓட்டிச் சென்றார்; பாபா சென்ற பின்னர் ஓய்வெடுக்குமாறு அவருக்கு அறிவுறுத்தினார்.

டி.ஏ. பிள்ளை, அவரது மகள்கள் மீரா, வீணா ஆகியோர் தர்ம ராவ் இல்லத்தில் பாபாவை சந்தித்தனர். வீணா இப்போதும் ஒரு மஸ்தானி போலவே இருந்தார்; பாபா, அவர் மீது தனது கருணை மழையை மிகையாகப் பொழிந்தார். குருகுலத்திற்குத் திரும்புவதற்கு முன்பு, பாபா பி. ஜோதி பிரகாஷ் (B. JYOTI PRAKASH) மற்றும் பிள்ளையின் இல்லங்களுக்கும் விஜயம் செய்தார். புல்லையா (BULLIAH) என்பவர் அங்கே பாபாவிற்கும் மண்டலிக்கும் உணவு மற்றும் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார்; பாபா அவருடைய அன்பைப் பெரிதும் பாராட்டினார். சிலர் பாபாவைப் பார்க்க குருகுலத்திற்கு வந்தனர், அங்கு 'நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா!" என்ற இசை இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருந்தது.

1954 மார்ச் 2 அன்று மதியம் 1:00 மணிக்கு, பாபா, ராஜமுந்திரியிலிருந்து காக்கிநாடாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; செல்லும் வழியில் தாபேஷ்வரம் (THAPESHWARAM) கிராமத்தில் 'சச்சிதானந்தா தியோஸொஃக்கல் விடுதி'யில் (SATCHITANANDA THEOSOPHICAL LODGE) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பாபா தரிசனம் வழங்கினார். பிற்பகல் இரண்டு மணியளவில், 'பர்வர்திகார் பிரார்த்தனை' (MASTER'S PRAYER) மொழியப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்வரும் செய்தி வழங்கப்பட்டது:

**பலர் தேடுவதும், ஒரு சிலரே கண்டுகொள்வதும் என்னைத்தான். எந்த அறிவாற்றலாலும் என்னைப் புரிந்து கொள்ள முடியாது. எவ்வளவுதான் கடுமையான துறவறத்தைக் கடைப்பிடித்தாலும் என்னை அடைய முடியாது. ஒருவன் என்னை நேசித்து, என்னில் அவனது சுயத்தை இழக்கும்போதுதான், நான் கண்டுகொள்ளப்படுகிறேன். இந்த நேசம் மிகவும் நேர்மையாக இருக்க வேண்டும், அது இருப்பது பிறருக்குத் தெரியாமலும், அதே வேளையில் நீங்களே உணர்வுப்பூர்வமாக அதைப்பற்றி அறிந்திராமலும் இருக்க வேண்டும். தெய்வீக அம்சங்களில் ஒன்று எல்லையற்ற நற்குணம், எனவே நற்குணம் படைத்தவராக இருங்கள், ஆனால், எவரிடமிருந்தும் அதற்கான பாராட்டுகளை எதிர்பாராமல் இருங்கள்.**

**பாபா அனைவருக்கும் அவரது ஆசிகளை வழங்குகிறார்.**

பாபாவின் ஆரத்தி நிறைவடைந்ததும், அவர் பிரசாதம் வழங்கினார். பிரசாதத்தைப் பெறும் வேளையில், ஒரு நபர், பாபாவிடம் ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு, பாபா கூறினார், "**இந்தப் பிரசாதத்தில் எனது ஆசீர்வாதம் உள்ளது. மக்கள் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டால், அது அவர்களின் இதயத்தில் ஆழமாக வேரூன்றும். இல்லையேல், அறிவுரைகள் வெற்றுப் பேச்சாகத்தான் இருக்கும்.**"

அங்கிருந்து புறப்பட்ட பாபா, மதியம் 2.45 மணிக்கு அலமூரு (ALAMURU) கிராமத்தில், புதிதாகக் கட்டப்பட்ட ஷாந்தி திரையரங்கில் (SHANTI MOVIE THEATER) தரிசனம் வழங்கினார். ஏறக்குறைய 1,000 பேர் கலந்துகொண்டு, அவரது பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். 'ஆத்மாவின் காதல் விளையாட்டு' (THE ATMA'S LOVE OF PLAY) என்ற தலைப்பில் பாபாவின் கீழ்வரும் செய்தி வழங்கப்பட்டது:

**தனித்தனியாகத் தோன்றும் ஒவ்வோர் ஆத்மாவும் அதன் 'பிரிக்க முடியாத பரமாத்மா'வை உணர விதிக்கப்பட்டுள்ளது. ஆத்மா அதன் 'எல்லையற்ற', 'நித்திய' நிலையின், முதல் 'மிகச் சிறிய அளவிலான' உணர்வை அடையத் தொடங்கியதும், அது, அதன் சுய நிழலால் எதிர்கொள்ளப்படுகிறது. ஆத்மா உடனடியாக இந்த நிழலின் உணர்வில் தொலைந்து போகிறது, அதிலிருந்து மாயையின் இடைவிடாத 'விளையாட்டில்' ஈடுபடத் தொடங்குகிறது. தனிப்பட்ட ஆத்மாவின் உண்மைப்பொருளான ஏக இறைவனை நோக்கிய பயணம் முழுவதும், விளையாட்டிற்கும், காட்சிக்கும், நிகழ்ச்சிக்கும், வேடிக்கை நாடகத்திற்கும் பின்னால், அதீத ஏக்கத்துடன், ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒரு குழந்தையின் உருவில், அது பொம்மைகளுடன் விளையாடுவதில் மகிழ்ச்சியைக் காண்கிறது. ஒரு மனிதனாக, அது விளையாட்டு, வேடிக்கை நாடகம் மற்றும் சாகசத்தின் மூலம் அவற்றின் மீதான தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. மனிதன் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்த போதும், தன் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை ஆடம்பரமான அற்புதங்களின் வடிவில் வெளிப்படுத்தி, விளையாட்டிலும் காட்சியிலும் அவனது அன்பில் ஈடுபடும் போதும் இந்த அடிமைத்தனம் நீடிக்கிறது.**

**மாயையான இன்பங்களின் குழந்தைத்தனமான விளையாட்டில் தன்னை இழந்து, மனிதன் தனது இறுதி இலக்கிலிருந்து தப்பிப்பதை நிறுத்தாத வரை, அவனால் ஆன்மீகத்தை தீவிரமாகப் புரிந்து கொள்ள முடியாது. மாயையின் ஒளிரும் பொம்மைகளுடன் விளையாடுவதை நிறுத்திவிட்டு, ஒரே உண்மைப்பொருளான ஏக இறைவனை அடைய ஏங்க வேண்டிய நேரம் இது.**

அவருடைய செய்தி வாசிக்கப்பட்டதும், பாபா, மக்களுக்கு பிரசாதம் வழங்கினார். பின்னர் அவர் மண்டபேட்டா (MANDAPETA) கிராமத்திற்குச் சென்றார், அங்கும் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. ஊராட்சி நூலகத்தில் தரிசன நிகழ்ச்சி நடந்தது. திரு. கே. வெங்கடேஸ்வரலு, பாபாவைப் பற்றி ஒரு சிறிய அறிமுக உரையை நிகழ்த்தினார், பின்னர் பாபா கூறினார்:

**ஏழை, பணக்காரர், சிறியவர், பெரியவர், கற்றவர், கல்லாதவர் எவராக இருந்தாலும் சரி, நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கும் விதத்தில் நேசித்தால் மட்டுமே, என்னை அடையப் பெறுவீர்கள், மேலும் என்னை உங்கள் சுயமாக, ஏக இறைவனாகக் கண்டுகொள்வீர்கள்.**

பிக்கென்னா வெங்கட ரத்னம் (BIKKENNA VENKATA RATNAM) திட்டமிட்டிருந்ததற்கு இணங்க, தரிசன நிகழ்ச்சிக்காக பாபா, ராமச்சந்திரபுரம் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு, குடும்ப சாஸ்திரி ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார், அதைத் தொடர்ந்து மாலை 4:45 மணிக்கு, பாபா, எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**குடும்பா அவரது இதயத்தில் உதயமாவதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் நான் மீண்டும் மீண்டும் இந்த விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன், என்னை வரவேற்பதற்கான இந்த விழாக்கள் மற்றும் எனது செய்திகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் எந்த அர்த்தமுமில்லை. சொற்பொழிவு வழங்கப்படுவதற்காக அல்ல கடவுள், ஆனால் நேசிக்கப்படுவதற்காக; அன்பின் வாழ்வை வாழக்கூடியவர்களால் மட்டுமே என்னை ஆதிகாலப் புருஷனாக அறிய முடியும்!**

பாபா பிரசாதத்தை வழங்கி வெங்கட ரத்னம் குடும்பத்தினரிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

பாபா தமது பயணத்தின் கடைசி இடமான காக்கிநாடாவை, மாலை ஆறு மணிக்குச் சென்றடைந்தார். சர்ப்பவரத்தில் (SARPAVARAM) அமைந்த ஒய்.வி. நரசிம்ம ராவின் பங்களாவில் (தர்ம ராவின் மைத்துனர்) பாபா தங்க வைக்கப்பட்டார். பங்களாவிற்கு எதிரே ஒரு பெரிய விதானம் எழுப்பப்பட்டு, சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நரசிம்ம ராவ் மற்றும் அவரது குடும்பத்தினர் மிகுந்த பக்தியுடன் பாபாவிற்கு ஆரத்தியை நிகழ்த்தினர், சில உள்ளூர் நபர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர். மண்டலியும் இதர குழுவினரும் அருகில் அமைந்த முத்தா மாணிக்யத்தின் (MUTTA MANIKYAM) இல்லத்தில் தங்கினர்.

மறுநாள் காலை, 1954 மார்ச் 3 புதன்கிழமை 7:00 மணியளவில், ஆந்திரா பயணத்தின் இறுதி நாள் தரிசனம் என்பதால், காக்கிநாடாவிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் பலர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். அனகாப்பள்ளி (ANAKAPALLI) நகரிலிருந்து பாபாவை முன்பு சந்தித்த எம். நரசிம்மராவ் என்பவரிடம் பாபா, **“இப்போதுதான் விழித்துக்கொண்டீர்களா? ஏன் இதர நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை?”** என்று கேட்டார். நரசிம்மராவ் உடல்நிலை காரணமாக இயலாமையை வெளிப்படுத்தியபோது, பாபா அவருக்கு இரண்டு முறை பிரசாதத்தை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து பாபா, காக்கிநாடாவில் பதினேழு இல்லங்களுக்கு விஜயம் செய்தார்; ஒவ்வோர் இல்லத்திலும் அவரது ஆரத்தி நிகழ்த்தி பிரசாதம் வழங்கப்பட்டது. சதிராஜு, வி.வி.நாராயண ராவ் இருவரும் தயார் செய்த ஒரு ஜோடி வெள்ளி காலணிகளை பாபா தொட்டு ஆசீர்வதித்ததும், காலணிகளை அவருடைய பாதங்களில் அர்ப்பணித்து, பின்னர் அவற்றை தத்தமது வீடுகளில் வைத்து வழிபடுவதே நோக்கம். எம். திருமலா ராவ், பாபாவிற்கு காதி போர்வையை வழங்கினார். ஹனுமந்த் ராவின் மனைவி உடல்நலம் குன்றி இருந்ததால், அவரது கையைப் பற்றிக்கொண்டு, பாபா, வீட்டின் ஒவ்வோர் அறையையும் பார்வையிட்டு பிரசாதம் வழங்கினார்.

பி. நாராயண ஸ்வாமி என்ற வாலிப வயது சிறுவன் ஒருவன், ஆந்திரா பயணத்தின் போது குழுவுடன் இருந்து, தொடர்ந்து பாபாவின் புகைப்படங்களை எடுத்துக் கொண்டிருந்தான். டாக்டர் எல். சுப்பாராவ் வீட்டில், பாபா அந்த

சிறுவனைக் கிண்டல் செய்தார், **“நீங்கள் எடுத்த ஆயிரக்கணக்கான புகைப்படங்களில், ஒன்றேனும் சரியாக வந்துள்ளதா?”**

நாராயணனின் தந்தை நவாப்பாலம் (NAVABPALEM) கிராமத்தில் பாபாவின் விருந்தோம்புநராக இருந்திருக்க வேண்டும், ஆனால், நேரமில்லாததால் பாபா அங்குச் செல்ல முடியவில்லை.

மாவட்ட ஆட்சியாளர் எச். ஸாம்ப மூர்த்தியின் (SAMBA MURTHY) இல்லத்தில், பாபாவிடம் கையொப்பம் வாங்குவதற்காக அவரது மகன் குறிப்பேட்டுடன் அவரை அணுகியபோது பாபா சிறுவனிடம், **“நான் மௌனம் ஆரம்பித்த நாளிலிருந்து, எழுதுவதை நிறுத்திவிட்டேன்”** என்று குறிப்பிட்டு, சிறுவனின் குறிப்பேட்டில் ஒரு வாத்தின் ஓவியத்தை வரைந்தார்.

ஆட்சியாளர் இல்லத்தில், வழக்கறிஞர்கள், டாக்டர்கள் மற்றும் சமூகத்தின் செல்வாக்கு மிக்கவர்களும் கலந்து கொண்டனர். அன்று காலை பத்து மணிக்கு பாபா அவர்களுக்கு இந்தச் செய்தியை வழங்கினார்:

**மனிதன் கடவுளாக மாறுவது அன்பின் மூலம் சாத்தியமானது. மேலும் கடவுள், மனிதனாக மாறும்போது, அது, எல்லா உயிரினங்கள் மீதான அவரது அன்பே காரணமாக இருப்பது.**

**மக்கள் என்னிடம், ‘நீங்கள் கடவுளைப் பார்த்தீர்களா?’ என்று கேட்பதாக இருந்தால் ‘அவரைத் தவிர, பார்ப்பதற்கு வேறு என்ன இருக்கிறது?’ என்று நான் பதிலளிப்பேன்.**

**அவர்கள் என்னிடம், ‘நீங்கள் கடவுளா?’ என்று கேட்டால், ‘நான் வேறு என்னவாக இருக்க முடியும்?’ என்று பதிலளிப்பேன்.**

**அவர்கள் என்னிடம், ‘நீங்கள் அவதார புருஷரா?’ என்று கேட்பதானால், ‘வேறு எதற்காக நான் இந்த மனித உருவம் எடுத்தேன்?” என்று கேட்பேன்.**

**ஆகவே, என்னால் வழங்க முடிந்த மற்றும் எப்பொழுதும் வழங்கி வந்த ஒரே செய்தி: “கடவுளை நேசியுங்கள், அப்போது நீங்களே சுயமாகக் கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள்.”**

பாபா பின்னர் ஒய்.வி. நரசிம்ம ராவின் பங்களாவிற்கு விஜயம் செய்தார். திரும்பி வரும் வேளையில், ஒரு மலர்மாலை கீழே விழுந்தது. பாபாவிற்கு அளிக்கப்பட்ட அனைத்து மாலைகளையும் சேகரிக்கும் பொறுப்பு பங்க்ராஜைச் சார்ந்தது ஆகையால், பங்க்ராஜிடம் கொடுக்கும் எண்ணத்தில் ஹெலன் அதை எடுத்தார். ஆனால் பாபா அந்த மாலையைக் கேட்டு வாங்கி, அதைத் தொட்டு, தமது கைகளால் பங்க்ராஜிடம் கொடுத்தார்.

அதேபோல, தரிசன நிகழ்ச்சிகளின் போது மக்கள், பாபாவின் சித்திரங்களைத் தொட்டு ஆசீர்வதிப்பதற்காகக் கொண்டு வந்த வேளையில், அவற்றில் ஏதேனும் தற்செயலாக, கூட்டத்தின் நடுவே கீழே விழுந்திருந்தால், பாபா அதை எடுத்து, வணங்குவது போல நெற்றியில் தொட்டு, பின்னர் அதை உரியவரிடம் திருப்பித் தந்தார்.



**ஆந்திரா, மார்ச் 1954**
(ANDHRA, MARCH 1954)



**ஆந்திரா, மார்ச் 1954, குடை**
பிடித்திருப்பவர் குமார்
(ANDHRA, MARCH 1954,
KUMAR HOLDING UMBRELLA)

அன்பான பாபாவின் புகைப்படங்கள் மிகுந்த மரியாதையுடனும், அன்புடனும், நம்பிக்கையுடனும் போற்றப்பட வேண்டியவை என்பதை அனைவரும் கவனிக்க வேண்டிய பாடமாக இது அமைந்தது.

பிற்பகல் மூன்று மணியளவில், பாபா, காக்கிநாடா காஸ்மோபாலிட்டன் கிளப்பிற்கு (COSMOPOLITAN CLUB) அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் கூறியதாவது:

**மக்கள் அமைதி காத்து என்னை அனுமதித்தால், ஆந்திரா நிகழ்ச்சியின் எனது கடைசி நாளான இன்று, வெகுஜன தரிசனத்தில் ஒரு சிறப்புச் செய்தியை வழங்க உள்ளேன். ஏற்கனவே எழுத்துப்பலகை வழியாக வழங்கப்பட்ட செய்திகளுக்கு மேலும் அதிகமாக, நான் ஒரு புதிய செய்தியை வழங்குவேன். இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அதைக் கேட்க விரும்பினால் அங்கு வரலாம்.**

அதைத் தொடர்ந்து, ஜகன்நாயக்பூரில் (JAGANNAICKPUR) அமைந்த மல்லாடி சத்யலிங்கம் நாயக்கர் தொண்டு நிறுவன உயர்நிலைப் பள்ளியில் (MALLADI SATYALINGAM NAIKER CHARITIES HIGH SCHOOL) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெகுஜன தரிசனத்திற்காக பாபா புறப்பட்டார். போனலு வெங்கடேஸ்வர்லு (BONALU VENKATESWARLU) மற்றும் இருவர் வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்திருந்தனர். விஜயவாடா செய்திகள் இங்கும் வாசிக்கப்பட்டன, மேலும் 'இறை வார்த்தைகளின் வார்த்தை' (THE WORD OF WORDS) என்ற தலைப்பில் இந்தச் செய்தியும் வழங்கப்பட்டது:

**எனது வெளிப்பாடானது, எனது மௌனத்தைக் கலைப்பதோடு தொடர்புடையது என்று நான் கூறும்போது, மக்கள், வாய்மொழியின் வெளிப்பாட்டை எதிர்பார்க்கக் கூடாது. 'நான்-கடவுள்'** (அனல் ஹக் அல்லது அஹம் பிரம்மாஸ்மி) **எனும் நிலைக்குத் தயாராக இருப்பவர்களுக்கு, தவறாமல் வழங்கும் 'இறை வார்த்தைகளின் வார்த்தை'யை நான் உச்சரிப்பேன்.**

**நீங்கள் உங்கள் வாயை முழுவதுமாக மூடிக்கொண்டு, குரல் எழுப்ப முற்படும்போது, 'ஓம்' போன்ற ஒரு குறிப்பிட்ட ஒலி, தவறாமல் ஒரு குறிப்பிட்ட தொனியில் ஒரே மாதிரியாக உச்சரிக்கப்படுகிறது. இது உண்மைப்பொருளின் 'இறை வார்த்தை'யின் ஏழாவது நிழல். இந்த உண்மைப்பொருளின் வார்த்தையை உச்சரிப்பதே எனது நோக்கம், இது உலகின் மனதைத் துளைத்து அதன் ஆழ் இதயத்திற்குச் செல்லும்.**

**இது, எளிமையான உண்மைப்பொருளான ஏக இறைவனை அதன் முழுமையான மற்றும் வரையறுக்க முடியாத எளிமையில் வெளிப்படுத்தும். இது 'இறை வாழ்க்கை'யின் நிறைவின் தருணத்தைக் குறிக்கும். அது நித்தியமான உண்மைப்பொருளை அணுகச் செய்யும்; புதிய வாயில்களைத் திறக்கும். விரக்தியடைந்த மனிதகுலத்திற்கு இது புதிய நம்பிக்கையை வழங்கும். ஆனால், தெய்வீகத்தால் விதிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற,**

மனிதகுலம் அதன் ஒட்டுமொத்த தடைகளையும் தூக்கி எறிந்துவிட்டு, கடவுள் மீதான நிலையான அன்பிற்கு, நிபந்தனையின்றி சரணடைவது முக்கியம். கடவுள் எல்லா எளிமையிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், கடினமான உழைப்பின் மூலம் நிரூபிக்கப்பட்ட அறிவுசார் முடிவுகளால் அல்ல.

திராட்சைக் கனிகளைத் திரும்பத் திரும்பப் பிழிந்து அதிலிருந்து மது தயாரிக்கப்படுகிறது, இதன் மூலம், அது போதைக்கான திறனைப் பெறுகிறது, இது பொதுவாக ஒருவரின் புரிந்துகொள்ளும் திறனைப் பறிக்கிறது. கடவுள் மீதான அன்பின் நெருக்கமான மற்றும் தொடர்ச்சியான உணர்வும் போதையைத் தருகிறது, ஆனால் இது உங்களை உண்மையான புரிதலை நோக்கி அழைத்துச் செல்கிறது. இந்தப் புரிதல், பகுத்தறிவு அல்லது அறிவாற்றலால் பெறப்படவில்லை. நீங்கள் கடவுளிடமிருந்து பிரிந்து, அவரைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் வரை, அவரைப் புரிந்துகொள்ள முடியாது.

உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே எந்தப் பிரிவினையும் இல்லை. அன்பிற்குரியவரும் அன்பரும் ஒருவரே! நீங்களே உங்களுக்கான வழி. நீங்களே கடவுள்.

நான் பேசும் 'இறை வார்த்தை' கடவுளிடமிருந்து வந்ததாக உலகை நோக்கிச் செல்லும்; ஒரு தத்துவஞானியிடமிருந்து வந்ததாக அல்ல. அது நேராக அதன் இதயத்திற்குச் செல்லும். அனைத்து உயிர்களும் ஏக இறைவனோடு ஒன்றிய உணர்வு நிலை உதயமாகும் அத்தருணத்தில், வெறுப்பு மற்றும் கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வரும். மாறாத அன்பும், தவறாத புரிதலும் உருவாகும்; மேலும் கடவுளை உணர்ந்த ஒருமைப்பாட்டின் அடிப்படையில் மனிதர்கள் மீற முடியாத சகோதரத்துவத்தில் ஒன்றிணைவார்கள்.

இந்தச் செய்தியை வழங்கிய பிறகு, பாபா, நான்கு மணியளவில், (ஒரு மணி நேரத்திற்கு முன்னர் அவர் அளித்த வாக்குறுதியின்படி) 'வழிபாடு அல்லது வணங்குதல்' (WORSHIP OR OBEISANCE) குறித்த இந்தத் தற்செயலான சிறப்புச் செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**கடவுளுக்கு அப்பாற்பட்ட நிலையில், பாலின வேறுபாடு என்பது இல்லை. அங்கு, பிரிக்க முடியாத, உளதாயிருக்கும் இறைத்தன்மை மட்டுமே உள்ளது. பிரபஞ்சம் எனப்படும் மாய உலகில்தான் பாலின வேறுபாடு தன்னை உறுதிப்படுத்திக் கொள்கிறது.**

**ஹஸ்ரத் பாபாஜான், ஒரே நொடிப்பொழுதில், எனது ஆதிகால, அளவிறுதியற்ற நிலையை அனுபவிக்கச் செய்த அவர், ஒரு முஸ்லீம் பெண்மணியின் பின்புலத்தைப் பெற்றிருந்தார். என்னை சாதாரண உலக உணர்வு நிலைக்குக் கொண்டு வந்த சத்குரு உபாஸனி மஹாராஜ், இந்து ஆண் வடிவத்தைக் கொண்டிருந்தார். பாபாஜான் ஓர் உயர்ந்த, உன்னதமான, செல்வந்தர் குடும்பத்தைச் சார்ந்த அழகுமிகு இளம் பெண், அவருடைய**

திருமணம் நிகழவிருந்த சிறிது காலத்திற்கு முன்னர் உலக வாழ்க்கையைத் துறந்தார். பூனாவில் இருந்த வேளையில், எனது நெற்றியில் முத்தம் பதித்து, நான் ஆதிகால புருஷன் என்பதை அறியச் செய்தார். அவருக்கு அப்போது சுமார் 100 வயது, உண்மையான ஃபக்கீரைப் போல் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்.

உங்கள் ஒவ்வொருவருக்கும், ஆண், பெண், எந்த சாதி, மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தெய்வீகத்தை அடைவதற்கு சம உரிமை உண்டு; அதற்கு வெளியளவிலான துறவு தேவையில்லை. ஆண், பெண் ஒவ்வொருவரும், தமது அன்றாட வாழ்வில், அனைத்து கடமைகளில் ஈடுபடும்போதும், கடவுளின் மீதான நேர்மையான அன்பின் மூலம், 'தெய்வீக தந்தை' எனும் உறுதிப்பாட்டையும், உலகளாவிய சகோதரத்துவத்தையும் அடைய முடியும்.

நான் நித்தியமாகவும், உணர்வுப்பூர்வமாகவும், தொடர்ந்து உங்கள் அனைவருடனும் ஒன்றாகவும், உங்கள் அனைவரிலும் ஒரே ஏக இறைவனாகவும் இருப்பதை, நான் எனது தெய்வீக அதிகாரத்துடன் கூற முடியும். எந்த தெய்வத்திற்கும், உயிருள்ள அல்லது உயிரற்ற, எந்தத் துறவி, குரு, யோகி அல்லது மேல்நிலை ஆத்மாக்களுக்கு வழங்கப்படும் எந்த வழிபாடும் அல்லது வணக்கமும் இறுதியில் என்னையே வந்து சேர்கிறது. தூய்மையான, கலப்படமில்லாத அன்பை எவருக்கும், எதற்கும் வழங்குவதன் மூலம் நீங்கள் என்னை நேசிப்பீர்கள்.

மேலும், தெய்வீக அதிகாரத்தின் பேரில், நாம் அனைவரும் ஒன்று என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படக் கூறுகிறேன். செல்வந்தர், ஏழை, கற்றவர், கல்லாதவர், உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி எவராக இருந்தாலும், நம்முடைய அன்பான, உன்னதமான கடவுளை நேசிப்பதில் அது ஒரு பொருட்டே இல்லை. கடவுளை எந்த வடிவத்திலும், எந்த வழியிலும் நேசிப்பது உங்களை நிரந்தரமாக விடுதலையாக்கும் என்பதை புரிந்து கொள்ள எனது எல்லா ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு வழங்குகிறேன்.

பாபா மேலும் கூறினார்:

உண்மைப்பொருளாகிய இறைவன் உங்களைத் தம்மை நோக்கி இழுக்கிறார், அதே வேளையில், மாயை உங்களை அதை நோக்கி இழுக்கிறது. உண்மைப்பொருளின் ஈர்ப்பை தளரவிட்டால், நீங்கள் மாயையின் கடலில் மூழ்கிவிடுவீர்கள். நீங்கள் இரண்டையும் நோக்கிச் சாய்ந்தால், நசுக்கப்படுவீர்கள். எனவே அன்பின் மூலம் மாயையின் ஈர்ப்பை உதறித் தள்ளிவிட்டு, உண்மைப்பொருளுடன் ஒன்றிணையுங்கள்.

பிரசாதமாக வாழைப்பழத்தை வழங்கும் முன், பாபா கூட்டத்தினரிடம் கூறினார்: "நான் இப்போது பிரசாதம் வழங்குவேன். எனக்குத் தலைவணங்கவோ, மாலை அணிவிக்கவோ வேண்டாம். நான் அன்புடன் வழங்குவதை அன்புடன் ஏற்றுக்கொள்ளுங்கள்; நீங்கள் விரைந்து

**வருவதானால், இதர அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கும், ஏனெனில் நான் இன்று மாலை ஆறு மணி வரை மட்டுமே இங்கே உங்களுடன் இருப்பேன்.**"

ஏறக்குறைய 6,000 பேர் அப்போது, அங்கே ஒன்று திரண்டிருந்தனர்; மக்கள் வரிசையில் முன்னோக்கி தள்ளப்பட்டனர். ஆனால் பாபா ஆறு மணிக்கு, பிரசாதம் வழங்குவதை நிறுத்திவிட்டு, தனது இருப்பிடத்திற்குப் புறப்படுவதற்கு முன்னர், அவர் சென்ற பிறகு, சேவகர்கள் கூட்டத்திற்கு விநியோகிக்கும் மீதமுள்ள பிரசாதத்தைத் தொட்டு ஆசிர்வதித்தார்.

1954 மார்ச் 4 வியாழன் அன்று, நானா கேர், பங்க்ராஜ், கஜானன் போஃபலி, ஹெலன், கேஷவ் நிகம், புக்கார், ஸ்ரீபத் ஸஹாய், குமார், கயா பிரசாத், பவானி பிரசாத், தர், கஞ்சூ மற்றும் பலர் தத்தமது இடங்களுக்குத் திரும்பிச் செல்ல இருந்ததால், பாபா அவர்களை சந்தித்து, ஒவ்வொருவரையும் தழுவினார்; அவ்வேளையில் கஜானன், ஒருவேளை அனைவரும் மனதில் நினைத்துக்கொண்டிருந்ததை வெளிப்படுத்தினார்: "பாபா, நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்."

"**இப்போது என்ன செய்கிறீர்கள்?**" என்று பாபா கேட்டார்.

"நான் தற்போது வேலை எதுவும் இல்லாமல் இருக்கிறேன்."

"**நானும் வேலையில்லாதவன்**" என்று பாபா கேலி செய்தார். "**அதனால் நீங்கள் இப்போதைக்குப் போய்விடுவது நல்லது. அதை நான் பிறகு பார்க்கிறேன்.**"

இதற்கிடையில், மும்மிடிவரத்தில் அமைந்த பால்யோகி ஆசிரமத்தில் (BALYOGI ASHRAM IN MUMMUDIVARAM) வசிப்பவர்கள் தங்கள் ஆசிகள் அடங்கிய தொலைத்தந்தி ஒன்றை பாபாவிற்கு அனுப்பியிருந்தனர். பாபா அதை மண்டலி, ஆந்திர சேவகர்கள் மற்றும் அன்பர்களிடம் காட்டி, இந்த பதிலை அனுப்பினார்:

**கடவுளின் அன்புக் குழந்தைகளான, உலகில் வாழும் அனைத்து உண்மையான பால்யோகிகளுக்கும் எனது அன்பும் ஆசீர்வாதங்களும்; உண்மையான, மிகவும் மேல்நிலையை எட்டிய யோகிகளால் மட்டுமே எனது உண்மையான நிலையை அறிய முடியும்.**

இதைத் தொடர்ந்து பாபா கூறினார்:

**இப்போது இந்த விஷயத்தில் நான் ஒரு மிக முக்கியமான உரையை வழங்க விரும்புகிறேன், ஏனெனில் இந்தக் கருத்து, புரிந்துகொள்ளப்பட வேண்டிய விதத்தில் ஒருபோதும் புரிந்துகொள்ளப்படவில்லை. நான் உண்மையான யோகிகளின், உண்மையான துறவிகளின் அடிமை, ஆனால் ஆன்மீகப் பாதையில் 'மின்னுவது எல்லாம் பொன்னல்ல!' என்ற பழமொழி, இப்பொழுதை விட, எப்பொழுதும் பொருத்தமானதாக இருந்ததில்லை.**

**இப்போது நான் தந்திரம் மற்றும் பிற வகையான யோகாக்களைப் பற்றி விளக்குகிறேன். முழு மனதுடன் கற்றறிந்து, பயிற்சியில் ஈடுபடும் போது, அவை (மாய மந்திர) சக்திகளையும், மெய்மறந்த நிலையையும் ஏற்படுத்துகின்றன. யோக சமாதி, நிர்விகல்ப சமாதியிலிருந்து முற்றிலும்**

வேறுபட்டது, ஸூஃபிக்கள் இதை 'ஃபனா'வின் (FANA) இரண்டாவது நிலை என்று அழைக்கிறார்கள்.

யோக சமாதியை, ஸூஃபிக்கள் 'ஹால்' (HAAL) என்று அழைக்கின்றனர். இந்த சமாதி நிலை முடிந்தவரை பல முறை உடைக்கப்படலாம் அல்லது பல ஆண்டுகளுக்கு அதே நிலையை தக்கவைக்கலாம். இந்த யோகிகளுக்கு உணவு, நீர், தூக்கம் போன்றவற்றின் தேவையே இல்லை. அவர்கள் மெய்மறந்த நிலையில் உள்ளனர், ஆனால் 'ஹால்' நிலையிலிருந்து கீழே வரும் வேளையில், அவர்கள் சமாதி உணர்வை இழந்து, சாதாரண உலக உணர்வு நிலையை மீண்டும் அடையப் பெறுகிறார்கள். பல ஆண்டுகளாக உணவு, நீர் எதுவும் இல்லாமல் இருந்தபோதிலும், அவர்களுக்கு உணவு, நீர், தூக்கம் அனைத்தும் சாதாரண உணர்வு நிலையை அடைந்த பிறகுதான் தேவைப்படுகிறது. அவர்களின் சமாதி, போதை போன்றது, அதை இழந்த அடுத்த கணமே, சாதாரண மக்களைப் போல் உண்ணவும், அருந்தவும் விரும்புகிறார்கள். கடந்த 600 ஆண்டுகளாக தங்களின் யோக சமாதியிலிருந்து சாதாரண சுயநினைவுக்கு வராத மூன்று யோகிகள் இருக்கின்றனர், இன்னும் அவர்கள் என்னை அறியவில்லை! அவர்களின் கண் இமைகள் மற்றும் புருவங்கள் மிக மிக நீளமாக வளர்ந்து மிகவும் மெல்லியதாகிவிட்டன.

நிர்விகல்ப சமாதி (ஃபனா, FANA), யோக சமாதியிலிருந்து (ஹால், HAAL) முற்றிலும் வேறுபட்டது. இது ஃபனா; அதாவது 'தெய்வமாதல்' - கடவுளாக மாறுவது. இப்போது தெய்வீகத்தை விளக்குவதற்கு முன்பு, 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்பதற்கு உதாரணம் ஒன்றை வழங்க விரும்புகிறேன். மெஹராபாத்தில் எனக்கு ஒரு 'மனநிலை இழந்தவர்'களின் ஆசிரமம் (மஸ்த் ஆசிரமம் அல்ல) இருந்தது, அனைவரிலும் அதி பைத்தியம் பிடித்தவர் 'ஃபக்கிர் புவா' (FAKIR BUA) என்ற பெயரில் ஒருவர். இளம் வயதில், அவர் தலையில் அடிக்கப்பட்டபோது, அது ஓர் ஆழமான வடுவை ஏற்படுத்தியதோடு, அவரது மூளையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் பைத்தியம் ஆனார். நான் மெஹராபாத்தில் இருந்த மஸ்த் ஆசிரமத்தை மூடிவிட்டு, எல்லா மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் அவரவர் இடங்களுக்கு திருப்பி அனுப்பியபோது, ஃபக்கிர் புவா பூனாவிற்கு அனுப்பப்பட்டார்.

மெஹராபாத் மஸ்த் ஆசிரமத்தில் பணிபுரியும் போரி (BOHRI, முஸ்லீம்) ஒருவர், பாபா தனது ஆன்மீகப் பொறுப்பை ஃபக்கிர் புவாவிடம் ஒப்படைத்து விட்டதாக, பூனாவில் ஒரு வதந்தியைப் பரப்பினார்! இன்றுவரை இந்தப் பைத்தியக்காரர் ஜகத் குருவாகப் (பிரபஞ்சத்தின் அதிபதி) போற்றப்படுகிறார். அவரை ஒரு மெல்லிய மெத்தையின் மீது அமரச் செய்து, மக்கள் தரிசனம் செய்கிறார்கள். மார்வாரிகள் அங்குச் சென்று, அவருக்குப் பணம் செலவு செய்து, அவரைத் தங்கள் கார்களில் அழைத்துச் செல்கிறார்கள்; ஆனால் ஃபக்கிர் புவா முற்றிலும் பைத்தியம்! அவர் ஒரு சாதாரண மனிதனைப் போல

பேசுவதில்லை, அவருடைய ஒவ்வொரு சைகையும், அசைவும் தெய்வீக அம்சம் நிறைந்ததாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும் கண்காட்சியில், அவர் ஒரு மஜ்ஜூப் (MAJZOOB, இறை உணர்வை அடைந்த ஆத்மா) என்று கருதப்படுகிறார்.

பால்யோகிகளைக் குறித்து பாபா பின்வருமாறு கூறினார்:

இந்த பால்யோகிகள் உண்மையானவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை. இவ்வளவு சிறிய வயதில், இந்த ஹரிஜன (தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த) சிறுவர்கள் பால்யோகிகள் என்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. எனது ஒரே கவலை என்னவெனில், இந்த அன்பான பால்யோகிகள், மேலோட்டமான விஷயங்களில் சிக்கி, சுரண்டப்படக்கூடாது என்பதுதான், ஏனெனில் இப்போது மேற்கத்திய நாடுகளில், பல்வேறு சாதனைகளை உடைப்பதைப் போலவே, மக்கள் நோன்பு, யோகாசனங்கள் போன்ற சாதனைகளை முறியடிக்கத் தொடங்கியுள்ளனர். ஒரு மேற்கத்தியர் 45 நாட்கள் உணவு, நீர், காற்று எதுவும் இல்லாமல் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டார் என்ற செய்தி பரவலாக வெளிவந்தது. இந்த சாதனையை, மற்றுமொரு மனிதர் 60 நாட்கள், ஒரு பாட்டில் வடிவ கண்ணாடி பெட்டியில் காற்று, நீர், உணவு எதுவுமின்றி அமர்ந்து முறியடித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இந்த (ஆந்திரா ஆசிரமத்தின்) பால்யோகிகள் உண்மையானவர்கள் போல தெரிகிறது; உண்மையாக இருந்தால், கடவுளின் உண்மையான அன்பான அனைவருக்கும் நான் தலைவணங்குகிறேன். நான் எனது அன்பர்களின் அடிமை. எனவே நேர்மையாக இருங்கள், 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்பதை நினைவில் கொண்டு வழிதவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சில யோகிகள் மற்றும் குருக்கள் என்று அழைக்கப்படுபவர்கள், தங்கள் ஆசிகளைக் கடிதங்கள் மூலம் எனக்கும் அனுப்புகிறார்கள்.

இப்போது 'தெய்வமாக மாறும் செயல்முறை' பற்றி: இது கடவுள் மனிதனாக (அவதார புருஷராக) மாறுவதைப் பற்றியது அல்ல, ஆனால் மனிதன் கடவுளாக (சத்குரு, குதுப்) மாறுவதைப் பற்றியது. நான்கு பயணங்கள் ஆன்மீகப் பாதையை உள்ளடக்கும். முதலாவது, ஞானத்துடன் (GNOSIS, இறை ஞானம்) தொடங்குகிறது, மேலும் யாத்ரீகர் அனைத்து ஆன்மீகத் தளங்களையும் கடந்த பின்னர், இந்த முதல் பயணம் 'ஃபனா'வில் (FANA) முடிவடைகிறது, அதாவது முதல் பயணத்தின் முடிவு. ஃபனாவின் இந்த இரண்டாவது நிலை 'தெய்வமாக மாறும் செயல்முறை' (DEIFICATION) ஆகும். மனிதன் இப்போது கடவுளாகி, கடவுளின் அறிவையும், கடவுளின் சக்தியையும், கடவுளின் பேரின்பத்தையும் அனுபவிக்கிறான், ஆனால் இன்னும் அது கடவுளின் பரிபூரண நிலையை அடையவில்லை, ஆனால் அதுதான் குறிக்கோள். மனிதன் கடவுளுக்குள் 'நுழைந்தான்' ஆனால் அவன் 'கடவுள் வாழ்வில்' இன்னும் நுழையவில்லை! மிக மிகச் சிலரே இந்த எல்லையற்ற பேரின்பத்தை விட்டுவிட்டு இரண்டாவது பயணத்தில் நுழைய

முடியும், அது 'பக்கா'வில் (BAQA) முடிவடைகிறது (அதாவது கடவுளின் வாழ்க்கையில் நிலைத்திருப்பது), ஆனால் இன்னும் அவரது வாழ்க்கையை வாழவில்லை.

'ஃபனா' (FANA) என்றால் கடவுளாக மாறுதல்; 'பக்கா' (BAQA) என்றால் கடவுளின் வாழ்வில் நிலைத்திருப்பது என்று பொருள். 'ஃபனா'வில், ஒருவர் மஜ்ஜூப் (MAJZOOB) ஆக, 'பிரம்மி-பூத்' (BRAHMI-BHOOT) ஆகிறார், அதாவது ஒருவர் தெய்வீகத்தில் மூழ்குகிறார்.

முதல் பயணத்தின் முடிவில் (ஃபனா), யாத்ரீகர் இறை உணர்வை மட்டுமே அடைகிறார்; அதாவது, 'நான் கடவுள்' நிலையை மட்டுமே உணர்ந்து கொள்கிறார். இரண்டாம் பயணத்தில் (பக்கா) ஒரு சாதாரண உலக உணர்வை (அதாவது, பௌதீக, சூட்சும, ஆழ் மன உணர்வை) அடைகிறார். அவர் ஒரு 'ஜீவன்முக்தா' (JIVANMUKTA) அல்லது ஸூஃபிகள் கூறுவது போல 'ஸலிக்' (SALIK) என்று அழைக்கப்படுகிறார். அவர் இப்போது கடவுளாகவும் மனிதராகவும் இருக்கிறார். அவர் தனது தெய்வீகத்தை தங்குதடையின்றி தொடர்ந்து உணர்வுபூர்வமாக அனுபவிக்கும் அதே வேளையில் அவரது மனித தன்மையையும் அனுபவிக்கிறார். ஆனால் இன்னும் அவர் கடவுளின் வாழ்க்கையை வாழவில்லை. அவர் தொடர்ந்து அனுபவிக்கும் எல்லையற்ற அறிவு, சக்தி மற்றும் எல்லையற்ற ஆனந்தத்தை, பிறரின் பாவ விமோசனத்திற்காக பயன்படுத்த முடியாது.

மூன்றாவது பயணம் என்பது மிக மிக அரிதான நபர்களுக்கானது, இது சத்குருவின் ராஜாங்கமான குதுப் நிலையைப் பின்புலமாகக் கொண்டு முடிகிறது. இங்கே இறை உணர்வை அடைந்தவர், இப்போது கடவுளின் வாழ்க்கையை வாழ்கிறார். அவர், தொடர்ந்து அனுபவிக்கும் தமது எல்லையற்ற அறிவு, சக்தி, ஆனந்தம் அனைத்தையும் பயன்படுத்துகிறார். அவர் ஒன்றே உருவான ஏக இறைவனை, பலவற்றிற்குள் 'இறங்கச் செய்தார்'. அவர் 'சுதந்திரமான உண்மைப்பொருளை' மாயைக்குள் கொண்டு வந்துள்ளார்.

நான்காவது பயணம், சத்குரு (குதுப்) தனது பௌதீக உடலைக் கைவிடுவதில் முடிவடைகிறது; இருந்தும், இன்னும் அவர் நித்தியமாக உணர்வுப்பூர்வமாகவும், தனித்துவம் மிக்கவராகவும் கடவுளாகவே இருக்கிறார்.

மேலும் விளக்கிக் கூறுகையில், பாபா தொடர்ந்தார்:

இன்னும் ஒரு விஷயம். அவதார புருஷர் (ரஸூல், நபி) மற்றும் சத்குரு (குதுப், பரிபூரண குருநாதர்) இவர்களிடையே உள்ள வேறுபாடு என்னவெனில், சத்குரு, பரிணாமம், மறுபிறவி, உட்சுழற்சி ஆகியவற்றின் முழு செயல்முறையையும் கடந்து, கடவுளின் வாழ்க்கையில் 'நுழைந்து' வாழ்கிறார், அதே வேளையில் அவதார புருஷர், பரிணாம வளர்ச்சியின் வழியே செல்ல வேண்டிய தேவையில்லை. அவர் நேரடியாக மனிதனாக மாறுகிறார்.

கடவுளின் வாழ்க்கையை வாழ்வதில், சத்குரு, அவதார புருஷர் இருவரும் சமமானவர்கள். இருவரும் கடவுளின் வாழ்க்கையை வழிநடத்துகிறார்கள், அதே நேரத்தில், இருவரும் மாயையில் வாழ்க்கையின் ஒவ்வொரு மட்டத்திலும் நிலைகொண்டுள்ளனர். ஒரே நேரத்தில், அவர்கள் மிக மிகக் குறைந்த நிலையிலிருந்து அனைத்திலும் உயர்ந்த நிலை வரை உள்ளனர். மிகவும் முக்கியமான வேறுபாடு என்னவெனில், சத்குரு, அந்த நிலையில் அவரது அங்கத்தை வகிக்கிறார் (அதாவது அவரது பாகத்தை நடிக்கிறார்), ஆனால் அவதார புருஷர் அவராக, அங்கத்துள் அங்கமாக மாறுகிறார். கடவுளாக இருக்கும் குதுப் அல்லது சத்குரு, அவர் அந்த நிலைக்கு வந்து, கடவுளிடம் ஒப்புதல் வாக்குமூலம் வழங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம்; அதாவது, கடவுளே (சத்குருவின் மனித வடிவில்) கடவுளிடம் வாக்குமூலம் வழங்குகிறார் என்று அர்த்தம். ஆனால் அவ்வாறு நடிக்கும் போது, அவர் கடவுளை உணர்ந்த நிலையிலேயே இருக்கிறார். அவதார புருஷர் உண்மையில், அந்த நேரத்தில் அவரே வாக்குமூலமாக மாறுகிறார், மேலும் ஒரு சாதாரண வாக்குமூலமாக மாறும் வேளையில், அவர் இன்னும் கடவுளின் உணர்வு நிலையை அனுபவிக்கிறார். அவதார புருஷர், சத்குரு இருவரும் ஒரே நேரத்தில் கடவுளின் (தெய்வீக) உணர்வைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

அதற்குப் பிறகு, பாபா, அவதார புருஷர் ஒன்றோடு ஒன்றாக மாறுவதற்கும், சத்குரு பல்வேறு நிலைகளில் அங்கம் வகிப்பதற்கும் (நடிப்பதற்கும்) மற்றுமோர் உதாரணத்தை எடுத்துரைத்தார்:

மேற்கூறிய கருத்தைத் தெளிவு படுத்த, எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை மேற்கோள் காட்டலாம். உதாரணமாக, ஒரு சத்குரு நோய்வாய்ப்படமாட்டார், நோய்வாய்பட முடியாது. அவர் நோய்வாய்ப்பட்டவராகத் தோன்றும்போது, அவர் உண்மையில் நடிக்கிறார். இருப்பினும், அவதார புருஷர் நோய்வாய்ப்பட்டிருப்பதை மக்கள் பார்க்கும்போது, அவர் உண்மையில் நோயால் தாக்கப்பட்டிருந்தாலும், அவருக்குப் பின்னால் எல்லையற்ற அறிவு, சக்தி, பேரின்பம் ஆகியவற்றைக் கொண்டுள்ளார். ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திலும், சத்குரு, அந்த ஆன்மீகத் தளத்தின் ஆத்மாவைப் போலவே செயல்படுகிறார். ஆனால் அவதார புருஷர் ஆன்மீகத் தளத்தின் ஆத்மாவாக மாறுவதால், உலகளாவிய உந்துதலை வழங்க முடியும்.

கடவுள் எல்லாவற்றிலும் எல்லோரிலும் இருக்கிறார். அவதார புருஷர் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் இருப்பது மட்டுமின்றி, அவர் எல்லாமாகவும் எல்லோராகவும் மாறுகிறார். எனவே, அவதார புருஷருக்கும் சத்குருவிற்கும் இடையேயான அடிப்படை வேறுபாடு என்னவெனில், ஒவ்வொரு நிலையிலும், எல்லா ஆன்மீகத் தளங்களிலும் சத்குரு செயல்படுகிறார் (அதாவது, செய்வது போல நடிக்கிறார்), அதே சமயம் அவதார புருஷர் அதுவாக மாறுகிறார்.

நாராயண ராவ், “அவதார புருஷருடன் எவ்வாறு தொடர்பைத் தொடர்ந்து தக்கவைப்பது?” என வினவினார்.

பாபா இவ்வாறு தெளிவுபடுத்தினார்:

**இப்போது பாபா உடலளவில் நம்மிடையே இருப்பதால், நாம் தொடர்பை உணர்கிறோம் என்று அர்த்தம். ஆனால் பாபா நம்மை விட்டுப் பிரியும் போது, இந்தத் தொடர்பு படிப்படியாகக் குறைந்துவிடுகிறது. ஆனால், அதை எப்படித் தொடர்ந்து தக்கவைப்பது? நான் விளக்குகிறேன்.**

**நீங்கள் தொடர்ந்து பசியாக உணர்கிறீர்களா? இல்லை; பசிக்கும் வேளையில் உணவை உண்டு, பின்னர் அதை மறந்து விடுவீர்கள். கடினமாக உழைக்கும்போது அபார பசி எடுக்கும். எனவே நீங்கள் எனக்காகப் பசியுடன் இருக்கும் வகையில் எனக்காகப் பணிபுரியுங்கள் - சில சமயங்களில் என்னை சிந்தனை செய்யுங்கள், சில நேரங்களில் எனக்காகப் பணிபுரியுங்கள், சில சமயங்களில் என்னைப் பற்றி பேசுங்கள், ஆனால் தொடர்ந்து அல்ல. தொடர்ந்து உண்டு வந்தால் அஜீரணம் ஏற்படும்!**

**தூங்கச் செல்வதற்கு முன்பு, “பாபா, எனது எண்ணங்கள், பேசும் வார்த்தைகள், நல்ல, தீய செயல்கள் அனைத்தையும் உங்களிடம் ஒப்படைக்கிறேன்” என்று சொல்லுங்கள்.**

**நீங்கள் எழுந்தவுடன், “பாபா, நான் இப்போது அனைத்தையும் உங்களிடம் ஒப்படைக்கத் தொடங்குகிறேன்” என்று கூறுங்கள். இது எனக்கு, போதுமானதை விட அதிகமாக இருக்கும்.**

**ஒரு நாளைக்கு இரண்டு முறை, ஐந்து நிமிடங்களுக்கு மட்டும் இதைச் சொல்லுங்கள். இதைச் செய்து, நீங்கள் நினைப்பது, பேசுவது மற்றும் செய்வது அனைத்திற்கும் முழு மனதுடன் என்னைப் பொறுப்பாக்குங்கள், ஆனால் முழு மனதுடன். அதற்குப் பிறகு நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள். எதுவும் உங்களைப் பிணைக்க முடியாது. ஆனால், நீங்கள் அதை நேர்மையாகச் செய்ய வேண்டும்.**

**நான் இறைப்பெருங்கடல். நறுமணமுள்ள பூக்கள், தேங்காய்கள், அதே வேளையில் குப்பைக்கூளங்களையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியும்; எனவே முழு மனதுடன் அனைத்தையும் கடலில் வீசி எறியுங்கள். இது ஒரு பெரிய விஷயம், ஆனால், முழு மனதுடன் செய்யப்பட வேண்டும்; இல்லையேல், அது ஒரு சிறிய தண்ணீர் குளத்தில் செல்லும் தருவாயில், உங்கள் சொந்த அழுக்கு காரணமாக, அந்தக் குளத்தையும் அசுத்தப்படுத்துகிறது.**

காக்கிநாடாவைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் பாபாவிற்கு விரோதமாக இருந்தார், மேலும் மெஹர் பாபாவின் அவதார ஆளுமையில் அவருக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, மறுப்புத் தெரிவித்தாலும், ஒட்டுமொத்த பத்திரிகைகளும் மெஹர் பாபாவை அவதார புருஷராகப் போற்றிப் புகழ்ந்தன.

ஆனால், பாபாவை நேரடியாக சந்தித்த வேளையில் அவருடைய அணுகுமுறை மாறி, “உங்களைப் பற்றி ஏதாவது எழுதட்டுமா பாபா?” என்று கேட்டார்.

**‘என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதை எழுதுங்கள்**’ என்று பாபா கூறினார்.

அவமானமாக உணர்ந்தார் அந்த வழக்கறிஞர். பாபாவின் சர்வஞானம் என்ற அம்பு சரியாகப் பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தது. அதற்குப் பிறகு, பாபாவின் பணிகளில் அந்த வழக்கறிஞர் தன்னை அர்ப்பணித்தார்.

பாபா அவரது ஆந்திர சேவகர்கள், அன்பர்கள் அனைவரையும் அரவணைத்தார். காக்கிநாடாவில் நிகழ்ச்சிகளை நிறைவு செய்து, பாபா, மண்டலியுடன், மார்ச் 4ஆம் நாள் காலை 11:00 மணிக்கு, ஸாமல்கோட் (SAMALKOT) ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ மற்றும் ‘நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா!’ என்ற முழக்கங்கள் எங்கும் ஒலித்தன. இறை-தோழர் ஆந்திராவில் ஏராளமான தெய்வீக மதுபானத்தை விநியோகித்தார், ஒவ்வொரு துகள்களும் அதில் நனைந்தன. ஏழை, செல்வந்தர், கற்றவர், கல்லாதவர், வங்கி உரிமையாளர் மற்றும் அங்குப் பணிபுரியும் சேவகர், மந்திரி மற்றும் ஊழியர், இந்து, முஸ்லீம் என அனைவரின் இதயங்களிலும் பாபா தனக்கென இடத்தை அமைத்துக்கொண்டார். இக்காலகட்டத்தின் அவதார புருஷருக்கு ஆந்திரா மாவட்டம் அளித்த வரவேற்பு, வரலாற்றில் என்றென்றும் பொறிக்கப்படும்.

இந்தக் காட்சியைக் கண்டு களித்தவர்களுக்கு, மெஹர் பாபாவின் எல்லையில்லா அன்பு, எப்படி மனித குலத்தை நோக்கிப் பாய்ந்தது என்பதை விவரிப்பது அனைத்திலும் கடினம். அந்தக் காட்சிகளின் நினைவிலேயே ஒருவரின் இதயம் நிரம்பி வழிகிறது. ஆனால் தெய்வீக மதுபானத்தின் லீலையைப் பார்க்க விரும்புபவர்கள், ஆந்திரா அல்லது ஹமிர்பூருக்குச் செல்ல வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லலாம் - ஏனெனில் அது அங்கு முழு சக்தியுடன் வெளிப்படுகிறது.

“முழுப் பிரபஞ்சமும் அவதார புருஷருக்கே சொந்தம், ஆனால், குறிப்பாக ஆந்திராவும் ஹமிர்பூரும் அவரது சிறப்பு இடங்கள், அங்கு ஒவ்வோர் அணுவும் அவரது அன்பின் மதுவால் நறுமணம் வீசுகிறது. இரண்டு இடங்களிலும் என்ன தெய்வீக போதை, என்ன ஒரு திகைப்பூட்டும் பரவசம்! அங்குள்ள ஒவ்வொரு துகளும் அன்பிற்குரியவரால் புனிதப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கல்லின் சுவாசத்தையும், இதயத்தின் துடிப்பையும் கேட்பவருக்கு, எதுவும் சாத்தியமற்றது அல்ல! இந்த யுகத்தில் அவதார புருஷர் தமது தெய்வீக அருளைப் பொழிவதற்காக ஆந்திரா மற்றும் ஹமிர்பூரைத் தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது.”

பாபாவும், மண்டலியும் ஸாமல்கோட் ரயில் நிலையத்திற்கு வந்தபோது, நடைமேடை முழுவதும் அன்பர்கள் மற்றும் பக்தர்களால் நிரம்பி வழிந்தது. பெரும்பாலான கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது; பெருமளவிலான

வெளிப்பாடுகள் கவலை தோய்ந்து காணப்பட்டன. சிலர் தொலைந்து போய், விரக்தியடைந்த உணர்வில் தலை வணங்கினர். ரயிலின் விசில் சத்தம் கேட்கவே, பாபா தனது பெட்டியின் வாசலில் நின்று கை அசைத்தார். 'ஜெய் அவதார் மெஹர் பாபா!' என்ற முழக்கங்களுக்கு மத்தியில் ரயில் நகரத் தொடங்கியது. முழு ஆந்திராவும் சோகத்தில் மூழ்கியது

அந்தக் கண்ணீர் எவ்வளவு விலை உயர்ந்தது, எவ்வளவு விலைமதிப்பற்றது! அது இதயத்தின் உதிரத்திலிருந்து வழிந்த தெய்வீக மதுபானத்தைக் கொண்டிருந்தது. ஆனால், இந்தக் கண்ணீர் ஒரு நாள் அனலாகப் பரவி, ஆந்திராவின் வளிமண்டலத்தை எரித்து சாம்பலாக்கும் என்று காலத்திற்குத் தெரியும்!

வழி நெடுகிலும், ஒவ்வொரு ரயில் நிலைய நடைமேடையிலும் அன்பர்கள் மற்றும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. எல்லா திசைகளிலும் பாபாவின் ஜெய் கோஷங்கள் முழங்கின. பலவிதமான உணவு வகைகள், குளிர் பானங்கள், சிகரெட் மற்றும் கூடை கூடைகளாக பொருட்கள் பாபாவின் ரயில் பெட்டிக்குள் திணிக்கப்பட்டன. ராஜமுந்திரி, கொவ்வூர், தாடேபள்ளிகுடம், ஏலூரு, விஜயவாடா போன்ற ரயில் நிலையங்களில் மக்கள் 'இறை' பித்தர்களைப் போல காணப்பட்டனர்! மனித வடிவில் தெய்வீக அன்பானவரின் ஒரே ஒரு கடைசி பார்வையைத் தவிர வேறு எதையும் அவர்கள் விரும்பவில்லை. எல்லா ரயில் நிலையங்களிலும், வாசலில் நின்றுகொண்டு, பாபா மக்களை நோக்கி அன்புடன் கை அசைத்தார், அவருடைய ஆசீர்வாதம் ஆந்திரா மக்களின் மீது எப்போதும் இருக்கும் என்பதைக் குறிக்கிறது.

விஜயவாடா ரயில் நிலையம் வரை மக்கள் திரள்திரளாக நின்றனர், ஆனால் அதற்குப் பின்னர் இதர ரயில் நிலையங்களில் பாபாவை பார்க்க தனி நபர்கள் மட்டுமே வந்தனர். ஃபிரான்சிஸ் பிராபஸோன், இதுவரை தான் கண்டிராத மக்கள் கடலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தார்; மேலும், அது அவரையும் இறை போதையில் ஆழ்த்தியது. ரயிலில், பாபா, ஃபிரான்சிஸை ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார், மேலும் நிகழ்ச்சிகளின் போது அவருடன் உரையாட நேரம் இல்லாததால், அவருக்கு வேறு சில அறிவுரைகளை வழங்கினார்.

மண்டலி முற்றிலும் சோர்ந்து போயிருந்தனர். பாபாவுடன் பயணம் செய்யும் வேளையில், ஓய்வு என்ற கேள்விக்கு வாய்ப்பே இல்லை. மேலும், அவரது அறிவுறுத்தலின்படி, அவரது தனியுரிமையை உறுதிப்படுத்தவும், அவரது பெட்டிக்குள் வேறு எவரும் நுழைவதைத் தடுக்கவும், பாவ் கல்சூரி ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் கதவுக்கு முன்னால் நிற்க வேண்டியிருந்தது; ரயில் நகரத் தொடங்கியதும், அவர் திரும்பிச் சென்று, தனது பெட்டியில் ஏறுவதை வழக்கமாகக் கொண்டார். எரச், பெண்டு இருவரும் குறிப்பாக முற்றிலும் சோர்வடைந்த நிலையில் இருந்தனர்; எரச், பாபாவின் அருகில் நின்று, அவருடைய எழுத்துப்பலகையை வாசிக்க வேண்டியிருந்தது, மேலும் பெண்டு பயண ஏற்பாடுகள் மற்றும் பிற விஷயங்களை கவனிக்க வேண்டியிருந்தது.

1954 மார்ச் 6 சனிக்கிழமை காலை, பாபாவும் மண்டலியும் பூனா வந்தடைந்தனர். பாபாவை ஆதி சீனியர் பிந்த்ரா மாளிகைக்கும், அங்கிருந்து மஹாபலேஷ்வருக்கும் அழைத்துச் சென்றார். மெஹர்ஜி, நரிமன், ஃபிரான்சிஸ் ஆகியோர் மும்பைக்கும், யஷ்வந்த் ராவ், கிருஷ்ணாஜி இருவரும் ஸாக்கோரி, ஆதி சீனியர், சகன், டாக்கே ஆகியோர் அஹமதுநகர், சிது, ஸவக் கொத்வால் மெஹராபாத், மற்றும் ஜால்பாய், சதாஷிவ் பாட்டீல் பூனாவில் தத்தமது இல்லங்களுக்கும் சென்றனர். அலோபா, பாவ் கல்சூரி, எரச், குஸ்தாஜி, கிஷன் ஸிங், கிருஷ்ணா, ஷஹஸ்த்ரபுத்தே ஆகியோர் மஹாபலேஷ்வருக்கும் புறப்பட்டுச் சென்று, அதே நாளில் வந்தடைந்தனர்.

மஹாபலேஷ்வரில், ஆகா கான் பங்களாவின் (AGA KHAN BANGALOW) வெளிப்புற குடிசைகளில் ஆண் மண்டலியும், பிரதான வீட்டில் பெண்மணிகளுடன் பாபாவும் தங்கினர். பாபா தனது ஆந்திரா பயணத்தை பெண் மண்டலிக்கும், பாபா இல்லாத நேரத்தில் உடன் காவலர்களாக இருந்த டாக்டர் டான், டாக்டர் நீலு, கைக்கோபாத் ஆகியோருக்கும் விவரித்தார்.

கிஷன் ஸிங் மார்ச் இறுதி வரை மண்டலியுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டார், அதுவரை ஆண் மண்டலி அவருடனான தோழமையை மகிழ்ச்சியுடன் அனுபவித்தனர்.



மஹாபலேஷ்வர், **1954** (MAHABALESHWAR**,** 1954)




மஹாபலேஷ்வர் (MAHABALESHWAR) - பூனா (POONA)-
அஹமதுநகர் (AHMEDNAGAR) - ராஹுரி (RAHURI)-
ஸாக்கோரி (SAKORI) - நாசிக் (NASIK)

# மூன்று வியத்தகு வாரங்கள் - ஸாக்கோரி, 'வாடியா பார்க்' தரிசனம், மெஹராபாத்

**(Three Incredible Weeks, Sakori, Wadia Park Dharshan, Meherabad)**

மெஹர் பாபா கூறியதற்கு இணங்க, மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்ததும், 1954 மே இறுதி வரை, 'எந்த விஷயம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும்' அனைத்து கடிதப் பரிமாற்றங்களையும் அவர் நிறுத்தினார்.

இதற்கிடையில், பாபா டெஹ்ரா டூனிலிருந்து, பிஞ்சிலே முதிர்ந்த, மூர்க்கத்தனமான, துப்புரவு தொழிலாளியின் மகன் ஈஸாவை அழைத்தார். பாபா அவரை ஓர் இளவரசரைப் போல நடத்த வேண்டும் என்று கட்டளையிட்டதற்கு இணங்க, பாவ் கல்சூரி, கிருஷ்ணா இருவரும் கையாளர்களாகப் பணியாற்றினர். அவர்கள் ஈஸாவின் உணவைக் கொண்டுவந்து மேசையில் வைப்பது, அவனுடைய தட்டுகளை சுத்தம் செய்வது, படுக்கையைத் தயார் செய்வது போன்றவற்றை செய்வதோடு, பொதுவாக அவனுடைய கோரிக்கைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும். '**ஈஸாவை மகிழ்வித்து, அவனை பூவைப் போல மென்மையாக நடத்த வேண்டும்**' என்பது பாபாவின் கட்டளை.

மண்டலி தங்கள் உணவுக்காக, ஒவ்வொரு நாளும் ஷஹஸ்த்ரபுத்தேயின் உணவகத்திற்கு, களைப்புடன் நடந்து செல்ல வேண்டியிருந்தது; இதனால், எப்பொழுதும் குழப்பம் நிலவியது, ஏனெனில் முதலில் ஈஸாவிற்கு உணவளிக்காமல் பாவ் வெளியேற முடியாது. பெண் மண்டலியின் சமையலறையிலிருந்து சிறுவனுக்கு உணவு கொண்டு வரப்பட்டது. ஆனால் அது அவனுக்கு முன்னால் மேஜையில் வைக்கப்பட்டபோது, ஈஸா ஆர்வமற்றவனாகத் தோன்றும் நிலையில், அதை விரைவாக உண்பதில்லை. ஒருமுறை பாவ், அவனிடம், "ஈஸா, தயவுசெய்து உங்கள் உணவை உண்ணுங்கள். நான் இதர மண்டலியுடன் ஹோட்டலுக்கு வெகுதூரம் சென்று உணவருந்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஈஸா, "நீங்கள் பாபாவிடம் வந்திருப்பது உண்பதற்காகவா அல்லது கீழ்ப்படிவதற்காகவா?" என்று கடுமையாகக் கேட்டான்.

பாவ் கல்சூரியிடம் இந்தக் கேள்விக்கு பதில் இல்லை. ஈஸா சொன்னது உண்மை. பதின்ம வயது சிறுவன், குறிப்பாக சில ஆண்களுக்கு, சகிப்புத்தன்மையில் இத்தகைய பாடங்களை வழங்குவதற்காகவே அழைத்து வரப்பட்டான்.

ஒரு நாள் பாவ் அவனிடம், "ஈஸா, உங்களுக்கு ஏதேனும் வேலை கிடைத்ததா, இல்லையா?" என வினவினார்.

“உங்களுக்கும் வேலைக்கும் என்ன சம்பந்தம்?” அவன் வெடுக்கென கேட்டான். “என்னை துப்புரவு தொழிலாளி என்று தவறாக நினைக்காதீர்கள். நான் உங்களையும் உங்கள் மூதாதையர்களையும் வேலைக்கு அமர்த்த முடியும்! இதை நினைவில் கொள்ளுங்கள்: உங்கள் நாடித்துடிப்பு எனது கைகளில் உள்ளது! நான் பாபாவிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும், நீங்கள் எங்கும் இருக்க மாட்டீர்கள்!”

எனவே, ஈஸாவுடன் பழகும் போது, ஒருவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பாபா அவனுக்கு அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்து, சிறந்த ஆடைகள் முதல் அவன் விரும்பிய அனைத்தையும் வழங்கி, அவனை மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய எதையும் செய்தார்.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர், 1954 மார்ச் 19 வெள்ளிக்கிழமை அன்று, மெஹரா, மணி, மெஹரு ஆகியோருடன், பாபா, நரிமனின் காரில் மஹாபலேஷ்வரிலிருந்து புறப்பட்டார். எரச், ரானோ, கோஹெர், நாஜா ஆகியோர் ஆதி சீனியருடன் அவரது காரில் சென்றனர். யஷ்வந்த் ராவ் புதிதாகக் கட்டி எழுப்பிய இல்லத்தின் திறப்பு விழாவுக்காக, பாபா, ஸாக்கோரிக்குச் சென்று கொண்டிருந்தார். பூனா, பிந்த்ரா ஹவுஸில் சிறிது நேரம் நின்று, பின்னர் ஆதி சீனியர், மெஹர்ஜி, நரிமன், எரச் ஆகியோருடன் பாபா அஹமதுநகருக்குப் பயணம் செய்தார். அவர் திரும்பி வரும் வரை பெண்மணிகள் பிந்த்ரா ஹவுஸில் தங்கினர்.

ஆதியின் காரில் பயணித்த பாபா, அன்று மதியம் இரண்டு மணிக்கு அஹமதுநகரைச் சென்றடைந்து, விலூ வில்லாவில் மதிய உணவை உண்டு, குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதியின் அலுவலகத்திற்குச் சென்று, குல்மாயை சந்தித்தார்; மேலும் ஸவக் தமானியா, ருஸ்தம் காக்கா, அவரது குடும்பத்தினர், பிரோஜா, டாக்கே, தாடே குடும்பத்தினர், காக்கா சிஞ்சோர்கர், ரங்கோலே, வாமன், ஃபெராம், தத்து, பகீரத், கோகிலா, சகன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரையும் சந்தித்தார். அதைத் தொடர்ந்து பாபா, மெஹராபாத் புறப்பட்டுச் சென்று, வழியில் அக்பர் அச்சகத்தில் அரை மணி நேரம் நின்றார்.

மெஹராபாத்தில் அவர் கைக்கோபாத்தின் குடும்பத்தினர், மன்ஸாரி, பாதிரி, சிது, காளேமாமா, பாலா தம்பத், ஜமதார், ஸவக் கொத்வால், ஜங்க்ளே மாஸ்டர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை சந்தித்தார். முஹமது, அலி ஷா இருவரும் மெஹராபாத்தில் தங்க வைக்கப்பட்டனர், பாபா அவர்களைப் பார்த்ததும், முஹமது, பாபாவின் கையைப் பற்றிக் கொண்டு அவரை விட்டபாடில்லை. இறுதியில், பாபாவை வெளியே செல்ல அனுமதிக்குமாறு முஹமது வற்புறுத்தப்பட்டார். பாபா, இரவு உணவிற்காக ஸரோஷின் வில்லாவிற்குச் சென்று, பின்னர் அவர் மெஹராஸாத்தில் இரவைக் கழித்தார்.

காக்கா பாரியா மெஹராஸாத்தில் தனியாக வாழ்ந்து வந்தார், ஆனால் அவர், பாபா அங்கு இருக்கும் நேரத்தில் செய்வதைப் போலவே, அனைத்தையும் கவனித்துக் கொண்டார். சில சமயங்களில் முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல், பாபா அங்குச் செல்வது வழக்கம் என்பதால், தினமும் பாபா வருவதை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அங்கிருந்த அனைத்து பொருட்களும், அறைகளும் எப்பொழுதும் சுத்தமாகவும், நன்கு பராமரிக்கப்பட்டும் வந்தன. மெஹராபாத்திலும் இதே சூழல்தான்; மேல் மற்றும் கீழ் மெஹராபாத்தில் அமைந்த பாபாவின் அறைகளை மன்ஸாரி, சிது ஆகியோர் தினமும் சுத்தம் செய்தனர்.

அலோபா, பாவ் கல்சூரி, குஸ்தாஜி, பெண்டு, கிஷன் ஸிங் உள்ளிட்ட ஆண் மண்டலி, மஹாபலேஷ்வரிலிருந்து பொது பேருந்தில் அன்று இரவு தாமதமாக அஹமதுநகருக்கு வந்து சேர்ந்தனர். வழியில் பெய்த பயங்கரமான மழையில், பேருந்தின் மேற்கூரையிலிருந்து நீர் கசிய, பழைய செய்தித்தாள்களை தலைக்கு மேல் குடை போல வைத்திருந்தும், அனைவரும் நனைந்தனர்; குறிப்பாக குஸ்தாஜி, அவரை இருந்த இடத்திலிருந்து நகருமாறு பலமுறை கேட்டும், அவர் அதற்கு இணங்காததால், முற்றிலும் நனைந்தார். குஸ்தாஜி தனது இருக்கையை விட்டு வெளியேற மறுத்ததன் காரணம், அஹமதுநகருக்கு வந்த பின்னரே தெளிவானது. எல்லோரும் பேருந்திலிருந்து இறங்கியபோது, அப்பாவி குஸ்தாஜி அப்படியே இருக்கையில் அமர்ந்து, தனது வயிற்றைக் காட்டி, கலக்குவதாக சைகையால் தெரிவித்தார். தற்செயலாக மலம் கழித்ததால், அவரால் எழுந்திருக்க முடியவில்லை! அவரது நிலைமையை சரி செய்து, மண்டலி ஸரோஷின் விலூ வில்லாவிற்குச் சென்று, அங்கு அவர்கள் இரவைக் கழித்தனர்.

ஹமிர்பூர் மற்றும் ஆந்திராவிற்கு பாபாவுடன் சென்ற யஷ்வந்த் ராவ், சத்குரு உபாஸனி மஹாராஜின் முக்கிய சீடர்களில் ஒருவர். அவர் சமீபத்தில் ஸாக்கோரியில் கட்டியெழுப்பிய புதிய வீட்டின் திறப்பு விழாவுக்கான அழைப்பை பாபா ஏற்றுக்கொண்டார். மண்டலி மற்றும் குறிப்பிட்ட அஹமதுநகர் அன்பர்களுக்காக, ஸரோஷ் ஏற்பாடு செய்திருந்த இரண்டு பேருந்துகளில், அனைவரும் மார்ச் 20 அன்று காலை 6:00 மணிக்குப் புறப்பட்டுச் சென்றனர். பாபா ஒரு மணி நேரம் கழித்து மெஹராஸாத்திலிருந்து ஸரோஷுடன் காரில் சென்றார்.

மெஹர்ஜி, நரிமன், எரச், ஆதி, குல்மாய், மற்றும் ஏராளமான பூனா அன்பர்கள் ஸாக்கோரியை நோக்கி சவாரி செய்தனர். மண்டலி காலை 8:30 மணிக்கு ராஹதா (RAHATA) கிராமத்தை வந்தடைந்த ஐந்து நிமிடங்களில் பாபாவின் கார் வந்தது. திட்டமிட்டபடி காலை 9:00 மணிக்கு பாபா வரவிருந்ததால், அனைவரும் சற்று முன்னதாகவே வந்திருப்பதாக யஷ்வந்த்

ராவிற்குத் தெரிவிக்க, ஆதி சென்றார். அதற்குள் காரிலிருந்து இறங்கிய பாபா, அவரது தலைக்கு மேல் அலோபா குடையைப் பிடித்த வண்ணம், பிரதான சாலையில் நடக்க ஆரம்பித்தார். ஆதி திரும்பி வரவே, பாபா, ராஹுதாவை விட்டு வெளியேறி காலை 8:45 மணிக்கு ஸாக்கோரி கிராமத்தின் வாயில்களுக்கு வந்தார்.

ஸாக்கோரிக்கு வந்த பாபாவை ஆசிரம வாசிகள் மற்றும் கிராம மக்கள் பஜனைகள் பாடி வரவேற்றனர். சம்பிரதாய முறைப்படி துப்பாக்கிகள் முழங்கவே, பாபாவின் கார் வந்து நின்றதும், அவருக்கு மலர் மாலை அணிவித்து, நெற்றியில் திலகமிட்டு, மக்கள் அவரை வணங்கத் தொடங்கினர். ஸரோஷின் கார் மீது சிவப்பு நிற குங்குமம் தூவி, மாலைகள் அணிவித்து அலங்காரம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பாபாவின் கார் ஊர்வலமாக ஆசிரமத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. அணிமணிகளால் அழகாக அலங்கரிக்கப்பட்ட குதிரையும், ஓர் இசைக்குழுவும் முன்னணியில் இருந்தன, பாபாவின் காரின் இருபுறமும் சிவப்பு நிற இடுப்புப் பட்டை அணிந்து, வெள்ளிக் கம்பிகளை ஏந்திய வண்ணம் ஆண்கள் மரியாதைக்குரிய காவலர்களாகப் பணியாற்றினர்.

ஊர்வலம் உபாஸனி மஹாராஜின் பழைய கோவில் முன் நிறுத்தப்பட்டது. ஸாக்கோரியின் தலைமை அர்ச்சகரான சகனின் சகோதரர் வஸந்த் தேஷ்முக், பாபாவிற்கு மாலை அணிவித்து, தேங்காய் உடைத்தார். பாபா அவரது கைகளால் தொட்ட மற்றுமொரு தேங்காய் உடைக்கப்பட்டு, அதன் நீர் சாலையில் சிதறச் செய்து, அப்பகுதியை புனிதமாக்கியது. கீர்த்தனைகள் இனிமை நயத்துடன் உற்சாகமாகப் பாடப்பட்டன. பாபா கீர்த்தனை குழுவில் ஒருவரிடமிருந்து ஒரு ஜோடி ஜாலராக்களைக் கையில் எடுத்து, காரில் அமர்ந்து சிறிது நேரம் வாசித்தார்.

காரிலிருந்து இறங்கிய பாபா, யஷ்வந்த் ராவ் புதிதாகக் கட்டி எழுப்பிய வீட்டின் வெளியே ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்குள், காலை 9:05 மணிக்கு வருகை தந்து, அவர் இருக்கையில் அமர்ந்தார். பாபா கூடாரத்தை நெருங்கியதும், கன்யாக்களின் தலைவி கோதாவரி மாய், அவருக்கு மாலை அணிவித்து, தலை வணங்கினார். ஸாக்கோரியின் இதர கன்யாக்களில் ஒருவர் ஜிஜி, நரைத்த முடியுடன், வயதான பெண்மணி நீண்ட காலமாக ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தவர், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி வணங்கினார்.

பாபா, கோதாவரி மாயை இடது புறமும், ஜிஜியை வலது புறமும் அமர வைத்த போது, ஜிஜியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. பாபா அவரது தலையைத் தொட்டு ஆசீர்வதித்ததும், ஆசிரமத்தின் மேலாளரான பி.டி.வாக், (B.T. WAGH) பாபாவின் முன் நின்று, பாபாவை தரிசனம் செய்யும் பிற அன்பர்களை விரைந்து வருமாறு வற்புறுத்தினார்.

ஆசிரமவாசிகளில், 1952ஆம் ஆண்டு அம்ராவதியில் பாபாவை தரிசனம் செய்த உஷா டிப்னிஸ் (USHA TIPNIS) என்ற பெண்மணியும் ஒருவர். உஷாவின் சகோதரரும், 'பக்தி' (DEVOTION) என்ற பத்திரிகையின் ஆசிரியருமான ஷாந்தாராம் டிப்னிஸும் (SHANTARAM N. TIPNIS) பாபாவை வணங்கினார்.

பாபாவும் குழுவும் பந்தலை விட்டு வெளியே வந்து யஷ்வந்த் ராவின் புதிய இல்லத்தில் நுழைந்தனர். பாபா, மாடியில் ஓர் அறையில் அமர்ந்து, யஷ்வந்த் ராவிடம், **"நான் உங்கள் இல்லத்தில் நுழைவதன் மூலம், திறப்பு விழா நிறைவடைந்தது, இனி சடங்கு சம்பிரதாயங்கள் எதுவும் தேவையில்லை"** என்று எழுத்துப்பலகையில் உச்சரித்தார்.

அவர் கோதாவரி மாயின் பக்கம் திரும்பி கூறினார், **"ஸாக்கோரிக்கு இது எனது கடைசி வருகையாக இருக்கலாம். நான் கூறுவதைச் செய்யுங்கள். என்னை நீங்கள் அறிவீர்கள்."**

மேலாளர் பி.டி. வாக், வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தார், பாபா அவரை உள்ளே வரும்படி சைகையால் அழைத்தார். கோதாவரி மாய், உபாஸனி மஹாராஜின் ஆன்மீகப் பிரதிநிதியாகவும், ஸாக்கோரியின் ஐந்து அறங்காவலர்களில் ஒருவராக ஜிஜியும், ஆசிரம மேலாளராக வாக் அங்குள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டனர். பி.டி. வாக் நுழைந்ததும், காலை 9:25 மணிக்கு பாபா கூறினார், **"மஹாராஜுக்கும் எனக்கும் இடையே** (1941ஆம் ஆண்டு தஹிகாவ்மில்) **நிகழ்ந்த கடைசி சந்திப்பின் போது என்ன நடந்தது என்பதை நான் இன்று உங்களுக்குச் சொல்கிறேன். இன்று இங்கு வாசிக்கப்படும் செய்தியில் நான் அந்த விஷயங்களைத் தெளிவுபடுத்துகிறேன்.**

**"உபாஸனி மஹாராஜ் எப்படி இரட்டை வேடத்தில் பணிபுரிந்தார் - அவர் எந்த அளவுக்குப் பரிபூரணமானவர், நான் யார்? என்பதையும் விரிவாக விளக்குகிறேன். நாங்கள் சந்தித்த வேளையில், நான் அதைச் செய்ய மாட்டேன் என்று தெரிந்திருந்தும், எனது மௌனத்தைக் கலைக்கும்படி அவர் என்னிடம் கட்டளையிட்டார். அவர் என்னிடம் மூன்று முறை கூறினார்: 'நான் உங்கள் குருநாதர், நான் சொல்வதைக் கேளுங்கள்!'**

**"நேரம் இன்னும் வரவில்லை" என்று நான் சைகைகள் மூலம் பதிலளித்தேன்.**

**"விரைவில், சில மாதங்களில், நான் எனது மௌனத்தைக் கலைப்பேன். நான் சோர்வடைந்து போனேன், நான் பேசும்போது மூலமுதலான இறை வார்த்தையை உச்சரிப்பேன். ஆரம்பத்தில் நான் இந்த இறை வார்த்தையை உச்சரித்ததால், முழுப் பிரபஞ்சமும் எனது கழுத்தைச் சுற்றிக்கொண்டது!**

**“எனது குருநாதர்கள் எவ்வளவு பரிபூரணத்துடன் இருந்தார்கள்! நான் அவர்களுக்கு என்ன கடன்பட்டிருக்கிறேன், நான் என்னவாக இருக்கிறேன், ஏன் மஹாராஜ் இரட்டை வேடத்தில் பணிபுரிந்தார்? - இவை அனைத்தையும் நான் விளக்குகிறேன்.”**

பாபா, **“நான் ஆதிகால புருஷன்”** என்று கூறி முடித்தார்.

பாபா, மேலாளரான பி.டி. வாகை நோக்கிக் கூறிக் கொண்டிருந்தபோது, கோதாவரி மாய் அவர் அருகில் நின்று கொண்டிருந்தார். பாபா, அப்போது கோதாவரியின் பக்கம் திரும்பி, **“இயன்றவரை நீங்கள் இன்றைய நிகழ்ச்சிகளில் என்னுடன் கலந்துகொண்டால் நல்லது”** என்று கூறினார்.

யஷ்வந்த் ராவ் அனைவருக்கும் தேநீர் வழங்கி, பாபாவிற்கு ஒரு டம்ளர் ஆரஞ்சு ரசம் கொடுத்த போது, அதை அவர் அருந்தினார். காலை 9:50 மணிக்கு வீட்டை விட்டு வெளியேறிய பாபா, ஸாக்கோரி ஆசிரமத்தைச் சுற்றி வந்தார்.

குல்மாய் எப்பொழுதும் அவருடன் இருந்தார். தரையில் ஓரிடத்தில் அமர்ந்து, பாபா சிந்தனையில் ஆழ்ந்து, **“நான் எல்லாமுமாக, எல்லாவற்றிலும் இருக்கிறேன். நான் எல்லா இடங்களிலும் இருக்கிறேன், ஒவ்வொன்றின், ஒவ்வொருவரின், ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் அறிவேன்”** என்று கூறினார்.

பாபா அடுத்ததாக உபாஸனி மஹாராஜின் குடிலுக்குச் சென்று, அறைக்கு வெளியே சிறிது நேரம் நின்ற பின்னர், அவர் மீண்டும் திறந்த வெளியில் தரையில் அமர்ந்தார்; அன்பர்களும், பணியாளர்களும் அவரது தரிசனத்திற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். பாபா கூறினார், **“பிறர் எனது பாதங்களைத் தொடுவதை நான் அனுமதிப்பதில்லை; ஆனால் கோதாவரி அவற்றைத் தொட்டதால், இன்று உங்கள் அனைவரையும் நான் அனுமதிக்கிறேன்.”**

காலை 10:00 மணியளவில், பாபா அங்கிருந்து, கோதாவரி மாயின் புதிய குடியிருப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். உபாஸனி மஹாராஜ் வழக்கமாக அமர்ந்த ஊஞ்சல் அங்கே தொங்கிக் கொண்டிருந்தது. கோதாவரியும் இதர கன்யாக்களும் அதை ஆக்கிரமிக்குமாறு பாபாவிடம் சைகையால் தெரிவித்ததும், அவர் அதில் அமர்ந்தார். கன்யாக்கள், கிருஷ்ணரைப் போற்றிப் புகழும் வகையில் ஊஞ்சலின் பழங்காலப் பாடலைப் பாடத் தொடங்கினர், இது மஹாராஜ் ஊஞ்சலில் ஆடிய போது, அவர்கள் பாடி வந்த பழக்கம். ஊஞ்சலை மெதுவாக முன்னும் பின்னும் அசைத்தபடி அவர்கள் ஒருமித்த குரலில் பாடினர். கிருஷ்ணரே மீண்டும் தனது கோபியர்களுடன் விளையாடுவது போல் இருந்தது! பாபா அங்கிருந்து வெளியேறும் வேளையில், கன்யாக்கள், ‘ஜெய் உபாஸனி மஹாராஜ், ஜெய் சத்குரு கோதாவரிமாதா, ஜெய் ஸ்ரீ சத்குரு மெஹர் பாபா!’ என்று கோஷமிட்டனர்.



**ஸாக்கோரி தரிசனம், 1954**
(SAKORI DARSHAN**,** 1954)



**மஹாபலேஷ்வர், 1954**
(MAHABALESHWAR**,** 1954)



**ஸாக்கோரி, மார்ச் 1954** (SAKORI**,** MARCH 1954)

கோதாவரி மாயின் அறையிலிருந்து வெளியே வந்த பாபா, மீண்டும் மஹாராஜின் குடிலருகில் ஒரு மரத்தின் கீழ், தரையில் அமர்ந்தார். முற்றிலும் நிசப்தமான கிராமப்புறச் சூழல் வியாபித்திருந்தது. பாபாவின் வலது கை விரல்கள் விறுவிறுப்பாக அசைந்து கொண்டிருந்தன. அனைவரும் அவரைச் சுற்றி, சிலைகள் போல் அமைதியாக நின்றனர். ஐந்து நிமிடம் பாபா தனது பணியில் மூழ்கி, பின்பு கோதாவரியின் பழைய அறைக்குச் சென்று, அங்கே ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

அதைத் தொடர்ந்து, பாபா கோயிலில் மஹாராஜ் அமர்ந்திருந்த சிறிய அறைக்குச் சென்று, தரையில் மெத்தை ஒன்றில் அமர்ந்தார். வயதான கன்யா ஜிஜியை தன் அருகில் அமரும்படி சைகையால் தெரிவித்து, “**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி**” என்று குறிப்பிட்டார்.

“எனது மனமும் புத்தியும் உங்கள் காலடியில் உள்ளன” என்று ஜிஜி பதிலளித்தார். “எதுவும் எனக்கு சொந்தமில்லை.”

அவருக்குப் பிரசாதமாக இனிப்புகளை வழங்கி, பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், “**நான் என்றென்றும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்; இருந்தும் என்னைப் போல் எவரும் துன்பப்படுவதில்லை. நான் ஆனந்தமாக இருக்கிறேன், அதே வேளையில் துன்பமாகவும் உணர்கிறேன்!**”

உஷா டிப்னிஸ் அவரிடம் ஆசிர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு பாபா, “**உங்களை இழக்கும் அளவுக்கு நீங்கள் என்னை நேசிக்க வேண்டும், பின்னர் என்னைக் கண்டுகொள்வீர்கள். உங்களுக்கு இது புரிகிறதா?**” என்று கேட்டதும், ‘ஆமாம்’ என தலையசைத்தார் உஷா.

“**அப்படிச் சொல்வது எளிது, ஆனால் அதைச் செய்வது கடினம். எப்படிச் செய்வீர்கள்?**” என்று பாபா வினவினார்.

“எல்லாம் உங்கள் கையில்” என்று உஷா பதிலளித்தார்.

“**நன்றாகச் சொன்னீர்கள், ஆனால் என்னைப் பற்றிய தொடர்ச்சியான சிந்தனையைத் தவிர, வேறு எந்த எண்ணத்திற்கும் இடம் தராத அளவுக்கு நீங்கள் என்னை நினைவில் கொள்ளவேண்டும். அப்போது நான் உங்களுடன் இருக்கிறேன். இது 100 சதவிகிதம் நேர்மையுடன் செய்யப்பட வேண்டும்.**”

பாபா, கோவில் அறையை விட்டு வெளியேறும் போது, ஜிஜி, சுவரில் இருந்த மஹாராஜின் புகைப்படத்தை சுட்டிக்காட்டி, ஒருமுறை அந்தப் புகைப்படத்திலிருந்து துப்பாக்கிச் சூடு போன்ற சத்தம் கேட்டதாக பாபாவிடம் தெரிவித்தார். பாபா புகைப்படத்தைத் தொட்டு, ஜிஜி கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிவித்தார்.

காலை 10:15 மணிக்கு, பாபா, உபாஸனி மஹாராஜின் குடிலுக்குள் நுழைந்தபோது, அங்கு ஏற்கனவே ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடி, பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். பாபா, கல் தரையில் ஒரு மெத்தை மீது அமர்ந்தார். மஹாராஜின் பக்தர் ஒருவர், பாபாவை வரவேற்று மராட்டியில் சில வார்த்தைகளை மொழிந்தார்; அதைத் தொடர்ந்து, வஸந்த், பாபாவை தனது

ஒருங்கிணைந்த பாடல் மற்றும் நகைச்சுவையான சைகையால் மகிழ்வித்தார், இது பாபாவை மிகையாக சிரிக்க வைத்தது.

காலை 10:35 மணிக்கு, கோதாவரி மற்றும் கன்யாக்கள் அமர்ந்திருந்த உபாஸனி மஹாராஜின் சமாதிக்கு நடந்து சென்று, பாபா, நேர் எதிரே அமர்ந்தார். இந்தக் கட்டத்தில், ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்ட ஒரு செய்தியை வாசிக்க வேண்டும், ஆனால் பாபா, எவரிடமும் அதை வாசிக்கச் சொல்லாமல், கோதாவரி மாய், ஜிஜி, பி.டி. வாக், டி.எஸ். புரந்தரே மற்றும் ஆசிரமத்தில் வசிப்பவர்கள் அனைவருக்கும் எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்த கீழ்வரும் செய்தியை, எரச் வாசித்தார்:

**நீங்கள் அனைவரும் மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும் என விரும்புகிறேன். இன்றுதான், முதன்முறையாக சில விஷயங்களை உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன். ஏனெனில், எனது நித்திய நிலையை உணர்ந்த பிறகு, ஸாக்கோரிக்கு இது எனது இரண்டாவது மற்றும் கடைசி வருகை. நான் கூறும் அனைத்திற்கும் உபாஸனி மஹாராஜ் இப்போது சாட்சி. அவர் வாழ்கிறார், நான் கூறுவதையெல்லாம் கேட்கிறார். இப்போது, நான் என் ஆரம்ப கால வாழ்க்கையை விவரிக்க பின்னோக்கிச் செல்ல வேண்டும். நான் இதைக் கூறுவதற்கு முன்பு, கடவுளின் அம்சங்களில் ஒன்று, ‘எல்லையற்ற நேர்மை’ என்பதை நீங்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். மிகக் குறைந்த அளவிலான பாசாங்குத்தனமும் நேர்மையின்மையும் கடவுளிடமிருந்து நம்மை ஒதுக்கி வைக்கின்றன.**

**நான் பள்ளிக்கூட சிறுவனாக இருந்தபோது, நான் சிறுவர்களின் தலைவனாக இருந்தேன், நான் கல்லூரியில் நுழைந்தபோதும் நான் அவர்களின் தலைவராக இருந்தேன் - துணிச்சலான, தைரியமான, ஆனால் பெண்கள் முன்னிலையில் வெட்கப்படும் சுபாவம். மேலும், தற்போதைய வாழ்க்கையில், நான் இதுவரை ஆண் என்ற முறையில், எந்த ஒரு பெண்மணியையும் தொட்டதில்லை. நான் ராமனாக, கிருஷ்ணனாக, இயேசுவாக இருந்தபோது அது வேறு. புத்தர் திருமணமானவராக இருந்தாலும் அவரது குடும்பத்தைக் கைவிட வேண்டியிருந்தது.**

**எல்லா சந்தேகங்களையும் போக்கும், மிக முக்கியமான ஒரு விஷயத்திற்கு வருகிறேன். மஹாராஜ், எனக்காக, பெண்மணிகளுடன் இந்த அனுபவங்கள் அனைத்தையும் அனுபவிக்க வேண்டியிருந்தது, அது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தொடங்கியது, இது அவர் எவ்வளவு பரிபூரணமானவர் என்பதை உங்கள் அனைவருக்கும் புரிய வைக்கும்.**

**பாபாஜான் முதலில் எனது நெற்றியில் முத்தமிட்டபோது, அது என்னை, ஒரே நொடியில் எனது எல்லையற்ற நிலையை அனுபவிக்கச் செய்தது. உண்மையில் வெளிப்படுத்த முடியாத அந்த அனுபவம் என்ன என்பதை நான் இப்போது விளக்குகிறேன். நான் திடீரென, ஒரு ‘வெற்றிடத்தில்’ நுழைந்தேன், உணர்வு மட்டுமே இருந்தது. ஆனால், இதை எப்படி உங்களுக்குப் புரிய வைப்பது? நான் அங்கு இல்லை, எதுவும் இல்லை,**

எவரும் இல்லை, வானம், விண்வெளி எதுவும் இல்லை. ஆனால் உணர்வு இருந்தது, அந்த உணர்வில் நான் தொலைந்து போனேன். அதன் பின்பு, நானே அந்த உணர்வு என்ற உணர்வு நிலையைத் திரும்பப் பெற்றேன் - அந்தப் பேரானந்தத்தை என்னாலும் வெளிப்படுத்த முடியாது. அந்தப் பேரானந்தம் இப்போதும் தொடர்கிறது. ஆனால், அத்துடன் இப்போது முழுப் பிரபஞ்சத்தின் துயரமும் துன்பமும் இணைந்துள்ளன.

அந்த ஒன்பது மாத நிலைக்குப் பிறகு, நான் கடவுள் என்பதைத் தவிர இதர எல்லாவற்றிலும் நான் முற்றிலும் உணர்வற்ற நிலையில் இருந்தேன். மேலும் ஏதோ ஒன்று என்னை, சாதாரண சுய உணர்வு நினைவுக்கு வரத் தூண்டியது. நான் எனது நெற்றியை சுவர்கள், கற்கள், தரை, இரும்பு கம்பிகள் ஆகியவற்றில் அறைந்தேன், எனது நெற்றியில் இரத்தம் வழிந்தது; ஆனால் சாதாரண உணர்வு இல்லை. எனது எல்லையற்ற பேரின்ப நிலையிலும், அந்த உந்துதல் என்னை (ஷிர்டி) கண்டோபா கோவிலில், மஹாராஜ் இருந்த இடத்திற்குக் கொண்டு வந்தது.

இப்போது, இந்த முரண்பாட்டுத் தன்மையைப் பாருங்கள். எங்கும் என்னைத் தவிர வேறு எவரையும் நான் காணவில்லை; மஹாராஜ் என்னைப் பார்த்ததும், என் மீது வீசிய கல், எனது நெற்றியைத் தாக்கியது. அது என்னைத் தாக்கிய அடுத்த கணமே, நான் சாதாரண சுய உணர்வு நினைவுக்கு வந்தேன். பின்னர் என்னிடம் எல்லையற்ற தெய்வீக மற்றும் சாதாரண மனித உணர்வு இரண்டும் இருந்தன.

மஹாராஜ், துர்காபாயிடம் இந்த உண்மையைக் கூறியபோது, அவர் மஹாராஜை நேசித்தது போலவே என்னையும் நேசிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற்குப் பின்பு, மஹாராஜ் மண்டலியிடம், “என்னிடம் இருந்ததை, நான் மேர்வானுக்குக் கொடுத்துவிட்டேன்” என்று கூறினார். அதைத் தொடர்ந்து, மஹாராஜ் இரட்டை வேடத்தில் செயல்படத் தொடங்கினார். அது, துர்காபாயை என் மீது பொறாமை கொள்ளச் செய்து, எனக்கு எதிராகப் பேசத் தூண்டியது.

அவர் இப்போது அவரது பணியில் முற்றிலும் தனியாகச் செயல்பட்டார், ஆனால் அவர் என் ஆதிகால அனுபவத்தை என்னிடம் ஒப்படைத்தார். துர்காபாய் என்னிடம் பொறாமைப்படக்கூடிய அளவுக்கு மஹாராஜ் செயல்படத் தொடங்கினார். என்னையும், மஹாராஜையும் 100 சதவீதம் நேசித்து, எங்கள் இருவருக்கும் 100 சதவீதம் சேவை செய்த துர்காபாய், இறுதியில் பொறாமையும் வருத்தமும் அடைந்தார். மஹாராஜ் வேண்டுமென்றே அதைச் செய்தார், மேலும் அவர் மக்களிடம், “நான் மேர்வானுக்கு எதுவும் கொடுக்கவில்லை” என்றும் கூறத் தொடங்கினார்.

அது உண்மையாகவும் இருந்தது. கொடுக்க என்னதான் இருந்தது? அவர் எனது உண்மையான நிலையை எனக்கு வெளிப்படுத்தினார். ஆனால், பரிபூரணத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த அவர், தனது இரட்டை வேடத்தை முழுநிறைவுடன் செய்தார்.

நான் மெஹராபாத்தில் இருந்தபோது, துர்காபாயின் மகன் ரகுநாத் என்னிடம் வந்து, "பாபா, நீங்கள் மஹாராஜைக் காப்பாற்ற வேண்டும்" என்றான்.

நான், "ஏன்?" என்றேன்.

அவன் உடனே, "மஹாராஜ், என்னையும் துர்காபாயையும் அழைத்து, 'இதோ பார், நான் இப்போது காமத்தில் மூழ்கிவிட்டேன், எனவே நான் இந்த நடவடிக்கையை எடுத்தாக வேண்டும்..." என்று கூறியதாக பதிலளித்தான்.

நான் அவனிடம், "ரகுநாத், உனக்கு மஹாராஜைத் தெரியாது. துர்காபாய், அவரது தலையை இழக்க வேண்டாம் என்று கூறு. 100 சதவீதம் அவருக்கு சேவை செய்த துர்காபாய்க்குக் கூட அவரைத் தெரியாது. அவர் சைத்தான் போலத் தோன்றும் எதையும் செய்தால் கூட, மஹாராஜ் மீதுள்ள நம்பிக்கையை இழக்காமல் இருக்குமாறு துர்காபாயிடம் கூறு..!" என்றேன். சுருக்கமாக, நான் பிறரிடமிருந்தும் இது போன்ற விஷயத்தைப் பற்றி கேள்விப்பட்டேன், ஆனால் குருநாதர்களின் வழிகளையும், முறைகளையும் ஒருவரால் புரிந்துகொள்ள முடியாது.

அதைத் தொடர்ந்து, சிறிது நேரத்திற்குப் பிறகு, மஹாராஜ் எனக்கு எதிராக, இதர விஷயங்களைச் சொன்னபோது, நான் குல்மாயை அவரிடம் அனுப்பி வைத்தேன்; அவர் ஒருமுறை குல்மாயிடம் கூறினார், "மேர்வானிடம் சொல்லுங்கள், 'எனது நாட்கள் நெருங்கிவிட்டன. இங்கு வந்து ஸாக்கோரியின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்'". நான் அங்குச் செல்லமாட்டேன் என்பது அவருக்குத் தெரியும், அவர் இப்போது செய்ததை, அங்கு அவர் முறையாக சீர்படுத்த வேண்டும். அவர் பரிபூரண குருநாதராக இருந்தும், எதுவும் அறியாதவரைப் போல நடந்து கொண்டார்.

இப்போது நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்; மஹாராஜ் அவரது உடலைக் கைவிடும் வரை, அவருடைய வெளியளவிலான வாழ்க்கையைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். நான் அவரிலும், அவர் என்னிலும் இருந்ததால், அனைத்து விபரமும் எனக்குத் தெரியும். பெண்மணிகளுடன் நான் செய்ய வேண்டியதை, மஹாராஜ் எனக்காகச் செய்தார்; அவர் மேற்கத்திய நாடுகளுடன் செய்ய வேண்டிய அனைத்தையும், நான் அவருக்காகச் செய்தேன். பின்னர், அவர் தனது உடலை விரைவில் கைவிட இருப்பதைக் கண்டதும், நான் (தஹிகாவ்மில்) அவருடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன். இப்போது கவனமாகக் கேளுங்கள், ஏனெனில் இது உங்கள் அனைவருக்கும் மிகவும் முக்கியமானது. அவர் தஹிகாவ்மில் அமைந்த குடிலுக்குள் நுழையும் போது, நான் முதலில் அவரைப் பார்த்ததும், அவரது பாதங்களைத் தொட்டுத் தலைவணங்கினேன். அவர் என்னை, பற்றி அணைத்து, பதினைந்து நிமிடம் ஒரு குழந்தையைப் போல் அழுதார். பின்னர் இருவரும் அந்தக் குடிசையில் அமர்ந்தோம். மஹாராஜ் என்னிடம், "உங்கள் மௌனத்தைக் கலையுங்கள்!" என்றார்.

நான், சைகை மூலமாக, “அதற்கு இன்னும் நேரம் வரவில்லை” என்றேன். மொத்தத்தில், நான் மௌனத்தைக் கைவிட மாட்டேன் என்று அவருக்குத் தெரியும், என்றாலும், அவர் எனது மௌனத்தைக் கலைக்குமாறு, மூன்று முறை என்னை வற்புறுத்தினார். பின்னர் அவர் அவருடைய அன்பான, பிரியமான கோதாவரி மாயைக் குறித்து என்னிடம் ஒரு வாக்குறுதியைக் கோரினார். நானும் உறுதியளித்ததால், இன்று நான் இங்கே இருக்கிறேன், எனது வாக்குறுதியை நிறைவேற்றுவேன்.

அப்போது, மேற்கு நோக்கி நான் கப்பலில் சென்றபோது, காந்திஜியும் அதே கப்பலில் இருந்தார். அவர் என் அறைக்கு மூன்று இரவுகள் வந்தார். அவர் பல விஷயங்களை என்னிடம் எடுத்துரைத்தார், நானும் நிறைய விஷயங்களை விளக்கினேன். திடீரென அவர், “நான் உபாஸனி மஹாராஜிடம் சென்றிருந்தேன், ஆனால் அவர் உங்களைப் போல் என்னை ஈர்க்கவில்லை” என்று கூறினார்.

“என்னில் நீங்கள் ஈர்க்கப்படுவது அவரால்தான்” என்று கூறி, இதை அவருக்கு விளக்கினேன்.

இறுதியில், ‘இப்போது, உங்களையே நீங்கள் கொடுமைப்படுத்துவது அதிகமாகிவிட்டது, உங்கள் மௌனத்தைக் கலைத்து, உலகிற்கு ஒரு நற்செய்தியைக் கூறுங்கள்’ என்றார். “விரைவில்” என்றேன் நான்; 22 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் இப்போது உண்மையில், சில மாதங்களில், நான் எனது மௌனத்தைக் கலைக்க வேண்டும். இன்று நான் உங்களுக்குக் கூறுவதெல்லாம், நான் என்னவாக இருக்கிறேன் என்பதற்கு, நான் கடமைப்பட்டிருக்கும் ஐந்து சத்குருக்கள் சாட்சியாக இருக்கிறார்கள்.

நான் ஆதிகாலத்தவன், காலத்தைக் கடந்தவன்.

விரைவில், ஒரு மிகக் கடுமையான, வலிமிகுந்த நோய் என்னைத் தாக்கும், பின்னர் அந்த ‘மூல முதலான இறை வார்த்தை’யுடன் எனது மௌனத்தைக் கலைப்பேன். அதைத் தொடர்ந்து, எனது அவமானம், மகிமைப்படுத்துதல் மற்றும் திடீரென ஒரு கொடுமையான, உடல் ரீதியான மரணம். இவை அனைத்தும் ஒரே வருடத்திற்குள் நடக்கும்.

நான் ஆதிகாலத்தவன். நீங்கள் செய்யும் அனைத்திலும், என்னை நேசிப்பதிலும் 100 சதவீதம் நேர்மையாக இருங்கள். அந்த நேர்மையானது, கடவுள் உங்களை நேசிக்க வைத்து, அதனால் நீங்கள் அவரில் உங்களை இழக்கும் தருவாயில், என்னை உங்கள் சுயமாகக் கண்டுகொள்வீர்கள்.

கடவுள் எல்லா சடங்கு சம்பிரதாயங்களுக்கும், பூஜை புனஸ்காரங்களுக்கும் அப்பாற்பட்டவர் என்றாலும், மஹாராஜ் உங்களை நம்பி வழங்கிய பொறுப்பை, உண்மையாக, நேர்மையாக, 100 சதவீதம் பின்பற்றுங்கள் - விழாக்கள் மற்றும் சடங்கு முறைகளால் அல்ல, மஹாராஜ் உங்களுக்குச் சொன்னதால் நீங்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், வானுலகின் நிமித்தம், அதை வெறும் இயந்திரத்தனமாகச் செய்ய வேண்டாம், அது உங்களை மாயையிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக,

**உங்களை மேலும் பிணைக்கும். அனைத்தும் உங்கள் முழு மனதுடன் செய்யப்பட வேண்டும்; அப்போது எல்லாம் மாயை என்றும் கடவுள் மட்டுமே உண்மையானவர் என்பதையும் அறிவீர்கள். மேலும், அந்த அனுபவம் உங்களுக்கு அளவிறுதியற்ற ஆனந்தத்தை வழங்கினால், உளதாயிருக்கும் உண்மைப்பொருளை உணர்வீர்கள், பிற அனைத்தும் வெறும் பித்தலாட்டம்.**

**லட்சக்கணக்கான மக்கள் உங்கள் கால்களில் தலை வணங்கி, மாலை அணிவித்து, உங்களை சத்குரு என்று அழைக்கும் அதே வேளையில், உங்களுக்கு அந்த அனுபவம் இல்லை என்றால், இதனால் என்ன பயன்? மேலும், உங்களுக்கு அந்த அனுபவம் உண்மையில் இருக்குமானால், முழு உலகமும் உங்களுக்கு எதிராகச் சென்றாலும், நீங்கள் அதைப் பொருட்படுத்த மாட்டீர்கள், ஏனெனில் அதைச் செய்வதே நீங்கள்தான்.**

**ஆதலால், இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், இந்த ஆண்டு முடிவதற்குள் எனது மௌனத்தைக் கலைக்கிறேன். பின்னர், அவமானம், மகிமைப்படுத்தல், உடலைத் துறத்தல் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக நிகழும்.**

பாபா நிகழ்த்திய உரை நிறைவடைந்ததும் அவர் நல்ல மனநிலையில் இருந்தார். “**கோலி விளையாடினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும், இன்று, நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்**” என்று கூறி, மேலும் சில நிமிடங்கள், அவர்கள் கோலி விளையாடினர். யஷ்வந்த் ராவும் விளையாட்டில் பங்கெடுத்தார், பாபாவிற்கு அடுத்ததாக அவரே சிறப்பாக விளையாடினார்.

காலை 11:20 மணிக்கு உபாஸனி மஹாராஜின் சமாதியிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, ஸாக்கோரி பக்தர்களின் வேண்டுகோளின் பேரில், பாபா மஹாராஜின் பாதங்களிலும், அங்கிருந்த அனைவரின் மீதும் பன்னீரைத் தெளித்தார். மீண்டும் ‘மஹாராஜ், கோதாவரி மற்றும் மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்று கோஷம் எழுப்பப்பட்டது. பாபா மீண்டும் யஷ்வந்த் ராவின் இல்லத்திற்குச் சென்றார், அங்கு கோதாவரி, ஜிஜி மற்றும் இதர கன்யாக்கள் அவருக்கு மதிய உணவை வழங்கினர். பாபா, கோதாவரி மாய்க்கு சிறிது உணவை ஊட்டி, மீதமிருந்த உணவை அங்கிருந்த அனைவருக்கும் தனது பிரசாதமாக வழங்குமாறு அறிவுறுத்தினார்.

நண்பகலில், உடல்நலம் குன்றி இருந்த பெஹராம் தஸ்தூர் என்ற மஹாராஜின் பழைய பக்தர் ஒருவரின் அறைக்கு பாபா சென்றார். பாபா அவருடைய உடல்நிலையைக் கேட்டறிந்து, கவலைப்பட வேண்டாம் என்று கூறி, அவரது தலையில் கை வைத்தார். பாபா, மேலாளர் பி.டி. வாகின் அறைக்குள்ளும் நுழைந்து, பின்னர் ஒரு வயதான பார்சி, நஸர்வான் குஸ்தாத் பரூச்சாவின் (NUSSERWAN GUSTAD BHARUCHA) அறையையும் பார்வையிட்டார். பரூச்சா, மஹாராஜை பெரிதும் நேசித்து ஆசிரமத்தில் வசித்து வந்தார். பாபா அறையை விட்டு வெளியேறும் போது, அந்த முதியவர் ஒரு பாரசீக ஈரடிக்கவிதையை எடுத்துரைத்து, “பாபா, நீங்கள் கடவுள்!” என்றார்.

பாபா அறையை விட்டு வெளியே வந்து திறந்த வெளியில் உலாவத் தொடங்கினார். பலர் அங்கே கூடியபோது, பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்கினார். அவர் மஹாராஜின் குடிசைக்கு அருகில் அமைந்த ஒரு மூங்கில் கொட்டகையின் கீழ் அமர்ந்து, ருஸ்தம் காக்கா, அவரது மனைவி ஸில்லா காக்கு மற்றும் அவர்களது மகன் மானேக் ஆகியோரை பஜனை பாடுமாறு அறிவுறுத்தினார். அவர்கள் பாடலின் முடிவில்: "ஓ கோவர்தன் கிரிதரி, உன்னைத் தவிர என்னை யார் கவனித்துக்கொள்வார்!" என்று பாடியதும், பாபா, "**நான் அனைவரையும் கவனித்துக்கொள்கிறேன், ஆனால் எவரும் என்னை கவனிப்பதில்லை!**" என்று துடுக்குடன் பதிலளித்தார்.

டாக்கே ஏராளமான லட்டுகளை உண்டதாக ஒருவர் பாபாவிடம் கூறினார். அவரை அழைத்து பாபா, "**எத்தனை லட்டுகள் சாப்பிட்டீர்கள்?**" என்று கேட்டார்.

சிரித்துக்கொண்டே, டாக்கே பதிலளித்தார், "ஒன்று கூட உண்ணவில்லை; இதைச் சொன்னவர்களுக்கு எந்த புத்தியும் இல்லை. பாபா மட்டுமே செய்பவர் என்பது அவர்களுக்குத் தெரியாது; அனைத்தையும் செய்பவர் அவரே, செயலும் அவரே மற்றும் எல்லாமும் அவரே என்று எனக்குத் தெரியும்! எனவே, நான் எப்படி லட்டுகளை உண்டேன் என்று கூற முடியும்? பாபாதான் உண்டார்; மேலும், அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், பாபா, நீங்கள் எத்தனை சாப்பிட்டீர்கள் என்று கேட்கலாம்" என்றதும், அனைவரும் அடக்க முடியாமல் சத்தமாக சிரித்தனர்; பாபா, கோதாவரியிடம் கூறினார், "**அவரது சட்ட ரீதியான மனப்பாங்கைப் பாருங்கள்!**" (டாக்கே ஒரு வழக்கறிஞர்.)

ருஸ்தம் காக்காவின் இனிமையான குரலில் மகிழ்ச்சியடைந்த பாபா, மதியம் 1:20 மணிக்கு அவரிடம் கூறினார்: "**கடவுளின் அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலையைத் தவிர, வேறெதுவும் இல்லாதபோது, 'நான் யார்' என்பதை அறிய, சில தற்போக்கு எண்ணத்தின் தூண்டுதல்கள் என்னைப் பாட வைத்தன. அது என்னை முழுப் படைப்பின் பாரத்தையும் சுமக்க வைத்தது! இப்போது, மீண்டும் ஒருமுறை, அந்தப் பாடலைப் பாடி, விடுதலையாகிவிடுவேன். இது உண்மை.**"

'ஏழாவது நிழலை'ப் பற்றி விளக்க, பாபா, குல்மாயிடம் மூடிய வாய் வழியாக பேச முயலுமாறு கேட்டுக் கொண்டார். அவர் அவ்வாறே செய்த வேளையில் 'ஓம்' என்ற வார்த்தையை ஒத்த ஒலி வெளிவந்தது.

பாபா கூறினார்:

**குல்மாயின் வாயிலிருந்து வெளிப்பட்ட 'ஓம்' என்ற ஒலியானது மூலமுதலான ஒலியின் ஏழாவது நிழலாகும். இந்த மூலமுதலான ஒலியை எவரேனும் கேட்க நேர்ந்தால், அவர் உண்மையிலேயே பைத்தியம் பிடித்து தனது ஆடைகளைக் கிழிக்கத் தொடங்குவார். இந்த ஒலி ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் கேட்கப்படுகிறது.**

**இந்த நாட்களில், கைக்கோபாத் அற்புதமான அனுபவங்களை அடையப்பெறுகிறார். அவர் உண்மையில் சூரியனும் சந்திரனும் தனது**

**கண்களிலிருந்து வெளிவந்து, பாபா அதன் மத்தியில் நிலைகொண்டிருக்க, தன் உடலைக் கடந்து செல்வதையும் பார்க்கிறார். சில நேரங்களில், அவர் திகைப்பில் ஆழ்ந்து போகிறார்; ஆனால் அத்தகைய அனுபவம் ஓர் ஆன்மீக நிகழ்வு** (இறை உணர்வை அடைவது அல்ல).

**நீங்கள் பார்ப்பது போல நான் இல்லை. உண்மைப்பொருளான ஏக இறைவன் மட்டுமே உண்மை, இதர அனைத்தும் ஒன்றுமில்லை. தனிமனித அகந்தை, ஆன்மீக அனுபவத்தை மனத்திரையில் காணமுடியாது. அதை கிரகிப்பது மிகவும் எளிமையானது, ஆனால் அதன் எளிமை அதை எல்லையில்லா அளவுக்குக் கடினமாக்குகிறது. சுயமான தனிமனித ஆத்மா, இறைவனின் சுயமான பரமாத்மாவை அறியாதது; அவ்வாறாயின், 'அறியாமை'யாகிய 'நான்' எனும் மனித அகந்தை - உண்மையான இறை அறிவை எப்படி அனுபவிக்க முடியும். உங்களில் ஒருவர் அதைப் புரிந்து கொண்டாலும், நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன்.**

**இதை ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? காரணம், இறை உணர்வை அடையப் பெறுபவர், சாதாரண உணர்வு நிலைக்கு வந்து, ஒரே நேரத்தில் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திலும் இருக்கிறார். நான் இப்போது உங்கள் நிலையிலும் இருப்பதால், நான் உங்களைப் போலவே இருக்கிறேன் என்று அர்த்தம். நான் உங்களைப் போல் பேசுகிறேன், உங்களைப் போல தரையில் அமர்ந்திருக்கிறேன்; ஆனால், அதே வேளையில், நான் உணர்வுகளின் அனைத்து நிலைகளிலும் இருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட உயர் நிலை உணர்வுள்ள ஒருவர் என்னை அந்தந்த ஆன்மீகத் தளத்தில் காண்கிறார். மேல் நிலை ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருப்பவர்கள் என்னை அங்கே பார்க்கிறார்கள். ஆனால், பார்ப்பதில் வித்தியாசம் இருக்கிறது. இறுதியில், இறை அறிவு உதயமாகும் போது, எல்லாவற்றிலும் நான் ஒரே ஏக இறைவன் என்பதால், அனைத்தும் மாயை என்று கண்டறியப்படுகிறது.**

**இது எல்லாம் மாயை மற்றும் பூஜ்யம்! ஒரு எண்ணுடன் இணைக்கப்பட்டால் மட்டுமே பூஜ்ஜியத்திற்கு மதிப்பு இருக்கும்; இல்லையெனில், பூஜ்ஜியமாக, அது ஒரு பெரிய பூஜ்யம்!**

தொடர்ந்து பாபா கோதாவரி மாயிடம் கூறினார்: **"இந்த வருட இறுதிக்குள், நான் நிச்சயமாக எனது உடலைக் கைவிடுவேன்; நான் எனது மௌனத்தைக் கலைத்து, என் உடலைக் கைவிடும்போது, ஒரு பெரிய ஆன்மீக எழுச்சி ஏற்படும். ஆனால் 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் மீண்டும் வருவேன். ஆதிபுருஷன் எனும் அந்தஸ்தை எனக்கு வழங்க மஹாராஜ் மீண்டும் வந்தாக வேண்டும்."**

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஸாக்கோரியில் உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவைப் பற்றி குல்மாயிடம் என்ன கூறினார் என்று அவரிடம் பாபா கேட்டதற்கு, குல்மாய் இவ்வாறு பதிலளித்தார்: "மேர்வான் இங்கு வந்து, இந்த இடத்தில் அமர்ந்திருப்பார் என்று மஹாராஜ் என்னிடம் ஒருமுறை கூறினார்.

நீங்கள், மஹாராஜ் சுட்டிக்காட்டிய இடத்தில் இப்போது அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் முன்னிலையில் பலர் இங்கு வருவார்கள், நீங்கள் அனைவருக்கும் உரை நிகழ்த்துவீர்கள் என்றும் மஹாராஜ் கூறினார். இவையனைத்தும் இன்று இங்கு நிறைவேறியுள்ளது.”

பாபா விளக்கினார்:

**இதெல்லாம் ஒரு மாயத்தோற்றம். நீங்கள் பார்ப்பது, கேட்பது, நினைப்பது எல்லாமே மாயை. நீங்கள் வெளியளவில் பார்ப்பது அனைத்தும் கற்பனையே! ஆனால் அதன் பிடிப்பு மிகவும் இறுக்கமாக இருப்பதால், உங்களால் உங்களை விடுவிக்க முடியாது. நீங்கள் எல்லையற்ற அறிவு, எல்லையற்ற சக்தி, எல்லையற்ற பேரின்பம் அனைத்தையும் உடைமையாகக் கொண்டிருப்பவர்; ஆனால் மாயையின் இறுக்கமான பிடியில், நீங்கள் மிகவும் உதவியற்றவராக இருப்பதால், உண்மைப்பொருள் உங்கள் கைகளிலிருந்து நழுவி விட்டது.**

**உதாரணமாக, நீங்கள் அனைவரும் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்; ஆனால், உண்மையில், நீங்கள் இங்கே அமரவில்லை; எழுந்து, எங்கும் செல்லவும் இல்லை. இந்த பொய்யும் போலியுமான மாயையின் காரணமாக, நீங்களே எல்லாம் செய்வது போல் உணர்கிறீர்கள். உண்மையில் ஒன்றும் இல்லாத இந்த மாயையின் பிடியிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும். இது நீங்கள்** (உண்மையில்) **கனவு காண்பது போல் உள்ளது; கனவில் நீங்கள் விளையாடுவது, உண்ணுவது போன்ற பலவற்றை செய்கிறீர்கள்; ஆனால், உண்மையில், நீங்கள் ஒன்றும் செய்யவில்லை! நீங்கள் கனவு காணும்போது, நான் உங்கள் கனவில் தோன்றி, நீங்கள் கனவு காண்கிறீர்கள் என்று கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள்; இருந்தும், உங்கள் கனவு தொடர்ந்துகொண்டே இருக்கும், நான் சொல்வது உங்களை எழுப்ப சிறிதளவும் உதவாது. நீங்கள் கனவு காண்கிறீர்கள் என்று எவ்வளவுதான் சொன்னாலும், அது உங்கள் கனவை முடிவுக்குக் கொண்டுவராது. உங்கள் கனவு மட்டும் தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால், நான் உங்களை வேகமாக அறைவதானால், நீங்கள் உடனடியாக விழித்துக்கொள்வீர்கள், உங்கள் கனவும் முடிவுக்கு வந்துவிடும்.**

**அதே போல், இப்போது இங்கே அமர்ந்து, நீங்கள் காணும் கனவிலிருந்து உங்களை எழுப்ப, இப்படி ஓர் ‘அறை’ அவசியம்! நீங்கள் கனவு காண்கிறீர்கள், மேலும், நீங்கள் என் முன் அமர்ந்து பேசுவது, நடமாடுவது, உண்ணுவது, அருந்துவது போன்ற பலவற்றை இப்போது நான் உங்களுக்கு எவ்வளவுதான் விளக்கினாலும், அது ஒரு கனவே தவிர, உங்களுக்கு எந்த பயனுமளிக்காது, ஏனெனில் நீங்கள் அதைப் புரிந்து கொள்ள மாட்டீர்கள். ஆனால், நான் உங்களை அறைவதாக இருந்தால் - அப்போது என் அருள் உங்கள் மீது பாயும் - நீங்கள் தானாகவே விழித்தெழுந்து உடனடியாக என்னை உணர்ந்து கொள்வீர்கள். இதெல்லாம் ஒரு கனவு என்பதை நீங்கள்**

அப்போது அறிவீர்கள்; முழுப் படைப்பும் ஒரு கனவு மற்றும் நீங்கள் இரவும் பகலும் கனவு காண்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

**ஜபம், தவம், துறவு, இறை நாமத்தை உச்சரிப்பது எல்லாமே ஒரு கனவு. இந்தச் செயல்கள் அனைத்தும் பிணைப்புகளை உருவாக்குகின்றன. உண்ணுவதும், உண்ணாமல் இருப்பதும் பிணைப்புகளை உருவாக்கும். இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபட, எல்லாவற்றையும் பாபாவிடம் விட்டுவிட்டு, முழு நேர்மையுடனும், உண்மையுடனும், உங்களின் அனைத்தையும் அவருக்கு அர்ப்பணிக்கவும். 24 மணி நேரத்தில் நீங்கள் நல்லது, தீயது எதைச் செய்தாலும் அதற்கு என்னைக் காரணம் காட்டுங்கள் என்பதே அர்ப்பணிப்பின் அர்த்தம். இதன் பொருள் என்னவெனில், பாபா மட்டுமே செய்கிறார், நீங்கள் எதையும் செய்யவில்லை என்ற முழு உறுதியான நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கூட உங்களுக்கு இருக்கக் கூடாது, நான் எல்லாவற்றையும் செய்கிறேன் என்ற நம்பிக்கையில், பாறைபோல் இயல்பாக இருக்க வேண்டும்; பாபா அனைத்தையும் செய்கிறார் என்று நீங்கள் உண்மையாக உணர வேண்டும். ஆனால், இதைப் பின்பற்றுவது மிகவும் கடினம்.**

**எனது அனைத்து விரிவுரைகளுக்கும் இதர ஆன்மீக இலக்கியங்களுக்கும் எந்த அர்த்தமும் இல்லை. அவற்றில் எந்த முக்கியத்துவமும் இல்லை. எனது தற்போதைய நிலை, பாபாஜானின் ஒரே ஒரு முத்தத்தால் விளைந்தது. மதம் அல்லது ஆன்மீகம் சம்பந்தப்பட்ட எந்த இலக்கியத்தையும் படிப்பதன் மூலம் இந்த நிலையை ஒருபோதும் உணர முடியாது!**

மேலாளர் பி.டி.வாக் கூறினார், “ஆனால், குருநாதரின் அருளைப் பெற, ஒருவர் தயார்நிலையில் இருக்க வேண்டும். அடித்தளத்தை தயார் செய்ய ஏதேனும் செய்ய வேண்டும்.”

பதிலுக்கு, பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**மஹாராஜின் கட்டளைகளை நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றுங்கள். சடங்கு சம்பிரதாயங்கள் குறித்து அவர் உங்களுக்கு என்ன அறிவுறுத்தினாரோ, அவ்வாறே செய்யுங்கள்; ஆனால், அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். மஹாராஜின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மட்டுமே அவற்றைச் செய்யுங்கள், ஆனால் இயந்திரத்தனமாகவோ அல்லது வழக்கத்தின் ஒரு பகுதியாகவோ அல்ல. அவற்றை முழு மனதுடன் செய்யுங்கள்.**

**அவ்வப்போது 24 மணி நேரமும் தண்ணீர் அருந்தாமல் உபவாசம் இருக்க மண்டலிக்கு உத்தரவிடுகிறேன். மண்டலியில் ஒவ்வொருவரும் அப்போது நேரத்தைக் கணக்கிடுகிறார்கள் - ஒரு மணி நேரம் கடந்துவிட்டது, ஐந்து மணி நேரம் கடந்துவிட்டது, இப்போது இன்னும் இரண்டு மணி நேரம் மட்டுமே உள்ளது! மேலும், 24 மணி நேரம் முடிந்தவுடன், அவர்கள் தண்ணீர்**

அருந்த விரைகிறார்கள், அவர்கள் வயிறு நிரம்பும் அளவுக்குத் தண்ணீரை அருந்துகிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் பசியையும் மறந்துவிடுகிறார்கள். உபவாசத்தின் போது அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் எண்ணிக் கொண்டிருந்தாலும் அவர்களுக்குப் பசி இல்லை. எனவே அத்தகைய விரதம் இயந்திரத்தனமான விரதமாக மாறிவிடும், மேலும் அவர்கள் உபவாசத்தின்போது ஒவ்வொரு நொடியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உணவை அவர்களால் சுவைக்கவும் முடியாது.

எனவே இந்தச் சடங்கு சம்பிரதாயங்கள், இயந்திரத்தனமாக இல்லாமல் இயற்கையாக இருக்கவேண்டும்.

செய்யும் ஒவ்வொன்றிலும் பிறர் பார்ப்பதற்காகச் செய்வது போன்ற குறைந்தபட்ச சாயலும் இருக்கக்கூடாது, அத்தகைய காட்சி அனைத்து முக்கியத்துவத்தையும் சிறுமைப்படுத்திவிடும். இப்போது, பாபா இந்த தரையில் அமர்ந்திருக்கிறார்; இது இயற்கையாக அமர்ந்திருக்கும் நிலை, இதில் ஆன்மீகம், காட்சி போன்றவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பினும், மக்கள் எதிர்மாறான எண்ணங்களைக் கொண்டிருந்தால், அவர்கள் அவற்றைக் கொண்டிருக்கட்டும். நான் என்னவாக இருக்கிறேனோ, அவ்வாறே இருக்கிறேன். எனவே சத்குரு அறிவுறுத்தும் அனைத்தையும் 100 சதவீதம் பின்பற்ற வேண்டும், ஆனால் உண்மையான அன்புடன், இயந்திரத்தனமாக அல்ல.

பாபா தனது உரையை இவ்வாறு கூறி நிறைவு செய்தார்:

நான் அவதார புருஷர் என்று முதன்முதலில் எனக்குக் கூறியவர் உபாஸனி மஹாராஜ். இன்று நான் அவதார புருஷர் என்று அறிந்துகொள்கிறேன். காலாதி காலத்திலிருந்து, எல்லாமே இருந்தன. நித்தியத்தில், நேரம் என்று எதுவும் இல்லை. அதற்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. இங்கு அமர்ந்திருப்பவர்கள் முன்பும் இருந்தனர் இன்றும் இருக்கிறார்கள். அவற்றின் தொடர்ச்சியில் எந்த மாற்றமும் இல்லை, ஆனால் இது ஒரு நாடகம். இன்பமும் துன்பமும் ஒரு நாடகமே!

கல் தரையில் அமர்ந்திருந்ததால், கோதாவரி மாயின் கால்கள் விறைத்து, அவர் அசௌகரியமாக உணர்ந்தார். இது பாபாவிற்கு, சாதாரண நினைவு நிலைக்குத் திரும்புவதற்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வை நினைவூட்டியது: “நான் பகதூர் என்று அழைக்கப்பட்ட எனது அன்பரிடம் ஒரு வாளி மனித மலத்தை என் மீது ஊற்றச் சொன்னேன், அவர் அதை கழிப்பறைகளிலிருந்து சேகரித்த பின்னர் அவ்வாறே செய்தார். நான் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நிர்வாணமாக அமர்ந்திருந்தேன். என் உடலின் தோலில் காய்ந்த அழுக்குக் கழிவுகள், என் கைகால்களை விறைக்கச் செய்தன. 36 மணி நேரத்திற்குப் பிறகு நான் அந்த நிலையிலிருந்து மீண்டு வந்தபோது, அதை பெஹராம்ஜி, ஸையத் ஸாஹேப் இருவரும் சுத்தப்படுத்தினர். ஆனால் என் உடல் விறைப்பாகிவிட்டது. இரண்டு நாட்கள்

**உடலை அழுத்திவிட்ட பின்னரே என்னால் நகர முடிந்தது. அதனால், கால்களில் ஏற்படும் விறைப்பு எப்படி இருக்கும் என்பதை நான் அறிவேன்!"**

அதற்குப் பிறகு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, பிற்பகல் 2:15 மணிக்கு, ஜெகந்நாத் என்ற பாடகர் சிவன்-பார்வதியின் பாடலைப் பாடினார், பாபா அவருடன் இணைந்து, எழுத்துப்பலகையில் அவரது விரல்கள் தாளமிடுவது போல பாவனை செய்தார். கூடாரத்தின் கீழ் பாகம் சூடாக இருந்தது, பாபாவின் நெற்றி வியர்வையால் நிரம்பியது, அதை எரச் சில முறை துடைத்தார். பின்பு, பாபா தனது இரண்டு விரல்களுக்கு இடையில், சில சமயங்களில் செய்வது போல் எழுத்துப்பலகையைச் சுழற்றத் தொடங்கினார். பலகையை சுழற்றுவதற்காக கன்யாக்களில் ஒருவரிடம் பாபா அதைக் கொடுத்தார். அவர் முயற்சித்தார், ஆனால் முடியவில்லை. தொடர்ந்து டாக்கே முயற்சித்தார், அவரும் வெற்றி பெறவில்லை.

பாபா கூறினார்:

**என்னைப் போல மகிழ்ச்சியும் துன்பமும் அனுபவிப்பவர் உலகில் வேறு எவரும் இல்லை. முழு உலகத்தின் மகிழ்ச்சியையும் ஒன்றாக இணைத்து, எனது எல்லையில்லா பேரின்பத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அது அந்த உண்மையான பேரின்பத்தின் ஏழாவது நிழலாக மட்டுமே இருக்கும்! மக்கள், நான் அற்புதங்கள் புரிவதாக என்னைப் பாராட்டுகிறார்கள், ஆனால் உண்மை என்னவெனில் நான் இதுவரை எந்த அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை. நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, மிகப்பெரிய அதிசயத்தை நிகழ்த்துவேன். மின் நிலையத்துடன் இணைந்திருக்கும் வேளையில், மின் விளக்குகளை இயக்கி வெளிச்சத்தை உருவாக்குவது போல், என்னுடன் தொடர்பில் இருப்பவர்கள் நான் எனது 'மூலமுதலான இறை வார்த்தை'யை உச்சரிக்கும்போது இறை ஒளியை அடையப்பெறுவார்கள்.**

பாபா தொடர்ந்து கூறினார்:

**எனது உடல் கொடுமையாகத் தாக்கப்படும்; அது துண்டு துண்டுகளாகும். இது என்னுடைய முதல் அவதார காலகட்டத்திலிருந்தே நடந்து வருகிறது.**

**நேர்மைதான் உண்மையான விஷயம். உண்மையில் இருப்பதை விட, தன்னை அதிகமாக காட்டிக் கொள்ள எவரும் முயற்சிக்கக்கூடாது. நான் கடவுள் என்று கூறுவதில் மிகவும் நேர்மையானவன்! உபாஸனி மஹாராஜிடம் நான் வாக்குறுதி அளிக்காமல் இருந்திருந்தால், சுதந்திரமாக இருந்திருப்பேன், இங்கு வந்திருக்க மாட்டேன்.**

**நான் எனது மௌனத்தைக் கலைப்பேன், நடக்க வேண்டிய அனைத்தும் டிசம்பர் (1954) இறுதிக்குள் நடக்கும்.**

மதியம் 2:40 மணிக்கு மூங்கில் கூடாரத்தை விட்டு பாபா வெளியே வந்து, யஷ்வந்த் ராவின் இல்லத்தில் ஓய்வெடுத்தார். தரையில் அமர்ந்திருந்த பாபாவின் கால்விரல்களில் ஒன்று கல்லில் குத்தியதால் ரத்தம் கசிந்தது. பிரபா

என்ற கன்யா தனது புடவையால் ரத்தத்தைத் துடைத்து சுத்தம் செய்யத் தொடங்கினார். பாபா, அவரைத் தடுக்கவே, எரச் பஞ்சால் சுத்தம் செய்தார். பாபாவின் பாதங்களை யஷ்வந்த் ராவும், அவரது குடும்பத்தினரும் கழுவி, பாபாவிற்கு முன்பாக பூஜை செய்த பின்னர், அங்கிருந்தவர்களுக்கு பிரசாதமாக நீர் வழங்கப்பட்டது. யஷ்வந்த், பாபாவின் நெற்றியில் சந்தனத் திலகமிட்டு அவருக்கு ஒரு வெள்ளை நிற சத்ரா, இளஞ்சிவப்பு மேலங்கி மற்றும் காஷ்மீரி சால்வை ஆகியவற்றை வழங்கினார். பாபா உடனடியாக அந்த மேலங்கியை அணிந்து, யஷ்வந்த் ராவைத் தழுவி, அவரது இல்லத்தார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

ஆசிரமத்தின் நூலகத்தைப் பார்வையிட்டு, கோதாவரி மாயின் மாமாவையும் சந்தித்த பின்பு, படுத்த படுக்கையாக இருந்த கீதா என்ற கன்யாக்களில் ஒருவரின் அறைக்குள் பாபா நுழைந்தார். பாபா, அந்தக் கன்யாவின் முகத்தை வருடி, ஆறுதல் கூறி, ஒரு ரோஜா இதழை உண்பதற்குக் கொடுத்து, தனது பெயரை உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்.

மூன்று மணியளவில், பாபா, மஹாராஜின் அறைக்குச் சென்றார், அங்கு கன்யாக்கள் மீண்டும் மஹாராஜின் ஊஞ்சலில் அவரை அமர வைத்தனர். பாபா, கோதாவரி மாயிடம் கேட்டார், **“ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நீங்கள் ஸாக்கோரியில் இருப்பீர்களா?”** அந்த வெப்பமான, கோடை மாதங்களில் லோனவாலாவிற்குச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக அவர் கூறியபோது, பாபா இவ்வாறு தெரிவித்தார், **“மேற்கத்திய உலகம் என்னை அங்கு அழைக்கிறது, ஆனால் எனது மௌனத்தைக் கலைப்பது தொடர்பான சில விசேஷ பணிகளைச் செய்ய வேண்டியிருப்பதால் நான் அங்குப் போகமாட்டேன்.”**

கோதாவரி மாய்க்கு பாபா அறிவுரை வழங்கினார்: **“எல்லா வழிகளிலும் மஹாராஜின் அறிவுரைகளைப் பின்பற்றி, உங்கள் கடமையை 100 சதவீதம் செய்யுங்கள், மேலும் அனைத்து கன்யாக்களும் தங்கள் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும்.”**

மேலாளர் பி.டி. வாக், பாபாவை மேலும் அதிகமாக நேசிப்பதற்காக அவரிடம் மன்றாடினார், அப்போது பாபா, **“உங்களைத் தோல்வியடைய நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் என்னைத் தவறவிட்டாலும், நான் உங்களைத் தோற்கடிக்க மாட்டேன். இதை நினைவில் கொள்ளுங்கள்”** என்று உறுதியளித்தார்.

கோதாவரி மாய்க்கு மஹாராஜ் அறிவுறுத்தியபடியே செய்யும்படி பாபா மீண்டும் வலியுறுத்தி கூறினார்: **“பிற அனைவரும் செய்யும் செயல்களுக்கு நீங்கள் பொறுப்பு என்று சிறிதளவும் சிந்திக்க வேண்டாம். நீங்கள் எதைச் செய்தாலும், அதைச் செய்வது நீங்கள் அல்ல, மஹாராஜ்தான் என்பதை புரிந்து கொண்டு செய்யுங்கள்.”**

பாபா முதலில் கோதாவரி மாய்க்கும், பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். அவர் ஒவ்வொருவருக்கும் பிரசாதம் வழங்கும்போது கீர்த்தனைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. பிற்பகல் 3:45 மணியளவில், அவர்

யஷ்வந்த் ராவைத் தழுவி, கோதாவரி மற்றும் ஜிஜியின் தலையில் அன்பின் அடையாளமாகத் தொட்டு, அஹமதுநகருக்குத் திரும்பிச் சென்றார்.

மாலை 4:10 மணியளவில், தமது காரை நிறுத்திய பாபா, அதைப் பின்தொடர்ந்து வந்த இரண்டு பேருந்துகளிலிருந்து அனைவரையும் வெளியே வருமாறு கூறி, அவர்களை உடன் அழைத்துச் சென்றார். எரச்சிடமிருந்து எழுத்துப்பலகையை, பாபா வாங்கியபோது, வர்ணம் பூசப்பட்ட பூஜ்ஜிய எழுத்தின் பெரும்பகுதி கீழே விழுந்தது. ஸாக்கோரியில் என்ன நடந்தது என்பதை நினைவு கூர்ந்த பாபா, இவ்வாறு எடுத்துரைத்தார்:

**மஹாராஜுடனான எனது கடைசி சந்திப்பில், கோதாவரி மாய் மற்றும் ஸாக்கோரி மீது எனது பார்வையை வைத்திருக்குமாறு, அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். எனது மௌனத்தைக் கலைக்கும்படி மஹாராஜ் என்னிடம் மூன்று முறை கூறினார். அப்போது அவர், 'நீங்கள் ஆதி சக்தி (மூல முதலானவர்). உங்கள் பார்வை, கோதாவரி, ஸாக்கோரி மற்றும் இதர கன்யாக்கள் மீது இருக்கட்டும்' என்றும் கூறினார்.**

**கோதாவரி ஓர் உண்மையான பெண்மணி என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் சத்குருவாக, உபாஸனி மஹாராஜின் பொறுப்பாளராக எடுத்துக் கொள்ளப்படுகிறார். அவருக்கு அந்த அனுபவம் இல்லை என்று தெரியும்; இருந்தும், மஹாராஜ் அவருக்கு அறிவுறுத்தியதால், அவர் நேர்மையாக அவருடைய பணியைச் செய்கிறார்.**

**கோதாவரி என்னை அஹமதுநகரில் சந்தித்தபோது, நான் அவரிடம் தனிப்பட்ட முறையில், ஆதி சீனியர் முன்னிலையில் கூறியதை, அவர் ஏற்றுக்கொண்டார். (மக்கள் அவரைக் கும்பிட்டுத் தலைவணங்குவதை பாபா விரும்பாததால் அவர் அதை அனுமதிக்கக் கூடாது.) இன்று, நீங்கள் என்ன பார்த்தீர்கள்? அனைவரும் 'சத்குரு கோதாவரிக்கு ஜெய்' என்று கோஷமிட்டனர்.**

**இருந்த போதிலும், இன்று காலை நான், அங்குச் சென்றதும், இந்தப் பெண்மணி எனக்கு மாலை அணிவித்து வணங்கினார். மஹாராஜ் பயன்படுத்திய ஊஞ்சலில் என்னை அமரச் செய்து, தனது கைகளால் ஊஞ்சலை ஆட்டி, இதர கன்யாக்களையும் அவ்வாறே செய்யச் சொன்னார். மேலும், மஹாராஜ் காலத்தில் பாடிய பாடலை அனைவரும் இணைந்து பாடினர்.**

**அவர் தனது கைகளால் எனக்கு உணவு பரிமாறி, நான் பிரசாதம் வழங்கியபோது, யஷ்வந்த் ராவுடன் சிறப்பாக பணிபுரிந்த விதத்தை நீங்கள் அனைவரும் பார்த்திருக்க வேண்டும். நான் அவருக்குப் பிரசாதத்தை வழங்கியதும், அவர் எனது கால்களில் தலைவணங்கினார்.**

**இவையெல்லாம் எதைக் காட்டுகிறது? பலர் அவருக்கு மரியாதை வழங்கியபோதிலும், அவர் என் மீது கொண்ட அன்பும், அவரது பணிவும், உன்னதமான குணமும், அவருக்கே உரிய விதத்தில் என்னை ஏற்றுக்கொள்ள**

**வைத்தது. அவருடைய பணிவு மகத்துவமானது, அதற்காக நான் அவரை நேசிக்கிறேன்.**

**நான் சொல்வது என்னவெனில், சுருக்கமாக, அவர் உண்மையில் ஓர் அன்பான பெண்மணி. ஆதி, கிருஷ்ணா(ஜி), யஷ்வந்த் ராவ் ஆகியோருக்கு நன்கு தெரியும், ஸாக்கோரியின் சூழ்நிலை எனக்கு எதிராக இருந்தது; ஆனால், இன்று கோதாவரி ஆழமாக உணர்ந்தது மட்டுமின்றி சூழ்நிலையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

**நான் அவரிடம் தனிமையில் "நீங்கள் ஒன்று செய்வீர்களா?" என்று கேட்டேன்.**

**அதற்கு அவர், 'இந்த** (பிராமண) **சூழ்நிலையில் என்னால் அதைச் செய்ய முடிந்தால்' என்றார்.**

**நான் அவரிடம் ஓர் எளிய ஆனால் கடினமான விஷயத்தைச்** (மக்கள் அவரைக் கும்பிட்டுத் தலைவணங்குவதை ஏற்றுக்கொள்ள வேண்டாம்) **சொன்னபோது, அவர் அதை ஏற்றுக்கொண்டார். "நீங்கள் இதைச் செய்தால், என்னைக்** (எனது சுய ரூபத்தை) **காண்பீர்கள்!" என்று நான் கூறியபோது, அவர் உறுதியளித்தார். அவர் உண்மையிலேயே ஒரு நல்ல பெண்மணி. உண்மையில், அவர் என்ன தியாகம் செய்தார் என்று உங்களுக்குத் தெரியாது.**

**நான் மஹாராஜுக்கு அப்போது அளித்த வாக்குறுதி, நான் கோதாவரிக்கு வழங்கிய அறிவுறுத்தலை, இன்று அவர் பின்பற்றியதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது.**

சுருக்கமாக, பாபா குழுவிற்கு அறிவித்தார், **"முழுப் பிரபஞ்சத்தின் திறவுகோலும் எனது கைகளில் உள்ளது! முழுப் படைப்பின் துடிப்பும் என்னால் கட்டுப்படுத்தப்படுகிறது! இன்று பூஜ்ஜியம் உடைத்தெறியப்பட்டது!"**

பாபா தனது எழுத்துப்பலகையில் விரிசல் விழுந்த எழுத்துக்களைப் பற்றிக் குறிப்பிடவிருந்தபோது, எரச் குறுக்கிட்டு, "ஆனால், அதில் நான்கில் மூன்று பங்கு மட்டுமே போய்விட்டது; நான்கில் ஒரு பங்கு இன்னும் எழுத்துப்பலகையில் இருக்கிறது!" என்றதும், அவருடைய பேச்சைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

கோதாவரி மாயைப் பற்றி தொடர்ந்து கூறிய பாபா, **"அவர் உண்மையிலேயே நல்லவர். அவர் எதை ஏற்றுக்கொண்டார் என்று உங்களுக்குத் தெரியாது. அவரிடம் நான் உண்மையான பெண்மையைக் காண்கிறேன்"** என்று முடித்தார்.

மாலை 4:30 மணிக்கு ஸாக்கோரியை விட்டு வெளியேறி, பாபா, அஹமதுநகர் திரும்பிச் சென்று, குல்மாயிடம் விடைபெற்றார். எரச், நரிமன், மெஹர்ஜி, ஆதி சீனியர் ஆகியோருடன் பாபா, பூனா சென்றடைந்து, அன்று இரவும், அடுத்த நாளும் பிந்த்ரா மாளிகையில் தங்கினார். காடேக்கர், பெஹராம் ஆகியோரை அங்கு சந்தித்தார். மார்ச் 21ஆம் தேதி பாபாவும், பெண்மணிகளும்

வனோவ்ரியில் (WANOWRI) தங்கியிருந்த ஆதி ஜூனியர், அவரது மனைவி ஃப்ரீனியின் இல்லத்திற்குச் சென்றனர். அன்று பிற்பகல் பிந்த்ரா மாளிகையில் ஜால்பாய் ஏற்பாடு செய்த கவாலி நிகழ்ச்சி நடைபெற்றது. பாபாவும் பெண் மண்டலியும் 1954 மார்ச் 22 திங்கட்கிழமை காலை மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றனர்; நரிமனின் காரில் மேலும் சிலருடன் ஆதி சீனியர் பின்தொடர்ந்தார். ஸாக்கோரியிலிருந்து திரும்பி வந்த பிறகு, விலூ வில்லாவில் தங்கியிருந்த ஆண் மண்டலி, மார்ச் 21ஆம் தேதி அன்றே மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றனர்.

சிறுவன் ஈஸாவும் மண்டலியுடன் ஸாக்கோரிக்கு வந்திருந்தான்; வழக்கம் போல, பாவ் கல்சூரிக்கு பல சிரமங்களைக் கொடுத்தான். விலூ வில்லாவில், ஈஸாவிற்கு தனி ஏற்பாடு செய்யாவிட்டால் உணவு உண்ணப்போவதில்லை என மறுத்தான். அவர்கள் மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றதும், ஈஸா, பாபாவிடம் தான் டெஹ்ரா டூனுக்குச் செல்ல விரும்புவதாகக் கூறியபோது, பாபா அவனைத் திரும்பிச் செல்ல அனுமதித்தார். இந்த நேரத்தில், கிஷன் ஸிங்கும் டெஹ்ரா டூனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆந்திரா பயணம் முடிந்ததும், கிருஷ்ணாஜி, யஷ்வந்த் ராவுடன் ஸாக்கோரிக்குச் சென்றிருந்தார். அவர் மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்ததும், பாபா அவரை தென்னிந்தியாவில் அவரது சொந்த ஊரான மலபாருக்கு (MALABAR) அனுப்பி, நான்கு மாதங்களில் திரும்பி வருமாறு அறிவுறுத்தினார்.

மஹாபலேஷ்வருக்கு வந்த பிறகு, ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தை பாபா, எரச்சிற்கு எடுத்துரைக்கத் தொடங்கினார். எரச் முக்கிய கருத்துக்களைக் குறிப்பெடுத்து, இரவில் வாக்கியங்களாக விரிவாக்கி, மறுநாள் பாபாவிடம் மீண்டும் படித்துக் காட்டி, வேண்டிய திருத்தங்களைச் செய்தார்.

1954 ஏப்ரல் மாதத்தில், பாபாவைப் பற்றி உரை நிகழ்த்துவதற்கும், அவரது பெயரைப் பரப்புவதற்கும், பாவ் கல்சூரி மத்தியப் பிரதேச மாநிலம் முழுவதும் மூன்று மாத சுற்றுப்பயணத்திற்காக அனுப்பப்பட்டார். முதலில், பாவ் செல்ல விரும்பாத போதும், இது முக்கியமான வேலை என்று பாபா கூறினார், அதன் விளைவாக பலர் பாபாவின் பக்தர்களாக மாறினர். நானா கேரும் பாவ் கல்சூரியுடன் பயணத்தில் இணைந்தார்.

அவர்களின் பயணத்தின் போதுதான் மஹாராஷ்டிராவின் 78 வயதான புகழ் வாய்ந்த துறவி, காட்கே மஹாராஜ் (GADGE MAHARAJ, அவரைப் பின்பற்றும் பல பக்தர்கள் இருந்தனர்) மெஹர் பாபாவின் அன்பின் அரவணைப்பில் வந்தார். பாவ், நானா இருவரும், காட்கே மஹாராஜின் பக்தர்களின் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்றனர். பாவ், மெஹர் பாபாவைப் பற்றி சில வார்த்தைகளை எடுத்துரைக்க, துறவி காட்கே மஹாராஜிடம் அனுமதி கோரிய வேளையில்,

அவர் ஒப்புக்கொண்டு இருவரையும் மேடையில் காத்திருக்குமாறு கூறினார். மஹாராஜ், கடவுள் மற்றும் கிருஷ்ணரைப் பற்றி பாடிய கீர்த்தனை பல மணி நேரம் நீடித்தது.

பாவ் கல்சூரி யோசிக்கத் தொடங்கினார்: "இந்த முதியவர் என்னை ஏமாற்றிவிட்டார்! நான் பேச முடியும் என்று அவர் என்னிடம் கூறினார், ஆனால் அவர் பாடிக்கொண்டே இருக்கிறார்!... நாம் புறப்படலாமா?" என்று பொறுமையை இழந்து கொண்டிருந்த நானாவைப் பார்த்து கேட்டார்.

அதற்குள் நள்ளிரவாகிவிட்டது. மாபெரும் கூட்டம் கீர்த்தனையில் மூழ்கியிருந்தது. நள்ளிரவுக்குப் பிறகு, காட்கே மஹாராஜ், பாவ் கல்சூரியிடம் உரையை நிகழ்த்துமாறு கூறினார். பாவ் இரண்டரை மணிநேரம் பேசினார்; காட்கே மஹாராஜின் கீர்த்தனைகள் பார்வையாளர்களின் ஆர்வத்தை உச்சக்கட்டத்திற்கு உயர்த்தி, இந்த யுகத்தின் அவதாரப் புருஷரைப் பற்றி கேட்க அவர்களைத் தயார்படுத்தியதாக உணர்ந்தார்.

அந்த ஆண்டின் பிற்பகுதியில் மெஹர் பாபாவை சந்திப்பதற்காக காட்கே மஹாராஜ் அஹமதுநகர் வந்தார்.

1954 ஏப்ரல் 18ஆம் தேதி, ஒரு குகையில் தங்கியிருந்த மேல் நிலை மஸ்த் ஒருவர், கோலாப்பூரிலிருந்து மஹாபலேஷ்வருக்கு, மிக்க சிரமத்துடன் அழைத்து வரப்பட்டார். அதைத் தொடர்ந்து, நீல்கந்த்வாலா மஸ்தையும் குமார், அழைத்து வர முடிந்தது. மிகவும் மகிழ்ச்சியடைந்த பாபா, மஸ்தை ரிஷிகேஷிற்கு திருப்பி அனுப்புவதற்கு முன்பு, சில நாட்கள் அவருடன் பணிபுரிந்தார்.

மெஹர்ஜி ஏப்ரல் 17 அன்று, சில நாட்களுக்காக மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டார். பத்து நாட்களுக்குப் பின்னர், 29ஆம் தேதி, பாபா, மஹாபலேஷ்வரிலிருந்து எரச், பெண்டு, குஸ்தாஜி, பைதூல் ஆகியோருடன், தார்வார் (DHARWAR) நகரில் மஸ்த் பணிக்காக மெஹர்ஜியின் காரில் புறப்பட்டார். தார்வாரில், பாபா, இரண்டு நாட்களில் பதினொரு மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, தனது பணியை நிறைவுசெய்து, மே 1 அன்று மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்தார்.

1954 மே 14 அன்று, பாபா, பெண் மண்டலியுடன், மெஹர்ஜி மற்றும் நரிமனின் கார்களில் பஞ்சகணிக்கு அருகிலமைந்த பிலாருக்குச் (BHILAR) சென்றார்; அங்கு மூன்று நாள் விடுமுறைக்குப் பின்னர், அவர்கள் மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்தனர். மெஹரா, மெஹரு இருவரும் பாபாவின் தனிப்பட்ட தேவைகளை தொடர்ந்து கவனித்து வந்தனர்; எலிஸபெத் பேட்டர்ஸன், மர்டில் பீச்சில் கிட்டி டேவி, நியூயார்க்கில் ஐவி டியூஸ், ஃபிலிஸ் ஃபிரடெரிக், சுவிட்சர்லாந்தில் ஹெடி மெர்டென்ஸ், ஐரீன் பில்லோ, லண்டனில் டிலியா டிலியோன் மற்றும் பிற நெருங்கிய பெண்மணிகளைப் போன்ற மேற்கத்திய அன்பர்களுடன் மணி தனது கடிதப் பரிமாற்றத்தில் மும்முரமாக

இருந்தார். கோஹெர் பெண்மணிகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தினார்; நாஜா சமையல் துறையை கையாண்டார்; ரானோ வீட்டு விவகாரங்களை மேற்பார்வையிட்டு, அவரது ஓவியத்தில் பணிபுரிந்தார்.

மண்டலியின் தனிப்பட்ட கடமைகள் அவர்களை இரவும் பகலும் ஏதோ ஒரு வகையில் ஈடுபடுத்திக் கொண்டே இருந்ததுடன், அவர்களின் கடமைகளில் மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருந்தன. உதாரணமாக, பெண்டு மெஹராபாத்தின் மேலாளராக இருந்தாலும், எப்போதேனும் அவர் கழிவறைகளை சுத்தம் செய்தல், தண்ணீர் கொள்கலன்களை நிரப்பிக் கொண்டு வருதல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு மண்டலியும் இவ்வாறே நடத்தப்பட்டனர். எழுத்துப்பலகையை வாசிப்பது, ஆங்கிலக் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்வது தவிர, இதர வேலைகளையும் எரச் செய்ய வேண்டியிருந்தது. விஷ்ணு பஜாருக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்கி வருவதோடு, வரவு செலவு கணக்குகளை சீராக வைத்து, வேறு பல வேலைகளையும் கவனித்து வந்தார். குஸ்தாஜி, அலோபா, பாவ் கல்சூரி, பைதூல், டாக்டர் டான், டாக்டர் நீலு, காக்கா மற்றும் பிறருக்கும் இது போன்ற கடமைகள் வழங்கப்பட்டன.

மஹாபலேஷ்வரில் கிருஷ்ணா நாயர், பாபாவின் இரவு கண்காணிப்பாளராக பணிபுரிந்தார்; தினமும் காலையில் பாபா நீராடுவதற்குத் தேவையான வெந்நீரை தயார் செய்யும் கடமையும் அவருக்கு இருந்தது. ஒரு நாள் அவர் தற்செயலாக, தண்ணீரை சற்று அதிகமாகச் சூடாக்கி விட்டதால், பாபா தண்ணீரில் விரலை வைத்து, அது கொதித்துக் கொண்டிருந்ததாக புகார் கூறினார். அவர் கிருஷ்ணாவைக் கடிந்து கொண்டார்; **“என்னைக் கொல்ல பார்க்கிறீர்களா?” என் உடல் என்ன எரிய வேண்டுமா?”** என்று கேட்டார்.

பாபா, அவரைக் கடுமையாகக் கண்டித்தார், **“நீங்கள் ஏன் என்னுடன் இருக்கிறீர்கள்? நீங்கள் போய்விட்டால் நன்றாக இருக்கும்! இப்போது நீங்கள் என்னுடன் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உங்களால் எந்தப் பிரயோஜனமுமில்லை! நீங்கள் உண்டு உறங்க மட்டும் செய்கிறீர்கள், நீங்கள் உயிரை விட்டால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்! என்னைக் கொல்ல முயற்சிப்பதற்கு பதிலாக நீங்கள் ஏன் சாகக்கூடாது?”** இது அடிக்கடி நடந்து வந்தது. பாபா விடாப்பிடியாக இருந்தார், கிருஷ்ணா நிலைகுலைந்து போனார். அவரை அங்கிருந்து போகச் சென்னதும், கிருஷ்ணா தனது அறைக்குள் சென்று, விரக்தியில் 22 தூக்க மாத்திரைகளை விழுங்கி, தற்கொலை செய்துகொள்ள முயன்றார்.

இதற்கிடையில், பாபா அங்கு வந்தவர்களை உள்ளே அழைத்தார். மும்பையிலிருந்து வந்த நரிமன், அர்னவாஸ் இருவரும் ஒரு கூடை நிறைய மாம்பழம் கொண்டு வந்திருந்தனர். பைதூல், டான், எரச், குஸ்தாஜி, கைக்கோபாத், காக்கா, நீலு, பெண்டு, ஸவக், விஷ்ணு ஆகியோருக்கு பாபா, தலா ஒரு மாம்பழத்தைப் பகிர்ந்தளித்து, அதை அப்படியே வைத்திருந்து மறுநாள் உண்ணுமாறு அறிவுறுத்தினார். பாபா, கிருஷ்ணாவை வரவழைத்தார், அவர்

உள்ளே நுழைந்தபோது உயிரற்றவர் போலத் தென்பட்டார். அவருடைய கண்கள் வெண்மையாக இருந்தன. பாபா ஒரு மாம்பழத்தை அவரிடம் கொடுத்து, "**இதை உடனே உண்ணுங்கள்**!" என்று கட்டளையிட்டார்.

கிருஷ்ணா அதை உண்டதும் மாத்திரைகளை வாந்தி எடுத்தார். உடல்நிலை மிகவும் சரியில்லாமல் இருந்ததால், அவரால் நிற்க முடியவில்லை, நடுங்கிக் கொண்டிருந்தார். மாலையில் இரவு கண்காணிப்பாளர் பணிக்காக பாபாவின் அறைக்கு வந்தபோது பாபா, "**இன்று உங்களுக்கு என்னவாயிற்று**?" கிருஷ்ணா அமைதியாக இருந்தார், பாபா, மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்கவே, அவர் உண்மையை ஒப்புக்கொண்டார்.

பாபா சீற்றமடைந்து, டாக்டர் கோஹெரை அழைத்து கிருஷ்ணாவிற்கு ஏதேனும் மருந்து கொடுக்குமாறு அறிவுறுத்தினார். பாபா அவரிடம் ஆரஞ்சு சோடா பாட்டில் ஒன்றைக் கொடுத்து, அதை அருந்தச் சொன்னார். அப்போது அவர், "**எனது பாதத்தை, ஒரு கணம் கூட விடாமல் தொடர்ந்து அழுத்துங்கள்**!" என்றார். மிகவும் பலவீனமாக உணர்ந்ததால், கிருஷ்ணாவால் அமர முடியவில்லை, ஆனால் கட்டளைப்படி, பாபாவின் பாதத்தை அழுத்திக் கொண்டிருந்தார். பல மணி நேரம் கடந்தது. அதிகாலை 4 மணியளவில், ஸவக், கிருஷ்ணாவை அவரது அறைக்கு அழைத்துச் சென்றார், நாள் முழுவதும் அங்கே தூங்கினார். மாலை 6:30 மணிக்கு பாபா வந்து அவரை எழுப்பி, அவர் எப்படி உணர்கிறார் என்று கேட்டார். அப்போது கிருஷ்ணா அவரது சாதாரண நிலைக்கு வந்துவிட்டார். ஒரு மாம்பழம் அவரை அவமானத்திற்குரிய மரணத்திலிருந்து காப்பாற்றியது!

பாபா, கிருஷ்ணாவை மன்னித்தார், ஆனால், அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. மறுநாள் காலை, பாபா, மண்டலியை அழைத்து, நடந்ததைத் தெரிவித்து, கிருஷ்ணாவின் முட்டாள்தனமான செயலுக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கேட்டார். '**ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவுக்கு பதிலாக, கிருஷ்ணா ஒரு வருடம் முழுவதும் ஒரு வேளை மட்டுமே உண்ண வேண்டும்**' என்று பாபாவே முடிவு செய்தார், கிருஷ்ணா அவ்வாறே செய்தார்.

பாபா மஹாபலேஷ்வரில் மக்களை சந்திப்பதை நிறுத்திவிட்டார், தனிப்பட்ட நேர்காணல், சந்திப்பு எதையும் வழங்கவில்லை. அந்த நேரத்தில், 1947ஆம் ஆண்டில் பாபாவை சந்தித்த, மஹாபலேஷ்வரில் வாழும் கோஹியார் சத்தாராவாலா (KOHIYAR SATARAWALA) என்பவர், பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்படுவார் என்ற நம்பிக்கையில், பாபாவிற்கு தினமும் ரோஜா மலர்களை அனுப்பிவைத்தார். பிற நபர்களும் அவரை சந்திக்க ஆர்வமாக இருந்தனர். பாபா இணக்கம் தெரிவித்ததால், 1954 மே 25 செவ்வாய் அன்று, பொது தரிசனம் வழங்கப்பட்டது. அங்குக் கூடியிருந்த கிட்டத்தட்ட 400 ஆண், பெண்களில் ஏழைகளும் செல்வந்தர்களும் அடங்குவர்; ஆனால் தரிசனத்திற்கு

வந்திருந்த அனைவரில், கோஹியார் குடும்பம் மட்டுமே பாபாவின் அன்பில் நெருக்கமாக இருந்ததை நிரூபித்தனர்.

ராம்ஜூ அவரது குடும்பத்தினருடன் அஹமதுநகரிலிருந்து குடிபெயர்ந்து, இப்போது சத்தாராவில் வாழ்ந்து வந்தார். பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ராம்ஜூ சத்தாராவில் இரண்டு பங்களாக்களை வாடகைக்கு எடுத்தார் - ஒன்று 'கிராஃப்டன்' (GRAFTON), பாபா மற்றும் பெண்மணிகளுக்காகவும் (79-ஏ கிராஃப்டன் சாலையில் அமைந்தது), மற்றொன்று ஆண் மண்டலிக்கு 'ரோஸ்வுட்' (ROSEWOOD) 200 கெஜம் தொலைவில் உள்ளது. ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்ததும், பாபா, மண்டலியுடன் 1954 ஜூன் 2 புதன்கிழமை அன்று மஹாபலேஷ்வரிலிருந்து சத்தாராவிற்கு மாலையில் வந்து சேர்ந்தார். அடுத்த இரண்டரை வருடங்கள் அங்கேயே இருக்கப்போவதாகத் திட்டம்.

சத்தாராவில் இருந்த போது, பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு, பிரத்யேகமாக, செப்டம்பர் மாத இறுதியில் மெஹராபாத்தில், ஒரு கூட்டத்தை நடத்துவதற்கான திட்டங்களை பாபா விவாதிக்கத் தொடங்கினார். ஜூன் 10 அன்று அவரது அறிவுறுத்தலின் பேரில், ஆதி சீனியர், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் பாபா அன்பர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார். சுற்றறிக்கையின் ஒரு பகுதி பின்வருமாறு:

**...மேற்கூறியபடி, மெஹராபாத்தில் நடைபெறவிருக்கும் கூட்டம் அல்லது கூட்டங்களில், மெஹர் பாபா, தனது இக்கால அவதார புருஷரின் வருகை மற்றும் இந்த வாழ்க்கையில் அவர் செய்த பணி குறித்து, முற்றிலும் சில மிக முக்கியமான விஷயங்களை தெளிவுறக் கூற விரும்புகிறார். ஆந்திரா மாநிலம், ராஜமுந்திரியில் நடந்த, சேவகர்களின் பணி குறித்த கூட்டத்திற்காக விடுத்த அழைப்பு போலவே, இந்த மெஹராபாத் கூட்டமும், அவர், தனது தற்போதைய பௌதீக உடலைத் துறப்பதற்கு முன்பு நடத்தும் முதல் மற்றும் கடைசி சந்திப்பு ஆகும்.**

**1954 செப்டம்பர் 12ஆம் தேதி அஹமதுநகரில் நடைபெறவிருக்கும் வெகுஜன தரிசன நிகழ்ச்சியைத் தவிர, அதில் அவர் ஒரு செய்தி அல்லது செய்திகளை வழங்குவது போல, மேலே குறிப்பிட்ட மெஹராபாத் சந்திப்பிலும், அவர் ஒரு செய்தி அல்லது செய்திகளை வழங்கும் கடைசி நிகழ்வாக இருக்கும்.**

**மெஹர் பாபாவின் பணியின் பல கட்டங்களில், செய்திகள் வழங்குவதைக் குறிக்கும் செயலானது, 1954 அக்டோபர் ஆரம்பத்திலிருந்து நிறுத்தப்படும். அவை உறுதியாகவும், உண்மையிலும் நிறுத்தப்படும்.**

கூட்டத்தைப் பற்றி விவாதிக்க ஆதி, பாதிரி, ஸரோஷ் ஆகியோர் ஜூன் 15 அன்று சத்தாராவிற்கு அழைக்கப்பட்டனர். ஹிந்தி இதழான மெஹர் புக்காரின் ('MEHER PUKAR', மெஹரின் அழைப்பு) முதல் இதழ் ஹமிர்பூரில் வெளிவரவிருந்தது, மேலும் - பாபா, செய்திகள் வழங்குவதை நிறுத்துவதற்கு முன்பு - கேஷவ் நிகம் பாபாவிடமிருந்து ஒரு செய்தியைக் கோரி எழுதியிருந்தார். ஜூன் 19ஆம் தேதி,

பாபா அனுப்பிய தொலைத்தந்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "**பாபாவின் அமைதியான புக்கார் (குரல்) உலகின் எல்லா வார்த்தைகளையும் விட எல்லையற்றதாகப் பேசுகிறது**."

1954 ஜூன் 26 அன்று, எரச், பெண்டு, பைதூல், டாக்டர் நீலு, குஸ்தாஜி ஆகியோருடன் பாபா மஸ்த் பணிக்காக ஹூப்ளி (HUBLI) புறப்பட்டுச் சென்றார். வழியில், பாபா இஸ்லாம்பூர் (ISLAMPUR) மற்றும் கோலாப்பூரில் வாழும் மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். கோலாப்பூரில், கைவண்டி இழுக்கும் ஒருவரை அவர்கள் காண நேர்ந்தது, யார் என்று கற்பனை செய்து பாருங்கள்? வேறு எவருமல்ல, காஷ்மீரைச் சேர்ந்த ஹபிபுல்லா பெய்க் (HABIBULLAH BAIG) என்ற பாபாவின் நெருங்கிய பக்தர். பாபா அவரைத் தடுத்து நிறுத்தி உரையாடினார்: "**உண்மையிலேயே நீங்கள் அதிர்ஷ்டசாலி! கவலைப்படாதீர்கள், எனது பார்வை உங்கள் மீது உள்ளது!**"

பாபா, அப்போது ஹூப்ளி நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். ஹூப்ளியில் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பின்னர், 29ஆம் நாள், மெஹர்ஜி, எரச், ஜால்பாய் ஆகியோருடன் மெஹர்ஜியின் காரில் அஹமதுநகருக்குப் பயணம் செய்தார். தனியாக மெஹராபாத் மேல் மலைக்குச் சென்ற அவர், சில மணி நேரம் மலையில் அமர்ந்திருந்தார், ஆனால் அவரைப் பார்க்க ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. கீழ் மெஹராபாத்தில், அவர் பாதிரி, காளேமாமா, கொத்வால் குடும்பத்தினர், சிது மற்றும் பலரை சந்தித்தார்.

பாபா, இந்த வருகையின் போது, காளேமாமாவிடம் குறிப்பாக கவனம் செலுத்தினார்; பாபா, அவரைப் பார்ப்பதற்காக அஹமதுநகருக்கு வந்ததாகத் தோன்றியது. 78 வயதாக இருந்தபோதிலும், காளேமாமா நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார், ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பின்னர், 1954 ஆகஸ்ட் 16 அன்று மெஹராபாத்தில் நடந்த சந்திப்பு, அவரது கடைசி சந்திப்பாக நிரூபிக்கப்பட்டது, அவர் இந்த வாழ்க்கையிலிருந்து பிரிந்து சென்றார்.

மெஹராபாத் குடியிருப்பாளர்களை சந்தித்த பிறகு, பாபா காக்காவைப் பார்க்க, சிறிது நேரம் மெஹராஸாத்திற்குச் சென்று, பின்பு மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்; அங்கு அவர் ஆஷியானாவில் தங்கினார். மும்பையில் சில மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பிறகு, ஜூலை 2 அன்று சத்தாரா திரும்பினார்.

மெஹராபாத்தில் பாபா விவாதித்த விஷயங்களில் ஒன்று, அங்கு, தனது குடும்பத்துடன் வாழ்ந்த ஸவக் கொத்வால், சத்தாராவில் பாபாவுடன் இணைவது குறித்தது. ஸவக் சத்தாராவிற்கு வந்தபோது, மீண்டும் இரவு கண்காணிப்புப் பணிகளை கிருஷ்ணாவுடன் பகிர்ந்து கொண்டார். பல ஆண்டுகளாக, கொத்வால் குடும்பம், அரன்காவ்ம் அருகே அமைந்த குடும்பக் குடியிருப்பு ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தது. இருப்பினும், அஹமதுநகரில் நல்ல பள்ளிக்கூடங்கள் இல்லாததாலும், ஸவக்கின் குழந்தைகளுக்கு உயர்கல்வி தேவை என்பதாலும், பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, ஸவக்கின் மனைவி நர்கிஸும்

அவர்களது மூன்று குழந்தைகளும் ஜூலை 4 அன்று மெஹராபாத்தை விட்டு வெளியேறி மும்பையில் வாழத் தொடங்கினர்.

1954 ஜூலை 5ஆம் நாள், பாபாவிற்கு ஜூலை 7 முதல் செப்டம்பர் 30 வரை 'எவரும் அனுப்பிய' கடிதங்கள் எதுவும் வாசிக்கப்பட மாட்டாது என்று ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் அன்பர்கள் அவசரமான, முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் தொலைத்தந்தி அனுப்பலாம். ஜூலை 8 அன்று, 'கேப்ரியல் பாஸ்கல் (GABRIEL PASCAL) நியூயார்க்கில் 60 வயதில் காலமானார்' என்ற செய்தி, தொலைத்தந்தி மூலமாக வந்தது. பாபா, உடனடியாக பதில் தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார்: **"பாஸ்கல் என்னிடம் வந்துள்ளார்**." பாபாவைப் பற்றிய திரைப்படம் எடுப்பது குறித்த தனது பார்வையை பாஸ்கல் உணரவில்லை என்றாலும், 'ஃபீனிக்ஸ்' (PHOENIX) இறுதி வரை அவரது அன்பில் உறுதியாக இருந்தார்.

1954 ஜூலை 10 சனிக்கிழமை, பாபாவின் மௌன நாள், அன்று பாபாவின் அன்பர்கள் அனைவரும் உபவாசம் மேற்கொள்ளவும், 10ஆம் நாள் மாலை 6:00 மணி முதல், 11 மாலை 6:00 மணி வரை, முழு மௌனம் கடைப்பிடிக்கவும், ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது; அனைவரும் அவரவர் தேர்ந்தெடுக்கும் கடவுளின் எந்தவொரு பெயரையும் உள்ளளவில் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த 24 மணி நேரத்தில் அவர்கள் மூன்று முறை தேநீர் அல்லது காஃபி அருந்த அனுமதிக்கப்பட்டனர், மேலும் அவர்கள் விரும்பும் அளவுக்கு தண்ணீர் பருகலாம்.

ஜூலை 10 முதல் ஏழு நாட்கள் உபவாசம் இருக்க பாபா முடிவு செய்தார், மேலும் அவருடன் உபவாசத்தில் பங்கெடுக்க ஏழு பேரைத் தேர்ந்தெடுத்தார்: எரச், பெண்டு, பைதூல், சதாஷிவ் பாட்டீல், கேஷவ் நிகம், நானா கேர் மற்றும் டாக்டர் கனகதண்டி சூர்யநாராயணா. எரச், பெண்டு, பைதூல் மூவரும் சத்தாராவில் பாபாவுடன் இருந்த அந்த நேரத்தில், இதர நான்கு அன்பர்களுக்கும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பாபா, 13ஆம் தேதி தனது உபவாசத்தை நிறைவு செய்து, பிற அனைவரிடமும் அதை கைவிடுமாறு கட்டளையிட்டார்.

எரச்சிடம் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்திற்கான பாபாவின் விளக்க உரை, சத்தாராவிலும் தொடர்ந்தது, மேலும் எரச் தனது எழுத்துப் பணியை ஜூலையில் நிறைவு செய்தார். ஜூலை தொடக்கத்தில் தனது சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பி வந்த பாவ் கல்சூரிக்கு, அவரது குறிப்புகளை அத்தியாயங்களாக ஒழுங்கமைத்து கையெழுத்துப் பிரதியை தட்டச்சு செய்யும் கடமை வழங்கப்பட்டது. ஓர் உள்ளூர் தட்டச்சுக்காரர் பணியமர்த்தப்பட்டார்; அவர் அதைத் தட்டச்சு செய்வதில், ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பணிபுரிந்தார். தட்டச்சு செய்யும் போதெல்லாம் பாவ் அவருடைய குறிப்பை வாசிப்பதை

வழக்கமாகக் கொண்டதால், கையெழுத்துப் பிரதி சுமார் ஒரு வாரத்தில் முடிக்கப்பட்டது.

இந்த நேரத்தில், கிருஷ்ணாஜி சத்தாராவிற்குத் திரும்பி வந்தார். நீண்ட தலைமுடி, முழு தாடியுடன் சாதுவைப் போல் உடை அணிந்திருந்தார். அவர் குருவாக பாசாங்கு செய்ததாகத் தோன்றியது. பாபா, பாவ் கல்சூரியை கிருஷ்ணாஜியின் சேவகராகத் தம் வசம் வைத்திருந்தார்; அவரது சார்பாக பாவ் கல்சூரியின் 'கடமைகள்' - அவர் நீராட தண்ணீரை சூடாக்குவது, படுக்கையைத் தயார்செய்வது, அறையை ஒழுங்கமைப்பது, அவரது உணவைக் கொண்டு வருவது - இரவில் அவரது கால்களை அழுத்தி விடுவதும் அதில் அடங்கும்!

பாபா, அவருக்கே உரித்தான காரணங்களுக்காக, குறிப்பாக கிருஷ்ணாஜியை ஸாக்கோரியிலிருந்து விலக்கி, அங்கு அவருடைய மோசமான செல்வாக்கைச் செலுத்த இடந்தராமல், மனம் போன போக்கிலேயே அவரை இருக்கச் செய்தார். கிருஷ்ணாஜி விரும்பியதை எல்லாம், பாபா வழங்கினார், எதையும் மறுக்கவில்லை; சிறந்த உணவு, தேநீர், புகையிலை அனைத்தும் வழங்கப்பட்டது, மேலும் அவர் பாவ் கல்சூரியைத் தனது தனிப்பட்ட பணியாளராக, கீழ்த்தரமாக நடத்தினார். பாபாவின் கட்டளையின் காரணமாக, பாவ் இத்தகைய அவமானத்திற்குரிய சூழ்நிலைகளை அனுபவிக்க நேரிட்டது. ஈஸா அங்கிருந்து வெளியேறிச் சென்றாலும், இப்போது கிருஷ்ணாஜியின் வெறுப்பும், வருத்தமூட்டும் செயல்களும் அவனது இடத்தைப் பிடித்தன!

இதற்கிடையில், செப்டம்பர் மாத கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, பாபா, பெண்டுவை மெஹராபாத்திற்கு அனுப்பினார்; அங்கு பாதிரியுடன் இணைந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய தேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ஆண்கள் தங்குவதற்குத் தேவையான பணிகளில் அவர் ஈடுபட்டார். மேற்கத்திய அன்பர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் ஸரோஷ் மற்றும் விலூவிடம் ஒப்படைக்கப்பட்டன, அவர்களுக்கு உதவ பாபா இந்த நேரத்தில் ஸவக்கை அஹமதுநகருக்கு அனுப்பினார். வெவ்வேறு அறிவுறுத்தல்கள், பாபாவின் சுற்றறிக்கைகள் மற்றும் செய்திகளை வெளியிடுவதற்காக ஆதி சீனியர் அவ்வப்போது சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார்.

1954 ஆகஸ்ட் 30 அன்று, பாபா, பெண் மண்டலியுடன் பூனா சென்றார். பூனாவின் புறநகர் பகுதியான வானோவ்ரியில் வாழ்ந்து வந்த ஆதி ஜூனியர், ஃபிரீனி ஆகியோரின் வாடகை வீட்டில் அவர்கள் தங்கியிருந்தனர்; மேலும், அவர்கள் நடைபயிற்சி செய்யக்கூடிய உள்ளூர் தோட்டங்களுக்கு அடிக்கடி வாகனங்களில் செல்வதுண்டு. ஒரு நாள் அவர்கள் ராம்டேக்டி (RAMTEKADI) மலைக்கு காரில் சென்றனர், அங்கு, பானி பட்டான் பாபா (PANI PATHAN BABA) தர்காவிற்கு அருகில் வாழ்ந்த ஒரு மஸ்தை பாபா தொடர்பு கொண்ட வேளையில், பெண் மண்டலி காரில் காத்திருந்தனர். பாபா தொடர்பில் மகிழ்ச்சி அடைந்தார்.

அஹமதுநகர் செல்வதற்கு முன்பு, பாபா, பூனாவில் இருந்த ஒரு வாரத்தில், 'பாபா ஹவுஸ்' (BABA HOUSE - ஜால்பாய், பெஹராம், பெரின் மற்றும் அவர்களது குழந்தைகள்), 'பம்கின் ஹவுஸ்' (PUMPKIN HOUSE - பாபா அவர்கள் வீட்டில் இருந்தபோது ஆதி ஜூனியர், ஃப்ரீனி தங்கியிருந்த இடம்), 'பிந்த்ரா ஹவுஸ்' மற்றும் பூனாவில் பிற நெருங்கிய அன்பர்களையும் சந்தித்தார்.

1954 செப்டம்பர் 6 திங்கட்கிழமை, பாபாவும் பெண் மண்டலியும் பூனாவிலிருந்து மெஹராஸாத்திற்கு, ஸரோஷின் காரில், மெஹராபாத் கூட்டத்திற்காகப் புறப்பட்டுச் சென்றனர். நரிமனின் கார் ரானோவையும் இன்னும் சிலரையும் அழைத்து வந்தது. ஆண் மண்டலி தனித்தனியாகச் சென்று, மாலையில் வந்தனர். எரச், குஸ்தாஜி, பைதூல், கைக்கோபாத், கிருஷ்ணா ஆகியோர் பாபாவுடன் தங்குவதற்காக மெஹராஸாத்திற்குச் சென்றனர், இதர அனைவரும் மெஹராபாத்தில் தங்கினர். குமார் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். கிஷன் ஸிங் ஏற்கனவே வந்து மெஹராபாத்தில் மண்டலியுடன் தங்கியிருந்தார்.

இந்திய துணைக்கண்டத்தில் வாழும் ஏறக்குறைய 1,000 அன்பர்களும், மேற்கத்திய நாடுகளிலிருந்து 20 அன்பர்களும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேற்கத்திய அன்பர்கள், மெஹராபாத் மேல்மலையில் தங்குவதற்கான ஏற்பாடுகளை ஸரோஷ், விலூ, ஸவக் கொத்வால் மூவரும் செய்து வந்தனர்; கிழக்கத்திய அன்பர்கள் கீழ் மெஹராபாத்தில் தங்குவதற்கான வசதிகள் பெண்டு மற்றும் பாதிரியின் கண்காணிப்பில் செய்யப்பட்டன. பெண்டு அழைக்கப்பட்டவர்களுக்காக மரக் கட்டில்களைத் தயார் செய்தார், மேலும் ஒவ்வொரு கூடாரத்தின் மீதும் தகரத்தால் கூரை அமைக்கப்பட்டிருந்தது.

இரண்டு நாள் கூட்டத்திற்காக செய்யப்பட்ட இந்த ஏற்பாடுகள் அனைத்தும் மிகவும் விரிவானது என்று மண்டலியில் பலர் நினைத்தனர், ஆனால் பாபா, பெண்டுவை அவ்வாறு செய்யத் தூண்டினார்; அதைத் தவிர, இத்தகைய ஏற்பாடுகளுக்கு எந்தக் காரணமும் இல்லை, ஏனெனில் மழைக்காலம் பெரும்பாலும் முடிந்துவிட்டது. மென்மையான நிலத்தில், திறந்த வயல்வெளிகளில் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன, மழை பொழிவதாக இருந்தால், பங்கெடுப்பவர்கள் தரையில் தூங்குவது நன்றாக இருக்காது. எனவே, பெண்டு எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்தார். பாதிரி மின் விளக்குகள் மற்றும் தண்ணீர் வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கூட்டத்திற்கான வேலைகளில் உதவுவதற்காக, பாபா, நானா கேர், டாக்டர் கனகதண்டி, கோஹியார் சத்தாராவாலா, ரங்கோலே, பங்க்ராஜ், மினூ கராஸ், ஆதி துபாஷ் மற்றும் நோஸர் தாதாச்சாஞ்சி ஆகியோரை மெஹராபாத்திற்கு அழைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா, கிருஷ்ணாஜியிடம் ஒவ்வோர் இரவிலும் நள்ளிரவில் தொடங்கி, ஒரு மணி நேரம் தியானம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

அந்த நேரத்தில் அவரை எழுப்புமாறு கிருஷ்ணாஜி, பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தினார். மெஹராபாத்தில் ஐந்து மணிக்கு தேநீர் வழங்கப்பட்டதால், அனைவரும் அதிகாலை 4:00 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். நாள் முழுவதும், பாவ் கூட்டம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபட்டிருந்தார். அதுமட்டுமல்லாமல், கிருஷ்ணாஜியை எழுப்புவதற்காக அவர் நள்ளிரவு வரை விழித்திருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அவர்களிடம் அலாரம் கடிகாரம் இல்லை!

பாபா, செப்டம்பர் 7, 8 தேதிகளில் எரச், காக்கா, குமார் ஆகியோருடன் ஆயத்தப் பணிகளை ஆய்வு செய்ய மெஹராபாத்திற்குச் சென்றார். 8ஆம் தேதி மெஹராபாத் செல்லும் வழியில் அக்பர் அச்சகத்திற்கு விஜயம் செய்தார்.

அமெரிக்காவில், மில்ட்ரெட் கைல் (MILDRED KYLE), செப்டம்பர் 8ஆம் நாள், மர்டில் பீச்சில் மாரடைப்பால் காலமானார். பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பி வைத்தார்: “மில்ட்ரெட் என்னில் நித்திய அமைதியைக் காண்கிறார்.” பாபாவின் அனுமதியுடன், எலிஸபெத் அவரது அஸ்தியை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்; (மார்ச் 1955இல்) பாபா அவற்றை ஆதி சீனியரிடம் ஒப்படைத்து, மெஹராபாத் மேல் மலையில் இதர சமாதிகளுக்கு அருகில் புதைக்குமாறு பாதிரிக்கு அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், மேற்கத்தியர்களில் சிலர், ஏற்கனவே மும்பைக்கு வந்திருந்தனர். ஸரோஷ் செப்டம்பர் 4ஆம் நாள், ஏற்பாடு செய்திருந்த, பத்திரிகையாளர் சந்திப்பில் ஆதி சீனியர் உரையாற்றினார். செப்டம்பர் 11 அன்று, மெஹர்ஜி, நரிமன் இருவரும் மேற்கத்தியர்களை இரவு 10:30 மணிக்கு அஹமதுநகருக்கு அழைத்து வந்தனர். குழுவில் 23 முதல் 80 வயது வரையிலான 20 ஆண்கள் இருந்தனர்.

ஆண்கள் மெஹராபாத் மேல் மலையில் அமைந்த ‘மெஹர் ரிட்ரீட்’ (MEHER RETREAT) கட்டிடத்தில் மாடியில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஸவக் கொத்வால் அவர்களின் தேவைகளை கவனிக்க, முழு நேரமும் அவர்களுடன் இருந்தார். ஸரோஷ், விலூ இருவரும் பகலில் உணவுக்கான ஏற்பாடுகளை கண்காணிக்க வருவதுண்டு. ஸவக் தமானியாவும் இதில் உதவினார்; மேலும் டாக்டர் டான் அவர்களின் உடல் ஆரோக்கியத்தை கவனித்து, அனைத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதை உறுதி செய்தார்.

ஸரோஷ், ஆதி சீனியர் இருவரும் அஹமதுநகர் ‘வாடியா பார்க்’ (WADIA PARK) பூங்காவில் வெகுஜன, பொது தரிசனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இது 1954 செப்டம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தப்பட இருந்தது, மேலும் சில வாரங்களுக்கு முன்னரே இந்த நிகழ்வு, மாவட்டம் முழுவதும் நன்கு விளம்பரப்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக, நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் இரவு, அக்கம் பக்கத்து கிராமங்கள் மற்றும் நகரங்களிலிருந்து மக்கள் அஹமதுநகருக்கு வந்தபோது, சாலையோரங்களில் நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகள் அணிவகுத்து

நின்றன. வாடியா பார்க்கில் ஒரு பெரிய கூடாரம் அமைக்கப்பட்டது, அன்று காலையிலிருந்தே ஏராளமான மக்கள் குவியத் தொடங்கினர்.

செப்டம்பர் இறுதியில் நடைபெறும் மெஹராபாத் கூட்டம் ஆண்களுக்கானது என்பதால், மும்பை, பூனா, நாசிக், நாக்பூர், டெல்லி, டெஹ்ரா டூன் போன்ற இடங்களிலிருந்து ஏராளமான பெண் அன்பர்களும், பக்தர்களும் பாபாவை தரிசனம் செய்யும் வாய்ப்பை நாடி, வாடியா பார்க்கிற்கு வந்தனர்.

மேற்கத்திய அன்பர்கள் மெஹராபாத்திலிருந்து இரண்டு பெரிய வாகனங்களில் வாடியா பார்க்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பாபா, பெண் மண்டலியுடன் காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். மேடையில் அமர்ந்ததும் பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்: **“என்னைத் தலைவணங்கும் சிரமங்களிலிருந்து உங்களை விடுவிக்க, நான், மனிதன் மனிதனுக்குத் தலைவணங்குவதாக அல்லாமல், கடவுள் கடவுளுக்குத் தலைவணங்குவதாகக் கருதி, உங்கள் அனைவரையும் வணங்குகிறேன்!”** பாபா பின்பு மேடையிலிருந்து இறங்கி, தலை தாழ்த்தி, கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் வணக்கம் செலுத்தினார்.

மேடையில் ஏறிய அவர், **“உங்களுடனும், உங்களில் ஒருவராகவும் இருக்கும் என் உணர்வை நீங்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ள, நான் உங்கள் அருகில் அமர்ந்திருக்கிறேன்”** என்று கூறினார்.

மீண்டும் மேடையிலிருந்து இறங்கிய பாபா, முதலில் ஆண்கள் அமர்ந்திருந்த ஒருபுறமும், தொடர்ந்து பெண்கள் அமர்ந்திருந்த மறுபுறமும் அமர்ந்தார். மறுபடியும் ஒருமுறை படிகளில் ஏறி, ஏழு ஏழைகளின் கால்களைக் கழுவினார். அவர்களின் பாதங்களைத் தனது நெற்றியால் தொட்டு ஒவ்வொருவருக்கும் 51 ரூபாயை, கடவுளுக்குக் காணிக்கையாக (தேவ-தக்ஷிணை) செலுத்தும் முன்னர், அவர் இவ்வாறு அறிவித்தார்: **“உங்களில் ஒவ்வொருவரும் ஒருவிதத்தில் கடவுளின் அவதாரமாக இருப்பதால், நான் உங்களைத் தலைவணங்குவதில் மகிழ்ச்சியடைந்து, இந்த தேவ தக்ஷிணையை உங்கள் காலடியில் வைக்கிறேன்.”**

ஏழு வெவ்வேறு வண்ணப் புடவைகளை அணிந்த ஏழு இளம் பெண்கள், பாபாவின் ஆரத்தியைப் பாடினர். காடேக்கர் மற்றுமோர் ஆரத்தியையும் நிகழ்த்தினார். வரவேற்புக் குழு சார்பில் வரவேற்புரையை ஸரோஷ் வழங்கினார், இதர உரைகளை மேயர் மற்றும் பல்வேறு முக்கியஸ்தர்கள் நிகழ்த்தினர். ஒவ்வொருவரும் தத்தமது உரையை முடித்ததும் பாபாவிற்கு மாலை அணிவித்தனர்.

ஸரோஷ் பாபாவின் மூன்று செய்திகளை ஆங்கிலத்தில் வாசித்தார். முதலாவது அருமையான செய்தி ‘மெஹர் பாபாவின் அழைப்பு’ (MEHER BABA’S CALL):

**யுகங்கள் தோறும், தர்மத்தின் சுடர் தணிந்து மங்கலாய் எரியும்போது, அவதார புருஷர் தோன்றுகிறார். அன்பையும் சத்தியத்தையும் ஆதரவாகக் கொண்டு, அந்தச் சுடரை ஒளி வீசும்படி தூண்டி விடுகிறார். போர்கள்,**

பயங்கள், குழப்பங்கள், பகட்டுகளினால் உலகம் மயங்கும்போது, அவதார புருஷரின் அழைப்புமணி ஒலிக்கிறது: “அனைவரும் என்னிடம் வாருங்கள்!”

மாயையின் முகத்திரையின் காரணமாக, ஆதிகால புருஷரின் இந்த அழைப்பு, வனாந்தரத்தில் ஒரு குரலாகத் தோன்றினாலும், அதன் எதிரொலியும், மறு ஒலியும், காலம், இடம் முழுவதும் பரவி, முதலில் சிலரையும், இறுதியில் லட்சக்கணக்கான மக்களையும், அறியாமையின் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து எழுப்புகிறது. மேலும், மாயையின் மத்தியில், எல்லா குரல்களுக்கும் பின்னால் உள்ள தெய்வீகக் குரல், கடவுளின் வெளிப்பாட்டிற்கு சாட்சியாக மனிதகுலத்தை எழுப்புகிறது.

அதற்கான நேரம் வந்துவிட்டது. நான் மீண்டும் எனது அழைப்பை விடுத்து, அனைவரையும் என்னிடம் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சந்தேகங்களும், நம்பிக்கைகளும் ஒருபுறம் இருந்தாலும், அதை நான் பொருட்படுத்தாமல், அனைவரின் மீதும் நான் வைத்திருக்கும் எல்லையற்ற அன்பின் பொருட்டு, நான் அவதார புருஷராக, தொடர்ந்து வருகிறேன், மனிதகுலத்தின் அறியாமையால் மீண்டும் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுகிறேன், உண்மைப்பொருளை பொய்யும் போலியிலிருந்தும் வேறுபடுத்தி மனிதனுக்கு உதவுவதற்காக வந்திருக்கிறேன்.

மிகப்பெரிய மகத்துவமான நிலையும், மிகையான பணிவும் இயற்கையாகவும் எளிதாகவும் கைகோர்த்துச் செல்கின்றன.

எல்லாவற்றிலும் உயர்ந்தவர், ‘நானே உயர்ந்தவன்’ என்று கூறும்போது, அது தவறாத நிலையுடைய உண்மைப்பொருளின் தன்னிச்சையான வெளிப்பாடு மட்டுமே. அவருடைய மகத்துவத்தின் பலம், உயிர்த் துறந்தவர்களை மீட்பதில் அல்ல, மாறாக, உடல்-ஆவி இரண்டிலும் பலவீனமானவர்களின் கைகளில் தன்னை ஏளனம் செய்யவும், துன்புறுத்தவும், சிலுவையில் அறையவும் அனுமதிக்கும் போது, அவர் அடையும் மிகப்பெரிய அவமானத்தில் உள்ளது. காலங்கள் முழுவதும், மனிதகுலம், அது பின்பற்றும் மதங்களின் தராதரத்தின் மூலம், அவரது தெய்வீகத்தை அளவிடுவதால், அவதார புருஷரின் மகத்துவத்தின் அடிப்படையிலான பணிவின் உண்மையான ஆழத்தை அறியத் தவறிவிட்டது. உண்மைப்பொருளைக் குறித்து ஓரளவு அறிந்த உண்மையான துறவிகள் மற்றும் முனிவர்கள் கூட, அவதார புருஷரின் உண்மையான பணிவை எதிர்கொள்ளும் போது, அதன் பெருமையைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

ஆண்களும், பெண்களும் தங்கள் அறியாமை, வரம்புகள், மற்றும் பெருமைகளால், தனது தெய்வீகத்தைப் பிரகடனம் செய்யும் அவதார புருஷரை, சாதாரண மனிதனாக நியாயப்படுத்தும் போதும், அவர்களால் புரிந்துகொள்ள முடியாத உண்மைகளைக் கூறுவதற்காக அவரைக் கண்டிக்கும் போதும், யுகம் யுகமாக, வரலாறு மீண்டும் மீண்டும் வருகிறது. அவரை அவமானப்படுத்தும் வன்சொல் மற்றும் துன்புறுத்தலில்

அலட்சியமாக இருந்து, அவர் புரிந்துகொண்ட உண்மையான இரக்கத்தில், அவர் அறிந்த உண்மைப்பொருளின் தொடர்ச்சியான அனுபவத்தில், மற்றும் அவரது எல்லையற்ற கருணையில் அவர் அனைவரையும் மன்னிக்கிறார்.

எல்லாமே கடவுள். எல்லாம் அறிந்தவர் கடவுள். எல்லாவற்றையும் செய்கிறவர் கடவுள். அவதார புருஷர் தம்மை ஆதிகாலத்தவர் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும்போது, பூமியில் அவருடைய வெளிப்பாட்டைக் கடவுளே அறிவிக்கிறார். மனிதன், அவதார புருஷருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ பேசும்போது, அவன் மூலம் பேசுவதும் கடவுளே. அவதார புருஷர் மற்றும் மனிதகுலத்தின் மூலம் கடவுளே தம்மை பிரகடனப்படுத்துகிறார்.

நீங்களும் நானும் 'நாம்' அல்ல, ஆனால் 'ஒன்று' என்று எனது தெய்வீக அதிகாரத்துடன் உங்கள் அனைவருக்கும் கூறுகிறேன். உங்களுக்குள் எனது அவதார தன்மையை நீங்கள் அறியாமலே உள்மனதில் உணர்கிறீர்கள்; நீங்கள் ஒவ்வொருவரும் என்ன உணர்கிறீர்கள் என்பதை நான் உங்களில் உணர்கிறேன். இப்படி, எல்லோரும், எல்லாமும், ஒரே நேரத்திலும், எல்லா நேரத்திலும் ஒன்றாக இருக்கிறோம் என்ற அர்த்தத்தில், நாம் ஒவ்வொருவரும் அவதார புருஷரே!

கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவர் மட்டுமே உண்மையானவர் (ஒரே உண்மைப்பொருள்), இந்த அறுதியும், இறுதியுமான ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் பிரிக்க முடியாத ஒருமையில், நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம். கடவுள் நிலையை உணர்ந்தவர், 'நான் கடவுள், நீங்கள் கடவுள், நாம் அனைவரும் ஒன்று' என்று கூறி, இந்த ஏக இறைவனின் ஒருமை உணர்வை, தனது பிணைக்கப்பட்ட மாயையில் எழுச்சியுறச் செய்யும்போது, தாழ்ந்தவர், உயர்ந்தவர், ஏழை, பணக்காரர், அடக்கமானவர், சாதாரணமானவர் மற்றும் நல்லவர், தீயவர் என்ற கேள்விகள் அனைத்தும் மறைந்துவிடும்.

ஏக இறைவனாகிய உண்மைப்பொருள், உடன்பாட்டிற்கு இடமில்லாத அளவுக்கு அளவிறுதியற்றவர், எங்கும் நிறைந்தவர் எனும்போது 'நாம் ஏக இறைவனான ஒன்று' மட்டுமின்றி, 'நாம்' என்ற இந்த கூட்டுச் சொல்லுக்குக் கூட 'அளவிறுதியற்ற, பிரிக்க முடியாத ஒருமை'யில் இடமில்லை என்று எனது தெய்வீக அதிகாரத்துடன் நான் கூறும்போது, செவிகொடுத்து கேளுங்கள்.

உங்கள் அறியாமையிலிருந்து விழித்துக்கொண்டு, உறுதியான, பிரிக்க முடியாத ஏக இறைவனின் ஒருமைப்பாட்டில், 'அவதார புருஷர் மட்டும் கடவுள் அல்ல, எறும்பும், குருவியும், நீங்கள் அனைவரும் கூட, கடவுளைத் தவிர வேறு ஒன்றுமில்லை' என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். வேறுபாடு என்பது உணர்வு நிலைகளில் மட்டுமே இருப்பதாகத் தோற்றமளிக்கிறது. சிட்டுக்குருவியானது, சிட்டுக்குருவி அல்ல என்பது அவதார புருஷருக்குத் தெரியும்; அதேசமயம்,

**சிட்டுக்குருவி இதை உணராமல், அதன் அறியாமையை அறியாமல், சிட்டுக்குருவியாகவே உள்ளது.**

**அறியாமையில் வாழாதீர்கள். உங்கள் சக மனிதர்களை வேறுபடுத்தி நியாயப்படுத்துவதில் உங்கள் பொன்னான வாழ்நாளை வீணாக்காதீர்கள், ஆனால் கடவுளின் அன்பிற்கான ஏக்கத்தை உருவாக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் உலகச் செயல்பாடுகளுக்கு நடுவே, உங்கள் அன்பான கடவுளுடன், உங்கள் உண்மையான அடையாளத்தைக் கண்டுபிடித்து உணர மட்டுமே வாழுங்கள்.**

**தூய்மையாகவும், எளிமையாகவும் இருங்கள், அனைவரையும் நேசியுங்கள், ஏனெனில் அனைவரும் ஒன்று. நேர்மையான வாழ்க்கையை வாழுங்கள்; இயற்கையாக இருங்கள், உங்களுடன் நேர்மையாக இருங்கள்.**

**நேர்மையானது, தவறான அடக்கத்தன்மையிலிருந்து உங்களைக் காத்து, உண்மையான தன்னடக்கத்தின் வலிமையைக் கொடுக்கும். பிறருக்கு உதவ எந்த வலியையும் தாங்கிக்கொள்ளுங்கள். தெய்வீக அன்பின் பரிசைத் தவிர, வேறு எந்த வெகுமதியையும் தேடாதீர்கள். இந்தப் பரிசுக்காக உண்மையாகவும் தீவிரமாகவும் ஏங்குங்கள், எனது தெய்வீக நேர்மையின் பெயரில், நான் உங்களுக்கு, நீங்கள் ஏங்குவதை விட அதிகமாக வழங்குவேன் என்று உறுதியளிக்கிறேன்.**

**எனது தெய்வீக அன்பின் தீப்பொறி, உங்கள் இதயங்களில் கடவுளின் அன்பிற்கான ஆழ்ந்த ஏக்கத்தை விதைக்க, எனது ஆசீர்வாதங்களை உங்களுக்கு வழங்குகிறேன்.**

ஸாக்கோரியின் கோதாவரி மாய், கன்யாக்கள், யஷ்வந்த் ராவ் ஆகியோருடன் வருகை தந்து, பாபாவின் பாதங்களைத் தொட்டனர். காட்கே மஹாராஜும் அவரது சீடர்களுடன் வந்து, பாபாவின் பாதங்களில் தலைவணங்கினார். பாபா அவரை மனதாரத் தழுவினார். காட்கே மஹாராஜ் திரளான மக்களுடன் தரையில் அமர்ந்தார், ஆனால் பாபா அவரை அழைத்து மேடையில் அவருக்கு அருகில் அமர வைத்தார். கோதாவரி மாயும் பாபாவின் அருகில் அமர்ந்தார்.

டாக்டர் தேஷ்முக், 'மெஹர் பாபாவின் அழைப்பு' (MEHER BABA'S CALL) என்ற செய்தியின் மராட்டி மொழிபெயர்ப்பை காலை 10:30 மணிக்கு வாசிப்பதற்கு முன்பு, பாபா கூறினார்:

**கடவுளுக்காகவும், மனித குலத்திற்காகவும், தனது வாழ்க்கையை அர்ப்பணித்த மஹான் காட்கே மஹாராஜ், நம்மிடையே இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நாற்பத்தி இரண்டு வருடங்களுக்கு முன்பு, பூனாவில் அவருடைய கீர்த்தனையைக் கேட்டிருந்தேன், இன்று நான் அனுபவிக்கும் அதே மகிழ்ச்சியை அன்றும் உணர்ந்தேன். மேலும், எனது குருநாதர் உபாஸனி மஹாராஜின் தனி விருப்பத்திற்குரிய கோதாவரி மாய் என் அருகில் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**



**வாடியா பார்க் தரிசனம், 1954**

(WADIA PARK DARSHAN PROGRAM, 1954)



வாடியா பார்க், **12** செப்டம்பர் **1954** (WADIA PARK, 12 SEPTEMBER 1954)
கோதாவரி மாய் (GODAVARI MAI), பப்பா ஜெஸவாலா (PAPPA JESSAWALA),
ருஸ்தம் காக்கா (RUSTOM KAKA), ஸரோஷ் (SAROSH),
எரச் (ERUCH), குல்மாய் (GULMAI)



வாடியா பார்க், ஏழைகளுடான நிகழ்ச்சி (WADIA PARK, POOR PROGRAM)

**புரிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மையான விஷயம் என்னவெனில், கபட நாடகமாடும் ஒருவராக இருக்கும் வேளையில், பிறரிடம் அவ்வாறு இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்பவனே, மிகப்பெரிய கபடவேடதாரி, நயவஞ்சகன். எனது எல்லா ஆசிகளையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**

தேஷ்முக் மராட்டியில் அந்தச் செய்தியையையும் ஸரோஷ், பாபா வழங்கிய மற்றுமொரு செய்தியையும் வாசித்தனர்:

**நான் அவதார புருஷர் என்று கூறும்போது, ஒரு சிலர் மகிழ்ச்சியாக உணர்கிறார்கள், சிலர் அதிர்ச்சியடைகிறார்கள், மேலும் பலர், இதை நான் கூறுவதைக் கேட்டால், என்னை ஒரு நயவஞ்சகனாகவோ, கபடவேடதாரியாகவோ, உச்சக்கட்ட அகங்காரவாதியாகவோ அல்லது பைத்தியக்காரனாகவோ எடுத்துக் கொள்வார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் அவதார புருஷர் என்று நான் கூறுவதானால், சிலர் அசௌகரியமாக உணர்வார்கள், பலர் அதை அவதூறாகவோ, நகைச்சுவையாகவோ கருதுவார்கள். கடவுள் ஒருவராகவும், பிரிக்க முடியாதவராகவும், நம் அனைவருக்கும் சமமாகவும் இருக்கிறார் - நாம் அனைவரும் ஒன்றே தவிர, வேறு எதுவாகவும் இருக்க முடியாது - என்ற உண்மையை, இருமைத்தன்மையின் உணர்வு நிறைந்த மனதால் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்னும், நாம் ஒவ்வொருவரும் பிறர் ஒருவர் என்னவாக இருக்கிறாரோ அவரே. வார்த்தையின் ஒவ்வோர் அர்த்தத்திலும் நான் அவதார புருஷர் என்பதையும், நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் அவதாரம் என்பதையும் நான் அறிவேன்.**

**கடவுள் எல்லாம் அறிந்தவர், கடவுள் எல்லாவற்றையும் செய்கிறவர், கடவுளின் விருப்பமின்றி எதுவும் நடக்காது என்பது, காலாதி காலத்திலிருந்தே மாற்ற முடியாத மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட உண்மை. எனவே, கடவுள்தான் என்னை அவதார புருஷர் என்றும், நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளின் அவதாரம் என்றும் சொல்லச் செய்கிறார். மீண்டும், அவர், சிலரால் அசௌகரியமாக உணர வைக்கப்படுகிறார், பிறரால் அதிர்ச்சியடைகிறார். கடவுளே செயல்படுகிறார், அவரே எதிர்வினையாற்றுகிறார். ஏளனம் செய்பவரும், மறுமொழி கூறுபவரும் அவரே. அவர் தமது சொந்த 'தெய்வீக நாடகத்தின் படைப்பாளர், தயாரிப்பாளர், நடிகர் மற்றும் பார்வையாளர்'.**

தொடர்ந்து, 'பாபாவின் மௌனம்' (BABA'S SILENCE) மற்றும் 'கடவுளை நேசிப்பது எப்படி' (HOW TO LOVE GOD) என்பதை விளக்கும் மூன்றாவது செய்தியை ஸரோஷ் வாசித்தார்:

**நான் ஏன் பேசவில்லை என்று நீங்கள் கேட்பதானால், நான் அமைதியாக இல்லை, எனது சைகைகள் மற்றும் எழுத்துப்பலகை மூலம் நான், அதைவிட மிகவும் தேனொழுகப் பேசுகிறேன் என்று சொல்வேன்.**

நான் ஏன் பேசவில்லை என்று கேட்பதானால், பெரும்பாலும் மூன்று காரணங்களுக்காக என்று நான் கூறுவேன். முதலாவதாக, உங்களின் மூலம் நான் நித்தியமாகப் பேசுகிறேன் என்று உணர்கிறேன்.

இரண்டாவதாக, உங்களின் மூலம் இடைவிடாமல் பேசும் சலிப்பைப் போக்க, எனது தனிப்பட்ட உடல் வடிவத்தில் நான் மௌனம் காக்கிறேன். மூன்றாவதாக, எல்லா பேச்சுகளும் வெற்றுப் பேச்சே. விரிவுரைகள், செய்திகள், அறிக்கைகள், சொற்பொழிவுகள், ஆன்மீகம் அல்லது வேறுவிதமான பேச்சுக்கள் அல்லது எழுத்துக்கள் மூலம் வழங்கப்படும் சொற்பொழிவுகள், அவற்றை நடைமுறையில் வாழும்போதும் அல்லது வாழ்ந்து காட்டாதபோதும், வெறும் பேச்சுதான்.

நான் எப்போது எனது மௌனத்தைக் கலைப்பேன் என்று நீங்கள் கேட்பதானால், ஆரம்பமில்லாத ஆரம்பத்தில் மொழிந்த மூலமுதலான உண்மையான, ஒரே இறை வார்த்தையை நான் உச்சரிக்க வேண்டும் என நான் உணரும் போது, நான் பேசுவேன்; அந்த வார்த்தை மட்டுமே உச்சரிக்க உகந்த வார்த்தை. எனது வெளியளவிலான மௌனத்தைக் கலைத்து அந்த வார்த்தையை உச்சரிக்கும் நேரம் அருகாமையில் உள்ளது.

ஒருவர் பிறரிடம், 'நல்லவராக இருங்கள்' என்று கூறும்போது, அவர் நல்லவர், அதைக் கேட்பவர்கள் நல்லவர்கள் இல்லை என்ற உணர்வை வெளிப்படுத்துகிறார். 'தைரியமாகவும் நேர்மையாகவும் தூய்மையாகவும் இருங்கள்' என்று அவர் கூறும்போது, அதைக் கூறுபவர் மட்டுமே இவற்றின் முழு ஆதாரம், கேட்பவர்கள் கோழைகள், நேர்மையற்றவர்கள் மற்றும் தூய்மையற்றவர்கள் என்ற உணர்வை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

கடவுளை மிகவும் நடைமுறை வழியில் நேசிப்பது என்பது, நம் சக மனிதர்களை நேசிப்பதாகும். நமக்குப் பிரியமானவர்களுக்காக நாம் எப்படி உணருகிறோமோ, அதே போல பிறருக்காகவும் உணர்ந்தால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

பிறரிடம் குற்றம் காணாது நம் குற்றம் காணில், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

நமது நலனுக்காக பிறரை அபகரிக்காமல், பிறர் நலனுக்காக நம்மையே அபகரிக்க அனுமதித்தால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

நாம் பிறர் துன்பத்தில் துன்பப்பட்டு, பிறர் மகிழ்ச்சியில் மகிழ்ந்தால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

நமது துரதிர்ஷ்டங்களைப் பெரிது படுத்தாமல், பலரை விட, நாம் அதிர்ஷ்டசாலி என்று நினைத்தால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

நாம், நம்மவர்களை பொறுமையுடனும், போதும் என்ற மனநிறைவுடனும், அதைக் கடவுளின் சங்கல்பம் என ஏற்றுக்கொண்டால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்துயிர்களையும் புண்படுத்தாமல், துன்புறுத்தாமல் இருப்பதே சிறந்த இறைவழிபாடு,

**மிகச்சிறந்த பக்தி என்பதை நாம் புரிந்து உணர்ந்துகொண்டால், நாம் கடவுளை நேசிக்கிறோம்.**

**கடவுளை நேசிக்கும் விதத்தில் நேசிக்க, நாம் கடவுளுக்காக வாழவும், கடவுளுக்காக சாகவும் வேண்டும், எல்லா வாழ்க்கையின் குறிக்கோள் கடவுளை நேசிப்பதும், அவரை நம் சுயமாக கண்டுகொள்வதும் ஆகும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.**

இந்தச் செய்தியை வாசித்த பின்பு, பாபா பிரசாதம் வழங்கத் தொடங்கினார். ஆண்களும் பெண்களும் தனித்தனியாக நீண்ட வரிசைகளில் நின்றனர், மண்டலி மற்றும் காவல்துறையினர் ஒழுங்காக அனைத்தையும் கண்காணித்தனர். சில நேரங்களில், ஆண்களின் வரிசையும், சில நேரங்களில், பெண்களின் வரிசையும் பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள முன்னோக்கி அனுமதிக்கப்பட்டது; காலம் இதை இவ்வாறு பார்த்தது: “இது சாதாரண பிரசாதம் அல்ல. ஒவ்வொருவருக்கும் மெஹர் பாபா, தம்மையே கொடுத்துக் கொண்டிருந்தார், அதனால் அவர் மக்களின் இதயங்களில் நிலைகொண்டிருக்க வேண்டும். ஒவ்வோர் இதயத்திலும், மாயையின் இருள், கடவுளின் ஒளியை சூழ்ந்துள்ளது. பிரசாதம் வழங்குவதன் மூலம், பாபா, காலைப்பொழுது உதயமாவதைப் பறைசாற்றினார், அதனால், படிப்படியாக, அவரது ஒளி, இருளை உள்வாங்கிக்கொள்ளும்!”

பிரசாதம் வழங்கும் வேளையில், பரவசமூட்டும் பக்தி பாடல்கள் முழங்கிக்கொண்டிருந்தன. ருஸ்தம் காக்கா, பிறரைப் போலவே சில பாடல்களைப் பாடினார். எங்கும் கூட்டம் அலைமோதியதால், சிறிது நேரம் பிரசாதம் வழங்குவதை நிறுத்திவிட்டு, ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டிய இடத்திற்கு, பாபாவால் செல்ல முடியவில்லை. பிற்பகலில், பாபாவின் வலது கை மிகவும் சோர்வாக இருந்ததால், அவர் தமது இடது கையால் இனிப்புகளை வழங்கத் தொடங்கினார். மண்டலியில் ஒருவர் அவரை ஓய்வெடுக்கச் சொன்னபோது, “**இதுவே எனது ஓய்வு**!” என்று பாபா பதிலளித்தார்.

மெஹர்வான் ஜெஸவாலா இவ்வாறு நினைவு கூர்ந்தார், “கூட்டம் பிரமாண்டமாக, பிரமிக்கத்தக்க வகையில் இருந்தது. பாபா பிரசாதம் வழங்குவதில் விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். பத்தே நிமிடங்களுக்கு, பாபா செய்ததை வேறு எவரேனும் செய்ய முனைந்தால், அவருக்கு நெஞ்சு தசைப்பிடிப்பும், வலியும் ஏற்படும். பாபா அணிந்திருந்த மேல் கோட்டும், சட்டையும் வியர்வையால் நனைந்து இருந்தது.”

அன்று மதியம் மூன்று மணி வரை, பாபா தொடர்ந்து பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தார், அப்போது ஸரோஷ், மீண்டும் மக்களுக்கு வழங்கும் உணவில் பங்கேற்குமாறு பாபாவைக் கேட்டுக் கொண்டார். கூட்ட நெரிசல் இருந்தபோதிலும், பாபா, அனைவரையும் ஒழுங்கான முறையில் தரையில் அமர வைத்தார்; அதற்குப் பிறகு, காட்கே மஹாராஜின் தோளில் கை வைத்து, பூங்காவின் மற்றொரு பகுதிக்கு உணவளிக்கச் சென்றார்.

'மெஹர் பாபாவிற்கு ஜெய்' எனும் முழக்கங்களுக்கு மத்தியில், கிட்டத்தட்ட 20,000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. தரையில் அமர்ந்து, பாபாவே உணவில் பங்கெடுத்தார். 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற உரத்த கோஷம், மீண்டும் பட்டாசு போல வெடித்தது. பாபா அமைதியாகத் தமது உணவை காட்கே மஹாராஜுக்குக் கொடுத்ததால், பாபாவின் மதிய உணவில் பெரும் பங்கு துறவியால் உண்ணப்பட்டது.

பதினைந்து நிமிடங்களில், பாபா மீண்டும் மேடைக்குத் திரும்பி வந்து பிரசாதம் வழங்குவதைத் தொடர்ந்தார். 'சச்சிதானந்த, பரமானந்த, மெஹர் பாபா வித்யானந்த' என்ற இறை நாமத்தின் இனிய மெல்லிசை, மீண்டும் மீண்டும் எதிரொலித்தது; துளிகள் பெருங்கடலைப் புரட்டிப் போடுவது போலத் தோன்றியது.

கூட்டம் அதிகரித்துக் கொண்டே சென்றது, அதிக எண்ணிக்கையிலான மக்களைக் கட்டுப்படுத்துவது, அவ்வப்போது கடினமாக இருந்தது. அதுபோன்ற சமயங்களில், பாபா எழுந்து நின்று, வரிசையில் காத்திருந்தவர்களை பொறுமையாக இருக்குமாறு சைகையால் தெரிவித்தார். அவர் கைகளை உயர்த்திய வேளையில், அனைவரும் தற்காலிகமாக அமைதியாகிவிடுவதும், பாபா, பிரசாதத்தைத் தொடர்ந்து வழங்குவதும் நடந்து வந்தது.

நெருங்கிய அன்பர்கள் எவரேனும் பாபாவிடமிருந்து பிரசாதத்தைப் பெறச் சென்றால், அவர்களுடன் சில நிமிடங்கள் கேலியும், கிண்டலும் செய்து பேசினார். நாக்பூரிலிருந்து வந்த நானா கேரின் தாயார் கோடுபாயிடம் பாபா, '**அவருக்கு என்ன வேண்டும்**' என்று கேட்க, "உங்கள் அன்பைத் தவிர வேறொன்றுமில்லை!" என்றார். உண்மையில், நானாவின் திருமணத்தைப் பற்றி பாபாவிடம் முறையிடும் உறுதியான தீர்மானத்துடன் அவர் மீண்டும் வந்திருந்தார். ரயிலில் வரும்போதும், பந்தலில் பாபா தரிசனம் வழங்கும்போதும் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாலும், பாபாவின் முன்னிலையில், அவர் அனைத்தையும் மறந்துவிட்டார் - ரயிலில் திரும்பிச் செல்லும்போது மட்டுமே அவர் அதை நினைவு கூர்ந்தார். தனது மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதில் பாபாவிற்கு விருப்பம் இல்லை என்பதை அவர் இப்போது ஏற்றுக்கொண்டார். இது உண்மைதான், எனவே கோடுபாய், பாபாவிடம் விஷயத்தை எடுத்துரைக்க தொடர்ந்து 'மறந்து வந்தார்'. அதன் பின்னர், அவர் அதை பாபாவிடம் சொல்லவும் இல்லை - நானா கேர் திருமணம் செய்துகொள்ளவும் இல்லை.

டெஹ்ரா டூனைச் சேர்ந்த ராணி மோகினி, தனது கணவர் ராஜா சரத் ஸிங்குடன் வந்திருந்தார். கோடுபாயைப் போலவே, அவரும் ஓர் உறுதியான நோக்கத்துடன் வந்திருந்தார்: உயிரைத் துறந்த தனது மகளைத் திரும்பக் கொடுப்பதாக, பாபா வழங்கிய வாக்குறுதியைக் குறித்து கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர், பிரசாதத்திற்காக பாபாவை நெருங்கியபோது, அவருடைய மின்னும் கண்களும், மயங்கச் செய்யும் முகபாவமும்

அனைத்தையும் மறக்கச் செய்தது - என்றென்றும் மறக்கச் செய்தது! ஆசைகளை நிறைவேற்றுவதன் மூலம், பிணைப்புகள் உருவாக்கப்படுகின்றன; அவற்றை அழிப்பதன் மூலம், அவற்றின் சங்கிலி உடைக்கப்படுகிறது. பாபாவின் வாக்குறுதியை ராணி மோகினி என்றென்றும் மறக்கச் செய்தார். இதுவே அவர் புரிந்த அதிசயம், இது ஒருபோதும் பிணைப்புகளை மேலோங்க விடாமல், அவற்றை வேரோடு அகற்றியது.

இரண்டு சிறு குழந்தைகளுடன் ஒரு பெண்மணி பாபாவிடம் வந்தார். பாவ் கல்சூரியின் பக்கம் திரும்பி பாபா, ‘அவர் யார்’ என வினவினார். “எனது மனைவி ரமா” என்றார்..

**“குழந்தைகளின் பெயர்கள் என்ன?”**

“பெண் ஷீலா மற்றும் பையன் மெஹர்நாத், அவனுக்கு நீங்கள் பெயரிட்டுள்ளீர்கள்.”

பாபா, ரமாவிடம், **“யாருடன் வந்தீர்கள்?”** என்று கேட்டார்.

“எனது சகோதரனுடன், தீரஜ் ஸிங் (பர்மார் - DHIRAJ SINGH PARMAR).”

பாபா, **“தீரஜை கூட்டம் முடிவது வரை மெஹராபாத்தில் வைத்திருக்க விரும்புகிறேன், நீங்கள் எப்படி நாக்பூருக்கு திரும்பிச் செல்வீர்கள்?”** (அப்போது ரமா நாக்பூரிலிருந்து 100 மைல் தொலைவில் அமைந்த ஒரு கிராமத்தில் தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தார்.)

“நாக்பூரிலிருந்து இங்கு பலர் வந்துள்ளனர் - ஷெர்லேக்கர், கோடுபாய், தாரா பங்க்ராஜ், ஆஷா கேர் மற்றும் பலர்” என்று ரமா கூறினார்.

**“பாவ் என்னுடன் தங்கியிருப்பதில் நீங்கள் மகிழ்ச்சியாக உணர்கிறீர்களா?”**

“மிகுந்த மகிழ்ச்சி.”

**“நானும் உங்களை எண்ணி மகிழ்ச்சியாக இருக்கிறேன்.”**

ஷீலா, மெஹர்நாத் இருவரையும் பாபா முத்தமிட்டு, பின்பு பாவ் கல்சூரியிடம், **“நீங்கள் அவர்களுடன் பேசினீர்களா?”** என்று கேட்டார்.

“இல்லை, பாபா” என்று பதிலளித்தார். “நான் இப்போதுதான் அவர்களைப் பார்க்கிறேன்.”

**“அவர்களுடன் ஐந்து நிமிடங்கள் இருந்து, பின்னர் அவர்களை அனுப்பி விடுங்கள்.”**

பாவ் அவ்வாறே செய்தார், அதற்குப் பிறகு, ரமா நாக்பூரிலிருந்து வந்த இதர பெண்மணிகளுடன் அஹமதுநகரில் வாழும் பண்டோபாவின் இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார்.

ஷெர்லேக்கர் நாக்பூரிலிருந்து குத்தாவாலா (KUTTAWALA) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்த் ஒருவரை அழைத்து வந்திருந்தார். ஒரு துருப்பிடித்த டின் நிறைய பழைய சாதத்தை ஏந்திய வண்ணம் பாபாவை அணுகினார் அந்த மஸ்த். அவர் எடுத்துவந்த சாதத்தை உண்ணுமாறு பாபாவிடம் டின்னை நீட்டியபோது, பாபா அன்புடன் அதை உண்டார்! அவர் மஸ்தைக் கனிவோடு தழுவி, அவருடன் மிகவும் அன்பாக இருந்தார்.



வாடியா பார்க் நிகழ்ச்சியில் பிரசாதம் வழங்குதல், வண்ணம் தீட்டியவர்: ஜிம் கிர்க்பாட்ரிக்
(DISTRIBUTING PRASAD AT WADIA PARK, COLORIZED BY JIM KRIKPATRICK)



ஸரோஷ், காட்கே மஹாராஜ், பாபா, கிருஷ்ணாஜி (பாபாவிற்குப் பின்னால்), குடையுடன் குமார்
(SAROSH, GADGE MAHARAJ, BABA, KRISHNANJI – BEHIND BABA, KUMAR HOLDING UMBRELLA )



**வாடியா பார்க்கிலிருந்து பாபா விடைபெறும் காட்சி 12 செப்டம்பர் 1954**
(BABA LEAVING WADIA PARK, 12 SEPTEMBER 1954)

கூப் பல்வணி (KUP BHALWANI) போன்ற பல்வேறு கிராமங்களிலிருந்து பல அன்பர்களுடன் விபூதி அஹமதுநகர் வந்திருந்தார். 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று குரல் எழுப்பிக் கொண்டே பந்தலுக்குள் நுழைந்தனர். மாட்டு வண்டிகளில் ஊர்வலமாக அஹமதுநகரை வந்தடைய அவர்களுக்கு இரண்டு நாட்கள் பிடித்தன. வண்டிகளில் பாபாவின் பெரிய புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன, கிராம மக்கள் வழி முழுவதும் அவரைப் புகழ்ந்து பாடிக்கொண்டே வந்தனர். அவர்களின் அன்பின் ஆர்ப்பாட்டம், ஸாவ்னேர் மற்றும் ஹமிர்பூர் அன்பர்களை மண்டலிக்கு நினைவூட்டியது.

பாபாவின் பெண் மண்டலி இதற்கு முன்னதாக வெகுஜன தரிசன நிகழ்ச்சிக்கு வந்ததில்லை அல்லது பொதுமக்கள் முன்னிலையில் தோன்றியதில்லை; ஆனால், இந்த சந்தர்ப்பத்தில், பிற்பகல் நேரத்தில், பாபா அவர்களை ஐந்து நிமிடங்கள் மேடையில் அமர அனுமதித்தார்.

பாபா மாலை 6:00 மணி வரை பிரசாதம் வழங்குவதைத் தொடர்ந்தார், ஆனால் இந்த நேரத்தில், கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம் மேலும் அதிகரித்தது; குழப்பம் உருவானது. எனவே பாபா, எஞ்சியிருந்த பிரசாதத்தைத் தொட்டு, எழுந்து நின்று, கூட்டத்திற்கு வணக்கம் செலுத்தி, ஆதியின் கார் கூரையின் மீது ஏறினார். காவல்துறையினரும் மண்டலியும் காரைச் சுற்றி வளைத்தபோது, பாபா மக்களுக்குக் கூப்பிய கரங்களுடன் வணக்கம் தெரிவித்தபடி, கார் மெதுவாக வாடியா பார்க்கிலிருந்து வெளியே சென்றது. 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற கோஷங்கள் இடி முழக்கம் போல காற்றில் தவழ்ந்தன.

ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு, பாபாவின் மீதான அன்பையும், பயபக்தியையும் வெளிப்படுத்தியது, மேற்கத்திய அன்பர்களைப் பெரிதும் கவர்ந்தது. பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர், 1937இல் பாபாவின் பிறந்தநாள் விழாவில், நாசிக் நகரில் மால்கம் ஸ்க்லோஸ் (MALCOLM SCHLOSS) மற்றும் வில் பேக்கெட் (WILL BACKETT), மேலும், சமீபத்தில் ஃபிரான்சிஸ் பிராபஸோன் (FRANCIS BRABAZON) ஆந்திராவில் அத்தகைய காட்சிகளைக் காணநேர்ந்தது; ஆனால், இதர மேற்கத்தியர்களுக்கு, இது போன்ற பிரம்மாண்டமான காட்சியின் முதல் அனுபவம் என்பதால் அவர்கள் அதை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்!

பாபா அங்கிருந்து சென்ற பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட சேவகர்கள், கூட்டத்திற்கு பிரசாதம் வழங்கினர், பஜனைப் பாடல்கள் இரவு 10:00 மணி வரை தொடர்ந்தது. விழா முடிந்ததும், வாடியா பார்க்கில் கிட்டத்தட்ட 60,000 பேர் இருந்ததாக மதிப்பிடப்பட்டது. இதுவே அஹமதுநகரில் மெஹர் பாபா வழங்கிய முதல் மற்றும் கடைசி வெகுஜன தரிசனமாகும்.

மறுநாள், 1954 செப்டம்பர் 13 திங்கட்கிழமை அன்று காட்கே மஹாராஜ் மெஹராஸாத் வருகை தந்து, பாபாவிடம் வேண்டினார், “நீங்கள் சூரியன், உங்கள் முன்னால் நான் ஒரு சிறிய எண்ணெய் விளக்கு போன்றவன். என்னை உங்கள் வீட்டு வாசலில் இருக்கச் செய்யுங்கள். நான் இந்த இடத்தை சுத்தம் செய்து உங்களுக்கு சேவை செய்வேன். எனக்கு வேறெதுவும் தேவையில்லை. நீங்கள் எனக்கு ஒரு நாளைக்கு ஒரு தினை சப்பாத்தி கொடுத்தால் போதும், ஆனால் என்னை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்.”

பாபாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, காட்கே மஹாராஜ் அவரது தலை மீது வைத்து, “இப்போது பணியின் பளு அதிகமாக உள்ளது. என்னை விடுவித்து விடுங்கள். இது மிகப்பெரிய வெகுமதியாக இருக்கும்” என்று கெஞ்சினார்.

**“உங்களை விரைவில் என்னிடம் அழைப்பேன்”** என்று பாபா உறுதியளித்தார்.

காட்கே மஹாராஜ் பாபாவை, பண்டர்பூருக்கு அழைத்தபோது, பாபா அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டார். மெஹர் பாபா, காட்கே மஹாராஜை அன்புடன் அரவணைத்தது, ஓர் உண்மையான மனதை தொடும் காட்சியாக இருந்தது; அதன் பின்பு, காட்கே மஹாராஜ் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். பாபா இவ்வாறு குறிப்பிட்டார், “**அவர் ஓர் உண்மையான துறவி. அவருக்கு, பல லட்சம் பேர் இருந்தாலும், அவர் எவ்வளவு அடக்கமானவர் என்பதைப் பாருங்கள்! இந்தப் பணிவே அவரது மகத்துவம். அதனால்தான் அவர் ஒரு புனிதர். அவருடைய புனிதத்தன்மையின் அறிவின் மூலம், நான் யார் என்று அவருக்குத் தெரியும்.**”

1954 செப்டம்பர் 14 செவ்வாய் அன்று, பாபா மேற்கத்திய அன்பர்களை சந்திப்பதற்காக மெஹராபாத் மேல்மலைக்குச் சென்றார். அவர் ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவி கூறினார்: “**இன்று, நான் உங்களுக்கு என் அரவணைப்பைத் தருகிறேன், ஆனால் ஒவ்வொரு நாளும் அதை எதிர்பார்க்காதீர்கள். இல்லையேல் எனது மார்பு வெடித்துவிடும்! என் இதயம் தாங்காது!**”

லெபனானைச் சேர்ந்த 60 வயதான ஜோஸஃப் ஹமத் ஹார்ப் (JOSEPH HAMAD HARB), இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் பாபாவை சந்தித்தார். இறை-மனிதனின் அரவணைப்பு எப்படி இருந்தது என்பதை இங்கே அவர் தெளிவாக விவரிக்கிறார்:

முதன்முறையாக பாபா என்னை தனது அன்புக் கரங்களால் தழுவியதை என்னால் மறக்க முடியாது. இது அதி மிகையான, மறக்க முடியாத உணர்வு - மிகவும் ஆறுதல் அளிப்பது, அமைதியானது, மகிழ்ச்சிகரமானது; மேலும் இந்த உயர்ந்த பாக்கியத்திற்கு, எனது நன்றியுணர்வு மிகவும் விவரிக்க முடியாத

ஒன்றாக இருந்தது, கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது, மகிழ்ச்சியும் ஆனந்தமும் பொங்கி வழிந்தது. நான் அவரை நேசித்தேன், அவரிடமிருந்து எனது கைகளை விடுவிக்க விரும்பவில்லை. நான் மேலும் மேலும் அவர் அரவணைப்பதை விரும்பினேன்.

பாபா, மேக்ஸ் ஹேஃப்லிகர் (MAX HAEFLIGER) என்பவரிடம் சைகையால், **“மேக்ஸ், நான் வலிமையாக இருக்கிறேன்; எனது, மேல் கை தசைகளை உணருங்கள்!”** எனத் தெரிவித்த போது மேக்ஸ் அவ்வாறே செய்தார்.

அந்தக் குழு தகரக் கொட்டகையின் கீழ் அமர்ந்தது, புதிதாக வந்த ஒவ்வொருவரையும் பாபா முன்னிலையில் அறிமுகப்படுத்தினர். டார்வின் ஷா (DARWIN SHAW) அணிந்திருந்த சூரிய கண்ணாடிகளை பாபா கழற்றச் சொன்னார். அவர் ஒவ்வொருவரையும் மீண்டும் தழுவி, பின்னர் அவரது எழுத்துப்பலகை வழியாகப் ‘பேச’த் தொடங்கியதை எரச் வாசித்தார். பாபா கூறியதாவது:

**இன்று நான் உங்களுக்கு மூன்று விஷயங்களைத் தெரிவிக்க உள்ளேன். முதலாவது, நீங்கள் முற்றிலும் இயல்பாகவும், ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உணவு உங்களுக்கு ஒத்துவரவில்லை என்றால், சொல்லுங்கள். நீங்கள் விரும்பாமல் ஏதேனும் இருந்தாலும் சொல்லுங்கள். உங்கள் உடல்நிலை சரியில்லை என்றால் தெரியப்படுத்துங்கள். இங்கு ஸரோஷ், விலூ இருவரும் உங்கள் பொறுப்பில் உள்ளனர். அவர்களுக்குச் சொல்லுங்கள். அவர்களால் செய்ய முடிந்தால், அவர்கள் அதைச் செய்வார்கள். அவர்களால் முடியாதென்றால், “ஆம்” என்று கூறுவார்கள், அது அப்படித்தான் இருக்கும்.**

**டான்** (டாக்டர் டான்கின்) **உங்கள் ஆரோக்கியத்திற்கு பொறுப்பாளர். உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருந்தால் அவரிடம் சொல்லுங்கள். 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறும் கூட்டங்கள் மிகவும் முக்கியம் என்பதால், உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும், மேலும் வழங்கப்படும் அனைத்தையும் உள்வாங்குவதற்கு நீங்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.**

**இரண்டாவது விஷயம் இதுதான்: நீங்கள் இங்கே இருக்கும் வேளையில், இங்கிருந்து வெளியேறும் வரை, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா அனைத்தையும் மறந்துவிட்டு, பாபாவைப் பற்றியும், நீங்கள் இங்கு என்ன அனுபவிக்கிறீர்கள் என்பதையும் நினைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உண்மையில் என்னவாக இருக்கிறேன் என்பதைப் பற்றிய ஒரு கண நேரப் பார்வை மட்டும் உங்களுக்கு இருந்தால், நீங்கள் உங்களை முற்றிலும் மறந்து, கடவுளைப் பற்றிய உணர்வில் மட்டுமே இருப்பீர்கள். எனவே, நீங்கள் இங்கே இருக்கும் வேளையில்,**

**ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றை மறந்துவிட்டு, இங்கு நீங்கள் அனுபவிப்பதை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள்.**

**மூன்றாவது விஷயம்: 29, 30ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை. உடலைத் துறப்பதற்கு முன், நான் நிகழ்த்தும் கடைசி சந்திப்புகள் இவை. இந்தியா முழுவதிலுமிருந்தும் சுமார் 1,000 பேர் பங்கெடுப்பார்கள் - அனைவரும் பாபாவின் சேவகர்கள். கூட்டத்தில் நான் கூறுவது அனைத்தும் தன்னிச்சையாக இருக்கும், மேலும் எவரேனும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில் ஏற்கனவே தயார் செய்த உரை எதுவும் இருக்காது; மேலும் அது மிக முக்கியமானதாக இருக்கும். நான் ஏன் இங்கே இருக்கிறேன், நான் என்ன செய்தேன், நான் இன்னும் என்ன செய்வேன், இன்னும் 700 ஆண்டுகளில் என்ன நடக்கும் என்பதை நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக நீங்கள் அனைவரும் வெகுதூரம் கடந்து வந்துள்ளீர்கள், மேலும், நான் கூறுவதிலிருந்து உங்களால் முடிந்தவரை அடையப்பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பின்னர் அவை முடிந்ததும், நீங்கள் இயன்றவரை விரைவாகவும் நேரடியாகவும் தத்தமது இல்லங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்; இதன் மூலம் நீங்கள் அடையப்பெற்றதை அதன் புதுத்தன்மையுடன் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.**

பாபா, பின்னர் அனைவரையும் அவர்களின் தொப்பிகளை எடுத்து வருமாறு சைகையால் தெரிவித்தார், மேலும், பாபா அவர்களை மெஹராபாத் மலையின் சுற்றுப்பயணத்திற்கு அழைத்துச் சென்றார். அவர்களுக்கு பாபாவின் (எதிர்கால) சமாதி, டின் கேபின் (TIN CABIN) மற்றும் தனது மறைந்த பிரியமானவர்களின் சமாதிகளைக் காட்டி, நடந்து செல்லும் வேளையில் பாபா பல சம்பவங்களை விவரித்தார்.

மேல் மலையிலிருந்து, பாபா அவர்களை கீழே அழைத்துச் செல்லும் வழியில் ஒருமுறை நின்று, வில் பேக்கட்டிடம் அவரது நடையின் வேகம் அதிகமா என்று கேட்டார். பாபா கீழ் மெஹராபாத்தை வந்தடைந்ததும், ஆந்திர அன்பர்களை ஏற்றிச் செல்லும் பேருந்து ஒன்று புறப்பட்டது. பாபா அவர்களை, சாலையோரத்தில் சந்தித்து, வாழ்த்திக் கொண்டிருந்த வேளையில், கோதாவரி மாய், ஜிஜி, பதினான்கு கன்யாக்கள், யஷ்வந்த் ராவ் ஆகியோர் வந்தனர். அவர்கள் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கவே, பாபா, "**நான் ஒருவனே உண்மையானவன்**" என்று குறிப்பிட்டார்.

பாபா, மேற்கத்தியர்களையும், ஸாக்கோரி குழுவையும் தனது குடில், மேசை அறை மற்றும் துனிக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் துனியை நெருங்கியதும், 1920 ஆண்டுகளின் வறட்சி காலத்தில், கிராமவாசிகள் மழைக்காக

பாபாவை அணுகியதையும், துனியில் நெருப்பை ஏற்றிய பிறகு மழை பொழிந்ததையும் விஷ்ணு விவரித்தார். பாபா தொடர்ந்து, "**மக்கள் இதை ஓர் அதிசயம் என்று அழைக்கிறார்கள், ஆனால் அது ஒரு தற்செயல் நிகழ்வு மட்டுமே. நான் நிகழ்த்தும் ஒரே அதிசயம் - எனது மூல முதலான இறை வார்த்தையை உச்சரிக்கும் போது நிகழும் உண்மையான அதிசயம்!**" என்று குறிப்பிட்டார்.

பாவ் கல்சூரியை வரவழைத்து, பாபா குழுவிடம் கூறினார்: "**அவரைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன், அவர் என்னை மிகவும் நேசிக்கிறார், தூக்கத்தில் கூட அவர் 'பாபா, பாபா!' என்று கூறுவது அவருக்கே தெரியாது, அவர் தனது மனைவியையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு என்னிடம் வந்துள்ளார்; எம்.ஏ. பட்டதாரி, ஆனால் அவர் ஒரு முழுநிறை முட்டாள்!**"

முன்னாள் மெஹராபாத் ஆசிரமத்தின் வாழ்க்கை பற்றிய பல கதைகள் கூறப்பட்ட பிறகு, பாபா மேற்கத்திய அன்பர்களை மீண்டும் மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் சென்றார். வழியில் நின்று, தன்னைச் சுற்றியிருந்தவர்களை ஒரு மரத்தின் கீழ் அமரவைத்து, அவர்களை நோக்கி, அவற்றைத் தவறாமல் பிடிக்கும் எண்ணத்தில் கற்களை வீசினார். அவர்கள் தொடர்ந்து மலையில் ஏறியபோது, பாபா பலமுறை குனிந்து ஓரிரு கற்களை எடுத்து வயல்வெளியில் எறிந்தார். (ஃபிரெட் மார்க்ஸ், மேக்ஸ், சார்லஸ் பர்டம் ஆகியோர் அவற்றை சேகரிக்க ஓடினர், ஆனால் பாபா வீசிய கற்களை இதர கற்களிலிருந்து வேறுபடுத்துவது கடினம். மேக்ஸ் ஒன்றைக் கண்டுபிடித்து ஃபிரெட் மார்க்ஸிடம் கொடுத்தார்.) பாபாவின் வேக நடையில் மேற்கத்தியர்கள் பின்தங்கியதால், பாபா, அவர்கள் வருவது வரை காத்து நின்று, மீண்டும் தொடர்ந்தார். வழியில், அவர் ஸாக்கோரி பெண்மணிகளிடம் அவசரப்பட வேண்டாம் என்று சைகையால் தெரிவித்தார்.

மேல்மலையைச் சென்றடைந்து, பாபா, கோதாவரி மாய், ஜிஜி மற்றும் இதர கன்யாக்களுக்கு மேற்கத்தியர்களின் குடியிருப்புகள், அவரது (எதிர்கால) சமாதி போன்ற பிற இடங்களையும் காண்பித்து, கோதாவரியிடம், "**நான் விரைவில் ஒரு நாள் அவர்களுடன்** (மேற்கத்தியர்களுடன்) **ஸாக்கோரிக்கு வருவேன்**" என்று கூறினார்.

பாபா சமாதிக்குள் நுழைந்தபோது, கல் தரையில் ஒரு சிட்டுக்குருவி மாண்டு கிடந்தது. பாபா அதை மெதுவாகக் கையில் எடுத்து, "**அதிர்ஷ்டமான குருவி**" என்று எழுத்துப்பலகையில் எழுதினார்.

தொடர்ந்து பாபா மெஹர் ரிட்ரீட் கட்டிடத்தின் மேற்கு அறையில் (அருங்காட்சியகம்) தன்னைச் சுற்றி அனைவரையும் ஒன்றுதிரட்டினார். எரச், ஏதோ பணி நிமித்தமாக கீழ் மெஹராபாத்தில் இருந்ததால், அவர் வரும்வரை ஆதி சீனியர், எழுத்துப்பலகையில் பாபா எடுத்துரைத்ததை வாசித்தார்:



கோதாவரி மாயுடன் பாபா, மெஹராபாத், **14** செப்டம்பர் **1954**
(BABA WITH GODAVARI MAI, 14 SEPTEMBER 1954)




மெஹராபாத் மேல்மலை சமாதி -
மேற்கத்திய அன்பர்களுடன் மெஹர் பாபா, **24** செப்டம்பர் **1954**
(MEHERABAD SAMADHI, BABA WITH WESTERNERS, 24 SEPTEMBER 1954)

**என்னுடன் முற்றிலும் இயல்பாகவும், ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவும் இருங்கள். நான் உங்கள் குருநாதர், ஆனால் அதே நேரத்தில் உங்கள் நண்பரும் கூட. நான் உங்களில் ஒருவன், உங்களுடன் ஒருவன். மழை பொழிந்தாலும், சாலைகள் பயன்படுத்த இயலும் வரை, அல்லது உங்களில் ஒருவருக்கு சளி பிடிக்காத வரையில், இன்று முதல் 27ஆம் தேதி வரை தினமும் உங்களைப் பார்க்க வருவேன்! ஆன்மீகப் பாதை, இறை உணர்தல் மேலும் எனது பணி, அதில் நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றிய பல விஷயங்களை நான் விளக்குவேன்.**

நம்பிக்கையின் பல்வேறு வகைகளைப் பற்றி பாபா (அறிவு, பார்வை மற்றும் அனுபவத்தால் விளையும் நம்பிக்கை - TYPES OF CONVICTION, INTELLECTUAL, SIGHT AND EXPERIENCE) சுருக்கமாக விளக்கி, தொடர்ந்து கூறினார்:

**எல்லா நிலைகளிலும் நான் உங்களுடன் ஒருவன்; ஆனால் அகங்காரமும், பகுத்தறிவும் தலையிடாத போதுதான் இதை நீங்கள் அறிவீர்கள். அப்போது, பாபா எவ்வாறு இருக்கிறாரோ, அவ்வாறே தோன்றுகிறார். நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே இருக்கிறேன். உலகம் எனக்குத் தலைவணங்கினாலும் அல்லது எனக்கு எதிராகச் சென்றாலும் பரவாயில்லை. இது யாருடைய தவறும் இல்லை. பாபாவை அறிவது லட்டுக்களை உண்பது போன்ற விஷயம் அல்ல. என்னை அறிய ஒருவன் தனக்குத்தானே சாக வேண்டும். இது வெறும் நகைச்சுவை அல்ல, இது தெய்வீகக் காதல்.**

**இங்கு நீங்கள் அனுபவிப்பதைத் தவிர, அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியாக இருங்கள். 29, 30ஆம் தேதிகளில் நடைபெறும் கூட்டம், அதன் விளைவில் தனித்துவமாகவும், நீடித்ததாகவும் இருக்கும். அதுவரை எதற்கும் கவலைப்பட வேண்டாம். குதூகலமாகவும், நேர்மையாகவும் இருந்து உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு, கூட்டம் முடிவடைந்ததும், நீங்கள் நேரடியாக உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லும் வேளையில், இங்கு நிகழ்ந்த சந்திப்பின் சூழலை அப்படியே எடுத்துச் சென்று, பாதுகாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

பாபா ஒவ்வொருவரிடமும் எதையேனும் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். மால்கம் ஸ்க்லோஸ், கபீரின் ஈரடிக் கவிதையின் ஒரு வரியை மேற்கோள் காட்டினார்: "காதல் போதையால் இதயம் மயங்கும் போது, அங்கே வார்த்தைகளுக்கு என்ன தேவை?"

ஜான் பாஸ் கூறினார், "உண்மையில் எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை... எனது மனம் வெறுமையாக உள்ளது."

**"வெறுமையாக இருப்பது ஒரு சிறந்த விஷயம்"** என்று பாபா குறிப்பிட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, லட் டிம்ப்ஃபில் (LUD DIMPFL), மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்தபோது, அவதார புருஷரை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்தாலும், பலர் உணர்ந்ததைப் போல, பாபாவின் ஸ்பரிசத்தை உணராததால், அவர் குழப்பமடைந்தார். இப்போது, பாபாவின் மீதுள்ள ஆழ்ந்த அன்பின் உணர்வுகளைப் பற்றி சிலர் பேசுவதைக் கேட்டு, அவர் அதிருப்தியடைந்தார். அவரும் அவ்வாறே உணராததால், அவர்களுடைய நேர்மையை அவர் சந்தேகக் கண்களால் பார்த்தார். அவரது முறை வந்ததும், அவர் பயம் அல்லது பதட்டம் காரணமாகப் பேசமுடியாத நிலை போன்ற எதையோ குறிப்பிட்டார்; ஆனால், பாபா அவரை ஊக்குவித்ததன் பேரில், "பாபா, நாங்கள் அனைவரும் என்ன பேசுகிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. நாங்கள் இங்கே குச்சிகளை ஒன்றிணைத்து கட்டிய மூட்டை போல் அமர்ந்திருக்கிறோம்; உங்களின் உண்மை ரூபத்தை நாங்கள் இன்னும் காணவில்லை, இங்கே நாங்கள் அனைவரும் கிங் லியரின் (KING LEAR) மகள்களைப் போல், உங்களுக்குப் பாராட்டுக்களை வழங்குவதில் ஒருவரையொருவர் விஞ்ச முயற்சிக்கிறோம்."

பாபா சிரித்துக்கொண்டே, **"'நான்' என்று சொல்லுங்கள், 'நாங்கள்' அல்ல"** என்று கூறினார்.

'பாபா தன்மீது அதிருப்தி அடைந்துவிட்டார்' என்ற எண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் லட் எதையோ கூறி, மிகவும் வேதனையடைந்தவர் போலத் தோன்றினார். பாபா அவரை ஆறுதல் படுத்தினார்: **"நான் உங்களை நேசிக்கிறேன், ஒருபோதும் அதிருப்தி அடைய மாட்டேன். உங்கள் இதயத்தைத் திறந்து பேசுங்கள். நீங்கள் உணர்வதை மறைப்பதானால், நீங்கள் நேர்மையாக இருக்க மாட்டீர்கள். நேர்மையாக இருப்பதற்காக நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை உண்மையில் நேசிக்கிறேன். உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்கள், ஆனால், எப்பொழுதும் 'நான்' என்று குறிப்பிடுங்கள், 'நாங்கள்' அல்ல. நீங்கள் மகிழ்ச்சியாக உணர்கிறீர்களா?"** லட் மகிழ்ச்சியாக இருப்பதாக பதிலளித்தபோது, பாபா கூறினார், **"வேறு என்ன வேண்டும்?"**

12ஆம் தேதி, பாபா வழங்கிய தரிசன நிகழ்ச்சியால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டதாக ஃபிலிப் டுபுயி (PHILIPPE DUPUIS) கூறினார், மேலும் அது பாபாவின் உடலில் ஒரு பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் ஏதோ சொன்னார்.

**"நான் என் உடலைக் கைவிடுவதற்கு முன்னர், உடலில் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டும்; என்ன நடக்க வேண்டுமோ, அது நடக்கும்; மனிதகுலத்திற்காக இதையெல்லாம் நான் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பேன்"** என்று பாபா கூறினார். **"நாம் யாருக்காக வாழ்கிறோமோ,**

**அந்த அன்பிற்குரியவர், கடவுள் மட்டுமே என்பதை, மக்கள் மனதின் மூலம் அல்லாமல், அனுபவத்தின் மூலம் புரிந்து கொள்வார்களேயானால், நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். கூட்டத்தின்போது, இதை நான் முன்னெப்போதும் விளக்காத வகையில் தெளிவுபடுத்துவேன், மேலும் உங்களில், அதை நடைமுறைப்படுத்தும் அளவுக்கு வலிமையானவர்கள் எனது பணியைச் செய்வார்கள். இந்த நோக்கத்திற்காகத்தான் நான் உங்களை இங்கு அழைத்தேன்.**"

ஜோஸஃப் ஹார்ப் (JOSEPH HARB) கூறினார், "பாபாவுடன் இங்கு இருப்பது ஒரு பாக்கியம் மட்டுமின்றி மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும், மேலும் உங்கள் பணியைத் தொடர நான் பொருத்தமான கருவியாக மாறுவேன் என்று நம்புகிறேன்."

ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் (FRED WINTERFELDT), "இதயம் நிரம்பியிருக்கும் வேளையில், வார்த்தைகள் வெளிவருவதில்லை, நான் உண்மையில் இங்கே இருக்கிறேன் என்று என்னால் நம்பமுடியவில்லை. நீங்கள் விவரிக்கும் அன்பை நாங்கள் எப்படி அடைவது?" என்ற கேள்வியை எழுப்பினார்.

ஃபிராங்க் ஈட்டன் (FRANK EATON), "பாபாவின் சீடர்களின் தோழமை உணர்வால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன்" என்று குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பில் லெ பாஜ் (BILL LE PAGE), ஜான் பாலன்டீன் (JOHN BALLANTYNE) இருவரும் "உங்களைத் தவிர, எங்களுக்கு வேறு எதுவும் வேண்டாம்" என்றனர்.

பாபா பதிலளித்தார், "**எதையும் விரும்பாதவர் அனைத்தையும் அடையப் பெறுகிறார். ஒன்றும் இல்லை என்றால் ஒன்றுமில்லை என்றுதான் அர்த்தம்; எதையும் விரும்பாதவர் ஒருபோதும் ஏமாற்றமடையமாட்டார். அப்படித்தானே?**" என்று அவர் மால்கமிடம் கேட்டதற்கு அவர் 'ஆமாம்' என தலையசைத்தார்.

ஃபிரான்சிஸ் பிரபாஸோன் "எனக்கு இறை உணர்வு வேண்டும்!" என்று அறிவித்தார்.

இதைக் கேட்ட பாபா, ஹஃபீஸின் இந்த வசனத்தை மேற்கோள் காட்டினார்:

**கடவுளோடு ஐக்கியத்தைக் கேட்காதீர்கள்,**
**மேலும் பிரிந்திருப்பதற்காக வருந்தாதீர்கள்.**
**அன்பானவரின் விருப்பத்தை மட்டுமே நாடுங்கள்.**

பாபா தொடர்ந்தார்: "**நான் என் அன்பிற்குரியவருடன் ஐக்கியமாகி சந்திப்பதற்கு முன்பு, நான் அனைத்தையும் இழந்தேன் - அகந்தை, மனம், மற்றும் கீழ் நிலை உணர்வு. ஆனால் கடவுளுக்கு நன்றி, நான் எனது நகைச்சுவை உணர்வை இழக்கவில்லை!**"

1952ஆம் ஆண்டில், நியூயார்க் நகரில் நடந்த ஒரு சம்பவத்தை, பாபா நினைவுகூரும் வகையில் டார்வின் ஷா ஒன்றைக் கூறினார் - அவர் டார்வினை அழைத்த போது அவருடைய மனைவியும் குழந்தைகளும் காரில் வெளியே அமர்ந்திருந்தனர். அவர்கள் பாபாவின் ஒரு கண நேர பார்வைக்காக ஏங்கித் தவித்தனர், ஆனால் பாபா அவர்களைப் பார்க்கவில்லை. இறுதியாக, சில நாட்களுக்குப் பிறகு, பாபா அவர்களை சந்தித்த வேளையில், பல நாட்களாகத் தேங்கிக் கிடந்த ஏமாற்றம் மிகுந்த மகிழ்ச்சிக்கு வழிவகுத்தது.

ஃப்ரெட் ஃப்ரே (FRED FREY) இவ்வாறு கூறினார், "நான் என்னை மறந்த நிலையில் இருக்கிறேன். நான் எதிர்பார்த்தது பாபா ஒருவரைத்தான், மேலும் பாபாவின் அன்பர்களால் நான் ஆழ் இதயத்தில் அரவணைக்கப்படுகிறேன். பாபாவின் அன்பை அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்ல முடிந்தால் அது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும்."

வில் பேக்கெட், "ஏற்கனவே சொல்லப்பட்ட அனைத்தையும் என் இதயம் எதிரொலித்தது, நிச்சயமாக, நான் பாபாவுடன் இருப்பதில் பரவசமூட்டும் மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன்" என்றார்.

ஒவ்வொருவருக்கும் செவிமடுத்த பிறகு, பாபா கடைசியாக மேக்ஸிடம், **"மேக்ஸ், உங்களுக்கு என்னை பிடிக்குமா?"** என வினவினார்.

மேக்ஸ் பதிலளித்தார், "எனக்கு உங்களைப் பற்றி எதுவும் புரியவில்லை. சில சமயங்களில் நான் புரிந்துகொள்கிறேன், சில சமயங்களில் இல்லை; ஆனால் நான் உங்கள் மண்டலியை விரும்புகிறேன் - ஸரோஷ், மெஹர்ஜி, நீலு. இப்போது நீங்கள் மிகவும் இயல்பாக இருக்கிறீர்கள்."

**"எனவே, சில சமயங்களில் என்னை உங்களுக்குப் பிடிக்காது; ஆனால் நான் உங்களை எப்பொழுதும் நேசிக்கிறேன்"** என்று பாபா குறிப்பிட்டார்.

குழுவுடன் உரையாற்றிய பாபா, ஹேஃப்லிகரைப் பற்றி கருத்துத் தெரிவித்தார், **"மேக்ஸ் நேர்மையானவர். ஆன்மீகப் பாதையில் நேர்மை மிகவும் முக்கியமானது."**

சார்லஸ் பர்டம் நம்பிக்கையின் வகைகளைப் பற்றியும், 'தூய்மையான இதயம் படைத்தவர்களால் மட்டுமே கடவுளைக் காண முடியும்' என்று இயேசு கூறியதன் அர்த்தம் குறித்தும், மேலும் தெளிவுற விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதற்கு பாபா, **"நாளை விளக்குகிறேன்"** என்றார்.

பாபா இதர விஷயங்களில் தொடர்ந்து விளக்கமளித்தார்:

**எனது நகைச்சுவை உணர்வை நான் இழக்காததால், உங்கள் நிலையில் நான் உங்களுக்கு இப்படித் தோற்றமளிக்கிறேன். இந்தியாவில், நீண்ட தாடியுடன் யோகிகளையும் புனிதர்களையும் நீங்கள் எப்போதும்**

**காணலாம். அவர்கள் முன்னிலையில் நீங்கள் காலணிகளுடன் அல்லது புகைபிடிக்க அனுமதிக்கப்பட மாட்டீர்கள். ஆனால் என்னுடன், நீங்கள் இவற்றையெல்லாம் செய்ய முடியும், ஏனெனில் நான் உங்களுடன் ஒன்றாகவும் உங்களில் ஒருவராகவும் இருக்கிறேன். நாளை முதல், உங்களின் இந்த வருகை வெறும் சுற்றுலா பயணமாக மட்டும் இல்லாமலிருக்க நான் வேண்டியதைச் செய்வேன்.**

**கடவுளை நேசிப்பவர்களில் மூன்று வகை உண்டு. முதலாவது கடவுளை மட்டுமே நேசித்து, அறிந்துகொள்ளும் மஸ்துகள். அவர்கள் சுய உணர்வு, உடல் மற்றும் உலகம் குறித்த அனைத்து உணர்வையும் இழக்கின்றனர். மழை, வெயில், பனி, கோடைகாலம் எதுவானாலும் சரி, மஸ்துகளுக்கு எல்லாமே ஒன்றுதான். அவர்களுக்கு கடவுள் மட்டுமே இருக்கிறார்; அவர்கள் தனக்குள் தன்னை இழந்து இறந்துவிட்டவர்கள்.**

**இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள் உலகில் வாழ்பவர்கள், அனைத்து உலகக் கடமைகளையும் முழுமையாகக் கடைப்பிடிப்பவர்கள், ஆனால் அவர் தன் இதயத்தில் எப்பொழுதும் 'இது தற்காலிகமானது, கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார்' என்பதை அறிவார்; மேலும் எவருக்கும் தெரியாமல் உள்ளுக்குள் கடவுளை நேசிக்கிறார்.**

**மூன்றாவது வகை, மிக உயர்ந்தது, மிகவும் அரிதானது. இங்கே, உண்மையாக நேசிக்கும் ஒருவர், கிறிஸ்து, அவதார புருஷர், இறை-மனிதனிடம் முழுமையாக சரணடைகிறார். அவர் தனக்காக அல்ல, குருநாதருக்காக வாழ்கிறார். இது இறைவனை நேசிப்பவர்களில் உயர்ந்த ரகம். அத்தகைய நேசம் உங்களிடம் இல்லையென்றால், பிறரைக் குறை கூறுவதும், எடைபோடுவதும் உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது.**

பாபா, குழுவை மதிய உணவுக்கு அனுப்பிய பிறகு, சிறிது நேரத்தில் அவர்களுடன் இணைந்து, முதலில் மேஜையின் ஒரு புறமும், தொடர்ந்து மறுபுறமும் அமர்ந்து, அனைவரிடமும் உணவைப் பற்றி விசாரித்து இவ்வாறு எடுத்துரைத்தார்:

**'நான் உங்களுடன், இவ்வண்ணம் இருப்பது எவ்வளவு அதிர்ஷ்டவசமானது என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா' என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. 12ஆம் தேதி தரிசன நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள், ஒரு நொடிப்பொழுதேனும் எனது பாதங்களைத் தொடும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று போராடியவர்கள், மேலும் பிரசாதத்திற்காக மிகுந்த ஆர்வத்துடன் இருந்தவர்களையும் நினைத்துப் பாருங்கள். அவர்கள் என்னை நேசிப்பவர்கள். இதர அனைவரும் - சமூக மக்கள், அரசியல்வாதிகள், அறிவுஜீவிகள் - தங்கள் உரைகளை நிகழ்த்தி மேடையை விட்டு வெளியேறுகிறார்கள்.**

**ஆந்திராவில் பதினைந்து நாட்களாக, நாங்கள் தினமும் இரண்டு அல்லது மூன்று தரிசன நிகழ்ச்சிகளை நடத்தினோம்; சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மாட்டு வண்டிகளிலும், கால்நடையாகவும் வந்திருந்தனர். நீங்கள் இங்கே உங்கள் விருப்பப்படி, என்னுடன் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். இந்தியாவில் அவர்களுக்கு மரபு முறைகள் உண்டு. நான் முன்பு கூறியது போல, யோகிகளும், மஹான்களும் மௌனமாக தியானத்தில் இருக்க வேண்டும். உங்களால் அவர்களுடன் பயனுள்ள தொடர்பை ஏற்படுத்த முடியாது. நான் உங்கள் குருநாதர், ஆனால், அதே வேளையில் நான் உங்கள் நண்பன், நான் உங்களுடன், உங்களில் ஒருவன் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இதனால், நீங்கள் என்னுடன் முற்றிலும் இயல்பாக இருக்க முடியும், உங்கள் மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லுங்கள்.**

**நான் சாதுக்களுடன் இருக்கும்போது, என்னைப்போல தீவிரமாக எவரும் இருப்பதில்லை. குழந்தைகளுடன் இருக்கும்போது அவர்களுடன் கோலி விளையாடுகிறேன். நான் அனைத்திலும் இருக்கிறேன், அனைவருடனும் ஒன்றாக இருக்கிறேன். அதனால்தான் நான் எல்லா விதமான மக்களுடனும், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல நடந்துகொள்ள முடியும், அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களை சந்திக்க முடியும்.**

மதிய உணவுக்குப் பிறகு, பாபா, கீழ் மெஹராபாத்திற்குச் சென்று, அங்கு அவர் பெண்டு, பாதிரி, மற்றும் பிறருடன் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்தார். பெண்டு அவரிடம், “பாபா, ஏற்பாடுகள் நன்றாக உள்ளன, ஆனால் மழை பெய்தால் எல்லாம் சீரழிந்துவிடும்” என்று கூறினார்.

பாபா, “**பைதூலிடம் தாடி வளர்த்து, மழை பெய்யாமல் இருக்க பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். அவர் அதைச் செய்கிறார். அதனால், மழை வராது, சில நாட்களாக மழை முற்றிலும் நின்று விட்டது**” என்றார்.

மாலை சுமார் 5:00 மணியளவில் பாபா, குஷ்ரு குவார்ட்டர்ஸ், ஆதி அலுவலகத்திற்குச் சென்றார், அங்கு ஊழியர்களின் ஒருங்கிணைந்த பணி தீவிரமாக நடந்துகொண்டிருந்தது.

தினமும் ஏராளமான கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. ஆதியுடன் அலுவலகத்தில் முக்கிய பணியாளராக தத்து இருந்தார்; வாமன் படலே செய்திகள் மற்றும் பல வெளியளவிலான வேலைகளைக் கையாண்டார். ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, புது வாழ்வு தொடங்கிய நாளிலிருந்து, அக்பர் அச்சகத்தில் தங்கியிருந்து, குறிப்பாக மும்முரமான நேரங்களில் அலுவலகப் பணிகளில் உதவினார், மேலும் பாபாவின் சில ஆங்கிலச் செய்திகளை குஜராத்தியில் மொழிபெயர்த்தார். ஒவ்வொரு நாளும், பாபா மெஹராபாத்திற்குச்

சென்று திரும்பும்போது, குஷ்ரு குவார்ட்டர்ஸில், ஆதியின் தாயார் குல்மாய், சகோதரிகள், டாலி, பிரோஜா மற்றும் பணியாளர்களை சந்திப்பது வழக்கம். டாலி தனியாக வாழ்ந்ததால், பாபாவைப் பார்க்க வெளியே வராமல், தூரத்திலிருந்து பார்த்த பின்பு, தன் அறைக்குத் திரும்பிச் சென்றால், பாபா அவரை தனிமையில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டார். ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களைப் பார்க்க பாபா அக்பர் அச்சகத்திற்கும் சென்றார். அவர்கள் காலையிலும் மாலையிலும் சாலையோரம் நின்று, பாபாவின் கார் செல்லும் வரை காத்திருப்பது பழக்கம்.

குறிப்பிட்ட அந்த நாளில், 14ஆம் தேதி, பாபா குஷ்ரு குவார்ட்டர்ஸ் சென்றபோது, அவரைப் பார்க்க, ரங்கோலே, பூனாவிலிருந்து தாடே குடும்பத்தினர் மற்றும் பலர் வந்திருந்தனர். அவர்கள் திருமணத்திற்காக பாபாவின் அனுமதியைக் கோரி வந்தனர், ரங்கோலே திருமணத்தைக் குறித்து முதலில் அவரிடம் கேட்டபோது, பாபா, **“நாம் எழுத்துப்பலகையைக் கலந்தாலோசிப்போம். நான் அதைச் சுழற்றுவேன், எழுத்துகள் மேல்நோக்கி நின்றால், திருமணத்தை நடத்தலாம்; இல்லையேல் வேண்டாம். முடிவு என்னவாக இருந்தாலும் அது என்னுடையதாக இருக்கும்”** என்றார். பாபா தனது எழுத்துப்பலகையை சுழற்றினார், ரங்கோலே திருமணம் செய்யக்கூடாது என்ற பதில் வந்தது. அதைத் தொடர்ந்து, பூனாவிலிருந்து வந்தவர்கள் பாபாவிடம் கேட்க துணிச்சலின்றி அமைதி காத்தனர். ரங்கோலே, சுபத்ராவை மணக்க விரும்பினார், ஆனால் சுபத்ரா, மதுசூதனனை விரும்பினார். சுபத்ரா நோயிலிருந்து குணமடைந்து இப்போது மிகவும் ஆரோக்கியமாக இருந்தார். ரங்கோலே, பாபாவின் முடிவைப் புரிந்துகொண்டு அதை ஏற்றுக்கொண்டார். அவர் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருந்தார்.

1954 செப்டம்பர் 15 புதன்கிழமை அன்று காலை 9:00 மணிக்கு பாபா, மெஹராபாத் திரும்பிவந்து, அன்று மதியம் வரை மேற்கத்திய அன்பர்களின் குழுவுடன் தனிப்பட்ட நேர்காணல்களை நடத்தினார். பாபாவுடனான தனது நேர்காணலில், மேக்ஸ் ஹே:ப்லிகர் மனக்கலக்கத்தில் குழப்பமாக இருந்ததாகத் தோன்றியது, மேலும் அவர் இந்தியா வந்த நாளிலிருந்து அவரைத் தொந்தரவு செய்த விஷயங்களைப் பற்றி பேசினார். அந்த நேரத்தில், பொதுவாக, சுவிஸ் மக்கள் மிகவும் அமைதியான, தன்னடக்கம் வாய்ந்த சுபாவம் உடையவர்கள்; ஒருவரின் உணர்வுகளை அல்லது பக்தியை வெளிப்படுத்துவது பெரும்பாலும் எதிர்பாராத ஒன்று; விளைநிலத்தில் பயிரிடப்பட்டு, கச்சிதமும் பக்குவமும் ஆகாதவர்களாகக் கருதப்பட்டனர். உதாரணமாக, வாடியா பார்க்கில் வெகுஜன தரிசனம் பற்றி, மேக்ஸ் தனது மனைவி கிஸேலாவிற்கு (GISELA) எழுதினார், “இது பயங்கரமானது... அவ்வப்போது மக்கள் ஆங்காங்கே அலைமோதத் தொடங்கினர்; அவர்கள் பிரசாதத்தைப் பெறுவதற்காக யார் மீதும் குதித்து ஓடத் தயாராக

இருந்தனர். அது எனக்கு மனித விலங்குகளின் மந்தைகளின் கூட்டமாகத் தோன்றியது." மேக்ஸும், வரவிருக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு பக்தியை உணரவில்லை.

பாபா முதலில் அவரைக் கடுமையாகக் கண்டித்து, "**நீங்கள் என்னை மிகவும் ஏமாற்றமடையச் செய்தீர்கள். நீங்கள் ஒரு முதல்தர முட்டாள்!**" ஆனால், பாபா, அவர் உடனடியாக சுவிட்சர்லாந்திற்குத் திரும்பிச் செல்வதற்கு சம்மதம் தெரிவித்தார், மேலும் மேக்ஸ் அதே மாலை மெஹராபாத்திலிருந்து மும்பைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பாபா அவரை ஆறுதல்படுத்தினார், "**அன்புள்ள மேக்ஸ், நீங்கள் என்னை விரும்பினாலும் இல்லாவிட்டாலும், நீங்கள் என்னுடையவர், நான் எப்போதும் உங்களை நேசிப்பேன்.**"

ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் தனது நேர்காணலுக்காக அரை இருள் நிறைந்த அறைக்குள் நுழைந்தபோது, பாபா எழுந்து நின்று முன் வந்தார்; ஃப்ரெட், திடீரென பாபா மேலும் மேலும் உருவத்தில் பெரிதாகி வருவதைக் கண்டார். தனது வாழ்வில் அவர் செய்த அக்கிரமங்கள், அடாவடித்தனங்கள், சுயநலச் செயல்கள் எல்லாம் சட்டென்று அவர் மனதிற்குள் அலைபாய்ந்தன. அவர் கண்கலங்கி நினைத்தார்: "இதோ பாபாவின் முன்னிலையில் - அவதார புருஷர், கடவுள் - நீங்கள் ஒரு குழந்தையைப் போல் அழுகிறீர்கள்!" அவர் தன்னைத்தானே விமர்சித்தார் ஆனால் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

பாபா அவருக்கு ஆறுதல் கூறி, "**அது அலை பாய்ந்து விரைந்து ஓடட்டும்; உங்களுக்குள் அளவுக்கு அதிகமாகப் புதையுண்டுள்ளது**" என்று கூறினார். அவரது தனிப்பட்ட நேர்காணலின் போது, பாபா, ஃப்ரெட்டிடம் கூறினார்: "**நான் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவன், அப்படிப்பட்ட எனது நிலையில், நான் தெய்வீக உண்மையுடன் கூறுகிறேன்: என்னை நேசிப்பது எளிதானது அல்ல, ஆனால் எனக்குக் கீழ்ப்படிவது எளிது.**"

டார்வின் ஷா, எரச்சை சந்தித்ததில்லை, அவருடைய நேர்காணலின் ஆரம்பத்தில், பாபா அவர்களை அறிமுகப்படுத்தினார். எரச் எழுத்துப்பலகையை வாசித்த வண்ணம், தன்னையே சுட்டிக்காட்டி, "**டார்வின், இது எரச்**" என்றார். எரச்சின் பக்கம் திரும்பிய பாபா, "**இவர் டார்வின், எனக்கு மிகவும் பிரியமானவர்களில் ஒருவர்**" என்று கூறினார்.

பாபாவின் எளிய 'அறிவிப்பு' டார்வின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில், "பாபா எப்படியோ திரையை பின்னால் இழுத்து தன்னை வெளிப்படுத்தினார்," என்று டார்வின் விவரித்தார். பாபாவின் கைகளில் சாய்ந்து, டார்வின் "ஒரு பெரிய அன்பின் அலையை உணர்ந்ததோடு, ஆனந்தத்தை அனுபவித்தார்", அவர் தொடர்ந்து கூறினார்:

அது எனது பயங்கரமான கனவுகளுக்கும் அப்பாற்பட்டது. அவரது அன்பின் இனிமை, கனிவான அழகை எவராலும் விவரிக்க முடியாது. நாங்கள் மர்டில் பீச்சில் வாழும் போது, ஒரு கடிதத்தில், பாபா, என்னை அவர் தேர்ந்தெடுத்த சீடர் என்று குறிப்பிட்டிருந்தார். நான் அதை முழுமையாக நம்பவில்லை. இப்போது, பாபா என்னை, தமக்கு மிகவும் அன்பானவர்களில் ஒருவராக அழைத்தபோது, அது என்னை சுக்குநூறாக்கிவிட்டது. நான் கண்ணீருடன் அவரைப் பார்த்து, "அப்படி எப்படிச் சொல்ல முடியும்?" பாபா நிதானமாக, **"நான் உங்களிடம் வேடிக்கைக்காகக் கூறவில்லை"** என்றார்.

டார்வின், பாபாவிற்கு ஒரு கம்பளிப் போர்வையைக் கொண்டு வந்திருந்தார். அவர் அந்தச் சிறிய பொட்டலத்தை மேசையில் வைத்து, கையில் எடுத்தபோது, அது போதுமானதாக இல்லை என உணர்ந்தார். பணிவுடன், அவர் பாபாவிடம் அதைக் கொடுக்க, அவர் விரைவாக பதிலளித்தார், **"நீங்கள் கொண்டு வர முடிந்த மிகப்பெரிய பரிசு நீங்களே. நீங்கள் எனக்கு கடவுள் கொடுத்த பரிசு."**

இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர், அவர்கள் வரும் வேளையில், பாபா அவர்களுக்கு ஆழ்ந்த ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்குவார் என்று டார்வின் நினைத்திருந்தார்; அவற்றை வழங்கியிருந்தாலும், அவர் அதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை, அவருடைய வார்த்தைகளில்:

பாபா, வெளியளவில், மேலோட்டமாக எங்களுக்கு விளக்கிக் கொண்டிருந்த விஷயங்களுடன், எந்தத் தொடர்பும் இல்லாத, மிக ஆழமான நிலையில், எங்களுக்குள் மிக முக்கியமான ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஒருவர் நிலையானதாக இருக்க முடியாது, ஒவ்வொன்றும் மாறிக்கொண்டிருந்தன. நாம் யார், நாம் என்ன என்ற பரிமாணங்கள் பற்றிய நமது உணர்வு - நம்மை விரயமாகச் செய்யும் செயல்முறை ஒன்று அதில் இருந்தது. நாங்கள் ஒரு புதிய மற்றும் அற்புதமான, இதற்கு முன்னர் இருந்திராத ஒரு சாம்ராஜ்யத்தில் இருந்தோம், அது எப்படியோ பாபாவின் சாம்ராஜ்யமாக இருந்தது. இது நாளுக்கு நாள் தொடர்ந்துகொண்டே இருந்தது.

44 வயதான டேனா ஃபீல்ட் (DANA FIELD), பாபாவிடம், "குழுவாக நாங்கள் செய்யும் சேவையின் தன்மை என்ன?" என வினவினார்.

**"எனக்கு உங்கள் உடல், மனம், உடைமைகள் அனைத்தும் வேண்டும்; என் அன்புதான் உங்களை இங்கு அழைத்து வந்தது"** என்று பாபா பதிலளித்தார்.

மற்றுமொரு தனிப்பட்ட நேர்காணலில், டேனா அவரைப் பின்பற்றுவதில் உள்ள சிரமத்தைப் பற்றிய ஒரு கருத்தை பாபா கூறினார்: **"மோஸஸ், பீட்டர் இருவரும் எனக்கு முழுமையற்ற, பலவீனமான சேவையை செய்தனர், நீங்களும் அதைச் செய்வீர்கள். அவர்கள் என்னை சந்தேகித்து மறுத்தார்கள்,**

**நீங்களும் என்னை சந்தேகித்து மறுப்பீர்கள். மோஸஸ், ஜீஸஸுக்கான வழியைத் தயார் செய்தாலும், அவர் கோபத்தைக் கட்டுப்படுத்தவில்லை, பீட்டர் உண்மையில் தனது அன்பிற்குரியவரை மறுத்தார்.**"

23 வயதான, குழுவின் இளம் உறுப்பினர் ஜான் பாலன்டீன் (JOHN BALLANTYNE), ராபர்ட் (ROBERT) மற்றும் லோர்னா ரூஸ் (LORNA ROUSE) மூலமாக, பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார். இதர ஆஸ்திரேலியரான வில்லியம் (பில்) இயன் லெ பாஜ், WILLIAM (BILL) IAN LE PAGE, 30 வயது, 1947ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஸூஃபி தலைவர் பரோன் வான் ஃபிராங்கன்பெர்க் (BARON VON FRANKENBERG) மூலமாக, பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார், மேலும் ஒரு வருடத்திற்கு பின்னர் ஃபிரான்சிஸ் பிரபாஸோனை சந்தித்தார்.

பாபா, பில்லிடம் கேட்டார், "**நீங்கள் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா? உங்களிடம் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?**"

"நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு வருவீர்களா, பாபா?"

பாபா அவரை வினோதமாகப் பார்த்தார் (பில்லின் வார்த்தைகளில், 'நீ ஒரு மூடன்!' என்று சொல்வது போல), பின்பு, "**நான் ஏற்கனவே அங்கு இல்லை என்று நினைக்கிறீர்களா?**"

பில்லின் அந்தக் கேள்வியே அவருடைய முதல் மற்றும் கடைசி கேள்வியாக இருந்தது. ஒருமுறை, பாபா ஒரு சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, அவருடைய வெளிப்பாடு மிகவும் அருமையாக இருந்தது, அப்போது பில் நினைத்தார்: "நான் பாபாவைப் பார்த்துக்கொண்டே இருக்க விரும்புகிறேன்." பாபா அந்த கணத்தில், "**எனது உரை இப்போது நிறுத்தப்படுகிறது. ஐந்து நிமிடங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருங்கள்**" என்று கூறினார்.

பில் லெ பாஜ் இந்தியாவில் அவர் செலவழித்த நேரத்தைப் பற்றி விவரித்தார்:

பாபா ஒரு பிரகாசமான, இரக்கம் நிறைந்த, அன்பான, எல்லாம் அறிந்தவராக இருந்ததை நான் கண்டேன், அவருடைய ஒவ்வொரு சைகையிலும், அவரது முழு முகம், உறுப்புகள் மற்றும் வடிவங்களின் ஒவ்வொரு வெளிப்பாடுகளிலும் கடவுள் மனித உருவில் இருந்தால், அது அவரே என்பதை எனக்கு உறுதிப்படுத்தியது.

மறுநாள், 1954 செப்டம்பர் 16 வியாழன் அன்று காலை மெஹராஸாத்திற்கு வருமாறு பாபா மேற்கத்திய அன்பர்களை அழைத்தார், அங்கு அவர் அவர்களை கைக்கோபாத், குஸ்தாஜி, காக்கா ஆகியோருக்கு அறிமுகப்படுத்தினார், மேலும் அவர்களுக்கு நீலப்பேருந்து, புது வாழ்வு கவிகை வாகனம், மனோநாஷ் அறை (பின்னர் அது எரச்சின் அறை) போன்றவற்றைக்

காட்டினார். **“மனோநாஷ் காலத்தில், நான் உலகம் முழுவதற்காகவும் பணிபுரிந்தேன்!”** பாபா ஒரு கட்டத்தில் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

மெஹராஸாத்தில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், அவர் தூங்கும் அறையை (பெண்டுவின் அறை) அவர்களுக்குக் காண்பிக்கும் போது, அந்த நேரத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுமாறு பாபா, எரச்சிடம் கேட்டுக்கொண்டார். எரச் கூறியபடி, பாபா அறைக்குள் இருந்தபோது, அன்று இரவு அவர் காவல்புரிந்தார். பாபா கைகளைத் தட்டினாலொழிய கதவைத் திறக்கக் கூடாது என்றும், கைகளைத் தட்டிய மறுகணமே உள்ளே வர வேண்டும் எனவும் அவருக்கு உத்தரவு போடப்பட்டிருந்தது. எரச் ஒரு மண்ணெண்ணை விளக்கு மற்றும் ஒளிரும் மின் விளக்குடன் வெளியே அமர்ந்திருந்தார். அதிகாலை 2:00 மணியளவில், பாபாவின் கதவுக்குக் கீழே ஒரு பாம்பு உள்ளே நுழைய இருந்ததைக் கண்டார். எரச் தனது மின்விளக்கால் அதன் வாலை அழுத்திப் பிடித்த அந்த நேரத்தில் பாபா கைகளைத் தட்டினார். எரச் பாபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கதவை உடனடியாகத் திறந்திருந்தால், பாம்பு அறைக்குள் நுழைந்திருக்கும். எனவே எரச், பாம்பு விலகிப்போகும் வரை காத்திருந்தார். பின்னர் அவர் அறைக்குள் நுழைந்தார், பாபா தாமதத்திற்கான காரணத்தை வினவிய போது எரச் நடந்ததை அவரிடம் கூறினார், அவர் வெறுமனே சிரித்தார்.

**“அதனால்தான், நான் எப்பொழுதும், கட்டளைகள் முரண்பாடாக இருக்கும் போது, முதல் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள் என்று கூறுவதுண்டு”** என்று பாபா மேலும் கூறினார்.

கிர்னார் மலையில் (GIRNAR MOUNTAIN) இரவு கண்காணிப்புப் பணியில் இருந்த குஸ்தாஜி, ஏரியில் விழவிருந்த சம்பவமும் விவரிக்கப்பட்டது.

மேற்கத்தியர்கள், பெண்மணிகள் தங்கும் இடத்தினருகே அமைந்த தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; ரானோ, டாக்டர் கோஹெர் இருவரும் அவர்களை சந்தித்து, தோட்டத்தைச் சுற்றி அழைத்துச் சென்று, அவர்களுக்கு வீடு மற்றும் மாடியில் இருந்த பாபாவின் படுக்கையறை போன்றவை காட்டப்பட்டது, மேலும் பாபா அவர்களை ஏகாந்தவாச மலைக்கு அழைத்துச் சென்று, அங்கு அவர் மண்டலி தங்கியிருந்த, மேலும் அவர் பணிபுரிந்த இடத்தையும் சுட்டிக்காட்டினார். மலை ஏறும் போது, மீண்டும் பாபா கூழாங்கற்களை எடுத்து தூரத்தில் வீசினார், கீழே இறங்கும்போதும் அவ்வாறே செய்தார்.

மெஹராஸாத் திரும்பி வந்து, அவர் குழுவிடம் கூறினார்: **“நீங்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இல்லாவிட்டால், இரண்டு நாட்களுக்கு உங்கள் கால்களில் இந்த நடையின் தாக்கத்தை நீங்கள் உணர வாய்ப்புள்ளது,”** மேலும் **“நான் வழிநடத்த, நீங்கள் மலையில் என்னுடன்**

**வந்திருப்பது, உண்மையில் அதிர்ஷ்டவசமானது, அந்த மலை என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது; நான் அங்கு இருந்தபோது, மிகவும் லேசான தேநீரை மட்டுமே அருந்தி வந்தேன், அது இப்போது தரிசு நிலமாக உள்ளது, ஆனால் அங்கு எனது சீடர்களால் பெருமளவிலான கட்டுமானப் பணிகள் நடக்கும் காலம் வரும்.**"

பழரசம் அனைவருக்கும் பரிமாறப்பட்டது, அதற்குப் பிறகு, மெஹரு 1921 முதல் எட்டு வருடங்கள் தொடர்ந்து பாபா அணிந்திருந்த பழைய, ஒட்டுப்போட்ட கம்பிளிக் கோட்டைக் கொண்டு வந்தபோது, "**இது எனது உடைமைகளில் மிகவும் புனிதமானது**" என்று பாபா அவர்களிடம் கூறினார். "**அதில் என்ன இருக்கிறது என்பது, நான் எனது பௌதீக உடலைத் துறந்த பின்பு வெளிப்படும். பின்னர், ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் அதை வணங்க வருவார்கள்.**"

அதே காலகட்டத்தில், பாபா பயன்படுத்திய பழைய பாதணிகளும், மேலங்கிகளும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. "**நான் அந்த கோட்டுடன் அணிந்திருந்த பாதணிகளும், மேலங்கியும் இவை**" என்று அவர் கூறினார், "**நான் முதன்முதலில் மெஹராபாத் மேல்மலைக்குச் சென்றபோது பாதணிகள் அப்புறப்படுத்தப்பட்டன.**"

பாபா இந்த கோட் அணிவதை நிறுத்திய பின்னர், அவர் அவ்வப்போது தனது ஆடைகளை மாற்றி, அவற்றை பிறருக்குக் கொடுத்துவிடுவதை வழக்கமாகக் கொண்டார், ஆனால் இந்த பொருட்களை பாபா தன்னுடனே வைத்திருந்ததாக எரச் தெரிவித்தார்.

பாபா, அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்று அந்தக் குழுவிடம் கேட்டு, இவ்வாறு தொடர்ந்தார்:

**நாளை காலை 9:00 முதல் 9:30 வரை மெஹராபாத்தில் உங்களை சந்திப்பேன். இனிமேல் நீங்கள் 'பாபாவின் அன்பு'டன் விளையாடுவது ஒன்றுதான் சாலச் சிறந்தது. பாபாவை உள்வாங்க இன்னும் பதினைந்து நாட்கள் மட்டுமே உள்ளன. நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு, சுதந்திரமாக இருப்பீர்கள். நீங்கள் விளையாடலாம், வேலை செய்யலாம், உங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளுடன் விரும்பும் அளவுக்கு இருக்கலாம்; ஆனால், இங்கே இப்போது, உங்களால் இயன்றவரை என்னை கிரகிக்க முயற்சி செய்யுங்கள். சுருக்கமாகச் சொன்னால், நீங்கள் திரும்பிச் செல்லும்போது, என்னையும் உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

பாபா ஒவ்வொருவரையும் அரவணைத்து, அவர்கள் மெஹராபாத்திற்குத் திரும்புவதற்கு முன்பு, 'ஹேப்பி வேலி' மலைப் பள்ளத்தாக்கைப் பார்வையிட அனுப்பி வைத்தார்.



**குமார், பாபா, பைதூல் - ஏகாந்தவாச மலை, 16 செப்டம்பர் 1954**
(BABA WITH KUMAR & BAIDUL, SECLUSION HILL, 16 SEPTEMBER 1954)



**குஷ்ரு குவாட்டர்ஸ், 17 செப்டம்பர் 1954**
(KHUSHRU QUARTERS, 17 SEPTEMBER 1954)

1954 செப்டம்பர் 17 வெள்ளியன்று, மெஹராபாத் செல்லும் வழியில், பாபா குஷ்ரு குவார்ட்டர்ஸ் சென்றபோது, ஆதியின் படுக்கையின் மீதிருந்த புலித்தோலில் பாபா அமர்ந்த வண்ணம் புகைப்படங்களை, பைய்யா பாண்டே எடுத்தார். அதன் பின்னர், அக்பர் அச்சகத்திற்கு அருகில் அமைந்த மாணவர் விடுதிக்குச் சென்ற பாபா, அவருடைய எண்ணற்ற செய்திகள் மற்றும் சுற்றறிக்கைகளை அச்சிட்டு, கடுமையாக உழைத்த 'மோகன் பிரஸ்' (MOHAN PRESS) ஊழியர்களுக்கு அங்கு தரிசனம் வழங்கினார்.

பாபா காலை 9:20 மணிக்கு மெஹராபாத் வந்தபோது, அவர் மேற்கத்திய குழுவிடம், "**மிகவும் சிறப்பான தருணங்களில், என்னுடைய மிக நெருங்கிய சீடர்கள் சிலருடன், நான் பிரார்த்தனை கூட்டங்களை நடத்துவது வழக்கம். இன்று, இத்தகைய கூட்டங்களில் ஒன்றை நடத்த விருக்கிறேன், அதன் மூலம் நீங்கள் அனைவரும் அதில் இணைக்கப்படுவீர்கள்.**"

பாபா, மேக்ஸ் ஹேஃப்லிகரை சுவிட்சர்லாந்திற்கு அனுப்பிவைத்தார். அவரைப் பற்றி பாபா விளக்கியதாவது:

**முதலில், நான் உங்களுக்கு மேக்ஸ் பற்றி சொல்ல விரும்புகிறேன். சார்லஸிடமிருந்து எனக்கு ஒரு குறிப்பு வந்தது, 'அவரை சுவிட்சர்லாந்திற்கு அனுப்பிவைத்ததைக் குறித்து, விளக்கும் வகையில் நான் ஏதாவது சொல்ல முடியுமா' என்று என்னிடம் கேட்டிருந்தார், ஏனெனில் அது அவரை சற்று நிலைகுலையச் செய்ததோடு, அவருக்கு மன உளைச்சலையும் ஏற்படுத்தியது.**

**என்னுடனான அவரது நேர்காணலில், மேக்ஸ் என்னிடம் மிகவும் தனிப்பட்ட, அந்தரங்கமான விஷயம் ஒன்றைக் கூறினார், அதை நாங்கள் இருவரும் பிறரிடம் பகிர்ந்துகொள்ள மாட்டோம் என்று உறுதியளித்தோம். இரண்டு வருடங்களுக்கு முன்னர், என்னை சந்தித்த பின்பு, தான் எதிர்கொண்ட மனநிலையை என்னிடம் விவரித்தார். அவர் உண்மையில் இந்தியா வர விரும்பவில்லை என்று என்னிடம் கூறினார், ஆனால் ஏதோ ஒன்று அவரை அவ்வாறு செய்ய வைத்தது. அதன் பின்னர், 'இப்போது, பாபா, நான் உடனடியாகச் செல்ல வேண்டுமா அல்லது சந்திப்பு வரை காத்திருக்க வேண்டுமா என்பதை உங்கள் முடிவிற்கு விட்டுவிடுகிறேன்' என்றார். நான் அவரிடம் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினேன். அவர் மிகவும் சோகமாக உணர்ந்து, கண்கலங்கி அழுதார், ஆனால் நான் அவரை உடனடியாகச் (சுவிட்சர்லாந்துக்கு) செல்லும்படிக் கூறினேன். அதற்கிணங்க அவர் செப்டம்பர் 22ஆம் தேதி மும்பையிலிருந்து புறப்பட உள்ளார்.**

**அவர் மிகவும் நல்ல மனிதர், நான் அவரை மிகவும் நேசிக்கிறேன். இன்று அவர் எனக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார், "அன்புள்ள பாபா, உங்களை ஏமாற்றமடையச் செய்ததற்காக நான் தாழ்மையுடன் மன்னிப்புக் கோருகிறேன்." நான் பதில் தந்தி அனுப்பினேன்: "கவலைப்படாதீர்கள்; எனது அன்பும் ஆசிகளும்." அன்புள்ள பர்டம், மேக்ஸ் வெளியேறியதன் காரணத்தை அறிய விரும்பியதால் இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.**

மேற்கத்திய அன்பர்கள் பாபாவுடன் இணைந்து, பிரார்த்தனைக்காக கீழ் மெஹராபாத்திற்குச் சென்றனர். பாபா, தமது இருக்கையில் அமர்ந்ததும், அவரைச் சுற்றி அனைவரும் தரையில் அமர்ந்தனர். அனைத்து கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டன. பாபா, கைக்கோபாத்தை அழைத்து, அனைவரும் ஒன்றாக மண்டபத்தின் மறுமுனைக்குச் சென்று, தங்கள் முகத்தையும் கைகளையும் சுத்தம் செய்தனர். பாபாவின் பெரிய உருவப்படத்தின் முன் நின்று (ரானோவால் வரையப்பட்ட 'தி அவதார்', THE AVATAR), அவர்கள் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர். கைக்கோபாத் பிரார்த்தனையை மொழிய, பாபா அவரது சைகை மொழியால் பின்தொடர்ந்தார். பிரார்த்தனைக்குப் பிறகு, பாபா மீண்டும் கைகளைக் கழுவி, கைக்கோபாத்தின் கைகளின் மீது அவரது கைகளை வைத்தார். தொடர்ந்து, கைக்கோபாத் பாபாவின் நெற்றியைத் தொட்டு, தனது நெற்றியையும் தொட்டு, மறுபடியும் பாபாவின் நெற்றியைத் தொட்ட பின்பு, பாபா தரையைத் தொட்டார்.

அடுத்து முஸ்லீம் பிரார்த்தனை நடந்தது. பாபா தனது ஓவியத்தின் முன்னால், தரையில் விரிப்பதற்கான ஒரு துணியை வரவழைத்தார், தலையை சிவப்பு நிற துண்டால் மூடிக்கொண்டார். அதன் பின்னர், அவரும் அலோபாவும் பாபாவின் உருவப்படத்திற்கு அருகில், மெக்கா இருக்கும் திசையை நோக்கி, தரையில் விரிக்கப்பட்ட துணியில் நின்றனர். அலோபா பிரார்த்தனையை மொழிந்த அவ்வேளையில், பாபாவின் விரல்கள் தொடர்ந்து நகர்ந்தன. பல முறை, அலோபா தனது கைகளை உயர்த்தி, குனிந்து, மண்டியிட்டு வணங்கினார். இதற்குப் பிறகு, நீலு, விஷ்ணு இருவரும் சமஸ்கிருத மொழியில் இந்து பிரார்த்தனையை மொழிந்தனர். எரச், டானின் கையைப் பற்றிக்கொண்டு, பைபிளிலிருந்து சில பகுதிகளை வாசித்தார். ஒவ்வொரு பிரார்த்தனையின் முடிவிலும், பாபா தரையைத் தொட்டு, தனது சுய உருவப்படத்திற்கு வணக்கம் செலுத்தினார்.

அதன் பிறகு, பாபா, டானை வெளியே சென்று கைகளைக் கழுவி வருமாறு கூறினார். டான் திரும்பி வரும் வரை பாபா முன்னும் பின்னும் நடந்தார். மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை (PRAYER OF REPENTANCE) மொழிந்து, அதன் முடிவில், பாபா அவரது நெற்றியைத் தொட்டு, பின்பு தரையையும் தொட்டு, அவரது உருவப்படத்தை வணங்கினார். கதவுகளையும் ஜன்னல்களையும் திறக்கக் கூறி பாபா, தமது இருக்கையில் மீண்டும் அமர்ந்து, தொடர்ந்து மேற்கத்திய அன்பர்களுக்கு விளக்கினார், "**இன்று நீங்கள், கடவுளே கடவுளுக்குச் செய்த பிரார்த்தனையில், கடவுளுடன் இணைந்திருந்தீர்கள். நானும் கடவுளும் ஒன்று. இப்போது, நாம் மேல்மலைக்குச் செல்கிறோம்.**"

இந்த எளிமையான விழா, மேற்கத்திய அன்பர்களின் இதயங்களை ஆழமாகத் தொட்டது. டேனா ஃபீல்ட் பின்னர் எழுதியிருந்ததற்கு இணங்க: "பூசாரிகள் அல்லது கோவில்கள் இல்லாமல் இது மிகவும் மனதை உருக்கும் விழாவாக இருந்தது… பாபா எதைச் செய்தாலும், அது வாழ்க்கையின்

இன்றியமையா அர்த்தத்தைப் பெறுகிறது; நாம் கேட்டு, பழகிய அந்தப் பழங்கால பாடல்கள் ஒரு புதிய சுவையைக் கொண்டிருந்தன."

மெஹராபாத் மேல்மலையை நோக்கிச் செல்லும் வழியில், டானின் மருத்துவ வசதியைக் காண்பிக்க பாபா நின்றார். **"இது டானின் மருத்துவமனை,"** என்று அவர் கூறினார். **"மேலும், உடல்நலம் குறித்து, நான் கவலைப்பட ஒன்றுமில்லை, ஏனெனில் இங்கே, எனக்கு மிகவும் பிரியமானவர், மருத்துவர் இருக்கிறார். என்னுடைய இந்த அன்பு மகன், பாபா மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் நேசமும் தனித்துவமானது. நான் நேற்று கூறியது போல், உங்களுக்கு ஏதேனும் தொந்தரவு இருந்தால், சிறிய விஷயமானாலும் கூட, டானை அணுகுங்கள்."**

அதன் பின்னர், அவர்கள் பாபாவுடன், 11:00 மணியளவில் மலையில் நடந்து சென்று, மெஹர் ரிட்ரீட் (MEHER RETREAT) கட்டிடத்தின் மேற்கு அறையில் கூடினர். ரானோ மெஹராஸாத்திலிருந்து பாபாவுடன் வந்து, பத்து வட்டங்களாலான ஓவியத்தையும், அவரது கைவண்ணத்தில் உருவான 'தி பிலவட்' (THE BELOVED) என்ற தலைப்பில் மற்றுமோர் ஓவியத்தையும் காட்டினார். தொடர்ந்து பாபா தனது எழுத்துப்பலகை வழியாக விளக்கினார்:

**நாளை முதல், நீங்கள் ஒவ்வொருவரும் ஏழு நாட்களுக்கு, தினமும் அரை மணி நேரம், என்னைப் பற்றி, தனிப்பட்ட முறையில் சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும், உங்களுக்கு உகந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, தனியாக ஒதுங்கி அமர்ந்து, கண்களை மூடிக்கொண்டு, பாபாவின் உருவத்தை உங்கள் மனக்கண் முன்னால் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியாத பட்சத்தில், என்னுடைய புகைப்படத்தைப் பார்த்து, மனதளவில் பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழியுங்கள். சிந்தனைகள் உங்களைத் தொந்தரவு செய்தால், கவலைப்பட வேண்டாம். அவை வந்து போகட்டும், ஆனால் பாபாவின் உருவத்தை உங்கள் மனக்கண்ணில் தெளிவாக வைக்க உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். உங்களுக்குத் தொந்தரவு இல்லாத வகையில் இடங்களைத் தேர்ந்தெடுக்கவும். நாளை முதல் ஏழு நாட்களுக்கு, அரை மணி நேர மௌன சிந்தனை. நீங்கள் எந்தவிதமான தொந்தரவும் இல்லாமல் இருக்க வேண்டும். நீங்கள் இதை முழு மனதுடன், காலை 9:00 முதல் 9:30 வரை, தினமும் 18, 19, 21, 22, 23, 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 26ஆம் தேதி முதல், கூட்டங்களில் கலந்து கொள்ள பல விஷயங்கள் இருப்பதால் நான் உங்களுடன் இருக்கமாட்டேன்.**

ஸவக் கொத்வாலை அழைத்து, இந்த அரை மணி நேர தியானத்தின் போது, அன்பர்கள் தொந்தரவு இல்லாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார். அவர்களின் இதயங்களைச் சுட்டிக்காட்டி, **"இதை முழு**

**மனதுடன் செய்யுங்கள், அதனால் நான் அதை** (அவரது இதயத்தை சுட்டிக்காட்டி) **இங்கே உணர முடியும்" என்றார்.**

பேச்சின் தலைப்பை மாற்றி பாபா கூறினார்:

**நான் இன்று தலைப்புகளை மட்டுமே தருகிறேன், விளக்கங்கள் இல்லை. நாளை, நேரம் அனுமதித்தால், 'கடவுளும் பிரபஞ்சமும்'** (GOD AND THE UNIVERSE), **'உண்மைப்பொருளும் மாயையும்'** (REALITY AND ILLUSION), **'ஒன்றே உருவான இறைவனும் பலவும்'** (THE 'ONE' AND THE MANY), **'பொருளும் நிழலும்'** (SUBSTANCE AND SHADOW), **'எல்லாமும், ஒன்றும் இல்லாததும்'** (EVERYTHING AND NOTHING), **'இறை அறிவும் அறியாமையும்'** (KNOWLEDGE AND IGNORANCE) **& 'ஏழு கீழ்நிலைகள் மற்றும் ஏழு மேல்நிலைகளுக்கு இடையிலான 'இடைவெளி"** (THE "GAP" BETWEEN THE SEVEN DESCENTS AND SEVEN ASCENTS) **குறித்து விளக்குகிறேன்.**

**கிறிஸ்துவும், அவரது உள் வட்ட சீடர்களும், கிறிஸ்தவ மெய்ஞ்ஞானிகள் அனைவரும் இதயத்தின் தூய்மையை வலியுறுத்தினர். முஹமதும் அவரது இமாம்களும் அதையே கூறினர். ஸொராஸ்டரும் மாகியும் அப்படித்தான்; கிருஷ்ணரும் அவருடைய தோழர்களும், வேதாந்திகளும் அவ்வாறே வலியுறுத்தினர்.**

**அது போல, பாபாவும் இதயத்தின் தூய்மையை வலியுறுத்துகிறார். இன்று இதயம் என்றால் என்ன, மனம் என்றால் என்ன என்று பார்ப்போம். இது உடல் உறுப்பை மட்டும்தான் குறிக்கிறதா அல்லது ஆழமான வேறு ஏதாவது ஒன்றையா? ஒரு ஸூஃபி கூறினார்:**

**இறை அன்பின் உறைவிடம் மனதின்**
**செயற்களத்தை விட அளவிறுதியற்றது.**
**லட்சம், கோடி எண்ணிக்கையிலான மக்களில் ஒருவர் மட்டுமே,**
**தன்னுயிரை, தனது கைகளில் சுமந்து சென்று,**
**அன்பிற்குரியவரின் நுழைவாயிலைத்**
**தொட்டு முத்தமிட முடியும்.**

**இது ஒரு நேரடியான மொழிபெயர்ப்பு. இதன் பொருள் என்னவெனில், உங்கள் அன்பான கடவுளை நீங்கள் காண விரும்பினால், உங்கள் உள்ளங்கையில் உங்கள் தலையை ஏந்திக்கொண்டு, அவர் முன் செல்ல வேண்டும்! மனதிற்கு அப்பால் சென்ற ஒருவனை, மனதால் ஒருபோதும் அடைய முடியாது என்பது இதன் பொருள். எனவே, கடவுளைப் புரிந்து கொள்ள முடியாது என்பது இப்போது புலப்படுகிறது. கடவுள் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஏனெனில் ஆசைகள் அல்லது அகங்காரத்தின் திரை இல்லாத அந்தக் கண்ணுக்கு, அவர் அளவிறுதியற்றவராகத் தெரிகிறார். மனம் ஓர் இரட்டை செயல்பாட்டைக் கொண்டுள்ளது, அதை நான் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **என்ற புத்தகத்தில் தெளிவுற விளக்கியிருக்கிறேன். முதல் செயல்பாடு சிந்தனையைச் சார்ந்தது. செயலற்ற நிலையில் இருக்கும் மனப்படிவங்கள், எண்ணங்களாக தோன்றி செயல்பட வேண்டும். மனதின்**

இந்த சிந்தனையின் செயல்பாட்டு அங்கத்தை வேதாந்திகள் 'மனம்' (மன் - MIND) என்று அழைக்கிறார்கள்.

மனதின் இரண்டாவது செயல்பாடு, அனைத்து உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் உள்ளடக்கியது. இது இதயம் (அந்தகரண, HEART) என்று அழைக்கப்படுகிறது. எனவே இதயம் எனப்படுவது, உண்மையில், மனதின் இரண்டாவது செயல்பாடாகும். மனதில் உறைந்திருக்கும் மனப்படிவங்கள் சிந்தனை, உணர்வு ஆகிய இரண்டு வழிகளிலும் செலவிடப்படுகின்றன. மனதின் முதல் செயல்பாட்டில், எல்லா வகையான எண்ணங்களும் உள்ளன. மனதின் இரண்டாவது செயல்பாட்டில், அதாவது இதயம், அனைத்து உணர்வுகள் மற்றும் ஆசைகள் - ஆனந்தம், வேதனை, ஏமாற்றம், மகிழ்ச்சி, அதிர்ச்சி போன்ற உணர்வுகள் - இவை இதயத்திற்குச் சொந்தமானவை.

ஆழ்ந்த தூக்கத்தில், மனதில் பதிவான மனப்படிவங்கள் உள்ளுறைந்து, செயலற்ற நிலையில் இருக்கும். நாம் இப்போது கனவுகளைப் பற்றி பேசவும், விவாதிக்கவும் மாட்டோம்; அவை 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளன. ஆழ்ந்த தூக்கத்திலிருந்து உங்களை எழுப்புவது எது? ஏற்கனவே நிகழ்ந்த செயல்களின் விளைவாக உருவான மனப்படிவங்கள். இந்த மனப்படிவங்கள் முதலில் எண்ணங்கள், பின்னர் ஆசைகள், அதற்குப் பிறகு செயல்கள் மூலமாக செலவிடப்படுகின்றன. எனவே கிருஷ்ணர் தமது கீதையில், 'மனப்படிவங்கள் எண்ணங்கள் மூலமாகவே செலவிடப்பட வேண்டும்' எனப் பொருள்படும் விதத்தில் ஏதோ ஒன்றைக் கூறினார். அப்போது புதிய மனப்படிவங்கள் உருவாகாது. உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால், மனப்படிவங்கள் ஆசைகள், ஏக்கங்கள் மற்றும் உணர்வுகள் மூலம் செலவிடப்படட்டும் - செயல்களால் அல்ல. அப்போது உருவாகும் புதிய மனப்படிவங்கள், அவ்வளவு ஆழமாக இராது. மனப்படிவங்கள் செயல்களுக்கு வழிவகுத்தால், புதிய, வலுவான மனப்படிவங்களை உருவாக்கும்.

இதன் அர்த்தம் என்னவெனில், மனதின் முதல் செயல்பாடு, மனப்படிவங்கள் செலவிடப்படுவதைப் பொறுத்த வரையில் முக்கியமல்ல. இது இயற்கையாக நிகழ்வது. ஆனால் பொதுவாக, இதயம் என்று அழைக்கப்படும் மனதின் இரண்டாவது செயல்பாடு முக்கியமானது, ஏனெனில் அது ஆசைகளின் இருப்பிடம்; மேலும், இதயத்தில் ஆசைகளும், உணர்வுகளும் இல்லாதிருந்தாலொழிய, இதயம் தூய்மையாகவும் வெறுமையாகவும் இல்லையென்றால், ஆழ் இதயத்தை உறைவிடமாகக் கொண்டிருக்கும் கடவுள், அவருடைய சுய ரூபத்தில் அவரை வெளிப்படுத்த முடியாது. இது உங்களுக்குப் புரிகிறதா?

கடவுள் உங்கள் ஆழ் இதயத்தில் குடிகொண்டிருக்கும் பரமாத்மா. அதாவது, இந்த வரையறுக்கப்பட்ட பௌதீக உடலுக்குப் பின்னால், உங்களுக்குள் ஆற்றல் (சக்தி, பிராணம்) மற்றும் ஆழ் மனம் எனும் இரண்டு உடல்களும், அதன் செயல்பாடுகளுடன் உள்ளன. மேலும், உங்களுடன் 'நான்'

எனும் அகங்கார தன்னிலை ஆளுமையும் (EGO) உள்ளது. இவை அனைத்திற்கும் பின்னால், கடவுளை எல்லையற்ற வெளி மண்டலமாகக் கற்பனை செய்து பாருங்கள். இதன் பொருள் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு, 'நீங்கள்' என்றால் உங்கள் உடல் என்ற எண்ணம் உங்களுள் உள்ளது; நீங்கள் மகிழ்ச்சியாகவும், மனச்சோர்வுடனும், பசியுடனும் உணர்கிறீர்கள். நீங்கள், நீங்கள், நீங்கள் - இந்த 'நீங்கள்' நீங்களாகவே இருப்பதாக நினைக்கிறீர்கள், ஆனால் இந்த 'நீங்கள்' எனும் உங்களுக்குப் பின்னால், உங்கள் பௌதீக உடல் இல்லாவிடிலும், அகற்ற முடியாத ஒன்று உள்ளது. உங்கள் கைகள் அல்லது கால்கள் துண்டிக்கப்பட்டாலும், நீங்கள் இன்னமும் 'நீங்களாகவே' இருக்கிறீர்கள். இதன் அர்த்தம் என்னவெனில் நீங்கள் இந்த உடல் அல்ல. ஆழ்ந்த தூக்கத்தில், நீங்கள் உங்கள் உடலைப் பற்றி அறியாமல், உணர்வின்றி இருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் இன்னும் உயிருடன் இருக்கிறீர்கள், எனவே நீங்கள் இந்த உடல் அல்ல. அப்படியானால், யார் இந்த 'நீங்கள்?' இந்த 'நீங்கள்' உங்கள் உள்ளார்ந்த சுயம், 'பரமாத்மா'. இந்த முக்கியமான 'நான்' எனும் பரமாத்மாவை நாம் சுயமாகவே கண்டுகொள்ள வேண்டும்.

நான் யார்? நான் இந்த உடல் அல்ல. அப்படியானால் நான் யார்? நான் ஆற்றலாக (சக்தி) இருக்கலாம். ஆனால் நான் நகராதபோது, செயல்படாதபோது - நான் உணர்வின்றி இருக்கும்போது - ஆற்றல் தன்னை வெளிப்படுத்தாது; அப்படி இருந்தும் நான் இன்னும் இருக்கிறேன். அப்படியானால், நான் ஆற்றலும் இல்லை.

நான் மனமாக இருக்கலாம். ஆனால் ஏற்கனவே கூறியது இங்கும் பொருந்தும். நான் சுயநினைவின்றி, ஆழ்ந்து தூங்கும்போது, மனம் அமைதியாக இருக்கும் வேளையில், மனம் இயங்காது, ஆனால் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். அப்படியானால், நான் மனமும் இல்லை. அப்போது நான் யார்? இதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். புரிந்து கொள்ள முடியாததை புரிந்து கொள்ள முயற்சிப்போம். நான் உடல் அல்ல, ஆற்றல் அல்ல, மனமும் அல்ல.

ஆழ்ந்த தூக்கத்தில், நீங்கள் என்ன அனுபவிக்கிறீர்கள்? ஒன்றுமில்லை. அது 'நீங்கள்'தான்! ஏன்? நான் உடல், ஆற்றல், மனம் இந்த மூன்றும் இல்லை என்றால், நான் உடல், ஆற்றல், மனம் இந்த மூன்றும் இல்லாத ஒன்றாக இருக்க வேண்டும், அப்படியென்றால் 'ஆழ்ந்த தூக்கம் மட்டுமே' என்று அர்த்தம். இவ்வாறு, 'ஆழ்ந்த தூக்கம்' ஒன்றுதான் கேள்விக்கு பதிலளிக்கிறது. ஆழ்ந்த தூக்கத்தில், நீங்கள் உடல் அல்ல, ஆற்றல் அல்ல, மனமும் அல்ல; ஆனால், இன்னும் உடல் இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது, மனம் இருக்கிறது; உடல், ஆற்றல், மனம் பற்றிய உணர்வு மட்டும் இல்லை.

நான் இப்போது முதலாவதாகக் கூறிய கருத்துக்குச் சென்று, பின்னர் இதற்குத் திரும்புகிறேன். தொடக்கமற்ற தொடக்கத்தின் மூலமுதலான அசல்

நிலை, எல்லையற்ற ஒன்றின் எல்லையற்ற ஆழ்ந்த தூக்க நிலை. தொடக்கமற்ற தொடக்கத்தில், எந்தப் படைப்பும் இல்லாத நிலையில், எந்தப் பிரபஞ்சமும் உருவாகாத நிலையில் - ஒன்றுமில்லை என்ற நிலை கூட இல்லாதபோது - கடவுளின் 'உளதாயிருக்கும்' (GOD 'IS') நிலை மட்டுமே இருந்தது.

அதற்குப் பிறகு, கடவுளின் பத்து நிலைகள் தொடங்கப்பட்டன, அதை நீங்கள் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்தில் விரிவாகக் காணலாம். பரிணாமம் மற்றும் மறுபிறவி செயல்முறைகளின் போது, மனப்படிவங்கள் சேகரிக்கப்பட்டன. உடல், ஆற்றல், மனம் மூன்றும் வளர்ச்சியடைந்தன, மேலும் ஆன்மா, அதன் எல்லையற்ற தன்மை இருந்தபோதிலும், இந்த மனப்படிவங்கள் காரணமாக, தன்னை வரையறுக்கப்பட்ட உடலாகவும், ஆற்றலாகவும், மனமாகவும் அனுபவித்தது.

இப்போது நாம் திரும்பி வருகிறோம். ஆழ்ந்த தூக்கத்தில், மால்கம் (ஸ்க்லோஸ்) உடல், ஆற்றல், மனம் பற்றி அறிந்திருக்கவில்லை, மேலும் மால்கம் மட்டுமே உண்மையான மால்கமாக இருக்கிறார். முக்கியமான விஷயம் என்னவெனில், ஆழ்ந்த தூக்க நிலையில் இருக்கும் மால்கம், 'நான் மால்கம்' ஆக இருக்கிறார், மேலும் இந்த 'நான்' எனும் தன்மை பற்றிய உணர்வற்ற நிலையில் இருக்கிறார். ஆழ்ந்த தூக்கம் அல்லது முழுமையான உணர்வற்ற நிலையில் இருக்கும் அகங்காரம் 'இயற்கை அகங்காரம்' (NATURAL EGO) என்று அழைக்கப்படுகிறது. அகங்காரத்தில் மூன்று வகை உண்டு; முதலாவது 'இயற்கையான அகங்காரம்'.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்து உங்களை எழுப்புவது எது? உங்கள் மனதில் உறைந்திருக்கும் மனப்படிவங்கள். அவை, "மால்கம், எழுந்திரு; நாங்கள் எங்களைச் செலவழிக்க விரும்புகிறோம்" என்று தட்டி எழுப்பும் போது, மால்கம் விழித்தெழுந்து, எண்ணம், ஆசை, செயல் ஆகியவற்றின் மூலம் மனப்படிவங்களை செலவிடுகிறார். மேலும் மால்கம், மனப்படிவங்களை செலவழிக்கும் போது, 'நான் இந்த உடல்' என்று நினைக்கிறார். இதுதான் 'தவறான அகங்காரம்' (FALSE EGO) என்று அழைக்கப்படுகிறது. இதற்குள் நாம் ஆழமாகச் செல்ல வேண்டாம். மால்கம் உண்மையில் மால்கம், இந்த உடல் அல்ல, மனப்படிவங்களுக்கு ஏற்ப, ஒன்றன் பின் ஒன்றாக, வேறு வேறு வடிவத்தை எடுத்து, புதிய மனப்படிவங்களைச் செலவிடுகிறார். ஆனால் இது வேறு அத்தியாயம் இப்போது வேண்டாம்.

பழைய மனப்படிவங்களைச் செலவிடும்போது, புதியவை உருவாகின்றன, அவற்றையும் செலவிட வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே நல்ல, தீய மனப்படிவங்களுக்கு ஏற்ப, எப்போதும் புதிய வடிவங்கள் எடுக்கப்படுகின்றன - ஆண், பெண், அழகான, அழகற்ற, செல்வந்தர், ஏழை, வலிமையான, பலவீனமான இப்படி மற்றும் பல. அவை நீங்கள் மாறி மாறி

அணிந்து நிராகரிக்கும் வெவ்வேறு ஆடைகள் போன்றவை. இவ்வாறு, எல்லா நேரத்திலும், இந்தத் தவறான அகங்காரம் நீடிக்கிறது.

இதையெல்லாம் தொடர்ந்து ஒரு நேரம் வரும், அப்போது, அந்த மனப்படிவங்கள் வலுவிழந்து, மங்கலாகி, குறைவாக, அரிதாக வளரும். இறுதியில் அவை மிகவும் வலுவிழந்து, மங்கலாகி முற்றிலும் மறைந்துவிடும்; இவ்வண்ணம், மனப்படிவங்கள் இல்லாதபோது, மனதின் செயல்பாடு நின்றுவிடும். ஆசைகள், ஏக்கங்கள், உணர்வுகள் எதுவும் இல்லாததால் இதயம் இப்போது வெறுமையாகவும் தூய்மையாகவும் இருக்கிறது. இருந்தாலும் 'நான்' எனும் அகங்காரம் இன்னும் இருக்கிறது. இந்த 'நான்' எனும் அகங்காரம், எந்த மனப்படிவங்களும் இல்லாத நிலையில், அதற்கு, பிணைப்புகள் இல்லை, வரம்புகள் இல்லை. அது இப்போது, மனதிற்கு மேலான நிலையை அனுபவிக்கிறது - மனம் என்பதும் இப்போது இல்லை.

இது உண்மையான 'நான்' (I-NESS) எனும் எல்லையற்ற, மூலமுதலான, அசலான உறுதிப்பாட்டை அனுபவிக்கிறது. இந்த அகங்காரம் 'உண்மையான அகங்காரம்' (REAL EGO) என்று அழைக்கப்படுகிறது, மேலும் தவறான அகங்காரத்தில், 'நான் இந்த உடல், அல்லது நான் இந்த ஆற்றல், நான் இந்த மனம்' என்று மால்கம் கூறியது போல், இப்போது 'நான் கடவுள்' (I AM GOD) என்று மால்கம் கூறுகிறார்.

இவ்வாறு, 'இயற்கை அகங்காரம்', 'தவறான அகங்காரம்' மற்றும் 'உண்மையான அகங்காரம்' மூன்றும் உள்ளன. தூய்மையான உள்ளத்தால் மட்டுமே இறைவனைக் காண முடியும். இதைப் பற்றி சார்லஸ் பர்டம் கேட்டார் - இதயம் தூய்மையாக இருப்பது என்றால் என்ன? நான் விளக்கிய அனைத்தும் உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது, ஏனெனில் மனதால் புரிந்துகொள்ள முடியாத ஒருவரை, ஏக இறைவனை எப்படி விளக்குவது!

பூமியில் வரவே வராது என்று சொல்லப்படும் சொர்க்கத்தின் பறவை ஒன்று இருக்கிறது. ஹாஃபீஸ் இது குறித்து கூறியதாவது:

கடவுள் சொர்க்கத்தின் பறவை போன்றவர்.
எண்ணங்களின் வலையை விரித்து, அவரை
அதில் சிக்க வைக்க முயற்சிக்காதீர்.
அந்த வலையில் நீங்கள் மனதைத் தவிர,
வேறு எதையும் காண முடியாது.
எனவே நேசிக்க மட்டும் செய்யுங்கள், கடவுள்
உங்களுடையவராக இருப்பார் என்று கூறப்படுகிறது.

அறிவுத்திறனால் வரும் சிந்தனையால் அல்ல; அன்பால், நேசத்தால் மட்டுமே அவரை அடையமுடியும். எனவே நான் எவ்வளவுதான் முயன்றாலும் கடவுளை விளக்க முடியாது. ஆனால் நான் விரும்பினால், ஒரே நொடிப்பொழுதில் நீங்கள் கடவுளைக் காண்பீர்கள், நீங்கள் கடவுளை அறிவீர்கள்.

ராமகிருஷ்ணா (கல்கத்தாவின் சத்குரு) வங்காள மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் பேசியதில்லை. அவரால் படிக்க முடியவில்லை; அவர் படிப்பறிவற்றவர் என்று அழைக்கப்பட்டார். இருப்பினும், ஒரு நொடியில், அவர் அனைத்து அறிவையும் (இறை ஞானம்) அடையப்பெற்றார். அவர் சொன்னது எதுவும் புரியாமல், கற்றறிந்த அறிவுஜீவிகளின் கூட்டம் அவரைச் சுற்றி அலைமோதியது! எனவே அன்பு ஒன்றுதான் முக்கியம்!

இதில் அடங்கிய இரகசியம் என்னவெனில், ஒரு சில வார்த்தைகளில் கூறுகிறேன்: 'நீங்கள்' இருக்கும் போது, கடவுள் இல்லை. நீங்கள் பகுத்தறிவு நிறைந்த மனதை எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களோ, அவ்வளவு குறைவாக நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். விளக்கவும், புரிந்துகொள்ளவும், 'நீங்கள்' இருக்க வேண்டும்; 'நீங்கள்' இருக்கும் போது, கடவுள் இல்லை. எனவே விளக்கங்கள் மற்றும் புரிதல்கள் என்றால் நீங்கள் கடவுளை உள்வாங்குவதற்கு பதிலாக அவரைத் துரத்திவிடுகிறீர்கள். நீங்கள் புரிந்து கொண்டதாக நினைக்கும் போது, புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்!

எனது ஒரே அன்பான இறைவன், வெவ்வேறு வேடங்களிலும், உடைகளிலும், வெவ்வேறு பெயர்களிலும் தோன்றி, எப்பொழுதும் வித்தியாசமாகத் தோன்றினாலும், அவர் ஒருவரே அன்பான இறைவன் என்று கூறப்படுகிறது.

நீங்கள் ஏற்கனவே என்னவாக இருக்கிறீர்களோ, அதுவாக மாற வேண்டும். நீங்கள் கடவுள், ஆதலால், நீங்கள் கடவுளாக வேண்டும். 'அன்பின் மூலம் நீங்கள் ஏற்கனவே என்னவாக இருக்கிறீர்களோ, அதுவாக வேண்டும்' என்பதைக் கற்பிக்க கிறிஸ்து தன்னைத்தானே அவமானத்திற்கு உள்ளாக்கி, சிலுவையில் அறைய அனுமதித்தார்.

இதை விளக்குவதற்கு, மாமன்னர் ஜனக், அவரது சீடர் கல்யாண் ஆகியோரின் இந்தக் கதையை (ராமரின் காலகட்டத்தில்) பாபா விவரித்தார்:

சீதாவின் தந்தையான ஜனக மன்னன் ஒரு சத்குருவாகவும் அறியப்பட்டார். அவரது ஆட்சி காலத்தில், அவரது சாம்ராஜ்யத்திற்கு வெளியிலிருந்து வந்த இளைஞன் ஒருவன், கடவுளைக் காண ஏங்கினான். "இந்த வெளியுலகப் பொருட்களை நான் இத்தனைத் தெளிவாகப் பார்ப்பது போல, நான் கடவுளைப் பார்க்க வேண்டும்," என்று கூறினான்.

மேலும் அந்த இளைஞன், ஜனக மன்னனைப் பார்த்து, உதவி கோர முடிவு செய்தான். இரண்டு மாதங்களாக வெயில் மழை பாராமல் உணவின்றி நடந்து வந்தான். இது சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அப்போது வாகனங்கள், விமானங்கள் எதுவும் இல்லை. இறுதியாக, அவன் ஜனக மன்னனின் அரண்மனை வாயிலுக்கு வந்தான். காவலர்கள் அவனைத் தடுத்து நிறுத்த, அவன் சுவருக்கு வெளியே நின்று, ஜனக மன்னனை உரக்க அழைத்து, அழுது, அவரது பெயரையும், புகழையும், மகிமையையும் எடுத்துரைத்து, உரத்த குரலில் கத்தினான். கடைசியில் ஜனக் அவனது குரலைக் கேட்டு, யார் என அறிந்து வருமாறு தமது மந்திரிகளிடம் கூறினார்.

“நான் கடவுளின் அன்பன்,” என்று அவன் பதிலளித்து, “நான் கடவுளைக் காண வேண்டும். ஜனக் எனக்குக் கடவுளைக் காட்ட வேண்டும்” என்றான்.

ஜனக மன்னன் அவனை அழைத்து வந்து, தனது மந்திரிகளிடம், “சிறையில் தள்ளுங்கள்!” என்றதும், அவன் சிறையில் அடைக்கப்பட்டான். அந்த இளைஞன் தனக்குள்ளே நினைத்தான்: “தம்மை எல்லாம் அறிந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் இந்த ஜனக், நான் கடவுளைத் தேடுகிறேன் என்பதை அறிந்திருக்க வேண்டும், ஆனால் அவர் என்னை சிறைக்கு அனுப்புகிறார்.” சில நாட்களுக்குப் பின்னர், அந்த இளைஞன் உணவு, நீர் எதுவும் உட்கொள்ளாமல் இருந்தபோது, ஜனக மன்னன் அவனை, மக்கள் அவைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். ஜனக மன்னன் கூப்பிய கரங்களுடன் வணங்கி, அவனை நீராட்டி, உணவளித்து, இளவரசனைப் போல நடத்தவும் தமது மந்திரிகளுக்குக் கட்டளையிட்டார். அந்த இளைஞனை அரண்மனைக்கு அழைத்து வந்து, ஜனகனின் சிம்மாசனத்தில் அமரவைத்து, “அவன் இந்த நிலையை மூன்று நாட்கள் அனுபவிக்கட்டும்” என்றார் ஜனக்.

ஜனக மன்னனின் மனதில் இருப்பதை அந்த இளைஞன் புரிந்து கொள்ளவில்லை, நிச்சயமாக, அவனுக்கு அரசவை விவகாரங்களை எவ்வாறு நிர்வகிப்பது என்று தெரியவில்லை. ஏழை மக்கள் தானத்திற்காக வந்தனர், அமைச்சர்கள் ஆலோசனை கேட்டு வந்தனர். ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் அமைதியாக இருந்தான். இறுதியாக, இந்த சங்கடமான நிலையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு, ஜனக்கிடம் கேட்டுக்கொள்ளுப்படி அமைச்சர்களிடம் அவன் வேண்டுகோள் விடுத்தான். ஜனக் வந்து, அந்த இளைஞனை அரியணையிலிருந்து இறங்குமாறு கட்டளையிட்டு, சிறை வாழ்க்கை, அரியணை வாழ்க்கை இரண்டில் எதை விரும்புகிறீர்கள் என்று கேட்டதற்கு இளைஞன், “அவை இரண்டும் சிறைகளே, ஆனால் வெவ்வேறு வகையானவை” என்றான். ஜனக மன்னன் அவனைத் திரும்ப அனுப்பி, பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் வருமாறு கூறினார்.

அந்த இளைஞன் அரண்மனையை விட்டு வெளியேறி, இந்தியா முழுவதும் சுற்றித் திரிந்து, நாளடைவில் பெரிய செல்வந்தராகி, எல்லா வகையிலும் மகிழ்ச்சி, மன நிறைவு என்று பொருள்படும் ‘கல்யாண்’ என்ற பெயரைப் பெற்றான். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அவன் ஜனக மன்னனிடம் திரும்பி வந்தான், இந்த முறை வளமான செல்வந்தராக வந்தான். காவலர்கள் மீண்டும் அவனை சோதித்து, அவன் யார் என்று கேட்க, “நான் பணக்கார கல்யாண்” என்றான். இதைக் கேட்ட ஜனக், இன்னும் சில வருடங்கள் போய்வரட்டும் என்று சொல்லி அனுப்பினார். அதனால் வீடு திரும்பிய கல்யாண், காலப்போக்கில் தன்னிடமிருந்த அனைத்தையும்

இழந்தான். மேலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அவன் ஜனக்கிடம் திரும்பி வந்தபோது, அவர், யார் என்று மீண்டும் கேட்டார்.

"நான்தான் பரிதாபகரமான நிலையில் இருக்கும் கல்யாண்" என்று பதிலளித்த போது, ஜனக் அவனை மேலும் பன்னிரெண்டு மாதங்களுக்கு அனுப்பி வைத்தார்.

இந்த நேரத்தில், கல்யாண் சிந்திக்கத் தொடங்கினான்: "இது என்ன? நான் முதலில் ஜனக்கிடம் சென்றபோது, கடவுளைக் காண வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இல்லை. அப்போது நான் சிறையில் தள்ளப்பட்டேன். பின்னர் அரியணையில் அமர்த்தப்பட்டேன். பிறகு நான் செல்வந்தரானேன். அதைத் தொடர்ந்து நான் ஏழையும் ஆனேன். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"

பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிறகு, ஜனக மன்னனின் அரண்மனைக்குத் திரும்பி வந்த வேளையில், காவலர்களில் ஒருவர் கல்யாண் மீது இரக்கப்பட்டு, "முட்டாள், இந்த முறை ஜனக் நீ யார் என்று கேட்கும்போது, 'எனக்குத் தெரியாது!' என்று கூறு" என்றார். கல்யாண் இந்த அறிவுரையைப் பின்பற்றினார். ஜனக், பின்னர் அவர் மீது பார்வையைத் திருப்பியதும், கல்யாண் அனைத்து உடல் மற்றும் உலக உணர்வை இழந்து, எல்லையற்ற இறை உணர்வை அடைந்தார்!

இந்தக் கதையின் பொருள் என்னவெனில், நீங்கள் 'நான்' எனும் அகந்தையை இழக்காதவரை, கடவுளைக் காண முடியாது, கடவுளாக மாற முடியாது, ஏனெனில் 'நீங்கள்' இருக்கும் இடத்தில் கடவுள் இல்லை!

இப்போது என்னைப் பற்றி. நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு எதுவும் தெரியாது. எனக்கும் ஆன்மீகத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. துறவியாக இருந்த எனது தந்தை, பாரசீகம் மற்றும் இந்தியா முழுவதும் கடவுளைத் தேடி அலைந்து, அவரிடம் மன்றாடினார். ஹ஺ஃபீஸ் போன்ற பிற கவிஞர்களின் சில வசனங்களை அவர் எனக்குக் கற்றுத் தந்தார், ஆனால் எனக்கு இவற்றில் ஆர்வம் இல்லை. நான் விளையாடுவதையே விரும்பினேன் - கோலி, காத்தாடி, கிரிக்கெட் - காலம் கடந்தோட நான் பிறரின் தலைவராக என்னைக் கண்டேன்.

அப்படியிருந்தும், ஒரு நாள், தோழர் ஒருவர், புத்தரைப் பற்றிய சிறு புத்தகம் ஒன்றை என்னிடம் கொடுத்தபோது, அதன் ஒரு பக்கத்தை, தற்செயலாகத் திறந்ததும், கருணையின் வடிவான இறைவன், மைத்ரேயா (MAITREYA) என்ற பெயரில், புத்தரின் இரண்டாவது வருகையைப் பற்றி குறிப்பிட்டிருந்ததை நான் பார்த்த அந்த கணமே, 'உண்மையில் நானேதான் அது' என்பதை எனக்குள் ஆழமாக உணர்ந்தேன். பின்னர் அதை மறந்து வருடங்கள் பல கடந்தன.

ஒரு நாள் நான் பாபாஜான் அமர்ந்திருந்த மரத்தைக் கடந்து, மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்த போது, அவர் என்னை அழைத்து, எனது நெற்றியில் முத்தமிட்டார். அடுத்த ஒன்பது மாதங்கள், கடவுளுக்கு

மட்டுமே தெரியும், மிக மிகக் குறைவானவர்களே சென்றடையும் அந்த உணர்வு நிலையில் நான் இருந்தேன், என் உடல் அல்லது வேறு எதையும் பற்றியோ எனக்கு எந்த உணர்வும் இல்லை. உணவு எதுவும் உண்ணாமல் அலைந்தேன். எனது தாயார், எனக்குப் பைத்தியம் பிடித்ததாக நினைத்து மருத்துவரை அழைத்தார். எனது தந்தை உண்மையைப் புரிந்து கொண்டார், ஆனால் எதுவும் கூறவில்லை. மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. நான் தூங்கவில்லை; அதற்குப் பிறகு நடந்ததுதான் மிகவும் அரிதானது. உலகத்தின் துன்பங்களைத் தானே தம்மீது எடுத்துக் கொள்ளும் அவதார புருஷர்களுக்கு மட்டுமே உரித்தானது அது. நான் உணவு எதுவும் உண்ணவில்லை, ஆனால், என்னை அன்புடன் நேசித்த எனது மூத்த சகோதரர் ஜாம்ஷெட், எனக்குக் கொடுத்த தேநீரை மட்டுமே அருந்தினேன்.

ஒரு நாள், திடீரென இயற்கையின் அழைப்பை உணர்ந்தேன். நான் கழிவறைக்குச் செல்ல விரும்பினாலும், உணவு எதுவும் உண்ணாததால் அது சாத்தியமற்றதாக இருந்தது. நான் அங்கேயே அமர்ந்தேன், ஆசன வாயில் வழியாக மலம் வருவதற்கு பதிலாக, வட்டங்களுக்குப் பின்னால் வட்டங்களாக, முழுப் பிரபஞ்சமும் வெளிவருவதை எனது பௌதீகக் கண்களால் நான் கண்டேன். அந்த நொடியிலிருந்து, அதற்கு முந்தைய ஒன்பது மாதங்களாக, நான் அனுபவித்த தெய்வீகப் பேரின்பத்திற்கு பதிலாக, உலகில் எவராலும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, சித்திரவதைகளை நான் அனுபவித்தேன். வலியைப் போக்க நான் எனது தலையை தரையிலும் சுவர்களிலும் அறைந்து காயப்படுத்தினேன். என்னால் என்னை அடக்க முடியவில்லை. முழுப் பிரபஞ்சமும் எனது தலையில் இருப்பது போல் உணர்ந்தேன். நான் எனது நெற்றியால் ஜன்னல்களை அறைந்து உடைத்தேன்.

அப்போது, நான் சாய்பாபாவால் ஈர்க்கப்பட்டேன். அது ஒரு தீவிரமான வேட்கையாக இருந்தது. சாய்பாபா என்னை உபாஸனி மஹாராஜிடம் வழிநடத்தினார். அவர் கல் ஒன்றை எடுத்து எனது நெற்றியில் எறிந்ததும், நான் ஆறுதலாக உணர்ந்தேன். ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர், ஒரு நாள் மஹாராஜ் அவரது கைகளைக் கூப்பி, “மேர்வான், நீயே ஆதி சக்தி, அவதார புருஷர்” என்றார்.

பாபாஜான் 125 வயதில் கூட சுறுசுறுப்பாகவும், பிரகாசமான கண்களை உடையவராகவும் இருந்தார். அவர் எப்பொழுதும், மழையிலும், வெயிலிலும் மரத்தின் கீழே அமர்ந்திருந்தார். அவரிடமிருந்து அன்பு அளப்பரியதாகப் பாய்வதை நீங்கள் உணரலாம். அவர் ஒருமுறை அங்கிருந்த குழுவிடம் கூறினார்: “நான் எனது அன்பு மகனுக்கு அளித்த அந்த உணர்வு நிலையில், ஒரு நாள், முழு உலகமும் அவனது விரல் அசைவுக்கு நடனமாடும்!” அப்போது அங்கு, பணம் என்ற பேச்சுக்கே இடமில்லை; மக்கள் தரிசனத்திற்காக மட்டுமே வந்தனர். எவரேனும் ஏதாவது கேட்டால், ஒரு கழியை வெளியே எடுப்பதை வழக்கமாகக் கொண்டார். எப்பொழுதும் அவரது இடது கையை வருடிக்கொண்டே இருந்தார். ஏன் என்று என்னால்

**விளக்க முடியாது, ஆனால் அவர் அதை வேண்டுமென்றே செய்தார். வேகமான நடை, 85 வயதிலும் அவர் ஓடுவதைக் காண முடிந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு, மண்டலி என்னைப் பின்தொடர சைக்கிளைப் பயன்படுத்த வேண்டும் அல்லது ஓட வேண்டும். பாபாஜான் எனக்கு தெய்வீக பேரின்பத்தையும், சாய்பாபா தெய்வீக சக்தியையும், உபாஸனி மஹாராஜ் தெய்வீக ஞானத்தையும் வழங்கினர்.**

**நான் இப்போது எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கும் அதே நேரத்தில், எல்லையற்ற துன்பத்தையும் அனுபவிக்கிறேன். நான் எனது பௌதீக உடலைக் கைவிட்டதும், எல்லையற்ற பேரின்பத்தின் இருப்பிடத்திற்குத் திரும்பி விடுவேன். நான் துன்பத்தை அனுபவிக்கிறேன், மேலும் அதிக துன்பத்தை அனுபவிக்கிறேன். அக்டோபர் மாதத்திலிருந்து, மூன்று மாதங்களுக்கு, எனது துன்பங்களின் உச்சக்கட்டமாக இருக்கும், பின்னர் உலகம் என்னை அடையாளம் கண்டுகொள்ளும்.**

**சில நேரங்களில் நான் உணர்கிறேன், 'ஏன் இதையெல்லாம் விளக்க வேண்டும்?' வாருங்கள், அமருங்கள், நீங்கள் அனைவரும் இங்கேயே, அமைதியாக பாபாவின் சகவாசத்தில் இருங்கள். சில நேரங்களில் நான் விஷயங்களை விளக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எது சிறந்தது என்று என்னை நானே கேட்கிறேன். நாம் என்ன செய்ய வேண்டும்? அனைத்தையும் விளக்கிச் செல்வோமா அல்லது அமைதியாக இருப்போமா?**

இந்த விஷயத்தில் குழுவும் இருமனதில் இருந்தது, எனவே பாபா ஒரு நாள் விளக்குவதும், மறு நாள் அவர்கள் அவருடன் அமைதியாக இருக்கவும் முடிவு செய்தார். அப்போது பாபா கூறினார்:

**உங்கள் பணி வரையறுக்கப்பட வேண்டும். இது நடைமுறை மற்றும் தெய்வீகத் தன்மை நிறைந்ததாக, அதாவது, அமைதியாக, தனியாக, உலகைத் துறப்பதால் மட்டும் அல்லாமல், ஒவ்வொரு வாழ்க்கையிலும் அதை அடைய முடியும் என்ற அர்த்தத்தில் நடைமுறைக்குரியதாக இருக்க வேண்டும். அதே உண்மையின் புதிய, முதலாவதான சிறப்பு அம்சங்களை நான் உங்களுக்குத் தருகிறேன்.**

**ஸொராஸ்ட்ரிய பிரார்த்தனையின் ஒரு வடிவம் கஸ்தி (பூணூல்,** SACRED THREAD) **என்று அழைக்கப்படுகிறது. காலையில் மொழிந்த நான்கு பிரார்த்தனைகளும் அதையே கூறுகின்றன. பாபாஜான் எனது நெற்றியில் முத்தமிட்ட அந்த கணத்திலிருந்து, நான் என்னையே, எல்லையில்லா பரமாத்மாவை வணங்குகிறேன். ஏன்?**

"ஏனெனில் தலைவணங்குவதற்கு வேறு எதுவும் இல்லை" என்று யாரோ ஒருவர் கூறினார்.

**இது எனது உண்மையான, தொடர் அனுபவம்.**

பாபா முன்பு கூறியதையே மீண்டும் கூறி முடித்தார்.

**ஒரே தேவை என்னவெனில் பார்ப்பது மட்டுமல்ல, 'அதுவாக மாறவேண்டும்'. நீங்கள் ஏற்கனவே என்னவாக இருக்கிறீர்களோ அதுவாக**

**மாற வேண்டும். நீங்கள் கடவுள், ஆனால் கடவுளாக எப்படி மாற வேண்டும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதை போதித்த கிறிஸ்து அவமானப்படுத்தப்பட்டார்: அன்பின் மூலம், நீங்கள் ஏற்கனவே இருந்ததைப் போலாகுங்கள்.**

மறுநாள், 1954 செப்டம்பர் 18 சனிக்கிழமை, காலை 10:00 மணியளவில் பாபா, மெஹராபாத்தில் குழுவைப் பார்க்க வந்து, ஒவ்வொருவரிடமும் அவர்களின் தியானத்தைப் பற்றி விசாரித்துக் கூறினார்:

**இன்று நான் மெய்மறந்த நிலை** (TRANCE), **மற்றும் அகப்பார்வை** (INNER SIGHT) **பற்றி விளக்குகிறேன் - அதாவது சமாதி. ஸூஃபி வார்த்தையான 'ஹால்'** (HALL) **மற்றும் வேதாந்திகள் கூறும் 'பாவ்'** (BHAV) **என்பது ஒரு தற்காலிக பரவசமாகும், இதற்கு உண்மையான ஆன்மீக அர்த்தத்தில் பெரிய அளவிலான மதிப்பு எதுவும் இல்லை. இந்த 'ஹால்' நிலையில், ஒருவர் தனது சுற்றுப்புறங்கள் மற்றும் சுய உடலைக் குறித்து உணர்வற்றவராக இருக்கிறார், ஆனால் அவரது ஆன்மாவில் பேரின்பத்தின் ஒரு வலிமைமிக்க சக்தியை உணர்கிறார். இந்த 'பாவ்' நிலை முடிந்தவுடன், அவர் சாதாரண ஒருவராக இருக்கிறார்.**

**சமாதிகளில் நான்கு வகை: யோக சமாதி** (YOGA SAMADHI) **தாந்திரீக சமாதி** (TANTRIC SAMADHI), **நிர்விகல்ப சமாதி** (NIRVIKALP SAMADHI) **மற்றும் ஸஹஜ் சமாதி** (SAHAJ SAMADHI).

**யோக மற்றும் தாந்திரீக சமாதிகளுக்கு ஆன்மீக ரீதியில் முக்கியத்துவம் எதுவும் இல்லை. அவற்றில் ஒருவர் அனைத்துடனும் அனைவருடனும் சமாதானமாக உணர்கிறார், அவருடைய மனதை அமைதியாகக் காண்கிறார். ஆனால் இந்த சமாதி முடிந்தவுடன், அவர் மீண்டும் தனது சுய நிலைக்குத் திரும்பி விடுகிறார். பெரும்பாலான யோகிகள், இந்த சமாதிக்குப் பிறகு, மாயையின் அழுத்தத்தை மேலும் அதிகமாக உணர்கிறார்கள். இது போதை போன்றது; ஒருவர் சிறிது நேரம் அனைத்துடனும் இணக்கமாக உணர்கிறார், ஆனால் போதை அகன்றதும், ஒருவருக்கு தலைவலி வருகிறது. ஆக, யோக சமாதியும், தாந்திரீக சமாதியும் மதுபானம் அருந்துவது போன்றது.**

**ஒருவன் தன்னை ஒரு பேரரசனைப் போல, தன்னால் எதையும் செய்ய முடியும் என உணர்கிறான்; ஆனால் அது முடிந்தவுடன், வாழ்க்கையின் மன அழுத்தமும் அதன் விளைவும் மீண்டும் தொடங்கும்.**

**ஸூஃபிகள் 'ஃபனா'** (FANA) **என்று அழைக்கும் நிர்விகல்ப சமாதியில், அதாவது சுயமாக இருந்து கடவுளுடன் ஐக்கியமாவது, ஆன்மா தன்னை கடவுளுடன் அடையாளப்படுத்துகிறது. இந்த சமாதி நிலைதான் உண்மையான சமாதி. இங்கே ஒருவன் கடவுளாகிறான். கடவுளின் ஞானம், அவரது ஞானம்; கடவுளின் பேரின்பம், அவரது பேரின்பம்; கடவுளின் சக்தி, அவரது சக்தி; கடவுளின் அழகு, அவரது அழகு! இந்த சமாதியின் போது,**

அவருக்கு உடல், சக்தி, மனம், பிரபஞ்சம் பற்றிய உணர்வு இல்லை, ஆனால் 'நான் கடவுள்' என்று மட்டுமே உணர்கிறார். வெகு சிலரே இந்த நிர்விகல்ப சமாதி நிலையை எட்டுகிறார்கள்.

பல கால சுழற்சிகளுக்குப் பின்னர், ஒருவர் 'ஃபனா' நிலையை அடையப் பெறுவதாகக் கூறப்படுகிறது. இது 'ஃபனா-ஃபில்லா' (FANA-FILLAH) என்று அழைக்கப்படுகிறது, அதாவது கடவுளுடன் ஐக்கியமானவர். இவர்களில் வெகு சிலரே சாதாரண சுய உணர்வை அடையப் பெறுகிறார்கள். ஆனால், சாதாரண சுய உணர்வை திரும்பப் பெறுபவர் ஸஹஜ் சமாதி நிலையை அடையப் பெறுகிறார். ஸஹஜ் சமாதி என்பது நிர்விகல்ப சமாதி, செயலில் ஈடுபடுவது என்று அர்த்தம், அதாவது, ஒருவர் இறை உணர்வோடு, பிரபஞ்சத்தைப் பற்றிய முழு உணர்வையும் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் உண்ணும் போதும், உரையாடும் போதும், நடமாடும் போதும், விளையாடும் போதும் அல்லது எதையும் செய்யும்போதும், நிர்விகல்ப சமாதியை எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவர் குதுப் (சத்குரு) என்று அழைக்கப்படுகிறார், பாரசீக மொழியில் அனைத்திற்கும் மையமாகத் (அச்சாணி, ஆதாரம்) திகழ்வது; நாம் அந்த ஒருவரை பரிபூரண குருநாதர் என்று அழைக்கிறோம். அவர் இப்போது கடவுளுடன் ஐக்கியமாகி, ஒவ்வோர் உணர்வு நிலையிலும், ஓர் எறும்பின் உணர்வு நிலையிலும் இருக்கிறார்; அதே நேரத்தில் அவர் பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களில் செயல்படுகிறார். அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர். ஸஹஜ் சமாதி என்றால் (சகஜமான) சிரமமற்ற ஒருமைத்தன்மை என்று பொருள். இது கைகளை நகர்த்துவது அல்லது கண் இமைகளை இமைப்பது போன்று எளிமைமிக்கது.

நாளை, நீங்கள் எனக்கு நினைவூட்டினால் - வாக்குறுதி அளிக்கமாட்டேன் - என்னை நினைவில் கொள்ளும் போது, உலகில் நீங்கள் செய்ய வேண்டிய அனைத்தையும், நீங்கள் எப்படிச் செய்ய முடியும் என்பதை நான் உங்களுக்கு விளக்குகிறேன். இது ஸஹஜ் சமாதி அல்ல, ஸஹஜ் தியானம். உண்ணும் போதும், அருந்தும் போதும், பணிபுரியும் போதும், திரைப்படங்கள் பார்க்கும் போதும், அல்லது உங்கள் தொழிலில் கவனம் செலுத்தும் போதும், பாபா உங்களுடன் இருப்பதை உணருவீர்கள். இது ஸஹஜ் தியானம்.

நாளை, இந்திய இசைத்தட்டுகளை இயக்கும் போது, நான் நல்ல மனநிலையில் இருந்தால், பல விஷயங்களை விளக்க விரும்புகிறேன். இன்று நாம் மௌனம் காப்போம், அதே சமயம் சில ஆங்கில இசைப்பதிவுகளைக் கேட்போம். எனக்கு இசை என்றால் அலாதி ஆசை, ஆனால் சமீப காலமாக அதைக் கேட்க நேரம் கிடைப்பதில்லை. பெண் மண்டலி இந்த இசைத்தட்டுகளை என்னிடம் கொடுத்து, இங்கே எடுத்துவரச் செய்தார்கள். இசைத்தட்டுகள் இயக்கப்படும்போது, மனதளவில் இந்த அறையில் இருங்கள், வேறு எங்கும் சென்றுவிடாதீர்கள். கபீர் கூறினார்:

**“எந்த இசையும், மூலமுதலான அந்த ‘இறை வார்த்தை’யின் ஏழாவது நிழல்.” ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **என்ற புத்தகத்தில், நான் இதைப்பற்றி விளக்கியுள்ளேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் தருணத்தில், அந்த இறை வார்த்தை உங்கள் இதயங்களை அதிர வைக்கும்.”**

பின்வரும் இசைத்தட்டுப் பதிவுகள் பின்னர் இசைக்கப்பட்டன:

மரியன் ஆண்டர்ஸன் (MARIAN ANDERSON, ஓர் அமெரிக்க பாடகர்): I KNOW THE LORD’S LAID HIS HANDS ON ME AND TRAMPIN (இறைவன் என் மீதும் ‘டிராம்பின்’ (இசைக்குழு) மீதும் அவரது கரங்களை வைத்ததை நான் அறிவேன்).

ஃபிரிட்ஸ் க்ரீஸ்லர் (FRITZ KREISLER), ஓர் ஆஸ்திரிய (AUSTRIAN) வயலின் கலைஞர்): ‘STUDENT PRINCE AND INDIAN LOVE CALL’ (‘ஸ்டுடன்ட் பிரின்ஸ் & இந்தியன் லவ் கால்’) ஓரங்க நாடகத்திலிருந்து தேர்வு செய்த இசை.

ரிச்சர்ட் க்ரூக்ஸ் (RICHARD CROOKS, ஓர் அமெரிக்க பாடகர்): ‘THE SONG OF SONGS AND LOVE AND LOVE ALONE’ (‘தி ஸாங் ஆஃப் ஸாங்ஸ் அன்ட் லவ் அன்ட் லவ் எலோன்’)

இமா ஸுமாக் (YMA SUMAC - A PERUVIAN SINGER, ஒரு பெருவியன் பாடகி; அவர் மிகவும் பரந்த குரல் வரம்பைக் கொண்டிருந்தார்): ‘LURE OF THE UNKNOWN LOVE & VIRGIN OF THE SUN GOD’ (‘அறியாத அன்பின் ஈர்ப்பு’ மற்றும் ‘சூரிய கடவுளின் கன்னி’) போன்ற பாடல்கள்.

மேற்கத்திய மக்களில் சிலர், இமா ஸுமாக் உயர் சுரத்தில் பாடிய லத்தீன் இசையில் அக்கறை காட்டவில்லை, ஆனால் பாபா கூறினார், **“அந்த சுரம் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று, மிகக் குறைந்த நிலைக்கு வருவது, எனக்கு மிகவும் பிடிக்கும். இது எனது மூலமுதலான நிலையை நினைவூட்டுகிறது. நான் மகிழ்ச்சி அடைகிறேன்.”**

இமா ஸுமாக்கின் மற்றுமொரு பாடலைத் தொடர்ந்து, டேனா ஃபீல்ட் (ஸ்பானிய மொழியில் இருந்து) மொழிபெயர்த்து பாடினார்: ‘I LOVE ONLY THEE, I WORSHIP ONLY THEE, TO THEE, TO THEE ONLY I SURRENDER THE KEY TO MY TREASURE’ (‘நான் உன்னை மட்டுமே விரும்புகிறேன், நான் உன்னை மட்டுமே வணங்குகிறேன், உன்னிடம், உன்னிடம் மட்டுமே நான் எனது பொக்கிஷத்தின் திறவுகோலை சமர்ப்பிக்கிறேன்.’)

பாபா இதைக் கேட்டு இவ்வாறு கருத்துரைத்தார்: **“இதைச் செய்யக்கூடியவர் என்னை அறிவார்.**

**“இது எனக்கு நினைவூட்டுகிறது, கொடூரமான முறையில் இந்த உடலை நான் கைவிடும்போது, அந்த நேரத்தில் எவரும் - என் அன்பர்கள், என் மண்டலியில் எவரும் - என் அருகில் இருக்க மாட்டார்கள். இந்த உடலை அழிப்பவர்கள் மட்டுமே. குழப்பமான சூழ்நிலையில், பாபா தம் அருகில் ஒருவரையும் கண்டுகொள்ள முடியாத நிலையை உருவாக்குவார். அதற்குப் பிறகுதான் அவர்கள் என்னை சூழ்ந்துகொள்வார்கள். அது எனது முகத்தை முறைத்துப் பார்க்கிறது. அது, இந்த வருட இறுதிக்குள் நடக்கலாம் - நான்**

**மௌனத்தைக் கலைத்து, உடலைத் துறந்து இதர அனைத்தையும் கைவிடலாம், இதைப் பற்றி நான் கூட்டத்தில் விரிவாகப் பேசுவேன்.**”

இந்தக் கட்டத்தில், இமா ஸுமாக்கின் மற்றுமொரு இசைப்பதிவு 'HIGH ANDES AND MONKEYS' ('ஹை ஆண்டிஸ் மலைகள் மற்றும் குரங்குகள்') பாடல்களுடன் தொடர்ந்தது. இந்தப் பதிவின் முடிவில், பாபா, சார்லஸ் பர்டம் பக்கம் திரும்பி, “**அன்புள்ள சார்லஸ், நான் எப்படி ஒரே நேரத்தில் இங்கும், எல்லா இடங்களிலும் இருக்கிறேன் என்று எவரேனும் கற்பனை செய்து பார்க்க இயலுமா? ஒவ்வொரு நொடியும் நான் சிலுவையில் அறையப்படுகிறேன், மேலும், பிரியமான கடவுளை ஒருவர் நேசிக்க வேண்டும் என்பதற்காக, நான் லட்சக்கணக்கான மரணங்களை சந்திக்கவும் தயாராக இருக்கிறேன். அவர் மட்டுமே நம் அன்பிற்குத் தகுதியானவர்.**” பர்டம் அவர் கற்பனை செய்ய முடியும் என்று பதிலளித்து அமைதியானார்.

பாபா, இமா ஸுமாக்கின் மற்றுமொரு இசைப்பதிவைக் கேட்டார்; தொடர்ந்து 'THE DANCE OF THE WINDS' ('தி டான்ஸ் ஆஃப் தி வின்ட்ஸ்') மற்றும் 'THE CHANT OF THE CHOSEN MAIDENS' ('தி சேன்ட் ஆஃப் தி சோஸன் மெய்டன்ஸ்') பாடல்களும் இசைக்கப்பட்டன. இப்பாடல்களின் இடையே, பாபாவிற்கு ஒரு குறிப்பு அட்டை அனுப்பப்பட்டது, அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது: “நான் உங்களை ஒரு கணம் பார்க்க முடிந்தால், நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.” அதில் கே. ஹிட்டாக்காவின் (K. HITAKA) கையொப்பம் இருந்தது. அவர் உள்ளே வந்து, மிகவும் மனம் நெகிழ்ந்து, பாபாவின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

டோக்கியோ நகரைச் சேர்ந்த 42 வயதான ஜப்பானியர், கஸூட்டேரு ஹிட்டாக்கா (KAZUTERU HITAKA), ஜப்பானில் அமைந்த ஒரு தியோஸொஃபிகல் குழுவின் தலைவரான டாக்டர் மியோ (DR. MUIR, HEAD OF A THEOSOPHICAL GROUP) மூலமாக, பல ஆண்டுகளுக்கு முன்பு, மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார். அன்றிலிருந்து பாபாவை சந்திக்க விரும்பிய அவர், அவருடைய உறவினரான ஜப்பானிய தூதர் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டபோது, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். பாபா உடனே, “**நான் எவரையும் மலையின் மீது ஏறி வர அனுமதிக்கவில்லை**” என்று தந்திரமாகக் கூறி, ஹிட்டாக்காவை எழுந்திருக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா, ஹிட்டாக்காவிற்கு, அவருக்காக வைத்திருந்த பழரசத்தைக் கொடுத்து, “**நீங்கள் வெகுதூரம் வந்திருக்கிறீர்கள்; அனைத்தையும் பருகுங்கள்**” என்று கூறினார்.

பழரசத்தை அருந்தியதும் பாபா அவரிடம், “**பாபா எங்கும் இருக்கிறார், ஏன் இவ்வளவு தூரம் வந்துள்ளீர்கள்?**” என்று வினவினார்.

“நீங்கள் ஜப்பானுக்கு வருவதை நான் விரும்புகிறேன்,” என்று ஹிட்டாக்கா கூறினார்.

அதற்கு பாபா, “**700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் ஜப்பானுக்கு வருவேன்**” என்று பதிலளித்தார்.

ஹிட்டாக்கா கல்கத்தாவிலிருந்து மெஹராபாத்திற்குப் பயணம் செய்து, பின்னர் அவருடைய விஸாவைப் (VISA) புதுப்பிக்க, திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது; எனவே பாபா அவரிடம், **“உங்கள் பணியின் நிமித்தம் இன்று கல்கத்தாவிற்குச் செல்லுங்கள், 28ஆம் தேதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ள, சரியான நேரத்தில் திரும்பி வாருங்கள்”** என்று கூறினார்.

இரண்டு ஆஸ்திரேலியர்களான பில் லெ பாஜ், ஜான் பாலன்டீன் ஆகியோரை, நள்ளிரவிலிருந்து அரை மணி நேரம், பாபாவின் (எதிர்கால) சமாதியில் அமர்ந்து, கண்களைத் திறந்து, வாயை மூடிக்கொண்டு, மனதளவில் அவரது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு பாபா அறிவுறுத்தினார். அவர் ஃபிரான்சிஸிடம் வேடிக்கையாக வினவினார், **“அவர்கள் சமாதி நிலத்தடியில் விழுந்தால் நீங்களே பொறுப்பாவீர்கள், அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?”**

“நான் என்ன செய்வேன் என்பதல்ல, ஆனால் நீங்கள் என்னை என்ன செய்வீர்கள் என்பதே முக்கியம்!” ஃபிரான்சிஸ் கூறினார்.

அதைத் தொடர்ந்து பாபா, **“29, 30ஆம் தேதிகளில் நடைபெறும் கூட்டங்களுக்குப் பிறகு, ஹிட்டாக்காவை ஏழு நாட்கள் உணவும், நீரும் இல்லாமல் ஒரே இடத்தில் தனியாக அமரச் செய்யலாம். இதை அவர் செய்வதானால், நான் அவருக்கு ஒரு கண நேர காட்சியை வழங்க முடியும். அவர் ஒரு நல்ல இளைஞர், அவர் சத்தியத்தின் உருவான உண்மைப்பொருளில் மிகுந்த அன்பு கொண்டவர். நான் என்னை நோக்கி அவரை எப்படி ஈர்த்தேன் என்பது அவருக்குத் தெரியாது”** என்று கூறினார்.

மதியம் 12:50 மணிக்கு, பாபா அனைவரையும் மதிய உணவுக்கு அனுப்பினார். பாபாவும் அவர்களுடன் இணைந்தார். அவர்கள் பின்னால் மெதுவாக நகர்ந்து, விரல்களால் கிச்சுக்கிச்சு மூட்டியும், தோள்களில் தட்டியும் தோழமை உணர்வை வெளிப்படுத்தினார். அவர் டேனா ஃபீல்டை அவரது தலையின் உச்சியில் முத்தமிட்டார், மேலும் ஹிட்டாக்காவை அவருடன் உரையாட பல முறை அழைத்தார். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் பாபாவால் இனிப்பு வழங்கப்பட்டது. அரன்காவ்ம் ஊழியர்களுக்கும் அதில் ஒரு பாகம் வழங்கப்பட்டது.

சில நேரங்களில், பாபா குழுவுடன் மேல்மலையில் பிங்-பாங் (PING-PONG) விளையாடினார். பாபா, அவருடன் ஒரு விளையாட்டை எதிர்கொள்ள லட் டிம்ப்ஃபில்க்கு சவால் விட்டபோது, பாபா இன்னும் விபத்திலிருந்து மீண்டு வருவதை நினைத்து, ‘அவரை எளிதாக எடுத்துக் கொள்ள’ முடிவு செய்தார்.

பாபா, லட்டின் முதல் பந்தை, கச்சிதமாக திருப்பி அடித்தார். பதிலுக்கு, லட் அடித்த பந்தை தன்னால் முடிந்தவரை கடினமாக அடித்தார். மீண்டும் ஒரு முறை, பாபா திரும்ப அடிக்க முடியாத பந்தைத் திருப்பி அடித்தார். பின்னர் எழுத்துப்பலகையில் பாபா, **“அமெரிக்காவில் நடந்த விபத்துக்குப் பிறகு**

**பாபாவால் இனி பிங்-பாங் சிறப்பாக விளையாட முடியாது"** என்று உச்சரித்தார்.

அதன் பின்பு, கூட்டத்திற்கான ஏற்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்டறிய பாபா, மெஹராபாத் கீழ் பகுதிக்கு நடந்து சென்றார். தூங்குவதற்கென ஒரு பெரிய கூடாரம் எழுப்பப்பட்டது, மேலும், கூட்டத்திற்காக ஒரு தனி சிறப்புப் பந்தல், ஒரு சாப்பாட்டுக் கூடாரம், கழிப்பறைகள், குளியல் அறைகள் மற்றும் பல; தூங்குவதற்காக, ஏறக்குறைய 1,000 கட்டில்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தச்சுவேலைக்காரர்கள் மூங்கில் தார்பாய்களை கட்டுவதில் மும்முரமாக இருந்தனர்; பாவ் கல்சூரி அதன் மீது அமர்ந்து ஒவ்வொன்றையும் சோதனை செய்து கொண்டிருந்தார். சோதனையின் போது, சில மூங்கில் பாய்கள் உடைந்து, பாவ் கீழே விழுந்ததால் எழுந்த சத்தத்தைக் கேட்டு, ஜங்க்ளேயின் இரண்டு சிறிய மகன்களும் வேடிக்கையாக சிரித்தனர். பாபாவும் அதைக் கேட்டு மகிழ்ந்தார்.

கிருஷ்ணாஜி, பாபாவிடம் பாவ் தேநீரில் சர்க்கரை குறைவாக சேர்ப்பதாக புகார் கூறினார். பாபா அவரைக் கடிந்துகொண்ட போது, பாவ், "இது உண்மையல்ல பாபா, நான் அவருடைய தேநீரைத் தயார் செய்யாத போது, நான் எப்படி அதில் சர்க்கரையைக் குறைவாகப் போடமுடியும்?" என்றார். கிருஷ்ணாஜி உடனே, "நான் பொய் சொன்னதாகச் சொல்ல பாவிற்கு உரிமை இல்லை, அவர் என்னிடம் முரண்படக் கூடாது, என்னை மதிக்க வேண்டும்!" என்றார்.

பாபா, "**ஆமாம், கிருஷ்ணாஜியை மதிக்க வேண்டும்**" என்று கூறி பாவ் கல்சூரியைத் திட்டினார்.

கிருஷ்ணாஜி, பாபா கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, தினமும் பாவ் கல்சூரியைத் துன்புறுத்தத் தொடங்கினார், அதன் விளைவு தெரியத் தொடங்கியது. பாபா, கிருஷ்ணாஜி மூலம் பாவ் கல்சூரிக்கு, சகிப்புத்தன்மை பற்றிய பாடம் புகட்டிக் கொண்டிருந்தார். மண்டலியில் ஒவ்வோர் உறுப்பினரும் இத்தகைய வித்தியாசமான அனுபவங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அத்தகைய அணுகுமுறையின் நேர்மையை சிலர் கேள்வியாக எழுப்பலாம், ஆனால் உண்மை என்னவெனில், பாபா செய்யும் அனைத்தும் 'சரியானது'. அப்படி இல்லை என்று நினைப்பவர் பக்குவம் அடையவில்லை என்று அர்த்தம்.

மெஹராபாத்தில் நடவடிக்கைகளைக் கண்காணித்த பிறகு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள், 1954 செப்டம்பர் 19 ஞாயிற்றுக்கிழமை, மெஹராபாத் செல்லும் வழியில் ஒரு நிகழ்வு நடந்தது. ஆதியின் கவனக்குறைவால், வரவிருக்கும் மெஹராபாத் கூட்டங்கள் குறித்த சுற்றறிக்கையின் நகல் கிடைக்கப் பெறாததால், நஸர்வானின் நண்பர் லுக்டுக்கே மாமா (LUKTUKE MAMA) வருத்தமடைந்தார். இரவு முழுவதும் அவருக்கு தூக்கம் இல்லை, அதிகாலை 3:00 மணிக்கு அவரது மனைவி கம்லாபாயிடம் (KAMLABAI) "வெகு தூரத்திலிருந்து மக்கள் மெஹராபாத்திற்கு வருகிறார்கள்; அங்கு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள்

நடந்து வருகின்றன. பெண்டு தினமும் ஏராளமான பொருட்களைக் கொள்முதல் செய்கிறார். ஆனால் பாபா என்னை மறந்துவிட்டார்" என்றார்.

"ஏன் பாபா, பாபா, பாபா என்று சொல்லிக்கொண்டே போகிறீர்கள்?" கம்லாபாய் கத்தினார். "மெஹர் பாபா செல்வந்தர்களுக்கு மட்டுமே! ஏழைகள் மீது அவருக்கு ஏது அன்பு? அவர் உங்கள் மீது அக்கறை கொண்டிருந்திருந்தால், அவருடைய கூட்டத்திற்கு உங்களை அழைத்திருந்திருப்பார்."

இவ்வாறு, அதிகாலையில் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி பேசிய வேளையில், கம்லாபாய், பாபாவை விமர்சிக்க சிறந்த அடைமொழிகளைப் பயன்படுத்தினார். பாபாவின் காதுகள் எவ்வளவு கூர்மையானவை என்று அவருக்குத் தெரியாது.

இரண்டு மணி நேரம் கழித்து, மிகவும் மனச்சோர்வடைந்த நிலையில், லுக்டுக்கே மாமா எழுந்து தனது வேலைக்குச் சென்றார். காலை 6:00 மணியளவில், பாபாவின் கார் அவர்கள் வீட்டு வாசல் அருகே வந்து நின்றது. பாபா உள்ளே சென்ற வேளையில், எரச், லுக்டுக்கே மாமாவை அழைத்துவரச் சென்றார். கம்லாபாயால் தனது கண்களை நம்ப முடியவில்லை. அது உண்மையில் பாபாவா, அல்லது அவர் கனவு காண்கிறாரா என்ற சந்தேகத்தில், நீர் தொட்டிக்குச் சென்று, கண்களில் நீரை தெளித்துக்கொண்டு திரும்பி வந்து பார்த்தார். மெஹர் பாபா அன்புடன் சிரித்துக்கொண்டே தன் முன் நின்றதை உண்மையென்று நம்பாமல், தனது தலைமுடியை இழுத்துப் பார்த்து, மனதில் நினைத்தார்: "எவ்வளவு அன்பானவர் பாபா, சிறிது நேரத்திற்கு முன்புதான் நான் அவரை அநாகரீகமாகத் திட்டிக்கொண்டிருந்தேன்."

பாபா அப்போது கூறினார், "**துதிபாடுவோனின் புகழ்ச்சியைக் காட்டிலும் என் அன்பர்களின் இகழ்ச்சி எனக்கு மிகவும் பிடிக்கும்!**" இந்த நேரத்தில், எரச், லுக்டுக்கே மாமாவுடன் திரும்பி வந்தார், அவர் தனது பிரியமான பாபாவைப் பார்த்த மகிழ்ச்சியில் பைத்தியம் ஆனார். அவர் பாபாவை அரவணைத்து, தோள்களில் தட்டத் தொடங்கினார்; பாபா சிரித்துக்கொண்டே, பொங்கும் பாசத்தைத் தாங்கிக்கொண்டார். கணவனும் மனைவியும் என்ன செய்வது என்றே புரியாத நிலையில், பாபாவிற்கு அமர நாற்காலியைக் கொடுக்கக் கூட மறந்துவிட்டனர். பாபா அவர்களைத் தழுவினார். கம்லாபாய் அழுதார். சுற்றறிக்கை அடையப்பெறாதது பற்றி லுக்டுக்கே விளக்கினார், மேலும் கூட்டத்திற்கு அவர் அழைக்கப்பட்டதாகவும், அதில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் பாபா அவருக்கு அழைப்புவிடுத்தார்.

பாபா பின்னர் அக்பர் அச்சகத்திற்குச் சென்று, அங்கு ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களை சந்தித்த பின்னர், அவர் மெஹராபாத் சென்றார்.

காலை 10:25 மணிக்கு, பாபா மேற்கத்திய அன்பர்களுடன் காலைப் பொழுதைக் கழிக்க மெஹராபாத் மேல் மலைக்கு வந்தார். "**இன்று, என்னிடம் நிறைய நேரம் உள்ளது; மெதுவாகச் செல்வோம். நாளையிலிருந்து, எனக்கு நேரமில்லை**" என்று அவர் கூறினார்.

பாபா ஒவ்வொருவரிடமும் அவரது உடல்நிலையைப் பற்றி விசாரித்து, பின்பு கருத்துரைத்தார்: "29, 30**ஆம் தேதிகளில் நீங்கள் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன், ஆற்றல் மிக்கவராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் இன்று வேடிக்கையாக உணர்கிறேன். சில நேரங்களில் என்னால் என் உணர்வுகளை விவரிக்க முடியாது, சில விஷயங்களை என்னால் விவரிக்க முடியாமல் இருக்கிறேன். உதாரணமாக, இப்போது நான் மேல்மலைக்கு நடந்து வந்து கொண்டிருந்த வேளையில், நான் கற்களை வீசினேன். நான் பல ஆண்டுகளுக்கு முன்னர், இவ்வாறு கற்களை வீசி வந்தேன். நான் ஒவ்வோர் அடியிலும் கீழே குனிந்து, கல்லை எடுத்து வீசுவதுண்டு, இப்போதும் நான் சிலநேரங்களில் அதைச் செய்கிறேன், நான் ஏன் செய்கிறேன் என்று என்னால் சொல்ல முடியாது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது ஒரு தெய்வீக விளையாட்டு.**

பாபா அவர்களிடம் வினவினார், "**நான் வரும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? நீங்கள் என்ன உணர்கிறீர்கள்?**

பில் லெ பாஜ், "ஒரு வேடிக்கையான உணர்வு" என்றார்.

பாபாவிற்கு அவர் சொன்னது புரியாமல், "**நேற்றிரவு அரை மணி நேரம் அமர்ந்திருந்தபோது கண்களைத் திறந்து வைத்திருந்தீர்களா?**" என்று கேட்டார்.

"ஆம்."

"**நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்?**"

"என் இதயம் எல்லா நேரத்திலும் துடித்தது, உங்கள் பெயரை என்னால் உச்சரிக்க முடியவில்லை."

"**உங்களை அச்சுறுத்தும் அளவுக்கு அங்கே என்ன இருந்தது?**"

"எனக்கு வெளி உலகின் உருவங்கள் கண்கள் முன்னால் வந்த வண்ணம் இருந்தன."

ஜான் பாலன்டீன், "கதவை மூடியபோது காற்றோட்டம் இல்லை என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் வேறு ஒன்றும் உணரவில்லை" என்றார்.

"**ஒவ்வோர் இரவும் இவ்வாறு ஏழு இரவுகள் தொடர்ந்து செய்வீர்களா?**" என்று பாபா கேட்டதற்கு இருவரும் 'ஆம்' என்றனர்.

"**அஞ்ச வேண்டாம்,**" என்று அவர் கூறினார். "**அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. உங்கள் கவனத்தைக் கட்டாயப்படுத்தாதீர்கள்; விழித்திருந்து அசையாமல் இருங்கள். பாம்பு வந்தாலும், அது, அதன் வழியில் செல்லட்டும். மேலும் இந்த அரை மணி நேரத்தில் பாபாவை நேசிக்கவும். அச்சம் இருந்தால் அன்பில்லை என்று அர்த்தம். பாபாவை உங்கள் ஆழ் இதயத்திலிருந்து நினைத்துப் பாருங்கள். ஏழு இரவுகளுக்குப் பிறகு, நீங்கள் பாபாவைக் காண்பீர்கள், ஏன் இந்த பயம், ஃபிரான்சிஸ்? அசிசியின் ஃபிரான்சிஸ் மற்றும் ஃபிரான்சிஸ் சேவியர் ஆகியோர் கிறிஸ்துவை தங்கள் முழு இதய வலிமையுடன் நேசித்தார்கள், அவர்கள் அனுபவித்த துன்பங்களை உங்களில் எவராலும் யூகிக்க முடியாது, ஆனால் பயம்**

**அவர்களுக்கு அந்நியமானது. அஞ்சாமல் என்னை நேசியுங்கள், எதையும் பொருட்படுத்தாதீர்கள்; பாபாவை நினைவில் கொண்டு மகிழ்ச்சியாக இருங்கள். ஆகையால், இன்றிரவு முதல், ஃபிரான்சிஸ்** (பிராபாஸோன்) **அவர்கள் அங்கேயே அமர்ந்து கதவை மூடுவதைப் பார்த்துக்கொள்ளுங்கள்."**

பாபா தொடர்ந்தார், "**ஃபிரான்சிஸ், நீங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு சிலுவையைப் பின்பற்றுங்கள். நான் ஒரு விசித்திரமான மனநிலையில் இருக்கிறேன். நாம் ஒரு தெளிவற்ற உரையாடலைக் கொண்டிருப்போம், ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்திற்குத் தாவுவோம். நான் அதிகாலை மூன்று மணிக்கு முன்னர் அரிதாகவே தூங்குகிறேன். நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில், சில நிமிடங்களுக்கு ஒருமுறை, அந்த நேரம் வரை, இரவு கண்காணிப்பாளரை அழைப்பதுண்டு; நீங்கள் அனைவரும் எப்போது தூங்கச் செல்கிறீர்கள்?** (பத்து மணிக்கு.) **இன்று இரவு இரண்டு இளைஞர்களையும் அமர அனுமதிக்காதீர்கள், நீங்கள் சீக்கிரமாக எழுந்திருக்க வேண்டும், ஆனால் நாளை முதல் அமருங்கள்."** ஒரு பணியாள் சில தூக்க மாத்திரைகளைக் கொண்டு வந்தபோது, அதை பாபா லட் டிம்ப்ஃபிலிடம் கொடுத்தார்.

"**நீங்கள் ஏழு ஆன்மீகத் தளங்களைப் பற்றிக் கேட்டீர்கள்**" என்று பாபா மால்கம் ஸ்க்லோஸிடம் கூறினார். "**ஆன்மீகத் தளங்கள் என்றால் என்ன?"**

மால்கம் பதிலளித்தார், "உணர்வு நிலைகள்."

உலகங்கள், ஆன்மீகத் தளங்கள் மற்றும் உணர்வு பற்றிய சொற்பொழிவை வழங்கி பாபா முடிவில் இவ்வாறு கூறினார்:

**நாம் சுவாசிக்கும்போது, சுவாசிப்பதில் கவனம் செலுத்துவதில்லை; நல்ல தூக்கத்தைப் போலவே இது தானாகவே நிகழ்வது. சுவாசம் நமது நிலையான துணைவன், ஆனால் நாம் அதில் கவனம் செலுத்துவதில்லை. பைஜாமாவை அணிந்துவிட்டு, இதர துணிமணிகளைக் கண்டுகொள்ளாமல் தூங்கச் செல்வது போலவும், காலையில் பைஜாமாவைக் களைந்துவிட்டு, பகல்நேர ஆடைகளை அணிவது போலவும், ஓரிரு கணங்கள் தவிர, உங்கள் அனைவருடனும் நான் எந்நேரமும் இருக்கிறேன். ஆனால் நீங்கள் கவனம் செலுத்தவில்லை. கவனம் செலுத்துவது எப்படி, நான் வேறொரு முறை விளக்கலாம். நான் எப்பொழுதும் இருப்பதால் என்னை உங்களால் உணர முடியாது; எல்லா நேரத்திலும் என்னை உணர்வது எப்படி என்பதை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்.**

பாபா அப்போது குறிப்பிட்டார், "**நாம் இப்போது இசையில் கவனம் செலுத்துவோம். இந்திய இசை அனைத்தும் அன்பை பற்றியது. உங்களில் சிலர் அதை விரும்பாமல் இருக்கலாம், ஆனால் நான் அதைப் பற்றி விளக்குகிறேன். நான் கடவுளைக் குறித்து ஒருபோதும் கேள்வி எழுப்பவில்லை. உங்கள் உடல்நலம், உணவு போன்றவற்றைப் பற்றி நான் உங்களிடம் கேள்விகள் கேட்டேன், ஆனால் கடவுளைப் பற்றி ஒருபோதும் கேட்கவில்லை ஏனெனில், நான் கடவுள் என்று எனக்கு தெரியும்."**

ஃபிரான்சிஸ், “என்னிடம் லட்சக்கணக்கான கேள்விகள் உள்ளன, பாபா.” என்றதும், பாபா புன்னகைத்தார்.

முதல் பாடலுக்குப் பிறகு, பாபா கூறினார், “**இது ஓர் அற்புதமான அன்பின் நிலை. அன்பன் ஆன்மீகத் தளங்கள் மற்றும் வெவ்வேறு உணர்வு நிலைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவன் கடவுளைப் பற்றியும், கடவுளை எப்படி நேசிப்பது என்பதைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறான். அவன் இப்போது வந்தடைந்த நிலையில், இந்த அன்பு அவனது உலகத்தை நிரப்புகிறது மற்றும் பிரிவின் வேதனைகள் தாங்க முடியாததாக இருப்பதால், 'நான் இப்போது உன்னை மறக்க விரும்புகிறேன்; ஆனால் நான் உன்னை மறக்க எவ்வளவு முயற்சி செய்கிறேனோ, அவ்வளவு அதிகமாக உன்னை நினைவில் கொள்கிறேன்' என்று கூறுகிறார். இந்த சித்திரவதை தாங்க முடியாதது.**”

பாபா வெவ்வேறு இசைப்பதிவுகளில் பாடப்பட்ட வார்த்தைகளை மொழிபெயர்த்தார்:

'**ஓ என் அன்பான கடவுளே, அவர் மட்டுமே அதிர்ஷ்டசாலி மற்றும் பெரிய இதயம் படைத்தவர், அவர் தனது அன்பில் கண்ணீர் சிந்துவதைத் தவிர்க்க முடியாது.**'

'**கடவுளை நேசிப்பவர்களாக இருப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுகிறீர்களே, எச்சரிக்கையாக இருங்கள்; பல்வேறு வகையான, எண்ணற்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட காட்சிகள், உங்கள் கண்கள் முன்னால் வரும்; ஜாக்கிரதை, கடவுளை மட்டுமே நேசியுங்கள், இந்தக் காட்சிகள் மற்றும் சக்திகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.**'

'**அன்பைப் பற்றி பேச விரும்புபவரே, உங்களை எதிர்நோக்கி இருக்கும் இடர்பாடுகளையும் துன்பங்களையும் நீங்கள் அறிவீர்களா? அன்பின் பாதையில் ஒவ்வோர் அடியிலும் குருநாதர் உங்களை சோதிக்கிறார்.**'

'**இசையை அவர்கள் ரசித்தார்களா**' என்று கூறும்படி பாபா அனைவரையும் கேட்டார். ஏறக்குறைய ஒவ்வொருவரும் அதை விரும்புவதாகவும், இசையால் மிகவும் ஈர்க்கப்பட்டதாகவும் கூறினர். சார்லஸ் பர்டம் மட்டுமே அதில் ஆர்வம் காட்டவில்லை என்று கூற, “**பெரும்பான்மையினர் இதை விரும்பினர்**” என்று பாபா கூறினார்.

“**இசையைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள்**” என்று பாபா கருத்துத் தெரிவித்தார். “**நான் பாடிய மூலமுதலான பாடல் இந்தப் பிரபஞ்சத்தின் பாரத்தை என் மீது கொண்டு வந்துள்ளது.**

“**கடவுள் நித்தியமும் நிரந்தரமுமானவர்; மாயை அரைகுறை நித்தியமானது; கடவுள் மாறுவதில்லை; மாயை மாறுகிறது; உங்கள் நிழல் எப்போதும் உங்களுடன் இருக்கும், ஆனால், அது காலையிலிருந்து மாலை வரை மாறுகிறது, மதிய வேளையில் நீங்கள் அதைப் பார்க்கமுடிவதில்லை; நிழலும் அரைகுறை நித்தியமானது.**”

மால்கம் கேட்டார், "கடவுள் மாயையை அனுபவிக்கிறாரா?"

பாபா பதிலளித்தார், **"கடவுள் இறை-மனிதனாக மாயையை அனுபவிக்கிறார், ஆனால் அவர் மாயையை ஆட்சி புரிவதால், அடக்கி ஆளுவதால் அதிலிருந்து விடுபட்டவர். அதேசமயம் மனிதன் மாயையால் ஆளப்படுகிறான். இவை அனைத்தும் வெறும் வார்த்தைகள், ஆனால் அனுபவத்தின் அடிப்படையிலான வார்த்தைகள்; உங்களுக்குக் குறைந்தபட்சம் அந்த ஆறுதல் உள்ளது."**

மால்கம் மீண்டும், "நீங்கள் எங்களுக்கு அந்த இறை அனுபவத்தை வழங்கினால் இன்னும் ஆறுதல் கிடைக்கும்!" என்று கூறியதற்கு, பாபா பதிலளிக்கவில்லை.

மேலும் சில கஸல் இசைப்பதிவுகள் இசைக்கப்பட்டன. பாபா அர்த்தங்களை விளக்கினார்:

**'இறுதி இலக்கை அடைந்து, இறைவனின் ரகசியத்தை அறிந்தவர்களே, நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே அந்த ரகசியத்தை வெளிப்படுத்துங்கள்.'**

**"மன்ஸூர் 'நான் கடவுள்' என்று கூறியதும், முஸ்லீம்கள் சீற்றமடைந்து அவரை தூக்கிலிட்டனர்"** என்று பாபா கருத்துத் தெரிவித்தார்.

**'ஓ மன்ஸூர், நீங்கள் அன்பான கடவுளுடன் ஐக்கியமானதை சொன்னதற்காக நீங்கள் தூக்கிலிடப்பட்டாலும், ரகசியத்தை வெளிப்படுத்தாதீர்கள்.'**

**'ஓ ஷம்ஸ்-இ-தப்ரிஸ், நீங்கள் உயிர் துறந்தவர்களை உயிர்ப்பித்ததாலும், முஸ்லீம்கள் உங்களை உயிருடன் தோலுரித்ததாலும், இரகசியத்தை வெளிப்படுத்தாதீர்கள்.'**

**'கடவுளின் அன்பர்களே, உங்கள் இதயங்களில் உள்ளதை உங்கள் உதடுகளுக்கு வர விடாதீர்கள்.'**

**'கடவுளை உண்மையாக நேசிப்பவனை கடவுள் அழிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கடவுள் அவனை துகள் துகளாக்குகிறார்.'**

**"கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் கடந்தகால தீர்க்கதரிசிகள் விஷயத்திலும் இது உண்மையாக இருந்தது"** என்று பாபா குறிப்பிட்டார்.

**'அன்பே, ஜாக்கிரதை, கடவுள் உன்னைக் கொடூரமாக நடத்தி, பொய்யான நம்பிக்கைகளை அளித்து, உன்னை துண்டு துண்டாக்குவதன் மூலம் சோதிக்கிறார்.'**

பாபா கருத்துரைத்தார்: **"குருநாதர் உங்களை, முழுமையாக உடை அணிவித்து, கைகளையும் கால்களையும் ஒரு பலகையில் கட்டி, நடுக்கடலில் தூக்கி எறிந்துவிட்டு, 'நீங்கள் என்னை நேசித்தால், ஒரு துளி தண்ணீர் கூட உங்கள் ஆடைகளைத் தொடக்கூடாது' என்று ஹ:பீஸ் கூறுகிறார். அவர் ஏன் இதைச் செய்கிறார்? அதற்கான பதில், தலைமை அப்போஸ்தலர் பீட்டருக்கு இயேசுவால் கூறப்பட்டது: 'நீங்கள் என்னை**

மறுப்பீர்கள்.' ஏன்? இயேசு அதைச் சொன்னது மட்டுமின்றி, அதைச் செய்தும் முடித்தார். ஏன்? இயேசு, அந்த வழியில், உலகத்தின் முழு பாரத்தையும் தம் மீது எடுத்து, பீட்டரையும் பகிர்ந்து கொள்ள வைத்தார்.

"காதல் என்றால், தனது முழு சுயத்தையும், அதன் பல்வேறு வகைப்பட்ட பொருட்களுடன் இழப்பது. இதன் அர்த்தம், சித்திரவதை, வேதனை, ஏக்கம், இதையெல்லாம் மீறி ஒருவன், தனது காதலில் உறுதியாக இருந்தால், அவன் காதலனுடன் ஒன்றிவிடுகிறான். பீட்டர் அடைந்த துன்பத்தின் உச்சம்தான் என்ன? அவர் தனது அன்பான குருநாதரை மறுத்தார்! இந்த மறுப்பு, இயேசு அனுபவித்த துன்பத்தில் பீட்டரை பங்கெடுக்க வழிவகுத்தது."

காதலன் கூறுகிறான்:

'இப்போது உனது அன்பின் விளைவு எனது பார்வையின் எல்லையை விரிவுபடுத்தியுள்ளது, நான் எங்குச் சென்றாலும், உன்னைத் தவிர வேறு எதையும் நான் காணவில்லை.'

'எனக்குத் தெரியும், அன்பே, உனது மகிமையை என்னால் தாங்க முடியாது.'

'ஆனாலும் நான் எனது உயிரைத் துறக்கத் தயாராக இருக்கிறேன்; உனது முகத்தை என்னிடம் காட்டு.'

ஒரு கவாலி பாடலில் இந்த வரிகள் இருந்தன:

'உனக்காக என்னைப் பைத்தியமாக்க விரும்பினால், அவ்வாறே செய்யுங்கள்; ஆனால் என்னை எள்ளி நகையாட வைக்காதே.'

'என்னை பைத்தியம் என்று நினைக்கும் உலக மக்களே, என் மீது கற்களை வீசுகிறீர்கள்,

'இந்த அன்பைப் பெற நீங்கள் அதிர்ஷ்டசாலியாக இருந்தால், நீங்களும் என்னைப் போல பைத்தியமாகி இருப்பீர்கள்.'

'கடவுளை நேசிப்பதைப் பற்றி பேசுபவர்களே, ஒவ்வோர் அடியிலும் நீங்கள் அவரைத் தலைவணங்க வேண்டும்,

'ஒவ்வொரு தூசி துகள்களும் கடவுளை நோக்கிச் செல்லும் பாதையின் நுழைவாயிலாக இருந்தது.'

ஹாஃபீஸின் பாரசீக கவிதைகளின் பதிவு இசைக்கப்பட்டது, பாபா அதன் அர்த்தத்தை மொழிபெயர்த்தார்:

'தள்ளிப் போடாதீர்கள். இந்த நொடியிலிருந்து காதலிக்கத் தொடங்குங்கள்.'

'கடவுளை ஒரு கணம் கூட மறக்காதீர்கள்.'

ஹா:ஃபீஸின் குருநாதர் அத்தரைப் பற்றி பாபா விளக்கினார்: **அவருக்கு நீண்ட கறுப்பு முடிகள் இருந்தன, மேலும் ஹா:ஃபீஸ் தனது குருநாதரின் தலைமுடியை வாரிவிடுவதுண்டு.**

**ஹா:ஃபீஸ் அவரைப் பற்றி கூறியதை பாடல்கள் வெளிப்படுத்தின:**
**உங்கள் தலைமுடியை அலைபோல பாயவிடாதீர்கள்,**
**என் இதயம் ஒவ்வொரு முடியிலிருந்தும்**
**அம்புகளைப் பெறுவது போல் இருக்கிறது.**

**ஹா:ஃபீஸ், அத்தரைப் பற்றியும் கூறினார்:**
**அன்பான குருநாதரே! நான் சிந்திய இந்தக் கண்ணீர்**
**மிகவும் விலைமதிப்பற்ற இரத்தக் கண்ணீர்**
**நீங்கள் அவற்றை முத்துக்களாகக் கருத வேண்டும்**
**மேலும் அவற்றை காதணிகளாக அணிய வேண்டும்.**

**மேலும் ஹா:ஃபீஸ்:**
**கடவுள் கூறுகிறார், ஓ என் அன்பரே,**
**நீங்கள் எனது பாதையில் நுழைய விரும்பினால்,**
**முதலில் உங்கள் தலை, எனது காலடியில்**
**ஒரு பந்தாக உருண்டு உதைபடட்டும்.**
**அன்பன் பதிலளிக்கிறான்:**
**உங்கள் அன்பால் நான் கொல்லப்பட்டேன்.**
**மேலும், கொடூரமான கடவுளே,**
**உங்கள் பார்வை இன்னும் என் மீது திரும்பவில்லை.**

இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"இன்று நாம் கடவுளை நேசிக்க முயற்சித்தோம்; அன்பைப் பற்றி பேசினோம்; காதல் பாடல்களைக் கேட்டோம். நான் உலகில் மிகவும் மும்முரமாக இருக்கிறேன். இந்த சந்திப்புகளின் விவரங்களைப் பார்த்து, எல்லா நிலைகளிலும் பணிபுரிய வேண்டும். என்றாலும், நான் மிகவும் செயலற்றவன் கூட.**

**"இன்று நாம் எந்த விலை கொடுத்தேனும் கடவுளை நேசிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறோம். அதைச் செய்வதற்கான மிகவும் சிறந்த நடைமுறை வழியை, நான் கூட்டத்தில் உங்களுக்குக் கூறுவேன்."**

பாபா அவர்கள் மதிய உணவு உண்ணுவதைப் பார்வையிட்டு, பின்பு, கீழ் மெஹராபாத்தில் கூட்டத்திற்கான தயார் நிலையைப் பார்க்க மேல்மலையிலிருந்து கீழே நடந்து வந்தார். அவர் மதியம் 2:00 மணியளவில் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.



ராஹுரி, கிருஷ்ணாஜி (நடுவில்),
வில் பேக்கட் (வலது புறம்), செப்டம்பர் 1954
(RAHURI, KRISHNAJI - CENTER, WILL BACKETT – RIGHT, SEPTEMBER 1954)



ஸாக்கோரி, செப்டம்பர் 1954
கோதாவரி மாய் & கன்யாக்களுடன், மஹாராஜின் சமாதியில்
லட் டிம்ப ஃபில் தலை வணங்குதல்
(SAKORI, SEPTEMBER 1954
WITH GODAVRI MAI & KANYAS, LUD DIMPFL BOWING AT UPASNI MAHARAJ'S TOMB)

1954 செப்டம்பர் 20 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு, பாபா மேற்கத்திய அன்பர்களை விலூ வில்லாவில் சந்தித்தார், பின்னர் அனைவரும் நான்கு வாகனங்களில் ஸாக்கோரிக்கு புறப்பட்டுச் சென்றனர்: பாபாவும் குல்மாயும் ஸரோஷின் காரில் பயணம் செய்ய, ஆதியின் காரில் சில மண்டலியும், மேற்கத்திய அன்பர்களும் இருந்தனர். இரண்டு பெரிய ஸ்டேஷன் வேகன்கள் (STATION WAGONS) உடன் சென்றன. பாபாவின் தரிசனத்திற்காக நூற்றுக்கணக்கானோர் சாலையோரத்தில் திரண்டிருந்ததால் சிறிது நேரம் ராஹூரியில் (RAHURI) நின்றனர். பாபா, மேற்கத்திய அன்பர்களுக்கு அவர் நிறுவிய மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் ஆசிரமம் (1936-37இல்) இருந்த இடத்தை காட்டினார். சார்லஸ் பர்டம் மற்றும் பலர், பாபாவிடம் பல நகைச்சுவையான கதைகளை எடுத்துரைத்தனர், டார்வின் ஷா பாபாவின் புகைப்படத்தை எடுத்தார்.

அவர்கள் காலை 9:30 மணிக்கு ஸாக்கோரி வந்தடைந்தபோது, ஆசிரமவாசிகள் அவர்களை ஊர்வலமாக, மத்தளம் முழங்க இசை நிகழ்ச்சியுடன் வரவேற்றனர்.

பாபாவிற்கு மாலை அணிவிக்கப்பட்டது, கோதாவரி மாயும், இதர கன்யாக்களும் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். பாபா மேற்கத்திய அன்பர்களின் குழுவுடன் ஆசிரமத்தைச் சுற்றி வந்து, பின்னர் உபாஸனி மஹாராஜின் சமாதிக்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் கூறியதாவது:

**இந்த முதியவர் மனித-கடவுள்** (MAN-GOD, SADGURU). **'நான் மீண்டும் ஸாக்கோரியில் அடியெடுத்து வைக்க மாட்டேன்' என்று எனது கடைசி வருகையின் போது கூறினேன். ஆனால் 'மேர்வான், மேற்கத்திய அன்பர்களை இங்கு வரவழைக்கும் வேளையில், அவர்கள் பஜன் கீர்த்தனை செய்வார்கள்' என்று மஹாராஜ் ஒருமுறை கூறியது நினைவுக்கு வந்தது; எனவே, இதை நிறைவேற்ற, நான் உங்களை இங்கு அழைத்து வர வேண்டியிருந்தது. இப்போது இங்கே எனது பணி முடிந்தது. 29, 30 தேதிகளில் நடைபெறும் கூட்டங்களுக்குப் பின்னர், அடுத்த மாதங்களில் எனது இறுதிப் பணி - எனது மௌனத்தை கலைத்து, வெளிப்பாட்டை உலகுக்கு அளித்து, கொடூரமான முறையில் மரணத்தை சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வும் ஒன்றன்பின் ஒன்றாக விரைவில் நடைபெறும். நீங்கள் அனைவரும் மஹாராஜின் சமாதியில் தலைவணங்க வேண்டும். நான் ஆதிகால புருஷன். அவர் அந்தக் கல்லை என் மீது எறிந்தபோது, நானே ஆதிகால புருஷன் என்று எனக்குத் தெரியும்.**

கன்யாக்கள் அவரது ஆரத்தியை நிகழ்த்துவதற்கு முன்பு, பாபா ஆங்கிலத்தில் கூறிய அனைத்தும் மராட்டியில் மொழிபெயர்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஸாக்கோரியின் கன்யாக்களால் பின்வரும் பஜனை பாடப்பட்டது:

குருநாதர் தமது சீடர்களிடம், எனது பெயர் கடவுள் என்று கூறுகிறார்.
சிலர் என்னை ராம் என்றும்
சிலர் ஷியாம் (கிருஷ்ணா) என்றும் அழைக்கின்றனர்.
உலகில் நான் வழிபடும் பொருளாகவும்,

வணங்குபவனாகவும் இருக்கிறேன்.
சில சமயங்களில் நான் கொடுப்பவனாகவும்,
சில சமயங்களில் நான் யாசிப்பவனாகவும் இருக்கிறேன்.
நான் எந்த இடத்திற்கும் சொந்தம் இல்லாதபோதும்,
நான் எல்லா இடங்களிலும் இருக்கிறேன்.

அப்போது பாபா இவ்வாறு கூறினார்:

**நான் இங்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது. கோதாவரி இங்கே 'இறைத் தாய்', இதர அனைவரும் அவருடைய துணைவர்கள். இரண்டரை வயதில் மஹாராஜை சந்தித்தபோது, அவர் குழந்தை கோதாவரியை மடியில் அமர வைத்து 'இதெல்லாம் உனக்குச் சொந்தம்' என்றார். அவர்கள் அனைவரும் எனது குருநாதருக்கு வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்கிறார்கள். நான் அவரை மிகவும் நேசிக்கிறேன். கன்யாக்கள் மஞ்சள் நிற புடவையும், ஆண் சேவகர்கள் வெள்ளை நிறத்திலும் ஆடை அணிகின்றனர்.**

**உபாஸனி மஹாராஜ் உயரமான, பருமனான மனிதர், வெளியே செல்லும் வேளையில் மட்டுமே ஒரு கோணிப்பையாலான துண்டு மற்றும் செருப்புகளை அணிவதைத் தவிர, பொதுவாக நிர்வாணமாகவே இருந்தார். பதினான்கு மாதங்கள் மற்றும் பன்னிரெண்டு நாட்கள், அவர் ஒரு மூங்கில் கூண்டில் வாழ்ந்தார்; ஒரு நாளைக்கு ஒரு முறை காஃபியைத் தவிர வேறு எதையும் உட்கொள்ளவில்லை. அவர் வாழ்ந்த கூண்டு, சுமார் மூன்றடிக்கு மூன்றரை அடி அளவில் இருந்ததால் அவரால் தரையில் சாய்ந்து படுக்க முடியவில்லை. நமக்குக் காட்டப்பட்ட அறையில் அவர் உயிர் துறந்தார்.**

பாபா, மஹாராஜின் சமாதியை வணங்கினார், தொடர்ந்து ஒவ்வொரு மண்டலியும், குழுவும் அவ்வாறே செய்தனர். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது, பாபா (உணவைத் தொடவில்லை என்றாலும்) அவர்களுடன் அமர்ந்தார். அவர் மகிழ்ச்சியாகவும் விளையாட்டுத்தனமாகவும் காணப்பட்டார், அவர்களை நோக்கி பழங்களை எறிந்தார், ஆனால் அவர் வேதனையும், துன்பமும் அனுபவித்தது போலத் தோற்றமளித்தார்.

பாபாவைப் புகழ்ந்து ஒரு கீர்த்தனை பாடப்பட்டது, இறுதியில், அவர் இவ்வாறு கருத்துரைத்தார்: **"என்னைக் கண்டுகொள்ள, நீங்கள் உங்களை இழக்க வேண்டும். ஆனால் இவை, பேசும்போதும் கேட்கும்போதும் வெறும் வார்த்தைகளே. தன்னை இழந்து தன்னைத்தானே கண்டுகொள்வது என்பது, ஒரு சில அன்பர்களுக்கு மட்டுமே உரித்தானது; அவர்கள் தமது கைகளில் வாழ்க்கையை ஏந்திச்செல்பவர்கள்."**

பாபா உடல்நலம் குன்றியிருந்த கன்யாவை சந்தித்து, ரோஜா இதழ்களை ஊட்டினார். மஹாராஜுக்காக பாபா இயற்றிய பாடலை ஒரு சிறுமி பாடிய வண்ணம், அவர் குழுவுடன் பெண்கள் விடுதிக்குச் சென்று, ஊஞ்சலில் அமர்ந்தார். பாபா மேற்கத்திய அன்பர்களை கோவிலுக்கு அழைத்துச் சென்றார்,

அங்கு வைக்கப்பட்ட சாய்பாபாவின் கைத்தடியையும், புகைக் குழாயையும் காட்டினார். அவர்கள் ஷிர்டிக்கும் சென்றிருக்க வேண்டும், ஆனால் போதுமான நேரம் இல்லை.

புறப்படுவதற்கு முன்பு, பாபா கோதாவரி மாயிடம் கூறினார், "**மஹாராஜ் எந்தெந்த சடங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்தினாரோ, அதை நீங்கள் செய்ய வேண்டும். ஆனால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நீங்கள் ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதாவது உங்களில் ஒவ்வொரு கன்யாவும் இதை மொழிய வேண்டும்: "'மெஹர் பாபா அவதார புருஷர்' என்று உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஐந்து சத்குருக்களாகிய நீங்கள் அனைவரும் அவருடைய பணியில் பாபாவிற்கு உதவ வேண்டும்.**"

கோதாவரி மாய், ஜிஜி இருவரும் பாபாவின் விருப்பத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்டனர், மேலும் இரண்டு மாதங்களுக்கு ஸாக்கோரியில் தினமும் இதை மீண்டும் மீண்டும் மொழியும் வழக்கம் தொடர்ந்தது.

ஃப்ரெட் மார்க்ஸ் (ஆறடிக்கு மேல் உயரமானவர்) அவரது தலையை தாழ்வான வாசலில் மோதியபோது, பாபா அதில் கட்டிட்டார். ஸாக்கோரியில் அனைவரையும் சந்தித்த பின்பு, பாபா அஹமதுநகருக்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில், அவர் கார்களை நிறுத்தி, ஃபிரெட்டிடம் தலையில் ஏற்பட்ட காயத்தைப் பற்றி கேட்டார். காரில் பாபா தனது தலையில் அணிந்திருந்த துண்டினால் ஏற்படும் ஆபத்து குறித்து, டேனா ஃபீல்ட், பாபாவின் கவனத்தை ஈர்த்தார். (பலத்த காற்று காரணமாக, அது ஜன்னலுக்கு வெளியே பறந்து கொண்டிருந்தது.) பாபா அவரது இருக்கையில் அமருவதற்கு முன்னால், உடனடியாக அதை அகற்றிவிட்டு, மெஹராஸாத்திற்குப் புறப்பட்டு, மதியம் 2:00 மணியளவில் வந்து சேர்ந்தார். மேற்கத்திய அன்பர்கள் மெஹராபாத் மேல்மலைக்குத் திரும்பிச் சென்றனர்.

அடுத்த நாள், 1954 செப்டம்பர் 21 அன்று பாபா மெஹராபாத்திற்கு வந்து, முதலில் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து அமைப்பாளர்கள் மற்றும் உதவியாளர்களுடன் கலந்துரையாடினார்.

பாவ் கல்சூரியின் மைத்துனர், தீரஜ், மெஹராபாத்தில் உதவியாளர்களில் ஒருவராக இருந்தார், மேலும் பாபா அவரிடம், "**உங்கள் பெற்றோர் என்னை நேசிக்கிறார்களா?**" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த தீரஜ், "எனது தந்தை பிரதாப் ஸிங் (PRATAB SINGH), மூத்த சகோதரர் ஷங்கர் ஸிங் (SHANKAR SINGH) இருவரும் கூட்டத்திற்கு வருகிறார்கள். பாவ் உங்களிடம் நிரந்தரமாக வந்திருப்பதால், நிச்சயமாக, எங்கள் குடும்பம் உங்களை நேசிக்கிறது" என்றார்.

பாபா உடனே, "**கூட்டம் முடிந்து வீடு திரும்பியதும், ரமா மற்றும் இரண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளுங்கள். பாவ் என்னுடன்**

**இருக்கிறார், அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது"** என்று கூறினார்.

பாவ் கல்சூரியிடம் பாபா கேட்டார், **"உங்கள் சகோதரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையா?"**

"எனது சகோதரர்கள் நாராயண் ஸிங் (NARAYAN SINGH), ஸுக்தேவ் ஸிங் (SUKHDEV SINGH) இருவரும் வருகிறார்கள்," என்று அவர் பதிலளித்தார்.

நானா கேர் பக்கம் திரும்பிய பாபா, **"உங்கள்** சகோதரர் **வினு வருகிறாரா?"**

"அவர் வருவதை எவராலும் தடுக்க முடியவில்லை!" நானா கூறினார்.

**"இந்த சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, மேலும் எனது நெருங்கிய அன்பர்கள், சேவகர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்"** என்று பாபா கூறினார்.

பாபா காலை 10:15 மணிக்கு மெஹராபாத் மேல்மலையில் இருக்கும் மேற்கத்திய அன்பர்களைப் பார்க்கச் சென்று, அவர்களிடம், **"இங்கு நான், இன்று நீண்ட நேரம் தங்குவேன்"** என்று குறிப்பிட்டார்.

ஒவ்வொருவரிடமும் அவர்களின் உடல்நிலை, தூக்கம் பற்றி விசாரித்த பாபா, **"நானே சோர்வாக உணர்கிறேன், மூன்று இரவுகளாகத் தூங்கவில்லை. பிரபஞ்சத்தின் பாரத்தை** (எனது தலையில்) **உணர்கிறேன்"** என்று கூறினார்.

பாபாவின் மனநிலை மாறியது, **"கோலி விளையாடுவது எப்படி என்பதை நான் உங்களுக்குக் கற்பிப்பதாக உறுதியளித்தேன், நான் வாக்குறுதிகளுக்கு அப்பால் இருந்தாலும், இது எனது நினைவுக்கு வந்ததால், நான் அதைச் செய்வேன்"** என்று கூறி, பாபா அவர்களுக்கு விளையாடும் முறையைக் கற்றுத்தந்தார், அவர்களுடன் இணைந்து சிறிது நேரம் விளையாடினார்.

குழுவுடன் மேற்கு அறைக்குச் சென்ற பாபா, ஒரு நாற்காலியில் அமர்ந்து, எழுத்துப்பலகை வழியாக உரையைத் தொடங்கினார்: **"நான் ஸாக்கோரியைப் பற்றி விளக்குகிறேன், பின்னர் ஆன்மீகத் தளங்களைப் பற்றியும் பேசுவேன்.**

**"முதலில், அற்புதங்களைக் குறித்த கருத்து: ஆன்மீகக் கண்ணோட்டத்தில், அவை கேலிக்குரியவை என்று நான் ஏன் நினைக்கிறேன், 'நானும் என் பிதாவும் ஒன்று'** (I AND MY FATHER ARE ONE) **என்று இயேசு எடுத்துரைத்தபோது, அவரைக் கடவுள் என்று கூறியதாக அர்த்தம், இது உண்மையா? உண்மையில் அப்படிக் கூறினாரா?**

**"கடவுள் இந்த மிகப்பெரிய பிரபஞ்சத்தைப் படைத்தார், அது கடவுளின் அற்புதம் மற்றும் இயேசுவின் அற்புதம். இதன் அர்த்தம் என்னவெனில், எண்ணற்ற உயிரினங்கள் இயேசுவால் உருவாக்கப்பட்டன, அவருடைய சித்தத்தின்படி அவை உயிரைத் துறக்கின்றன. இருப்பினும், இயேசுவின் மகத்துவம், அவர் உயிரிழந்த சிலருக்கு, உயிரை மீட்டுத் தந்ததில் இருப்பதாகக் கருதப்படுகிறது.**

**“அந்த நிகழ்வுக்குப் பின்னால் ஏதேனும் அர்த்தம் மறைந்திருந்தாலொழிய, அது எவ்வளவு அபத்தமானது. இயேசு இரட்சகர் என்று கருதப்படுகிறார், ஏனெனில் அவர் உயிரிழந்த சிலருக்கு, உயிரை மீட்டுத் தந்ததாகவும், பார்வையற்றவர்களுக்கு பார்வை அளித்ததாகவும் கூறப்படுகிறது, அப்படியானால், அவர் மிகப்பெரிய பிரபஞ்சம் எனும் மாயையின் மத்தியில், மிகச் சிறிய அளவிலான மாயைகளை உருவாக்கினார். அவர் ஏன் அத்தகைய அற்புதங்களை நிகழ்த்தியிருக்க வேண்டும்?”**

மால்கம் ஸ்க்லோஸ் பதிலளித்தார், “ஏனெனில் மக்கள் அதனால் ஈர்க்கப்பட்டனர்.”

“**ஆயினும்,**” பாபா சுட்டிக்காட்டினார், “**நான் கடவுள், நானே இரட்சகர், நானே எல்லாமே என்று பறைசாற்றும் போது, அந்த உண்மை மொழியால் அவர்கள் ஈர்க்கப்படவில்லை. அவர், உயிரிழந்தவருக்கு உயிரை மீட்டுத் தந்ததால் மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள், அதாவது மக்கள் அவரால் ஈர்க்கப்படவில்லை ஆனால் அற்புதங்கள் என்று கூறப்படும் மாயையால் ஈர்க்கப்படுகிறார்கள்.**

**“சார்லஸ், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”**

சார்லஸ் பர்டம் பதிலளித்தார், “இயேசு மக்களை ஈர்ப்பதற்காக இவற்றைச் செய்யவில்லை, ஏனெனில் அவற்றைப் பற்றி எதுவும் மக்களுக்குச் சொல்ல வேண்டாம் என்று அவர் கூறினார்; அவர் செய்ததற்கெல்லாம் அவரது அன்பே காரணமாகும்.”

பாபா நீண்ட நேரம் தொடர்ந்து எடுத்துரைத்தார்:

**இயேசு உயிரிழந்தவருக்கு உயிரை மீட்டுத் தராமல் இருந்திருந்தால், அவர் அற்புதங்களைச் செய்யாமல் இருந்திருந்தால், அவர் சிலுவையில் அறையப்பட்டிருக்க மாட்டார், மேலும் அவர் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்பது அவரது சுய விருப்பம். சிலுவையில் அறையப்படுவதை உறுதி செய்வதற்காகவே அவர் அற்புதங்களை நிகழ்த்தினார்.**

**நானும் பல அற்புதங்களை நிகழ்த்தியதாக நம்பப்படுகின்றன, ஆனால் நான் அற்புதங்களைச் செய்வதில்லை. நான் அற்புதங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதுமில்லை. அற்புதங்கள் நிகழ்ந்ததாக மக்கள் நினைக்கும் போது, அவர்களின் நம்பிக்கைதான் அதற்குக் காரணம். நான் நிகழ்த்தும் ஒரே அதிசயம், அதற்கான நேரம் நெருங்கிவிட்டது, உயிர் துறந்தவர்களை உயிர்த்தெழச் செய்வதற்காக அல்ல, கடவுளை நேசிக்கும் பொருட்டு, ஒருவர் தனக்கென்றே இறப்பதற்காக நான் புரியும் அற்புதம் என்று சொன்னேன். பார்வையற்றவர்களுக்குப் பார்வை தரமாட்டேன் என்று திரும்பத் திரும்பச் சொன்னேன், ஆனால் கடவுளைக் காணும் பொருட்டு, மனிதர்களை உலகத்திற்குக் குருடாக்குவேன்.**

**நான் ஏன் அற்புதங்களைப் பற்றி விளக்கினேன்? இது ஸாக்கோரியுடன் தொடர்புடையது. நேற்று நமக்கு ஷிர்டி செல்ல**

நேரமில்லை. ஸாக்கோரியில் நிலவும் சூழ்நிலையிலிருந்து வேறுபட்ட சூழ்நிலையை நீங்கள் அங்கு கண்டிருப்பீர்கள். இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் சாய்பாபாவின் சன்னதிக்கு வருகிறார்கள். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் நீங்கள் சாய்பாபாவின் சித்திரத்தைக் காணலாம்; இது திரையரங்குகளிலும் தீப்பெட்டிகளிலும் உள்ளது. இந்த தெய்வீகம் வணிகமயமாக்கப்படுகிறது! அங்கே சாம்பலை விற்று செல்வத்தை சம்பாதிக்கிறார்கள்! சமீபகாலமாக அவர்கள் விளம்பர சுற்றறிக்கைகளை வெளியிட்டு, கோயிலுக்குள் நுழைவதற்கு எட்டு அணா வசூலிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இவை அனைத்திற்கும், அறியாமையால் விஷயங்களைக் குழப்பிய ஒரு நல்ல ஆத்மாவே காரணம். நான் எவரையும் சுயநலவாதிகள் அல்லது தீயவர்கள் என்று அழைக்கவில்லை, ஏனெனில் அனைத்தும் என்னுடையவை, எல்லாமே கடவுளின் விருப்பப்படியே நடக்கும். சாய்பாபா பரிபூரணமானவர், ஷிர்டியின் தற்போதைய நிலை எனக்குப் பிடிக்கவில்லை... விரைவில், அங்கு நிலவும் ஒட்டுமொத்த சூழலையும் மாற்றுவேன்.

என்ன நடந்தது என்றால், இந்த அன்பான ஆத்மா (பி. வி.) நரசிம்ம ஸ்வாமி (B.V. NARASIMHA SWAMI), நாசிக்கில் என்னிடம் வந்து, “பாபா, நான் உங்களுடன் தங்கி, உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்புகிறேன்” என்றார். அதற்கு பதிலாக அவர் ஸாக்கோரிக்குச் சென்று உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும், ‘நீங்கள் என்னைப் பற்றி எழுதுவதை நான் விரும்பவில்லை’ என்று நான் அவரிடம் சொன்னேன். அதனால் அவர் மிகவும் வருத்தமடைந்து, ஸாக்கோரிக்குச் சென்று, சிறிது காலம் தங்கி, ‘ஸாக்கோரியின் முனிவர்’ (SAGE OF SAKORI) என்ற நூலை எழுதினார். நேற்றைய தினம் உங்களுக்கு வழங்கப்பட்ட அந்த புத்தகத்தை, பின்பு நான் எடுத்துச் சென்றேன். பாதி புத்தகம் நன்றாக உள்ளது மறு பாதி சுத்த முட்டாள்தனம்.

அவர் சிறுமிகளைப் (கன்யாக்கள்) பற்றிய உண்மையை அறிந்துகொள்ளாமல், தனது சொந்த விளக்கத்தை அளித்தார். பின்னர், அவர் மஹாராஜை சந்தேகிக்க ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து அந்த இடத்திலிருந்து வெளியேறிய பின்னர், அவர் சிறுமிகளைப் பற்றிய வதந்திகளைப் பரப்பினார். அவர் ஸாக்கோரியை விட்டுச் சென்றாலும், புத்தகம் வெளியிடப்பட்டது.

சாயிபாபா உடலைத் துறந்த பின்னர், அவர் ஷிர்டிக்குச் சென்றார். உள்ளூர் மக்களிடமிருந்து அற்புதங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு, அவர் சாய்பாபாவின் அற்புதங்கள் குறித்த ஒரு சிறிய புத்தகத்தை எழுதினார் ‘அற்புதமான புனிதர் சாய்பாபா, (THE WONDROUS SAINT SAI BABA) ஆனால் சிறிய சிறிய சில்லறை விஷயங்களை மட்டுமே வலியுறுத்தினார் - சாய்பாபாவின் ஆசீர்வாதத்தால் பெண்கள் குழந்தைகளை ஈன்றெடுத்த நிகழ்வு, ஒரு ஏழையின் மீது கை வைத்து ஆசிகளை

வழங்கியபோது அவர் எப்படி பணக்காரர் ஆனார், அவர் எப்படி எண்ணெய்க்கு பதிலாக தண்ணீரில் விளக்குகளை ஏற்றினார், இப்படி மற்றும் பல. அன்றிலிருந்து இந்தியா முழுவதிலுமிருந்து குழந்தைக்காகவும், பணத்திற்காகவும், வேலைக்காகவும் மக்கள் ஷிர்டிக்கு வந்தனர். ஆனால் இந்த விஷயத்தை நாம் இப்போது தள்ளி வைப்போம்.

தொடர்ந்து, பாபா வெளிப்படுத்தினார்:

**நான் இறை உணர்வை அடைந்த நிலையில்** (SUPERCONSCIOUSNESS என்று அழைக்கப்படுகிறது, இது எனக்கு 'சூப்பர்மேன்' போல் அந்நியமாகத் தெரிகிறது), **சாயிபாபாவால் நான் ஷிர்டியை நோக்கி ஈர்க்கப்பட்டேன். சாய்பாபா கழிப்பறைக்குச் செல்ல விரும்பிய வேளையில், மக்கள் அவரை மேளதாளங்கள் அடங்கிய இசைக்குழுவுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்வது வழக்கம். அவர் அதற்கெல்லாம் தகுதியானவர். அவர் அங்கு ஒரு மணி நேரம் கழிப்பறையில் இருந்தாலும், பின்னர் ஊர்வலமும் இசைக்குழுவும் அவருடன் அவரது இருக்கைக்குத் திரும்பிச் செல்வது அனுதினமும் நடந்து வந்தது. நான் அங்கு ஈர்க்கப்பட்ட முதல் நாள்** (1915**ஆம் ஆண்டு**), **பல நாட்களாகத் தூங்காததால், எனது கண்கள் இரத்தம் தோய்ந்து காணப்பட்டன. அவர் ஊர்வலத்தில் நடந்து வந்து கொண்டிருந்தபோது நான் அவரது பாதங்களில் தலை வைத்து வணங்கிய அடுத்த கணமே, 'பர்வர்திகார்!'** (**கடவுள்**) **என்று உரத்த குரலில் முழங்கி, உபாஸனி மஹாராஜ் அமர்ந்திருந்த திசையைச் சுட்டிக்காட்டினார்.**

**நான் உபாஸனி மஹாராஜ் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றேன். அவர் மெலிந்து பலவீனமாகத் தென்பட்டார். என்னைப் பார்த்தவுடனேயே, ஒரு கல்லைக் கையில் எடுத்து எனது நெற்றியில் எறிந்த அடுத்த கணமே, என்னுடைய இயல்பு நிலை திரும்பியது. அதைத் தொடர்ந்து நான் அவருடன் ஸாக்கோரிக்குச் சென்று, ஏழு வருடங்கள்** (அங்கும் இங்குமாக) **தங்கினேன். நீங்கள் இப்போது பார்க்கும் ஸாக்கோரி போல் அப்போது இல்லை. இது தரிசு நிலமாக, உபாஸனி மஹாராஜுக்கு ஒரு சிறிய குடிசையுடன் இருந்தது. அங்கே துர்காபாய் என்ற பெண்மணி இருந்தார், மஹாராஜையும் என்னையும் சமமாக நேசித்தார். மஹாராஜ் பிறப்பால் பிராமணர் என்பதால் அங்கு கூடியிருந்த மக்களும் பெரும்பாலும் பிராமணர்கள்.**

**நான் இதை இப்போது நிறுத்திவிட்டு, ஆன்மீகத் தளங்களுக்குச் செல்லலாமா?**

இல்லை என பதில் வந்தது. "**எல்லாமே எனக்கு ஒன்றுதான்,**" என்று பாபா குறிப்பிட்டு, உரையைத் தொடர்ந்தார்:

**இயேசுவின் குருநாதர் யார்?**

**பாப்டிஸ்ட் ஜான்** (JOHN THE BAPTIST). **ஜானின் சீடர்கள், அவர்களிடம் எதுவும் இல்லாதபோது, இயேசுவின் சீடர்கள், வசதியுடன் நல்ல உணவை உண்டதாக, எப்படிக் குறை கண்டார்கள் என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். சரித்திரம் அதுவாகவே எப்படித் திரும்புகிறது என்பதை நான் உங்களுக்குச்**

**சொல்கிறேன். கவலை, சந்தேகம் எதுவும் வேண்டாம். நான் உணர்வுப்பூர்வமாக அவருடன் ஒன்றாக இருக்கிறேன் என்பதை கடவுள் அறிவார். நேற்று, மிகவும் விசித்திரமான ஒன்று நடந்தது. இந்தியாவின் தென்பகுதியில் அமைந்த ஒரு சங்கத்தின் தலைவர், அவருக்கு ஒரு மந்திரம் அல்லது தியானத்திற்கான வார்த்தையைக் கோரி எழுதியிருந்தார். அவர்கள் மந்திரங்களைப் பாதுகாத்து, எனது கையிலிருந்து ஏதாவது ஒன்றை அடைய விரும்பியதால், ஒரு புதிய நகல் புத்தகத்தையும் அனுப்பி, இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர். 'நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர், நான் ஆதிகால புருஷர்!' என எடுத்துரைத்து, கையெழுத்திட்டேன்.**

'பாபா தமது கையால் இப்படி ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டது இதுவே முதல் முறை' என்று எரச் கூறினார். அலுவலகத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பிரதியில் கையொப்பமிடுமாறு பாபாவிடம் எரச் கேட்டபோது, அவர் அதைச் செய்தார்.

அப்போது பாபா கூறியதாவது:

**நான் உண்மையில் என்னவென்று ஏன் சொல்லக்கூடாது? தெய்வீக நேர்மை அதைக் கோருகிறது.**

**பாப்டிஸ்ட் ஜான் ஓர் அற்புதமான மனிதர். இயேசுவின் குருநாதரான அவர், அவரது கழுத்தைக் கொடுத்தார்; இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.**

**நேற்றிரவு, நான் லட்சக்கணக்கான மரணத்திற்கு நிகரான துன்பத்தை சந்தித்தேன், இன்று காலை எனது தலை மிகவும் கனமாக இருந்ததால், இன்றைய வருகையை ரத்து செய்ய நினைத்தேன். ஆனால் திடீரென நான் நன்றாக உணர்ந்தேன்.**

உபாஸனி மஹாராஜுடன் இருந்த நேரத்தைப் பற்றி மீண்டும் பாபா தொடர்ந்தார்:

**அவரது தரிசனத்திற்காக மக்கள், பெரும்பாலும் பிராமணர்கள், வரத் தொடங்கினர். ஒரு கட்டமைப்பை எழுப்பி பிராமணர்கள் ஒன்றிணையும் சூழல் உருவாக்கப்பட்டது. மஹாராஜும் நானும் தினமும் ஒன்றாக அமர்ந்திருந்த வேளையில், பிராமணர்கள் பொறாமை கொண்டனர். "ஏன் இந்த ஸொராஸ்ட்ரியன், மஹாராஜாவால் மிகவும் விரும்பப்படுகிறார்?" என்று கேட்டனர். மஹாராஜ் படிப்படியாக எனது தெய்வீகத்தின் குறிப்புகளை, சூசகமான முறையில் எடுத்துரைத்தார். சிலரால் இதை ஜீரணிக்க முடியவில்லை, பலர் அதிருப்தி அடைந்தனர்; ஆனால், நாங்கள் ஒன்றாக அமர்வது அனுதினமும் தொடர்ந்தது. அங்கே இந்துக் கோவில் ஒன்றை எழுப்பி வழக்கமான பூஜைகளைச் செய்து வந்தனர். பின்னர் ஒரு நாள் மஹாராஜ் அனைத்து** (எனது ஆரம்பகால) **மண்டலிக்கும் "மேர்வான் இப்போது பரிபூரணமான நிலையை அடைந்தவர்" என்பதை வெளிப்படுத்தினார்.**

இந்த அறிவிப்பின் போது ராம்ஜூ, ஆதி சீனியர் மற்றும் பலர் உடனிருந்தனர். மஹாராஜ், அவர்கள் மனதில் வேரூன்றச் செய்த எண்ணம்

என்ன என்பதை ராம்ஜு இவ்வாறு எடுத்துரைத்தார்: "நாம் மெஹர் பாபாவைப் பின்பற்ற வேண்டும் என்றும், முக்கியமான அல்லது முக்கியமில்லாத அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்படிய வேண்டும் என்றும் மஹாராஜ் விரும்பினார்."

ஆதி கூறினார், "நாம் எல்லா சூழ்நிலையிலும், எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும், பாபாவிடம் அட்டைபோல் ஒட்டிக்கொள்ள வேண்டும்" என்று அவர் விரும்பினார்.

ராம்ஜூ மேலும் கூறினார், "மஹாராஜ் எல்லாவற்றையும் பாபாவிடம் கொடுத்ததாக அறிவித்தார், அதாவது அவர் திறவுகோலை பாபாவிடம் ஒப்படைத்தார்."

பாபா தொடர்ந்தார்:

**அன்று முதல், நான் ஸாக்கோரிக்குச் செல்லவில்லை; அந்த நாளிலிருந்து, இந்து சூழல் அங்கே அதிகரித்தது. என்னைப் பார்த்து பொறாமைப்படவும், கடுமையாக இருக்கவும், என்னைக் காயப்படுத்தவும் மஹாராஜ் அவர்களை ஊக்குவித்தார். ஆனால், அதே வேளையில், துர்காபாய், யஷ்வந்த் ராவ் இருவரிடமும் மஹாராஜ், "மேர்வான் இப்போது இறை அதிபதி - பிரபஞ்சத்தின் உரிமையாளர்" என்று கூறினார். இதைக் கேட்ட பிராமணர்கள் என்னைக் கொல்ல தீர்மானித்தனர். மஹாராஜும், நானும் இந்த அச்சுறுத்தலால் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை.**

**இப்போது நான் உங்களுக்கு, தனிப்பட்ட ஒன்றைச் சொல்கிறேன். மஹாராஜுக்கு மிகக் கொடிய விஷம் கொடுக்கப்பட்டது; அவரது உடல் முற்றிலுமாக மரத்துப்போனது; சில நாட்கள் அவரால் நடக்க முடியவில்லை. ஆனால் அவர் அதைத் தாங்கிக் கொண்டார்; பின்னர் அது, அதன் தாக்கத்தை இழந்தது. கோதாவரி மாய், மஹாராஜிடம் வந்து, "இந்த ஆண் பிராமணர்களின் சூழல் எனக்கு வேண்டாம்" என்று கூறினார்; மேலும் அவர் கடவுளை மட்டுமே நேசிக்க விரும்பும் தூய்மையான குணமுள்ள பெண்மணிகளை சேகரிக்கத் தொடங்கினார். அவர்கள் வெண்ணிற ஆடை அணிந்து, கன்யாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.**

**மஹாராஜ், பின்னர் ஆதியின் தாய் குல்மாயிடம், "விரைவில், நான் இந்த உடலைக் கைவிடப் போகிறேன்; ஆதலால், மேர்வானிடம் என்னைப் பார்க்க வரச் சொல்லுங்கள்" என்று கூறி அனுப்பினார். நான் ஸாக்கோரியில் கால் வைக்க மாட்டேன் என்று சொன்னதால், தஹிகாவ்ம்,** DAHIGAON (1941) **குடிசை ஒன்றில் ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. நாங்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டோம், நான் எனது தலையை அவரது பாதங்களில் வைத்து வணங்கினேன். மஹாராஜ் கூறினார், "நீங்கள் ஆதி சக்தி" (அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழும் மூல சக்தி), என்று கூறி கண்கலங்கி, அழத்தொடங்கி என்னிடம், "ஸாக்கோரியின் மீது உங்கள் பார்வை இருக்கட்டும்" என்றார். பின்னர் இருவரும் விடைபெற்றோம்; மூன்று முதல் நான்கு மாதங்களுக்குப் பிறகு, மஹாராஜ் அவரது உடலைத்**

துறந்தார்; அதைத் தொடர்ந்து, கோதாவரி மாயிடம் கன்யாக்களின் பொறுப்பு வழங்கப்பட்டது. கோதாவரி மாய் எல்லா நேரத்திலும் ரகசியத்தைக் காப்பாற்றி, என்னைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆனால் அவர்களது விழாக்களுடன் அங்கு, இந்து சூழலாகவே வியாபித்திருந்தது. உலகில் மேலோட்டமான சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தையும் அழிக்க வந்தவன் நான். கோதாவரி என்னை ரகசியமாக நேசித்தார். அங்கு வாழ்ந்த ஆண் பக்தர்கள், நான் மஹாராஜின் ஆன்மீக வாரிசு அல்ல, ஆனால், பாபாஜானின் ஆன்மீக வாரிசு மட்டுமே என்று தோன்றச் செய்து, கோதாவரி ஆசிரமத்தின் பொறுப்பாளராகவும், மஹாராஜின் ஆன்மீக வாரிசு என்றும் செய்தியைப் பரப்பினர். அப்பாவி பெண்மணி கோதாவரி, மிகவும் நல்லவர், பெண்கள் மத்தியில் ஓர் அற்புதமான ஆத்மா. அவர் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டாலும், அவருடைய நற்குணமும், நல்லியல்பும் அவரை அங்கேயே தொடர வழிவகுத்தது.

அதன் பின்னர் எனது சீடர்களின் எண்ணிக்கை அதிகரித்தது, மேலும் ஸாக்கோரி பிராமணர்கள், ஜான் பாப்டிஸின் சீடர்களைப் போல, மேலும் மேலும் எரிச்சலடைந்தனர். அப்போது அங்கு அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. திரு. வாக் (MR. WAGH) என்பவரை நீங்கள் பார்த்தீர்களா? என்னைப் பற்றி எவரேனும் ஏதேனும் பேசினால், இகழ்ந்து எச்சில் துப்புவதை வழக்கமாகக் கொண்ட அவர், எப்படி மாறிவிட்டார் என்பதை நீங்கள் பார்க்கலாம்.

இதற்கெல்லாம் காரணம் கோதாவரி. அவருடைய அன்பான செல்வாக்கு பிராமண சூழ்நிலையை வென்றது. கடைசியாக அவர் என்னை (அஹமது) நகரில் பார்த்துபோது, ஒருமுறை ஸாக்கோரிக்கு வருமாறு அழைத்தார். ஸாக்கோரியை நான் கண்காணிப்பேன் என்று மஹாராஜிடம் உறுதியளித்ததற்கு இணங்க, யஷ்வந்த் ராவ் இல்லத்திற்குச் செல்லும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். வாக் குழுவிற்கு அது பிடிக்கவில்லை, ஏனெனில் கோதாவரி மாய், மெஹர் பாபாவை வணங்கினால், நிலைமை என்னவாகும்?

கோதாவரி என்னை வரவேற்று, எனது பாதங்களில் தலைவணங்கி, மாலை அணிவித்து, மஹாராஜ் அமர்ந்திருந்த ஊஞ்சலில் என்னை அமர வைத்தார். ஊஞ்சலில் அமரும் பழக்கம் கிருஷ்ணரிடமிருந்து அடையப்பெற்றது. கிருஷ்ணரின் தாயார் அவரை தொட்டிலில் ஆட வைத்தார்; கோபியர்கள் ஊஞ்சலில் அமர வைத்தனர். குருநாதர்கள் அப்படி ஊஞ்சலில் அமர்வது இப்போது வழக்கமாகிவிட்டது. இது, தூங்க வைப்பதற்காக அல்ல, மாறாக ஒரு வகையான தாலாட்டு: ‘கிருஷ்ணா, இப்போது தூங்கு, தொந்தரவு செய்யாதே’ - அதுதான் அர்த்தம். கிருஷ்ணர் மிகவும் விஷமக்காரராகவும், நடைமுறை நகைச்சுவைகளில் படுசுட்டியாகவும் இருந்து, பிரச்சினைகளை உருவாக்குவதையும் பழக்கமாகக் கொண்டார். கிறிஸ்துவும் புத்தரும் வேறு வழிகளைக் கையாண்டனர். அவர்கள் அனைவரின் கலவையாக நான் இருப்பதாக நினைக்கிறேன்.

**நான் வாகை அழைத்து அரவணைத்துக் கொண்டேன், அவர் என் மீதான எதிர்ப்பின் சுமையிலிருந்து விடுபட்டார். நான் அனைத்து குழுவையும் தழுவினேன், அவர்கள் அனைவரும் மெழுகைப்போல் உருகிப் போயினர். கோதாவரி தனது அன்பை மிகத் தெளிவாக வெளிப்படுத்தினார்; ஸாக்கோரியின் சூழல் முற்றிலுமாக மாற்றம் கண்டது. செப்டம்பர் 12ஆம் தேதி தரிசனத்தில் நீங்கள் பார்த்தது போல, கோதாவரி மாயும் இதர சேவகர்களும் அங்கே இருந்தனர். இப்போது அவர்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள்; என்னை அவதார புருஷராக அங்கீகரிக்கிறார்கள்.**

**இருப்பினும், ஸ்வாமி நரசிம்மா உருவாக்கிய அற்புதங்களின் சூழல், ஷிர்டியில் மிகையாக இருந்தாலும், ஸாக்கோரியில் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் குழப்பமடையக்கூடாது என்பதற்காகத்தான், உங்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை நான் எடுத்துச் சென்றேன். இந்த அற்பத்தனமான விஷயங்களால் மக்கள் மஹாராஜின் அந்தஸ்தை உயர்த்த முயற்சிக்கின்றனர். அவர்களின் எண்ணம் நல்லதாக இருந்தாலும், நான் இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பேன். கடவுள், இறை அன்பு, உண்மைப்பொருள், பரிசுத்தமான நிலை ஆகியவை இந்த அபத்தங்கள் அனைத்திலிருந்தும் விடுபடுகின்றன; மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக, இதயபூர்வமாகவும், சரியான புரிதல் இல்லாமலும், மூதாதையர்களின் பழக்கவழக்கங்கள் காரணமாக செய்யப்படும் பூஜை, புனஸ்காரங்கள், சடங்கு, சம்பிரதாயங்களிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்.**

பாபா எழுந்து நின்று அவரது இருக்கையில் அமர்ந்தார். "**ஐந்து நிமிடம் ஓய்வெடுங்கள்**" என்று கூறிவிட்டு இதர விஷயங்களைப் பற்றி பேசினார். பின்னர், இரண்டு நாட்களுக்கு முன்பு தொடங்கிய ஆன்மீகத் தளங்கள் குறித்த தனது சொற்பொழிவைத் தொடர்ந்தார். பாபா ஒரு காகிதத்தில் சில கோடுகளை வரைந்து, அந்த வரிகளுடன் ஒத்துப்போகும் வகையில் எரச்சிடம் சில எழுத்துக்களை எழுதுமாறு அறிவுறுத்தினார். "**இது முற்றிலும் புதிய விஷயம்,**" என்று அவர் குறிப்பிட்டார்.

பாபா நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களைப் பற்றி விளக்கினார்.

இறுதியில் அவர் கூறியதாவது:

**நீங்கள் என்னை நினைவில் கொள்ளும்போது, நீங்கள் ஸஹஜ் தியானத்தில் (SAHAJ DNYAN, கடவுளின் சகவாசத்தில் அல்லது கடவுளின் முன்னிலையில்) இருக்கிறீர்கள். என்னை எப்படி நினைவில் கொள்வது என்பதுதான் கேள்வி. நான் சொல்வதைச் செய்வதே எளிதான மற்றும் உறுதியான வழி. இது முதலில் ஒரு மனம் நாடாத செயலாக இருக்கும், நீங்கள் ஓடத் தொடங்கும் போது அதை அதிகமாக உணர்கிறீர்கள் (தசைகளில் ஏற்படும் சுளுக்கு, வலி போன்றவை); ஆனால் நீங்கள் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடும்போது, அதை சகஜமாக (இயற்கையாக)**

உணர்கிறீர்கள். அதாவது, முதலில் நீங்கள் அதைக் கட்டாயப்படுத்தி வேண்டுமென்றே செய்ய வேண்டும், பின்னர் அது இயற்கையாகிவிடும்.

ஒரு நாளில் நான்கு பாகங்கள் உள்ளன; மனிதனின் உடல் வளர்ச்சியில் நான்கு பிரிவுகள் உள்ளன: குழந்தைப் பருவம், இளமை, முதிர்ச்சி, முதுமை. கபீர் எல்லைக் கற்களாக நான்கு பகுதிகளைக் குறிப்பிடுகிறார். காலையில் எழுந்ததும் முதல் விஷயமாக, எதையும் செய்வதற்கு முன்னர், ஒரு வினாடி பாபாவை நினைவில் கொள்ளுங்கள். பாபாவை உங்கள் ஆத்மா அணிந்து கொள்கிறது: அதாவது, அதிகாலையில் உங்கள் ஆன்மாவை பாபா எனும் ஆடையால் அணிவிக்கவும். மதியம் பன்னிரெண்டு மணிக்கு, ஒரு வினாடி அதையே செய்யுங்கள்; சுமார் ஐந்து மணிக்கு மீண்டும் செய்யவும்; நீங்கள் இரவில் ஓய்வு பெறும்போது மீண்டும் அதைச் செய்யுங்கள். நான் இதுவரை எவரிடமும் இதைச் செய்யச் சொன்னதில்லை, மண்டலிக்குக் கூட இது தெரியாது. நீங்கள் அதைச் செய்தால், நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன், நீங்கள் எப்பொழுதும் எனது சகவாசத்தையும், தோழமையையும் உணருவீர்கள். தினமும் நான்கு வினாடிகள் செய்யுங்கள், அதன் பின்பு நீங்கள் உலகில் இருந்தாலும், பாபா எப்பொழுதும் உங்களுடன் இருப்பார். இது ஸஹஜ் தியானத்தின் ஆரம்பம்.

சுருக்கமாக, கடவுள் மட்டுமே உண்மையானவர், அவர் ஒருவரே உளதாயிருக்கிறார், அவர் நம் அனைவரிடமும் இருக்கிறார், அவர் ஒருவரே நேசிக்கப்பட வேண்டியவர்; கடவுள், கடவுள் மட்டுமே!

அப்போது பாபா கூறினார்:

**இனிமேல், நம் இரண்டு இளைஞர்களும் (பில் லெ பாஜ், பாலன்டீன்) இரவு நேரங்களில் சமாதியில் அமர வேண்டாம். இனிமேல் எவருக்கும் காலை தியானம் கிடையாது. 24ஆம் நாள், நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு எல்லோரும் கண்விழித்து அரை மணி நேரம் என்னை நினைவில் கொள்ளவேண்டும். இதை இதயபூர்வமாக, முழு மனதுடன் செய்யுங்கள். நீங்கள் அனைவரும், அல்லது உங்களில் ஒருவரேனும் என்னைக் காண்பீர்கள்: நான் அங்கே இருக்கிறேன். 'என்னைப் பார்ப்பது' என்பது வெகு தொலைவில் தோன்றும் என்னைப் பற்றிய சித்திரம். எனது வடிவத்தை உங்கள் மனக்கண் முன்னால் வைத்திருங்கள். கண்கள் திறந்து அல்லது மூடி இருக்கலாம், ஆனால் என்னை உங்கள் மனத்திரைக்கு முன்னால் வைத்துக் கொள்ளுங்கள்.**

பாபா, அவர்கள் கண்களை மூடிக்கொண்டு ஒரு நிமிடம் அமருமாறு அறிவுறுத்தினார், முதலில் ஒரு கணம் அவரைப் பார்த்து, பின்னர் அவரது சித்திரத்தை மனத்திரையில் கொண்டுவரச் சொன்னார். அதன் பின்னர், என்ன நடந்தது என்று கேட்டார். ஃபிரான்சிஸ், "அது வந்து செல்கிறது" என்றார்.

அதற்கு பாபா, "**நீங்கள் வந்து செல்வதால், நான் எப்போதும் அங்கேயே இருக்கிறேன்!**

**புனித ஃபிரான்சிஸ்** (SAINT FRANCIS) **எப்படி இயேசுவை நேசித்தார், அவருடன் ஐக்கியமானார் என்று உங்களுக்குத் தெரியுமா?** **இயேசு நேசிக்கப்பட வேண்டிய விதத்தில், அவர் அவரை நேசித்தார்; ஆனால் ஃபிரான்சிஸ் குழுவில் ஒரு 'சாப்பாட்டுராமன்' இருந்தான். ஜூனிபர்** (JUNIPER), **ஃபிரான்சிஸை மிகவும் நேசித்தார், இருப்பினும் அவர் தியானத்தில் அமரவில்லை அல்லது கடவுளை நினைவில் கொள்ளவில்லை, பிறர் எவரையும் விட ஃபிரான்சிஸுக்கு அதிக சிரமத்தைக் கொடுத்தார், ஆனாலும் அவர் ஃபிரான்சிஸை மிகவும் நேசித்தார்.**

**நாம் ஆழ் இதயத்திலிருந்து நேசிக்கும்போது, நமது நன்மை தீமைகள் அனைத்தையும் கொடுக்கிறோம், நமது கஷ்டங்களையும் சேர்த்து; அன்பன் அனைத்தையும் கொடுக்கிறான் ஆனால் எதையும் கோருவதில்லை. நானும் எல்லாவற்றையும் கொடுக்கிறேன், பதிலுக்கு எதையும் கோருவதில்லை. அப்படி என்னை நேசிக்கவும்; அப்போது, பாபா உங்கள் அடிமை.**

**உங்களால் அதைச் செய்ய முடியாவிடிலும், கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்னுடையவராக இருக்கும் வரை கவலைப்பட தேவையில்லை. நீங்கள் என்னுடையவர், அதனால்தான் நான் உங்களை இவ்வளவு தூரத்திலிருந்து வரவழைத்தேன். உங்களால் என்னை மனத்திரையில் சித்திரமாகப் பதிக்க முடியாவிட்டால், கவலைப்படாதீர்கள்; நீங்கள் என்னை நேசிக்கவில்லை என்றாலும் கூட, கவலைப்பட வேண்டாம்: நான் உங்களை நேசிக்கிறேன். 24ஆம் நாள் நள்ளிரவில், மனதைக் கட்டாயப்படுத்தாதீர்கள், இயல்பாக இருங்கள், அமைதியாக இருங்கள்; யோகிகளைப் போல் அமராதீர்கள்.**

**நான் மிகவும் வழுகிச் செல்லும் தன்மை படைத்தவன் என்று என்னைப் பற்றி கூறப்படுகிறது!**

**இப்போது ஓர் ரகசியம். உங்கள் மனைவி மற்றும் குழந்தையை மனத்திரையில் கொண்டுவர முயற்சிக்கவும்: ஒரு நொடியில் அவர்கள் இங்கே வந்துவிடுகிறார்கள். இதில் பெரிய முக்கியத்துவம் எதுவும் இல்லை, ஆனால் இது சூழ்நிலையைப் சற்று புரிந்துகொள்ள உதவுகிறது. நீங்கள் அவர்களை ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வரலாம், ஆனால் பாபாவை இங்கிருந்து கொண்டு வர முடியாது.**

அதற்குப் பிறகு, பாபா கீழ் மெஹராபாத்திற்குச் சென்றார். அவர் மேற்கத்திய அன்பர்களுக்கு சொற்பொழிவு வழங்கும் வேளையில், எரச், ஆதி சீனியர், ராம்ஜூ, நானா கேர், கிஷன் ஸிங், குமார் ஆகியோர் எப்பொழுதும் உடனிருந்தனர். இதர மண்டலி தத்தமது பணியில் ஈடுபட்டிருந்ததால் பாபாவின் பேச்சைக் கேட்க வாய்ப்பு இல்லாமலாயிற்று. (உண்மையில், அவர்களில் பெரும்பாலோர் அத்தகைய ஆன்மீக விவாதங்களில் அதிக ஆர்வம் காட்டவில்லை; அவர்கள், அவருக்கு சேவை செய்வதிலேயே திருப்தி அடைந்தனர்.)

மேல் மலையிலிருந்து கீழே நடந்து செல்லும் வழியில், அலோபா பாபாவின் தலை மேல் ஒரு குடையைப் பிடித்து, கடுமையான வெயிலிலிருந்து அவரைப் பாதுகாப்பது வழக்கம். அன்றைய தினம், திடீரென உணர்ச்சிவசப்பட்டு, குடையைக் கீழே வைத்து, அலோபா, பாபாவின் பாதங்களில் விழுந்து, அவற்றை இறுகப் பற்றிக் கொண்டார். பாபா வழக்கமாக மேற்கத்திய அன்பர்களுடன் அமர்ந்து உண்ணுவதால், இதர மண்டலி அனைவரும் ஏற்கனவே கீழே சென்று விட்டனர். அந்த நேரத்தில் அவரைச் சுற்றி வேறு எவரும் இல்லை, அவருடைய மௌனத்தால் பாபாவால் ஒன்றும் செய்ய முடியவுமில்லை. அலோபா, பாபாவின் கால்களைப் பற்றிக்கொண்டு இருந்ததால் பாபாவால் ஒரு அங்குலம் கூட நகர முடியவில்லை! மிகவும் சிரமப்பட்டு, அலோபாவை அமைதிப்படுத்தி, தன்னை விடுவித்துக் கொண்டார்.

தரையில் விழுந்த அலோபா, சிறிது நேரத்தில் குடையை எடுத்துக்கொண்டு பாபாவின் பின்னால் ஓடி வந்தார். பாபா நடந்த சம்பவத்தை மண்டலியிடம் எடுத்துரைத்தார், **“அலோபா என்னைப் பின்தொடர்ந்து ஓடும்போது, நான் பயத்தில், மேலும் ஓட விரும்பினேன்! அவருடைய அன்பு என்னை அச்சுறுத்துகிறது!”**

இந்த நாட்களில், திட்டமிட்ட கூட்டங்களுக்கு முன்பு, மேற்கத்தியர்கள் பாபாவின் நெருங்கிய சகவாசத்தில் வந்து, பல விஷயங்களைக் கற்றுக்கொண்டனர். பாபா பலவிதமான தலைப்பில் வழங்கிய உரைகள், கதைகள், விளக்கங்கள் அனைத்தும் அவர்களின் மனதிற்கு அருஞ்சுவை விருந்தாக இருந்தது.

காலம் குறிப்பிட்டது போல, “வெகுஜன தரிசனங்களின் போது, ஆயிரக்கணக்கானோர் அவரது அன்பை ருசித்த போதையில் இருந்தனர். அவர்கள் அளப்பரியதான மகிழ்ச்சியில் உண்மையில் பித்து பிடித்துவர் போல மாறினர். ஆனால் அவர்களின் போதை மயக்கம் நிலைத்திருக்கவில்லை, இருப்பினும் அது அவர்களின் வேட்கையைத் தணிக்கும் விருப்பத்தை உருவாக்கியது. பாபா, தமது அன்பர்களுக்கு சில நாட்கள் தொடர்ந்து வழங்கிய தோழமை, வலுவான போதையை வழங்கியது. ஆனால் 24 மணி நேர சகவாசத்தை பெறுவது என்பது, அதீத சக்திவாய்ந்த மது வகையைச் சார்ந்ததாகும் - இது அவர்களை ஒரு மாவு ஆலையில் இரண்டு கற்களுக்கிடையே அரைக்கும் தானியங்களைப் போன்றது! அவர்களின் மனமும் உடலும், உருவில் துண்டு துண்டாக இருந்தன, ஓய்வெடுக்கும் வேளையிலும், அவர்களின் மூச்சு அசௌகரியத்தின் பெருமூச்சாக வெளிப்படும்.

“இது மிகவும் விலையுயர்ந்த, பழமை வாய்ந்த தெய்வீக மதுபானம் ஆகையால் அதற்குரிய விலையைக் கொடுக்கக்கூடியவர்கள் மட்டுமே இதை அருந்த முடியும். மிக மிகச் சிலரே இதை அடையப்பெற தகுதியுடையவர்கள், ஏனெனில் அதற்கான விலையை, முந்தைய பிறவிகளில் தியாகம் செய்ய வேண்டியிருந்தது. களிமண்ணாலான குடத்தால் அழுத்தத்தைத் தாங்க முடியாது,

மேலும் அவரது அழுத்தங்களைத் தாங்கத் தகுதியானவர்களுக்கு மட்டுமே இந்த தெய்வீக மதுபானம் வழங்கப்பட்டது.”

தாமதமாக வந்த ஃபிராங்க் ஹென்ட்ரிக் (FRANK HENDRICK), நரிமனின் காரில் செப்டம்பர் 21ஆம் தேதி மும்பையிலிருந்து மெஹராபாத் அழைத்து வரப்பட்டார்.



நீங்களும் நானும்

‘நாம்’ அல்ல,

ஆனால் 'ஒன்று'

என்று எனது

தெய்வீக

அதிகாரத்துடன்

உங்கள்

அனைவருக்கும்

கூறுகிறேன்.



-அவதார் மெஹர் பாபா